ஈழகேசரி

வெள்ளி விழா மலர்


1956



1956

ஈழகேசரி

வெள்ளி விழா மலர்



Eelakesari Silver Jubilee Number

Sabas

A. K. S. & SONS

Jewel House

KANNATHIDDY ——— JAFFNA

* அழகிய ஆபரணங்களுக்கும்

* வைர நகைகளுக்கும்



ஏ. கே. எஸ். & சன்ஸ்

நகைமாளிகைக்கு விஜயஞ் செய்யுங்கள்

ஏ. கே. எஸ். அன்ட் சன்ஸ்


★★ நகை மாளிகை ★★

கன்னதிட்டி : யாழ்ப்பாணம்

அணியுங்கள் ஆனந்தமுடன்

எல். கே. எஸ். நகைகளை!

போன் :
161



தந்தி :
'ஜுவல்லர்ஸ்'

L K S S

எல். எல். கே. எஸ். எஸ்.

♠ தோற்றத்திலே கவர்ச்சி!
♠ தரத்திலே உயர்ச்சி!!
♦ உழைப்பிலே புகழ்ச்சி!!!

பெற்று விளங்குவது

எல். கே. எஸ்.

தங்க மாளிகை

இலங்கையின் மிகப் பெரிய நகை வியாபாரிகள்

எல். கே. எஸ். லெப்பை பிரதர்ஸ்

யாழ்ப்பாணம்

கிளைகள் : கொழும்பு, திருச்சி, சென்னை, காயல்பட்டணம்

கவிதை உலகில் ஜோதிகள் !

★ **மாலைக்கு மாலை**

யாழ்ப்பாணன் கவிதைத் தொகுதி.... ரூ. 2-50

★ **கவிதைக் கன்னி**

யாழ்ப்பாணன் கவிதைத் தொகுதி.... ரூ. 2-00

அடுத்த வெளியீடு :

ஜீவா - யாழ்ப்பாணன் கவிதை அஞ்சல்களும்
ஜீவா - யாழ்ப்பாணன் - ராஜபாரதி கவிதைகளும்
இணைவுறும்

★ **முல்லைக் காடு**

குயில் கூவி அழைக்கின்றது !
யாழ் சேர்ந்து ஒலிக்கின்றது !
அன்புள்ளங்கள் இணைகின்றன !
அமுதகானம் பொழிகின்றன !

இப்பண்பில் விளைவுற்றதுதான் **முல்லைக்காடு**
ஒரு புதுமை இலக்கியம்

அன்பு தோய்ந்த கவிதைகளும் வசனங்களும்
கொண்டுள்ள இந்நூல் தமிழ்த்
தங்கைமாரின் பூங்கரங்களி
லும் கலாரசிகர்கள்
அன்புள்ளங்களி
லும் ஒளிர
வேண்டிய அரிய பொக்கிஷம்.

விரைவில் வெளிவரும்.

முல்லைக்காடு தனிப்பிரதி .... ரூ. 1-50
விற்பனைக்கு 10 பிரதி ... ரூ. 12-00
தமிழ்த் தங்கைமாருக்கு பிரதி ரூ. 1-00
விசேட ஆதரவாளர்க்கு பிரதி ரூ. 5-00

தபாற் செலவு இனம்
போஸ்டல் ஓடர் அனுப்பிப் பதிவு செய்க

பிரசுரம் :

கலாபவனம் — பருத்தித்துறை

TAMIL TEXTS – 1956-57

திரு. வே. சிவக்கொழுந்து

அவர்களியற்றிய

பாடப் புத்தகங்கள்

2-ம் வகுப்பு ★

1. இரண்டாந்தரக் கணிதம் ... ரூ. 1-20
2. இரண்டாந்தர மனக்கணிதம் ... -50
3. இரண்டாந்தரப் பூமிசாஸ்திரம் -60
4. பாலர் கீதம் ... -80

3-ம் வகுப்பு

1. மூன்றாந்தரக் கணிதம் ... ரூ. 1-50
2. மூன்றாந்தர மனக்கணிதம் ... -60
3. மூன்றாந்தரப் பூமிசாஸ்திரம் ... -70

4-ம் வகுப்பு

1. நான்காந்தரக் கணிதம் ... ரூ. 1-50
2. நான்காந்தர மனக்கணிதம் ... -70
3. நான்காந்தரப் பூமிசாஸ்திரம் ... ரூ. 1-10

5-ம் வகுப்பு

1. ஐந்தாந்தரக் கணிதம் ... ரூ. 1-90
2. ஐந்தாந்தரக் கணிதப் பயிற்சி ... -90
3. ஐந்தாந்தரப் பூமிசாஸ்திரம் ... 1-25

6-ம் வகுப்பு

1. ஆறாந்தரக் கணிதம் ... ரூ. 2-00
2. எண் கணிதப் பயிற்சி ... 1-50
3. அக்ஷர கணிதம்—பகுதி I ... 1-75
4. கேத்திர கணிதம்—பகுதி I ... 1-75
5. ஆறாந்தரப் பூமிசாஸ்திரம் ... 2-00

7-ம் வகுப்பு

1. ஏழாந்தரக் கணிதம் ... ரூ 2-00
2. எண் கணிதப்பயிற்சி ... 1-50
3. அக்ஷர கணிதம்—பகுதி 1-2 ... 3-00
4. கேத்திர கணிதம்—பகுதி 1-2 ... 3-00
5. ஏழாந்தரப் பூமிசாஸ்திரம் ... 3-00

J.S.C., G.C.E. Prep வகுப்புகள்

1. தமிழ் பாடீ கணிதம் ... ரூ 3-50
2. அக்ஷர கணிதம்—பகுதி I, II ... 3-00
3. கேத்திர கணிதம்—பகுதி I, II 3-00
4. உலக பூமிசாஸ்திர விளக்கம் பகுதி 1 ... 4-00
5. உலக பூமிசாஸ்திர விளக்கம் பகுதி 2 ... 4-00
6. கவிதைக் கன்னி (கவிதைத் தொகுதி) ... 2-00

G. C. E. பரீட்சை வகுப்பு

1. உயாதர எண்கணிதம் (சிவக்கொழுந்து–மஹாதேவன்)... 3-50
2. அக்ஷர கணிதம்—பகுதி I, II III 4-00
3. கேத்திர கணிதம் (புதிய பதிப்பு) 4-00
4. உலக பூமிசாஸ்திர விளக்கம் (முழுத்தொகுதி) ... 7-75

Publishers :

THE NORTH CEYLON BOOK DEPOT
POINT PEDRO — CEYLON

இசை, ஓவியம், சிற்பம் என்பன இன்பந்தருங் கலைகள்
அவற்றுள் புகைப்படக் கலையும்
என்றும் இன்பந்தரும்



ஆகவே, உங்கள்
அழகின் தோற்றத்தைப் படமூலம்
மிளிரப் பார்க்க வேண்டாமா?

★

எவ்விதமான போட்டோத் தேவை
களுக்குந் தயாராக இருக்கிறது

பாரத் ஸ்ரூடியோ

★ விவாக வைபவங்கள்
★ பாடசாலை விழாக்கள்
★ குழந்தைகளின் தோற்றம்
★ கூட்ட நிகழ்ச்சிகள் போன்ற

சகல சந்தர்ப்பத்துக்கு மேற்ற புகைப்படங்கள் தயாரிப்பதிற் சிறந்தவர்கள்.

இன்னும் சினிமா சிலைடுகள். பிளாக்குகள், என்லாஜ்டுமென்டுகள்
முதலியனவும் சிறந்த முறையில் தயாரிப்பவர்கள்.

சகலவிதமான போட்டோச் சாமான்களும் விற்பனைக்குண்டு.

மற்றும் விபரங்களுக்கு :

பாரத் ஸ்ரூடியோ

படம் பிடிப்பவர்கள்,

82/1, கஸ்தூரியார் தெரு, யாழ்ப்பாணம்

'MASCON'

AGRICULTURAL WATER PUMPS


WITH B. S. A. PETROL/PARAFFIN
ENGINE TROLLEY MOUNTED.
SUCTION AND DELIVERY 2"

Prices and Further Particulars on Application.

★ ★ ★

MASCONS LIMITED

175, ARMOUR STREET,
COLOMBO.



K. P. லிங்கம்

சுத்தமான நல்லெண்ணெயை உபயோகியுங்கள்

ஆரோக்கியத்துக் குகந்தபடி உணவுப் பொருள்களைப் பக்குவப்படுத்துவதற்கு அவசியமான பலவற்றில் சுத்தமான நல்லெண்ணெயும் ஒன்று.

இத் தேவையைத் தீர்க்கத் தகுந்தது

K. P. லிங்கம் நல்லெண்ணெய்

K. பரமலிங்கம்


லிங்கம் ஸ்ரோர்ஸ்

26, செட்டித்தெரு :: யாழ்ப்பாணம்.

எழுகேசரி

வெள்ளி விழா மலர்





Eelakesari Silver Jubilee Number

தனவரி 1956 விலை ரூ. 5



'கொண்டல்சேர் கோபுரம்'

பல்லவர் வகுத்த வழியின்று சோழரும், பாண்டியரும், நாயக்க மன்னரும் செந்தமிழ் நாட்டில் தெய்வங்களுக்கு 'வளமறு தடவும் மாடக் கோயில்'களைக் கவினுற எழுப்பி வைத்தனர்.

ஈழத்திலும் வடக்கே திருத்தம்பலேச்சுரமும், தெற்கே தெய்வந் துறைச சந்திரசேகரன் கோயிலும், கிழக்கே கோணேசராலயமும், மேற்கே திருக்கேதீச்சரமும் விண்ணைத் தொடும் கோபுரங்களோடு அன்று நிலவின. திருத்தம்பலேச்சுரம் அழிந்தொழிந்தாலும் அத்தலத்தில் வழிபட்டுப் பெரும் பேறெய்திய சோழ இளங்கொடியின் ஞாபகத்தைழுந்த மாவிட்டபுர க்ஷேத்திரம் இன்று மீண்டும்

'கொண்டல்சேர் கோபுரம்
கோலமார் மாளிகை
கண்டமும் கைதையும்
கமலமார் வாவியும்
வண்டுலாம் பொழிலும்'

என்ற இலக்கணத்துக்கு அமையப் புனருத்தாரணம் பெற்று விளங்குகிறது. அதன் வர்ணச் சித்திரக் கோபுரமே, இம் மலரின் புற இதழை அலங்கரிக்கிறது.

படம்: ஸபாஸ்

பொருளடக்கம் ★ ★ ★ ★ ★

		பக்கம்
	'கொண்டல்சேர் கோபுரம்'	ii
	ஆசியுரைகளும் வாழ்த்துப்பாக்களும்	xi
	வெள்ளி மலர்	xxiii
1.	தமிழ் நாட்டு மணம்	1
	வித்துவசிரோமணி, பிரமஸ்ரீ சி. கணேசையரவர்கள்	
2.	தன்னில் தானே ஒளிரும் கலை	4
	தமிழ்ப் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்	
3.	வேதாந்தத் தெளிவு : சைவசித்தாந்தம்	7
	பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை	
4.	சங்க இலக்கிய மரபும் தொல்காப்பியமும்	10
	பேராசிரியர் வி. செல்வநாயகம்	
5.	மறத்தல் இல்லை	14
	பேராசிரியர் மு. வரதராசன்	
6.	ஸ்ரீ ஜயதேவர் அருளிய கீதகோவிந்தம்	17
	நவாலியூர், சோ. நடராசன்	
7.	ஆர் சொல்லுவார்?	18
	கி. வா. ஜகந்நாதன்	
8.	கொம்பு விளையாட்டு	20
	பண்டித வி. சி. கந்தையா	
9.	'ஆதல் அரிது'	25
	அ. ச. ஞானசம்பந்தன்	
10.	தம்பியும் படிப்பும்	28
	ச. பேரின்பநாயகன்	
11.	அறுசுவை உண்டி	31
	யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்	
12.	மகாத்மா காந்தியுடன் ஒருநாள்	33
	தி. சு. அவினாசிலிங்கம்	
13.	முன்னீசுவரம்	36
	குல. சபாநாதன்	
14.	சமயமுங் கலையும்	40
	கலைப்புலவர் க. நவரத்தினம்	

		பக்கம்
15.	ஜனநாயகமும் இலக்கியமும் சோ. சிவபாதசுந்தரம்	44
16.	இஸ்லாமிய தமிழ் இலக்கியம் ம. முகம்மது உவைஸ்	48
17.	கிறிஸ்தவத் தொண்டு அத்தியட்சர், வண. ச. குலேந்திரன்	51
18.	பெரும் பேர் இயமன் பொ. கிருஷ்ணன்	53
19.	யாழ்ப்பாணத்தில் நாடகக்கலை 'இலங்கையர்கோன்'	56
20.	இசைக்கலை வளர்ச்சி இசைப்புலவர் என். சண்முகரத்தினம்	59
21.	உள்ளப்பெருக்கு சி. வைத்தியலிங்கம்	61
22.	மந்திரத்தில் மாங்கனி 'அகிலன்'	67
23.	பிரயாணி சம்பந்தன்	72
24.	பிழையும் சரியும் 'கசின்'	79
25.	தலாக் வ. அ. இராசரத்தினம்	84
26.	மின்னற் கீற்று சு. வே.	88
27.	இது திருட்டல்ல எஸ். பொன்னுத்துரை	89
28.	சுன்னாகம் செல்லாச்சியம்மா ச. அம்பிகைபாகன்	94
29.	தந்தை மொழி அ. செ. முருகானந்தன்	97
30.	வைர மோதிரம் நீலா ராமமூர்த்தி	101
31.	ஈழத்து மணி விளக்குகள் கனக. செந்திநாதன்	105—120
32.	வாழ்க்கைத் தத்துவம் சத்தியதேவி துரைசிங்கம்	121

		பக்கம்
33.	கண்காணுக் கதிர்கள் இ. அம்பிகைபாகன்	123
34.	எதிர்கால உலகம் 'சண்பகம்'	125
35.	அருள் நெறி வித்துவான் பொன் அ. கனகசபை	127
36.	அநாதைகள் வாழ்கிறார்கள் பண்டித வ. நடராஜன்	129
37.	மாமூல் யொன்று பெ. தூரன்	135
38.	இரு சிலேகள் அல்வாயூர், மு. செல்லேயா	136
39.	கங்குல் துரத்தும் இப்போதில் வி. சீ. க.	138
40.	இல்லேயான காவியம் நாவற்குழியூர் நடராசன்	139
41.	ஈழத் தமிழர் இடர் 'சாரதா'	141
42.	விண்ணின் அமுதம் மாவை, க. சச்சிதானந்தன்	142
43.	முகிலே த. யோகநாதன்	143
44.	வெறும் சந்தடி முருகையன்	143
45.	பாச மனம் வி. கி. இராசதுரை	144
46.	குடிசையிற் சுவர்க்கம் யாழ்ப்பாணன்	145
47.	உன்போல் நண்பன் யாரோ? இ. நாகராஜன்	146
48.	தோலகட்டி செபமாலேத் தாசர் ஆச்சிரமம் 'பயஸ்'	147
49.	தமிழுக்குச் சமநிலே தனிநாயக அடிகளார்	151
50.	கலேச் சொற்கள் அ. வி. ம.	152

பக்கம்

51. என் தந்தையார் 153
குரு. அம்பலவாணர்

52. பேச்சைக் குறையுங்கள் 159
'தேவன்'—யாழ்ப்பாணம்

பாலர் பகுதி [162 – 164]

53. மின் விளக்கு 162
'இதம்'

54. நீதி எங்கும் நாட்டுவேன் 162
'தம்பி'

55. வெள்ளி மல்லிகை 163
கேசரி மாமா

56. தமிழ்த் தாய் 164
'முல்லை'

57. ஈழகேசரியின் தோற்றம் 165

58. ஐந்து நாட்களுக்கு முந்தி 170
சு. நல்லையா

59. நான் கண்ட திரு. வி. க. 172
ம. பொ. சிவஞானம்

60. கட்டுரை ஒன்று தேவை 174
'சுயா'

61. வாழிய மங்களம் 176
நயீனா, கவி ஆ. இ,

நிழலுருவப் படங்கள்

★★★

1. 'ஈழகேசரி'யின் தந்தை திரு. நா. பொன்னையா, ஜே. பி. அவர்கள்
2. நல்லூர்க் கந்தசுவாமி கோவில்
3. நல்லூர்க் கயிலாய பிள்ளையார் கோவிலும், கயிலாயநாதர் கோவிலும்
4. நல்லூர் சட்டநாதர் ஆலயம்
5. நல்லூர் வீரமாகாளியம்மன் கோவில்
6. ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில்
7. தமிழ்க் கடலும் தமிழ்ப் பெருங் குன்றும்
8. வருத்தலைவிளான் மருதடிவிநாயகர் கோவில்
9. வித்துவசிரோமணி பிரமஸ்ரீ சி. கணேசையரவர்கள்
10. கொக்கட்டிச்சோலைத் தான்றோன்றீசுவரர் கோவில்
11. பொலநறுவாவிலுள்ள இரண்டாம் சிவாலயம்
12. சிலாபத்திலுள்ள முனீசுவர ஆலயம்
13. கதிர்காம முருகன் ஆலயம்
14. கலைப் புலவருக்குப் பொன்னாடை
15. நடராஜ வடிவம்
16. சுந்தரமூர்த்தி சுவாமிகள்
17. யாழ்ப்பாணம் சோனக வீதியிலுள்ள பள்ளிவாசல்
18. வெள்ளைக் கரைக் கடற் பள்ளிவாசல்
19. மடுமாதா கோவில்
20. மானிப்பாய்த் தேவாலயம்
21. யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீசுவரன் கோவிலுள் ஹரிசனர் இறைவழிபாடு செய்யுங் காட்சி
22. யாழ்ப்பாணம் கயிலாசபிள்ளையார் கோவிலுள் ஹரிசனர் வணங்குங் காட்சி
23. இசைப் புலவருக்குப் பொற்கிழி
24. செல்வச்சந்நிதி தொண்டைமானாறு
25. வல்லிபுர விஷ்ணு ஆலயம்
26. கந்தவனக்கடவை முருகன் ஆலயம்
27. வல்வெட்டித்துறைச் சிவன் கோவில்
28. நாகர்கோவிலிலுள்ள நாகதம்பிரான் கோவில்
29. நாகர்கோவில் மருதமரச்சோலை
30. மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் கோவில்

31. பொன்னாலை வரதராசப் பெருமாள் கோவில்
32. யாழ்ப்பாணம் மணிக்கூண்டுக் கோபுரம்
33. பூதத்தம்பி முதலியார் வீட்டு முகப்பு
34. காங்கேசன்துறை கலங்கரை விளக்கம்
35. கீரிமலைக் கேணி
36. யாழ்ப்பாணம் — பண்ணைத்துறை
37. காங்கேசன்துறைச் சீமேந்துத் தொழிற்சாலை
38. காங்கேசன்துறைத் துறைமுகம்
39. ஊர்காவற்றுறைத் துறைமுகம்
40. பருத்தித்துறைத் துறைமுகம்
41. தொண்டமானாறு கடலணைக்கட்டு
42. காரைநகர்க் கரையிலே
43. ஊர்காவற்றுறைக் கடற்கோட்டை
44. சுன்னாகம் சந்தை
45. இணுவில் 'மக்லோட்' வைத்தியசாலை
46. நல்லூர் சங்கிலியன் தோப்பு
47. யாழ்ப்பாணக் கோட்டை
48. தம்பலகாமம் கோணேசர் கோவில்
49. திருக்கோணமலையிலுள்ள புதிய கோணேசர் ஆலயம்
50. வண்ணை வைத்தீசுவரன் கோவில்
51. குமாரசுவாமிப் புலவர்
52. தூபாராம தாதுகோபம்
53. யாழ்ப்பாணம் அத்தியடிப் பிள்ளையார் கோவில்

LIST OF ADVERTISERS

Abdul Cader, Haji V. M. M. S., Jaffna
Aboosalih Haji, Jaffna
Abdul Rahuman & Co., T. P., Colombo
Arnolis Silva & Sons, R., Colombo

Bata Shoe Company of Ceylon Ltd., Mount - Lavinia
Barath Studio, Jaffna
Bhawani Store, Chunnakam

Cinemas Limited, Colombo
Colombo Commercial Company Ltd., Colombo
Co-operative Sales Society Ltd., Jaffna

Duraiappah Pathar & Sons, N. Jaffna

Eelakesari Ponniah Ninaivu Velieeddu Manram, Kurumpasiddy, Tellippalai
Esmaljee Amijee, Jaffna

Globe Motors Limited, Colombo

Ismail M. H., Colombo

Jaffna Mutual Benefit Company Ltd., Jaffna

Kala Bhavanam, Point Pedro
Kanagalingam & Son V., Colombo

Lebbay Bros., L. K. S., Jaffna
Lingam K. P., Jaffna
Lingam & Son, T. N. Jaffna

Mahadevans Limited, Colombo
Malayan Trading Co., Jaffna
Manickavasaga Nadar & Co., Y. P. M., Colombo
Mascons Limited, Colombo
Meeran Sahib K. N. M., Jaffna

Nadaraja Press The, Colombo
Nallathamby A., Jaffna
Nestles Products (Ceylon) Ltd., Colombo
North Ceylon Builders & Contractors Ltd., Jaffna

North Ceylon Tamil Works Publishing House, Chunnakam
North Ceylon Book Depot, Point-Pedro

Prudential Assurance Co., Ltd., Colombo
Perera K. E., Negombo

Rajandrams Limited, Colombo
Ratna Stores, Colombo

Sabas, Photographers, 11, Stanley Road, Jaffna
Sambasivam Textiles, Jaffna
Samuel Sons & Co. Ltd., Colombo
Sangarapillai & Bro. A. S. Jaffna
Sanmuganathan & Sons S. S., Jaffna
Sarnelis De Silva W., Batticaloa
Shell Company of Ceylon Ltd., Colombo.
Singer Sewing Machine Co., Jaffna
Sokkalal Ramsait Factory T. P.. Colombo
Spicers (Export) Limited, Colombo
Sri Lanka Book Depot, Jaffna
Sri Subramaniam Book Depot, Jaffna
Subramaniam & Bro. P. Kekirawa and Jaffna

Thambithurai T., Jaffna
Thana Luckumy Book Depot, Chunnakam
The Nehru Book Depot, Colombo
Thirumakal Press, Chunnakam

United Electricals Ltd., Colombo

Vinns Ltd., Colombo
Vivekananda Press, Jaffna


COVER

A. K. S. & Sons, Jaffna

Kekirawa Carriers Ltd., Kekirawa

Arumugampillai & Son, K., (Yapan), Jaffna.

வினோபாஜியின் ஆசி



ஈழகேசரிக்குச் சில வார்த்தைகள் எழுத வேண்டுமென ஸ்ரீ அரியநாயகம் எனக்கு நினைவூட்டினார். 'ஈழகேசரி' பல ஆண்டுகளாக எனக்கு வந்து கொண்டிருக்கிறது. நானும் அதனைக் கொஞ்சம் வாசித்துவருகின்றேன்.

ஈழகேசரி இலங்கையிற் சர்வோதயக் கருக்துக்களை வளர்ப்பதில் முயற்சி செய்யும் ஒரு பத்திரிகை என எனக்குத் தோன்றுகிறது. சர்வோதயக் கருத்து உலக மனத்திலும் நேசத்தையும் அன்பையும் பரப்ப விரும்புகின்றது. இன்றும் உலகத்திற் கருணை என்னவோ இருக்கிறது. ஆனல் அதன் ஆட்சியில்லை. சக்தியின் ஆட்சிதானிருக்கிறது. உலகத்தில் இராணுவ சக்தியே தேவைப்படாத அளவு அன்பும், நேசமும் பரவினல்தான் கருணையின் இராச்சியம் ஏற்படும்.

ஈழகேசரி இலங்கையில் அன்பு, நேசம், கருணையின் செய்தி ஆகியவற்றின் தூதுவனக என்றும் நின்று நிலவுமென்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

வினோபாவின்
ஆசிரமம்

10-9-'56

சென்னைத் தேசாதிபதியின் மகிழ்ச்சி

சென்னைத் தேசாதிபதி மேன்மை தங்கிய
ஸ்ரீ. ஸ்ரீபிரகாசா அவர்களின் ஆசிச் செய்தி

வெள்ளி விழாக் கொண்டாடுந் தகைமைசால் தமிழ் வார இதழாகிய ஈழகேசரியை வாழ்த்துவது எனக்குப் பெரு மகிழ்ச்சியை ஊட்டுகின்றது. சென்ற இருபத்தைந்து வருட காலமாக இப் பத்திரிகை இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களுக்கு இடையருப் பணியாற்றி வருகின்றதென நான் அறிகின்றேன். தமிழ்க் கலையிலும் தமிழ் இலக்கியத்திலும் தணியாக் காதல்கொண்டுள்ள பாரதநாட்டுமக்கள் அனைவ ரதும் நல்லாசிகள் மங்களமான இந் நன்னாளில் ஈழகேசரி நிறைந்த இப் பத்திரிகைக்குப் பெரிதும் உண்டு. இவ் வளவு காலமாக இலங்கை மக்களுக்குச் செய்துவந்துள்ள தொண்டுகளை இப் பத்திரிகை தொடர்ந்து ஆற்றிவரு மென்பது எனது நம்பிக்கை. நற்பணியாற்றிவரும் இப் பத்திரிகை குன்று ஊக்கத்துடன் என்றும் நின்று நிலவ வேண்டுமென மனமார வாழ்த்துகின்றேன்.

VINNS LTD.

AS YOU KNOW

ARE CEYLON'S FOREMOST PHOTOGRAPHERS & BLOCK-MAKERS

வின்ஸ் லிமிட்

இலங்கையிற் படம் பிடிப்பதிலும்
புளொக் செய்வதிலும்
முன்னணியில் நிற்பவர்

STUDIO PORTRAITS

OUTDOOR PHOTO-GRAPHS

DEVOLOP-ING PRINTING

PICTURE FRAMING


★

ஸ்ரூடியோ
படப்பிடிப்பு

வெளியே
புகைப்படம்
எடுத்தல்

'டெவலப்'
'பிறின்ற்'
செய்தல்

'பிரேம்' போடுதல்



LINE
HALF-TONE
COLOUR
BLOCK MAKING

ART PRINTING

DESIGN-ING LAYOUTS

★

லின்–,
போட்டோ–,
வர்ண–,
புளொக்குகள்
செய்தல்

வர்ண
அச்சடிப்பு

இவ் வெள்ளி விழா மலரை அலங்கரிக்கும் புகைப்படங்களின் புளொக்குகள்
யாவும் நாம் தயாரித்தவையே.

MARADANA, COLOMBO

Phone : **3793** P. O. Box : **1092**

நோத் சிலோன் பில்டேஸ் அன்ட் கொன்ரக்ரேஸ் லிமிடட்

ஸ்ரான்லி ரோட் :: யாழ்ப்பாணம்

விநியோகஸ்தர்கள்

போர்ட்

கார் - வான் - டிறக்

- மோட்டார் உறுப்புகள்
- மின்சாரக் கருவிகள்
- கட்டிடச் சாமான்கள்

மலிந்த மாளிகை! **சிறந்த சேவை!**

போன்: 87 :: தந்தி: 'பில்டேஸ்'

North-Ceylon Builders & Contractors Ltd.

JAFFNA



கொழும்பு டிஸ்ரிறிபியூட்டேஸ் லிமிட், சொக்கலால் ரும்செட் பீடிகள், சிலோன் ருபாக்கோ கொம்பனி லிமிட், சுவதேசி இன்டஸ்ரியல் வேர்க்ஸ் லிமிட், எவரெடி ரோச் பாற்றறிஸ், றலி பைசிக்கில்கள், நெசிள்ஸ் அன் அங்கிலோ சுவிஸ் மில்க் பொருள்களின்

விற்பனை ஏஜெண்டுகள்

உள்நாட்டுக் குற்றரிசி, எள்ளு, பிண்ணாக்கு, நெல், சீமெந்து, இரும்புச் சாமான்கள், பையர்ஸ்ரோன் ரையர்ஸ், சுத்தமான இலங்கைத் தேயிலை ஆகியவை எப்பொழுதும் விற்பனைக்கு இருக்கும்.

சுத்தமான திறமான நல்லெண்ணெய்

மொத்தமாகவும் சில்லறையாகவும் எந்த நேரமும் பெற்றுக்கொள்ளலாம்

பி. சுப்பிரமணியம் அன்ட் பிறதர்

பிரபல வர்த்தகர்களும் – மொத்த வியாபாரிகளும்

'சுப்பிரமணிய மஹால்' :::: கெக்கிராவை



ஸ்ரீலங்கா அச்சகம்

சகல விதமான அச்சு வேலைகளும் செய்து கொடுக்கப்படும் ஸ்தாபனம்.

திருத்தமாகவும், துப்புரவாகவும் கண் கவர்ச்சியாகவும் அச்சுவேலைகள் செய்து கொடுப்பதாலேயே எங்கள் அச்சகத்தை வாடிக்கையாளர் ஆதரித்து நிற்கின்றனர். நல்ல முறையிற் புத்தகங்களும் கட்டிக் கொடுக்கப்படும்.

புத்தகப் பதிப்பாளர்கள் மாத்திரமன்றி அச்சுவேலைக்குரிய கடதாசி, மைவகைகளிலும்விற்பனையாளர்கள்.

ஸ்ரீலங்கா புத்தகசாலை

இலங்கையிலுள்ள புத்தகசாலைகளுள் பிரசித்தமான ஒரு புத்தகசாலையாக விருப்பதால் எம்மிடம் இலங்கை, இந்தியாவிற் பதிப்பிக்கப்பட்ட தமிழ்ப் புத்தகங்கள் எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம்.

கல்லூரிகளுக்குரிய ஆங்கில புத்தகங்களும், பாடப் புத்தகங்கள், பொது வாசிப்புப் புத்தகங்கள், வாசிகசாலை நூல்நிலையங்களுக்குரிய நூல்கள்—; சம்ஸ்கிருத, சிங்கள, பாளி பாஷைப் புத்தகங்களும்; உயர்தர கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், பண்டித வகுப்புக்கள் ஆகியவற்றிற்குரிய நூல்களும் எம்மிடங் கிடைக்கும்.

ஸ்ரீலங்கா புத்தகசாலையும், ஸ்ரீலங்கா அச்சகமும் ஒரே ஸ்தாபனமாகும்

SRI LANKA BOOK DEPOT AND PRINTING WORKS


234, K. K. S. ROAD — VANNARPONNAI — JAFFNA

T'PHONE ; 269

MESSAGE FROM HIS EXCELLENCY

SHRI SRI PRAKASA

GOVERNOR OF MADRAS



It gives me very great pleasure to greet the Tamil Weekly Eelakesari on the occasion of its Silver Jubilee. I understand that it has rendered yeoman service to the Tamil Public of Ceylon throughout the past twenty-five years of its life. The good wishes of all lovers of Tamil art and literature in India are with this enterprising journal on this glad day. I am sure it will continue to serve the people of Ceylon as well as it has done in the past and I send my very best wishes for its continued success in its good work.

Sri Prakasa

Governor of Madras.

ஈழகேசரி ஆண்டுபல வாழுக

வித்துவசிரோமணி பிரமஸ்ரீ சி. கணேச ஐயர் அவர்கள்

ஆசிரியப்பா


உலகம் போற்று முயரிய முதன்மைகொள்
பொன்னெய னென்னு மிறைவன தருளால்
சுன்னை மதனிற் றுலங்கு மச்சகக்
குகையிற் பிறந்த கேசரி நீயே
நின்றனக் கேற்பக் கர்ச்சித் தெழுந்தே
ஈழநா டாளு மிறையவர் தமக்கும்
அநீதிக ளின்றி யரசு செய்திட
அச்ச மின்றி அறிவுகள் கொளுத்தியும்,
மந்திரி மார்க்கு மந்திரங் கூறியும்,
முத்தமிழ்ப் புலவர்கண் முதன்மைக ளெடுத்தே
விரித்துப் புகழ்ந்தனை விளங்கக் கூறியும்,
அரங்கேற்று விழாக்களொ டாண்டுநிறை விழாக்களும்
யாவரு மறிய வெடுத்துப் புகழ்ந்தும்,
பல்வகைக் கதைகள் படைத்துக் கூறியும்,
இலக்கியப் பண்புக ளெடுத்து விளக்கியும்,
பல்வகைப் பாக்கள் பரித்துக் காட்டியும்,
இன்ன வெல்லாம் யாவரும் புகழ
இசைத்துக் காட்டினை இவ்வாண்டி னீதான்
ஐந்நான் கதனெடு மைந்தாண்டு பெற்றாய்.
இன்னும்,—
நின்ற ளிளமை நிலைபெற் றனையாய்
இந்நா ளுன்னை இனிதாய் வளர்த்திடும்
அரியரத் தினமா மதிபனு நீயும்
ஆழிக் கரையி னமர்ந்திடு மணலினும்
ஆண்டுபல வாழுக வாண்டுபல வாழுக.
அன்றியும்,
கேசரி யென்னு நின்றனை முன்னுள்
தோன்றிடச் செய்த தோன்றலின் பெயரை
இப்புவி தன்னி லென்று நிலைத்திட
யாமெலா மெடுத்திங் கினிதுவாழ்த் துதுமே.

[இச் செய்யுளில் பொன்னெயன் என்னும் இறைவன் என்பதற்குச் சிலேடை வகையானே கேசரி (= சிங்கம்) என்பதற் கேற்பப், பொன்போலும் மேனியை யுடைய பிதாவாகிய இறைவன் (= கடவுள்) என்றும், சுன்னாகம் (சுல்நாகம்) வெள்ளி மலை என்றும் பொருள் கொண்டு கொள்க. பொன் உவம ஆகுபொயராய் மேனியை யுணர்த்தி நின்றது.]

இருபத்தைந்து வருடங்கள் காப்பாற்றி வந்த ஒரு பொருள்

பாரதரத்தினம் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்
அவர்கள்

※



ஈழகேசரி எல்லாத் துறைகளிலும் பெருஞ் சேவை செய்து வருவது தமிழ் படிக்கும் இலங்கையருக்குத் தெரிந்த விஷயம். இருபத்தைந்து வருஷங்கள் காப்பாற்றி வந்த ஒரு பொருள். இதைத் தமிழ் இலங்கையர் மேன்மேலும் அன்புகொண்டு வளர்த்து வருவார்களாக.

★ ★ ★ ★

வெள்ளி விழா வாழ்த்து

சென்னை, பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்
மு. வரதராசனார் அவர்கள்

★

தண்டமிழ்ப் பற்றுத் தானும் தமிழ்க்கலை யார்வத் தோடு
பண்டைய பெருமை நோக்கிப் பண்பட்டே உயரு மாறு
கொண்டநற் குறிக்கோள் போற்றிக் கோலமாய்த் தொண்டு செய்தாய்
எண்டிசை புகழப் பெற்றாய் ஈழகே சரிநீ வாழி

பொன்னையனர் புகழ்போல் வாழ்க

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்

★

எழு சீர் ஆசிரிய விருத்தம்

சத்திய மன்பு நடுநிலை யறிவு தகைமைசேர் வீரமுந் தழைத்த
புத்திர னீழ கேசரி கிழக்கிற் புகுந்தனன் புகுதலும் மக்கள்
புத்தியிற் பயமு மடிமையு மகலப் புகுந்தது சுதந்திர சக்தி
நித்திய மிலங்கை யன்னையு மின்ப நெறிக்கிலக் காகியே நின்றுள்.

தன்னைநேர் மயிலைப் பொன்னைய வேளின் சால்பினிற் பிறந்துமீ ளுட்சி
யன்னையின் மடியி லிருந்துமுத் தாடி ஆகரத் தகழ்ந்தெடா வினிய
* பொன்னெனு மிலங்கை மாப்பெருங் கிழவன் புதியதோர் வடிவுகொண் டன்ன
நன்மகன் வளர்ந்தே யையைந்தாண் டினிய நடையினி லுயர்ந்துபேர் பெற்றான்.

புன்மைசேர் வகுப்பு வாதமாங் களிறும், பொருதொரு வகுப்பொரு வகுப்பின்
நன்மையே நசுக்கும் சுயநலக் களிறும், நாப்பயில் சந்தர்ப்ப வாதம்
என்னுமோர் நயவஞ் சகக்களி றுடனே ஏங்கியோட் டெடுத்திட வுரப்பி,
வன்மைசே ரீழ கேசரி வெள்ளி விழாவயர் வனப்பினிற் பொலிந்தான்.

மக்களுட் காந்தி மகானென, வயங்கும் மணிகளுள் முத்தென, மாண்பு
தொக்கநல் லறத்துள் வாய்மையே யென்னத், தொன்மொழி களுள்தமி ழென்னத்
தக்கநல் லழகிற் கவியழ கென்னச், சாற்றுபத் திரிகைகள் தம்முள்
மிக்குய ரீழ கேசரி வெள்ளி விழாவெனுந் தமிழ்விழா வாழ்க.

கலையெனு மினிய நவரத்ன மிழைத்த கலன்கொடு புனைந்து,மூ வுலகும்
விலைபெறு மின்பத் தமிழ்மணம் வீச, விளங்கு - பொன் னையனர் புகழ்போல்
நிலைவள ரீழ கேசரி, யென்றும் நிறைந்த - பே ரின்பநா யகமாத்,
தலைவள ரன்பி னரியரத் தினம்போற் தமிழ்நலம் பேணியே வாழ்க.

* சேர் பொன். இராமநாதன்

உலகம் வாழ்த்தும் வெள்ளிவிழா

அரசவைக் கவிஞர் நாமக்கல், வெ. இராமலிங்கம்பிள்ளை அவர்கள்

★ ★ ★

அமரரும் அறிந்தி டாத அன்பையே அறமாய்க் கொண்டு
அருளெனும் பொருளை நாடும் அறிவையே நிறையப் பேசி
சமரசம் உணருஞ் சான்ற சத்திய நெறியே காட்டிச்
சச்சர வில்லா இன்பச் சமுதாயம் வளரச் செய்யும்
தமிழ்மொழிப் பண்பைக் காக்கும் தன்மையாற் சிறப்புற் றோங்கித்
தக்கவர் புகழும் 'ஈழ கேசரி' தனைநாம் மெச்சி
விமலனைப் பணிந்து வெள்ளி விழாவினுக் காசி கூறி
வீறுடன் என்றும் நின்று விளங்கிட வாழ்த்து வேமே.

கொள்கையிற் குறைந்தி டாமற் குணங்களைப் புகழ்ந்து கூறிக்
குற்றங்கள் யார்செய் தாலுங் கடிந்திடக் கூசி டாமல்
வெள்கிடத் தக்க தென்னும் எதனையும் வெளியி டாமல்
விருப்பொடு வெறுப்புக் காக வீணுரை விரித்தி டாமல்
தெள்ளிய சொற்கள் சேர்த்துத் தெரிந்துரை தீட்டி நாட்டின்
சேமமே கருதும் 'ஈழ கேசரி' திறத்தை யாரும்
உள்ளுறப் புகழ்ந்து பேசி உவப்புறத் தகுந்த தாக
உற்றதாம் இந்த வெள்ளி விழாவினை உலகம் வாழ்த்தும்.

இலங்கையின் கலைத்தூதன்

★

சென்னை, தென்னிந்தியப் பத்திரிகையாளர் சம்மேளனத் தலைவர்
திரு. எஸ். ஏ. கோவிந்தராஜன் அவர்கள் வாழ்த்துரை

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு :

ஈழகேசரி வெள்ளி விழாக் கொண்டாடும் இம் மங்கள நன்னாளில் நான் தங்களுக்கும் தங்கள் உதவி யாளர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்க ஆசைப்படுகின்றேன். இலங்கையின் கலைத்தூதனும் 'ஈழ கேசரி'யின் வாயிலாகத் தாங்கள் அனைவரும் ஆற்றிவரும் பணி அதி உன்னதமானது. ஒளிமிக்க எதிர்காலம் தங்க ளுக்கு மகிழ்வூட்டுவதாகுக!

தங்கள் நன்றியுள்ள
எஸ். ஏ. கோவிந்தராஜன்
தலைவர், தென்னிந்திய பத்திரிகையாளர் சம்மேளனம்.

திரு. இராஜ அரியரத்தினம்,
ஆசிரியர், ஈழகேசரி,
சுன்னாகம்.

SOUTHERN INDIA JOURNALISTS' FEDERATION

15, Ritchie St., Mount Road
MADRAS-2

President:
S. A. GOVINDARAJAN

General Secretary:
S. BASHYAM

Dear Mr. Editor,

May I, on this auspicious occasion of the Silver Jubilee of the *Eelakesari* congratulate you and your staff on the excellent work you are doing as spokesmen of Tamil Culture in Ceylon and wish you a bright and happy future.

Yours Fraternally
S. A. Govindarajan
President,
S. I. J. F.

MR. RAJ. ARIARATNAM.
EDITOR, THE EELAKESARI,
CHUNNAKAM, CEYLON.

நிமிர்ந்த நன்னடை

★

'கல்கி' நிர்வாக ஆசிரியர் திரு டி. சதாசிவம் அவர்கள்

ஒரு பத்திரிகையின் வாழ்வில் 25 ஆண்டுகள்வரை இடைவிடாமற் பொதுஜன சேவை புரிந்து சகலருடைய அபிமானத்தையும் பெறுவதென்பது பெரிய விஷயம். அதிலும் இன்று தோன்றி நாலே மறையும் வார இதழ்களும் மாத இதழ்களும் மலிந்த காலத்தில் ஒரு வார இதழ் இருபத்தைந்து ஆண்டுகள் வரை பல சோதனைகளையுஞ் தடங்கல்களையுஞ் சமாளித்துக்கொண்டு பத்திரிகை யுலகில் நிமிர்ந்த நன்னடை போட்டு உலவுவதென்றால் அந்தப் பத்திரிகையை வாயாரப் புகழத்தான் வேண்டும்.

மனித வாழ்க்கையிலேயே 25 ஆண்டு ஒரு முக்கியமான பருவத் தைக் குறிக்கிறது. பிள்ளைப் பிராயத்தையும், பள்ளிக்கூடங்களிற் படித்துக் கல்வியறிவையும் உலக அனுபவங்களையும் பெறும் பிராயத்தையுந் தாண்டி வாழ்க்கைத் துறையில் துணிச்சலுடனுந் தன்னம்பிக்கையுடனும் இறங்கும் ஒரு பருவம். சென்ற ஆண்டுகளிலே அடைந்த அனுபவங்களையெல்லாம் ஒன்று திரட்டித் தமிழருந் தமிழ்மொழியுந் தமிழ்க் கலாசாரமும் மேலும் மேலும் முன்னேறத் திறமாகப் பணி புரிவதென்ற சங்கற்பத்துடன் செல்வன் ஈழகேசரி தனது 26ஆம் ஆண்டைத் துவக்குகிறான். அவனுக்குத் தமிழ் கூறும் நல்லுலகின் ஆதரவும் அபிமானமும் அமோகமாயிருக்குமென்பதில் எனக்கு ஐயமில்லை.

திறமையும் அறிவாற்றலும் இங்கிதமான சுபாவமும் மேலான பண்பும் மிகுந்த ஆசிரியர் ஸ்ரீ இராஜ அரயரத்தினம் அவர்களின் தலைமையில் ஈழகேசரி மேலும் மேலும் முன்னேற்றமடைந்து தமிழ்த்தாய் நாட்டின் கண் போன்ற ஈழ நாட்டுக்கும் சிறப்பாகத் தமிழ் பேசும் மக்களுக்கும் பல்லாண்டு பணி புரிய எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பாராக.

இனிய தமிழ்வளர்க்கும் ஈழகேசரி

★

குன்றக்குடி — திருவண்ணுமலை ஆதீனத்து மகாசந்நிதானம்
அருட்பெருந்திரு **அருணசல தேசிக அடிகளார்** அவர்கள்

இன்று மக்களிடையே அறிவார்வ உணர்ச்சி தலையெடுத்து நிற்கிறது. பொதுவாகப் புத்தகங்கள், பத்திரிகைகள் படிப்பதில் ஆண்டுகள் தோறும் அளவுகடந்த உற்சாகம் வளர்ந்து வருகிறது. இந்த ஆர்வத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் நிறையப் புத்தகங்கள் வெளி வந்துகொண்டிருக்கின்றன. பத்திரிகைகளின் எண்ணிக்கையும் வளர்ந்துவருகின்றது. ஆனால், இந்த வளர்ச்சி தரத்தில் தகுதி உடையனவாக அமைந்திருக்கின்றனவா என்பதை உய்த்துணர்ந்து பார்க்கவேண்டும். பொதுவாகத் தகுதியற்ற ஏடுகள் பெருகிவருவதாகப் பெரும்பாலோர் கருதுகின்றனர். எனினும், ஆங்காங்கு நல்லமுறையில் நடைபெறுகின்ற பத்திரிகைகள் சில உண்டு. அத்தகு சிலவற்றுள் ஒன்று **ஈழகேசரி.** கடந்த இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்னர் **தமிழன்பர் திரு. நா. பொன்னையா** அவர்களால் 'ஈழகேசரி' தொடங்கப்பெற்றது. திரு. பொன்னையா அவர்களைத் தமிழகத்துக்கு அறிமுகஞ் செய்துவைக்க வேண்டிய அவசியம் இல்லை. **தொல்காப்பியம்** முதலிய பழந்தமிழ் நூல்களை முறையாகப் பதிப்பித்துத் தமிழகத்துக்குத் தந்த பெருமை திரு. பொன்னையா அவர்கட்கு உரியது. அவர்களால் தொடங்கப்பெற்ற 'ஈழகேசரி' இனிய எளிய தமிழில் கருத்தமைந்த சுவை யோடு தமிழர்கள் வாழுமிடமெல்லாம் சென்று வாழ்வளிக்கின்றது. 'ஈழகேசரி' தாங்கிச் செல்லும் கருத்துக்களின் மூலம் தமிழ் வளர்கிறது. தமிழர்கள் வளம் பெறுகின்றார்கள். பண்பட்ட பைந்தமிழ் நாகரிகம் பரவிக் கால்கொள்ளுகிறது. காழ்ப்பின்பாற்பட்ட வம்பும் வாதும் 'ஈழகேசரி'க்குத் தெரியாததொன்றாகும். அது ஒன்றே வெள்ளி விழா அளவிற்கு வளர்ச்சியைத் தந்திருக்கின்றது.

கொழுநன் வழிநின்று கொழிதமிழ் வளர்க்கும் தமிழ்ப் பணியில் ஈடுபட்டுள்ள அன்னை திருமதி மீனாட்சி அவர்களுக்கும், ஈன்று புறந்தந்த தந்தைக்கு இனிதாற்றுங் கடன் கன்னித் தமிழ் வளர்க்குந் திருப்பணியே என்று கருதி 'ஈழகேசரி'யைப் பெட்புடன் பேணி வளர்த்துவரும் சகோதரி திருமதி புனிதவதிக்கும் தமிழகத்தின் நெஞ்சம் கலந்த நன்றி உரியதாகுக.

ஈழகேசரி உயிரோட்டம் உடைய தாளாக உலவி வருகிறது. ஆம்; பத்திரிகைக்கு உயிரோட்டந்தானே தேவை. உயிரோட்டத்தைப் பொறுப்பாளர் தரமுடியுமா? முடியாது. அச்சகந்தான் கொடுக்கமுடியுமா? அதுவும் முடியாததொன்று. அப்படியானால், பத்திரிகைக்கு உயிர் கொடுப்பது யார்? அப் பத்திரிகையின் ஆசிரியரே ஆவார். **ஈழகேசரி** யின் உயிரோட்டத்துக்கும் வளர்ச்சிக்கும் ஆதாரமாய் இருப்பவர் ஆசிரியர் திரு. இராஜ அரியரத்தினம் ஆவர். அன்னரின் நடை நாட்டுக்கு நடை நல்குகிறது. வாழ்க அவர்தம் எழுத்தாற்றல்! நாளும் நற்றமிழும் நன்மை பெருகு அருள்நெறியும் வளர்த்து வாழ்வுதரும் **ஈழகேசரி** வாழ்க என வாழ்த்துகின்றோம்.

பூத்தது வெள்ளிப் புதுமலர்

— யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் —

பூத்தது வெள்ளிப் புதுமலர் வாழி!
புன்னகை யுடனே நன்மணம் பரவியே
தித்தகு சாந்தத் திருவுறு வானம்
திரைகட லுடனே செங்கை தழுவிக்

கூத்திடுங் காலை குணுகுணுச் சதங்கை
குலுங்கும் ஒலியுடன் குயிலிசை கதுவத்
தோத்திரம் பாடித் தொண்டர்கள் கூடத்
தோன்றிய துலகம் வேண்டிய மலரே!

கனவிற் பூத்த கவிமலர் போலே
கானிற் பூத்த தேன்மலர் போலே
நனவிற் பூத்த நாடகம் போலே
ஞானம் பூத்த மோனம் போலே

உள்ளம் பூத்த உபசாந் தத்தில்
'ஓம்'என வண்டுகள் உள்ளே சுழல
வள்ளுவர் குறள்போல் வாழ்விற் கினிய
வளந்தரு வெள்ளி மலர்பூத் ததுவே!

அன்பே அழகாய் அருளே மணமாய்
அகப்புற வுணர்வெலாம் அடுக்கிய இதழாய்
இன்பச் சிவமே இதயத் தேனுய்
எழுந்தது யோகச் செழுந்திரு மலரே!

திருவா சகஞ்சொலுந் தெய்வத் திருமலர்
தேவார மாகுந் தீந்தமிழ்ச் செம்மலர்
ஒருவா சகந்தரும் 'உலகெலாம் கோயில்
உயிர்த்தொகை கடவுள்' உணர்மினென் றதுவே.

வெள்ளி மலர்

கடந்த காலவெள்ளத்தைத் தாண்டி மறந்தனவற்றை நினைந்து மகிழ எம்முடன் சிறிது நேரம் வருமாறு வாசக நேயர்களை அழைக்கிறேம்.

இதோ! சிந்தனைத்தேரை வேகமாகப் பின்செலுத்திக் கண்ணிமைக்குந் நேரத்தில் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின் சென்றுவிட்டோம்.

அன்று ஈழநாட்டில்

எங்கும் ஒரே இருள்; அரசியலால் ஏற்பட்ட அந்தகாரம் அது. படித்தவர்கள் என்போரிடையே ஏற்பட்ட அந்நிய மொழி மோகமாகிய அந்தகாரம் அது. இத்தகைய சூழ்நிலையிலே ஒரு பரிதாபக் குரல் பல நன்மக்கள் உள்ளத்தை நலியச்செய்தது; பொருப்பிலே தோன்றி, தென்னன் புகழிலே கிடந்து, வையை நதியிலே தவழ்ந்து, ஈடிலா இன் குறள் முப்பாலுண்டு, பாவலர் பா நடையும் நாவலன் நன்னடையும் பயின்று, நவிலரிய பக்தியினர் நால்வரொடு பன்னிருவர் பாடிய நற்பாமாலை புனைந்து, இளங்கோவின் சிலம்பு பூண்டு, செந்தமிழ்ச் சிந்தாமணி யணிந்து, மணிமேகலை கட்டி, பளிங்கனைய கவிக் கரசன் கம்பனெனுந் தேவன் பண்ணிவைத்த காவியத்தின் பசும்பொன் முடிதரித்த இளங்குமரித் தமிழ்த் தாய் தம் மக்களாற் புறக்கணிக்கப்பட்டுப் புகலிடமின்றித் தவித்த குரல்தான் அது.

அந்தக் காலத்திலே, அரசியல் அடிமைத்தனமும் அந்நிய மொழி மோகமுந் தலைதூக்கி நின்ற காரணத்தாற் சொந்தத் தாய் தேடுவாரற்றுச் செயலிழந்து நின்றுள்.

இவ்வாறு போலி நாகரிகப் போக்கிலே எங்கள் ஈழவள நாட்டு மக்கள் மிதந்துகொண்டிருக்கையிற் பாரத புண்ணிய பூமி அந்நியர் ஆட்சி, அந்நிய மொழி, பிறநாட்டுக் கலாசாரம் ஆகியவற்றை அறவே ஒதுக்கி இந்தியப் பண்பாட்டை நோக்கிப் பீடுநடையுடன் சென்றுகொண்டிருந்தது.

அன்னையின் விடுதலைக்காக

இவ்வேளையில், **இரவு விடிந்தது கேளீர்! இளவள ஞாயிறு எழுந்தது பாரீர்!!** என ஈழத்து அறிஞர் சிலர் பாரதப் புத்தெழுச்சியை வரவேற்று மங்கள கீதம் பாடினர்கள். அன்னையின் விடுதலைக்காக அனைவரும் ஒன்றுகூடினர்கள். இவர்களுள், சேர் பொன். அருணாசலம், சேர் பொன். இராமநாதன் என்போர் ஈழத் தவக்கொழுந்துகளாவர்.

அன்று இலங்கைப் பெருமகனரான சேர் பொன். இராமநாதன் அவர்களின் தலைமையில் தமிழிலங்கை ஒன்றுபட்டுத் தலைநிமிர்ந்து நின்றது. அந்தப் பெருமகனரின் இறுதிக்காலத்தில் தமிழிலங்கை சிதறித் தள்ளாடத் தொடங்கிவிட்டது. இதனைக் கண்ணுற்ற இலங்கைத் தமிழினம் ஆக்க வேலைகளுக்கு ஊக்கமளிக்க, கண்மூடித்தனமான மூடப் பழக்கங்கள் மண் மூடிப்போக, தமிழ் தந்த நாவலரின் வழிவந்த மக்கள் தாம் என் பதை உணர்த்த, நல்லதொரு பத்திரிகையை நாடிநின்றது. இந்த வேளை யில் தவப்புதல்வர் சேர் பொன். இராமநாதன் அவர்களின் நினைவாக,

நல்லறிவினை லெங்கள் நாடு குறை தவிர, புல்லும் பொருள்முட்டுப் போயகல, அடிமைத்தனம் நீங்க, ஆண்மை பெருக, மடிமை யின்றி யுண்டுடுத்து வாழ, பொன்னையா தந்த கலைப் புத்திரனுய் ஈழகேசரி தோற்றமளித்தது.

இதனல்,

மக்களைப் புறக்கணித்து அரசியற் சித்தாந்தங்களை அன்னிய மொழி யில் அள்ளிச் சொரிந்த பத்திரிகைகளும், அவைகளுக்கு அனுசரணையான தலைவர்களும், தத்தம் சமயமே சமயம் என்று நாட்டிற் சாதி மத பாகு பாடுகளை வளர்த்த பத்திரிகைகளும் நடமாடிய பின்னணியிலே, **ஈழகேசரி** யின் வருகை ஒரு புதிய எழுச்சியையும், நம்பிக்கையையுந் தந்தது.

கடினமான பாதையிலே

அது, வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் என்ற வைராக்கியத் துடன் நன்மை கடைப்பிடித்து, நாடொப்பன் செய்து இருபத்தைந்து ஆண்டுகள் உழைத்துத் தனது இலட்சிய வாழ்க்கையின் குன்று இளம் பருவத்தைப் பெருமிதத்துடன் கடந்து, பழைய கால சம்பவங்களை நினைவுத் திரையிற் கொண்டுவருகின்றது.

ஆம்; இருபத்தைந்து ஆண்டுகள் ஒரு பத்திரிகையின் வரலாற்றிலே பெருமைப்படக்கூடிய தொன்றென்பதை அத்துறையில் உழைத்தவர்கள் நன்குணர்வார்கள். அதிலும் 'ஈழகேசரி' வந்த பாதையில், வகுப்புவாதத் தீப்பிழம்புகள் தமது கோர நாக்களை நீட்டிக்கொண்டிருந்தன; போலித் தொண்டராம் சமூகஅட்டைகள் காலடியிற் கிடந்து நெளிந்தன; பொலி விழந்த வெளியீடுகள் மதியை வஞ்சித்திடும் அகழிச்சுணைகளாகக் காட்சி யளித்தன. இவற்றினிடையே பலவித இன்னல்களைத் தந்து நீண்டு படுத்திருந்த சுயநலவாதப் பாம்புகளோ அளப்பில.

இவையனைத்தையுந் தாண்டிக் கர்ச்சித்துக்கொண்டு, பழைமையை மரபு தவருப் பண்போடு பேணியும், புதுமையிலே நல்லனவற்றைத் தேர்ந்தும் வளர்ந்துவந்த 'ஈழகேசரி', தனக்குப் பக்கபலமாக அறிஞர்களையும் புலவர் பெருமக்களையும், பண்டித பரம்பரையினரையும், ஆராய்ச்சி வல்லுந ரையும், மறுமலர்ச்சிப் பூங்காவில் ரீங்காரம் செய்து வண்ண மலர்களைத் தமிழ் அன்னைக்குச் சூட்டிய செல்வர்களையும், புதுமை காணத் துடிக்கும் எழுத்துலகச் சிற்பிகளையும் அணைத்து இலக்கிய வாழ்விலும் அரசியல் வாழ்விலும் பெருவாழ்வு வாழ்ந்தமை குறித்துப் பெரு மகிழ்ச்சியடைகின்றது.

நாட்டின் அரசியல் விழிப்புணர்ச்சிக்கு ஆங்கிலப் பத்திரிகை ஒன் றின் தேவை அவசியமென்பதை யுணர்ந்து **கேசரி** என்ற ஆங்கில வார வெளியீட்டைச் சிலவாண்டுகள் பெரு நட்டத்துக்கிடையே திரு. பொன் னையா அவர்கள் அறிஞர்கள், நண்பர்கள் உதவியுடன் நடாத்தினர் என்பதையும் இச்சமயத்திற் குறிப்பிடுவது பொருத்தமானது.

இலக்கியப் பாலமிட்ட சேவை

ஈழத்துப் பூதந்தேவனர் காலந் தொடங்கி இடையருது பெருகிவரும் தமிழகத் தொடர்பினை இக் காலத்தில் வலுப்படுத்திப் பேராசிரியர்க ளோடும், கவிமணிகளுடனும், எழுத்துலக மேதைகளுடனும் **இரு நாடு களுக்குமிடையே இலக்கியப் பாலமிட்ட சேவை 'ஈழகேசரி'க்கே உண்டு.**

வளருந் தமிழ் இலக்கியத்துக்குக் காய்தல் உவத்தலின்றி 'ஈழகேசரி' செய்துவரும் பெரும்பணியை ஆன்றமைந்தடங்கிய கொள்கைச் சான்றோரும், அருந் தமிழைப் பேணி வளர்க்கும் பெருந்தகையோரும் ஆசீர்வதித்து வருவதைப் பார்த்து வாசகர்கள் பெருமையடைவார்கள். வளம் மிக்க கட்டுரைகள், எண்ணிறந்த கவிதைகள், பாலருக்கு வேண்டும் பழமொழி பாட்டு, பக்குவமான தமிழிற் கவிதை, சாலச் சிறந்தவர் கட்டுரைக் கோவை, தமிழில் மலர்ந்த சிறுகதைச் செல்வம் இப்படி 'ஈழகேசரி' எவ்வளவோ அள்ளிக் கொடுத்திருக்கிறது; கொடுத்து வருகின்றது.

இவற்றினுக்கு மேலாக 'ஈழகேசரி'யின் புத்தக மதிப்புரை தமிழ் கூறும் நல்லுலகிற் பிரசித்தமானது. **நமது வாசிகசாலை** என்ற தலைப்பில் வெளிவரும் மதிப்புரைகளும் தமிழாசிரியர் பலரும் எழுதிவந்துள்ள கட்டுரைகளும் பிற ஆராய்ச்சி உரைகளும் திரு. நா. பொன்னையா அவர்களுடைய பெருமையையே விளக்கிவந்தன எனப் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் எழுதியிருக்கின்றார்கள். வளர்ந்துவரும் தமிழ் இலக்கியத்துக்கு 'ஈழகேசரி' இத் தொண்டுகளை ஏனையோர் வியக்கும் வகையிலே அறிஞர்களினுதவியுடன் செய்துவருகின்றது.

ஈழநாட்டுப் பேனுமன்னர்களையும், தமிழ் வளர்க்குஞ் செல்வர்களையும் இலக்கியத் தராசில் 'ஈழகேசரி' எடை போட்டுப் பொதுமக்களுக்கு அவர்களை அறிமுகஞ் செய்து இலக்கிய உலகைச் சோபிக்கச் செய்திருக்கிறது.

அன்பர்களின் ஆதரவு, அறிஞர்களின் ஆசி

'ஈழகேசரி'யின் தந்தை திரு. நா. பொன்னையா அவர்களின் பத்திரிகைப் பணி நன்கு பயனுறுவதற்கு, தமது சிரமமான கல்லூரி ஆசிரியப் பணியினுடன் 'ஈழகேசரி'ப் பணியையும் முதலில் நன்கு ஆற்றி வந்தவர், சுன்னாகம், குமாரசுவாமிப்புலவர் அவர்களின் குமாரர் திரு. அம்பலவாணர் அவர்களாவர். தமிழ்மரபு வழிவந்த திரு. கு. அம்பலவாணர் அவர்கள் கல்லூரி யாசிரியராகப் பணியாற்றி இளைப்பாறிய பின்னரும் 'ஈழகேசரி'க்குத் தமது பழுத்த அநுபவத்தை நல்கிவருகின்றார்கள். 'ஈழகேசரி'க்குப் புதுமையூட்டி ஆசிரிய பீடத்தை அலங்கரித்த திரு. சோ. சிவபாதசுந்தரம் அவர்களினதும் அவரது இலட்சிய மாளிகைக்குத் துணையாக விருந்தவர்களினதுந் தளராத ஊக்கம் 'ஈழகேசரி'க்குப் பேருதவியாயிருந்தது.

வளர்ந்துவரும் 'ஈழகேசரி'க்கு ஆசியுரை அளித்து வாழ்த்தியுள்ள இந்தியப் பெரியார்களுக்கும் இலங்கைப் பெரியார்களுக்கும் அவ்வப்போது இனிய கட்டுரைகளாலும், கதைகளாலும், பாடல்களாலும், அபிமானத்தாலும் மற்றும் பல வேறுவிதமாகவும் உதவியளித்துவரும் அனைவருக்கும் தமிழ்மக்கள் அனைவரினதும் நன்றி உரியதாகும்.

செம்மை சான்ற புலமைச் செல்வர்கள்

இவ் வெள்ளிப் புதுமலரை நறுமணங் கமழச் செய்துள்ளனர், தாய் நாட்டிலும் சேய்நாட்டிலுமுள்ள பேராசிரியர்களும் செம்மை சான்ற புலமைச்

செல்வர்களும். இவர்களிற் பலர் 'ஈழகேசரி' இலக்கியப் பண்ணையை வளஞ் செய்யும் சொல்லேருழவராவர். அன்னாரின் பண்புமிக்க எழுத்துக்களும், விளம்பரங்கள் தந்துதவிவரும் வர்த்தக மன்னர்களினதும் பத்திரிகை விற்பனையாளரினதும் பேராதரவும், வாசகப் பெருமக்களின் வற்றுத அன்பும் எமக்குக் குன்றுப் பெரு நிதியங்களாகும். இவர்கள் அனைவரினதும் ஒத்துழைப்புத்தான் 'ஈழகேசரி'க்கு வலுவும் வனப்பும் ஊட்டி வருகின்றது.

காந்திஜியின் அஹிம்சை வழிவந்த வினோபாஜி அவர்களது ஆசியுரையும் இம்மலருக்குக் கிடைத்திருக்கின்றது. அப் பெருமகனாரின் திருவடிகள் காவிரி நாட்டிலும், வைகையாற்றங்கரையிலும், பொருநையின்மருங்கிலும், சேதுக்கரையிலும், குமரிமுனையிலும் படிவதோடு ஈழமணித் திருநாட்டிலும் படியவேண்டுமென 'ஈழகேசரி' ஆசைப்படுகின்றது.

தமது கை வண்ணத்தாலும் 'கமரா'வின் கண்ணெளியாலும், விண் மறைக்குங் கோபுரங்களையும், விதமுறு காட்சிகளையும் இம் மலரிற் படியச் செய்து, அதனை அழகுறத் திகழச்செய்துள்ளார் ஸபாஸ் படம் பிடிக்கும் நிலையத்துச் சைத்திரிகர், திரு. கே. கே. வி. செல்லையா அவர்கள்.

வெள்ளி விழாக் கொண்டாடுவதற்கு உறுதுணையாகவிருந்துவரும் அன்னையார் திருமதி பொன்னையா மீனாட்சி அம்மையாரும், அதிபர் கோ. அப்பாக்குட்டி அவர்களும், பதிப்பாளர் மு. சபாரத்தினம் அவர்களும் தம்மைப் பேணிவருவதைக் கண்டு 'ஈழகேசரி' மகிழ்கின்றது.

திருமகள் அழுத்தகத் தொழிலாள அன்பர்களின் சலியா உழைப்பு வெள்ளி மலரின் வண்ண இதழ்களிலெல்லாம் இழையோடி யிருக்கின்ற தென்றல் அது மிகையன்று.

சமர்ப்பணம்

'ஈழகேசரி'யின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்து பல பணியாற்றிய அன்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறி, இவ் வெள்ளி மலரைத் தமிழ் மக்களுக்கு அன்புக் காணிக்கையாக அளிப்பதில் 'ஈழகேசரி' கழி பேருவகை யுறுகின்றது. ஏனெனில் மக்களின், உள்ளங்கள் இறைவன் உறையுங் கோவில்களன்றே! இப்பூரிப்போடு 'ஈழகேசரி' தமிழ்த்தாயின் பொன்னடிகளுக்கு இக் கவினுறு மலரைச் சூட்டி வணங்குகின்றது.

காந்தீய நெறிநின்று பணியாற்றிவரும் 'ஈழகேசரி', தமிழ் அன்னைக்கு இந்நாட்டில் இன்று நேர்ந்துள்ள இன்னலைப் போக்கச் சபதமெடுத்துள்ள இவ்வேளையில், தமிழ் மக்களின் ஆசியை வேண்டி நிற்கின்றது. கடல்கடந்து வாழும் தமிழ் மக்களின் அபிமானம், சிறப்பாக மலாயாவிலுள்ள தமிழ் மக்களின் ஆதரவு, தமிழ் வளர்ச்சியே உயிராகக்கொண்டுள்ள 'ஈழகேசரி'க்கு என்றுமே இருந்துவருகின்றது. எனவே, தன்னேரில்லாத் தமிழ்மொழி எல்லா இன்னல்களையுந் தாண்டி முன்னேறுவதற்கு 'ஈழகேசரி' சலியாது உழைத்துவருமென்ற நம்பிக்கையுடன் ஒளிமிக்க எதிர்காலத்தை நோக்கி நிற்கின்றது.

இதயகமலம்

GOVERNMENT HOUSE

NEW DELHI

8.7.49

நேயர்காரம்

இராஜ கரியாதரினம்

அவர்கள் என் எழுத்தைப்

பற்றி அன்புடன் எழு

யெழுதிய கடிதமானது

படித்து மகிழ்ச்சி அடைந்

தேன் என்றாலும்

அளவுக்கு மிஞ்சி உயர்வாகத்

தெரிகிறது.

இவண்

சி. ராஜகோபாலாச்சாரி


ஈழகேசரிக்கு இருபதாவது ஆண்டு எய்தியபோது வெளியிடப்பெற்ற சிறப்பு மலரில் 'இராஜாஜி கதைகள்' என்ற ஒரு கட்டுரையும் வெளியாயிற்று. திரு. ஸி. இராஜகோபாலாச்சாரியார் அக்காலத்தில் மக்கா தேசாதிபதியாகப் புது டில்லியிற் பதவி வகித்தார்கள். அக் கட்டுரையைப் படித்த இராஜாஜி அவர்கள் பத்திராதிபர் திரு. நா. பொன்னையா அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் பிரதிமை இது.

Parker SLIMFOLD

Classical Beauty with Parker Precision

THE IDEAL PEN FOR
LADIES & STUDENTS
WHICH ENSURES
SMOOTH TROUBLE-FREE
WRITING.

COLOURS - BLACK, BLUE
GREEN & RED
WITH
ROTARY PENCILS
TO MATCH




A few good reasons why you should own one :

1. *The exclusive Parker Arrow Clip.*
2. *Leak-proof and non-corroding.*
3. *Transparent pli-glass filling system.*
4. 14 *carat Gold Nib in* 8 *different grades.*
5. *And last but not least it's reasonab'y priced.*

TRADE ENQUIRIES & SERVICE STATION:

RAJANDRAMS Ltd., MAHARAJA BLDG., Bankshall Street, COLOMBO




WESTCLOX BEAUTIES !

30-HOUR TIMEPIECES

Modern style in dark grain wood with satin finish. Decorative hands and Roman numerals in gold colour finish. Reliable movement with subdued tick. Cushioned base protects polished surfaces. 7" high, 9" long and 5" dial.

LOMOND

Contemporary case in walnut finish. Decorative hands and Roman numerals in gold colour finish. Other details more or less same as the "Lomond"




LEVEN

Trade Enquiries & Westclox Repair Service
RAJANDRAMS LIMITED,
Maharaja Bldg, Bankshall St. COLOMBO. 11.



யாழ்ப்பாணம் – நல்லூர்க் கந்தசுவாமி கோவில்



நல்லூர்க் கயிலாயபிள்ளையார் கோவிலும், கயிலாயநாதர் கோவிலும்

"நாவலர் பெருமான் அன்று நறுமல ரிட்டி றைஞ்சி
ஆவலாய்த் தமிழ்த்தெய் வத்துக் கரும்பணி அனேத்தும் ஆற்றக்
காவலாய் நின்ற"

நல்லூர்க் கயிலாயபிள்ளையாரினதும் கயிலாயநாதரினதும் ஆலயங்கள். யாழ்ப் பாணத் தரசர்களால் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை நடுநாயகமாக அமைத்து நான்கு திக்குகளிலும் நான்கு கோவில்கள் அமைக்கப்பெற்றன. தெற்கேயுள்ளதுதான் கயிலாயநாதர் ஆலயம்.


1934



நல்லூர் சட்டநாதர் ஆலயம்

மாதவ முற்ற சனகாதி நால்வர்க்கும் மாமவுனப்
போதனை செய்து நயங்காட்டி யாண்ட புனிதர்தவ
வேதனை வாய்ச்சய னத்தார்க் கரிய விமலர்சட்ட
நாதர்தங் கோவில் இது.


நல்லூரை இராசதானியாக்கி ஆண்ட யாழ்ப்பாணத் தரசர்களால் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை நடுநாயகமாக வைத்து நான்கு திக்குகளிலும் நான்கு கோவில்கள் அமைக்கப்பெற்றன. வடக்கே உள்ளதுதான் சட்டநாதர் ஆலயம்.



நல்லூர் வீரமாகாளியம்மன் கோவில்

"நீதியா மரசு செய்வர் நிதிகள்பல கோடி துய்ப்பர்
நீண்டகாலம் வாழ்வர் தரைமீது — எந்த
நெறியு மெய்துவர் நினைத்தபோது
நித்தமுத்த சுத்தபுத்த சத்தபெருங் காளிபத
நீழலடைந் தார்க்கில்லை யோர்தீது"

என்று யாழ்ப்பாண மக்கள் பக்தியோடு வழிபடும் நல்லூர் வீரமாகாளியம்மன் கோவில். யாழ்ப்பாணத் தரசர்களாற் காவல் தெய்வமாக, நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்கு மேற்கே கட்டப்பட்டது இது.



ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில்

போர்த்துக்கேயர் வட-இலங்கையிலுள்ள சைவக் கோவில்களைத் தரைமட்டமாக்கிய காலத்தில் அவர்களின் கொடிய எண்ணம், வண்ணார்பண்ணை கிழக்கில் இன்றும் தனிப் பெருமையுடன் விளங்கும் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளது தேவஸ்தானத்திற் படியவில்லை. இவ் வாலயம் பதினென்காம் நூற்றாண்டில் நிறுவப்பெற்றது. செகராசசேகரன் எனும் பட்டம்பெற்ற குணபூஷண சிங்கைஆரியனால் கொண்டுவரப்பட்ட காருகவினையாளார் இதனைக் கட்டுவித்தனர். சிறந்த முறையிற் பரிபாலிக்கப்பட்டு வரும் இவ் வாலயம் சென்ற ஜூலை மாதம் 9ஆந் திகதி ஹரிஜனருக்குத் திறந்து வைக்கப்பெற்றது.



தமிழ்க் கடலுந் தவப் பெருங் குன்றும்

ஈழத்துக் கொரு தமிழ்ப் பெருங் கடலாய் விளங்கும் வித்துவசிரோமணி பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்களும், தமிழ்நாட்டில் தமிழ் வளர்த்துச் சிவம் வளர்க்கும் குன்றக்குடி — திருவண்ணுமலை ஆதீனத்து மகா சந்நிதானம், அருட்பெருந்திரு அருணைசல தேசிக அடிகளார் அவர்களும் ஒருங்கே யமர்ந்து புன்முறுவல் பூக்கும் இக் காட்சியைக் கண்டு மகிழும் பாக்கியம் [11-6-53] குரும்பசிட்டி சன்மார்க்க சபைக்குக் கிட்டியது. தமிழ் முனிவர் தமது தொல்காப்பியப் பதிப்பு நூல்களை அருள்விளக்காய் ஒளிரும் அடிகளாருக்கு அளிக்கும் இப்பேற்றினை அவற்றைப் பதிப்பித்த ஈழகேசரிப் பொன்னையா அவர்கள் நிறுவிய மண்டபம் பெற்றமையும் தமிழ் அன்னையின் திருவருள்தான்.

கன்றுங் கனியுதவும்

ஈழ நாட்டில் கடந்த கால் நூற்றாண்டாகத் தமிழ் வளர்ச்சிக்குங் கலாசார முன்னேற்றத்துக்கும் அரசியற் சுதந்திரத்துக்கும் தொண்டாற்றிய பெருமக்களில் 'ஈழகேசரி' அதிபர் திரு. நா. பொன்னையா. J. P., அவர்கள் முன்னணியில் வைத்தெண்ணப்படத்தக்கவர் என்பது தமிழகம் அறிந்த ஒன்று.

'கற்றலிற் கற்றுரை வழிபடல் சிறந்தன்று' என்பதற் கிணங்க, திரு. நா. பொன்னையா அவர்கள் தமிழ்ப்புலவர் பலரை ஆதரித்து அவர்கள் மூலம் உயரிய தமிழ் நூல்கள் பல வெளிவர முயற்சி செய்து மொழி, கலை ஆகிய பயிர்களை வளர்க்கும் பருவக் கார்மேகம்போலப் பயன்கருதாது செய்த பணிகள் என்றென்றும் நினைவுகூரற் குரியன. இதனற் றமிழ்ப் பயிருங் கலைப்பயிரும் ஈழத் தமிழகத்திற் செழித்து வளர்ந்தன. ஆயின் 30-3-51 இல் திரு. நா. பொன்னையா அவர்கள் இவ்வுலக வாழ்வை ஒருவியபின் தமிழுலகுக்கு முதுவேனிற் பருவம் தோன்றிற்றெனல் மிகையாகாது.

'வாழையின் கீழ்க் கன்றுங் கனி உதவும் அன்றே! திரு. நா. பொன்னையா அவர்களது பத்தினியும், புத்திரியும், நண்பர்களும் பொன்னையா அவர்களின் பிரிவால் ஈழத் தமிழகத்துக்கு ஏற்பட்ட முதுவேனிலை, இளவேனிலாயாவது ஆக்க முயன்று 27-3-54 இல் **ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம்** என்னும் பெயருடைய கழகமொன்றினை ஆரம்பித்து அதன்மூலம் அப் பெரியாரது தொண்டினைத் தம்மாலியன்ற அளவு தொடர்ந்து நடாத்த விரும்பினர்.

மன்றத்தின் நோக்கங்கள் :

1. இக்கால ஆராய்ச்சி முறைகளைத் தழுவித் தமிழிற் புதிய நூல்களும், சிறந்த மொழிபெயர்ப்பு நூல்களும் வெளிவர முயலுதல்.

2. சிறந்த நூல்களை எழுதியுதவும் அறிஞர்களை, இயன்ற பொருளுதவி புரிந்து களரவித்து அந்நூல்களை வெளியிடல்.

3. மன்ற வெளியீடுகளின்மூலங் கிடைக்கும் ஊதியத்தைத் தமிழில் உயர்தர ஆராய்ச்சி முறைகளிற் கல்வி பயில விரும்பும் மாணவர்களுக்கு உதவி இலங்கைப் பல்கலைக் கழகம், இந்திய பல்கலைக் கழகங்களிற் கல்விபெற இயன்ற அளவு உபயோகித்தல், என்பனவாம்.

தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாடு, கலை, சமயம், சாத்திரம், விஞ்ஞானம் முதலிய துறைகளில் நூல்கள் எழுதும் விருப்புடைய அன்பர்களது ஒத்துழைப்பை இம் மன்றம் மிக ஆவலுடன் எதிர்பார்க்கின்றது.


இம் மன்றத் தமிழ்ப் பணியைத் தமிழகம் ஏற்று ஆதரிக்கவேண்டு மென்பது இம் மன்றத்தினரின் பெரு விருப்பு.

கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள் எழுதிய **இலங்கையிற் கலைவளர்ச்சி** என்ற நூல் இம் மன்றத்தினரால் 1954 ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்றது.

★ **மேல்நாட்டுத் தரிசன வரலாற்றின் சுருக்கம்,**

★ **மட்டக்களப்புத் தமிழகம்**


ஆகிய நூல்கள் மிக விரைவில் இம் மன்றத்தினரால் வெளியிடப்பெறும்.



வருத்தலைவிளான், மருதடி விநாயகர் கோவில்

அன்புடை யடியார் வந்துன் னடியிணை யருச்சித் தேத்தி
நின்புடை யருளே யெல்லாங் நினக்கிலா தெய்தி னுரோ
என்புடை யன்பு காணு தெனக்கருள் புரிந்தி லாயோ
மின்புடை மணிப்பொற் கோவின் மேவிடு மருதி லீசா!

என அன்பர்கள் வழிபட்டுத் திருவருள் பெறும் மருதடி விநாயகர் உறை கோவில் மிகப் பழமையானது. இங்கு 500 வருடங்களுக்கு மேற்பட்டதான மருதமரமொன் றுண்டு. வித்துவசிரோமணி பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்களின் ஆச்சிரமமும் இவ் வாலயத்தருகேதான் அமைந்துளது.



வித்துவசிரோமணி
பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள்

தமிழ்நாட்டு மணம்

வித்துவசிரோமணி பிரமஸ்ரீ சி. கணேசையர்

தமிழ்நாட்டிற் பண்டு (அஃதாவது தொல் காப்பியர் காலத்தும் அதற்கு முன்னும்) நிகழ்ந்த மணம் களவு மணம் மாத்திரமே என்பது சிலர் கருத்து. இவர்கள் கருத்துப் பொருந்தாதென் பது மிகப் பழைய தமிழ்நூலாகிய தொல்காப்பி யத்தை நன்கு துருவிக் கற்றோர் அறிவர்.

அகத்திணையியலிலே கைக்கிளை ஐந்திணை பெருந்திணையெனத் திணை யேழென்று தொல் காப்பியர் வகுத்துக்கொண்டமையினால், கள வல்லாத ஏனை மணங்களும் நிகழ்ந்தன வென்பதும் பெறப்படும். ஆயினும், தொல். களவியல் 20ஆம் சூத்திரத்திலே "வேற்று வரைவுவரின் அது மாற்றுதற்கண்ணும்" என் றும், 23ஆம் சூத்திரத்திலே "உலகுரைத் தொழிப்பினும்" என்றும், "பிறன்வரைவாயி னும்" என்றும் வருவனவற்றை நோக்கும் போது இக்காலத்துப்போலவே அக்காலத்தும் சான்றோரை முன்னிட்டுப் பேசி வரைந்துகொள் ளும் வரைவு மணமே இயற்கையாக நிகழ்ந்த தென்பதும் அறியக்கிடக்கின்றது.

இன்னும்,

"கிழவோன் அறியா அறிவின ளிவளென
மையறு சிறப்பின் உயர்ந்தோர் பாங்கின்
ஐயக் கிளவி அறிதலு முரித்தே."

என்னும் சூத்திரமே தமிழ்நாட்டிற் குல நலம் முதலியன விசாரித்து ஒருவனுக்குப் பெண் கொடுக்கும் முறையிருந்ததென்பதை நன்கு புலப்படுத்தும். இச் சூத்திரத்தின் கருத்து, "தம் மகள் தாமறியாவாறு ஒரு தலைவனோடு களவொழுக்கம் நிகழ்த்தியதை யறிந்த தாய், தம் மகளோடு கூடிக் களவொழுக்கம் நிகழ்த் திய தலைவன் தங் குலத்தில் உயர்ந்தவனே தாழ்ந்தவனே என்னும் ஐயம் உண்டாகச் சான் றோர் இடத்தே அவன் குலநலம் முதலிய வற்றை விசாரித்தறிந்து அவ் வையத்தை நீக்கிக் கொள்ளுவாள்" என்பது. (எமது கருத்து.)

அன்றியும், களவியலில்,

"இன்பமும், பொருளும் அறனு மென்றுங்
கன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற்
காமக் கூட்டம் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுள்
துறையமை நல்லியாழ்த் துணைமையோ ரியல்பே."

என்னுஞ் சூத்திரத்து, "இன்பமும் பொருளும் அறனுமென் றுங்கு" என ஆசிரியர் இன் பத்தை வேறுகப் பிரித்துக் கூறிப் பின், "அன் பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற் காமக் கூட்டம்" எனக் காமக் கூட்டத்தைப் பிரித்து, அவ் வின்பத்தின் பகுதியுளொன்றுகக் கூறுதலி னலும், களவுமண இன்பமன்றி ஏனை மண வின்பங்களும் ஆங்கு நிகழ்ந்தனவென்பதும் பெறப்படும்.

அங்ஙனேற் பேசிச்செய்யும் மணம் எதன் பாற் படுமெனின், இருவர் சுற்றமும் இயைந் துழித் தாமும் இயைதலிற் கந்தருவத்தின்பாற் படும். இதனைக் களவியல் 1ஆம் சூத்திரத்து நச்சினர்க்கினியர், "பொருளாற் கொள்ளும் மணமும் இருவர்சுற்றமும் இயைந்துழித் தாமும் தாமும் இயைதலிற் கந்தருவத்தின்பாற்படும்" எனக் கூறுதலானும் அறிக. அங்ஙனேல், சங்க நூற் புலவர் யாவரும் அக் களவுமணத்தையே சிறப்பித்துப் பாடியதும், தொல்காப்பியர் அதற்கு இலக்கணம் வகுத்ததும் என்னை? எனின், ஆண் பெண் என்னும் இருவரும் தம்முள் எதிர்ப்பட்டுழி, உழுவலன்பான் ஒரு வரை யொருவர் காதலித்துக் கூடும் கூட்டமே யாவர்க்கும் இன்பம் பயத்தலானும், அக் காதல் மணத்தை நாடக வழக்கோடு கூட்டிக் கூறுங்கால் அது கேட்போர்க்கும் இன்பம் பயத்தலானும் என்க. இதுபற்றியே குன்றம் பூதனரும் "காதற் காமம் காமத்துச் சிறந்தது" என்று புகழ்ந்து கூறினர்.

ஆயின், தொல்காப்பியர் தொல்காப்பியத்தில் "இன்பமும் பொருளும் அறனுமென் றுங்கு" என்னுஞ் சூத்திரத்து, "மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுள், துறையமை நல்லியாழ்த் துணைமையோ ரியல்பே" என்று கூறினரேனும், வடமொழிமறையிற் கூறிய கந்தருவத்தினும், தமி ழிற் கூறிய களவுமணம் நாடகவழக்கொடு கூடிச்

சிறந்திருத்தலும், கற்பொடுகூடிச் சிறந்திருத்தலும் பெறப்படும். கந்தருவம் கற்பொடு கூடாமலும் நிகழும் என்பது நச்சினர்க்கினியர் கருத்து.

தொல்காப்பியர், "நாடக வழக்கினும்..... .... கலியே பரிபாட் டாயிரு பாங்கினும், உரியதாகு மென்மனர் புலவர்" என்று கூறியதை நோக்கும்போது அவர் தமக்குமுன்னுள்ள அச் செய்யுள்வழக்கை நோக்கியே தாம் இலக்கணஞ் செய்தாரென்பதும், தாம் செய்த இலக்கணத்துள்; எவ்வாறு நாடக இலக்கணந் தழுவிய புலனெறி வழக்கினை நோக்கி மெய்ப்பாட்டியலைக் கூறினரோ அவ்வாறே உலகியலோடு நாடக விலக்கணத்தையும் தழுவிய புலனெறி வழக்கினை நோக்கிக் களவிலக்கணத்தையும் கற்பிலக்கணத்தையும் கூறினரென்பது இச் சூத்திரத்தான் அறியப்படும். படவே, உலகியலாய் அருகி வழங்கிய களவினை இன்பம் பயக்குஞ் சிறப்புப்பற்றி எடுத்துக்கொண்டு அதனைச் சுவைப்படுத்தற்காக நாடக வழக்கினையுங்கூட்டிப் புலவர்கள் செய்யுள் செய்தனரென்பதும் அதுவே புலனெறிவழக்கு எனப்படும் என்பதும் துணியப்படும். அதனை இச் சூத்திர உரையுள் இளம் பூரணர் "நாடக வழக்காவது, சுவைப்பட வருவன வெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல்; அஃதாவது, செல்வத்தானும் குலத்தானும் ஒழுக்கத்தானும் அன்பானும் ஒத்தாரிருவராய்த் தமரின் நீங்கித் தனியிடத் தெதிர்ப்பட்டு அவ்வழிக் கொடுப்போரும் அடுப்போருமன்றி வேட்கை மிகுதியாற் புணர்ந்தாரெனவும் பின்னும் அவர் களவொழுக்கம் நிகழ்த்தி இலக்கணவகையான் வரைந்தெய்தினரெனவும் பிறவும் இங்கிகரனவாகிச் சுவைப்பட வருவனவெல்லாம் ஒருங்கு வந்தனவாகக் கூறுதல். உலகியல் வழக்காவது:- உலகத்தார் ஒழுகுதலாற்றேடு ஒத்து வருவது" — எனக் கூறுதலானே அறியப்படும். இங்கே உலகியலொழுகலாற்றேடு ஒத்துவருவது என்றதனாலே களவும் உலகத்தார் ஒழுகலாறே; வேறன்றென்பது பெறப்படும். எனவே களவுமணம் இக்காலத்துப்போலவே அக்காலத்தும் தமிழ் நாட்டிற் சிலரிடையே நிகழ்ந்ததென்பது பெறப்படும். இவ்வுண்மையை நச்சினர்க்கினியர் நன்கறிந்து உரை கூறினரென்பது, "முதல்கரு உரிப்பொரு ளென்ற மூன்றே, நுவலுங் காலை முறைசிறந் தனவே, பாடலிற் பயின்றவை நாடுங் காலை" (தொல். அகத். 3) எனும் சூத்திரவுரையுள் "இஃதில்லதெனப்படாது உலகியலேயாம்; உலகியலின்றேல் ஆகாயப்பூ நாறிற்றென்றவழி அஃது சூடக் கருதுவாருமின்றி, மயங்கக் கூறினரென்று உலகம் இழித்திடப்படுதலின் இதுவும் இழித்திடப்படும். இச்செய்யுள் வழக்கினை நாடக வழக்கென மேற்கூறினர், எவ்விடத்தும் எக்காலத்தும் ஒப்பநிகழும் உலகியல் போலாது உள்ளோன் தலைவனை இல்லது புணர்த்தல் முதலாகப் புனைந்துரைவகையாற் கூறும் நாடக விலக்கணம்போல யாதானும் ஓரோவழி ஒருசாரார்மாட்டு உலகியலான் நிகழும் ஒழுக்கத்தினை எல்லார்க்கும் பொதுவாக்கி இடமும் காலமும் நியமித்துச் செய்யுள்செய்த லொப்புமைநோக்கி" என்று கூறுதலானே அறியப்படும்.

இனி, "உலகில் ஒருசாரார்மாட்டு உலகியலான் நிகழும் ஒழுக்கத்தினை எல்லார்க்கும் பொதுவாக்கி" என்று நச்சினர்க்கினியர் கூறியதை உற்றுநோக்கும்போது களவுக்கிடமாகக் குறிஞ்சிநிலத்தையே அவர் பெரும்பான்மையும் கருதியுள்ளாரென்பது பெறுதும். குறிஞ்சியில் பெண்கள் அந்நிலச் சார்புபற்றி அழகிற் சிறந்தவர்களாயிருந்தமையினாலும், தினைகாக்குமிடத்து அவர்களை எதிர்ப்படக்கூடியநிலைமையிருந்தமையினாலும், மறைவிற் கூடுதற்கேற்ற மலை முதலிய அமைந்திருந்தமையாலும், அந்நிலத்தும் மற்றை நிலத்தும் வாழும் ஆண்மக்கள் அவர்களைக் காதலித்துக் களவுபுரியும் வழக்கிருந்ததென்பதும், களவு நிகழும் வழக்குமிருந்ததேனும் அந்நிலத்து மக்கள் "மூத்து நரைமுதிர்ந்த மூதாளரை"க் கொண்டு மணம்பேசுவித்துப் பெண்கொடுக்கும் இயல்பே வழக்கில் இருந்ததென்பதும் மேற்காட்டிய "பிறன்வரைவு நேரினும்" என்பது முதலிய சூத்திரங்களானே நன்கு தெளியப்படும்.

சிறுபான்மை நெய்தல் நிலத்தையும் இக் களவுக்கிடமாக ஆசிரியர்கள் கொண்டமை கடைச்சங்க இலக்கிய நூல்களான் அறியப்படும். அதற்குக் காரணம், 'படுபுள்ளோம்பல்' முதலிய நிமித்தம்பற்றி அந்நிலத்து மகளிரையும் தனியிடத் தெதிர்ப்பட்டுக் கூடுதற்கேற்ற நிலைமையிருந்தமையேயாம். இக்களவு ஏனை நிலங்களிலும் அருகியே வழங்கியுள்ளது. முல்லை நிலத்து ஏறுதழுவினர்க்கே மகளிர் உரியரென அந்நில மக்கள் நியமித்ததினாலே அது ஆசுரமென்னும் மணமாயிற்று. ஆண்டும் சிறுபான்மை களவு நிகழினும் அவரும் ஏறடக்கியபின்னரே அவரை வரையப்பெறுவர். அதனை முல்லைக்கலி 1ஆம் செய்யுள் முதலியவற்றுன் அறிக.

அங்ஙனேல் உலகியலா னிகழ்ந்த இவ் வரைவு மணம் எவ்வாறு நிகழ்ந்ததெனின், அவ் வந்நிலத்துள்ளார் தமக்குள் வைத்து வழங்கிய சில சடங்குகளோடு நடந்திருக்கலாம். அக நானூற்றில் வரும், (களிறு – 82).

உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகாற்
றண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் டிங்கள்
கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென
உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்
பொதுச்செய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வர்ப் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றேற் பெட்கும் பிணையை யாகென
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
பேரிற் கிழத்தி யாகெனத் தமர்தர
ஓரிற் கூடிய உடன்புணர் கங்குற்
கொடும்புறம் வளைஇக் கோடிக் கலிங்கத்
தொடுங்கினள் கிடந்த வோர்புறந் தழீஇ
முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப
அஞ்சினள் உயிர்த்த காலை யாழநின்
நெஞ்சம் படர்ந்த தெஞ்சா துரையென
இன்னகை யிருக்கைப் பின்யான் வினவலிற்
செஞ்சூட் டொண்குழை வண்காது துயல்வர
அகமலி யுவகையள் ஆகி முகனிகுத்
தொய்யென விறைஞ்சி யோளே மாவின்
மடங்கொள் மதையிய நோக்கின்
ஒடுங்கீர் ஓதி மாஅ யோளே.''

என்னும் செய்யுள் பழைய மணநிகழ்ச்சியைக் குறிக்கும். களவின்பின் நிகழும் வரைவும் இவ் வாறு நிகழும். களவின்றியுங் கற்பு நிகழ்ந்த தென்பதைக் களவியல் 15ஆம் சூத்திர வுரை யானும் அறியலாம்.

இனிச் சான்றோரை முன்னிட்டு மணம் பேசிச் செய்யும் வழக்கின்று; களவு மணமே வழக்கெனின், அது தொல்காப்பியர் கருத்தொடு மாறுபடுமென்க. அதி நாகரிகமுறுத பண்டைக் காலத்தே விபரீதபுத்தி மிக அருகியதே. அக் காலத்தே தந்தை தாயாரின் உடன்பாடின்றிப் பெண்மக்கள் ஒருவனைக் காதலித்துக் கூடி அவன்பின்னே செல்வது மிக அருகிய வழக்கென் பது இக்காலத்தும் அதி நாகரிகமுறுத நாட்டு வாழும் பெண்மக்களானே அறியலாம். ''சுருட் டுப் பாயும் முரட்டுப் பெண்ணும்'' என்னும் பழமொழியும் இதனை வலியுறுத்தும். ஆதலினல் அதி நாகரிகமுறுத ஆதிகாலத்தே தமிழ்நாட்டிற் களவுமணமே இயற்கையாக நிகழ்ந்ததென்று கொள்வதும், அதுவே தமிழ்நாட்டார் மணமென் பதும் பொருந்தாதென்க.

ஆதிகாலத்திலே கரணமின்றியே தமிழ் நாட்டில் மணம் நிகழ்ந்ததென்பதை,

''பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரண மென்ப.''

என்னும் தொல்காப்பியச் சூத்திரமே வலியுறுத் தும். செந்தமிழ் நாடாக விளங்கும் நமது யாழ்ப் பாண முதலிய நாடுகளில் வாழும் தமிழ்மக் களுஞ் சிலர் கரணமின்றியும் மணம் நிகழ்த்து வார்கள். அதனைச் சோறுகொடுக்கும் கலியாண மென்பர். இதுபோலவே பண்டைக்காலத்து மணமும் நிகழ்ந்திருக்கலாம். தமிழ்க் கீழ்க் குடிகள் மணமும் பழைய வழக்கைக் காட்டும்.

இனித் தொல்காப்பியர் நூல்செய்த காலத் தின் முன்பே அஃதாவது அகத்தியர்காலந் தொடங்கியே ஆரியமொழிகளும் ஆரிய ஆசா ரங்களும் தமிழ்நாட்டிற் கலப்புற்றனவென்பது தொல்காப்பியப் பாயிரத்துள்,

''நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற்கு அரிறபத் தெரித்து'' என்றும்,

எழுத்ததிகாரத்துள்,

''அகத்தெழு வளியிசை அரிறப நாடி
அளவிற் கோட லந்தணர் மறைத்தே'' என்றும்,

சொல்லதிகாரத்துள்,

''இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே'' என்றும்,

''வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே''என்றும்,

பொருளதிகாரத்துள்,

''அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்'' என்றும்,

''அந்த ணாளர்க் கரசுவரை வின்றே'' என்றும்,

''நூலே கரக முக்கோல் மனையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய'' என்றும்

கூறுமவற்றானும், பிறவும் வருவனவற்றானும் அறியப்படும்.

இங்ஙனம் தொல்காப்பியர் ஆரியமொழியோ டாசாரங்களையுந் தழுவிக் கூறினும், தமிழ்மரபு சிறிதும் தவறுதே தாம் நூல் செய்தாரென்க.

தன்னில் தானே ஒளிரும் கலை

தமிழ்ப் பேராசிரியர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனார்

கலை என்றும் அழகு என்றும் குழந்தையும் இன்று பேசுகிறது. இந்தப் பேச்சிற் குழப்பம் உண்டே அன்றித் தெளிவு இல்லை. வரையறை செய்து எதற்கும் இலக்கணங் கூறவேண்டும் என்பர் முன்னோர். ஒன்றேடொன்று பிணைந் திருக்கும் இவ்வுலகில் ஒன்றன் எல்லையை ஒரு வாறு தெளியவேண்டும் என்று விஞ்ஞானம் வற்புறுத்தும். நீர் ஆவியாக மாறும் எல்லை 212°; நீர் கட்டியாக இறுகும் எல்லை 32° — இப்படிக் கூறுவதே விஞ்ஞானம். அதேபோல கலை அழகு என்றவற்றின் எல்லையையுங் காண வேண்டும்.

எல்லை இல்லாதது

கலை அல்லது கலைப்பொருளின் ஆழம் முடிவில்லாதது; எல்லை இல்லாதது; ஆனால் தன் உள்ளத்தே கண்ட காட்சியைக் கலைஞன் பல முறையிற் பலபல செய்திறன்படியே பல பல வழியில் முயன்று எல்லோரும் கண்டு துய்க்குமாறு செய்துவிடுகின்றான். அவன் செயற்பாடுகள், கலையின் வழிகள், இப்படி ஒரு முடிவுநிலையை, முற்றுநிலையை எய்துகின்றன. அங்கும் பழுப்பதே அழகு. அதுவே அங்கு ஒளிரும் வெற்றியின் அடையாளம். ஆறெல் லாம் கடலிற் பாய்கின்றன. ஆற்றின் ஓட்ட மெல்லாம் முடிகின்ற இடமே கடல். ஆனால் கடலா ஆறு? கலையின் முடிவிடம் அழகு; கடலைக் கடைந்தெழும் அமுது அது. ஆனால் கலையன்று அழகு. நியூடன் ஆப்பில்பழம் விழு வதனைக் கண்டதும் பலநாளாக அவன் ஆழ்ந் தெண்ணிய கணக்கு உண்மையாகக் கண்டான்; அண்டத்தின் இயக்கம் ஒரு பொருள். ஒரு பொருளை இழுக்கும் கவர்ச்சிச் சட்டத்தின் வழியே தெள்ளத்தெளிய அவனுக்கு விளங் கியது; அவன் ஆராய்ச்சி அவ்வாறு முடி வடைந்தது. துள்ளிக் குதித்தான். துள்ளிக் குதிக்கும் இன்பநிலை அவன் ஆராய்ச்சியின் எல்லை; ஆனால் அதுவன்று அவன் ஆராய்ச்சி; அவன் ஆராய்ச்சி செவ்வனே முடிந்ததன் அடை யாளம் அது.

ஒற்றுமைபெறுவது கலை

ஒரு கொடிப்போது தோன்றும் வானவில் — செவ்வானம் — குறிப்பிட்டபோது தோன்றும் மேகத்தின் வடிவம் — நிறம். குயிலின் பாடல் மயிலின் ஆடல் — இப்படித் தனித்தனி அனு பவங்கள் நம் கண்ணையும் கருத்தையும் கொள்ளைகொள்கின்றன. "என்ன அழகு! என்ன அழகு!! கண்கொள்ளாக் காட்சி" என்று கூறுகிறோம். இந்த அனுபவம் கலையாகுமா? முல்லைப்பாட் டாராய்ச்சியின் ஆசிரியர் இவை எல்லாம் பாட்டு என்று கூறுகிறார் — இல்லை பாடுகிறார். ஆனால் இந்தத் தனியனுபவம் கலை யாவது இல்லை.

'அழகு' என்ற சொல் கலையாகிவிடுவ தில்லை. இப்படிப் பல சொற்கள் உணர்ச்சி நிலையங்களாக நம்மை இயக்கும் மந்திரசத்தி பெற்றுள்ளன. இன்பம், அன்பு, காதல், ஒற் றுமை முதலிய சொற்களைமட்டும் கேட்ட வுடனே பாட்டென மயங்கலாகாது. "புரட்சி ஓங்குக", "சமத்வம் சகோதரத்வம் சுதந்திரம்" என்ற கோஷங்கள் உலகினையே புரட்டும் மந்திரங்கள். ஆனால் அவை பாட்டாவதில்லை.

தனி அனுபவமோ தனியே நிற்பது; ஒருமையாய்ப் பிரிவது. கலை தனிமையன்று; கூட்டுறவு. ஒருமையன்று ஒற்றுமை. முரணு பவை, முரண்பாடு நீங்க, வேறுபட்டவை ஒற் றுமை யமைய நிற்பதே கலை. எல்லாவற்றையும் பெருக்கிக் கூட்டிய குப்பையன்று கலை. எல்லாம் ஒன்றுய்க் குழைந்து ஒற்றுமை பெறுவதே கலை. பல உறுப்பும் ஒன்றுய் அமைந்த உடலம் உயிர் பெற்று ஒளிர்வதுபோன்ற ஒற்றுமையின் வெளிப் பாடே கலை. அங்கே கலைஞன் கண்ட காட்சி — அதனை வெளியிடக் கையாண்ட முறை — செய்திறனில் வெற்றி இவையெல்லாம் புலப் படத் தோன்றும். "என்ன சிறப்பு? என்ன

அழகு?" என்று கூறும்போது அந்தவெற்றியைப் பாராட்டுகின்றோம். அதனாலேயே அழகு என்பது அந்த வெற்றியின் அடையாளம் — அறிகுறி என்றோம். செய்திறன் புலப்படத் தோன்றினாலன்றிக் கலையழகு எனக் கூறப்புகுவோர் இல்லை. "அப்பம் எப்படிச் சுட்டாளோ? தித்திப்பு எப்படி நுழைத்தாளோ?" என்பது போன்ற ஈடுபாடே அங்குத் தோன்றுகின்றது. கலைப்பொருளழகு — அக் கலையைப் படைத்த வியப்பு இந்த இரண்டும் வெறென்று நில்லாது, ஒன்றுய் அங்கே தெளிந்து சுவை கொழிக்கின்றன.

தன்னலமின்மை

இங்கே மற்றொன்றும் தோன்றுகிறது. அதுவே கலையின் தன்னலமின்மை. கலையைத் தூண்டுவது, இயக்கிவைப்பது எது? உள் எழுச்சியாக ஓங்கியதோர் அனுபவமேயாம்; அதுவே உணர்வாய் ஒளிர்கிறது. கலை செங்கதிரோன்போலத் தன்னொளியில் தழைப்பது; வெண்கதிரோன் போலப் பிறிதொளியில் பெருமைகொள்வது கலை அன்று. இரவல் இல்லை அங்கே; தன்னொளியே உள்ளது. எல்லாம் தன்னொளியாகக் குழைகிறது. தன்னிற் றனே ஒளிர்கிறது. வேறெருகாரணத்தால் கலை மதிப்புப் பெறுவதில்லை. பெருஞ்சுட்டு அடைவதில்லை. அதன் மதிப்பே அதன் பெருஞ்சுட்டு.

காந்தியடிகள்போல ஒழுக்கத்தாற் பெரியோர் ஒழுக்கம்போலக் காரணமாக மதிப்புப் பெறுவர். சங்கரர் அறிவிற் சிறந்த ஞானியர். அறிவு காரணமாக மதிப்புப். பெறுவர். அரிச்சந்திரனைப்போல உண்மை கூறுவோர் உண்மையால் உயர்வர். சீதைபோல நன்மையைக் கடைப்பிடித்து ஒழுகுவோர், நல்லதனால் ஒளிர்வர். உண்மை, நன்மை, அறிவு, ஒழுக்கம் இவற்றிற்கு அப்பாற்பட்ட உணர்வே கலை. கலைஞனும் மனிதனே; ஆகையால் வாழ்வாங்கு வாழ்ந்து உண்மைகூறி ஒளிர்வான்; ஒழுக்கத்தால் ஓங்குவான். அதனாற் கலையில் உண்மை ஒளிரும்; ஒழுக்கம் மிளிரும்; ஆனால் அவை எல்லாம் கலைஞனும் மனிதனின் உயர்வே அன்றி அவன் கலையின் சிறப்பு அன்று. கலை ஒழுக்கத்தின் சிறப்பையோ, அறிவின் தெளிவையோ கொண்டு ஒளிர்வதில்லை; பெருஞ்சுட்டுப் பெறுவதில்லை. கலை கலை என்ற நிலையால் மட்டுமே கதிர் விடுகிறது; பெருஞ்சுட்டுப்படுகிறது. மெய் பொய் என்ற வேறுபாடும் அங்கில்லை. அவற்றிற்கும் அப்பாற்பட்ட அனுபவம் அது. கலைஞன் பத்துத்தலை காட்டுவான்; ஆயிரம் கைகளை வீசுவான். மகளிர் முகம்கொண்ட பசு என்பான். தன் அனுபவத்தினை விளக்க மூவகையுலகினையும் கடந்து கற்பனை உலகினும், கனவுலகினும் குழவியுலகினும் சென்று ஒப்புமைகண்டு வருகிறான். பிறர் சொல்ல முடிந்ததனைத் தான் சொல்ல முடியாமையால் குழவி கூற முந்துகிறது; அல்லது தன் உணர்ச்சியையே வெளியுலகமாகக் காண்கிறது. பலகையை உடைத்துத் தகப்பன் பிரம்படிக்கு அஞ்சும் குழவி, உடையாத உலகில் பிரம்படி இல்லாமையை உணர்ந்து அந்த ஆசைப் பெருக்காற் பலகையைத் தான் உடைக்கவில்லையென்று உணர்ச்சி யுலகிலிருந்து உண்மையே கூறுகிறது. ஆதலால் அங்கும் மெய் பொய் என்ற ஆராய்ச்சி இல்லை. யாரும் சொல்லமுடியாததனைச் சொல்ல முந்துகிறான் கலைஞன். ஆகையால் தான் கண்ட காட்சியை நம்முளம் கொளக் கூறுகிறனை என்ற ஆராய்ச்சியை விட்டுப் பொய் மெய் என்று அங்கு ஆராய்வது குளிக்கப் போய்ச் சேறு பூசிய கதையாகும். "பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்" என்பது அறவுலக உண்மைமட்டும் அன்று; கலையுலக உண்மையும் ஆம்.

உளப்பாடுகளுக்கு அப்பாற்பட்டது

உலகில் உலவிவரும்போது பல பல காட்சிகள் நம் உள்ளத்தே படிகின்றன; உளப்பாடாகின்றன. இவை கலையென வெளிப்பாடாகும்போது முன் ஒன்றுபடாதவை எல்லாம் ஒன்றுகின்றன. பல பல கிளையாய் வேறுபிரிந்து வெவ்வேறு புறத்தே சென்று விரிவன எல்லாம் ஆணிவேரில் ஒன்றுவது போன்ற பொருளாழம் கலையில் தோன்றக் காண்கிறோம். கீழே விழுந்து கிடக்கும் இலையில் இந்தப் பொருள் ஆழம்தோன்றுமா? எனவே, கலையின் மதிப்போ பெருஞ்சுட்டோ அவ்வப்போது தோன்றும் இத்தகைய உளப்பாடுகளுக்கும் அப்பாற்பட்டது. நீரிற் கலந்த உப்பும், கார்ப்பும், புளியும் போலக் கலையில் ஒரு கூட்டுறவுச் சுவை உண்டு. இப்பெருஞ் சுட்டு வேறொன்று கொண்டு விளங்குவதில்லை. வேறேர் அளவுகோல் கொண்டு இதனை அளப்பதற்கில்லை. இதனைக் காசுகொண்டு கடைக்குப் போய் மாற்றி வாங்க முடியாது. அழகையும், சிற்பத்

தினையும், பாட்டையும் பணம் கொடுத்து வாங்குகிற உலகத்தில் வாழ்கிறோம். ஆனால் இந்த விலை கலைக்கு விலை அன்று. கல்லுக்கும், மண்ணுக்கும் காகிதத்திற்கும் அட்டைக்கும் விலை; வாங்குவோனின் செல்வச் செருக்கிற்கு விலை. கலை என்பது உணர்வு நிலையாக அனுபவமாக நிலைக்கும்போது அதற்கு விலை ஏது! அழகிது என்று கூறும் உணர்வு காண்போனிடம் எழும்; கலையோ காட்சிப் பொருளாம் உணர்வாய்க் காண்போன் உணர்வுக்கும் அப்பாற்பட்டதாய் இரண்டும் வேறொன்று தோன்றுத நிலையில் ஒளிரும் உணர்வாகும்.

அப்படி அப்பாலுக்கு அப்பாலாம் உணர்வு நிலைப் பெருஞ் சுட்டுத்தான் யாது? இங்கொரு புதிய படைப்பு எழுகிறது. இதனைத் தச்சன் படைப்பிலும் காணவில்லையா? முன்னிருந்த மரந்தான் நாற்காலியிலும் உண்டு? ஆனால் புதிய கோவை — புதிய வடிவம் எழுகிறது. முன்னிருந்தவை உறுப்புக்களாக அமைய இவற்றிடையே புத்துயிர் தோன்றுகிறது. உறுப்புகளாக அமைபவை முன்போலத் தத்தமக்கென வாழ்ந்த தனிநிலை இல்லை. தனித்து வாழும் கொடிய விலங்குகளின் வன்கண்மை இல்லை. தத்தம் அழகோடும் அவை அனைத்தும் புதிய தொரு முழுநிலையாக ஒங்க அவை ஒவ்வொன்றும் தாம் அழிய மாறியும் அம்முழுநிலைக்காக வாழும் அழகு தோன்றுகிறது. முழுநிலைக்காக வாழாது தனக்குத்தானே ஒருறுப்பு நம் உடலில் வாழத் தொடங்கினால் அங்கு புற்றுநோய் உண்டு என்போம். அங்கே நோயிலா நிலை இல்லை; அப்படித்தான் கலைப்பொருளிலும் எனலாம். உயிர்ப்பொருளின் உடலமைப்புநிலை கலையின் நிலையைச் சிறிது விளக்கலாம். கலையை உயிர் என்பது இதனாலேயே ஆம். கூட்டுறவு, ஒற்றுமை அன்பு — இப்படிக் கலை தோன்றுகிறது. புளிப்பு, உப்பு, கார்ப்பு, துவர்ப்பு, இனிப்பு, கைப்பு என்ற அறுவகைச் சுவையும் எத்தனையோ பலவகையாகச் சேர்ந்து விளங்குவதே உணவுக்கலை; நளன்கலை; வீமன்கலை. இவை வாய்ச் சுவைக் கலை, உண்மைக் கலையோ உணர்வுச் சுவைக்கலை. முரண்பட்டு வெருட்டி மயக்கும் உலகின் உண்மையை நம் உளங் கொளக் காட்டி நம் உள்ளத்தின் உயரத்தினை உள்ளமும் உணர்ந்து ஓங்கச் செய்வதே கலையின் வடிவம். கலையின்வடிவம் ஈதானால் கலையின் பெருஞ்சுட்டு இதனினும் வேறுக எவ்வாறு விளங்குதல் கூடும்? இதனாலேயே கலை என்பது தன்னிற்றானே விளங்குவது, தன்னினும் வேறான நோக்கம் இல்லது, தன்னலம் அற்றது என்றோம்.

கலையின் தெய்வீக இயல்பு

★

"இந்திய கலைகளின்கண்ணே மாறுதலடையாத ஒரு சமய நோக்கம் உண்டு. மனித வாழ்க்கையின் எல்லாத் தன்மைகளுக்கும், தெய்வீகக் கருத்தே கொள்ளப்படுகின்றது. கலைப் பொருள்களாகக் காட்டப்படும் உருவங்கள், மரங்கள், மலர்கள், பறவைகள் என்பன யாவும் இயற்கையிலிருந்தே எடுக்கப்படுவனவாயினும், அவை விண்ணுலக வாழ்வின் இயல்பினைக் காட்டுந் தன்மையுள்ளனவாக அமைக்கப்படுகின்றன. ஓவியத்திலாயினும், சிலையுருவிலாயினும், மட்குடத்திலாயினும் பொறிக்கப்படும் சிறிய ஒரு சித்திரந்தானும் மனிதன் கடவுளை எப்பொருளினுங் காண்கின்றான் என்னும் உண்மையை விளக்குவதுமன்றி, கடவுள் எல்லாப் பொருள்களுக்கும் ஒரு தெய்வீக இயல்பினை அளித்திருக்கின்றார் என்னுஞ் செய்தியையும் மனிதனுக்கு அறிவிப்பதாகின்றது. இத்தியக் கலையானது, எல்லாப் பொருள்களையும் பேரின்ப உணர்ச்சியோடு நோக்குகின்றமையால் அதன் கண்ணே ஐரோப்பியராற் கொள்ளப்படும், பிரகிருதிவாதத்திற்கு இடமேயில்லையெனக் கொள்க."

— டக்டர் முல்க்ராஜ் ஆநந்தர்

வேதாந்தத் தெளிவு : சைவசித்தாந்தம்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

வேதசிரசுகளாகிய உபநிஷதங்களே வேதாந்த மென்று வழங்குவது உயர்ந்தோர் ஆசாரம்.

சீவாத்மாக்களுக்கு இப்பொழுதுள்ள நிலை பந்தநிலை ; இது மாறுதல் அடையும் நிலை ; இந்த நிலையில் உண்டாகும் அறிவு சுத்தமான அறிவன்று.

சீவாத்மாக்களுக்குச் சீவத்துவம் போய்ச் சிவத்துவம் பிறக்கும் நிலை ஒன்று உண்டு ; அந்த நிலையே சொந்த நிலை ; நித்தியமான நிலை ; முத்திநிலை. அந்த நிலையில் உளதாகும் அறிவு சுத்தமான அறிவு.

பந்த நிலையில் பொருள்கள் பலவாய்த் தோன்றும் ; முத்திநிலையிற் பொருள் ஒன்றே.

முத்தி நிலையிற் சீவன் தன்னைச் சிவனுய்க் காணும். சிவம் சத்து எனப்படும். " யாவையுஞ் சூனியம் சத்தெதிர். " சிவத்துக்கு எதிரில் இரண்டாவதொரு பொருள் இல்லை; எல்லாம் சிவம்.

இரவில் நட்சத்திரங்கள் பலவாய்த் தோன்றுகின்றன. விடிந்தபிறகு சூரியனெதிரில் அவைகள் இல்லை. சூரியன் ஒன்றே, அங்கு இங்கு எனுதபடி எங்கும் பிரகாசமாய்த் தோன்றுகிறது.

நட்சத்திரங்கள் சீவாத்துமாக்கள் ; சூரியன் சத்தாகிய சிவம். இரவு பந்தநிலை ; பகல் முத்தி நிலை. என்றிங்ஙனம் உவம அளவையில் வைத்தும் பொருள் விசாரஞ் செய்வது சாத்திர மரபு.

பந்த நிலையிற் பொருள் பலவாதலும், முத்திநிலையிற் பொருள் ஒன்றேயாதலும் வேதாந்தம் ஆகிய உபநிஷதங்கள் கண்ட உண்மை.

உண்மையை, ஐயுற்று, வினவிடை செய்து தெளிதல் வேண்டும். அப்படித் தெளிந்த வழித்தான், உண்மை அநுபவம் ஆகும்.

முத்திநிலையிற் பொருள் ஒன்றே என்று, வேதாந்தங்கண்ட உண்மையை, ஐயுற்றுத் தெளிந்தது சிவாகமம். சிவாகமம் சிவானுபவம் ; அதுவே சித்தாந்தம்.

* * *

பந்த நிலையில் பலவாகிய பொருள்கள் எவை ? முத்திநிலையிற் சிவமேயாய், ஒன்றேயான பொருள் எது ? பந்த நிலை இடையில் வந்ததா ? இயல்பா ? சீவனும் சிவனும் ஒன்று ? வேறு ? சிவன்தான், சீவனுய்ப் பின் சிவன் ஆனதா ? அப்படியானால், மீண்டும் மீண்டும் சிவன் சீவன் ஆகாதா ? சீவனுக்கும் சிவனுக்கும் உள்ள தொடர்பு எப்படிப்பட்டது ? என்றிங்ஙனம் ஆயிரக்கணக்கான வினுக்கள்,

" முத்திநிலையிற் பொருள் ஒன்றே "

என்ற உண்மையை அநுபவஞ் செய்யும்வழி எழும்.

சிவாகமமாகிய சித்தாந்தம், கோடிக்கணக்கான எத்தனை வினுக்களுக்கும் விடைசெய்து, வேதாந்த உண்மையைத் தெளிவுபடுத்தும். அதனுலேதான், சித்தாந்தம் வேதாந்தத் தெளிவு எனப்படுகின்றது.

வேதாந்தமாகிய உபநிஷதங்கள் முழுவதையும் அங்கீகரித்து, வேதாந்த உண்மையைத் தெளிவு செய்வது, சிவாகமமாகிய சித்தாந்தம் ஒன்றுமேயாம்.

சீவ சிவ சம்பந்தம் சைவம். இச் சம்பந்தம் பந்த நிலையில் துவைதம். முத்தி நிலையில் அத்வைதம். சித்தாந்தம் ஒன்றுதானே, முத்தி நிலையில் சைவமாகிய அத்வைதத்தை ஐயந்திரிபறச் சொல்ல வல்லது. அதனுலேதான்,

சுத்தாத்வைத சைவ சித்தாந்தம் என்று அது வழங்குகின்றது.

* * *

வேதாந்தம் பேசுகின்ற — முத்தி நிலையிற் பொருள் ஒன்றேயான — அத்வைத உண்மை யறிவு, வேதத்தின் பூர்வபாகமான கர்மகாண் டத்தினூலேதான் சித்திப்பது ; ஒரு கணித உண்மை, எத்தனையோ கிரியைகள் செய்த பிறகுதான் வெளிப்படுகிறது. அவ்வாறேதான் உண்மை ஞானம், கர்மகாண்டமான கிரியை களினூலேதான் வெளிப்படும்.

" கிரியை என மருவுமவை யாவும் ஞானம், கிடைத்தற்கு நிமித்தம். "

உலக போகங்களின் பொய்ம்மைகள், நாடோறும் செய்துவரும் வைதிகக் கிரியைகளி னுல் ஒருவனுக்குப் புலனுகும். அதனுலே பொய்ப்போகங்களில் உவர்ப்பு உண்டாகும். உண்டாய வழியும் ' நான் ' போகாது. ' நான் ' போகாதவழி ஞானம் உண்டாகாது. நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் உடன் நின்று செய்விக்குந் தெய்வத்தை நாம் உணருவதில்லை. பலவேறு தெய்வங்கள் வேதத்திற் பேசப்படு கின்றன. அத் தெய்வங்கள் சிவத்தின் அதிட் டானங்கள் ; உத்தியோக தெய்வங்கள் ; நம்மை நடத்துந் தெய்வங்கள். தவத்தால் நம்மை நடத் துந் தெய்வங்களை நாம் நேரே காணவேண்டும். ஒவ்வொரு செயலையும் தெய்வம் நடத்துவதை யும், நாம் வெறுங்கருவியாதலையுங் காண்போ மாயின், நமக்குக் கோபுரந் தாங்கிகளின் நிலை ஏற்படும். ' நம், செயலாவது யாதொன்றும் இல்லை ' என்ற உண்மை புலப்படும். கோபு ரந் தாங்கிப் பதுமைகளா, மகாபெரிய கோபு ரத்தை முதுகு வளைந்து சுமக்கின்றன ! அந்தப் பதுமைகள் தாங்கள் தாமே சுமக்கின்றன என்ற பாவனையினுலேதானே வீண் கர்வங் கொள்கின்றன.

நாம் நம் செயலை நடத்துந் தெய்வத்தைக் கண்டுவிட்டோமானுல், நாம் செய்கின்றோம் என்கின்ற வீண்பாவம் போய், நாணுதல் செய் வோம். அந்த நாணம் பிறந்தபிறகுதான் - ' நான் ' போய் - ஞானம் உதிக்கும். இந்த ஞானந்தான், பொருள் ஒன்றே என்ற அத் வைத உண்மையை அறியும்.

உலக போகங்களின் பொய்ம்மையைக் காட்டும் வைதிகக் கிரியைகளும், ' நான் ' என் பதைப் போக்கடிக்குந் தவத்தின் வழிதுறை களும் பேசுவது கர்மகாண்டமே. கர்மகாண் டத்தால் வரும் ஞானமே நிலையான உண்மை ஞானம்.

* * *

வேதம் ஞானகாண்டமும், ஞானகாண் டத்துக்கு நிமித்தமாகிய கருமகாண்டமும் என இருவகை.

வேதத்துக்கு அங்கம் ஆறு. அவை : சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதி, சோதிடம் என்பன.

வேதத்துக்கு உபாங்கங்கள் நான்கு. அவை : புராணம், நியாயம், மீமாஞ்சை, மிருதி என்பன. புராணத்துக்குள் இதிகாசம் அடங்கும். மீமாஞ்சை பூர்வ மீமாஞ்சை, உத்தர மீமாஞ்சை என இருவகைப்படும். பூர்வ மீமாஞ்சை வேதத் தின் கருமகாண்ட விளக்கம். உத்தர மீமாஞ்சை வேதத்தின் ஞானகாண்டமான வேதாந்தத்தின் விளக்கம். அதனுலே உத்தர மீமாஞ்சை வேதாந் தம் எனவும்படும்.

வேதத்தின் கருமகாண்ட ஞானகாண்டங் களையும், வேதத்தின் அங்கங்கள் உபாங்கங் களையும் ஒரு அக்ஷரமுந் தவருமல் ஏற்றுக் கொண்டு, பொருள் ஒன்றே என்ற வேதாந்த உண்மையைத் தெளிவுசெய்து சாதிப்பது சித் தாந்தம் ஒன்றே.

* * *

எத்தனையோ சமயங்கள், அங்க உபாங்கங் களோடு கூடிய வேதத்தைச் சித்திரவதை செய்து, ஓரோர் பகுதியை ஏற்றுக்கொண்டு, ஏனைய பகுதிகளை நிந்தனைசெய்து, தனித் தனி தாமே வேதத்தைக் கைக்கொள்ளும் வைதிக சமயமென்று சொல்லித் தம்முட் கலாம் விளைக்கின்றன. வேதத்தின் ஒவ்வோர் பகு தியை ஏற்று, ஏனைய பகுதிகளோடு கலாம் விளைக்குஞ் சமயச் சண்டைகள், கண்ணும் வாயும் மூக்குங் காதும் தனித்தனி தாமே முழு மனிதன் என்று கலாம் விளைப்பதை ஒக்கும்.

வேதம் முழுவதையுங் கைக்கொள்ளாமை யும், வேதத்தின் பேரால் தம்முட் கலாம் விளைப் பதுமே அவைகள் அவைதிக சமயங்கள் என் பதற்கு அடையாளம்.

" தம்முட் புணராமை கேளாம் புறன். "

வேதம் முழுவதையும், அங்க உபாங்கங் களையும் மாறின்மைகண்டு, ஏற்றுக்கொண்ட சைவ சித்தாந்தம் ஒன்றுமே, ஒவ்வோர் பாகத்தைத் துண்டித்தெழுந்து மாறுடுகின்ற, அவைதிக சமயங்களை அடக்கி வைதிக நெறியிற் செல்ல வழிகாட்ட வல்லது.

* * *

பாரத தேசம் வேதத்தில் நம்பிக்கை உள்ள தேசம். வேத நம்பிக்கை இரத்தத்திற் செறிந்து விட்டது. வேதத்தை விலகி எழும் எந்தச் சமயமும் பாரதத்தில் நிலைப்பது அரிது.

ஒருகாலத்திலே, இக்காலத்திலே போல வேத நெறி மறந்து, கர்மகாண்டத்தைப் பிறழ உணர்ந்து, கொலைக்கள வேள்வியே எங்கும் மலிந்து, பாரதம் அதோகதி அடைந்திருந்தது. வேதநெறி மறந்த பிராமண அதிகாரம் தலைக்கு மீறி நின்றது. அந்தச் சமயத்திற் சீர்திருத்தக் காரரான புத்தர் தோன்றிச் சீவகாருண்யம் போதித்தார். இப்பொழுது நாமெல்லாம் மகாத்மாவின் போதனைகளில் ஈடுபடுவது போலப் புத்தரின் போதனையில் உலகம் ஈடு பட்டது. வேதத்தை விலகி ஒரு சமயம் உண் டானது.

புத்தரிற் போல வேதத்திலும் பற்றுள்ள பாரதத்தின் இயல்பை அறிந்த மற்றொரு சீர் திருத்தக்காரர், புத்தர் கொள்கையைக் கைக் கொள்வார் போன்று காட்டிக், கர்மகாண்டத்தை அவ்வளவு பொருள் செய்யாது, ஞானகாண் டத்திலுஞ் சில பகுதியையே ஏற்றுக்கொண்டு, புத்தரின் நிர்வாணத்தை, நிர்க்குணப் பிரம்ம மாக்கிச், சனங்கள் சென்ற வழியிற் சென்று, வேத உபநிஷதப் பிரமாணங் காட்டிப் போதிப் பார் ஆயினர். அந்தப் போதனை, புத்தர் போலக் கருமகாண்டத்தைப் பொருள் செய்யா ததாய், நிர்வாணத்தை இன்னும் நல்ல முறை யிற் காட்டுவதாய், இரத்தத்தில் ஊறிய உப நிஷதங்களைக் கொள்வதாயிருந்தது. அதனாலே, புத்தர் வழிச் சென்ற பாரதம், அதற்கு மாறில் லாத மற்றொரு வழியை, வேதவழி யென்று பின்பற்றியது. அவ்வழி, இன்று 'வேதாந்தம்' என்ற பெயராற் சொல்லப்படுகின்றது. அன் றைக்கு அப்படித்தான் சொல்லவேண்டியிருந் தது. இன்றைக்கும் அப்படித்தான் சொல்ல வேண்டுமோ என்பது சிந்தனைக் குரியது. புத்தத்தை மாற்றஞ் செய்ய எழுந்த வேதாந் தம், வேதத்தின் இரு காண்டங்களுக்கும், அங்க உபாங்கங்களுக்கும், மாறுபடாத வகையில், தெளிவு படுத்தப்படவேண்டும். அவ்வாறு செய்யும் வேதாந்தத் தெளிவு சைவ சித்தாந்தம் ஆகும். இது திருமூலருக்கும், அவர் மரபின் வந்த தாயுமானவருக்கும் ஒத்த முடிபு.

" பிறிவரும்
அத்துவிதமாகுஞ் சிறப்பினதாய்
வேதாந்தத் தெளிவாஞ்
சைவ சித்தாந்தத் திறனிங்குத்
தெரிக்கலுற்றும். "

என்கின்றது சிவப்பிரகாசம்.

சன்மார்க்கமே கடவுட் சட்டம்

★

ஆறுகளெல்லாம் இயற்கை விட்ட வழிச்சென்று கடலடைந்து ஒன்றுகின்றன. நட்சத்திரங்களெல்லாம் ஒழுங்காக யாத்திரை செய்து காலை யொளியிற் கலக்கின்றன. அதே மாதிரியே ஆன்மாக்களெல்லாம் சன் மார்க்கத்தைப் பற்றி இறைவன்குளிற் கலக்கலாம். அரசனெருவனை மகிழ்விக்கும் சுருக்குவழி அவன் ஆணையைக் காப்பதேயாகும். சன்மார்க்க ஒழுக்கமே கடவுளாணை. சன்மார்க்கமே கடவுட் சட்டம். அதை மீறி நடப்பதெல்லாம் துன்மார்க்கமாம். சன்மார்க்கம் அறம், அஃதல்லது மறம். அறத்தால் வருவதே இன்பம். அறத்தினும் ஆக்கமொன்றில்லை. அறம் வாய்மையும் தூய்மையும் அளிக்கும்.

— திருநூல்

சங்க இலக்கிய மரபும் தொல்காப்பியமும்

வி. செல்வநாயகம், எம். ஏ.

இயல் இசை நாடகம் என்னும் முத் தமிழும் வளம்பெற்று விளங்கிய சங்ககாலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு சிறப்பிடம் பெற்று விளங்குகின்றது. கி. பி. 2ஆம் நூற் றாண்டிற்கு முன்பின்னாக ஏறக்குறைய 300 ஆண்டுகளைக் கொண்டுள்ள அக்காலப் பகுதி யில், இலக்கியம் மட்டுமன்றி, அரசியல் மக்கள் வாழ்க்கை முதலியனவும் பாராட்டத்தக்க ஒரு சிறந்த நிலையில் இருந்தன; எனினும் அக் காலத்தில் தமிழிலக்கிய மரபு எவ்வெவ்வழிகளில் வளர்ச்சி பெற்றுச் சென்றது என்றும், மக்கட் சமுதாயம் எவ்வகையில் முன்னேறிற் றென்றும் வரலாற்று முறைப்படி அறியமுடியாதிருப்பதால், அக்காலத்துத் தமிழிலக்கிய வரலாறு நல்ல முறை யில் இன்னும் எழுதப்படவில்லை என்றே கூற லாம். பல்லவ அரசர்கள் தமிழ்நாட்டை ஆளத் தொடங்கிய காலம் (அதாவது 7ஆம் நூற் றாண்டின் தொடக்கம்) முதலாக உள்ள தமி ழிலக்கிய வரலாற்றை நாம் தெளிவாக அறிந்து கொள்ளுதற்கு வேண்டிய ஆதாரங்கள் பல கிடைத்துள்ளனவாகலின், 7ஆம் நூற்றாண்டு தொடக்கமாகத் தமிழிலக்கிய மரபில் எவ்வகை மாற்றங்கள், எக்காரணம் பற்றி ஏற்படலாயின என்றெல்லாம் அறிஞர்கள் ஆராய்ந்து கூறி யிருக்கின்றனர். அதனால், அந்நூற்றாண்டு தொடக்கமாக உள்ள தமிழிலக்கிய வரலாற்றை நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது. 7ஆம் நூற்றாண்டிற்கு முன்னுள்ள காலப்பகுதி களுக்கு உரிய அரசியல் வரலாறு, மக்க ளுடைய வாழ்க்கை வரலாறு முதலியன எப் பொழுது தெளிவாக எழுதப்படுகின்றனவோ, அப்பொழுதுதான் அக்காலப்பகுதிகளுக்குரிய இலக்கிய மரபு முதலியவற்றை நாம் தெளி வாகக் கண்டுகொள்ள முடியும். சங்க காலத்து இலக்கிய மரபை அறிதற்குச் சங்க நூல்களும், தொல்காப்பியமும் பெரிதும் பயன்படுமெனி னும், அவற்றின் உதவிகொண்டு இலக்கிய மரபு வளர்ந்த வரலாற்றை ஓரளவிற்குக் கூறலாமேயொழிய அதைத் திட்டமாகக் கூற முடியாது. ஆகவே, சங்க இலக்கிய மரபில் உண்டான மாற்றங்கள் சிலவற்றை நாம் அறிந்துகொள்ளுதற்குச் சங்கச் செய்யுட்களும் தொல்காப்பியமும் எவ்வாறு பயன்படும் என் பதைக் காட்டுதலே இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

சங்ககாலத்துக்கு முன்

ஒரு மொழியில் இலக்கியம் தோன்றும் போதே, அதற்குரிய இலக்கிய மரபும் அதனோடு உதயமாகின்றது. இலக்கியம் மக்கள் வாழ்க் கையை ஆதாரமாகக் கொண்டு எழுவதாக லின், வாழ்க்கைப் போக்கில் மாற்றம் உண் டாக இலக்கிய மரபிலும் மாற்றமுண்டாதல் இயல்பாகும். தமிழ் மொழியில் இலக்கியம் எக் காலத்தில் ஆரம்பித்து, எவ்வாறு வளர்ந்தது என்றெல்லாம் நாம் இப்பொழுது அறிய முடி யாது. நற்றிணை முதலிய தொகை நூல்களில் உள்ள செய்யுள்கள்தான் எமக்குக் கிடைத் துள்ள பழைய பாட்டுக்கள். அவற்றின்கண் காணப்படும் யாப்பமைதி, பொருள்மரபு, மொழிநிலை முதலியவற்றை நோக்கும்போது, அவை தோன்றுதற்கு எத்தனையோ ஆண்டு களுக்குமுன், அதாவது சங்க காலத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னே, தமிழிலக்கியம் ஆரம்பித்திருத்தல் வேண்டும் எனக் கொள்ள இடமுண்டு. சங்கச் செய்யுள்களுக்குமுன் எழுந்தவை யாவும் அழிந்தொழிந்தமையால், சங்ககாலத்திற்குமுன் இலக்கிய மரபு எவ்வா றிருந்தது என்பதை நாம் கண்டுகொள்ள முடியாது. சங்ககாலத் தொடக்கத்தில் மரபு எந்நிலையில் இருந்தது, பின் அது எவ்வகை யில் மாற்றமடைந்தது என்பவற்றைப் பற்றித்

தான் நாம் ஆராயமுடியும். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய நூல்களிலுள்ள செய்யுள்கள் காலமுறைப்படி கோக்கப்பட்டில. கால முறைப்படி அமைக்கப்படாத செய்யுள்களேயோ அல்லது நூல்களேயோ நாம் துணையாகக் கொண்டு ஒரு காலத்து இலக்கியமரபு வளர்ந்த வாற்றைக் காண முடியாது. கலித்தொகை, ஐங்குறுநூறு என்பன தனித்தனி ஒவ்வொரு புலவரால் இயற்றப்பட்டவையா, அல்லது அவை பல புலவர்கள் இயற்றிய செய்யுள்களைக் கொண்டுள்ளனவா, என்பதுபற்றி நாம் யாதும் துணிந்து கூறமுடியாத நிலையில் இன்றைய தமிழாராய்ச்சி இருக்கின்றது.

இருளில் ஒரு விளக்கு

பண்டைக்காலத்துத் தமிழிலக்கிய மரபு என்னும் இருட்டறையுள் நாம் புகுவதற்கு ஒரு விளக்குப் போன்று உதவுவதற்குரிய நூல் தொல்காப்பியம் ஒன்றே. அது சங்க காலத்திற்கு முந்தியதா அல்லது பிந்தியதா என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ளா விடின், அது கூறும் பொருளைச் செவ்வனே அறிந்துகொள்ள முடியாது. அதுமட்டுமன்று, அந்நூலைத் தக்கவாறு பயன்படுத்திக்கொள்ளவும் முடியாது. அது குறிக்கும் செய்யுள்மரபு முதலியன அது எழுந்த காலத்திற்கு உரியனவாகலின், அந்நூலின்பின் சங்கச் செய்யுள்கள் எழுந்திருப்பின், தொல்காப்பியர் காலத்து மரபைத் தொடர்ந்து சங்ககால மரபு எழுந்ததாதல் வேண்டும். சங்ககாலத்தின்பின் அந்நூல் எழுந்ததாயின், சங்ககால மரபைத் தொடர்ந்து தொல்காப்பியர் கால மரபு எழுந்ததாதல் வேண்டும். அந்நூல் சங்ககாலத்திற்குப் பிந்தியது என்பதற்குப் பல ஆதாரங்கள் உள. அகத்திணையியல் கூறும் பொருள் மரபு ஒன்றை மட்டும் நோக்கினும், அந்நூல் சங்ககாலத்திற்குப் பிந்தியது என்ற முடிபிற்கு வராமலிருக்க முடியாது. நூலின் மொழிநடை, அது கூறும் வழக்கு, மக்கள் வாழ்க்கை, போர்முறை, ஒழுக்கங்கள் முதலியவற்றை நோக்கினும் அது பிந்திய காலத்து நூல் என்பதைக் கண்டறியலாம். அதுபோக, அகத்திணையியல் குறிக்கும் பொருள் மரபை நாம் உள்ளவாறு அறிந்து கொள்ளுதற்கு இரண்டு தடைகள் உள. அவற்றுள் ஒன்று, அதற்கு எழுந்த உரைகள்; மற்றது, சிதைந்த நிலையில் அவ்வியல் காணப்படுதல். அவ்வியற் சூத்திரங்கள் பல விடப்பட்டுள்ளன; சில முறைமாறி எழுதப்பட்டுள்ளன. உதாரணமாக,

> "கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
> முற்படக் கிளந்த எழுதிணை என்ப,"

என்னும் சூத்திரம் அவ்வியலில் முதல் வைக்கப்பட்டிருப்பினும், அதனை முதற் சூத்திரம் எனக் கொள்ள முடியாது. ஏனெனின், அது தொகுத்துச் சுட்டும் ஒரு சூத்திரமாகும். அகத்திணை இதுவென்றும் அத்திணைப் பாகுபாடுகள் இவை யிவை யென்றும் வகுத்துக் கூறியபின்னன்றி, அவற்றை ஆசிரியர் தொகுத்துச் சுட்டியிரார் என்பது, அவர் எழுத்ததிகாரத்திலும் சொல்லதிகாரத்திலும் கையாண்டிருக்கும் முறைகளை நன்கு அறிந்தோர்க்குப் புலனாகும். 'முற்படக் கிளந்த' என இறந்த காலத்தாற் கூறுதலை நோக்குமிடத்தும் அதற்கு முன் சில சூத்திரங்கள் இருந்திருக்கவேண்டும் என்பது தெளிவாகும்.

ஓர் உதாரணம்

இச்சிறு கட்டுரையில் இதனை விரித்துக் கூற முடியாதாகலின், சூத்திரங்கள் முறை மாறி வைக்கப்பட்டிருப்பதற்கு ஓர் உதாரணங் காட்டி அப்பாற் செல்வாம். "முதலெனப் படுவது நிலம்பொழுது இரண்டின்...." எனத் தொடங்கும் சூத்திரம், முதற்பொருள் இன்னதெனக் கூறுகின்றது. முதற்பொருளைப்பற்றிக் கூறும் சூத்திரங்களின் இறுதியில் அப்பொருளைத் தொகுத்துச் சுட்டும் 'முதலெனப் படுவது ஆயிரு வகைத்தே' என்ற சூத்திரம் வைக்கப்படுதல் வேண்டும். அங்ஙனமன்றிக் கருப்பொருள், உரிப்பொருள் கூறும் சூத்திரங்களுக்குப் பின் அது வைக்கப்பட்டிருத்தலை நோக்குமிடத்து அது இடம்மாறி வைக்கப்பட்டிருக்கின்றது என்பது புலனாகும். இவ்வாறு பல சூத்திரங்கள் விடப்பட்டும், பல இடம்மாறி வைக்கப்பட்டும் இருத்தலால் தொல்காப்பியர் புலப்படுத்தக் கருதிய பொருள் இதுவெனக் கண்டுகொள்ள முடியாதிருக்கின்றது. தொல்காப்பியம் தோன்றி 1000 ஆண்டுகள் சென்றபின் வாழ்ந்த உரையாசிரியர்கள், அந்நூலிலுள்ள சிதைவுகளைப் பொருட்படுத்தாமலும், அந்நூல் எழுந்த காலத்துப் பொருள் மரபிற்கும் அதற்கு முன்னும் பின்னும் இருந்த பொருள் மரபிற்கும் உள்ள வேறுபாடுகளைக் கண்டறியாமலும் உரைகூறியிருத்தலால், தொல்காப்பியர் குறித்

தைை அவ்வுரைகள் வெளிப்படுத்தவில்லை எனக்கூறின், அகத்திணையியலை நன்கு ஆராய்ந்த அனைவரும் ஏற்றுக்கொள்வர். அதுபோக, நச்சினார்க்கினியர் உரையென அச்சிடப்பட்டிருப்பதில் அவர் மாணாக்கர் ஒருவர் எழுதிய 'தெளிவுரை'யும் கலந்து வருதலை நாம் காணலாம். ஆசிரியர் கூறியது மாணாக்கருக்குப் புலப்படவில்லை யென்பதை அத்தெளிவுரை தெளிவில்லாதிருப்பதைக் கொண்டே கூறலாம். இங்கிலையில் அவ்வியல் இருக்கும்போது தொல்காப்பியர் புலப்படுத்தக் கருதியதை நாம் எவ்வாறு அறிந்துகொள்ள முடியும்?

வாழ்க்கையில் முன்னேற்றம்

சங்க காலத்து இலக்கிய மரபை அறிய முற்படும்போது உள்ள கஷ்டங்கள் சிலவற்றை மேலே குறித்தோம். சங்ககால மக்கள்வாழ்க்கை மிக விரைவாக முன்னேறிச் சென்ற வகையினைச் சங்கச் செய்யுள்கள் குறிக்கின்றன. 300 ஆண்டுகளைக் கொண்டுள்ள அக்காலப் பிரிவின் ஆரம்பத்திற்கும் முடிவிற்கு மிடையே, வாழ்க்கைத்துறையில் மக்கள் பல படிகள் முன்னேறிச் சென்றிருந்தார்கள் என அறியக் கிடக்கின்றது. அதற்கிணங்க, அக்காலத்து இலக்கிய மரபும் வளர்ச்சி அடைந்திருக்க வேண்டுமென நாம் அனுமானிக்க இடமுண்டு. சங்க காலப் பிரிவில் மிகச் சிறப்புற்று விளங்கிய காலப்பகுதி தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் வாழ்ந்த காலமாகும். அவன் காலத்திலும் அதற்குச் சிறிது முன்னும் பின்னும் கபிலர், பரணர், நக்கீரர், அரிசில்கிழார், மருதனிளநாகனர், ஔவையார் முதலிய பெரும்புலவர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் இயற்றிய செய்யுள்கள்தான் நற்றிணை முதலிய தொகைநூல்களிலுள்ளவற்றுள் பெரும் பாலானவை. அவற்றை நாம் ஒருங்கு சேர்த்துப் படித்துப் பார்க்கும்பொழுது கபில பரணர் காலத்து இலக்கிய மரபை ஓரளவுக்கு அறிய முடிகின்றது. அக்காலப் பகுதிக்கு முன்னும் பின்னும் எழுந்த செய்யுள்களைப் பிரித்தறிய முடியுமாயின், இலக்கிய மரபு அக்கால ஆரம்பத்திலிருந்து இறுதிவரையும் எப்படி வளர்ந்து சென்றது என்பதை அறிந்து கொள்ளலாம். ஆனால், அவ்வாறு அவற்றைத் திட்டமாக வகுத்துக் கொள்வதிற் பல இடர்ப்பாடுகள் உள; எனினும், ஆரம்ப காலத்துச் செய்யுள்களிற் சிலவற்றை மட்டும் நாம் அறிந்துகொள்ள முடிகின்றது. கலித்தொகை, தொல்காப்பியம் என்பவற்றின் உதவிகொண்டு இறுதிக்காலத்து மரபினை நாம் ஒருவாறு அறியமுடியும். ஆகவே, அக்கால இலக்கிய மரபு வளர்ந்த வாற்றைத் திட்டமாக அறியமுடியாவிடினும், ஓரளவிற் காயினும் நாம் அதைத் தெளிந்து கொள்ளலாம். அதை நாம் ஈண்டுக் கூறுதல் இயலாதாகலின், அதன் போக்கை மட்டும் சுருக்கமாகக் காட்டுவாம்.

புலநெறி வழக்கம்

சங்க கால ஆரம்பத்திற் குறிஞ்சி முதலிய ஐவகை நிலங்களிலும் மக்கள் வாழ்ந்தார்கள். அவர்களுக்கு முறையே குறிஞ்சி முதலிய ஒழுக்கங்கள் உரியனவாகப் புலநெறி வழக்கம் செய்யப்பட்டது. பாலைநில மக்கள் தம்முடைய வாழ்க்கையை நடத்துதற்கு ஆறலைத்தல் முதலிய தொழில்களை மேற்கொண்டனர். ஆகவே, அந்நிலத்து ஆடவர் தம் பெண்டிரை விட்டு இடையிடையே பிரிந்து செல்லவேண்டியிருந்தது. அதனால் பிரிதல் என்னும் ஒழுக்கம் பாலைநில மக்களுக்கு உரியதாகக் கொள்ளப்பட்டது. அவ்வாறு வாழ்ந்துவந்த பாலைநில மக்கள், செழிப்பற்ற அந்நிலத்திலிருந்து வாழ விரும்பாமையால் குறிஞ்சி முதலிய நிலங்களிற் சென்றிருந்து வாழத் தொடங்கினர். கபிலபரணர் காலத்தில் மக்கள் வாழ்க்கை பாலை நிலத்தில் நிகழவில்லை. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நால்வகை நிலங்கள்தான் மக்கள் வாழ்தற்கு உரிய நிலங்களாகக் கொள்ளப்பட்டன. பாலை நிலத்திலிருந்து வாழ்ந்த மக்களுக்கு உரிய ஒழுக்கமாகிய பிரிதலும் உடன்போக்கும் ஏனை நால்வகை நிலத்து மக்களுக்கும் உரிய ஒழுக்கங்களாகக் கொள்ளப்பட்டன. அக்காலத்திற் செழிப்புள்ள நிலங்களைத் தொடுத்து நின்ற பெருவழிகள் பாலை நிலத்திற்கூடாகச் சென்றன. ஆதலின், தலைவியைப் பிரிந்து தலைவன் பாலை நிலத்திற் கிடக்கும் வழிகளாற் செல்லுதல் பாலையொழுக்கம் எனப்பட்டது. கபிலபரணர் காலத்துப் பாலைச்செய்யுள்கள், ஏனை நிலத்துத் தலைவர்கள் பிரிந்து பாலைநிலத்திற் கூடாகச் செல்லுதலைக் குறிக்கின்றன. பாலை நிலத்து மறவர் குறிஞ்சி நிலத்திற் சென்று தங்கியபோது தம்முடைய தெய்வமாகிய கொற்றவையையும் தம்முடன் கூட்டிச் சென்றனர். அதனால் கொற்றவைநிலை என்னும்

வழிபாட்டுமுறை குறிஞ்சிநிலத்திற்கு உரியதாகக் கொள்ளப்பட்டது. "கொற்றவை நிலையும் அத் திணைப் புறனே", எனத் தொல்காப்பியர் கூறுவதும் ஈண்டு நோக்கற்பாலது. அக்காலப் பகுதியிலேதான் முருகன் கொற்றவைக்கு மகனெனக் கொள்ளப்பட்டது.

எத்தனையோ வேறுபாடு

சங்ககால ஆரம்பத்தில் பாலைநில மக்களுக்கு உரியதாகப் புலநெறிவழக்கம் செய்யப்பட்ட பாலையொழுக்கம், கபிலபரணர் காலத்திற் பாலைநிலத்திற் கூடாகப் பிரிந்து செல்லும் ஒழுக்கமாக மாறி அக்கால முடிவில் அது கணவன் மனைவியைவிட்டு நீங்கியிருத்தலாகின்றது. ஓதற்பிரிவு தொடக்கம் பரத்தைப் பிரிவு வரையும் உள்ள யாவும் பாலையாகின்றன. ஆகவே, பாலையொழுக்கம் முதலில் பாலை நிலத்து மக்கள் ஒழுக்கமாயிருந்து, பாலை நிலத்திற்கூடாகப் பிரிந்துசெல்லும் ஒழுக்கமாகி, ஈற்றில் அது எவ்வகைப்பிரிவும் ஆகின்றது. உடன்போக்கு, பாலைநில மக்கள் ஒழுக்கமாதலின், அது பாலையெனப்பட்டது. பிற்காலங்களில் பாலையென்பது பிரிதலொழுக்கமாகக் கொள்ளப்பட்டதாய், 'உடன்போக்குப் பாலை' உரையாசிரியர்களுக்கும் ஐயப்பாட்டை உண்டாக்கிற்று.

இனி, குறிஞ்சி முதலிய ஐவகை நிலங்களுக்கும் தனித்தனி உரியனவாகக் கொள்ளப் பட்ட புணர்தல் முதலிய ஒழுக்கங்கள் ஐந்தும் சங்ககால முடிவில் எல்லா நிலங்களுக்கும் உரியனவாகப் புலநெறிவழக்கஞ் செய்யப்பட்டது. இம்மரபினை நாம் ஐங்குறுநூற்றிலும் கலித்தொகையிலும் காணலாம். தொல்காப்பியரும் புணர்தல் முதலிய ஐந்தும் திணைக்கு உரிப்பொருள் எனக் கூறினரன்றி, இன்ன நிலத்திற்கு இன்ன ஒழுக்கம் உரியது எனக் கூறவில்லை.

கைக்கிளை பெருந்திணை ஆகிய இரு அக ஒழுக்கங்கள் கபிலபரணர் காலத்திலும் அதற்கு முன்னும் புலநெறிவழக்கிற் காணப்படாதவை. மடலேறுதலைக் குறிக்கும் இரு செய்யுள்கள் நற்றிணையிற் காணப்படுகின்றன; எனினும், அவை நெய்தலாகவே முதலில் கொள்ளப்பட்டன. கைக்கிளை பெருந்திணை ஆகிய ஒழுக்கங்களை நாம் முதன்முதலாகக் கலித்தொகையிலேதான் காண்கின்றோம்.

"மையில் மதியின் விளங்கு முகத்தாரை
வெளவிக் கொளலும் அறனெனக் கண்ட"

காலத்தில் கலித்தொகை எழுந்ததால், கைக்கிளை புலநெறிவழக்கில் இடம்பெறலாயிற்று. இவ்வாறு இலக்கிய மரபு சங்ககால இறுதியிற் பல வழிகளில் மாற்றமுற்றுச் செல்வதைக் கலித்தொகையிலும் பரிபாடலிலும் காணலாம். மேலே, பாலையொழுக்கம் ஒன்றில் உண்டான மாற்றங்களைக் கண்டோம். இவ்வாறே மருதம் முதலிய ஒழுக்கங்களிலும் சங்ககால ஆரம்பத்திற்கும் முடிவிற்குமிடையே மாற்றங்கள் ஏற்பட்டதைச் சங்கநூல்களைப் படித்தறியலாம். அகம் புறமாகிய எல்லா ஒழுக்கங்களிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஒருங்கு சேர்த்துப் பார்க்கும்போது இலக்கியமரபில் சங்ககால ஆரம்பத்திற்கும் முடிவிற்குமிடையே எத்துணை வேறுபாடு இருந்தது என்பதைக் காணலாம்.

தாய்மொழி மூலம் உணர்வதே சிறப்பு

நம்மவர்க்குள் ஆங்கிலம் படித்தவர் பலர் தொல்காப்பியம் அறிந்திலர். ஆனல் பிஷப் கால்டுவல், அந்நூலைப் பயின்று, ஆராய்ந்து அதன் நுட்பங்கள் பலவற்றை ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார். மாணிக்கவாசகருடைய திருவாசகத்தின் உள்ளுறையை ஆங்கிலம் பயின்ற நம்மவர் அறிய விரும்பும் போது, டாக்டர் போப்பினுடைய மொழிபெயர்ப்பைத் தேடிப்பார்க்கிறார். நம்மாழ்வார் திருவாய்மொழியின் கருத்தை அறியவேண்டுமானல், சிலர் ஆங்கில மொழிபெயர்ப்பைத் தடவுகிறார். இன்னும், திருவள்ளுவர் திருக்குறளை நேராகத் தமிழில், ஆங்கிலம் பயின்ற தமிழர்களிற் பலர் படிக்கிறரில்லை. நம் நாட்டுப் பெரியோர்கள் அருளிய உண்மைகளைத் தாய்மொழி வாயிலாக உணரும் ஆற்றலையும் வன்மையையும் இழந்து அவைகளை வேறு மொழிவாயிலாக அறிந்து கொள்ள முயலும் நிலையை நாம் அடைந்திருக்கிறோம். திருவாசகத் திருவாய்மொழி போன்ற அரும்பெரும் நூல்களின் கருத்துக்களை நாம் செவ்வனே உணரவேண்டுமானல், அவைகளைத் தாய்மொழியின் மூலம் உணர்வதே சிறப்பு.

— திரு. வி. க.

மறத்தல் இல்லை

பேராசிரியர் மு. வரதராசன்

புராணக் கதைகளைக் கண்ணை மூடிக் கற்றல் இனி முடியாது. ஒன்று, அவற்றிற்கு உட்பொருள் கண்டு உணர்ந்து போற்றல் வேண்டும்; அல்லது, அவை இக்காலத்திற்கு உதவாதவை எனக் கைவிடுதல் வேண்டும். பல கதைகள் நல்ல உவமைகள் போல் எளிதில் உட்பொருள் உணர்த்தக் காண்கிறோம். சில கதைகள் மட்டுமே பயனுள்ள உட்பொருள் உணர்த்தாமல் உள்ளன; அவற்றை மட்டும் விட்டு, மற்றவற்றுல் பயன் பெறலாம். இங்நெறியிற் சென்றுல்தான் முன்னோருடைய பாடல் பல நம் நெஞ்சத்திற்கு நல்லனவாய் அரும் பயன் நல்குகின்றன.

சிவபெருமான் தாருக வனத்து முனிவர்கள் ஏவிய யானையின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டார் என்பது புராணக் கதை. 'பனைக்கை மும்மத வேழம் உடுத்தவன்' என்று திருநாவுக்கரசர் பாடியுள்ளார்.

ஆட்கொள்பவன்

மதம் கொண்ட யானை, செருக்குக்கு அறிகுறியாகக் கொள்ளத்தக்கது. செருக்கு, உண்மை நிலைமை உணரவொட்டாமல் தடுப்பது; ஒருவர்க்கு உரிமை அல்லாததையும் உரிமையாக உணர்ந்து தடுமாறச் செய்வது. அதற்கு உவமைபோல் இருப்பது மதயானை. அந்த யானை மதம் கொண்டபோது, தான் யான், தன்னைப் போற்றிக் காக்கும் பாகன் யார், தன் கடமை என்ன முதலிய எல்லாவற்றையும் மறந்து, தன் விருப்பம்போல் திரியும்; எதிர்ப்பட்டோர் யாராக இருந்தாலும் கொல்ல முயலும், கொல்லும்; தனக்கு நன்மை செய்வோர்க்கும் தீமை செய்யும்; கட்டுக்கு அடங்காது. அத்தகைய யானைக்கு அந்த மதத்தின் கொடுமையைத் தூண்டி விடுவதுபோல் உள்ளது அதன் நீண்ட வலிய கை. கருநிற மாய்ச் சுருச்சரை மிக்கதாய் நீண்டு திரண்டுள்ள அதன் கை கரிய பனைமரம்போல் உள்ளது. போர்க்களத்தில் வெட்டப்பட்ட யானைகளின் கைகள் விழுந்து கிடக்கும் காட்சிக்கு உவமையாகத் தமிழ் இலக்கியத்திற் கூறப்படுவது பனந்தோப்பில் வெட்டப்பட்டு விழுந்திருக்கும் பனைமரங்களாகும். ஆதலின் பனைபோன்ற தும்பிக்கையை உடைய யானை என்று கூறுவது மரபாகும். இங்கு மதம் பிடித்த யானையைக் கூறுமிடத்தில் அதன் கை மட்டும் சிறப்பித்துக் கூறப்படுவது பொருத்தமாகும். ஏன் எனின், மதம் பிடித்த நிலையில் அதன் அழிவு வேலைகள் பெரும்பாலும் அந்தக் கையாலே நடைபெறுகின்றன. தன் முனைப்பு மிகுந்த நிலையை,

> "இருகை யானையை ஒத்திருந் தென்னுளக்
> கருவையான் கண்டிலேன் கண்டது எவ்வமே"

என்று மாணிக்கவாசகர் குறிப்பிட்டிருத்தலும் இங்குக் கருதத்தக்கதாகும். யானையின் மதம் அதன் உடம்பில் முப்பகுதியில் வெளிப்படுவதால் மும்மதம் எனப்படுவதாகும். இத்தகைய யானையின் தோலை உரித்தவன் இறைவன் என்னும் இந்தப் பாட்டின் உட்பொருள், உயிர்களின் யான் எனது என்னும் செருக்கைப் போக்கி ஆட்கொள்பவன் என்பதாகும்.

> 'யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
> உயர்ந்த உலகம் புகும்'

என்கிறார் திருவள்ளுவர்.

செருக்கு அற்ற நெஞ்சம்

இவ்வாறு செருக்கு அறுத்த உள்ளம் உடையவரே, தூய எண்ணமும், தூய சொல்லும், தூய செயலும் உடையவராக வாழ முடிகிறது. சமயநெறியில் நின்று வாழ்வதற்கு மட்டும் அல்லாமல், ஒருவர்க்குக் கிடைத்துள்ள எந்தச் சிறுதொழிலைச் செய்வதற்கும் செருக்கு அற்றவர் தகுதி மிக்கவராக உள்ளனர். பணிவுடைமையும் இன்சொல்லும் பொதுவாக ஒருவர்க்கு அணிகலன்கள் என்று கூறப்படுகின்றன. செருக்கு உடையவர்க்கு இந்த இரண்டும் வாய்ப்பது இல்லை. செருக்கு அற்ற உள்ளம் உடையவர்க்கே பணிவும் இயல்

பாக அமைகிறது ; இன்சொல்லும் இயல்பாக அமைகிறது. ஆதலின் செருக்கு இல்லாதவர்களே நல்லோர் என உலகத்தாராற் போற்றப்படுகின்றனர். செருக்கு உடையவர்களைக் கண்டு அஞ்சுவோர் இருக்கலாம் ; அது மதயானையைக் கண்டு அஞ்சுதலைப் போன்றதே அல்லாமல், மதிப்புத் தருதல் ஆகாது. செருக்கு இல்லாத சான்றோர்களை உலகம் போற்றுதல், குழந்தையைக் கனிந்த அன்போடு போற்றுதல் போன்றதாகும். ஆகவே, இந்த உலகில் பிறர் மதிக்கவும் போற்றவும் தக்க நல்ல வாழ்வு வாழவேண்டுமானாலும், செருக்கு அற்ற நெஞ்சம் வேண்டியதாக உள்ளது.

நெஞ்சமே கோயில்

குடும்பம், தெரு, ஊர், நாடு என்னும் குறுகிய எல்லைக்குட் கட்டுப்படாத அறிவு பெற்று, உலகத்தையும் உலகத்து உயிர்களையும் இவற்றின் படைப்பையும் எண்ணி, பரந்த பெரிய உலக இயக்கத்தில் தன் வாழ்வும் ஒரு சிறு பகுதி என்று எண்ணுவதே சமயநெறியாகும். எங்கும் அசைந்தும் வீசியும் இயங்கும் காற்று என்னும் பெரும் பொருளில் ஒரு சிறு பகுதியே நம் கை விசிறியால் வீசி நாம் எழுப்பும் சிறு காற்று. எங்கும் பரந்து உள்ள கதிரவனுடைய ஒளியில் ஒரு சிறு பகுதியே நம் வீட்டு சன்னல் வழியாக நாம் பெறும் ஒளி. இவை போல், நம் வாழ்வு நெடுங்காலமாக இயங்கிவரும் உயிர்களின் இயக்கத்தில் ஒரு சிறு பகுதி என்று எண்ண வேண்டும். இப் படிப்பட்ட எண்ணம் வரவேண்டுமானால், இந்த உடம்பும் இதன் செயல்களும் இந்த உலகத்தைப் படைத்துக் காத்து அழிக்கும் பெருஞ் சக்திக்கு உரிமையானவை என்ற தெளிவு பிறக்கவேண்டும். யான் எனது என்னும் செருக்கு அறுத்தலும் இந்த நிலையும் ஒரே வகையானவை என்று விளங்குகின்றன. இத்தகைய நினைவு மிக மிக, அந்தத் தூய நெஞ்சத்தில் ஓர் உடம்பைப்பற்றிய சிறு நினைவும் அதன் செயல்பற்றிய சிறு நினைவும் குறைந்து, உலக இயக்கத்தைப் பற்றிய நினைவு பெருகும் ; அதற்குக் காரணமான பரம்பொருளின் சார்பு மிகும். ஆகவே, அந்த நினைவு மிகுந்த நெஞ்சம் சிவபெருமானுடைய கோயில் என்று கூறப்படுகின்றது. சிவபெருமான் தன்னை நினைப்பவரின் நெஞ்சமே கோயிலாகக் கொண்டவன் என்பது அக் கருத்தாகும். 'நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்' என்றார் திருநாவுக்கரசர்.

பெருஞ் சக்தி

ஏழைந்து முப்பத்தைந்து (7 × 5 = 35) எனச் சிறுவயதில் வாய்பாடு கற்கிறோம். அப்போது அதன் பொருள் தெளிவாக விளங்குவதில்லை. ஆசிரியர் வற்புறுத்துவதால் கண்மூடிக் கற்கிறோம். கணக்குக் கற்பதற்கு இந்த வாய்பாடு பயன்படுவதால் மகிழ்கிறோம் ; தொடர்ந்து வாய்பாட்டைப் போற்றுகிறோம். ஆனால் 7 × 5 = 35 என்பது உண்மையை உணர்த்துவதாகாது. அதை மனப்பாடஞ் செய்து ஒப்புவிப்பவரும் உண்மையை உணர்ந்தவராகார். இவைகள் எல்லாம் வெறுமையான எழுத்துக்களே ; எண்ணின் அறிகுறிகளே ; பொருள் விளங்காவிடினும் பயன்படுவதாற் போற்றுகிறோம். பிற்காலத்தில்தான் வாய்பாட்டின் பொருள் தெளிவாகிறது. ஏதேனும் ஒரு பொருளை ஏழு ஏழாக எண்ணி, அப்படி ஐந்து அடுக்கு அடுக்கினால், அந்தப் பொருளின் மொத்தத் தொகை முப்பத்தைந்தாக இருக்கக் காண்கிறோம் ; வாய்பாட்டின் பொருளை உணர்கிறோம்.

முதலிற் கற்ற கண்மூடி வாய்பாட்டிற்கும் பிறகு தெளிந்த எண் விளக்கத்திற்கும் மிகப் பெரிய வேறுபாடு உண்டு. கோயிலில் இறைவனைக் கண்டு வழிபாடு செய்வதற்கும், உலகப் படைப்பில் இறைவனைக் கண்டு உணர்ந்து உருகுவதற்கும் இடையே அவ்வளவு பெரிய வேறுபாடு உள்ளது. முன்னது மற்றதற்குத் துணையாக, தூண்டுகோலாக அமைந்துள்ளது ; வழி அமைத்துக் கொடுக்கிறது. இது மறுக்க முடியாது. ஆனால், கோயிலிலே மட்டும் இறைவனுடைய நினைவு கொண்டிருந்து கோயிலை விட்டு வெளியே வந்து காணும் பொருள்களிலும் கேட்கும் ஒலிகளிலும் மற்ற வற்றிலும் அந்தப் பெருஞ் சக்தியை மறந்து நின்றால் ஒரு பயனும் விளையாது. உள்ளம் சிறுபிள்ளைத் தன்மையாக வளர்ச்சி பெறுமல் நிற்கும் வரையில், அறிகுறி தவிர வேறு வழி இல்லை. உள்ளம் வளர்ச்சி பெறப் பெற — அறிகுறியைக் கடந்து அறிபொருளை — கருத்தை உணர்தல் வேண்டும். கோயிலில் இறைவன் உள்ளான் என்று கைகூப்பும் நிலையிலிருந்து, உலகத்து உயிர்களின் வாழ்வில் எல்லாம்

கலந்து நின்று இயக்கும் பெருஞ் சக்தியாய் உள்ளவனே இறைவன் என்று உணர்ந்து உருகும்நிலைக்கு வளரவேண்டும். அந்த நிலைக்கு உள்ளம் உயர்ந்து நிற்கும்போது இறைவனை எப்படி வாழ்த்துவது, எப்படி வழிபடுவது என்ற திகைப்பும் ஏற்படும்.

வானகி மண்ணகி வளியாகி ஒளியாகி
ஊனகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனகி யான்எனதுஎன்று அவரவரைக் கூத்தாட்டு
வானகி நின்றுயை என்சொல்லி வாழ்த்துவனே

என்பது அவ்வாறு உயர்ந்து நின்று உருகிய உள்ளத்திலிருந்து பிறந்த மணிமொழியாகும்.

"....அம்பலக் கூத்தன்"

இதே கருத்தைத்தான் திருநாவுக்கரசர், நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டுள்ளான் என்று இறைவனைக் குறிப்பிட்டபின், 'அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தன்' என்று பாடியுள்ளார்.

செருக்கை அடக்கி ஆளும் தலைவன் என்று எங்கோ உள்ளவனை உணரச் செய்கிறார்; அடுத்தாற்போல் அவனை நெஞ்சத்திற் கோயில் கொண்டவனை நம் வாழ்விலேயே கலந்து நம்மை இயக்கும் சக்தியாக உணரச் செய்கிறார்; எங்கோ உள்ள ஒன்று, உள்ளத்தில் உள்ள ஒன்று, அதுவே எல்லாப் பொருள்களுமாய் உள்ளது என்று எங்கும் அதையே காணச் செய்கின்றார்.

அம்பலக் கூத்தன் என்பது அரிய கருத்துப் பொதிந்த அழகிய தொடராகும். உலகம் எங்கிருந்து எவ்வாறு தோன்றியது, அதன் இயக்கம் எத்தகையது, அணுக்கள் எல்லாம் இயங்குவதற்குக் காரணம் என்ன, இயங்கும் முறை என்ன என்று விஞ்ஞானம் ஆராய ஆராய, இத் தொடர் நுண்ணிதாய்ப் பொருள் பயக்க வல்லதாகும். வெட்ட வெளியில் ஆடும் படைப்புச் சக்தியே, அம்பலத்திற் கூத்தாடும் நடராசத் தெய்வமாகக் கற்பனை செய்யப்பட்டுள்ளது என்ற உண்மை எதிர் கால அறிவியல் ஆராய்ச்சிகளால் தெளிவு செய்யப்படும். இந்த உண்மையை நுட்பமாக உணர்ந்த சான்றோர் திருநாவுக்கரசர் அனைத்து வேடமாகவும் உள்ள இறைவனே அம்பலத்திற் கூத்தாடுபவனை உள்ளான் என்கிறார்.

பரந்த உலகிற் பரம்பொருள்

அனைத்தும் அவனை இருக்கிறான் என்று கூறுமல், அனைத்து வேடமாகவும் இருக்கிறான் என்கிறார். வேடம் என்ற சொல் பொருள் பொதிந்த சொல்லாக உள்ளது. நம் கண்ணுக்குத் தோன்றுவன எல்லாம் தோற்றங்களே அல்லாமல் பொருள்களின் உண்மை வடிவங்கள் அல்ல; அவை எல்லாம் வேடங்களே, இந்தத் தோற்றங்கள் எல்லாம் மாறும், இன்று ஒரு வடிவாக இருந்து நாளை ஒரு வடிவாக மாறும் தன்மையன இவை, இவற்றைக் கண்டு இந்த வேடங்களே பொருள்கள் என்று எண்ணிவிடலாகாது, மாறும் தோற்றங்களுக்கு இடையே மாறுத உயிர்ச்சக்தியைக் காணுதல் வேண்டும், அதற்கு அடிப்படையானதே பரம்பொருள், ஆயினும் இந்த வேடங்களெல்லாம் அந்தச் சக்தி மேற்கொண்ட வேடங்களே எனப் பலவாறு எண்ணி உணரத்தக்க கருத்துக்கள் பலவும் அந்தச் சொல்லிற் பெறக் கிடக்கின்றன.

வாழ்விலே படிப்படியாக அறிவு பெற்று வளர்ந்து, மெய்யுணர்வு பெற்றுத் தெளிந்தவர் திருநாவுக்கரசர். பள்ளிக்கூட மாணவன் தான் இன்ன வகுப்பைச் சார்ந்தவன் என்பதை மறக்கமுடியாது; காரணம் அவன் வாழ்வை அந்த அளவிற்குப் பள்ளிக்கூடத்தோடு தொடர்புபடுத்திக் கொண்டுள்ளான். இல் வாழ்க்கை நடத்தும் நங்கை ஒருத்தி தான் இன்ன குடும்பத்தாள் என்பதைக் கனவிலும் மறக்க முடியாது; காரணம் அவள் தன் வாழ்வை அந்த அளவிற்குக் குடும்பத்தோடு பிணைத்துக் கொண்டுள்ளாள். நாட்டை ஆளும் தலைவன் ஒருவன் தான் இன்ன நாட்டான் என்பதை எந்நிலையிலும் மறக்க முடியாது; காரணம் அவன் சிந்தையிலும் செயலிலும் நாடு அவ்வளவு இயைபுபட்டுள்ளது. திருநாவுக்கரசர் போல் இயற்கைப் படைப்பையும் உயிர்களின் வாழ்வின் போக்கையும் அவற்றின் அடிப்படையையும் எண்ணி உணர்ந்து தெளிந்தவர், பரம்பொருளை எந்நிலையிலும் மறந்து வாழ முடியாது. காரணம், அவருடைய வாழ்வு பரந்த பெரிய உலக இயக்கத்தில் ஒரு பகுதி என்ற உண்மை அவ்வளவு தெளிவாக நெஞ்சிற் பதிந்துவிட்டது. ஆதலின் ஒரு சிறு பொழுதும் இறைவனை மறந்து வாழமுடியாது என்கிறார் திருநாவுக்கரசர்.

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனே?

— தேவாரம்

FOR HIGH CLASS STATIONERY

Exercise, Books Drawing Books, Water Colours; All kinds of Pencils, Pens, Nibs, Papers of all description and sizes; Writing Pads, Envelopes, etc.

FOR PRINTING PAPERS & INKS:

all varieties of Printing Papers, Colour Inks, Binding Cloths etc.

FOR PROVISIONS, CONFECTIONERY HOUSE-HOLD GOODS ETC.

CONSULT

ESMALJEE AMIJEE

130, GRAND BAZAAR, :: **JAFFNA**

T'phone: **25**

★ ※ ★

பள்ளிக்கூடங்களுக்குரிய சகலவிதமான கொப்பிகள், பென்சில்கள், பேனைக்கள், பௌண்டன் பேனைக்கள், கடதாசி வகைகள் கந்தோர்களுக்குரிய பைல்கள் முதலியவைகளும் என்வலப்பு, மை வகைகளும்

அச்சுக்கூடங்களுக்குரிய பலவிதமான கடதாசிகள், நிற மைகள், புத்தகம் கட்டும் கலிக்கோ, மாபிள் கடதாசிகள், நூல் முதலியவைகளும்


வீட்டுத் தேவைக்குரிய அரிசி, பலசரக்கு வகைகளும், கண்ணாடி – பீங்கான் பாத்திரங்கள், பவுடர், வாசனைப் பொருள்கள் ஆகியவைகளும்

எந்த நேரமும் எப்போதும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ்மல்ஜி அமிஜி

[ஈ. ஏ. பாய்]

130, பெரியகடை :: யாழ்ப்பாணம்



அதிகமானவர்கள்

நெஸ்டோமோல்ட்

பருகுகின்றனர்

3 கூடுதலான அம்சங்கள்

ஒவ்வொரு அவுன்ஸிலும் உணவுச் சத்து பி 1–137 யூனிட்டுகள் அதிகமாக உள்ளன.

சிக்கனமானது, குறைந்த விலையில் நிறைந்த பெறுமதி கிடைக்கிறது.

ருசியானது, தெவிட்டாத சுவை பொருந்தியது. நெஸ்டோமோல்ட் இலவச சாம்பிள் டின் ஒன்றை அனுப்பி வைக்கத் தபாற் செலவுக்காக 25 சதத்துடன் உங்கள் பெயரையும் விலாசத்தையும் கீழ்க் கண்ட விலாசத்துக்கு அனுப்பவும்.



நெஸ்லிஸ் (ELK)
தபால் பெட்டி 189, கொழும்பு

நெஸ்டோமோல்ட்

கூடுதல் உணவுச்சத்து பி, சேர்ந்த கட்டிப் பால்

---

look to **Hotpoint**

for the FINEST FIRST
AUTOMATIC ELECTRIC APPLIANCES

- REFRIGERATORS
- FOOD FREEZERS
- COOKING RANGES
- DISH WASHERS
- WATER HEATERS
- CLOTHES WASHERS
- DRYERS, IRONERS
- AIR CONDITIONERS

SOLE AGENTS:

UNITED ELECTRICALS Ltd.,

33, Staples Street :: COLOMBO 2

ஸ்ரீ ஜயதேவர் அருளிய

கீத கோவிந்தம்

நவாலியூர், சோ. நடராசன்

ஸ்ரீ ஜயதேவர் அருளிய கீத கோவிந்தம் வடமொழி இலக்கியத்தில் உயர்ந்த இடம் வகிக்கிறது. இசையோடு அமைந்தது. தமிழில் 'திருக்கோவையார்' போல இன்பச்சுவையும் ஞானக்கருத்தும் கொண்டது. ஜயதேவர் கி. பி. பன்னிரண்டாவது நூற்றாண்டிலே வங்காளத்தி லரசாண்ட கடைசி இந்து அரசனான இலக்குமணசேனன் அவைக்களத்தில், மகாகவியாக விளங்கினர். இவரோடு வேறும் ஐந்து புலவர்கள் ஆஸ்தான கவிஞர்களாக இருந்தனர். இவர்கள் பெயர் கோவர்த்தனன், சரணன், சுருதிதரன், தோயி, உமாபதிதரன் என்பன. இவர்களுடைய கவிதா சக்தியைப்பற்றிச் ஜயதேவர் தொடக்கத்திற் கூறுகின்றார். இவர்களுள் இனிமையும் ஒளியும் பொருளுக்கேற்ற சொல்லே இசைநயம், சொல்நயம் பொருந்த அமைக்குந்திறனுமுடையவர் ஸ்ரீ ஜயதேவர். இனிமையும், மென்மையும் சொல்லிலேயும் பொருளிலேயும் காணப்படும். ஒளியும் அவ்வாறே. "உள்ளத்தே ஒளியுண்டானால் வாக்கினிலே ஒளியுண்டாகும்". பொருள்ஒளி, உயர்ந்த கிளர்ச்சியை உண்டுபண்ணும். அது சுவைமயமானது. அவ்வாறுண்டாகும் உணர்ச்சிகளே புலன்களைத் தெளிவுறச் செய்வன. பாட்டின் பயன் அது.

ஜயதேவரின் கீதகோவிந்தம் இதுவரை தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகையினால் இம்முயற்சியில் ஈடுபட்டேன். அவகாசமில்லாததால் என் விதியையும் சூழ்நிலையையும் நொந்துகொண்டேன். இக் காவியத்தின் சீவசுருதி—உயிர் ஓசை—பிரிவென்னும் விரகதாபம்—கிருஷ்ணன் உயிர்; ராதை பேரின்பம்; கோபிகள் சிற்றின்பம்; ஐம்புல வேடரின் வலையிற்பட்டு மயங்கி உலகத்துச் சிற்றின்பங்களில் அமிழ்ந்திக் கிடந்த உயிர், இருவினை ஒப்பும் மலபரிபாகமும் அடையவே பேரின்பத்தை நாடி அயராத ஆனந்தத்தை அனுபவிக்கிறது என்ற கருத்தை இக் காவியம் உட்பொருளாகக் கொண்டது.

நூல்

மேகஞ் சூழ்ந்தது விண்ணகங் கானெலாம்
சாக மீண்டிய சாமளத் தாமரை
ஆகு நல்லிரு ளஞ்சிடு மையனைப்
போகு வாயழைத் தில்ல மிராதையே.

சாகம் - கிளை, சாமள - கரிய, தாமரை - புன்னைமரம், ஐயன் - கிருஷ்ணன், இல்லம்-வீடு.

என்று நந்த னிசைக்க விராதையும்
கன்றெ றிந்து கனிகொண்ட கண்ணனும்
துன்று வல்லி செறிதருச் சூழ்நெறி
நன்றின் பார யமுனையை நண்ணினர்.

நந்தன் - நந்தகோபன், கன்று - வஞ்சத்தால் வந்து நின்ற பசுக்கன்றைக் குறுந்தடியாய்க் கொண்டு விளாங்கனியை உதிர்த்த கண்ணன். வல்லி - கொடி, தரு - மரம், இன்பார - இன்பம் நிறையத் துய்க்க.

செங்கண் மாலன்பிற் சிந்தை சிறந்திட
மங்கை யோர்தம் விலாசம் மகிழ்ந்திட
துங்க மாகவி சீசய தேவன்வாய்ப்
பங்க யத்தமு தின்சொல் பருகுவாம்.

செங்கண்மால் - விஷ்ணு மூர்த்தி, விலாசம் - காதற்குறிப்பு, துங்க - உயர்ந்த, காதலர்க்குக் காமநூலாயும் ஞானியர்க்கு ஞான நூலாகவும் அமைந்தது இந்நூல்.

சொல்லின் வேந்தன் தோயிகவி ராசனும்
சொல்வி ரிக்கும் உமாபதி சொல்பொருள்
நல்லி சைப்படுத் தும்சய தேவனே
எல்லை யில்புல மைக்கிவன் எல்லையே.

நல்ல காதல் நயம்படக் கூறுவான்
கல்வி யால்நிறை கோவர்த்த னக்கவி
வல்ல நாளிகே ரக்கவி சாரணன்
சொல்லில் நிற்கும் சுருதி தரன்புகழ்.

நல்ல காதல் - தூய்மையான காதல், நயம்பட - காம இச்சையை வளர்ப்பதை நோக்கமாகக் கொள்ளாது உணர்ச்சிகளைப் பண்படுத்தும் நோக்கமாக, நாளிகேரம் - தேங்காய், சில கவிதைகள் திராட்சைப்பழம் போன்றவை, நாவிலே போட்டவுடன் இனிமை தரும். வேறு சில கரும்பு போன்றவை, சிறிது முயற்சியினால் இனிமை உண்டாகும், வேறு சில தேங்காய் போன்றவை, உரித்து உடைத்துத் துருவிச் சுவைப்பவை.

ஆர் சொல்லுவார்?

கி. வா. ஜகந்நாதன்

ஒரு பையன் நன்றாகப் படித்துப் பட்டம் பெற்றான். உத்தியோகம் பெறவேண்டும். இந்தக் காலத்தில் எத்தனைதான் நன்றாகப் படித்தாலும் உத்தியோகம் எளிதிற் கிடைப்பதில்லையே! அவனுடைய தந்தை ஏழை. நாலு பேருக்குத் தெரியும் வகையில் அவர் வாழவில்லை. அவருக்குப் பெரிய மனிதர் யாரையும் தெரியாது.

அந்தப் பையனுடன் படித்துப் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற இளைஞர்கள் சிலர் இருந்தார்கள். அவர்களும் உத்தியோகம் பெறும் முயற்சியில் ஈடுபட்டார்கள். ஆனால் அவர்களுடைய தந்தையாருக்குப் பல பெரிய பேர்வழிகளைத் தெரியும்.

ஒருவனுடைய மாமன் ஒரு பெரிய காரியாலயத்தின் தலைவருக்குக் காரியதரிசி. அந்தப் பையனுக்கு அவர்மூலம் வேலை கிடைத்துவிடும். அந்த மாமா அவனுக்காகத் தலைவரிடம் ஒரு வார்த்தை சொன்னாற் போதும்; உடனே வேலை கிடைத்துவிடும்.

மற்றொரு பையனுடைய தகப்பனார் ஒரு பெரிய மனிதர் வீட்டில் 'டியூஷன்' சொல்லித் தருகிறார். அந்தப் பெரிய மனிதர் மனசு வைத்தால் உடனே வேலை கிடைத்துவிடும்.

இப்படி ஒவ்வொரு பையனுக்கும் ஒவ்வொருத்தர் யாரிடமாவது சொல்லி வேலை வாங்கிக் கொடுக்கும் நிலையில் இருந்தனர். இந்த ஏழைப் பையனுக்குச் சொல்பவர் யாரும் இல்லை. அவன் தன் நிலையை நினைத்து ஏங்குவது இயல்புதானே?

"முருகனுக்கு அவனுடைய மாமா சிபார்சு செய்வார். வேலனுக்கு அவன் தகப்பனாரே யாரிடமாவது சொல்லி வேலை வாங்கித் தருவார். சிவராசாவுக்கு அவனுடைய சிற்றப்பா நினைத்தால் வேலை கிடைத்துவிடும். எனக்கு ஆர் சொல்லுவார்கள்?" என்று அவன் மறுகிக்கொண்டே இருந்தான்.

இதேபோல வேறு ஒரு காட்சி: மதுரையில் உள்ள சொக்கநாதரிடம் சென்று பலர் மனுப்போடுகிறார்கள். நேரே பார்த்துப் பேசும்படி உத்தரவு வருகிறது. அவருடைய அருளைப் பெறவேண்டுமென்று ஆசைப்பட்டுப் பலர் அவரை அணுகுகிறார்கள். கணக்கில்லாத பேர்கள் கூட்டம் கூட்டமாக மதுரைப் பெருமான் திருமுன் வரிசையாக நிற்கிறார்கள். அவருடைய கவனத்தைத் தம்பால் ஈர்க்க வேண்டுமென்று அங்கே வந்திருக்கும் அத்தனை பேரும் நினைக்கிறார்கள். "நான் இத்தகையவன். தேவரீருடைய திருவருளுக்காக ஏங்கிக் கிடக்கிறேன்" என்று தாமே சொல்லிக் கொள்வதைவிட யாரேனும் சொக்கநாதருக்கு வேண்டியவர் இருந்து, "இவன் நம்மைச் சார்ந்தவன். முன்பு இன்ன உபகாரம் செய்திருக்கிறான். இப்படியெல்லாம் கஷ்டப்பட்டிருக்கிறான்" என்று எடுத்துச் சொன்னால் எவ்வளவு நன்றாக இருக்கும்? நல்லவேளை! அங்கே வந்திருக்கும் கூட்டத்தினரிற் பெரும்பாலோருக்குச் சொக்கநாதரிடம் சொல்லி அறிமுகப் படுத்தும் துணை இருக்கிறது.

இந்திரனும் வேறு சில தேவர்களும் வந்தார்கள்; சொக்கநாதரை வணங்கினார்கள். அப் பெருமான் அவர்கள்மேல் திருவிழியை ஓட்டிப் புன்முறுவல் பூத்தார். தாம் அணிந்திருந்த என்புமாலையை அவர் பார்த்தார். அந்த என்பு மாலைகள் அவரிடம் இரகசியமாகச் சொல்லி அவர்களை அறிமுகப்படுத்தின. "இதோ பாருங்கள். முன்பு இவர்களிடம் இருந்தவர்களல்லவா நாங்கள்? தம்மை அழித்துக்கொண்டு தம் என்பைத் தேவரீருக்குக் காணிக்கையாக்கினவர்கள் இவர்கள்" என்று பேசாமற் பேசின. சொக்கநாதர் அதைக்கேட்டுப் புன்முறுவலோடு இந்திராதி தேவர்களின்மேல் தம்முடைய குளிர்ந்த திருக்கண் பார்வையை வீசினார். அது போதாதா அவர்களுக்கு?

இந்திரனைவிடப் பெரிய பதவியிலிருப்பவன் பிரமன். அவன் துணிந்து முதலில் வந்து பணிய

வில்லை. தேவர்கள் வழிபட்டு அருள்பெற்றதை அறிந்தபிறகு வந்தான்; சொக்கேசரைப் பணிந்தான். அவனுக்கும் 'சிபார்சு' கிடைத்தது. இறைவர் திருக்கரத்தில் உள்ள கபாலம், "நான் பிரமனுடைய கபாலம் அல்லவா?" என்று நினைப்பூட்டியது. சொக்கநாதர் முறுவலுடன் பிரமனுக்கும் அருட்பார்வை வழங்கினர்.

அடுத்தபடி திருமகள் கேள்வன் மெல்ல மெல்ல வந்தான். மண்ணை உண்ட மாயனாகிய அவனுக்குச் சொக்கநாதரிடம் மிக்க அன்பு. ஆனாலும் வாய்விட்டு இது வேண்டும் என்று கேட்காத மானம் உள்ளவன். அவன் வந்து பணிந்தான். எந்தக் காலில் விழுந்தானோ அங்கே அவன் முன்பே சமர்ப்பித்த விழி இருக்கின்றது. அது, "சுவாமி, ஆயிரம் மலர்களால் தேவரீரை அர்ச்சிக்கப்புகுந்து ஒரு மலர் குறைந்தபோது ஒன்றையும் எண்ணுமல் தன் கண்மலரையே பறித்து அணிந்தவனல்லவா இவன்? இவன் செய்த காரியத்தை வேறு யார் செய்ய முடியும்? இவனுக்குத் தேவரீர் அருள் செய்யவேண்டும்" என்று பரிந்து பரிந்து பேசியது.

சொக்கேசருக்கு இது தெரியாதா? கமல நயனம் படைத்த திருமாலுக்குத் தம் அருட் பார்வையை நல்கினர்.

இந்தக் காட்சிகளை உள்ளக் கண்ணாற் கண்டார் ஒரு பக்தர். அவர் மிக நன்றாகத் தமிழ் பாடும் புலவராகவும் இருந்தார். 'நாமும் பணிந்தால் சொக்கேசர் அருளைப் பெறலாமே!' என்ற நினைவு அவருக்குத் தோன்றிற்று. அடுத்தபடி, வானவர் பணிந்தால் அவர்களுடைய எலும்பு அவர்களுடைய சார்பில் நின்று இறைவரிடம் எடுத்துச்சொல்லும். பிரமன் வணங்கினால் அவனுடைய கபாலம் சொல்லும். பூமியை உண்ட மாயன் பணிந்தால் அவன் கண் பரிந்து பரிந்து உரைக்கும். எந்த விதமான தகுதியும் உறவும் இல்லாத இந்த ஏழை பணிந்தால் சொக்க நாயகருக்கு என்னைப்பற்றி ஆர் சொல்லுவார்!" என்ற ஏக்கம் தலைப்பட்டது. அந்த ஏக்கம் பாட்டாக உருவெடுத்தது,

வான்பணிந் தால்அதன் என்பே
உரைக்கும்; மலரில்அயன்
தான்பணிந் தால்அவன் தன்தலை
யேசொலும்; தாரணிஉண்
பான்பணிந் தால்அவன் கண்ணே
பரிந்து பரிந்துரைக்கும்;
நான்பணிந் தால்எனக்கு ஆர்சொல்லு
வார்சொக்க நாயகர்க்கே?

[வான் - தேவருலகம்; இங்கே தேவர்களைக் குறித்தது. அயன் - பிரமன்; தாரணி உண்டவன் - திருமால்.]

* * *

இந்தப் பாட்டைப் பாடியவர் பலபட்டடைச் சொக்கநாதப் புலவர். பாட்டில் பக்திச்சுவை சொட்டுகிறது. சிவபிரானுடைய பெருமையும் புலவருடைய மனநெகிழ்ச்சியும் ஒருங்கே வெளிப்படும் பாட்டு இது.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்'

★

தமிழ் நாட்டின் தனித்த பண்பு சமயச் சண்டையில் ஈடுபடாது பல்வேறு சமயங்களையும் உவப்புடன் ஒப்பக் கருதும் பண்பாடு ஆகும். இது தமிழர்களுக்கு இயற்கையிலேயே உண்டு. எனினும் இடையிற் பல சந்தர்ப்பங்களிற் சமய வெறியும் பூசல்களும் எழுந்தன. ஆனால், மறுபடியும் இன்று பிற சமய வெறுப்பின்றிச் சமயம் வளர்க்கப் பெறுகிறது. சமயத்துறையில் வெறுப்பும் காழ்ப்புங் கொள்ளாது பல்வேறு சமயங்களையும் ஒப்பக் கருதும் இன்றைய மறுமலர்ச்சி காலத்திற் கேற்ற மறுமலர்ச்சி; தேவையான மறுமலர்ச்சியுமாகும்.

சமயத்தின் பேராற் சாதிகள் பிறப்பிக்கப் பெற்றது உண்டு; இன்று சாதிகள் தகர்த்தெறியப் பெற்றுவருகின்றன. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற பண்டைத் தமிழனின் குரல் மீண்டும் தமிழகத்தில் ஒலிக்கிறது. வாழ்க்கையிலும் கைக்கொள்ளப் பெறுகிறது. தமிழினம் ஓர் குலமாக ஒன்றுபட, சமயத்துறையில் ஏற்பட்டுள்ள இந்த மறுமலர்ச்சி வேண்டத்தக்கது; விரும்பத் தக்கது.

—குன்றக்குடி அடிகளார்

கொம்பு விளையாட்டு

★ ★ ★ ★ ★

பண்டித வி. சீ. கந்தையா

கிழக்கிலங்கையிற் பரந்துகிடக்கும் பழமையான தமிழகம் மட்டக்களப்பு. மிகப் பழங்காலத் தொடர்பினவாக இங்கு வழங்கும் கலைச் செல்வங்கள் பலவற்றுள், தெய்வ வழிபாடு கலந்த கலையாடலாகிய கொம்பு விளையாட்டும் ஒன்றாகும். 'கொம்பு' என்ற சொல் விலங்குகளின் கொம்புகளைப் பற்றிய எண்ணத்தையே பொதுவாக நமக்கு ஊட்டுவது; ஆயினும் இங்கு குறிப்பிடும் கொம்பு என்பது மரத்தாலான வளைந்த அமைவுடைய தொன்றென்பதைப் பயின்றோர் உடனே அறிந்துகொள்ளுதல் கூடும்.

வழிபாட்டு விழா

செங்கோல் தவறிக் கோவலனைக் கொலை செய்த பாண்டியன்மீது பழிவாங்கி, மதுரையினை எரியூட்டிய பின்னரும் கோபந் தணியாளாய் வந்த கண்ணகிதேவியின் முன்னிலையில் இடையர் குலத்திளைஞர் ஒரு காதல் கலந்த வழிபாட்டு விழாவாகக் கொம்பு விளையாடி அவளைக் குளிர்வித்தனர் என்றும், அதன் தொடர்பினதாக எழுந்ததே இன்று மட்டக்களப்பில் வழங்கும் கொம்புவிளையாட்டென்றும் கூறப்படுகிறது. கோவலன் கட்சியாரும் கண்ணகி கட்சியாருமாக மக்கள் பிரிந்துநின்று இரண்டு வேறு வளைந்த தடிகளை ஒன்றோடொன்று கொழுவி இழுத்துக், கோவலனதை முரித்துக், கண்ணகிக்கு வெற்றிகாட்டி, மகிழ்வித்தபோது அந்தப் பத்தினித் தெய்வஞ் சினந்தணிந்து ஆறி இடைச்சேரியை மேலும் வாழ்த்திச் சென்றனள் என்றும், மழைவளம் குன்றிப் பொலிவிழந்த மதுரைநகர் மீண்டும் செழித்தற்காகச் செய்த பொலிவிழாவிலும் அங்குள்ளார் கொம்பு விளையாடிக் கண்ணகி யம்மனுக்குக் குளுத்திசெய்து வரம்பெற்றனர் என்றும் மேலும் வரலாறு கேட்கப்படுகின்றது.

மட்டக்களப்பு நாட்டிலே மழைவளம் குன்றிப் பசியும் பிணியும் மிகுந்து மக்கள் கொடிய வெயிலினால் நலிந்து அல்லற்படுங்காலைக் கண்ணகி தேவியினை நினைந்துகொள்ளுதலும், அத்தகைய கொடிய வெப்பநிலைக்குக் காரணம் அந்த வீரபத்தினியின் சீற்ற மிகுதியே யென்று அதற்குச் சாந்திசெய்ய முனைதலும் இன்றும் உள்ள வழக்காகும். அவ்வாறான சாந்தி நிலையைக் கண்ணகிக்கு ஊட்டுமுகத்தான் ஊர் முழுவதற்குமே மகிழ்வு கூட்டும் கலையாடலாக உள்ளது இக் கொம்புவிளையாட்டு. இவ் விளையாடல் நடந்தால் உடனே நாடு குளிர மழை பொழிந்து இன்னலெல்லாம் நீங்கப் பெறுதல் வியக்கத்தக்க ஒன்றாக இன்னமும் நடப்பதைக் காணலாகும்.

இரண்டு கட்சி

கொம்பு விளையாட்டுத் தொடங்கியதும் ஊர் முழுவதும் இரண்டு கட்சியாகிவிடுதல் உண்டு. ஒன்று கண்ணகிக்கும் மற்றையது கோவலனுக்குமான அக் கட்சிகள் முறையே தென்சேரி, வடசேரி என்ற பெயராற் குறிப்பிடப்படுவன. 'கட்சி' என்பது சொல் வழக்கில் 'வாரம்' ஆகும். பண்டுதொட்டே மருமக்கட்தாய வழக்குடைய ராதலால் தாய்வழிகொண்டே குடிப்பெயர் முதலியவற்றுக்கு இந்நாட்டு மக்கள் கருதப்பெறுவாராயினும் கொம்பு விளையாட்டுச் சேரி வாரத்தில் மட்டும் அவர் தந்தை வழியைச் சார்ந்து நிற்றல் நோக்கத்தக்கது. இங்கு வாழுந் தமிழ்மக்கள் மருமக்கட் தாயம் நடக்கும் பண்டைச் சேரநாட்டின் தொடர்பினராதல் கூடுமென்றும், தந்தைவழிச் செல்லும் பாண்டியரது மதுரையினின்றும் வந்த தொடர்பினராதலாற் கொம்புவிளையாட்டில் அந்நாட்டு மரபினை ஒட்டிய பிரிப்பு இடம்பெற்றுள்ளதென்றும் கொள்ளுதற்கு இந்நிலை இடந்தருகின்றது. சாதாரண காலங்களில் பொருள் எதுவும் அற்றதாகத் தெரியும் இவ்வாரப் பகுப்பானது கொம்பு விளையாட்டுக் காலங்களில் உயர்ந்த பொருள் கொண்ட உணர்ச்சிப் பகுப்பாக விளங்கக் காணலாம். குலம், குடி அனைத்தையும் மறந்து அந்தந்தச் சேரியார் ஒன்றுபட்டு நின்று விளையாட்டின் வெற்றி தோல்விகளை உணர்ச்சியுடன்

அநுபவிப்பர். கணவனும், மனைவியும் முறையே இரு வேறு வாரங்களையும் சேர்ந்தவர்களாய் இருக்க நேர்ந்தால் கொம்பு விளையாடலின் வெற்றி தோல்விகளது எதிரொலியினை வீடு தோறும் நடக்கும் பெருத்த சண்டைகளாக நாம் காணக்கூடிய உச்சநிலையினை இவ்வாடல் அடைதல் பெருவழக்கு.

போர்த் தேங்காய் அடித்தல்

வடசேரியாரது கொம்பு பெரும்பாலும் தொண்ணூறு பாகைக்குக் குறையாத வளை வுடையதாகவும், தென்சேரியாரது கொம்பு தொண்ணூறு பாகைக்குமேற்படாதவளைவுடைய தாகவும், இருக்கவேண்டியது பொதுவிதி. இயல்பாயமைந்த வளைதடியான இத்தகைய கொம்புகளை நாம் எல்லா மரங்களிலும் காணலா மாயினும் 'கரையாக்கு' என்னும் ஒருவகை மரத்திலிருந்து மட்டுமே கொம்புகளை இதற்கு எடுப்பது மரபாகும். 'கருவீரம்' என்று இலக் கியங்களிற் பெயர்பெறும் இம் மரத்தினை 'வெட்சி' என்ற பெயராலும் கருதுவர்.

கொம்பு விளையாட்டுத் தொடங்குதல் வேண்டுமென்று ஊர் கூடித் தீர்மானம் செய்த பின்னர், பொதுமன்றிலே ஓரிரவு போர்த்தேங் காய் அடித்தலைக் கொம்பு முரித்தலின் முதல் விழாவாக நடத்துதல் மட்டக்களப்பு வழக்கு. எதிரெதிராக இருக்கும் இரு வாரத்தாரதும் பிரதிநிதிகளிருவர் தம் கைகளிற் கொண்டுள்ள வலிவுடையதான சிறிய போர்த்தேங்காயினை லடித்து மற்றவரது தேங்காய்களை ஒவ்வொன் றாய் உடைப்பர். அதில் ஒரு பகுதியாரால் உடைக்கப்பட்ட தேங்காய்களின் கூடிய எண் ணிக்கை கொண்டு கட்சிக்குரிய வெற்றி தீர் மானிக்கப்படும். அது முடிந்தவுடனே கொம்பு விளையாட்டின் முதற் குறியாக ஒரு கொம்பை முறித்து அவ்விழாவினைத் தொடங்கி வைத்தல் வழக்கம். முதல் முதல் அடிக்கும் தேங்காயி லும், போர்த்தேங்காயடித்து முடிவில் முறிக் கும் முதற்கொம்பிலும் அம்மனின் வாரத்துக்கே (தென்சேரிக்கே) வெற்றி கொடுத்தல் மரபு.

கொம்புகளின் விளக்கம்

மறுநாளி லிருந்து கொம்பு முரித்தல் தொடங்கும். இருவாரத்தாரது கொம்புகளின் வளைவிலுமுள்ள 'குச்சு'களுக்கு அண்மிய இடத்தின் சுற்றளவால் ஒத்த கொம்புகளே போட்டிக்குத் தெரிந்தெடுக்கப்படுவன. அவை முறுக்கிய புரிகளால் வரிந்து, பனிச்சங்காய்ப் பசையூட்டிக் காயவைக்கப்படும். அவ்வாறன கொம்பினை நடுவில் வைத்துப், பசையூட்டிய புரியால் வரிந்து கட்டிக் காயவைக்கப்பட்ட இரு கம்புகளோடும், குச்சுக்குப்பக்கமாக அணைத்துக் கட்டுதல் வேண்டும். கொம்புக்கு அணைவாகக் கட்டப்படும் அக்கம்புகள் 'பில்லி' என்றழைக் கப்படுவ. பில்லி கட்டப்பெற்ற கொம்பே விளை யாட்டுக்குத் தகுதியான நிறைந்த நிலையை அடைந்ததாகும். ஒரு மரத்திற் பூட்டிய 'அரிப்பு' (சிறு வடம்) என்னும் கயிற்றில் தென்சேரியா ரது கொம்பு தொடுக்கப்படும். அக்கொம் பிலே வடசேரிக் கொம்பைக் கொழுவி, அதி லும் ஓர் அரிப்பினைப் பிணைத்து, அவ்வரிப்பிலே பெரிய வடத்தினை எதிர்ப்பக்கமாகத் தொடுப் பர். அவ்வடத்தைப் பிடித்துப் பலர் இழுக் கும்போது இருசேரியையும் சேர்ந்த திறமை யாளர் சிலர் தத்தம் கொம்புகளிற் பல்வாய் (கொம்பின் அடிப்பகுதி), முதுகுமரம் (தலைப்புப் பகுதி) கொம்பிழக்கும்போது ஒருவரது முதுகி னூலேயே இப்பகுதி தள்ளிக்கொடுக்கப்படுவ தால் இப்பெயர் பெற்றது.), குச்சு (வளைந்த இடத்து நடு ஆணி), 'பில்லி' என்னும் உறுப்புக ளனைத்தையும் முறைப்படி பிடித்துக்கொள் வர். பலரது இழுவைப் பொறுப்பினாலும் நெருங்கி இரண்டில் ஒரு கொம்பு முரியும். உடனே மற்றப்பகுதியார் தமது வாத்தின் பெயரைச் சொல்லி அதன்கொம்புக்கு வெற்றி என்று கூவி, ஆடிப்பாடிச் செல்வர். இந்த வெற்றிக் களியாட்டத்தின் அளவு முரிக்கப் படும் கொம்பின் தரத்தைப் பொறுத்ததாகும். கொழுக்கொம்பு, கொம்புத் தட்டுக்கொம்பு, கூடாரக் கொம்பு, ஏடகக் கொம்பு, தண்ணீர்க் கொம்பு என்ற கொம்புவகை ஐந்திலும் முறையே 1, 3, 5, 7, 1, ஆகப் பதினேழு இணைக் கொம்புகள் பூட்டி இழுக்கப்படுதல் கொம்பு விளையாட்டில் ஒரு கணக்காகும். இவற்றில் கொழுக் கொம்பு போர்த்தேங்கா யடித்தலைத் தொடர்ந்து தென்சேரிக்கு வெற்றியளிப்பதற் காக முதலில் முரிக்கப்படுவது. தண்ணீர்க் கொம்பு என்பதும் அவ்வாறே விழா இறுதி யில் முறிக்கப்படுவது. விழா முதல் நாளி லிருந்து கொம்புத் தட்டுக்கொம்பு, கூடாரக் கொம்பு என்ற இருவகைக் கொம்புகளும் முரிக்கும்போது மக்களின் கட்சிப்பற்றும், வெற்றி விழா நிகழ்ச்சி அமைப்புகளும் நிலையில் வளர்ந்துகொண்டே போகும்.

அக்காலில், கொம்பு முரித்த பின்னர் இரு கட்சியாருக்கும் பொதுவாயிருக்கும் பூம்பந்தர் (கொம்புத்தட்டு) மீது நன்கு அலங்கரிக்கப் பட்ட அம்மன் சிலையையும் அன்று வென்ற கொம்பையும் வைத்து ஊர்வலம் செய்தல் முறை. அவ்வேளையில் வெற்றிப்பாடல்களன்றிப் பொதுவான கண்ணகி குளுத்தி பற்றிய வர லாற்றுப் பாடல்களும், உடுகுச் சிந்து, அம்மன் காவியம் என்பனவும் படிக்கப்படும். ஊரின் நடுச்சந்தியில் தட்டை வைத்துவிட்டு, அங்கு வசந்தன் கூத்தாடி, அம்மன்புகழ் பாடுதலும் வழக்கு.

' ஏடகக் கொம்பு '

இவற்றின் பின்னர் இடம் பெறும் ' ஏடகக் கொம்பு ' எல்லாராலும் பயபக்தியான ஒன் றுகக் கருதப்படுவது. மற்றைய கொம்புகளை விட இரண்டு மடங்குக்குக் குறையாத பரும னுடைய ஏடகக் கொம்புகளை முறித்தற்கு ஊர்கூடி வடமிழுக்க வேண்டியிருக்கும். இந் நிலைக்கு முன்னர் இருசேரியாரும் தத்தம் கொம்புகளை வைத்துப் பூசை பண்ணுதற்காக இருவேறு தேர் கட்டுவர். அத்தேர்களை வைக் கும் கூடம் ' தேர்ப்புரை' எனப்படும். ஏடகக் கொம்புகளை வைத்துப் பூசை செய்யும் தேரும் ' ஏடகம் ' என்றே குறிக்கப்படுவது. வடசேரியா ருடைய தேர்ப்புரை, ஏடகம் என்பவற் றின் முடிகள் தென்சேரியாரதிலும் பார்க்கச் சற்று உயர்ந்திருக்கவேண்டியது இலக்கணம். தமது தேர்ப்புரைகளுள் வைத்து மற்றைச் சேரியாருடையதிலும் அழகு மிக்கு விளங்குதல் வேண்டும் என்ற நோக்குடன் தனித்தனி தம் ஏடகங்களை இருகட்சியாரும் சோடனை செய்வ தியற்கை.

பூசனைக்குப் பின்னர்

பூசனைக்குப் பின்னர் ஏடக மரங்களை (ஏடகக் கொம்பின் பருமன் காரணமாக அவை இவ்வாறு மரங்கள் என்று சொல்லப்படுவ துண்டு) ' எழுந்தருளப் பண்ணிக்கொண்டு ' போய் வடத்திற் பூட்டி இழுத்தல் வழக்கு. தம் சேரிக்கொம்பு வென்றுவிட்டால், அக்காலத் தில் ஒரு சேரியார் கொள்ளும் மகிழ்ச்சியின் எல்லையைக் கூறவே முடியாது. வென்றேரை மறுநாள் தாம் வெல்லுதல் வேண்டுமென்று வேறு கொம்பெடுத்து அதற்கு மந்திரம் சொல்லி வலுவூட்டுதல் முதலியவற்றிலே தோற்ற கட்சி யார் சென்றுவிட, வென்ற பகுதியினர் அன்று இராமுழுமையும் நாட்டுக் கூத்துகளும், வசந்த னாட்டங்களும், வசைப்பாடற் போட்டிகளு மாகப் பல களி நிகழ்ச்சிகளை நடத்துவார்கள். பெண்களும், பிள்ளைகளும்கூட உணர்ச்சியினுற் தம்மிலை மறந்து வெற்றி விழாவில் ஈடுபடுத லுண்டு. வேடர், குறவர், போர்வீரர், முடி மன்னர், முனிவர், ஆண்டிகள் என்பன முத லாகப் பலகோலம் புனைந்து மக்கள் ஆடல் புரிவர். அக்காலை கொம்புவிளையாட்டுப் பாடல் கள் பல போட்டிபோலப் படிக்கப்படும் :

1. ' கோலப் பணிச்சேலை கொய்துடுத்துக்
கொம்பு விளாட்டுக்குப் போகையிலே
வேலப்பர் வந்து மடிபிடித்து
மெத்தவும் சிக்கிக்கொண் டார்தோழி ''

2. '' காப்பணி மங்கையர் மன்மதவேள்
கந்தன் குமரன் அருள்வேலன்
சீப்புடன் மல்லிகைப் பூமாலைதந்து
சேர்வமென் ருரடி மானரே ''

வேறு

3. '' தோழி ஒருவசனம் – சற்றே
சொல்கிறேன் கேளடி நற்ருழி
வாளிதந் தென்னையு – மேயிங்கு
வரச்சொன் னுரடி மானரே ''

4. '' மலைக் குறத்திக்கு மையல் கொண்டு
மணிபவளம் வலையல் விற்றுத்
தினைப்பு னத்தினில் கண்டவுடன் – வேலர்
வேங்கை மரமானர் தோழியரே. ''

என்பன முதலிய பாட்டுகள், வெற்றி யாடு வோர், குறவள்ளியும், தோளியருமாகக் கோலம் புனைந்து தம்முட் படித்தாடும் கொம்புவிளை யாட்டுப் பாடல்களாம்.

1. '' ஆற்ருேரம் போறமயில் – அது
ஆண்மயிலோ பெண்மயிலோ
பார்த்துவாடா வடசேரியான் – உனக்குப்
பாவற்பழம்போல மாலைதாறேன். ''

2. '' ஆற்ருேரம் சிரும்பிகட்டி
அங்கேநின்று வடமிழுத்து
வேர்த்துவாருன் தென்சேரியான் – அவனை
வெள்ளிமடல் கொண்டு வீசுங்கடி ''

3. '' ஆற்ருேரம் சிரும்பிகட்டி
அங்கேநின்று படைபொருது
தோற்றுவாருன் தென்சேரியான்
துடைப்பங்கட்டா லடியுங்கடி ''

4. " வடசேரியான் கொம்பு எங்கேஎங்கே
மணமுள்ள தாழையின் மேலேமேலே
தென்சேரியான் கொம்பு எங்கேஎங்கே
செம்பரப் பற்றைக்குக் கீழேகீழே "

5. " வடசேரியான் கொம்பு எங்கேஎங்கே
வண்ணுண்ட சாடிக்கு உள்ளேஉள்ளே
தென்சேரியான் கொம்பு எங்கேஎங்கே
சித்திரத் தேருக்கு மேலேமேலே "

இவ்வகையினியல்வன, ஒரு சேரியாரை இன்னொரு சேரியார் பழித்துப்பாடும் வசை பாடல்கள். முதல்மூன்று பாட்டுகளிலும் உள்ள தென்சேரியான், வடசேரியான் என்ற சொற்கள் பாடுவாரது சேரிக்கேற்ப மாற்றியமைக்கப் படுவன.

" பால்போல் நிலவெறிக்கப்
படலைதிறந்தவ னுர்தோழி
நான்தாண்டி வடசேரியான் – உனக்கு
நாழிப்பணம் கொண்டுலாவுறண்டி "

என்பது முதலாக வழங்கும் இவ்வித வசைப் பாடல்களை, இசையும் தாளமுமறுத்து மக்கள் தம்முட் பாடக் கேட்கும்போது, உணர்ச்சி வசப் பட்டு, அவற்றின் சுவைமீது எவரும் மயங்கி நிற்பதியல்பாகும்.

1. " மலையோரம் வேட்டைக்குப்போய்
மானடி பார்த்து வருகையிலே
கலையோ கலைமானே – அங்குக்
காடேறி மேய்ந்ததோர் பெண்மானே "

2. " புல்லாந்திப் பற்றைக்குள்ளே
புலிகிடந்து உறுமுகுது
ஒக்கமிதிப்பாய் புல்லாந்தி – அதை
ஒருகுத்தாய்க் குத்தாய் புல்லாந்தி "

என்பது முதலான பாடல்கள் வேட்டுவ வேடம் புனைந்தாடுவோர் தம்முட் பாடுவன. 2ஆம் பாடலில், இரண்டாவது அடியில் வந்துள்ள 'புல்லாந்தி' என்ற சொல் ஒரு வேடனின் பெயரைக் குறிப்பது.

" தண்ணீர்க் கொம்பு "

இவ்வாறு இயலும் ஏடகக் கொம்புகளின் முரிப்புக்குக் குறிப்பிட்ட காலக் கடைசி நாளன்று தண்ணீர்க் கொம்பு ஒன்று முரிக்கப் படுவது வழக்கம். விளையாட்டுப் போட்டியினல் பெரும்பகை கொண்டு போராடி நின்ற மக்களும் தண்ணீர்க் கொம்பு என்றவுடன் ஒன்றுபட்டு விடுவதியல்பு. அது தென்சேரிக்கு (கண்ணகை யம்மனுக்கு) வெற்றியாக முரிக்கப்பட்டதும் இரு சேரித் தேர்களுமாக ஊர்வலத்துக்குப் புறப்படும். வடசேரித்தேர் செல்லவேண்டிய தெரு இது என்றும், தென்சேரித் தேர் செல்ல வேண்டிய தெரு இது என்றும் பண்டு தொட்டே குறிக்கப்பட்டுள்ள வழியாகத் தேர் வீதிதோறும் இழுக்கப்பட்டுக் குறித்த பொது இடமொன்றிற் சந்திக்கும். அப்பால், இரு தேர்களும் ஒருமித்துத் தம்புரைகளை நோக்கி மீளுதலியற்கை. தேர் ஊர்வலம் நடக்கும் காலத்தில் மக்கள் தம்முடைய கட்சிப்பற்றினை மறந்து தென்சேரித் தெய்வமான கண்ணகை யம்மனை வழிதோறும் வாழ்த்தி நிற்பர். ஊர் வலம் முடிந்த மறுநாள் குளுத்தியாடல் நடை பெறுவதும், அக்குளுத்தியின் போது கண்ணகை யம்மன் குளுத்திப்பாடல்கள் படிக்கப் பெறுதலும் வழக்காறு.

" ஒருமா பத்தினி வந்தாள் – உல
கேழுந் தழைத்திட வந்தாள் வந்தாள் " – 58

" கொற்றவன் செல்வ மழித்த கோபம்
கோல மழகிய மாதேயானுய் " – 78

" மாதவிக்குப் பொன்தோற்று வாழ்வணிகர்
தம்முடனே
காதலித்துப் பின்போன கன்னி குளுந்தருள்
வாய் " – 93

" தென்னம் பழஞ்சொரியத் தேமாங் கனியுதிர
வன்னி வழிநடந்த மாதே குளுந்தருள்
வாய் " – 98

" எச்சேரி வெந்தாலும் இடைச்சேரி வேகாமல்
உன்முலை குளுந்தாற்போல் நீயும் குளுந்
[தருள்வாய் " – 121

என்பனவாக இருவர் நின்று அடிதோறும் மாறி மாறி இசை எழப் படிக்கும் இப்பாடல் களே வைகாசி மாதப் பூரணை காலத்தில் நடக்கும் அம்மன் சடங்குக் குளுத்தியிலும் படிக்கப்படுவனவாகும். குளுத்தியும் வாழியும் பாடி முடிதலோடு கொம்பு விளையாட்டும் நிறை வுற்று, மக்களின் வேண்டுதல்களும் நிறை விக்கப் பெற்று வருதல் இயல்பாயுள்ளது.

களி பொங்குங் காலம்

பரந்துபட்ட இவ்வாடல் மட்டக்களப்பின் பல கிராமங்களிலும் முன்பு நடைபெற்று வந்த

தெனினும் இன்று அங்கீலை மாறி மண்டூர், தம்பிலுவில், காரைதீவு, வந்தாறுமூலை போன்ற ஒரு சில ஊர்களில் மட்டுமே காணப்படுவதா யுள்ளது. கொம்பு விளையாட்டு நடைபெற்ற சிறப்பினல் களுதாவளை என்னும் ஊரில் 'கொம்புச் சந்தி' என்றேரர் இடமும் பெயர் பெற்றுள்ளது. தம்பிலுவிலுள்ள கண்ணகி ஆலய முன்றலில் இவ்வாடல் நடந்த பழைய இடமும், மண்டூரில் இதுபற்றி உள்ள இட மும் 'கொம்பு வம்மியடி' என்று குறிப்பிடப் படுதலை அறியலாம். இவ்விளையாட்டிற் பெரி தும் சுவை பெற்ற சிலரும் 'சேரியார்' என்று அங்கங்கே குறிப்பிடப்படுகின்றார்கள். இவ்வா ருன கொம்பு விளையாடல் நடைபெறும் காலம் மக்கள் பயபக்தியாக வாழும் நாட்களைக் கொண்டது. வீதிதோறும் மங்கல முழக்குகளும், இரவெல்லாம் நிறைந்த தெரு விளக் குகளும் கொண்டு ஊரை அணி செய் யுங் காலம். மக்கள் உள்ளமும் 'வார' உணர்ச்சியினல் நிறைந்து கவலைகளெல்லாம் மறந்து களிபொங்கும் அக்காலத்தில் கொம்பு விளையாடல் பற்றிய உணர்ச்சிக் கவிதைகள் எல்லார் வாயிலிருந்தும் கேட்கப்படும். வாய்ப் பாட்டு உணர்ச்சியினற் புதுக் கவிகள் பல்லோர் வாயிலிருந்தும் பிறக்கும். அதனற் பல கவிப் புலவர்களையும் ஆக்கியளிக்கும் சிறப்புடைய இக்கொம்பு விளையாட்டுக் காலத்தை நினைந் தாலே மட்டக்களப்பின் கிராமப்புற மக்கள் மகிழ்பூத்து உணர்ச்சியாற் தூண்டப்பட்டு எழு வதை இன்னமும் காணலாகும்.

மட்டக்களப்பின் இயற்கை வனப்பு

★

மட்டக்களப்பிலே 30 மைல் நீண்ட வாவி ஒன்றுள்ளது. இது கடலோடு கலக்கும் வடகோடி அமிர்தகழி என்னும் புண்ணியப் பழம்பதிக்கு அணிமையானது. அழகிய தெற்குக் கோடிக்கு அணிமை யாக மேற்குக் கரையிலே மண்டூர் என்னும் புண்ணியப் பழம்பதி உளது. வாவியின் மேற்குக் கரை முழுவதும் மருதத் தண்பணையாகும். கிழக்குக் கரையில் உள்ள ஊர்கள் தெங்கு, மா, பலா முதலிய மரங்கள் செறிந்து கண்ணுக்கும் மனதுக்கும் உவகை தருவன. புலியன் என்னும் வேடர் குலத் தலைவன் அரசுபுரிந்த விடமாதலின் முன்னளிலே 'புலியன் தீவு' என வழங்கப்பெற்றதும், இந்நாளிலே மொழிச் சிதைவினலே 'புளியந்தீவு' என வழங்கப்படுவதும், மூன்று மைல் சுற்றள வுடையதுமான அழகிய நகரம் ஒன்று காவிரி நடுவண் அமைந்த திருவரங்கம் போல மட்டக்களப்பு வாவியின் நடுவண் அமைந்துள்ளது. இந்நகர் மட்டக்களப்புப் பிரிவிற்குத் தலைநகரமாகும்.

— விபுலானந்த அடிகளார்



கொக்கட்டிச்சோலைத் தான்றோன்றீசுவரர் கோவில்

மட்டக்களப்பிலுள்ள ஒரேயொரு சிவாலயம் கொக்கட்டிச்சோலைத் தான்றோன்றீசுவரர் ஆலயமேயாகும். இங்கு அற்புதமான சித்திர வேலைப்பாடுகள் அமைந்த இரு தேர்கள் உள்ளன. தேர்த் திருவிழாவின்போது பக்தகோடிகள் இங்கு திரண்டு செல்வார்கள்.



பொலநறுவாவிலுள்ள இரண்டாம் சிவாலயம்

இலங்கையிற் சோழர் காலத்துச் சிற்ப வேலைப்பாடுகளுடன் இன்றும் நின்று நிலவும் சிவாலயங்களுள் இதுவும் ஒன்று. இது இலங்கையி லுள்ள மிகப் பழைய சோழர் காலத்துக் கட்டடமாகும். இராஜராஜன் மனைவியாகிய வானவன்மாதேவியின் பெயரையுடையதான இவ் வாலயம் [வானவன்மாதேவி ஈசுவரமுடையார் ஆலயம்] இராஜேந்திர சோழனால் (இராஜராஜனின் மகன்) முற்றுவிக்கப்பட்டது. அக்காலத்தில் இலங்கையின் தலைநகராக ஜனநாதபுரம் (பொலநறுவா) விளங்கிற்று.

A. S. Sangarappillai & Bro.,

DIRECT IMPORTERS & EXPORTERS

GENERAL MERCHANTS, COMMISSION AGENTS & GOVT. CONTRACTORS

162, 164 & 166, Hospital Road, Grand Bazaar, JAFFNA.

Telephone: **208** Telegrams: **'SANGARBROS'**

★

Head Office

Nos. 4 & 6, Adamally Buildings,

P. O. Box 802 COLOMBO.

★

Branches:

KARAINAGAR	Palavodai
COLOMBO	35, Kachcheri Rd.
GALAHA	16, Bazaar St.
KANDY	120, Colombo St.
DAMBULLA	Kandy Rd.
KILINOCHCHI	Kandy Rd.

★

ELEPHANT BRAND

AERATED WATER

AVAILABLE

★

யானை மார்க்

குளிர்ந்த பானங்கள்

எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

STOCKISTS

SUN FLAME COOKER, OVEN AND REFORM FOUNTAIN PENS.

Wholesale & Retail Dealers in

OILMANS AND PROVISIONS.

★ ★ ★

எல்லாவிதமான சாப்பாட்டு, சாய்ப்புச் சாமான்களினதும்
சில்லறை மொத்த வியாபாரிகள்

A. S. சங்கரப்பிள்ளை & பிறதர்

இறக்குமதி — ஏற்றுமதியாளர்கள்

பிரபலவர்த்தகர்கள், கொமிஷன் ஏஜன்டுகள், அரசாங்க கொந்திருத்துக்காரர்கள்


162, 164 & 166, **ஆஸ்பத்திரி வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்.**

★

போன் : No. 154.

ஆரம்பம் : 1927.

★



★

தந்தி : VIEMEMES.

வளர்ச்சி : 1956.

★

'ஹாஜியார்' ஆபரண மாளிகை

எமது நீண்டகால சேவையினிமித்தம்
பல்லாயிரக்கணக்கான
எமது வாடிக்கைக்காரர்களுக்குத்
திருப்தியளித்துள்ளோம்.

நீங்களும் உங்கள் குடும்ப
ஆபரண தேவைகளை ஒருமுறை
எமது ஸ்தாபனத்தில்
ஒப்படைத்துப் பாருங்கள்.

கிளை :
116, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

தலைமை நிலையம் :
ஹாஜி ஹமீதா பில்டிங்ஸ்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சிங்கர் தையல் மெஷின் கொம்பனி

யாழ்ப்பாணம்

★ நீடிய உபயோகிப்புக்கும், அழகிய பூவேலைகள்
மற்றும் தையல் வேலைகள் செய்வதற்கும்
சிறந்த மெஷின் 'சிங்கர்' மெஷின் ஒன்றே!

★ நீங்கள் கொடுக்கும் பணத்திற்கு
உண்மையான பெறுமதியுடையது!!

★ யாவரும் விரும்பி வாங்குவது!!!

மாதாந்தத் தவணை முறைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லாவிதமான விபரங்களையும் நேரிலோ அல்லது கடிதமூலமோ அறிந்துகொள்ளுங்கள்.

எஸ். யோசேப்பு

— மனேஜர் —

சிங்கர் தையல் மெஷின் கொம்பனி, யாழ்ப்பாணம்.

'ஆதல் அரிது'

அ. ச. ஞானசம்பந்தன், எம். ஏ.

அரசியலார் அமைத்த சாலையின் இரு புறங்களிலும் பிற்காலத்தில் நிழல்தரும் என்ற கருத்துடன் செடிகளை வைத்துப் பயிர் செய்வதைக் கண்டிருக்கலாம். பெரிய மரங்களாக வளரக்கூடிய இவைகள் சிறு செடிகளாக இருக்கும்பொழுது மிகவும் காப்பாற்றப்பட வேண்டியவை. ஆதலால் எங்கள் நாட்டில் இச் செடிகளைப் பயிரிட்டவுடன் இவைகளைச் சுற்றி வேலி போடுவார்கள்; அல்லது கற்களால் சுற்றிக் கட்டிடம் கட்டிவிடுவார்கள். இவ்வாறு செய்வதற்குரிய காரணம் எளிதில் அறியப் படும். இளஞ்செடிகளை விரும்பி உண்ணுகின்ற ஆடு, மாடுகளிலிருந்து இச் செடிகளைக் காக்கவே இவ்வழி மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் நடைமுறையில் நடப்பதென்ன? இவ் வேலிகளையும் தாண்டிக்கொண்டு ஆடுகள் உள்ளேயுள்ள இளஞ் செடிகளைத் தின்றுவிடுகின்றன. இது நாம் அன்றாடம் காணும் காட்சியாகும் இந்தியாவிற் சில பகுதிகளில்.

வேரே உயிர்

ஆடுகள் இளஞ் செடிகளின் இலைகளையும், கிளைகளையும் தின்றுவிடுவதால் அச் செடிகள் அழிந்துபோவதில்லை. எத்தனை முறை ஆடுகள் அழித்தாலும் அத்தனையும் மீறிக் கொண்டு செடிகள் வளர்ந்து விடுகின்றன. செடிக்கு மிகவும் இன்றியமையாத உறுப்புக்களில் இலையும் ஒன்று எனினும் இலைகள் அழிவதால் செடி உயிரை இழந்துவிடுவதில்லை. காரணம் யாது? செடியின் வளர்சிக்குக் காரணமான இயற்கை அதன் உயிர்நிலையை இலைகளில் வைக்காமல் வேரில் வைத்திருக்கிறது. பன்முறை இலைகள் பறிக்கப்பட்டாலும், கிளைகள் ஒடிக்கப்பட்டாலும் மரம் அழிவதில்லை. மீட்டும் மீட்டும் துளிர்த்துவிடுகிறது. சில செடிகள் உடனுக்குடன் துளிர்த்துவிடும்; சில நாட்பட்டுத் துளிர்க்கும். அத்துணையே வேறுபாடு. ஆனால் இதே செடியில், இத்தனை இலைகளும் அழிந்தாலும் மீட்டும் துளிர்க்கின்ற இதே செடியில் வேரில் ஏதாவது ஊறு நேர்ந்தமாயின் அப்பொழுது நிலைமை மாறி விடுகிறது. வேர் அறுந்துவிட்டாலோ அல்லது வேரிற் புழுப் புகுந்துவிட்டாலோ செடியின் கதி அதோகதிதான். எனவே, இதிலிருந்து அறியவேண்டிய படிப்பினையும் ஒன்றுண்டு. புறத்தே இருப்பதும் பொறிகளாற் கண்டும், தொட்டும், முகர்ந்தும் அனுபவிக்கக் கூடியனவாகிய உறுப்புக்கள் சில உண்டு செடிக்கு. இலை, பூ, காய், பழம், கிளை என்ற இவை செடியின் புற உறுப்புக்கள். இப் புற உறுப்புக்களுக்கு ஓரளவு அழிவு நேருமாயின் அதனால் தாய்ச் செடிக்கு ஊறு நேர்வதில்லை. ஆனால் செடியின் அக உறுப்பாகிய வேருக்குச் சிறு ஊறு நேர்ந்தாலும் அழிவு உறுதிதான். அந்த அழிவைத் தடுக்க யாராலும் இயலாது. இலையிலும், கிளையிலும், பூவிலும் பூச்சி பிடித்தால் அவற்றை மருந்திட்டோ, வெட்டியோ நோயைப் போக்கித் தாய்ச் செடியைக் காப்பாற்றலாம். அகத்துறுப்பாகிய வேரிற் பிடித்த நோயைப் போக்கல் இயலாது. செடியின் அழிவில்தான் அந் நோய் போகும்.

மானிட உலகில்

தாவர உலகிற் காணும் இக் காட்சி மானிட உலகினும் பொருந்தி இருக்கிறது என்று கண்டார் தாவர, மானிட மருத்துவர் ஒருவர். இரண்டாயிரம் ஆண்டுகட்டு முன்னர் வாழ்ந்த இந்த மருத்துவர் இவ்வுண்மைகளை எத்தகைய தாவர நூல் அறிவுகொண்டு அறிந்தாரோ நாம் அறியோம். ஆனால் தாமறிந்த தாவரம் பற்றிய இவ்வறிவைக் கொண்டு மானிட சமுதாயத்தை ஒரு முறை நோக்கினர். அஃறிணை என்று பேசப்படும் செடிகளுக்கும் உயர்திணை என்று புகழப்படும் மனிதர்களுக்கும் உள்ள ஓர் ஒற்றுமைத் தன்மையை உணர்ந்தார். ஒரு சில உறுப்புக்கள் இல்லாமற் போவ

தாலேயோ, அழிந்து போவதாலேயோ செடி களும், மனிதர்களும் அழிந்து விடுவ தில்லை. ஆனால் இன்னுஞ் சில உறுப்புக் கள் ஓரளவு ஊறு அடைந்தாலும் உடன் அழிவு ஏற்படுகிறது. செடிகள் வேரில் ஊறு நேர்ந்தால் அழிவதுபோல மனிதர்களும் சில தன்மைகளை இழந்தால் அழிவர். இவ்வுண் மையை அம்மருத்துவர் தாம் இயற்றிய மன மருத்துவ நூலிற் கூறினர்.

இவ்வாறு கூறிய மருத்துவர் திருவள்ளு வர். அவர் கூறிய மருத்துவ நூல் திருக்குறள். மக்கள் இனத்தின் மனத்திற் படர்ந்த நோயை அகற்றி 'வையத்துள் வாழ்வாங்கு வாழ' வழிவகுத்த நூலாகலின் திருக்குறளை மருத்துவ நூல் என்று கூறினேம். தாவரத்திற்கும் மக் களுக்கும் உள்ள இப் பொதுத் தன்மை கொண்டு கூறிய குறள் ஒன்று உண்டு.

இருப்பவர் : இல்லாதவர்

உலகிடை வாழும் மக்கள் பலதிறப்பட்ட டவர். புறநலன்களாலும், அக நலன்களாலும் இவ்வேறுபாடு தோன்றுகிறது ; புறத்தே உள்ள உறுப்பான செல்வம் போன்ற ஒன்று ஒரு சில ரிடம் இருப்பதையும், ஒரு சிலரிடம் இல்லாமல் இருப்பதையுங் காண்கிறோம். இருப்பவர் இல் லாதவர் என்ற இவ்விரு பகுதியையும் தவிர முன்னர் இருந்து இப்பொழுது இழந்தவர் என மூன்றுவது ஒரு இனமுங் காண்கிறோம். இன்று புற உறுப்பாகிய பொருட் செல்வத் தைப் பெற்றிருப்பவரை என்றுமே இவ்வாறு பெற்றிருப்பர் என்றுங் கூறமுடியாது. இன் றில்லாதிருப்பவரை என்றுமே இல்லாதிருப்பவர் என்றுங் கூறமுடியாது. முன்னர் இருந்து இப் பொழுது இழந்தவரைக் காண்கிறோமாகலின் இன்று இல்லாதிருப்பவர் நாளை உடையவராத லும் கூடும். தாவர உலகில் இக் காட்சியை என்றுங் காண்கிறோ மன்றோ ? இலையுதிர்காலத் திற் பட்டுப்போனவை போலக் காட்சி நல்கு கின்ற மரங்கள் மீட்டும் தழைத்து அழகிய காட்சி நல்குவதை யாரே அறியாதார் ? பழம் தோன்றிய நிலையிற் பூக்கள் தோன்றுவதில்லை. ஆனால், மறுபடி அச் செடியிற் பூக்கள் பூவா என்று யாரேனும் கூறிவிடமுடியுமா ? அவ் வாறு ஒருவர் கூறினாலும் அறிவுடைப் பெரு மக்கள் அதனை ஏற்றுக் கொள்வார்களா ! இல வுதிர் காலத்திற் காட்சி தரும் மரம், பட்டமரம் போன்ற நினைவை உண்டாக்குகின்றது. ஆனா லும் அதனைப் பட்டமரம் என்று ஒருவர் கூறி னால் யாரும் ஏற்றுக்கொள்வதில்லை யன்றோ ?

எதனைக்கொண்டு மதிப்பிடுவது ?

அதே போன்று மனிதர்கள் நிலையைக் கொண்டு அவர்களை மதிப்பிடவேண்டுமாயின் எதனைக்கொண்டு மதிப்பிடுவது ? புற உறுப் பான செல்வத்தைக் கொண்டு மதிப்பிடலாமா? அவ்வாறு மதித்தால் அது நிலையான மதிப் பாகுமா ? இன்று பொருளுடையார் என்ற காரணத்தால் ஒருவரை உயர்ந்தவர் என்று மதிப்பிட்டுவிட்டால் நாளை அவர் இல்லாதவ ராக ஆகிவிட்டால் நம் மதிப்பீடு என்ன ஆகும் ? எனவே அது கொண்டு மதித்தல் கூடாது என்பது பெறப்பட்டது. மேலும் இல்லாதவர் உடையவர் ஆதலும் உண்டு. இலையுதிர் காலத்து இழந்த முதிர்ந்த பழைய இலைகளைக் காட்டினும் அழகிய சிறந்த புதிய இலைகளை மீட்டும் செடிகளும், மரங்களும் பெறுவதுபோல் இன்று பொருளற்றார் நாளைப் பொருட்செல் வம் பெற்றுத் திகழ்தலும் உண்டு.

ஆனால் வேரிற் பழுதுபட்டமரம் தவறாமல் அழிந்துவிடுவதுபோல, மனிதரிற் சில உறுப்புக் களிற் பழுதுபட்டவர் அழிந்தே விடுவர். இதனைக் கூறவந்த வள்ளுவர் மிக அழகான ஒரு சொல்லாற் குறிப்பிட்டுச் சொல்கிறார்.

'' பொருள்அற்றார் **பூப்பர்** ஒருகால் அருள்அற்றார்
அற்றார்மற்று ஆதல் அரிது ''

குறளின் பொருள் எளிதில் விளங்கக் கூடியதே. பொருள் செல்வம் அற்றவர்கள் மற் றொரு காலத்தில் மீட்டும் அதனைப் பெற்று விளங்குதல் கூடும். ஒருகாலத்து இன்மை (இலையுதிர்த்த அல்லது பூவாத காலத்து மரம் போல) என்றும் இன்மையை உணர்த்தாது. ஒருகாலத்து உடையவராக (தளிர், பூப்பெற்றுத் திகழும் மரம்போல) அவர் ஆதலும் கூடும். ஆனால் அருள் அற்றவர்கள் மீட்டும் ஒருகால் அதனை அடைய முடியும் என்று கூறமுடியாது. அதனை வலியுறுத்திக் கூறவந்த ஆசிரியர் 'அருள் அற்றார் அற்றார்' என்று கூறி நிறுத் தாமல் 'மற்று ஆதல் அரிது' என்று இரண் டாம் முறையுங் கூறிச் செல்கிறார்.

செல்வத்துக்கு அழகுண்டா ?

பூப்பர் ஒருகால் என்று கவிஞர் கூறிய சொல்லின் ஆழத்தையும் அழகையும் சற்றுச்

சிந்திக்கவேண்டும். செடியோ, மரமோ ஏன் பூக்கிறது? தாவர நூலாரைக் கேட்டால் உண்மையைக் கூறுவர். செடி பூவை அழகுக் காகப் பூப்பதில்லை. அப்பூவிலிருந்து காய், கனி, விதை முதலிய தோன்ற வேண்டும் என்பதற்காகவே பூக்கிறது. ஆனாலும் பூவில் ஏன் அத்தனை அழகு வெளிப்படுகிறது? பூவில் அழகு இல்லையானால் வண்டுகள் வந்து பூவில் அமர்ந்து மகரந்தத்தைக் கொண்டு செல்லாவல்லவா? எனவே வழியோடு செல் லும் வண்டைத் தன்பால் ஈர்ப்பதற்காகவே பூக்கள் அழகுடன் விளங்குகின்றன. அன்றி யும் அப்பூக்கள் காய், விதை முதலிய பயன் களையும் விளைக்கின்றன. பொருட் செல்வம் பெற்ற மனிதரை வள்ளுவர் பூப்பர் என்ற சொல்லாற் குறிப்பிடும் பொழுது இத்தனை கருத்துக்களும் நம்மனத்தில் தோன்றுகின்றன. பூக்கள் அழகுடனும், மணத்துடனும் இருப் பதைப்போல் ஒருவன் பெற்ற செல்வம் அழகு டனும், மணத்துடனும் விளங்கவேண்டும். செல்வத்திற்கு அழகுண்டா? உண்டு. 'ஐயோ இவனிடம் ஏன்தான் இவ்வளவு பணம் சிக்கிக் கொண்டதோ' என்று சிலரைப் பார்த்து நாமே கூறுகிறோமல்லவா? அவ்வாறு இல்லாமலிருப்பதுதான் செல்வத்திற்கு அழகு எனப்படும். மூடி வைத்திருந்தாலும் பூவின் மணம் தன்னை அறிவிப்பதுபோல ஒருவன் ஆடம்பரமற்ற வாழ்வு நடத்தும் பொழுதும் அவனுடைய செல்வம் பிறரைக் கூவி அழைத்தல் வேண்டும். பூ வண்டுகளுக்குத் தேனை ஈந்து தானும் காய் விதை முதலிய வற்றைப் பெறுவது போல ஒருவனுடைய செல்வமும் பிறருக்குப் பயன்பட்டு அவனுக் குப் புகழ் முதலியவற்றைப் பெற்றுத்தரல் வேண்டும்.

இம்மட்டோடு நிற்கவில்லை அவ்வொரு சொல்லின் சிறப்பு. பூ என்பது எல்லாக் காலத் தும் ஒரு செடியில் தோன்றுவ தன்று. அதே போல ஒருவனுடைய செல்வமும் எல்லாக் காலத்தும் இருப்பதன்று. எவ்வளவு விரும்பி னாலும், பூக்கும் காலத்தல்லாமற் பிற காலத் தில் ஒரு செடியைப் பூக்க வைக்க இயலாது. அதே போல 'அடுத்து முயன்றாலும் ஆகு நாளன்றி எடுத்த கருமங்கள் ஆகா' என்ற கருத்தும் வெளிப்படுகிறது பூ காயாக மாறும் பொழுதான். வாழும்பொழுது காயை உண் டாக்குவதில்லை; அழிந்தே காயை உண்டாக்கு கிறது. அதேபோலச் செல்வம் பிறருக்கும் உடை யானுக்கும் பயன்படும்பொழுது தான் அழிந்தே பயன்படுகிறது. இவை அத்துணைக் கருத்துக் களும் **பூப்பர்** என்ற ஒரு சொல்லாற் பெற வைக்கிறார் கவிஞர்பிரான்.

தாவர உண்மை

இனி நாம் கண்ட தாவர உண்மையைப் பார்ப்போம். பூவாதிருந்த மரம், தழையாத மரம் பூக்கும் தழைக்கும் என்ற உறுதிப்பாடு உண்டு. ஆனால் வேரிற் புழுவைத்த மரம் வாழாது. அதே போலச் செல்வமில்லாதவர் செல்வம் பெறலாம்; வாழலாம். ஆனால் அருள் அற்றார் மீட்டும் பெற முடியாது; வாழவும் முடியாது. பூப் புறத்தே தோன்றும் உறுப்பாக இருத்தல் போலச் செல்வமும் புறத்தே தோன்றும் உறுப் பாகும். வேர் அகத்தே யுள்ள உறுப்பாதல் போல, அருளும் அகத்தே யுள்ள உறுப்பாகும். வேரின் கேடு மரத்தின் அழிவில் முடிவது போல மனித மனத்தில் தோன்றும் அருளின் கேடு அவனுடைய அழிவில்தான் முடியும். பூவில்லாததாற் செடி கேடுறுவதில்லை; பொரு ளில்லாமையால் மனிதன் கேடுறுவதில்லை அருளில்லாமையாற் கெடுவது உறுதி. பூவில் லாத மரம் பூவாற் காயாற் பிறருக்குப் பயன் படாவிடினும், பிறபகுதிகளாற் பயன்படும். பொருளில்லார் பொருளாற் பிறருக்குப் பயன் படாவிடினும் பிற உடலுழைப்புப் போன்றவை யாற் பயன்பட முடியும். வேரின்றிப் பட்ட மரம் எவ்விதப் பயனும் படாமல் நெருப்புக்கு இரை யாவது போல அருளற்ற மனிதனும் எவ்விதப் பயனும் படாமல் எரிந்து சாம்பலாகவே பயன் படுவான்.

இத்துணைக் கருத்துக்களையும் **பூப்பர்** என்ற ஒரு சொல்லாற் குறித்த கவிஞர் எத் துணைச் சிறப்புடையவர் என்பதை நோக்குக. பொருளின் பயன், தன்மை என்பவற்றை ஒரே வரியில் ஒரே சொல்லிற் கூறிவிட்டார். மரம் வாழ்வது கண்ணுக்குத் தெரியாத வேரால் ஆதல் போல மனிதன் வாழ்வதும் புறத்தே புலப்படாத அருளால் என்பதையும் நினைவூட்டினர். எனவே, ஒருவன் வாழ்கிறான் என்றால் அருளுடையவனாக வாழ்கிறான் என்றே பொருள் கொள்ளவேண்டும். அருளில்லாதவன் வாழ்வு பட்டமரம் நிற்பதையே ஒக்கும்.

தம்பியும் படிப்பும்

★ ச. பேரின்பநாயகன், பீ. ஏ. ★

"தம்பி என்ன வேலைக்குப் படிக்கின்றார்?"

தம்பியையும் தம்பியின் தாய் தகப்பனரையும் பார்த்து இக் கேள்வியை அன்றும் கேட்டனர்; இன்றுந்தான் கேட்கின்றனர். தம்பியோ, அப்பாவோ, அம்மாவோ, 'டாக்குத்தருக்கு', 'இஞ்சினியருக்கு', 'அப்புக்காத்துக்கு' என்று மறுமொழி கூறுவர். 'தம்பி ஏன் படிக்கிறார்' என்ற கேள்வி, கேட்போரின் உள்ளத்தில் எழுவதுமில்லை; மறுமொழி கூறுவார் வாயிலே தோன்றுவதுமில்லை. பண்பாட்டிற்காகவோ அறிவிற்காகவோ தம்பியை ஐயா அம்மா பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவதில்லை; தம்பியும் போவதில்லை. தம்பியைப் படிப்பிக்கும் ஆசிரியரும் தம்பியின் பண்பாட்டை வளர்ப்பதோ அல்லது தம்பிக்கு அறிவின்மேல் தணியா வேட்கையை வளர்ப்பதோ தமது கடமை என்று எண்ணுவதில்லை. 'என்ன வேலைக்குப் படிக்கிறார்' என்ற கேள்வியிலும் 'இன்ன வேலைக்குப் படிக்கிறார்' என்ற மறுமொழியிலும் பெற்றோரும் பிள்ளைகளும் கல்வியின் நோக்கம் யாதெனக் கொள்கிறார்கள் என்பது ஐயம் சிறிதுமின்றிப் புலப்படுகிறது.

பிழைப்புக்காக

பள்ளிக்கூடப் படிப்பிலே தேறி, பிறகு உத்தியோகப் படிப்புக்குப் பிள்ளைகள் சென்று அதிலும் தேறிப் பிழைப்புக்கு வழி தேட வேண்டும், என்பதே பெற்றோர் பிள்ளைகள் ஆகிய இரு சாராரினதும் நோக்கம். ஒழுக்கத்தைப் பற்றியோ, பண்பாட்டைப் பற்றியோ, அறிவு வளர்ச்சியைப் பற்றியோ, இவர்களுக்குச் சிறிதேனும் சிந்தனை இருப்பதாகத் தெரியவில்லை. "தம்பி கணக்கில் எப்படி?", "இலக்கியத்தில் எப்படி?", "சரித்திரத்தில் எப்படி?", "விஞ்ஞானத்தில் எப்படி?" என்றே ஆசிரியரைப் பெற்றோர் கேட்பர். "தம்பியுடைய ஒழுக்கம் எப்படி?" "காய்தல் உவத்தலின்றி உண்மையை அறியும் ஆர்வங் கொண்டவனு தம்பி" என்று கேட்கும் பெற்றோர் யாரும் இருந்தால் அவர்களை நான் இதுவரையிற் காணவில்லை. அவர்களைப்பற்றிக் கேள்விப்படவும் இல்லை.

தம்பி இருக்கட்டும், தங்கைச்சியைப் பார்ப்போம்: தங்கைச்சியும் பிழைப்பை நோக்கிப் படிக்குங்காலமிது. டாக்குத்தராய் அல்லது அப்புக்காத்தாய் வரப் படிக்கும் தங்கைச்சிமார் ஒருபுறம். இவைஇரண்டும் சிரமமும் செலவும்கூடிய படிப்பு. ஆதலாற் படிக்குந் தங்கைச்சிமாரிற் பெரும்பாலோர் உபாத்திக்குப் படிக்கிறார்கள். பிழைப்புக்கே படிப்பென்ற கொள்கை இவர் செயலிலிருந்தும் வலியுறுத்தப்பெறுகின்றது.

ஒழுக்கமும் பண்பாடும்

தம்பி, தங்கைச்சி, ஐயா, அம்மா இவர்களை ஒருபுறம் விட்டுச் சட்டம்பிமாரைப் பார்ப்போம். பண்பாடு ஒழுக்கம் போன்ற சூக்குமப் பொருள்களைப்பற்றி இவர்கள் மேடைகளில் இடையிடையே பேசினாலும் உண்மையில் இவர்களும் 'படிப்புப் பிழைப்புக்கே' என்பதைக் கடைப்பிடிக்கிறார்கள். பெரிய கல்லூரிகளின் பரிசளிப்பு விழாக்களில் அதிபர் அறிக்கையில் ஒழுக்கம் பண்பாடு என்பவற்றைப் பற்றிப் புள்ளி விபரம் கொடுப்பதில்லை. சோதனையிற் சித்தி, பந்தாட்டத்தில் வெற்றி போன்ற அம்சங்களே பாராட்டப்படுகின்றன. இக்கல்லூரிகளின் பழைய மாணவர் விழாக்களிற் கூட உத்தியோகத்தில் உயர்வு பெற்றவர்களையும் சோதனைகளிற் சித்தி எய்தியவர்களையும் பற்றியே வாய்ப்பறை சாற்றுவார்கள். தியாகம், ஒழுக்கம், யோக்கியம் முதலிய சிறந்த பண்புகளில் மேம்பட்ட பழைய மாணவர் இருந்தாலும் இவர்களைப் பற்றிப் பெருமையடிப்பதைக் காண்பது அரிது. உத்தியோக உயர்வு பெற்ற பெரியோர்

யோக்கியமாய் உயர்வடைந்தாரோ என்று அவர்கள் ஆராய்வதாயும் தெரியவில்லை.

நிற்க, இதெல்லாம் எதற்கு? பள்ளிக் கூடப் பிள்ளைகளுக்கு ஒழுக்கமோ பண்பாடோ இல்லை என்று காட்டுவதற்கா? அல்லது பெற் றோரும் ஆசிரியரும் பிள்ளைகளுக்குத் துரோகம் செய்கிறார்கள் என்பதை நிலைநாட்டுவதற்கா? இல்லை இல்லை! நூறு தரம் இல்லை. ஆயிரம்தரம் இல்லை. பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் ஒழுக்கம் கற்கிறார்கள். பெற்றார் அதற்காகப் பிள்ளை களைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புகிறபடியா லன்று. அல்லது ஆசிரியர் அதை ஒரு கட்டாய பாடமாய்க் கற்பிக்கிறபடியாலல்ல. பண்பாடுள்ள ஆசிரியனிடம் படிக்கும் பிள்ளையின் உள்ளம் பிள்ளைக்கும் தெரியாமல் ஆசிரியனுக்கும் தெரி யாமற் பண்பாடடைகிறது. ஒழுக்கமுள்ள ஆசிரிய னுடன் பழகி ஊடாடும் பிள்ளையும் அங்ஙனமே ஒழுக்க மரபில் நிற்கவும் நடக்கவும் கற்றுக் கொள்ளுகிறான்.

உண்மையன்று

நான் சொல்ல எண்ணியது இதுவுமன்று, படிப்பின் நோக்கம் பிழைப்பு என்பது பெறப் படுகிறது. ஆனால் இன்று நம் நாட்டில் ஒரு வகைப் பிழைப்புக்கே கல்வி வழிகாட்டுகிறது. எம் பள்ளிக்கூடங்களிற் புகட்டப்படும் கல்வி பிழைப்புக்கு வழிகாட்டாக் கல்வி என்று பலர் குறை கூறுகின்றனர். இது உண்மையன்று. பிழைப்புக்கு வழி காட்டுவதே எம் கல்வியின் முக்கிய நோக்கம். ஒரே நோக்கம் என்று கூறினாலும் பிழையாகாது. பெற்றோர் பிள்ளை கள் ஆசிரியர் ஆகிய யாவரும் சிரமேற் கொண்டொழுகும் நோக்கமும் இதே. வைத் தியராய், பொறி நூல் வல்லுனராய், வழக் கறிஞராய், அரசாங்க காரியாலயங்கள் வணிக நிலையங்கள் முதலியவற்றிற் கணக்கர் லிகித ராய்க் கடமை ஆற்றுவதற்கு வேண்டிய திறமை ஊட்டுவதே பள்ளிக்கூடத்தின் நோக்கமும், பொறுப்பும். இப்பொறுப்பைத் தம்மால் இயன்ற மட்டும் ஆசிரியர் நிறைவேற்று கின்றனர். படிப்பாற் பிழைப்பு வரா விட்டால் ஆயிரம் ஆயிரமாய்ப் பிள்ளைகளைப் பெற்றார் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பமாட்டார். ஆசிரியரும் பெற்றார் எதிர்பார்ப்பதைச் செய் யாது விட்டாற் பெற்றார் ஆசிரியரைச் சும்மா விட்டு வைக்க மாட்டார். சலுகைச் சம்பளம், கொப்பி, புத்தகம் முதலியவற்றிற்குப் பணத்தைச் செலவிடவும் மாட்டார்கள். அப்படி என்றால் எம்நாட்டுக் கல்வியிற் குறைகுற்றம் யாதும் இல்லை என்பதே என் கருத்து. குறை குற்றங்கள் பல உள. ஆனால் எங்கள் நாட்டுக் கல்வி முறை பிழைப்பிற்கு வழிகாட்ட மாட்டா தென்பதையே மறுக்கிறேன்.

தங்கள் பிள்ளைகளுக்கல்ல

கல்வி பரம்பொருளைப் போன்று கலாதீத மாய், உலகாதீதமாய் நின்று தனித்தியங்கும் ஒரு பொருளன்று. நாட்டின் நாகரிகம், சரித்திரம், அரசியற் கொள்கைகள், சமூகச் சித்தாந்தம் ஆகிய யாவும் கல்விமுறையிலும் அமைப்பி லும் தோன்றியே தீரும். இவை மாறக் கல்வி முறையும் மாறும். இவை யாவும் இருந்தபடியே இருக்கக் கல்வி ஒன்றிலேயே சீர்திருத்தம் ஏற்படவேண்டும் என்று விரும்புவதோ முயல்வ தோ பயன்தராது. எங்கள் நாட்டிலே தொழி லானது பிறப்பிலேயே பெரிதும் பொறுத்திருந் தது. பரம்பரை பரம்பரையாய்ப் பெற்றோரின் தொழிலையே பிள்ளைகள் செய்து வந்தனர்; வருகின்றனர். பிறப்பில் உயர்வு தாழ்வு இருந்தது போல மொழியிலும் இருந்து வந்தது; வருகிறது. சில தொழில்கள் 'இழி' தொழில் கள் என்றும் சில 'உயர்' தொழில்கள் என்றும் கொள்ளப்படுகின்றன. 'இழி' தொழில் செய்த பரம்பரையிற் பிறந்தோர் மெல்ல மெல்ல அவற்றைக் கைவிட்டு வேறு தொழில்களைக் கற்றுக்கொள்கிறார்கள். இவர் களிற் பள்ளிக்கூடம் சென்று படிப்போர் மற்றவர்கள் நாடும் 'காற்சட்டை உத்தியோகங் களை'த் தாமும் பெற்றுக்கொள்ள அரும்பாடு படுகின்றனர். சுருங்கச் சொல்லின் 'இழி' தொழில்களை எல்லாரும் ஒதுக்கி வைக்கின்ற னர். 'உயர்' தொழில்களையே எல்லாரும் நாடுகின்றனர். பள்ளிக்கூடப் படிப்பு எல்லாருக் குங் கிடைக்கக் கிடைக்க இந்நிலையுங் கூடிக் கூடி வருகிறது. 'காற்சட்டை உத்தியோகத்தை' நாடுவோரதும் அவற்றிற்குத் தகுதி பெறுவோ ரதும் தொகை நாளுக்குநாள் கூடிக்கொண்டு வருகிறது. உத்தியோகத் தொகையோ இருந்த படியே இருக்கிறது. அல்லது அற்ப அளவிற் கூடுகிறது. 'தொழிற் கல்வி வேண்டும், கைப் பணிக் கல்வி வேண்டும்' என்று கூக்குரல் போடுவோர் அவற்றைத் தேடுவது தங்கள்

பிள்ளைகளுக்கு அன்று ; அயலவரின், மற்றவர் களின் பிள்ளைகளுக்கே அவற்றை ஊட்ட வேண்டும் என்று நம்புகிறார்கள்.

வருவாயுங் கண்ணியமும்

'காற்சட்டை உத்தியோகங்களை' ஏன் பெற்றோரும் பிள்ளைகளும் நாடுகிறார்கள் ? இவ்வுத்தியோகங்களில் மக்கள் மனதைக் கவரும் இரண்டு அம்சங்கள் உள. நல்ல வருவாய், சனசமூகத்திற் கண்ணியம் மக்கள் மனதைக் கவருவதில் இவை இரண்டையும் போன்ற வேறு யாதும் காண்டல் அரிது. சமூகத்தில் ஒருவகை உத்தியோகங்களுக்கே மதிப்பும், வருவாயும் இருக்குமளவும் பெற் றோரோ பிள்ளைகளோ வருமானமும் கண் ணியமும் குறைந்த தொழிலை நாடுவா ரென்று எண்ணுவது பகற்கனவு. பள்ளிக் கூடங்களும் 'காற்சட்டை உத்தியோக' மல்லாத வேறு தொழில்களுக்கு வேண்டிய படிப்பைப் படிப்பிக்கமாட்டா. உழுதுண்டு வாழ் வதைப்பற்றியும், வியர்வை சிந்தி உழைப்பதைப் பற்றியும், கைப்பணிகளின் சித்திரச் செம்மை யைப்பற்றியும் ஆர்வத்துடனும் உருக்கத்துடனும் மேடைகளிற் பேசுவோர் இவையாவும் தங்கள் பிள்ளைகளுக்கு வேண்டியனவோ உரியனவோ என்று எண்ணுவதில்லை. உழுதுண்டு வாழும் வாழ்க்கையின் மாண்பையும், தம் கையால் ஒன்றை ஆக்குவதால் எழும் இன்ப உணர்ச்சி யையும், தொழிலை ஒட்டி உயர்வு தாழ்வு இல்லை என்ற சமத்துவ ஞானத்தையும் ஒருவரும் தமக்கோ தம்பிள்ளைகளுக்கோ ஊட்ட விரும்புவ தில்லை. இவர்கள் உண்மைத்தியாகிகளும் பரோப காரிகளுமாவர். மற்றவர்களுக்கும் மற்றவர் பிள்ளைகளுக்குமே இவற்றுற் பயன்வர வேண்டு மென்பதே இவர்கள் விருப்பம். நான் கூறியது உண்மை என்றால் இந்நிலையை எங்ஙனம் மாற்றலாம் ? பள்ளிக்கூடங்களோ, ஆசிரியரோ, கல்வி அமைச்சரோ இதைச் செய்ய முடியாது. சமூகம் மாறவேண்டும். சமூகத்தில் வேரூன்றி இருக்கும் கொள்கைகள் மாறவேண்டும். குடியரசு அரசியலில் அரசாங்கம் ஓரளவிற்கா யினும் பொதுமக்களின் ஆதரவின்றி அரசாங்கப் பொறுப்பைப் பெறமுடியாது. இந்த ஆதரவைக் கொண்டே சமூக சம்பிரதாயங்களை மாற்ற முடியும். ஆதலாற் பொது மக்களின் ஆதர வுடன் அரசாங்கமே வேண்டிய மாற்றங்களை யும் திருத்தங்களையும் செய்தல் வேண்டும் என்பது பெறப்படுகிறது.

அன்பும் ஆசையும்

○

உலகத்திலே எவ்வளவோ பிறவிகளை நாம் பார்க் கிறோம். நடப்பன, பறப்பன, கிடப்பன இப்படி எவ் வளவோ உள்ளன. இப்படியுள்ள அப் பிறவி வகைகளை எண்ணிச் சொல்லி இருக்கின்றார்கள் நம் பெரியோர்கள் எண்பத்து நான்கு லக்ஷம் என்று. பாருங்கள் ! அவைகளில் ஒன்றுதானே மனிதப் பிறவி ? பிறவி எடுத்த ஒவ்வொரு மனிதனுக்கும், அன்பு வேண்டும். அன்பு வேறு ; ஆசை வேறு. நம் கண்ணுலே காணப்படுகின்ற பொருள்கள் எல்லாம் அழிந்தொழிவனவே. அவைக ளிடத்துச் செலுத்தப்படுவதுதான் ஆசை எனப் படும். இது அன்பாகாது. இப்படி யெல்லாம் நம்மைப் படைத்து, அனுபவப் பொருள்களையும் ஆக்கித் தந்த அந்தக் கருணைமூர்த்தியாகிய பகவா னிடத்துச் செலுத்தப்படுவதுதான் அன்பு. புல்லாகி, பூடாகி, புழுவாகி, மரமாகி, மிருகமாகி, பறவை யாகி, பாம்பாகி, கல்லாகி இப்படி யெல்லாம் தோன்றித் துன்பத்துக்கு ஆளாகி மனிதப் பிறவி யெடுத்த ஒருவன் மேல்நோக்கிப் போகவேண்டும் ; ஆன்ம லாபத்தை அடைய வேண்டும். இதுதானே அவன் செய்ய வேண்டுவது ! அப்படியின்றி 'நான் திரும்பித்தான் போவேன் ; எனக்கு இன்பம் வேண்டா' என்று சொல்லிக்கொண்டே இரு ளிருக்கும் இடம் தேடிச் செல்வானுனல் அவனைச் சிறப்புடையவன் என்று சொல்லலாமா ? ஆகவே ஒவ்வொருவரும் உண்மையை உணரவேண்டும். உலகத்தை யெல்லாம் — நம்மை யெல்லாம் — காக்கும் கடவுள் உண்டு. அவனை வழிபடவேண்டும் என்ற எண்ணம் கொள்ளவேண்டும்.

சிலர் நினைக்கலாம், நம் அறிவைக்கொண்டு எல்லாவற்றையும் பெற்றுவிட முடியாதா ? கடவுள் தானை கொடுக்கவேண்டும் என்று. இதோ பாருங் கள் ! மின்சார விளக்கு எரிகின்றது. இது மக்கள் கண்டு பிடித்ததுதான். ஆனல் வேலை நடந்து கொண்டிருக்கும்பொழுது இடையூறு இல்லாதபடி எரிகின்றதே ! அதுதான் ஆண்டவன் நியதி. 'அவ னன்றி ஓர் அணுவும் அசையாது'.

— ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள்



பாலபோதினி

சிறந்த வாசிப்புப் பாட புத்தகங்கள்

வித்தியா பிரசுர சபையினரால் அங்கீகரிக்கப்பெற்றவை

கீழ்ப்பிரிவு தொடக்கம் — ஏழாம் வகுப்பு வரை





அநுபவம் நிறைந்த ஆசிரியர்களால் ஆக்கப்பட்டவை

பாலர் அறிவுக்கு விருந்தான இனிய கதைகள், பாடங்கள், அழகிய சித்திரங்க ளமைந்த இந் நூற்றொகுதிகள், ஆசிரியரின் உதவி அதிகமின்றி, மாணவர் தாமே வாசித்துக் கிரகிக்கக்கூடிய முறையில் எழுதப்பட்டவை.

உபயோகிய சிறந்த விஷயங்களை விளக்குபவை.

பிறமொழியாளரும் இலகுவிற் தமிழ் கற்கக்கூடிய முறையிற் படிமுறையாக எழுதப்பட்டவை.


விற்பனை உரிமையாளர்கள்:


சுன்னாகம் : தனலக்குமி புத்தகசாலை


இலக்கிய மஞ்சரி


சிறந்த இலக்கிய பாட புத்தகங்கள்

3ஆம் வகுப்புத் தொடக்கம் 7ஆம் வகுப்புவரை









மாணவர், ஆசிரியர் ஆகிய இரு பாலார்க்கும், அவர்கள் வேலையை இலகுவாக்க, உதவும் சிறந்த இலக்கியநூற் றொகுதிகள்.

இளஞ்சிறுரும் தாமே சுவைத்துக் கற்க உதவும் இந்நூற் றொகுதிகள், உயரிய இலக்கிய அறிவையும் சுவைப்புச் சக்தியையும் தர வல்லன.

★

வித்தியா பிரசுர சபையினரால் அங்கீகரிக்கப்பெற்றவை.

★

விலை: -/60, -/75, -/85, 1-00, 1-25

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்



விற்பனை உரிமையாளர்கள்:

சுன்னாகம்: தனலக்குமி புத்தகசாலை

அறுசுவை உண்டி

★ யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் ★

ஐரோப்பாவில் மிகவும் அழகான நகரம் ஜெனிவா. இது லெமூன் ஏரியைச் சுற்றி அணி அணியாக அமைந்தது. ஊரைச் சூழ்ந்து ஆற்றுப்பாட்டும், பச்சழகும், அலைகளின் முரசும் கொஞ்சி விளையாடுகின்றன. ஊரெங்கும் உணவு விடுதி மயம். விடுதிகளைத் தாண்டினால் தொழிற்சாலைகளும் கடைக் கண்ணிகளும் இருக்கின்றன. ஏரிக்கரை ஓரங்கள் எல்லாம் அரசியல் மாளிகைகள்தான். எல்லா நாடுகளும் கூடி உலக விதியைத் தீர்மானிக்கும் சர்வதேச சபை இங்குள்ளது. போர்க்களங்களிற் காயம்பட்ட வீரர் நோயை ஆற்றும் செஞ்சிலுவைச்சங்கம் இங்கே உள்ளது. பெரிய மருந்துத் தொழிற் சாலைகள் உள்ளன. ஆக்க வேலைக்குரிய கருவிகளைச் செய்யும் ராறெக்ஸ் (Tarex) என்னும் மாபெரும் தொழிற் சாலை இங்கே உள்ளது. உலகத் தலைவர்களும், புலவர்களும், வீரர்களும் இங்கே கூடிச் சமாதான மகாநாடு நடத்துகிறார்கள். நெப்போலியன் காலத்துக்குப் பிறகு இங்கே போர்க் கொலை கிடையாது. ஆனால் ஒவ்வொரு நாளும் ஆயிரக் கணக்காக உயிர்க் கொலைகள் நடக்கின்றன.

ஏரிக்கரையில் ...

ஆடு, மாடு, கோழி, மீன் முதலிய உயிர்கள் ஒவ்வொரு நாளும் மனிதனுடைய ஊனைப் பெருக்குகின்றன. இயந்திரத்தின் வாயில் ஒரு மாட்டைக் கொடுத்தால் தோல் வேறு, எலும்பு வேறு, நரம்பு வேறு, சதை வேறு, குடல் வேறுகப் பிய்த்தெறிந்துவிடும். ஆடு மாடுகளை இப்படிக் கொலை செய்யும் இயந்திர மனிதனே ஆளைக் கொலைசெய்யக் குண்டு போடுகிறான். ஐரோப்பாவில் இந்தக் காட்சியைக் காண எனக்கு இங்கே சைவப் பிரசாரம் செய்ய வேண்டுமென்று தோன்றிற்று. நான் ஜெனிவா ஏரிக்கரையில் ஒரு ரோஜா தோட்டத்தில் தியானம் செய்துகொண்டிருந்தேன். அப்போது சில ஐரோப்பியர் என்னிடம் வந்தார்கள். "உங்களைப் பார்த்தால் இந்திய யோகி போலிருக்கிறதே! எங்களுக்கு யோகத்தில் மோகம்; எங்களுக்கு யோகம் சொல்லிக் கொடுக்கிறீர்களா?" என்று ஆவலாக வினவினர்கள். யோகத்தைப்பற்றிப் பல கேள்விகள் கேட்டனர். நான் பிரெஞ்சு மொழியிற் பேசத் தொடங்கினேன். அங்கே ஒரு சிறு கூட்டமே கூடிவிட்டது. ஒருவர் "எனக்கு இந்தியாதான் பிடித்திருக்கிறது; அங்கே போர்க் கொலை இல்லை. யோகத்தினாற் போரைத் தடுக்க முடியுமா? ஐரோப்பாவில் நடக்கும் கொலை வெறிகளை எப்படி நிறுத்துவது?" என்றெல்லாம் வினவினர். இன்னொருவர், "இப்படிப் பத்துப் பேருக்குப் பேசுவதிற் பயனில்லை. பெரிய கூட்டம் கூட்டுவோம். அதில் யோகத்தைப்பற்றிப் பேசுங்கள்" என்றார். நான் ஒப்புக் கொண்டேன்.

பத்துப் பிரசங்கங்களுக்கு ஏற்பாடானது. யோகக்கலை, ஹடயோகம், இராஜயோகம், பக்தியோகம், ஞானயோகம், கீதாயோகம், வாழ்க்கையும் யோகமும், யோக சாதனங்கள், யோகத்தினால் மனித சமுதாயத்திற்கு உண்டாகும் பயன், விஞ்ஞானமும் யோகமும் என்பவற்றைப்பற்றி எல்லாம் பேசினேன்; அவர்கள் கேட்ட கேள்விகளுக் கெல்லாம் பதில் சொன்னேன்.

சைவ உணவு

யோகியின் உணவைப்பற்றிப் பேசும்போது விஞ்ஞான முறையில் உணவுச் சத்துக்களை விளக்கிப் பல சைவ உணவுகளைப் பற்றிச் சொன்னேன். சபையோர், யோக சங்கம் கூடி அந்தச் சங்கத்திற் சேர்ந்தவர்கள் சைவ உணவே கொள்வதெனத் தீர்மானித்தார்கள். அந்த உணவைத் தயாரிக்க வேண்டிய பணம், கேட்கமுன் வந்துவிட்டது. பல நாட்டு உணவு

களைப்பற்றி நண்பர் கூடிப் பேசினர். அப்போது தமிழ் நாட்டு உணவுபற்றி நான் புகழ்ந்தேன். "நீங்கள் அணுக்குண்டால் உலகைச் சுடு காடாக்கி வெல்ல முடியும். ஆனல் எங்கள் இட்டலி சாம்பாரும், உளுந்து வடையும் உங் களையும் வெல்லும்; உங்கள் குண்டு வெறி யையும் வெல்லும். இட்டலி சாம்பார் சாப்பிட் டால் உங்கள் இரத்த வெறி நின்றுபோகும். பின்னர் குண்டு கிடங்கிற்கே வேலை இராது" என்றேன்.

மறுநாள் சைவ உணவு விருந்து ஒன்று நடத்தினேம். ஜெனிவாவிலிருந்து சில இந்தி யர் துணையைக் கொண்டு உணவுச் சாமான் களைச் சேகரித்தோம். இலண்டனிலிருந்து உளுந்தும், அப்பளமும், துவரம் பருப்பும், புளியும், மிளகாய்த் தூளும் வந்தன. பாரிஸ் நண்பர் ஒருவர் தேங்காய்ப் பொடி கொண்டு வந்தார். இன்னெருவர் அரிசி கொண்டு வந்தார். உருளைக் கிழங்கு, தக்காளி, கரூட், நூக்கோல் முதலிய காய்கறிகளெல்லாம் வந்தன.

அரிசியையும் கோதுமையையும் நன்ருக ஊறப்போட்டு ஒரு வெள்ளைக்காரி வெகு சிரமப்பட்டு ஆட்டுக்கல் செய்து மாவு அரைத் தாள்.

மாலை ஆறு மணியிருக்கும். ஓர் அழகான மாளிகையிற் சைவ விருந்து நடந்தது. ஏறக் குறைய நூறுபேர் விருந்திற் கலந்து கொண் டனர். இட்டலி, வெங்காயச் சாம்பார், உருளைக் கிழங்குப் பொரியல், தக்காளி இரசம், கூட்டு, சோறு, தயிர்ப்பச்சடி, உளுந்து வடை, பாயசம், அப்பளம் இவை எல்லாம் தட்டுத் தட்டாகப் பரிமாறினர்கள். வெள்ளைக்காரர் மிக்க மகிழ்ச்சி யோடு உண்டு நமது உணவை மெச்சினர்கள்.

நண்பர்கள் புகழ்ச்சி

அன்று பிரசங்க மாளிகையில் ஏராளமான கூட்டம். **சைவ சமயமே சமயம்; சைவ உணவே உணவு** என்று வெள்ளைக்காரர் மெச்சுவதைக் கேட்டு நான் பெரு மகிழ்வடைந் தேன். எனது நண்பர் தாம் கொண்ட இந்திய உணவைப் புகழ்ந்து பேசி ஜெனிவாவில் சைவச் சாப்பாட்டுக் கடை நடத்தத் தீர்மானித் தார். அதில் தமிழ் நாட்டின் அறுசுவை இடம் பெற்றது. இந்திய சமையல் நூல் ஒன்று முன்பே அவர்கள் புத்தகசாலையில் இருந்தது. அதையும் வைத்துக்கொண்டு அவர்கள் சைவ உணவுச்சாலை நடத்துகின்ருர்கள். சைவ உணவே உணவு என்பது அவர்கள் பல்லவி.

இங்கிலாந்து, பிரான்சு, ஜேர்மனி, சுவிட் ஸர்லந்து முதலிய இடங்களிலும் சைவ உணவுச் சங்கங்கள் இருக்கின்றன. யப்பானிற் பெரும் பாலான ஜென் புத்தர்கள் ரொட்டி, மரக்கறி, கனிகள், தேயிலை இவற்றையே கொள்வர். பாலைக்கூட மாமிச உணவு என்று அவர்கள் தொடுவதில்லை. ஆனல் நமது நாடடில் 'சைவ சமயமே சமயம்' என்று பேசிக்கொண்டு எத்தனையோ பேர் ஊன் உண்பதைக் காண் கிறேரும். இது நிற்கவேண்டும். ஊனில்லா விட்டால் ஊன் விற்பவர்களும் இருக்கமாட் டார்கள். கொல்வதும், கொன்றதைத் தின்ப தும் பாதகமாகும். கொல்லா விரதத்தை உலகம் மேற்கொண்டாற் கொலை வெறி ஒழியும்; போர்வெறி நீங்கும்.

நாடும் மொழியும்

★

ஒரு நாடு தனக்குரிய மொழியை ஆக்கமுற ஓம்பிப் பாதுகாத்தாலன்றித் தான் சிறந்த நிலை எய்துதல் அரிதாம். மொழி வளர்ச்சி கொண்டே அது வழங்கும் நாட்டின் நலத்தை உணரலாம். எந்த நாடு தன் மொழிச் சுவையை உணர்தலிற் பின்னடைகிறதோ அது மற்றை யெல்லா வளங்க ளானும் பிற்பட்டதாகும். ஆதலின் தமிழ்ச் செல்வர்களும் தமிழ்ப் புலவர்களும் விழிப்புடையவ ராய் நின்று நம் உடைமையை விளக்கமுறப் பேணல் வேண்டும். நம் மொழி வளர்ச்சியில் நாம் செயற்பாலன பலவாகும்.

— மகா மகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்

மகாத்மா காந்தியுடன் ஒருநாள்

தி. சு. அவினாசிலிங்கம்

மகாத்மா காந்தியை நான் முதன்முதல் 1919ஆம் ஆண்டிற் சந்தித்தேன். அப்போது சென்னைக் கலாசாலையில் முதல் வகுப்பிற் படித்துக்கொண்டிருந்தேன். ஒத்துழையாமை சம்பந்தமாக அவர்கள் அதுசமயம் சென்னைக்கு வந்திருந்தார். அன்று மாலை கடற்கரையில் நடந்த பிரமாண்டமான பொதுக் கூட்டத்திற்குச் சென்று அவரைத் தரிசித்தவர்களில் நானும் ஒருவன். அடுத்த தடவை நான் அவரைச் சந்தித்தது 1927ஆம் ஆண்டில். அப்பொழுது அவர் கதர்ப் பிரசாரத்திற்காக வந்திருந்தார். திருப்பூரை அவர் தன்னுடைய கதர் இராஜ தானி என்று சொல்லிக்கொள்வது வழக்கம். திருப்பூர் எனது சொந்த ஊராகவும் இருந்தது. நான் என் சட்டப் பரீட்சை முடிந்து திருப் பூரில் தொழில் ஆரம்பித்திருந்தேன். அப் பொழுதுதான் அவரிடம் முதன்முதல் நெருங்கிப் பழகும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அதன் பிறகு 1934ஆம் ஆண்டு ஹரிஜன முன்னேற்றத்திற்காக அவர் வந்த போது கோவை, நீலகிரி ஜில்லாக்களில் அவர் சுற்றுப்பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யும் பேற்றையும் பெற்றேன். அச் சுற்றுப் பிரயாணம் நிகழ்ந்து இப்பொழுது ஏறக்குறைய 22 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆயினும் அவ ருடன் கழித்த நாட்கள் இன்னும் என் மனதில் இருந்துகொண்டிருக்கின்றன. அவ ருடைய அன்பு நிறைந்த பேச்சும், கனிவு நிறைந்த சொற்களும் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அந்தச் சுற்றுப்பிரயா ணத்தின்போது நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளையே இங்கு எழுதுகின்றேன்.

காந்திஜியைக் காணும் ஆவல்

மகாத்மாஜி காலையில் திருப்பூர் வந்து சேர்ந்தார். நேராகப் பொதுக் கூட்டத்திற்குச் சென்று கூட்டத்தை முடித்துக்கொண்டு தாம் தங்கியிருந்த விடுதிக்கு வந்து ஓய்வெடுத் துக்கொண்டார். மத்தியானம் ஏறக்குறைய இரண்டரை மணிக்குப் பல்லடம், சூலூர் முதலிய ஊர்களைத் தாண்டி கோவை போய்ச் சேருவதாகத்திட்டம் போடப்பட்டிருந்தது. அன்று வெயில் மிகக்கொடுமையாக இருந்தது; அவர் ஏறும்காரின் மேல்மூடி கழற்றப்பட்டிருந்தது. வெயிலின் வெப்பத்தை உத்தேசித்து, ''வெயில் மிக அதிகமாக இருக்கிறது; காரின் மேல்மூடி யைப் போட்டுக்கொள்ளலாமே'' என்று, நான் கேட்டேன். மகாத்மாஜி வழக்கம்போல் கொல் லென்று சிரித்து; 'ஆம், வெய்யில் அதிகமாக இருக் கிறது; ஆனால் கூட்டத்தின் வெப்பம் இன்னும் அதிகமாக இருக்குமே' என்றார். அதன் கருத்து எனக்கு அப்பொழுது விளங்கவில்லை. பல்லடம் சென்றதும் விஷயம் விளங்கிற்று. மகாத்மாஜி செல்லும் இடங்களிற் பத்தாயிரக் கணக்கான மக்கள் கூடுகிறார்கள். மேல் மூடி போட்ட காரில் அவர் செல்வாராயின், மக்கள் அவரைக் காணவொட்டாமல் தடுக்கும் அந்த மூடியைப் பிய்த்து எறிந்து விடுகிறார்கள். தவிர, மகாத்மாஜியைக் காணும் ஆவலில், ஒருவருக் கொருவர் இடித்துக்கொண்டு முன்வருகிறார் கள். அதன் மூலம் குழப்பம் அதிகமாகப் பல சம யங்களிற் காரின் கண்ணாடி முதலியன உடைந்து போய் விடுகின்றன. வெய்யிலின் கடுமையை விட மக்களின் வேகத்தால் உண்டாகும் இக்கிலேமை அதிக தொந்தரவாயிருக்கும் என் பதுதான் அவர் சொன்ன வார்த்தைகளின் கருத்து. எனவே, அனைவரும் அவரை நன் றாகப் பார்க்க இயலும்பொருட்டு மேல் மூடி எடுக்கப்பெற்ற திறந்த காரிலேயே அவர் சுற்றுப் பிரயாணம் செய்வது வழக்கம்.

மந்திர சக்தி

மாலையிற் பிரமாண்டமான கூட்டம் நடை பெற்றது. பல இலட்சக்கணக்கான மக்கள்

கூடியிருந்தார்கள். ஜில்லாவில் எல்லாப் பாகங் களிலிருந்தும் பதினாயிரக் கணக்கான மக்கள் அதிகாலையிலிருந்து உணவும், ஓய்வும் இல்லா மற் பல மணி நேரம் அந்தக் கடும் வெய்யிலிற் காத்துக்கொண்டிருந்தார்கள். அவர் வந்தபோது கூட்டத்தில், 'மகாத்மாஜி வந்து விட்டார்—வந்து விட்டார்' என்ற பரபரப்பும் சப்தமும் ஏற்பட் டது. 'மகாத்மா காந்திக்கு ஜே!' என்ற சப்தங்கள் வானைப் பிளந்தன. ஆனால் அவர் மேடையின் மேல் உட்கார்ந்து, சாந்தமாயிருக் கும்படி தன் கைகளாற் சமிக்கை செய்ததும், அந்த இலட்சக் கணக்கான மக்களும் மந்திர சக்தியாற் கட்டுண்டது போல் ஆங்காங்கே நிசப்தமாக அமர்ந்து அவர் வாயிலிருந்து வரும் அமுத வெள்ளத்தை எதிர்பார்த்திருந்தனர். ஹரிஜனங்களை உயர்த்த வேண்டிய அவசியத் தைப் பற்றியே அன்றைய பேச்சு இருந்தது. அனைவரும் பக்தி சிரத்தையுடன், கூட்டம் முடியும் வரை ஒரு சிறிதும் சப்தமில்லாமற் கேட் டனர். கூட்டம் முடிந்ததும் முன் போட்டிருந்த திட்டப்படி இரவு தங்க வித்தியாலயத்திற்குச் சென்றோம்.

வழியில் ஒரு சம்பவம்

போகும் வழியில் நேர்ந்த ஒரு சம்பவத்தைப் பற்றி இங்கு குறிப்பிடாமலிருக்க முடியாது. கோவை நகர எல்லை வரையில் ஜனத்திரள் அதிகமாயிருந்தது. ஆதலாற் கார் மெதுவாகச் செல்லவேண்டியிருந்தது. நகர எல்லை தாண்டி யதும் கார் வேகமாகச் செல்ல ஆரம்பித்தது. கார் எவ்வளவு வேகமாய்ப் போயினும் அதைப் பற்றி மகாத்மாஜிக்கு கவலை கிடையாது. மணிக்கு 50, 60, 70 மைல்தான் போனாலும் அவர் ஏதும் சொல்லமாட்டார். போத்தனூர் சென்றதும் தெற்கே திரும்பிச் செல்ல வேண் டும். அங்கு ஒரு வளைவில் ஒரு புகையிரதக் கடவை உண்டு. வளைவாக இருந்தபடியாற் கொஞ்சத் தூரத்திலிருந்தும் அது புலப்படாது. கார் ஓட்டுபவனுக்கு அந்த வீதி பழக்கமில்லாத தால் அவனுக்கு அந்தக் கடவை இருப்பது தெரியாது. அவன் வழக்கம்போல் வேகமாக ஓட்டிக்கொண்டு வந்திருக்கிறான். கடவை எதிர் பாராத விதமாக மூடப்பட்டிருந்தது. அது மூடி யிருப்பதைப் பார்த்ததும் ஓட்டுபவன் காரைத் திடீரென நிறுத்தினான். மிகவும் சமீபத்தில் வந்து நிறுத்தியதால் கார் 'கிரீச்'சென்று சத்தம் செய்து கடவையின் மேல் மோதியது. மோதிய வேகத்திற் கடவையின் மேல் மாட்டியிருந்த இரும்பு விளக்கு மேலே பறந்து எனக்கும் கார் ஓட்டுபவனுக்கும் மத்தியில் வீழ்ந்தது. அதைக் கண்டதும் எனக்குக் கலவரமாகிவிட் டது. மகாத்மாஜி என்ன சொல்வாரோ என்ற ஒரே பயம். ஆனால் மகாத்மாஜியின் கொல் லென்ற சிரிப்பின் சப்தமும், 'அவினாசி, என்ன நேர்ந்துவிட்டது' என்ற அன்புடன் அவர் கேட்ட கேள்வியும் என் பயத்தைப் போக்கின. ஒரு கணத்தில் விஷயத்தை அறிந்துகொண் டார். அவர் முகத்திற் கோபம் ஏதும் தோன்ற வில்லை. இதனால் ஒரு சிறிதும் பாதிக்கப்பட வில்லை. வசைமொழி ஏதும் அவரிடமிருந்து வரவில்லை. ஏன் முன் எச்சரிக்கையாக இருக்க வில்லை என்றுகூட அவர் கேட்கவில்லை.

இன்மொழியும் சிரிப்பும்

அன்று நடந்த சம்பவமும், அதன் பின் அவர் இன்மொழியும் சிரிப்பும் என் காதில் இன்னும் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றன. மகாத்மாஜி அன்று நடந்துகொண்ட வகை என் மனத்திற் பசுமரத்தாணிபோற் பதிந்திருக் கிறது. நிறை குடம் தளம்பாது. அதுபோல நிறைந்த சுபாவமுள்ளவர்கள் சகிப்பும், மன் னிப்பும் உடையவர்களாக இருப்பார்கள் என்று புத்தகத்திற் படித்திருக்கிறோம். ஆனால், நம் வாழ்க்கையில் அவ்விதம் இருப்பவர்களைக் காண்பது அருமையிலும் அருமை. அன்று எனக்குக் கிடைத்த அனுபவமும், நாம் அத் தகைய அரிய மனிதரின் முன்னிலையில் இருக்கிறோம் என்ற எண்ணத்தை உண்டாக் கியது. கோபமும், தாபமும் பலவீனத்திற்கு அடையாளங்கள். அன்பும், அடக்கமும், சகிப் புத்தன்மையும், மன்னிப்புமே உயர்ந்த அறிவுக் கும், பலத்திற்கும் அறிகுறியாகும். கோடிக் கணக்கான மக்கள் அவரைப் போற்றிப் பேணியதற்குரிய காரணமொன்றை அன்று நான் அச்சம்பவத்திற் கண்டேன்.

வித்தியாலயத்தில்

அன்றிரவு வித்தியாலயத்திலே தங்கினோம். அன்று நடந்த சம்பவங்கள் அனைத்தையும் இங்கு எழுதமுடியாது. அந்த நினைவுகள் மனதில் ஆயுள் முழுவதும் போற்றி வைக்கப் படவேண்டியவை. குழந்தைகளிடமும், ஊழி யர்களிடமும் அன்புடன் பேசினார். ஆசிரியர் ஒருவரால் வரையப்பட்ட அவர் திருவுருவப் படத்தில் 'வித்தியாலயக் குழந்தைகள்

உண்மையைப் பின்பற்றி, இறைவனிடம் பக்தியுடன் வாழ்வார்களாக,' என்று அவர் திருக்கரத்தால் எழுதி குஜராத்தியிலும் தமிழிலும் 'காந்தி' என்று அவர் கையெழுத்திட்டுக் கொடுத்தது எங்களுக்கு என்றும் அழியாப் பொக்கிஷமாக இருந்துகொண்டிருக்கிறது. அடுத்தநாள் காலை புறப்படுமுன் வித்தியாலயக் கட்டிடத்திற்கு அடித்தளக்கல் நாட்டியருளினர். இன்று வித்தியாலயம் குருகுல முறையில் நடத்தப்பெறும் உயர்தரப் பள்ளிக்கூடம், ஆசிரியர் பள்ளி, ஆசிரியர் கல்லூரி, டிகிரி பெற்றவர்களுக்கு ஆதாரப் பயிற்சிச் சாலை, கிராம குரு சேவா நிலையம் முதலிய பகுதிகளுடன் இம்மாகாணத்தில் முக்கியமான கல்வி நிலையங்களில் ஒன்றாக விளங்குகின்றதெனில், அதற்குக் காரணம் அவர் அன்பு கனிந்த ஆசியும், அவர் கொள்கைகளைப் பின்பற்றுவதுமே யாகும். அவர் அன்று போட்ட அடித்தளக் கல் வித்தியாலயத்தின்பால் அவருக்கிருந்த அன்புக்கும் ஆசிக்கும் ஸ்தூல சின்னமாக விளங்கிக்கொண்டிருக்கிறது.

பெருமையின் சிகரம்

மகாத்மாஜி மறைந்து இப்பொழுது ஆறு ஆண்டுகள் ஆகின்றன. பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக மாசுகள் படிந்து அழுக்கேறியிருந்த தமது சமூகத்தை ஒரு அரை நூற்றாண்டிற்குள் தூய்மைப் படுத்திய பெருமை அவரையே சாரும். அசைக்க முடியாதென்று கருதப்பட்ட அன்னிய அரசாட்சியை மாற்றி மக்கள் ஆட்சியை ஏற்படுத்தினர். மக்கள் மனதிற் குடிகொண்டிருந்த பயமும், பீதியும் போய் அதற்குப் பதிலாக தெளிவும், தைரியமும் ஏற்பட்டிருக்கின்றன. இந்தியாவின் பேரில் நெடுங்காலச் சாபம் போலிருந்த தீண்டாமை அகற்றப்பட்டு வருகிறது. இந்திய மக்கள் எங்கும் சுதந்திர மக்களாக மதிக்கப்பட்டுக் கௌரவத்துடன் வாழ்கிறார்கள். இவை அனைத்திற்கும் காரணமாகவிருந்த மகாத்மா காந்தியைப் பாரதத்தின் தந்தை யென்று நம் மக்கள் அழைப்பது ஆச்சரியமான விஷயமல்ல. புரட்சி, புரட்சி யென்று மக்கள் பேசிக்கொண்டிருந்த காலம் அது. ஆனால் மிகக் கேவலமாகப் பேசியவர்கள் மூலம் அப்புரட்சி உண்டாகவில்லை. பேச்சிலும் வீண் சண்டைகளிலும் அவர்கள் சக்திகளனைத்தும் செலவாகிவிட்டன. ஆனால் மாகத்மாஜி தனது ஒப்பற்ற அன்பின் மூலமும், சேவையின் மூலமும் அப்புரட்சியை முதலில் மக்கள் மனத்தில் உண்டாக்கி, பின்னர் தேசத்தில் உண்டாக்கினர். யுத்தமின்றி இரத்தமின்றி இந்தியாவின் சுதந்திரத்தைப் பெற்றார் என்பதல்ல அவர் பெருமையின் சிகரம். உலகுய்ய அன்பு நெறியொன்று காண்பித்ததே அவருக்கு அனைத்திலும் பெருமையாகும்.

என்றென்றும் வழிகாட்டி

அவர் காலமான பிறகு நம் நாடும் மக்களும் வழிகாட்டியின்றி வானத்திற் சூரியனும் சந்திரனும் இன்றி, நட்சத்திரங்களும் மேகத்தால் மூடப்பெற்று, உலகம் இருளிற் கவ்வப்பட்டு இருப்பது போல் தோன்றுகிறது. அவர் மறைந்த இவ்வளவு சீக்கிரத்தில் சேவையும், தியாகமும் மறைந்து, சுயநலமும் பொருமையும் வளர்ந்து, கைலஞ்சமும் ஊழலும் மலிந்திருப்பது தேசத்தின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்பவர்கள் அனைவர் மனதிலும் மிகுந்த சோர்வையும் வருத்தத்தையும் உண்டுபண்ணியிருக்கிறது. மகாத்மாஜியின் புனித இலட்சியங்களே நமது சோர்வை அகற்றிப் பலம் கொடுக்கக் கூடியன வாகும்.

அவர் கருத்துக்களை விளக்கக் கூடிய பாட்டு ஒன்று இன்றும் இனிமை யூட்டிவருவதாகவே யிருக்கின்றது :

எத்தனை ஜென்மங்கள் வந்து பிறந்தாலும்
இந்திய மண்ணிடை வேண்டுவனே
சத்திய ஆர்வமும் நித்திய சேவையும்
சாகஸ வாழ்க்கையும் வேண்டுவனே
பித்தனுய் மாறியே தொண்டுகள் செய்திடும்
பெருமையாம் வாழ்க்கையை வேண்டுவனே
ஏழை எளியவர் எங்கள்நன் னாட்டிலே
என்றும் பசியாற வேண்டுவனே
கோழைக ளில்லாமல் வீரத் தொழில்செய்யும்
கூட்டமிந் நாட்டிலே வேண்டுவனே
தேசம் அழைத்திடின் பாசம் களைந்திடும்
தெய்வீக நல்லருள் வேண்டுவனே
நீசம் அகன்றிட நீதி துலங்கிட
நேர்மையாய்த் தொண்டுக ளாற்றுவனே
முப்பது கோடிக்கு நன்மைகள் செய்வதே
முத்தி நிலைஎன்று சாற்றுவனே
இப்பணி செய்வதில் எவ்வகைத் துயரமும்
ஏற்றிடு வேனிது சத்தியமே.

அவருடைய ஆத்மா நமக்கு என்றென்றும் வழிகாட்டியாக இருந்து நம் நாடும் மக்களும் முன்னேற அறிவும் ஒளியும் அளிக்குமாக.

முன்னீசுவரம்

குல. சபாநாதன்

ஒரு தலத்தை அடைவதற்கு அடியார்கள் அநுபவிக்கும் துன்பங்கள் இறைவனைத் திரிகரண சுத்தியுடன் வழிபட அவ் வடியார்களைப் பக்குவப்படுத்தும் வாயில்களாகக் கருதப்பட்டன முற்காலத்தில். ஆனால் இக்காலத்திலோ கோயிற் சந்நிதானத்திற் போய் இறங்கக்கூடிய நவீன வசதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. எனவே பண்டைக்காலத்தில் யாத்திரை செய்த அடியார்கள் பெற்ற இன்பத்தை இக்காலத்தில் எவ்வித துன்பமுமின்றி விரைவாகச் சென்று திரும்பும் அன்பர்கள் அனுபவிக்கின்றார்களோ என்பது சந்தேகம். கதிர்காமம், சமந்தகூடம், முன்னீசுவரம், திருக்கேதீசுவரம் முதலிய தலங்களுக்குப் பண்டைக் காலத்தில் யாத்திரை செய்தவர்கள் அநேக கஷ்டங்களை அடைந்தார்கள். எனினும் அவற்றை இன் முகத்துடன் இறைவன் நாமத்தை ஓதிய வண்ணம் அநுபவித்து வெற்றி கண்டார்கள். அக் காலத்தில் இலங்கையிற் பரவியிருந்த மலேரியாச் சுரமும் யாத்திரிகர்களைத் தாராளமாகத் தாக்கி வந்தது.

நண்பரின் அழைப்பு

இருபது வருஷங்களுக்கு முன் என்ற ஞாபகம். சிலாபத்திலுள்ள நண்பர் ஒருவர் கடிதம் எழுதியிருந்தார். 'நவராத்திரி பூசை இங்கே மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது. ஒருமுறை வந்து பார்த்தாற்றான் நான் கூறுவதன் உண்மையினை உணர்வீர்கள். இம்முறை உங்களைக் கட்டாயம் எதிர்பார்க்கின்றேன். நான் இங்கே இருக்கும்பொழுது வந்தால், பல வசதிகளையும் செய்து வைக்கலாம்' என்று அக்கடிதத்திற் குறிப்பிட்டிருந்தார். கோயிலைத் தரிசிக்கவேண்டுமென்ற விருப்பம் நெடுங்காலமாக இருந்ததெனினும், அவ் வூரிலிருந்த காட்டுச் சுரத்தை நினைந்தபோது முன்னிருந்த விருப்பம் பையவே நழுவிவிடுவது வழக்கம். என் நண்பர் சிலாபத்தில் இருக்கும் பொழுது யாத்திரை செய்வது உகந்தது எனக் கருதி நானும் சில நண்பர்களும் கொழும்பிலிருந்து புகையிரத மார்க்கமாகப் புறப்பட்டோம். எங்கள் நண்பர் எங்களை எதிர்பார்த்த வண்ணம் சிலாபம் புகையிரத நிலையத்தில் நின்றார். அவ்விடத்தில் இறங்கினவுடன், கடற் கரையருகில் மிகவும் அழகுவாய்ந்த அவருடைய இல்லத்திற்குக் கூட்டிச் சென்றார்.

"கோயில் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?" என்று நான் கேட்டேன்.


"அவசரப்படுகிறீர்கள் போலிருக்கிறதே. கோயில் இங்கிருந்து இரண்டு மைல் தூரத்திலுள்ளது. சாயங்காலப் பூசைக்குப் போகலாம்" என்றார், என் நண்பர். அவ்வாறே ஓழுங்கு செய்துகொண்டு கடற்கரை யோரமாகச் சிறிது தூரம் உலாவச் சென்றோம். சென்ற பொழுது நெய்தல் நில மக்களின் குடிசைகள் தென்பட்டன.

"பறழ்ப்பன்றிப் பல்கோழி
உறைக்கிணற்றுப் புறச்சேரி
மேழகத் தகரொடு சிவல்விளை யாட"

எனக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பல்லாண்டுகட்கு முன் பிடித்த படம் இப்பொழுதும் அழியாதிருப்பது கண்டு மகிழ்ந்தோம். உறைக்கிணற்றில் தண்ணீர் மொள்ள வந்த பெண்கள் சிங்களப் பெண்களைப் போலச் சேலைகட்டியிருந்தார்களெனினும் தமிழ் மொழியிலே அளவளாவுதலைக் கேட்டுப் பெரு வியப்படைந்தோம். இவர்கள் சிறிது காலத்துக்குள் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களாகி விடுவார்கள் என்பதற்குரிய அறிகுறிகள் காணப்படுகின்றன.

ஒரு வசிகர சக்தி

சாயங்காலமானதும் கோயிலுக்குப் புறப்பட்டோம். கோபுரம் எப்பொழுது தென்படும் என்ற ஆவலுடன் பார்த்தவண்ணமே சென்றோம். தென்னிந்தியக் கோபுரங்களைப் போல இராஜ கோபுரமாவது விமானமாவது காணப்படவில்லை. பாரிய கட்டடங்கள் இல்லா



சிலாபத்திலுள்ள முன்னீசுவர ஆலயம்

'தேமேவு பூவன நெருங்குதெங் கம்பொழி
றிகழ்முனீச் சுரத் தமர்ந்தென்
சித்தமிசை குடிகொண்ட வடிவழகி யம்மையே
சிற்சத்தி யான வுமையே'

எனப் புலவர்கள் பாமாலை சூட்டித் தொழுதேத்தும் திருத்தல மேவிய முன்னீசுவரம் மிகப் புராதனமானது. முன்னீசுவரம், இராமேசுவரம், கோணேசுவரம், கேதீசுவரம், நகுலேசுவரம் எனும் பஞ்சேசுவரங்களுள் முன்னீசுவரம் முன்னர்த் தோன்றியதெனச் சரித்திராசிரியர்கள் கருதுகின்றனர்.



கதிர்காமம் முருகன் ஆலயம்

வேலுடையான் அன்பர் வினையுடைய வேமிதிக்கும்
காலுடையான் பன்னிரண்டு கண்ணுடையான் — நாலுமறை
தேடும் திருப்பாதம் தீண்டி உலகமுய்ய
ஆடும் கதிரை அருட் சிலம்பிலுறை
கதிர்காமம் முருகன் ஆலயம்.

திருந்தாலும் புராதன கோயில் என்ற தன்மையில் அங்கே ஒரு வசீகர சக்தி தாண்டவமாடுவதை எளிதில் உணர்ந்தோம். ஆவலோடு உள்ளே சென்றோம். உள்ளே சென்றவுடன் வடிவாம்பிகை கொலுவிருக்குங் கண் கொள்ளாக் காட்சியைக் கண்டு கைகூப்பி வணங்கிக் கண்ணீர் விட்டோம். அத் திருவுருவங் கண்டவர் மனத்தைக் கவர்ந்து ஓர் உள்ளக் களிப்பையும் பக்தியையும் உண்டுபண்ணும் வசீகர சக்தி ததும்பி வழியும் தன்மை வாய்க்கப் பெற்றது. நடராசர் திருவுருவம் பல கோயில்களில் இருப்பினும் சிதம்பரத்திலுள்ள நடராசர் திருவுருவம் தலைசிறந்ததாக அமைந்து விளங்குகின்றது. அதற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அவ்வாறே இக்கோயிலிலுள்ள அம்பிகையின் திருவுருவம் தனிப்பட்ட சிறப்புடையதாக அமைந்திருப்பதைச் சிற்பக்கலை வல்லாரும் பாராட்டியிருக்கின்றனர். இவ்வழகிய திருவுருவத்தைக் கண்ட புலவர் பலர் நெக்கு நெக்குருகிப் பாமாலை சூட்டிச் சென்றுள்ளனர். இவ்வாறு உளமுருகிப் பாமாலை சூட்டிய புலவர் ஒருவரின் ஒரு மலரை மட்டும் உங்கட்கு எடித்துக்காட்ட விரும்புகிறேன். வடிவாம்பிகையின் அழகைச் சொல்லோவியத்தில் தீட்டியுள்ளார் இப் புலவர் :

பூமேவு மளகமுந் திலகமிடு நுதலும்
புனைந்தபொற் குழையி னழகும்
புனிதமுறு நாசிகா பரணமும் புன்னகை
பொலிந்தசெம் பவள வாயுந்
தூமேவு முத்தமணி வச்சிரப் பதக்கமுந்
துலங்குபட் டாடை யுடையுஞ்
சுடர்விடு சிலம்பினெடு தண்டைக ளிசைத்திடுந்
துய்யமல ரடியிணை களும்
மாமேவு மரகதம் போலொளிரு மேனியும்
மகிழபய வரத கரமும்
வளரருட் பார்வையுங் கொண்டடிய னேனுனது
வடிவினைக் காண வருவாய்
தேமேவு பூவன நெருங்குதெங் கம்பொழி
றிகழ்முனீச் சுரத் தமர்ந்தென்
சித்தமிசை குடிகொண்ட வடிவழகி யம்மையே
சிற்சத்தி யான வுமையே.

நாங்கள் முதன்முதலாகச் சென்றபொழுது பிரம்மஸ்ரீ மு. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களே பூசைகளைச் செய்தார்கள். இவர் பக்தி சிரத்தையுடன் கிரியைகளைச் செய்வதிற் பேர் பெற்றவர். இவருக்குப்பின் இவருடைய இனத்தவர்கள் இக் கோயிலைப் பரிபாலித்து வருகின்றனர். இக்கோயிலிற் சைவர்கள் மட்டுமன்றிப் பௌத்தர்களும் வந்து வணங்குகின்றனர்.

பெருமைமிக்க திருத்தலம்

முன்னேஸ்வரம், இராமேஸ்வரம், கோணேஸ்வரம், கேதீஸ்வரம், நகுலேஸ்வரம் என்னும் பஞ்சேசுவரங்களுள் முன்னர்த் தோன்றிய கோயில் முன்னேஸ்வரம் எனச் சரித்திராசிரியர்கள் கருதுகின்றனர். இக் கோயிலின் பெயர் முன்னேசுவரம், முன்னீசுவரம், முனீசுவரம், முன்னீச்சுரம் எனப் பலவாறாக வழங்கப்படுகின்றது. இப்பொழுது பெயர் தெரிந்துகொள்ள முடியாதிருக்கும் முனிவர் ஒருவர் வழிபட்ட ஈசுவரம் எனப் பொருள் கொள்ளல் அவ்வளவு பிழையன்று.

இத்தலத்தின் பெருமை தக்ஷிண கைலாச புராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீராமபிரான் இலங்கைக்கு வந்து இராவணனுடன் யுத்தந் தொடங்க முன்னர் முன்னேஸ்வரத்தில் தொழுது சென்றனர் என சேர் பொன். அருணாசலம் அவர்கள் 1901ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பு நூலிற் குறிப்பிட்டுள்ளார். இராவண சங்காரஞ் செய்தபின்னர் இராமபிரான் சீதாதேவியோடு திரும்பிச் செல்லும்பொழுது பிரம்மஹத்தியானது அவரைப் பின் தொடர்ந்ததென்றும், முன்னேஸ்வர க்ஷேத்திரத்தை யடைந்தபொழுது அது தம்மை விட்டு நீங்கியதால் அவர் அக்கோயிலிலுள்ள முன்னநாதேசுவரரையும் வடிவாம்பிகையையும் தொழுதார் என்றும் தக்ஷிண கைலாச புராணம் கூறுகின்றது.

கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கைக்கு வந்து கோணேசர் ஆலயத் திருப்பணியை நிறைவேற்றிய குளக்கோட்டு மகாராசன் முனீஸ்வரத்திற்கும் சென்று, திருப்பணிகளை நிறைவேற்றிக் கும்பாபிஷேகத்தை நடத்தினர் என்றும், நித்திய நைமித்தியங்கள் சிறப்பாக நடந்துவரும் பொருட்டு நெல் விளைநிலங்களைக் கொடுத்துத் தனியுண்ணைப் பூபாலன் என்பவனை மேலதிகாரியாக நியமித்தார் என்றும் முன்னேஸ்வர மான்மியம் எனும் நூல் கூறுகின்றது. இதன்பின்னர் ஜயவர்த்தனக் கோட்டையிலிருந்து அரசாண்ட சூரியகுல திலகரும் மகாபராக்கிரமபாகு எனச் சிறப்பித்து அழைக்கப்

பட்டவருமாய ஆரும் பராக்கிரமபாகு (கி. பி. 1410 — 1468) இக்கோயிற் பொருள்களை முதலில் அபகரித்தார். அவருக்கு அதனால் நேர்ந்த நோய் வருத்தக் கண்டு, தாம் முடி சூடிய ஆண்டிலிருந்து 38ஆவது ஆண்டில் மீட்டும் பொருள்கள் யாவற்றையும் கொடுத்து உதவியதோடு, நித்திய நைமித்தியங்களுக்கு வேண்டிய திரவியங்களை மாதந்தோறும் அரண்மனைக் களஞ்சியத்திலிருந்து கொடுக்கும் படியும் கட்டளையிட்டு கி. பி. 1448 ஆம் ஆண்டில் மேற்கூறிய விபரங்களைச் சிலாசனம் பண்ணிக் கொடுத்தார். இக்கோயிலில் இன்னும் பல சாசனக் கற்கள் இருத்தலைக் காணலாம். இலங்கையில் வேறெந்தக் கோயிலிலும் இவ்வளவு நீடிய சிலாசாசனங்களைக் காண முடியாது.

போர்த்துக்கேயர் காலத்தில்

இனி, இலங்கை போர்த்துக்கேயர் ஆளுகைக் குட்பட்டிருந்த காலத்தில் அவர்கள் பொருள் பெறுவதற்காகப் பல சைவக்கோயில்களைச் சூறையாடி வந்தனர். இதற்குப் பயந்தே கோயிற் குருக்கள்மார், விக்கிரகங்களையும், விலையுயர்ந்த பொன்னுபரணங்களையும் கேணிகளிலும், தாமரைத் தடாகங்களிலும், கிணறுகளிலும் புதைத்து வைக்க நேர்ந்தது. இக் கோயிலுக்கு முன்னர்க் காணப்படும் தடாகத்திலிருந்து சில விக்கிரகங்கள் அவ்வாறு வெளிக் கிளம்பின. போர்த்துக்கேயரின் சேனையொன்று கி. பி. 1575ல் சிலாபத்தை அடைந்து அதனை அழித்த பின்னர் முன்னேசுவரத்திற்குச் சென்று சூறையாடினது எனவும், அக் கோயிலில் அமைக்கப்பெற்ற லிங்கம் ஓர் ஆளளவு உயரம் உள்ள தெனவும், அது வானத்திலிருந்து தோன்றிற்றென நம்பப்படுகிற தெனவும் போர்த்துக்கேய சரித்திர ஆராய்ச்சி அறிஞர் டாக்டர் பவுல் பீரிஸ் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். இந்தக் கோயிலுக்கு இலங்கை அரசர்கள் பரம்பரை பரம்பரையாக இறையிலி நிலங்களை வழங்கி, செல்வம் நிறைந்த கோயிலாகத் திகழச் செய்தனர் என்பதற்கு இங்குள்ள சாசனங்களே சான்று பகரும் என மேற்கூறிய அறிஞர் குறிப்பிட்டுள்ளார். பழைய லிங்கம் கோயிலின் பின்புறத்தில் இப்பொழுதும் காணப்படுகின்றது.

பலவாண்டுகட்குப் பின்னர் கண்டியிலிருந்தரசாண்ட கீர்த்தி ஸ்ரீராஜசிங்க மகாராஜா அவர்கள் (கி. பி. 1747 — 1780) இத்தலம் பழுதுற்றுக் கிடப்பதை யறிந்து, சோழ தேசத்திலிருந்து சிற்பாசாரியர்களை வரவழைத்துத் திருப்பணிகளை நிறைவேற்றி, பூசைகள் கிரமமாக நடத்தற்கேற்ற ஏற்பாடுகளைச் செய்து, குருக்கள்மாருக்கு 32 அவுண நெல் விளை நிலங்களைச் சகாப்தம் 1675 செல்லாகின்ற ஸ்ரீமுக வருஷம் ஆவணி மாதம் 14ஆம் திகதி (கி. பி. 1753) தாமிர சாசனம் பண்ணிச் சொந்தமாகக் கொடுத்தார்கள். சில காலஞ் சென்ற பின்னர் இக் கோயிலை மேற்பார்வை செய்தவர்கள் ஒழுங்கின்மையால், மீட்டும் இக் கோயிற் பரிபாலனம் சீர்கெட்டது; பூசைகளும் நிறுத்தப்பட்டன. யாழ்ப்பாணத்துப் பிரம்மஸ்ரீ நா. குமாரசுவாமிக் குருக்கள் அவர்களுக்கு ஏற்பட்ட நோய் வடிவாம்பிகையின் திருவருளால் நீங்கப் பெற்றமையின், அவருடைய பெரு முயற்சியாலும், சிலாபம், கொழும்பு முதலிய ஊர்களிலுள்ள சைவப் பிரபுக்களுடைய முயற்சியாலும் கி. பி. 1875ஆம் ஆண்டளவில் இப் பொழுதுள்ள கோயில் மீண்டும் புனருத்தாரணம் செய்யப்பட்டது. அங்ஙனம் புதுப்பித்துக் கட்டுங் காலத்தில் சாசனம் பொறிக்கப்பெற்ற கருங்கற்களை அடிதலை மாறி வைத்துக் கட்டி விட்டார்கள். அன்றியும் அவை வெய்யிலிலும் மழையிலும் கிடந்தமையால் பல எழுத்துக்கள் நன்கு புலப்படாது அழிந்துபோய்விட்டன. இந்தச் சாசனங்களைப் படியெடுத்துக் கோயிலின் வரலாற்றை அறிந்துகொள்ள உதவிபுரிதல் புராதன பொருளாராய்ச்சிப் பகுதியின் கடமையாகும். ஸ்ரீ குமாரசுவாமிக் குருக்களின் புதல்வர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் இக் கோயிற் பூசகராயிருந்த காலத்தில் இக்கோயிலின் சிறப்பு இலங்கை முழுவதும் பரவலாயிற்று. ஆண்டு தோறும் உற்சவம் திருவிழாக்கள் சிறப்பாக இப் பொழுது நடைபெற்று வருகின்றன. இலங்கையின் பல கோடிகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பக்தியுடன்வந்து வழிபட்டுச் செல்கின்றனர். கோயிற் பூசைகள் கிரமமாக நடைபெறுகின்றன.

புலவர்களின் பாமாலைகள்

முன்னேசுவர நாதரையும் வடிவழகியம்மையையும் காலத்துக்குக் காலம் வழிபட்டுச் சென்ற புலவர்கள் அநேக பாமாலைகளைச் சூட்டியிருக்கின்றனர். ஆனால் அவற்றையெல்லாம் தொகுத்து ஒரு நூலாக வெளியிட இதுவரை

எவரும் முன்வரவில்லை. இது ஒரு பெருங் குறை யென்றே சொல்லலாம். காரைநகர் ஸ்ரீமத் கா. சிவசிதம்பர ஐயரவர்கள் முனீசுரர் நவமணி மாலையினை (1887) இயற்றியுள்ளார். கொழும்பு மு. சரவணமுத்துப்பிள்ளையவர்கள் முனியேசுர தீர்த்த யாத்திரை வழிநடைப் பதம் எனும் நூலினை (1897) இயற்றியுள்ளார். கொக்குவிற் குகதாசர் ச. சபாரத்தின முதலியார் முன்னை நாதசுவாமி பேரிலும் வடிவழகியம்மைபேரிலும் ஆசிரிய விருத்தங்கள் இயற்றியுள்ளார். கொக் குவில் சி. சிலம்புநாதபிள்ளையவர்கள் (1) முனீ சுரத்து வடிவழகியம்மை ஆசிரிய விருத்தமும் பதிற்றந்தாதியும் (2)முனீஸ்வர ரூஞ்சல் எனும் நூல்களை இயற்றியுள்ளார். கொழும்பு அ. வயித் திலிங்கம் அவர்கள் முனீசுரவந்தாதி பாடியுள் ளார். புழுதிவயல் எஸ். ஆர். தம்பு அவர்கள் முனீஸ்வர வடிவழகி பதிகம் இயற்றியுள்ளார். இன்னும் பல நூல்களுள.

உலகில் உற்பவித்த மக்கள் யாவரும் இறைவனின் பிள்ளைகள் என்பதற்கும், இறை வனின் சந்நிதானத்தில் சாதி, சாகிய, மத பேதங் கடந்து நின்று மக்கள் யாவரும் வழிபட லாம் என்பதற்கும் வடிவழகியின் சந்நிதானம் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. ஒரு முறை அந்தப் புனித தலத்தைத் தரிசித் தால், ஆண்டு தோறும் அல்லது அடிக்கடி தன் னகத்தே இழுக்கும் காந்த சக்தி வாய்ந்தது. நீங்கள் ஒருமுறை போய்ப் பாருங்கள்.

போற்று முனீசன்றன் பொன்னடியை நெஞ்சேநீ
மாற்றும் பிறவி மயல்.

— முனீசுரர் நவமணிமாலை

ஆலயத்தின் தத்துவப்பொருள்

★

எந்த ஓர் இயக்கத்தை மனிதன் தொடங்கினாலும், அதனை வளர்த்து வைத்துப் பயன் பெற் றாலும் அந்த இயக்கத்துக்கு ஒரு தத்துவப் பொருளைக் காண்பது அவனுடைய நுட்ப அறிவின் ஆற்றல் என அறியவேண்டும். அப்படிப்பட்ட நுண்ணிய அறிவுடைய மனிதன் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தான் வளர்த்த சமய நிலையங்களுக்கு ஒரு தத்துவப் பொருளைக் காணமாட்டானா? ஒப்புவமைகளை வைத்துக்கொண்டு அரிய தத்துவப் பொருள்களை அவன் அங்கேயும் காண்பான் அல்லவா? ஆகவே, சமய நிலையங்களில் மிகச் சிறந்ததாகும் கோயில் அமைப்பின் தத்துவப் பொருளை அவன் கண்டுகொண்டது ஒரு வியப்பன்று. கோயில் இறைவன் எழுந்தருளும் இல்லம் ஆகும். (கோ + இல்). மனிதன் வசிக்கும் இருப்பிடம் அவனுடைய வீடு ஆகும். மனிதனுடைய செல்வ நிலைக்குத் தக்கவாறு அவன் வசிக்கும் வீடும் இருக்கும். அது குடிசையாகவும் மாளிகை யாகவும் இருக்கலாம். அதுபோலவே இறைவனுடைய கோயிலும் அதன் சூழ்நிலையைப் பொறுத்துச் சாதாரணமாக ஒரு நிலைமுதல் ஏழு நிலைமாடம் வரை உயர்ந்திருக்கும். இது சாதாரண உவமை யாகும். இதனினும் உயர்ந்த ஓர் உவமை உண்டு. கோயில் இறைவன் உறைவிடம் ஆகின், மனிதனுடைய உடல் அவனுடைய உயிர் அல்லது ஆன்மா வசிக்கும் அரிய இருப்பிடம் ஆகும் அல்லவா? இதனை உயர்ந்த ஞானிகளும் உணர்ந்திருக்கின்றார்கள். ஒப்புயர்வற்ற சித்தர் திருமூலநாயனர் இவ்வுவமையைக் கூறுகின்றார்:

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானுர்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

— வி. எம். இராமச்சந்திரன் செட்டியார்

சமயமுங் கலையும்

கலைப்புலவர் க. நவரத்தினம்

மக்களின் பண்பாட்டிற்கு உறுதுணையாக அமைந்துள்ள சாதனங்களுள், நுண்கலைகள் சமயத்துக்கு அடுத்த படியில் வைத்து எண்ணப்படுந் தகைமை யுடையன. சாஹித்திய தருப்பண நூலாசிரியராகிய **விசுவநாதர்** "இரசானுபவம் என்பது பிரமானுபவத்திற்கு அடுத்த நிலையாகும்" என்கின்றார். இரசித்தல் என்னும் பதத்தின் சாதாரணப் பொருள் திருப்தியடைதல் என்பதாம். கருமேந்திரியங்கள் வழியாகப் புலன்கள் (பூரண) திருப்தியடைவதனால் ஏற்படும் இன்பம் இலௌகீகமானது; கால எல்லைக் குட்பட்டது. ஆனால், மனோலயத்தின் மூலம் அடையும் ஆனந்தம், இரசானுபவம் எனப்படும். இவ்வனுபவம் புறத்தேயிருந்து மனத்துள் புகுவதன்று; ஜட சம்பந்தத்தால் ஏற்படுவதன்று — சித்தத்துள் மலர்ந்து பிரகாசிப்பது. புலன்களால் அடையும் இன்பம் வேறு; உள்ளத்தின் மலர்ச்சியால் ஏற்படும் ஆனந்தம் வேறு. புலன்கள் வழியாகத் தோன்றும் இன்பம் சுயநலப் பற்றுடையதுமன்றிச் சிறிது நேரத்துள் மறையும் தரத்தது. சிந்தை அழகினை நுகர்வதினால் ஏற்படும் ஆனந்தம் ஆத்மாவின் பிரபையை விசாலிக்கச் செய்கின்றது. நுண்கலைகளின் மூலம் ஆனந்தத்திலே திளைத்து நிற்கும் ஆன்மா, தனது சொந்த சொரூப நிலையில் நிற்கும்.

பேரின்பம் அல்லது சிவானந்தம்

மனதின் விவகாரங்களுக்கு அதீதமான நிலையில் ஏற்படும் அனுபவமே பேரின்பம், அல்லது சிவானந்தம் எனப்படும். அது எல்லாவற்றையுங் கடந்தது. எவராலும் அளத்தற்கரியதாய், முடிவற்று நிற்பது. உபநிடதங்கள் பிரமமே ஆனந்தம் என்று உரைக்கும். தைத்திரிய உபநிடதம் "பிரமமே ஆனந்தமாக அறியப்படுவது. சீவராசிகள் யாவும் ஆனந்தத்தினின்றே தோன்றுகின்றன. அப்படித் தோன்றியன யாவும், ஆனந்தத்திலும், ஆனந்தத்தாலும் வாழ்கின்றன. அவை மேலோங்கிச் சென்று ஆனந்தத்தையே அடைகின்றன" என்று கூறுகின்றது. மாணிக்கவாசகப் பெருமான் திருவாசகத்திற் கடவுளை, 'ஆனந்தன்' எனக் கூறி, வாழ்க்கையிற் பெறும் அமிர்தமான பொருள்களுக்கு அவரை ஒப்பிடுகின்றார்.

"அமுதளித்தாறு மானந்தன்"

"கோதிலாவமுதே"

"நெல்லிக் கனியைத், தேனைப்பாலை,
நிறையின் னமுதை, அமுதின் சுவையை"


என்று பாடிப் பரவசப்படுகின்றார். தேவாரத்தில், இறைவனை "ஏழிசையாய், இசைப்பயனாய்" என்றும், "பாட்டில் பண்ணாய்", "பழத்தின் இரதமாய்" என்றும் கூறுவதும் காண்க.

'ஆத்மானந்தம்', 'சிவானந்தம்' ஆகிய இரு பதங்கள், கலை, சமயம் என்பவற்றின் உண்மைப் பொருளையும் நோக்கத்தையும் வெளியாகக் காட்டுவனவாகும். இந்திய நுண்கலைகள் யாவும் மன அமைதியை ஏற்படுத்தி ஆன்மாவின் இன்ப நிலையைப் பிரகாசிக்கச், செய்யும் கருவிகளாகும்.

"வெண்மைப் பிரகாசம் பொருந்திய நித்திய வஸ்து பல வர்ணக் கண்ணாடிகளுக் கூடாகத் தோன்றும் தன்மைதான் கலை என்பது" என்று ஆங்கிலக் கவியாகிய **ஷெல்லி** கூறுகின்றார். வர்ணக் கண்ணாடிகளாகிய நுண்கலைகளுக்கூடாக, நித்திய வஸ்து பிரகாசிக்கும் பொழுது ஏற்படும் பல வர்ணப் பிரகாசமே கலையாகும். நித்திய வஸ்துவின் பிரகாசம் சங்கீதம், நடனம், சிற்பம், ஓவியம் என்பவற்றின் மூலம் அனுபவிக்கப்படுங்கால் அது கலை அநுபவம் எனக் கூறப்படும். பல வர்ணக் கண்ணாடிகளாகிய கலைகளுக்கூடாகவன்றி, அப் பிரகாசத்தை நேரே தரிசிக்கப்பெறின், அவ்வனுபவப் பேறே சிவானுபவம் எனப்படும்.

கவிஞர்களும் கலைஞர்களும்

உண்மையான கலை புதிய உணர்ச்சியை அளிப்பதும், உயரிய நோக்கத்தை இலக்காகக்



கலைப்புலவருக்குப் பொன்னாடை

'ஈழகேசரிப் பொன்னையா நினைவு மன்ற'த்தினர், கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள் எழுதிய 'இலங்கையிற் கலை வளர்ச்சி' என்ற நூலினை 1954 இல் வெளியிட்டனர். இந் நூலின் அரங்கேற்று விழாவின்போது நூலாசிரியர் அவர்களுக்குத் தமிழறிஞர் சு. நடேசபிள்ளை அவர்கள் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தனர். அருகில் வீற்றிருப்பவர் மன்றத் தலைவர் ச. பேரின்பநாயகன் அவர்கள்.

✸ கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள் எழுதிய '**இலங்கையிற் கலைவளர்ச்சி**' எனும் நூலின் அரங்கேற்றுவிழா, யாழ்ப்பாணம் வைத்தீசுவர வித்தியாலயத்தில் நடைபெற்ற ஞான்று (20-2-55) வித்துவசிரோமணி பிரமஸ்ரீ **சி. கணேசையர்** அவர்கள் அந்நூலுக்கு அளித்த

சிறப்புப் பாயிரம்

✸

இலகுதமிழ் மொழியினெடு மாங்கிலந் தன்னிலுறு
மினையில்பெரு நூல்களாய்ந்தோன்
யாழ்ப்பாண நாட்டிலுறு வண்ணைநகர் வாழ்பவன்
இயம்புநவ ரத்தினப்பேர்
இயைந்தவன் 'றென்னிந்த்ய சிற்பவடி வங்க'ளென்
றிசைநூலை முன்செய்தவன்
'இலங்கையிற் கலைவளர்ச் சி'ப்பெயர்கொ ணூலொன்றை
இந்நா ளியற்றியதனை

அலகில்வள முற்றிடுந் தென்மயிலை தோன்றினேன்
அமைந்தபொன் னையநாமன்
அறிஞர்வாழ் சுன்னையம் பதியினிலொ ரச்சகம்
அமைத்துநற் றமிழ்நூல்களை
அச்சிற் பதித்துமுய ரீழகே சரியெனும்
அறிவுதரு பத்திரிகையை
அதிபனு யிருந்தங்கு நடாத்தியும் பெருநன்மை
ஆற்றினே னினவுமன்றின்

குலவுமுதல் வெளியீட தாகவிங் காக்கியே
கூறுதமி ழாங்கிலத்தில்
கொண்டபெரு நூலெலாங் கற்றபே ரறிஞரைக்
குரையாழி சூழிலங்கைக்
கோவேந்தர் மன்றிலோ ரமைச்சுமாய் விளங்குவோன்
கோதிலுயர் சாந்தமென்னுங்
குணமதே வடிவாய சிறிநடேச பிள்ளையாங்
கோமான்றன் றலைமைதன்னில்

உலகுநிகழ் சகவருட மாயிரத் தெண்ணூரே
டுற்றவெழு பத்தேழினில்
ஒன்றிவரு ஜயவருட முறுமாசி மதிதன்னி
லோரெட் டதாந்தேதியில்
ஒளிசெய்வெங் கதிரவன் வாரநிகழ் சிவராத்ரி
உறுதினம் வைத்தீஸ்வர
உயர்கலா சாலையிற் பண்டிதர்கள் சபையினிடை
ஓதிமகிழ் வித்தனனரோ.

கொண்டதாயுமிருக்கும். இயற்கை உருவங்களை, கண்ணுக்குத் தோன்றும் விதத்தில் அப்படியே அமைத்து விடுவதுதான் கலையின் நோக்கம் எனக் கொள்ளுதல் தவருன கருத்தாகும். சாதாரண மக்களின் உள்ளத்தில் இல்லாத உணர்ச்சிகளை, ஒரு கலைஞன், தான் சிருட்டிக் கும் பொருள்கள் மூலம், அவர்களிடத்தே தோற்றுவிக்கின்றான். அக் காரணம் பற்றித் தான் கலையானது புதிய உணர்ச்சிகளை ஏற் படுத்தும் கருவியெனக் கொள்ளப்படுகின்றது. கவிஞர்களும், கலைஞர்களும் இயற்கைக்குப் பின்னால், ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் உண்மைப் பொருளுடன் ஒன்றுபடும் ஆற்றல் உடையவர்க ளாவர். அவர்கள் தமது ஒப்பற்ற உன்னத, உண்மைக் காட்சியிற் கண்டு அனுபவிக்கும் இன்பப்பேற்றை, பிறரும் அனுபவித்து இன் புறும் வண்ணம் கவிகளாகவும், ஓவியங்களாக வும், இன்ப வடிவங்களாகவும் அமைக்கின் றார்கள். இந்துக்களின் தத்துவ ஞானக் கருத்தின் படி, நமக்குத் தென்படும் பிரபஞ்சம் உண்மை யானதன்று. உண்மை வஸ்து காணப்படும் பிரபஞ்சத்திற்கு அப்பாற்பட்டது. கலைஞனும், ஞானியுமே அதனுடன் கலந்து உறவாடுகின் றனர். ஆனால், சாதாரண மக்கள் கலைவல்லான் அமைக்கும் பொருள்களின் துணைக்கொண்டே உண்மைப் பொருளின் தன்மையை உணர முயல்கின்றனர்.

இந்தியாவில் நுண்கலை வல்லார், சமய ஆசாரியர்கள் நிலையில் வைத்து மதிக்கப்பட்டு வந்தனர். பேரின்ப நிலையடைந்த ஞானிகள் கண்டனவற்றை, நுண்கலைஞன் திருவடிவங்களி லும், ஓவியங்களிலும் விளங்க வைத்தான். இந்நிலையைப் பெறுவதற்குக் கலைஞன் தியான யோகம் கைவரப்பெற்ற சமய ஒழுக்கமுடைய வனாய் வாழவேண்டியதாயிற்று. ஏனெனில், ஞானி கண்ட உயர்ந்த அனுபவங்களை, கலை வல்லோன் சாதனையும், ஒழுக்கமுமின்றி விளங்க முடியாது. பல்வேறு சமயச் சார்பினரின் சாஸ்திரங்களிற் கூறப்பட்டுள்ள உயர்ந்த அனுபவங்கள், நுண்கலை வல்லோனது உயிர்த் தத்துவம் வாய்ந்த கைவன்மையால், கண்ணுற் பார்த்து வணங்கப்படும் வடிவங்களாயின.

கலையின் அடிப்படையான நோக்கம்

இந்துக்களது நுண்கலைகளின் அடிப்படை யான நோக்கம் சமயசம்பந்தமானது. சமய பக்தியையும், கடவுள் வணக்கத்தையும் வளர்ப் பதற்கு அக்கலைகள் சாதகமாக அமைந்துள்ளன. சங்கீதமும், தோத்திரமும் பக்தியை வளர்ப் பதற்கு வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடியன. சிற்ப வடிவங்கள் வணக்கத்திற்கும் தியானத்திற்கும் அவசியமான சாதனங்களாக அமைந்துள்ளன. சிறிது பொழுதுக்குக் குறிக் கப்பட்ட வோரிடத்திலிருந்து தியானஞ் செய்ய விரும்பும் ஒருவரின் மனத்தில், தேவாரப் பண்ணின் இன்னிசை எவ்வளவு சாந்தியைக் கொண்டு வருகிறது? இதை எவர்தான் மறுக்க முடியும்? நடராஜப் பெருமானின் திரு வுருவத்துக்கு முன்பு ஒருவன் தன்னையும் தன் சூழ்நிலையையும் மறந்து பலமணி நேரம் அமைதியோடு நிலைத்தல் இயலும். சிதம்பரத்தி லுள்ள நடராஜப் பெருமானைத் தரிசித்த அப்பர் சுவாமிகள் தன்னை முற்றுய் மறந்து, பரவசப் பட்டு தம் அநுபவத்தைப் பின்வரும் பாட்டில் அமைத்துள்ளார்:

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற்
குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங்
காணப்பெற்றுல்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த
மாநிலத்தே.

கண்களைக் கவரும் அழகிய திருவுருவங்க ளின்றிக் கிரியா வழிபாடும், ஏனைய சடங்கு களும் நடப்பதென்பது முற்றுய் முடியாத காரிய மாகும் என்பதை நாம் மறத்தல் கூடாது.

இந்து சமயத்தில் திருவுருவ வழிபாடும், இதற்கு அப்பாற்பட்ட அருவ வழிபாடும் ஒருங்கு சேர்ந்து செல்வன. மனிதகட்கெட்டாத அனுபவங்களை, நுண்கலைகள் மூலம், தெளிவாக அனுபவிக்கலாம். ஏக வஸ்துவாகிய பரம் பொருளின் இயற்கை நிலை மனிதனால் அளந் தறிய இயலாதது. அப்பாற்பட்டதாயிருந்தாலும், சமயம், நுண்கலைகளைச் சாதனமாகக் கொண்டு, கண்டமானதிற்கும் அகண்டமானதிற்கும் இடை யிற் பாலம் அமைக்க முயல்கின்றது. இதனைக் காரணமாகக் கொண்டுதான் இந்து தத்துவ ஞானிகள், சமய வழிபாட்டு முறைகளை நுண் கலைகளுடன்தொடர்புபடுத்திவைத்தனர். ஆனால் இந்து சமய பாரம்பரியத்தில் வந்துள்ள நாங்கள் எங்கள் அடிப்படையான உண்மைகளை மறந்து,

செல்வப் பெருக்கிற் கண்ணுங் கருத்துமாக நிற்கும் மேலைத்தேச மக்களைப் பின்பற்றி, சமயத்தை நுண்கலைகளினின்றும் வேருகப் பிரித்து வைக்க முயல்கின்றோம். கலையை இரசிப்பதற்காக நாம் இன்று திகதி அட்டவணைகளிற் காணப்படும் மேனாட்டுமுறையில் வரையப்பெற்ற ஓவியங்களை வீடுகளில் வைத்து மகிழ்கின்றோம். இந்தப் போலி நிலை நீங்கவேண்டும். இந்து சமுதாயத்தில், நுண்கலைகள், ஆத்மீக வாழ்க்கையை வளர்த்தற்குரியனவாக அமைதல் வேண்டும். பண்டைய தமிழ்நாட்டிற் கலைகள் அவ்விடத்தைத்தான் பெற்றன.

மேனாடுகளிற் பெருமதிப்பு

இந்திய நுண்கலை வல்லோர் என்றும் அழியாது, நித்தியமாகவுள்ள சமயவுண்மைகளைச் சித்திரித்துக் காட்டுவதில் நிகரற்றவர்களாக விளங்கினர்கள். நடராஜப் பெருமானினதும் சுந்தரமூர்த்தி சுவாமிகளினதும் வடிவங்கள் போன்றன உலகில் வேறெந்த நாட்டிலும் காண்பதரிது. உலகப் பெருமை வாய்ந்த நுண்கலை நிபுணர்களின் பாராட்டுக்களை இவைகள் பெற்றுள்ளன. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் இந்திய நுண்கலைக்கு விசேஷ மதிப்பு நடராஜ வடிவத்தால் ஏற்பட்டதாகும். அதைக் கண்ட பின்னரே மேலைத் தேசக் கலை நிபுணரும், விமரிசனர்களும் இந்தியாவின் அழகு வாய்ந்த திருவுருவங்களை ஆவலுடன் ஆராயத் தொடங்கினர்கள்.

நடராஜவடிவத்தில் (படம் 1) சமயமும், விஞ்ஞானமும் கலந்து காட்சியளிக்கின்றன. இவ்வடிவம் சிவபெருமானின் பஞ்சகிருத்திய நிலையைத் தெளிவாக விளக்கிக் காட்டுகின்றது. **மனவாசகம் கடந்தார்** நடராஜ வடிவத்தின் கருத்தை மிகத் தெளிவாகப் பின்வரும் கவியில் விளக்குகின்றார் :

தோற்றந் துடியதனிற் ரோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்கார — மூற்றமா
வூன்று மலர்ப்பதத்தி லுற்றதிரோ தானமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

டக்டர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்கள் நடராஜ வடிவத்தைப் பற்றிக் கூறியதை இங்கு தருவது பொருத்தமாகும் :

" இவ்வடிவத்தின் ஒவ்வொரு பகுதியும் நேரே மனத்தின்கண் எழும் உணர்ச்சிகளைக் குறித்துக் காட்டுவது. இது பொய்க்கதையன்று. முற்றும் வெளிப்படையான உண்மை. இன்று பெயர்பெற்று வாழும் எந்த நுண்கலை வல்லோனும், எல்லா அற்புதங்கட்கும் அப்பாலாய், விஞ்ஞானத்துக்கு இன்றியமையாத தாய்த் தோன்றும், அந்தப் பெரிய சக்தியை, இவ்வளவு நுண்ணிய புத்தியுடனும், திறமையுடனும் உருவத்தில் அமைத்துக் காட்டுவது இயலாத செயலாகும்."

"பிரமா நித்திரை செய்யும் இராக்காலத்தில் பிரபஞ்சம் இயங்காதிருக்கும். சிவன் அருளும் வரையும் ஒன்றும் அசையமாட்டாது. ஆனந்தங் கொண்டு அவர் எழுந்து தாண்டவம் புரிய, நாத அலைகள் ஓசையை எழுப்புகின்றன. அவரைச் சுற்றி எல்லாம் இயங்குகின்றன. பலதிறப்பட்ட பிரபஞ்சத்தை அவரே தாங்கி நிற்பவர். நடித்துக் கொண்டு நிற்கும் சிவன், உகாந்த காலம் வந்தவுடன், எல்லா நாமரூபங்களையும் அழித்து, ஆன்மாக்களை ஆறுதல் அடையச் செய்கின்றார். இது கவியின் ஒப்பற்ற சிருட்டி மாத்திரமன்று ; விஞ்ஞானத்தின் முடிபுமாகும்." **அகஸ்றே** என்ற புகழ் பெற்ற சிற்பி நடராஜ வடிவத்தைப் பற்றிக் கூறுவதாவது : " இந்திய நாட்டின் நடராஜ வடிவம் **வீனஸ் டி மெடிசி** என்ற உருவத்திலும் சிறப்பு வாய்ந்தது. வீனஸ் டி மெடிசி தனது அழகைக் கைகள் மூலம் மாத்திரமே காட்டுகின்றது. ஆனால் நடராஜ வடிவம் அதனைத் தனது அங்க அபிநயங்களாற் காட்டுகின்றது."

நிகரற்ற இந்தியச் சிற்பி

சிவானுபூதி பெற்ற அடியார்கள் அடைந்துள்ள பேரானந்த நிலையையும், மன அமைதியையும், படம் பிடித்தாற்போல் நமக்குச் சித்திரித்துக் காட்டுந் திறமையில் இந்திய சிற்பிக்கு எவரும் நிகராகார். கொழும்பு நகரின்கண்ணுள்ள நூதன சாலையில் வைக்கப்பட்டிருக்கும் **சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வடிவம்**, (படம் 2) உலகின்கண்ணுள்ள சிறந்த சிற்ப வடிவங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இவ்வடிவத்தைப் பற்றி **வில்லியம் ரோத்தென்ஸ்ரீன்** என்னும் ஆங்கில கலைப் புலவர் பின்வருமாறு கூறுகின்றார் :


" நடராஜ வெண்கல வடிவத்தைப் போல அல்லது ஆனந்த உணர்ச்சி ததும்பும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வடிவத்தைப் போல

படம் 1



நடராஜ வடிவம்

படம் 2



சுந்தரமூர்த்தி சுவாமிகள்

சீனதேசத்துச் சிற்பி எவனும் திறமை வாய்ந்த வடிவத்தை அமைத்தானில்லை."

இவ்வடிவம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவன் சந்நிதியில், பேரானந்தத்திற் பரவசப் பட்டு நிற்கும் நிலையைக் குறிக்கின்றது. சிவ சந்நிதியில் தன்னை மறந்து பேரின்ப சுகத்தில் நிற்கும் நிலையை அவ்வடிவம் விளக்கிக் காட்டு கின்றது. கைகளைத் தூக்கிப் பிடித்தபடி, கால்களை நிதானமாக நிலத்தில் வைத்தபடி அமைந்துள்ள அவரது முழுவடிவமும், ஆத்மா அதியற்புதமான பேரானந்தத்தை அனுபவிக்கும் நிலையை வெளித்தோன்றக் காட்டுகின்றது.

சருமத்தின் பசுமையும், அங்கங்களின் மென்மையும், இன்ப நிலையைக் காட்டவல்ல முறையில் அமைந்துள்ளன. **சேக்கிழார் சுவாமிகள்** தமது பாட்டிற் சித்திரித்துக் காட்டி யதை, சிற்பி தனது கலைத் திறமையாற் பஞ்ச லோக வடிவத்தின் மூலம் உருவகப்படுத்திக் காட்டுகின்றார் :

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவீகமே ஆக,
இந்துவாழ் சடையான் ஆடும்ஆ நந்த
எல்லையின் தனிப்பெருங் கூத்தின்,
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

தென் இந்திய சிற்பிகளின் பெருமையைக் குறித்து ஒரு கலை நிபுணர் பின்வருமாறு கூறுகின்றார்.

"அவர்களை அறிந்து, அவர்கள் பெரு மையை உணர்வதானது, புதிய கலை உலகிற் குள் எம்மைப் புகுத்துவதாகும். அவர்கள் அமைத்துள்ள கலைவடிவங்களைப் போன்றன வற்றை, திறமையாக அமைக்கப்பெற்ற கிரேக்க வடிவங்களிலாவது அல்லது இடைக் காலத்தில் எழுந்த உருவங்களிலாவது காண் பது அரிது."

கோயில்கள் கலைக்கருவூலங்கள்

புராதன இந்தியாவிலிருந்த கோயில்கள், கலைக்கருவூலங்களாக விளங்கின. இசை, நடனம், சிற்பம், ஓவியம் என்பன மக்களின் வாழ்க்கையைச் செழிப்பும், சிறப்பும் அடையச் செய்தன. அக்காலத்தில், கலைகள் கலைக்காக மட்டும் அமைக்கப்பட்டனவல்ல. மக்களின் மனதில் அமைதியையும், தெய்வ பக்தியையும், ஒழுக்க வாழ்வில் விருப்பையும், உயர்ந்த நோக்கத்தையும் ஏற்படச்செய்வதற்குச் சாத னங்களாகவே கலைகள் அமைந்தன. சமயத்தைப் போல நுண்கலைகளும் மக்கள் எண்ணங்களி லும், வாக்கிலும், செயலிலும் தூய்மையை ஏற்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு விளங்கின. ஆகவே, நாமும், இன்று நுண் கலைகளைச் சமயத் தொடர்புடையனவாகச் செய்வதால் மாத்திரமே இந்து கலாச்சாரத்தைப் புத்துயிர் பெற்று விளங்கச் செய்யலாம். நுண் கலைகள் சமயத்திலிருந்து வேருகப் பிரித் தெடுக்கப்படின், அது இழிவடைந்து, இலௌகீ கத் தன்மை பெற்று, சிற்றின்ப நுகர்ச்சிக்கான சாதனங்களாக அமைந்துவிடும். அந்நிலைக்குத் தான் இன்று எங்கள் நாட்டிற் கலைகள் சென்று கொண்டிருக்கின்றன.

மனிதன் இயற்கையிலேயே சமய விஷயங் களிலும் பார்க்க கலைகளிலேதான் மிக்க ஆர்வ மும், விருப்பமும் உடையவனாக விளங்குகிறான். இக்காரணம் பற்றியே கடவுள் வழிபாட்டிலும், சமயக் கிரியைகளிலும் நுண்கலைகளை நெருங்கிய தொடர்புடையனவாக அமைத்து வைத்தனர். மனிதன்மாட்டுப் பண்பாடு இனிதுஅமைவதற்கு உள்ள - எழுச்சிகளே இன்றியமையாது வேண் டப்படுவன. எனவே,நமது நாளாந்தர வாழ்க்கை யிற் சமயம் வன்மையான இடம்பெற வேண்டின், ஒவ்வொருவரும், கூடியளவுக்கு உள்ளப் பண்புடையவராக வளர்ச்சிபெறுதல் வேண்டும்.

உள்ளப் பண்பு கலைகளின் மூலம் சித்திப் பது சுலபம். நுண்கலைகளுக்கு விசேஷ இடம் அளிக்காத சமயம் உள்ளப் பண்பை வளர்க் கும் ஆற்றல் அற்றதாகும். நுண்கலைகளும் சமயத்தைப் போல் ஆத்மீக வாழ்வை வளர்க்கும் நோக்கத்தை உடையனவாக வேண்டும். இந்துக் களும், இந்து நிலையங்களும் இந்து சமயப் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட சமய வாழ்வை நாட்டில் வளர்க்க முயற்சிக்க வேண்டும். எனவே சமய வளர்ச்சியில், ஆத்மீக நோக்குடைய கலை முதல் இடம் பெறவேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும்.

ஜனநாயகமும் இலக்கியமும்

★ சோ. சிவபாதசுந்தரம் ★

ஓய்வு நேரத்திற் பொழுது போக்குக்காக ஏதாவதொரு நல்ல புத்தகத்தைக் கையில் எடுக்கலாமா என்று அலுமாரியைத் திறந்தால் ஒரே சலிப்பும் ஏமாற்றமும்தான் ஏற்படுகிறது. எல்லாம் வருஷக் கணக்காகப் புரட்டிப் புரட்டிப் பார்த்த பழைய புத்தகங்கள். சிலப்பதிகாரத்தையும், மணிமேகலையையும், கம்பராமாயணத்தையும் ஒரு அடுக்கிற் பார்த்துவிட்டு அடுத்த அடுக்கைப் பார்த்தால் திருமுறை இலக்கியம்; இன்னொன்றில் பாரதி நூல்கள்; பெருமூச் சோடு அடித்தட்டில் ஒன்றை எடுத்தால் பழைய செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி அல்லது அந்தக்காலத்தில் வெளிவந்த கலைமகள் தொகுதிகள் — யாவும் எத்தனையோ தடவை பார்த்த விஷயம்தான். புதிய கருத்தைத் தரும் ஆழமான புதிய இலக்கியம் ஏதாவது ஒன்று வேண்டாமா ?

அலுமாரியை மூடியபின் சிந்தனை ஒன்றுதான் பழைய ஆழத்தைத் துருவிக்கொண்டு ஆராய ஆரம்பித்தது.

இலக்கிய உலகில் ஏமாற்றம்

இந்தக் காலத்திலே ஆழமும் பரப்பும் கொண்ட முதல் நூல் ஏதாவது வெளிவந்த துண்டா என்று கேட்கிறார், ஒரு சிறந்த இலக்கிய நண்பர். இக்காலப் பிரசுராலயங்கள் வெளியிட்ட நூல் அட்டவணைகளைப் புரட்டிப் பார்த்தும் அத்தகைய நூல் எதையும் காணமுடியவில்லை. புத்தகக் கடைகளுக்குப் போய் 'கண்ணைக் கவரும் மேலட்டை'களைக் கூர்ந்து பார்த்தாலும் நாம் எதிர்பார்க்கும் அந்தஸ்துள்ள நூலைக் காணமுடிகிறதில்லை. பத்திரிகை சஞ்சிகைகளில் வெளிவரும் புத்தக விமர்சனங்களையும், விளம்பரங்களையும் பார்த்தால் அவற்றிற்கூடச் சிறந்த இலக்கிய நூல்களைக் காணமுடிகிறதில்லை. சிறிது காலத்துக்கு முன்பு சிதம்பரத்தில் நடந்த உலக எழுத்தாளர் சங்கக் கூட்டமொன்றிற் பாரதப் பிரதமர் நேருஜி இந்த ஏமாற்றத்தைக் குறிப்பிட்டு "இக் காலத்தில் இலக்கிய மெல்லாம் பத்திரிகைகளோடு நின்றுவிட்டன" என்று கவலைப்பட்டார். உண்மையில் நிலைமை அதுதான் என்பதை எவரும் ஒப்புக்கொள்வர்.

ஜனநாயகச் சூருவளி

ஜனநாயகம் ஜனநாயகம் என்று உலகத்தில் மக்கள் வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் ஒரு மதம் குடிகொண்டு, கலையும் தத்துவமும் சிந்தனையும் மற்றும் பலவும் ஜனநாயக மயமாக மாறிவிட்டன. பாரம்பரியமாக நம் நாட்டில் மக்கட் கூட்டங்களிடையே ஆணி வேரோடிப் பதிந்திருந்த பண்பாடு என்ற விருக்ஷம் இந்த ஜனநாயகச் சூருவளியில் அகப்பட்டுச் சிதைவுண்டது. மூலவேர் இன்னும் உயிரோடிருப்பதால் வேறு பல திசைகளிலிருந்து நீர் வார்க்கப்பட்டுத் தலை கொய்யப்பட்ட விருக்ஷம் கருகல் முளைகளும் பொய்க்கிளைகளும் கொண்டு காட்சியளிக்கிறது. அந்தப் பொய்க்கிளைகள் தான் இன்று அங்கும் இங்கும் இலக்கியங்களாகத் தோற்றமளிக்கின்றன. ஆனால் உண்மை விருக்ஷங்களல்ல.

உயர்ந்தோர் : தாழ்ந்தோர்

ஜனநாயக தத்துவத்தின் சீர்கேட்டைப் பற்றி அமெரிக்க ஞானியான தோரோ சொல்கிறார் : "பெரும்பான்மையானவர்கள் ஆட்சி செலுத்த இடமளிக்கப்பட்டது. அவர்கள் கட்சி 'சரி' என்பதற்காகவன்று, அவர்கள் தொகையிற் பலம் பொருந்தியவர்கள் என்பதற்காகத் தான்..... இந்த ஜனநாயகக் கொள்கையில் அறிவுச்சிறப்போ அல்லது சிந்தனைச் சிறப்போ பார்க்கப்படுவதில்லை. தொகையைக் கொண்டு 'சராசரி' மனிதன் கொள்கை மாத்திரம் கணக்கிடப்படுகிறது. 'சராசரி' மனிதன் உண்மையில் வெறும் முட்டாள்."

இதுதான் ஜனநாயகம் கொண்டுவந்துள்ள விபரீதம். அந்தக் காலத்தில் தொல்காப்பியர் என்ற ஒருவர் மக்கள் இனத்தை இரண்டாக வகுத்து, 'உயர்ந்தோர்' என்ற பண்பாட்டினரை ஒரு கூருகவும், 'தாழ்ந்தோர்' என்ற பண்பாடற்றவரை இன்னொரு கூருகவும் வைத்து, மக்களின் உலகத்தை உயர்ந்தவர்களுக்கே உரிமையாக்கி, "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என நிச்சயம் செய்து விட்டார். அவர் கணித்த 'சராசரி' கீழ் நோக்கியதன்று, மேல் நோக்கியது. பண்பாடுற்றோர் பண்பாடற்றோரை அடக்கியாள்வதன்று; முன்னையவர் வழிப் பின்னையவர் தொடர்ந்து செல்லும் சீர்திருத்த ஆட்சி அது. கால முதிர்ச்சியிற் பண்பாடின்மை அகன்றுவிடும்.

இது இயற்கையின் நியதி. ஆனல் வேற்றுச் சூழ்நிலைகள் வந்து மோதி நம்நாட்டிற் பண்பாட்டில் வழிவந்த சிறப்புக்களெல்லாம் ஜனநாயகம் என்ற புதுக் கொள்கையில் மட்டந்தட்டப் பட்டன. 'சராசரி' வந்து புகுந்து, சிறுமை என்ற பெரும்பான்மையில் பெருமை கலப்புற்று, கலைகள், இலக்கியங்கள், தொழில்கள் எல்லாம் அந்தஸ்திலிருந்து நழுவிவிட்டன. இந்தியக் கலா யோகி ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள் இந்த ஜனநாயக மனப்பான்மையை 'வியபிசார மனோ பாவம்' என்று அழகாகச் சொல்லி வைத்தார். உண்மையில் இக்காலத்திலே சிறந்த இலக்கிய சிருஷ்டிக்கோ, கலாசிருஷ்டிக்கோ, தொழில் மேம்பாட்டுக்கோ நம்முடைய சந்ததிக்குத் தடையாயிருப்பது இந்த 'வியபிசார மனோ பாவம்' தான்.

இராஜாஜி புதிய கொள்கை

சென்னையிலே கல்வித்திட்டச் சீர்திருத்தம் பற்றி இராஜாஜி ஒரு புதிய கொள்கையை அறிவித்தார். சமூகத்திற் பாரம்பரியமாக வழி வந்த குடும்பத் தொழில்களை விருத்தி செய்ய வேண்டுமென்றும், குரு சிஷ்ய முறையில்தான் உண்மையான கலையோ — தொழிலோ மேம்பாடடையுமென்றும், அவர் விளக்கினர். இது ஜாதி வித்தியாசத்தை மறுபடியும் கொண்டு வந்து நுழைக்கும் என்று ஜனநாயகப் பிரியர்கள் எதிர்த்தார்கள். 'சிறப்பொக்கும் செய்தொழில் வேற்றுமையான்' என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கும்போது ஜாதி வித்தியாசம் எப்படி ஏற்படுமென்று நமக்குத் தெரியவில்லை. தலையாலே நடந்தாற்கூட பரம்பரைக் குயவனின் பானைக்கிணையாக நீங்களும் நானும் செய்யமுடியாது; தஞ்சாவூர்ப் பரம்பரை வித்தகனின் வீணைக் கிணையாக அமெரிக்க தொழிற்சாலை நிபுணன் செய்யமுடியாது. அதே போன்றுதான் மற்றைய கலைத்துறைகளிலும் தொழிற்சாலைகளிலும் பாரம்பரிய நிபுணத்துவம் இன்றியமையாதது. உடம்பிலும் இரத்தத்திலும் ஊறிப்போய் அதுவே ஒரு போகமாக வழிவரவேண்டும். அப்பொழுதுதான் கலையின் அல்லது தொழிலின் சிறப்புத் தோன்றும். 'யோகஹ் கர்மஸு கௌசலம்' என்பது கீதை வாக்கு. தொழிலிற் சாமர்த்தியம் வேண்டும்; அதுவே யோகமெனப்படும். அந்த சாமர்த்தியம் வெறும் அறிவால் வந்து விடாது; பாரம்பரியப் பண்பாட்டினூற்றான் ஏற்படவேண்டும்.

அடிப்படைத் தத்துவம்

இந்த அடிப்படைத் தத்துவத்தை வைத்துக் கொண்டு இலக்கிய சிருஷ்டிகளைப் பார்க்க வேண்டும். சங்ககாலத்துப் புலவர்கள் 'உயர்ந்தோர் மாட்டாகிய' உலகத்தின் பிரதிநிதிகளாயிருந்தார்கள்; சிந்தித்தார்கள்; சிருஷ்டித்தார்கள். பின்வந்த புலவர்களும் அப்படியே செய்தார்கள். அவர்கள் இலக்கியங்கள் யாவும் பண்பட்ட இலக்கியங்களாக 'யோக' சம்பத்துக்களாக அதீத நிலை பெற்றன. காலத்தால் அழியாதன. 'சராசரி' மனிதனுக்காக அவர்கள் எழுதவில்லை. எழுதியிருந்தால் பரிணமவாதக் கொள்கையின்படி 'சராசரி' மனிதன் இயல்பு குன்றித் தேய்வு பெறும் காலத்தில் இலக்கியங்களும் அதற்கேற்பத் தரத்திற் குன்றிப்போகும். ஜனநாயகத்தின் நியதியே அதுதான்.

உயர்ந்த இலக்கியம் இறங்குதல்

தமிழ்நாட்டுச் சிறந்த சஞ்சிகை யொன்றின் சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால் மேற் சொன்ன உண்மை நமக்குப் புலனுகும். காலத்துக்குக் காலம் சில சிந்தனையாளர் சேர்ந்து நல்ல இலக்கிய சஞ்சிகைகளைச் சிருஷ்டித்தார்கள். 'கலா நிலையம்', 'ஞாயிறு' போன்றவை நல்ல உதாரணங்கள். ஆனல் அவை சில காலத்தில் நின்றுபோயின. காரணம் பொருளாதாரம் என்று சொல்லப்படுகிறது. உண்மையிற் பொருளாதாரமல்ல, ஜனநாயகச் சூழ்நிலையில் அவை இறங்கி நிற்க முடியாமல்

ஏற்பட்ட பொருளாதாரப் பிணி என்றுதான் சொல்ல வேண்டும். அவை மறைந்தது விசேஷம். அதுவும் நியதி. வேறு ஒரு காலத்தில் ஒன்றிரண்டு உதிக்கவும் கூடும். ஆனால் அவை நிலைபெற்றிருந்து பொருளாதாரத்தைப் பேணுவதால் ஜனநாயகச் சுழியில் அகப்பட்டு 'சராசரி' மட்டத்துக்கு இறங்கி, மேலும் மேலும் இறங்க வேண்டிய நிர்ப்பந்த மேற்படும். மேலே நாம் சொன்ன தமிழ் நாட்டுச் சஞ்சிகை யொன்றும் ஆரம்பத்தில் உயர்ந்த இலக்கிய சிருஷ்டியாயிருந்து பின்னர் பொருளாதாரத்தைக் காப்பாற்ற ஜனநாயக சஞ்சிகையாகி, 'சராசரி'யை நோக்கிக் கீழே இறங்கி வந்துவிட்டது.

பொருளாதார சித்தாந்தம்

பொருளாதார சாஸ்திரத்தில் கிரேஷாம் சித்தாந்தம் என ஒன்று இருக்கிறது. 'கெட்ட காசு வந்து நல்ல காசை ஓட்டிவிடும்' என்பது அந்தச் சித்தாந்தம். சுத்தமான வெள்ளி ரூபாய் நடமாடிய சமயத்தில் உபயோகமில்லாத கலப்பு லோகக் காசு கொண்டுவந்து சேர்க்கப்பட்டதும், வெள்ளி நாணயம் செல்லாக் காசாகி விட்டது. நல்ல காசுக்கு மதிப்பில்லாமற் போய் விட்டது. இதே விதிதான் ஜனநாயக உலகில் இலக்கியத்துக்கும் மற்றும் கலைகளுக்கும் பொருந்தும். கெட்ட இலக்கியம் — 'சராசரி' மனிதனின் இலக்கியம் சிறுபான்மையான நல்ல இலக்கியத்தை விரட்டிவிடும்; 'டப்பா' சங்கீதம் உயர்தர கர்நாடக சங்கீதத்தை விலக்கி விடும்; சிறந்த பரத நாட்டியத்தைப் போலி நடனங்கள் தள்ளிவிடும்; நாடகத்தைச் சினிமா பறக்கடித்து விடும். ஜனநாயகச் சுவையின் நியதியைக் கைக்கொண்டால் விளைவு இதுதான்.

கலைஞர்களின் நோக்கம்

ஆயின், சன்மார்க்கத்தை நிலைநாட்ட வழி யென்ன? ஜனநாயக சித்தாந்தப்படி உயர்ந்த நிலையிலிருந்து 'சராசரி'யைத் தேடிச் சென்றால் அந்தச் சராசரியின் படி இறங்கிக் கொண்டே செல்லும் என்பது அறிஞர் முடிபு. ஆகையால், சராசரியை உயர்த்துவதே கலைஞரின் நோக்கமாயிருத்தல் வேண்டும். ஒரு பிரபல பத்திரிகாசிரியரிடம் அவருடைய பத்திரிகையின் தலையங்கக் கட்டுரைகளைப்பற்றிச் சம்பாஷித்துக் கொண்டிருந்தேன். அக் கட்டுரைகளில் மலிந்து காணப்படும் இலக்கண வழுக்களையும் வசனப் பிழைகளையும் எடுத்துக் காட்டி, இவை எதற்காக அனுமதிக்கப்பட்டன என்று கேட்டேன். தினசரிப் பத்திரிகையில், 'பொதுமக்க'ளுக்கு உடனுக்குடன் சமர்ப்பிக்க வேண்டிய பணியில் இத்தகைய வழுக்கள் ஏற்படுவது சகஜம். இந்த வழுக்களால் நாம் சொல்லப் போகும் கருத்து மாறுபடப் போவதில்லை. பொருள்தான் முக்கியமல்லாமல் இலக்கணமும் சந்தியும் முக்கியமல்ல என்றார் நண்பர். இலக்கணத்தைக் கட்டிப்பிடித்தால் பொது மக்கள் 'சராசரி' மக்கள், விளங்கிக் கொள்ள முடியாமல் தத்தளிப்பார்கள் என்றும், அங்ஙனமாயின் தலையங்கக் கட்டுரையின் பயனே வீணாகிவிடும் என்றும் அவர் மேலும் தெளிவாக்கினர்.

இது எவ்வளவு தூரம் உண்மை என்பதை நானறியேன். ஆனால் இதே காரணத்தைத்தான் மற்றைய கலைத்துறைகளில் ஈடுபட்டவர்களும் சொல்லிக்கொண்டு கலைபுரிகின்றார்கள். கர்நாடக சங்கீதத்தில் அக்கறையுடையவர்கள் மிகச் சிலர்; ஆகையால் 'டப்பா' சங்கீதத்தை அள்ளி வழங்குவதால் நிதி திரளும் என்பது சில சங்கீத வித்துவான்களின் நம்பிக்கையாகிவிட்டது. நாடகம் சினிமா முதலிய துறைகளிலும் இதே காட்சிதான். ஆனால் உண்மை அதுதானா?

பொருளாதாரமா பண்பாடா?

உலகத்தில் சுவை நிரம்பிய மனிதர் எண்ணிக்கை மிக மிகக் குறைவு; சுவையற்றவர்கள் பலர். பலருடைய சுவையற்ற சுபாவத்தை இலட்சியமாகக் கொண்டு அதன் படிக்கு இறங்கி வந்து கலைச் சிருஷ்டி செய்தால் என்னவாகும்? மேலும் மேலும் தரம்குன்றி ஈற்றில் ஒருபோது தரமே இல்லாமற் போய் சுவை என்ற தன்மைக்கும் இடமில்லாமற் போய்விடலாம். லோகாயதம்தான் ஆட்சிபுரியும்.

ஆகையால், பண்பாட்டு நிலைமை ஊன்றி நிற்கவும் வியாபித்துப் பரவவும் இலக்கிய சிருஷ்டி செய்வோரும், கலாசிருஷ்டியில் ஈடுபட்டுள்ளோரும், மற்றும் மக்கட் கூட்டங்களுக்கு வழி சமைத்துக் கொடுப்போரும் ஒரு பெரும் பொறுப்பைச் சுமந்துள்ளார்கள். 'சராசரி' மனிதனின் கீழ்ப்படிக்கு இறங்கி வந்து அவன் நிலையை, சுவைத் தரத்தை ஆதார

மாக வைத்து ஆடச் செய்யாமல், தம் நிலையில் நின்று அறிவுறுத்தித், தம் சுவையில் ஒரு பகுதியாவது கசியச் செய்யவேண்டும். அது பெருங்கடமை. சினிமாவில் நாம் ஆபாசமென்று கருதும் சில சில்லறை நடனங்களைச் சேர்க்கும் ஒரு கலைஞரைக் கேட்டால் 'அதுதானே மக்களுக்குப் பிடிக்கிறது' என்பார். மக்களுக்கு அவர் சொல்வது, நமது பிரசித்தி பெற்ற ஜனநாயக சிருஷ்டியாகிய 'ஸ்ரீமான் சராசரி' யைத்தான்! அதே விதம்தான் இக்காலத்து எழுத்தாளரும் கீழிறங்கி நின்று 'மக்களுக்குப் பிடிக்கும்' கதைகளையும், கட்டுரைகளையும் எழுதுகின்றனர். 'கண்ணைக் கவரும் அட்டை'களுடன் நூல்கள் வெளியிடுகின்றனர். 'உயர்தர இலக்கியம் எழுதினால் யார் வாங்கப்போகிறார்கள்?' என்று அவர்கள் பொருளாதாரத்தை நினைத்துக்கொண்டு கேட்கிறார்களல்லாமல், இலக்கியம் எதற்காகச் சிருஷ்டிக்கப்படுகிறது, பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவா அல்லது பண்பாட்டுச் சுவையை வளர்க்கவா என்று கேட்கிறார்களில்லை. நமது அலுமாரியிலும் புதிய நல்ல புத்தகம் வந்து குடியேற முடிகிறதில்லை.

தமிழுலகில் மறுமலர்ச்சி

★

குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட ஓர் இடத்தில், குறிப்பிட்ட ஒரு பெயரைச் சூட்டி ஒவ்வோர் இயக்கம் இப்போது தொடங்குவதை நாம் பார்க்கிறோம்: இதுபோன்றதன்று மறுமலர்ச்சி. வெகுகாலமாக வெளியிற் புலப்படாதேயிருந்து அமைதியாய்ப் பரவி, சமுதாயத்தை உள்ளூர இயக்கி வரும் பல சக்திகள் சிற்சில காரணங்களால் திடீரென்று வேகங்கொண்டு எழுந்து, முழு வன்மையோடு சிலர் வாயிலாக வெளிப்பட்டு, சமுதாய முழுவதும் அதிர்ந்து எதிரொலிக்கச் செய்து, மேற்கதியில் விரைந்து பாயும் நிலைமையே மறுமலர்ச்சி.

தமிழுலகில் இந்த மறுமலர்ச்சி சென்றுள்ள நெறி கவனித்தற்குரியது. வெகுகாலமாக பல நூற்றாண்டுகளாக, ஜீவ நதியாய் ஓடிக்கொண்டிருந்த தமிழ், கம்பன் காலத்திற் பெருக்கெடுத்துப் பாய்ந்து தனது பூரண எல்லையை அடைந்தது. பின்னர் சிற்றாறுகவும் வாய்க்கால்களாகவும் ஓடி ஒருவாறு உயிர் வாழ்ந்து வந்தது. இதன்பின்னர் சேற்று நிலங்களில் இறங்கித் தேங்கி அங்கங்கே கட்டுக்கிடையாய் நின்றது. பௌராணிக சமயமே நான் இங்கே கருதிய சேற்றுநிலம். இச் சமயமும், பிற்காலச் சமயநெறி நூல்களும், இவைபற்றி எழுந்த வாதப் பிரதிவாதங்களும், இலக்கணங்களும், உரைகளும், கண்டனங்களும் இவற்றிற்கு இடங்கொடுத்து வந்த மனப்பான்மையும் தமிழை நசித்துக் கொண்டிருந்தன. வடமொழியும் இந் நாசத்துக்குத் துணைபுரிந்தது. அறிவு சுதந்திரமாக இயங்க இடமில்லை. சுமார் 100 வருஷங்களுக்கு முன்வரை, கட்டுக்கிடை வாழ்வில் நமது தமிழுலகு பிணிப் புண்டிருந்தது. இவ்வாறு அசைவின்றி கட்டுக்கிடையாய் நின்ற தமிழும் அறிவும் புத்துயிர் பெற்று, புதிய நெறிகளிற் செல்வதற்கு நமது கலைப் பண்பாடுகளினின்றும் முற்றும் வேறுபட்ட ஒரு கலைப்பண்பாட்டின் தூண்டுதல் அவசியமாயிருந்தது. ஆங்கிலேயரது கூட்டறவினால், இத்தூண்டுதல் நமக்குக் கிடைத்தது. புதிய விஞ்ஞான அறிவு சிறிது சிறிதாகப் புகுந்து, தமிழுலகை உள்ளும் புறமும் புதைத்திருந்த இருட் படலத்தைக் கீறி நீக்குவதாயிற்று. புதிய இலக்கிய முயற்சியும் தலைகாட்டத் தொடங்கிற்று.

— பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை

இஸ்லாமிய தமிழ் இலக்கியம்

ம. முகம்மது உவைஸ்

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே தமிழ் மக்கள் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உயரிய உளப்பாங்கு உடையராய்த் திகழ்ந்தனர். இவ்வுயரிய கருத்தினைக் கொண்டு மக்கள் வாழ்ந்தனர் என்பதற்குத் தமிழ் இலக்கிய நூல்கள் சான்று பகருகின்றன. வேறு பட்ட பல சமயங்களின் போதனைகளைக் கொண்டு மிளிர்கின்றது தமிழ் இலக்கியம். இவ்வாறு பல மதங்களின் கொள்கைகளைத் தன்னிடத்தே கொண்ட மொழிகள் மிக மிகச் சிலவே. அவற்றுள் ஒன்று தீந்தமிழ் எனலாம். சைவம், வைணவம், பௌத்தம், சமணம், கிறிஸ்தவம், இஸ்லாம் முதலிய பல வேதங்களை அறியக்கூடிய மொழியாக இருந்திருக்கின்றது தமிழ்மொழி. இஸ்லாத்தின் அடிப்படைக் கருத்துக்களைத் தன்னிடத்தே கொண்ட தமிழ் நூல்களை ஈண்டு எடுத்துக்கொள்வோம் :


இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தைப் பிரபந்தங்கள், வசன நூல்கள், ஞானியரினதும் சித்தரினதும் பக்தி ததும்பும் பாசுரங்கள், வேத மதாசாரங்களைக் கூறும் நூல்கள் என நான்கு பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம். காப்பியங்கள் பழங்கால இலக்கியத்தில் உள்ள பிரபந்தங்கள், முஸ்லிம் மக்கட்கே உரிய பிரபந்தங்களெனப் பிரபந்தங்களை மேலும் பல பகுதிகளாகப் பிரிக்கலாம்.

காப்பியமே தலைசிறந்தது

தமிழ் மொழியிலே வழங்கும் பிரபந்தங்களுள் காப்பியமே தலைசிறந்தது. முஸ்லிம் மக்களிடையே ஒரு தனி இடத்தைப் பெற்ற நூல் **சீறுப்புராணம்.** உமறுப் புலவரால் எழுதப்பட்ட இந்நூலிற் காப்பிய இலக்கணங்கள் பல அமைந்துள்ளன. நபிகள் நாயகம் முகம்மது அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு திகழ்கின்றது சீறுப்புராணம். கம்பரின் இராமாயணம், திருத்தக்க தேவரின் சிந்தாமணி முதலியன ஒரே கவி மரபைப் பின்பற்றி எழுந்தன என்று கூறலாம். முஸ்லிம் மக்கள் சிறியா என்ற நாட்டில் ஈட்டிய வெற்றியைக் கூறுகின்றது புதுகுச்சாம் என்ற இன்னொரு காப்பியம். இந்நூல் செய்கு அப்துல் காதிறு நெய்னார் என்ற புலவரால் இயற்றப்பட்டது. முகம்மது நபி அவர்களின் வழித்தோன்றலாக இருக்நாட்டில் உள்ள பகுதாதிற் பிறந்து இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கு வழிகோலிய முகியித்தீன் அப்துல் காதிறு ஜெய்லானி அவர்களின் வாழ்க்கை பல புலவர்களுக்குப் பொருளாய் அமைந்துள்ளது. காப்பிய இலக்கணங்கள் அமையப்பெற்று பல முகியித்தீன் புராணங்கள் தோன்றி உள்ளன. இராஜநாயகம் என்பது இன்னொரு காப்பியம். இந்நூல் மதுரை மீசல் வண்ணக் களஞ்சியப் புலவரால் எழுதப் பட்டது. சுலைமான் நபி அவர்களின் வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டு பாடப் பட்டது.

ஆற்றுப்படை

சங்ககாலத் தமிழ் நூல்களிலே ஆற்றுப் படை என்ற துறையிற் பாடப்பட்ட பல பாக்கள் இருக்கின்றன. பரிசில் பெற்ற ஒரு புலவன் பரிசில் பெற விரும்பும் இன்னொரு புலவனை ஆற்றுப்படுத்தலை — வழியைக் கூறுதலையே — ஆற்றுப்படை என்பர். இஸ்லாமிய தமிழ் இலக்கியத்திலும் ஓர் ஆற்றுப்படை நூல் உண்டு. மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் புலவர் ஆற்றுப்படை என்பதே அந்நூல். இந்நூல் நாகூர் வித்துவான் குலாம் காதிறு நாவலரால் இயற்றப்பட்டது. பாண்டித்துரைத் தேவரால் மதுரையில் நிறுவப்பட்ட நான்காம் தமிழ்ச் சங்கத்திலே பேரும் புகழும் பெற்ற குலாம் காதிறு நாவலர் இன்னொரு புலவரை அத் தமிழ்ச் சங்கத்துக்கு ஆற்றுப்படுத்தியதை இந்நூல் கூறுகின்றது. குலாம் காதிறு நாவலர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 'நக்கீரர்' என்று அழைக்கப்பட்டார்.



யாழ்ப்பாணம், சோனக வீதியிலுள்ள பள்ளி வாசல்

இசுலாமிய வரலாற்றினை நன்கறிந்தவர்கள் வல்லவனை வணங்கும் பள்ளிகளே பல்கலைக் கழகங்களாக விளங்கியதைக் காண்பார்கள். முஸ்லீம்களுடைய சமுதாய வாழ்வு பள்ளி வாசலை மத்தியாகக் கொண்டே இயங்கி வருகின்றது. அழகு கொழிக்கும் இப் பள்ளி வாசல், யாழ்ப்பாண முஸ்லீம் மக்களின் தொழுகைக்குரிய தூய இடமாகும்.

மனிவாசக நூல் நிலையம்
1984
கும்பசிட்டி - சன்மார்க்க சபை



வெள்ளைக் கரைக் கடற் பள்ளிவாசல்

இஸ்லாமியப் பண்பாட்டின் மாண்பு உலகினத்தும் பரவிவருகின்றது. இதற்குத் தீவுப் பகுதியைச் சேர்ந்த வேலணை – மண்குப்பான் விதிவிலக்கல்ல எனக் கூறுவதுபோல வெண் மணற் பரப்பில் 'வெள்ளைக் கரைக் கடற் பள்ளிவாசல்' வனப்புடன் காட்சி தருகின்றது.

தொண்ணூற்றுவகைத் தமிழ்ப் பிரபந்தங்களுள் இன்னென்று அந்தாதி. ஒரு செய்யுளின் ஈற்றடி அல்லது ஈற்றுச்சீர் அல்லது ஈற்றெழுத்து அடுத்த செய்யுளின் முதலடியாக அல்லது முதற்சீராக அல்லது முதலெழுத்தாக அமையுமாயின் அப் பாக்கள் அந்தாதித் தொடரில் அமையப் பெற்றன என்பார்கள். முஸ்லிம் மக்களிடையேயும் பல அந்தாதி நூல்கள் வழங்குகின்றன. மதீனமாநகர் என்ற திருத்தலத்தைப் புகழ்ந்து பாடப்பட்டது 'திருமதீனத் தந்தாதி'. இந்நூல் திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த இலக்கணக் கடல் என்றழைக்கப்பட்ட அ. கா. பிச்சை இபுருகீம் புலவரால் இயற்றப் பட்டது. செய்கு அப்துல் காதிறு நயினார் ஆலிம் புலவர் நாகூர் என்ற திருத்தலத்தைப் புகழ்ந்து 'நாகை யந்தாதி'யைப் பாடியுள்ளார். முகம்மது நபி அவர்கள் பிறந்த திருத்தலமாகிய மக்காவைப் புகழ்ந்து 'திரு மக்காத்திரிபந்தாதி' என்ற நூலை நாகூர் குலாம் காதிறு நாவலர் இயற்றியுள்ளார்.

நபிநாயகம் பிள்ளைத்தமிழ்

முஸ்லிம் மக்களிடையே வழங்கும் பிள்ளைத் தமிழ் நூல்கள் அனைத்தும் ஆண்பாற் பிள்ளைத் தமிழ் நூல்களாகவே காணப்படுகின்றன. முகம்மது நபி அவர்களைப் பிள்ளையாக வைத்து 'நபிநாயகம் பிள்ளைத்தமிழும்' முகியித்தீன் அப்தில் காதிறு ஜெய்லானி அவர்களைப் பிள்ளையாகக் கொண்டு 'முகியித்தீன் பிள்ளைத் தமிழும்'பாடப்பட்டுள்ளன. நபிநாயகம் பிள்ளைத் தமிழை செய்யது முகியித்தீன் கவிராஜர் இயற்றியுள்ளார்.

அம்மானை இனத்தைச் சேர்ந்த 'நபியவதார அம்மானை', 'பப்பரத்தியர் அம்மானை' முதலிய நூல்களும் இஸ்லாமிய தமிழ் இலக்கியப் பரப்பில் அடங்கும். நபியவதார அம்மானையை உமறுப் புலவரின் புதல்வர் கவிக்களஞ்சியப் புலவர் இயற்றியுள்ளார் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. 'மக்காக் கலம்பகம்' போன்று கலம்பக இலக்கணங்கள் அமைந்த நூல்கள் பல உள்ளன.

பொதுவழக்கிற் பெரும்பாலும் பயிலும் பிரபந்தங்களான மாலை, ஏசல், திருப்புகழ், கீர்த்தனை, சிந்து, கும்மி, தாலாட்டு, ஆனந்தக் களிப்பு முதலியன இஸ்லாமாகிய தமிழ் இலக்கியத்திற் காணக்கிடக்கின்றன. காசீம் புலவர், முகம்மது நபி அவர்கள் பேரில் இயற்றிய திருப்புகழ் ஈண்டு நோக்கற்பாலது. இத் திருப்புகழ் அருணகிரிநாதரின் திருப்புகழைப் பெரிதும் ஒத்திருக்கிறது. பெரிய புராணத்தை அடிப்படையாக வைத்து எவ்வாறு பெரிய புராணக் கீர்த்தனை இயற்றப்பட்டதோ அதே போன்று சீறுப்புராணத்தை அடிப்படையாகக் கொண்டு கோட்டற்றைச் சேர்ந்த செய்யிது அபூபக்கர் புலவரால் 'சிறுக்கீர்த்தனை' இயற்றப் பட்டது. இந்து சமயத்தாரிடையே பயிலும் காவடிச்சிந்து என்ற நூலைப் பின்பற்றி காஞ்சி அசன் அலிப்புலவர் முஸ்லிம் பெரியார்களைப் புகழ்ந்து 'பூலடிச்சிந்'தினைப் பாடியுள்ளார்.

அறபுநூல்களின் மொழிபெயர்ப்பு

இவையேயன்றி முஸ்லிம் மக்களுக்கே உரிய சில பிரபந்தங்களும் முஸ்லிம் தமிழ் இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன. ஒன்றைத் தவிர மற்றைய பிரபந்தங்களின் பெயர் அறபுப் பெயர்களாகவும், பாரசீகப் பெயர்களாகவும் அமைந்துள்ளன. 'படைப்போர்' என்ற ஒன்றே தமிழ்ப் பெயருடன் காட்சி அளிக்கிறது. முஸ்லிம் மக்களுக்கும் பிறருக்கும் இடையே நடந்த போர்களைப்பற்றியே படைப்போர் என்னும் நூல்கள் குறிப்பிடுகின்றன. அறபுப் பெயருடன் காட்சி அளிப்பன: 'முனாஜாத்து' 'கிஸ்ஸா' (Kissa), 'மசாலா', என்ற பிரபந்தங்களாம். முனாஜாத்து பிரார்த்தனையையும், கிஸ்ஸா கதைகளையும், மசாலா வினாவிடைகளையும் குறிப்பிடுகின்றன. 'நாமா' என்ற பிரபந்தம் பாரசீக மொழியில் உள்ள 'நாமே' என்ற பிரபந்த இனத்தைச் சேர்ந்ததே. இவை முஸ்லிம் பொது வழக்கிற் பெரிதும் பயிலப்படுகின்றன.

இஸ்லாமிய தமிழ் இலக்கியத்திலே பல வசன நூல்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் ஒரு சில சமயத் தர்க்கங்களின் பயனாக எழுந்தன. வேறு சில அறபு மொழியில் உள்ள நூல்களின் மொழிபெயர்ப்பாய் அமைந்துள்ளன. இன்னுஞ் சில உறுது, பாரசீக நூல்களைத் தழுவி எழுதப்பட்டுள்ளன. மற்றும் சில இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளையும் இஸ்லாமிய சட்டதிட்டங்களையும் எடுத்துக் கூறுவனவாய்க் காட்சியளிக்கின்றன. ஏனையவை சீறுப்புராணம் போன்ற தலைசிறந்த காப்பியங்களை வசன நடையில் அளிக்கின்றன.

தமிழ்நாட்டிற் பல சித்தர்கள் வாழ்ந்தனர். பல ஞானப்பாடல்களைப் பாடியுள்ளனர். அத்

தகைய முஸ்லிம் ஞானிகள் பலர் தமிழ் நாட்டிலே இருந்தனர். அவர்கள் பல்லாயிரக் கணக்கான ஞானப்பாடல்களை மக்களுக்கு அளித்துள்ளனர். அவர்களுள் குணங்குடி மஸ்தான்சாகிபு தலைசிறந்தவராகக் கருதப்படுவர். மஸ்தான் சாகிபுவின் பாடல்களை உற்று நோக்குவோர்க்குத் தாயுமான சுவாமிகளின் பாடல்கள் நினைவுக்கு வருகின்றன. இரு பெரியாரும் ஏறக்குறைய ஒரே கருத்தமையப் பாடியுள்ளனர். தாயுமான சுவாமிகள் இந்துமத அடிப்படையிற் பாட, மஸ்தான் சாகிபு இஸ்லாமிய அடிப்படையிற் பாடியுள்ளார்.

சித்தர் ஞானக்கோவை

காலங்குடி மச்சரேகைச் சித்தன் என்று வழங்கும் செய்யிது அப்துல் வாரிது ஆலிம் மவ்லானு ஐதுறூஸ் என்பவரும் பல பக்திப் பாடல்களைப் பாடியுள்ளார். 'சித்தர் ஞானக் கோவை' சித்தர்களாற் பாடப்பட்ட பாக்களைக் கொண்டது. அந்த நூலில் தற்கலை பீர் முகம்மது சாகிபுப் புலவராற் பாடப்பட்ட 'ஞானரத்தினக் குறவஞ்சி' என்னும் பாக்கள் இடம் பெற்றுள்ளன என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. பீர் முகம்மது சாகிபு பல ஞானப் பாக்களைப் பாடியுள்ளார். பல விழுமிய கருத்துக்களை அமைத்துப் பாடியுள்ளார். இவர்களே யன்றி இன்னும் பல முஸ்லிம் ஞானிகள் தமிழ்ப்பாவளம் பெருக அரும்பெருந் தொண்டாற்றியுள்ளனர்.

இஸ்லாமிய வேதத்தினையும் சமயாசாரங்களையும் பல புலவர்கள் பாடியுள்ளனர். 'வேத புராணம்' என்பது அத்தகைய நூல்களுள் ஒன்று. அந்நூல் பெரிய நூகு என்ற ஞானியாரால் இயற்றப்பட்டது. இலங்கை வேர்விலையைச் சேர்ந்த செய்கு முஸ்தாபா ஒலியுல்லாவாற் பாடப்பட்ட இன்னொரு நூல் 'மீஸான் மாலை'. இஸ்லாத்தில் உள்ள நம்பிக்கையைப் பற்றிப் பாடப்பட்டுள்ளது 'சுஅபில் ஈமான்' என்ற நூல். நம்பிக்கையின் கொப்புக்கள் என்ற பொருள் உள்ளமையால் இந்நூல் நம்பிக்கையை மிக நுணுக்கமாக விபரித்துள்ளது.

இஸ்லாமிய ஆசாரங்களை எடுத்துக்கூறும் நூல்களுள் 'ஆசாரக்கோவை'யும் ஒன்று. பழங்காலத் தமிழ் நூலான ஆசாரக்கோவையைப் பின்பற்றியே இந்நூல் எழுந்தது. இதனைக் கீழ்க்கரையைச் சேர்ந்த அப்துல் மஜீத் என்பவர் இயற்றியுள்ளார். புத்தளத்தைச் சேர்ந்த தம்பி மரைக்காயர் என்பவரின் பொருளுதவியினாலேயே இந்நூல் இயற்றப்பட்டது என ஆசிரியர் கூறுவர்.

ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த ஆங்கிலக் கவிஞர் பெரும்பாலும் ஆங்கில மரபுக்கியைய ஆங்கில முறைப்படி இலத்தீன் மொழியில் இருந்த சமயக் கருத்துக்களை அமைத்துப் பாடியுள்ளனர். அதேபோன்று முஸ்லிம் புலவர்கள் தமிழ் மரபுக்கியைய தமிழ் முறைப்படி அறபு மொழியில் இருந்த இஸ்லாமிய சமயக் கருத்துக்களை அமைத்துப் பாடியுள்ளனர். இவ்வாறு பாடுவதோடு நில்லாமல் சிற்சில சமயங்களில் தமிழ் நூல்களை அறபு எழுத்துக்களிலும் எழுதி உள்ளனர். பொதுவாக ஒரு மொழியை இன்னொரு மொழிக்குரிய எழுத்தில் எழுதுவதற்கும் அம்மொழிக்குரிய எழுத்துக்கள் இல்லாமல் இருத்தல் வேண்டும். தமிழ் மொழிக்கோ அதற்கே உரிய எழுத்துக்கள் உள்ளன. அவ்வாறு முஸ்லிம் அறிஞர் தமது தமிழ் நூல்களை அறபு எழுத்தில் எழுதுவதற்கு ஒரு காரணம் உண்டு. இஸ்லாமிய சட்டதிட்ட நூல்களை அறபு எழுத்தில் எழுதினால் மட்டுமே இஸ்லாமிய சட்டதிட்டத்துக்குரிய கலைச்சொற்களை முஸ்லிம் மக்கள் எளிதில் விளங்கிக்கொள்வர் என அறிஞர் கருதினர். முஸ்லிம் மக்களின் வாழ்க்கையிலே அறபு மொழிக்கு ஒரு தனி இடம் உண்டு. எனவே, முஸ்லிம் தமிழ் நூல்களை அறபு எழுத்தில் எழுதினர். முஸ்லிம் மக்கள் கௌரவிப்பதைக் கண்டனர். இன்னோரன்ன பல காரணங்களால் அறபு அறிஞர் தமிழ் நூல்களை அறபு எழுத்தில் எழுதத் தலைப்பட்டனர்.

முஸ்லிம் புலவர்களால் எழுதப்பட்ட பல தமிழ் நூல்களில் இந்துசமயக் கருத்துக்கள் புகுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். இந்துக்களுக்குரிய சூழலில் முஸ்லிம் புலவர்கள் வாழ்ந்ததினாலேயே இத்தகைய இந்துமத ஆதிக்கம் இஸ்லாமிய தமிழ் நூல்களில் ஏற்றப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் இஸ்லாமிய கொள்கைகட்கு முரணான இந்துசமயக் கருத்துக்கள் இந்நூல்களில் இடம்பெற்றுள்ளன. இந்து சமயக் கருத்துக்கள் இஸ்லாமிய சமயக்கொள்கைகள் போல் திரித்து ஆளப்பட்டும் உள்ளன.

சுருங்கக் கூறின் இஸ்லாமிய தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் தமிழ் இலக்கிய மரபையே பெரிதும் பின்பற்றியுள்ளன.



மடு மாதா கோவில்

ஒல்லாந்தர் இலங்கையின் கரைப் பட்டினங்களை அரசாட்சி செய்தபோது கத்தோலிக்க சமயத்துக்கு நெருக்கடி ஏற்பட்டது. இதனால் கத்தோலிக்கர் மாந்தையிலுள்ள தேவமாதா சொரூபத்தை மருதமரங்கள் சூழ்ந்துள்ள மருதமடு என்னும் இடத்துக்குக் கொண்டுவந்து தேவாலயம் கட்டி வைத்துக் காப்பாற்றினர். இது பின்னர் 1823ஆம் ஆண்டில் மன்னரில் இருந்த மொயிஸ் என்னும் கத்தோலிக்கராற் புதுக்கிக் கட்டப்பெற்றது. இலங்கையிலுள்ள எல்லா மதத்தினரும் சென்று வணங்கும் பெருமைபெற்றது இக் கோவில்.



மானிப்பாய்த் தேவாலயம்

அமெரிக்க மிஷனரிமார் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கைக்கு வந்தனர். வடபகுதியில் அவர்களமைத்த திருச்சபைகளுள் மானிப்பாய்த் திருச்சபை தனிச்சிறப்பு மிக்கது. இச் சபையின் 125ஆம் (1831 — 1956) ஆண்டு நிறைவு விழா ஜூலை 20 — 23 திகதிகளிற் கொண்டாடப்பட்டது. மானிப்பாய்த் தேவாலயம் 1769ஆம் ஆண்டில் நிறுவப்பெற்றது. வட்டுக்கோட்டைத் தேவாலயத்தைக் கட்டிய லோறன்ஸ் பில் என்னும் ஒல்லாந்தரே, கம்பீரமாக விளங்கும் இக் கவின்மிகு தேவாலயத்தையுங் கட்டினர் எனக் கருதப்படுகின்றது.

கிறிஸ்தவத் தொண்டு

அத்தியட்சர், வண. ச. குலேந்திரன்

ஈழகேசரி வெள்ளிவிழா மலருக்கு இக் கட்டுரையை மிக மகிழ்ச்சியுடன் எழுதுகின்றேன். ஈழகேசரியின் தந்தையார் திரு. பொன்னையா அவர்கள் எனது அரிய நண்பன். அவரது அகால மரணத்தைக் குறித்து மற்றவர்களுடன் நானும் துயருறுகின்றேன். அவருடைய அபார சக்தியையும், துணிவினையும் நான் மெச்சி மகிழ்வதுண்டு. திரு. பொன்னையா அவர்கள் ஓர் இந்துவாகவிருந்தும் அவர் நிறுவிய ஈழகேசரி எல்லாச் சமய வாதிகட்கும் பொதுவாக உழைத்து வருவதுடன் அவர்களின் கட்டுரைகளையும் வெளியிட்டு வருகின்றது. அவர்களின் தொண்டினை இன்று ஏற்று நடத்துபவர்களும் அவர் முன்மாதிரியைக் கைக்கொண்டு செல்வதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

கிறிஸ்தசமயம் தேவவாக்கியங்களை எடுத்து விளக்குவதையே ஆரம்ப தொண்டாகக் கொண்டிருந்தது. அத்துடன் மக்கள் இறைவனை எப்படிப் பூசிக்கவேண்டுமென்பதையும் எடுத்துக் காட்டியுளது. அவ்வேலையைச் செய்யும்பொழுது இறைவனின் போதனைகளை எடுத்துரைத்தல் அவசியமாகின்றது. எங்கெங்கெல்லாம் கிறிஸ்த சமயம் பரம்பியதோ, அங்கெல்லாம் அதன் ஆதிக்கம் நன்கு வெளித் தோற்றியுளது. 1928ஆம் ஆண்டு மார்கழித் திங்களில் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் கல்கத்தாவில் நடைபெற்றபோது அங்குள்ள கிறிஸ்த குருமார் கல்லூரித் தலைவர் எமக்குக் கூறியதை இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். **''கிறிஸ்த சமயம் இந்தியாவுக்கு வந்தபின்னர்தான் சுதந்திர இயக்கம் நாட்டில் ஆரம்பித்தது. தரங்கம்பாடியில் நிலைப்பட்டிருந்த டானிஷ் அரசாங்கத்தினரும், கல்கத்தா நகரில் ஆரம்பித்த ஆங்கில ஆட்சியாளரும் கிறிஸ்த பாதிரிமார் இந்தியாவுக்கு வருவதை மிகப் பெலமாக எதிர்த்தனர் என்பது யாவரும் நன்கறிந்த உண்மையாகும்.''**

வங்கமொழி புத்துயிர் பெற்று வளர்ச்சியடைந்தமைக்குக் கிறிஸ்த சமயமும் ஓரளவுக்குத் தக்க உதவி புரிந்துள்ளது. சமுதாய சீர்திருத்தங்கள் ஏற்படுத்துந் துறையில் இந்தியா எங்கணும் கிறிஸ்த சமயம் செய்த மகத்தான தொண்டுகள் இம்மட்டன்று. அதைப்பற்றி அதிகம் நான் கூறவேண்டியதில்லை. தென்னிந்தியாவில் புரோடெஸ்தாந்து கிறிஸ்தவர்களுக்கும், கத்தோலிக்கக்கிறிஸ்தவர்களுக்குமிடையில் 18ஆம் நூற்றாண்டில் வாக்குவாதம் ஆரம்பித்தது முதலாகத் தமிழ் வசனநடை தாராளமாக உபயோகத்துக்குக் கொண்டுவரப்பட்டது. சமய வாதங்கள் தமிழ் வசனநடை விருத்தியடைதற்கு உதவி புரிந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழநாட்டில் ஆறுமுகநாவலர்களுக்கும் கிறிஸ்த பாதிரிமார்களுக்கு மிடையில் நடைபெற்ற சமய வாதங்களும் தமிழ் வசனநடை வேகமாக விருத்தியடைய உதவி புரிந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்திய மொழிகளின் நிலை சம்பந்தமாக விவாதம் ஏற்பட்டபோது, இந்திய மொழிகளே முதலிடம் பெறவேண்டுமென்று பாதிரிமார்கள் திடமாக வாதித்தனர். ஆனால் மக்கலே என்ற பேர்போன ஆங்கில சரித்திராசிரியர் கருத்தைத் தழுவி, இந்தியாவை யாண்ட ஆங்கில அரசினர் ஆங்கிலத்தையே அரசாங்க மொழியாகக் கொண்டனர். கிறிஸ்த வேதமாகிய பைபிளை எல்லா இந்திய மொழிகளிலும் பெயர்த்து வெளியிட்டமையே, மொழித்துறையிற் பாதிரிமார் கொள்கை எதுவாகும் என்பதைக் காட்டுகின்றது.

வட்டுக்கோட்டையில் அமைக்கப்பெற்ற உயர்தரக் கல்லூரியில் அப்போது தமிழ் மொழிக்குச் சிறப்பான அந்தஸ்து அளிக்கப்பட்டிருந்தது. மானிப்பாயில் வைத்தியசாலைத் தலைவராக விருந்த டக்டர் கிறீன் என்ற பெரியார் சிறந்த வைத்திய நூல்களைத் தமிழில் எழுதி

வெளியிட்டனர். தமிழ்மொழி குன்றியமைக்குக் கிறிஸ்த பாதிரிமாரே காரணர் என்று சில கூட்டத்தினர் சொல்வது சிறிதும் பொருந்தாது.

அநேகமான சந்தர்ப்பங்களில் மக்களே ஆங்கிலத்திற் சிறந்த தேர்ச்சியடைய முனைந்து நின்றனர். ஆங்கில அரசினர் தமது மொழியை விருத்தி செய்யக் கைக்கொண்ட முயற்சிகளிலும் சிற்சில பொதுமக்கள் அது விஷயமாகக் காட்டிய ஆவல் மிகக் கூடியதென்பாம்.

கிறிஸ்தவர்களென்றுல் தேசீய நோக்கங்களுக்கு முற்றுக மாறுனவரென்று எண்ணுவது பிழையாகும். அந்நியரின் உடைகளை, பழக்க வழக்கங்களை ஆவலுடன் கட்டியணைப்பவரை எப்போதும் நாட்டிற் காணலாம். இலங்கை மக்களைச் சிறிது நுட்பமாக ஆராய்ந்து நோக்கின் கிறிஸ்தவர்களிடையே காணப்படுவதிலும் கிறிஸ்தவரல்லாதாரிடையேதான் அந்தப் பழக்க வழக்கங்கள் அதிகமாகக் கைக்கொள்ளப் பட்டுவருவதை இன்றுங் காணலாம்.

சமயம், தேசீயத்துக்கும் அப்பாற்பட்டது. அது உண்மையை நாடி நிற்பது; எந்த நாட்டிலும், எந்த மக்களிடையிலும் உண்மை உண்மைதான்; குறிக்கப்பட்ட நாடுகளில் வசிப்பவர்கள் குறிக்கப்பட்ட சமயங்களைத்தான் கைக்கொண்டுவர வேண்டுமென்ற நியதி அவசியமானதன்று. ஆனல் நாட்டவர்களுக்கும் சாதியினர்களுக்கும் உரிமையுடையனவாகக் கருதப்படும் வேறுபல விஷயங்கள் உண்டு. இவைகளை எப்படிக் கைக்கொள்ள வேண்டுமென்பதைப்பற்றி விவாதம் ஏற்படலாம். ஒரு நாடு உண்மையாக விருத்தியடைந்து முன்னேற வேண்டுமாயின், கிறிஸ்தவரல்லாதார் போல் கிறிஸ்தவராயுள்ளோரும் முன்வந்து தமது கடமையை ஆற்றுதல்வேண்டும். இதற்கு முன்னரும் இம்முறையே கையாளப்பட்டு வந்தமைக்குச் சரித்திரமே சான்று பகரும்.

கிருத்தவ சமயம்

★

கிருத்தவம் அல்லது கிருஸ்தவம் என்பது கிருஸ்தவ சமயம் ஆகும். கிருஸ்து என்னும் மொழி க்ரிஸ்ரூஸ் (Christos) என்னும் கிரேக்க மொழியைத் தழுவியது. இஃது எபிரேய மொழியிலுள்ள மேசியா (Messiah) என்னும் சொல்லுக்குச் சமமாக வழங்கப்பெற்றது. மேசியா என்பதற்குப் பொருள் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்பதாம். இச் சொல் கிருஸ்துவுக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே யூதருக்குள் வழங்கி வந்தது. பல நூற்றாண்டுகளாக இம்மக்கள் தங்களைச் சுற்றியுள்ள பிற நாட்டவரால் தாக்கப்பட்டும், சிறை செய்யப்பட்டும், ஆளப்பட்டும் வந்தமையால், தங்களைப் பிறநாட்டவர் பிடியினின்று மீட்டு, தங்கள் அரசியலை உறுதிப் படுத்துவதற்கென்று தங்களுக்கு ஒரு தலைவரைத் தந்தருளுவதாகத் தாங்கள் வழிபட்டுவந்த யெகோவா என்னும் கடவுளால் உறுதி மொழி கூறப்பெற்றிருந்தனர். கி. மு. ஆரும் ஆண்டினை அடுத்து இயேசு பெருமான் தோன்றி, தமது முப்பதாம் ஆண்டிலே யூதருக்குக் குருவாக வெளிக்கிளம்பி, பன்னிரண்டு பேரைத் தமக்குச் சிடர்களாகத் தெரிந்துகொண்டு, கடவுளுடைய ஆட்சியைப் பற்றிப் பற்பல உவமைகளால் விளக்கி ஞானோபதேசம் செய்து, ஆண்டவன் அருளால் மக்களின் நோய்களைப் போக்கி, இவ்வாறு திருத்தொண்டு செய்து கொண்டு திரிந்தார். நாளடைவில் அவர் தம்மை மேசியா என்று எண்ணியும் கூறியும் வந்தமையால், அக்காலத்து யூதத் தலைவர்கள் அவர்மேற் பொருமைகொண்டு அவரைக் கொலை செய்வித்தனர். எனினும் அவர் தம்முடைய சிடர்களுக்குக் காட்சியளித்துச் சில காலத்துக்குப் பின்னர் அவர்களை விட்டு மறைந்தருளினர். அவருடைய போதனைகளும், சாதனைகளும், அவர் சிடர்களுடைய போதனை சாதனைகளும், அவர் பெயராலே நிறுவப்பட்ட திருச் சபையின் அநுபவமும் ஆகிய எல்லாம் சேர்ந்தே கிருஸ்தவ சமயம் ஆகும். இச்சமயம் இப்பொழுது உலகத்திலுள்ள எல்லாக் கண்டங்களிலும் பரவி, உலக சமயமாகக் காட்சியளித்து, உலக மக்களின் பெரும்பாலாரால் தழுவப்பெற்றுள்ளது. இச் சமயம் சில கொள்கைகளையும், ஒழுக்க நெறிகளையும் கொண்டுள்ளது. இச்சமயத்தின்படி இறைவனுக்கும், படைப்புக்கும், சிறப்பாக மானிடருக்கும் உள்ள தொடர்பினை யெடுத்துக் கூறுவதே கிருஸ்தவ சித்தாந்தம் ஆகும்.

— ப. ஜோதிமுத்து, எம். ஏ., பி. டி.

இம் மலரை அலங்கரிக்கும் படங்கள் எமது கலைத்திறனின் அத்தாட்சிகள்

ஸபாஸ்

சைத்திரிகர்கள்
படப்பிடிப்பாளர்கள்

SABAS

11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் — 11, STANLEY ROAD, JAFFNA

'எல்லோரும் கூடி ஆடிப் பாடிக்
கொண்டாடும் நாளிதே — நல்ல நாளிதே'

ஆம் தீபாவளித் திருநாளின்போது

சினிமாஸ் லிமிட்டெட் தாபனத்தார்

அளிக்கும் அதி உன்னத தமிழ்த் திரைச்சித்திரம்

★ ★ ★

கலையென்னுங் கடலினிலே கற்பனையாம் படகுவிட்டுக் காதல், களிப்பு, சோகம், தியாகமெனும் முத்தெடுத்துக் கலை உலகின் தலைசிறந்த பாராட்டைப் பெற்றுள்ள

★ வீனஸ் பிக்சர்ஸ் ★



அமரதீபம்

★ சிவாஜி கணேசன் ★ நாகையா ★ சாவித்திரி
★ பத்மினி ★ நம்பியார் ★ தங்கவேலு

டைரக்ஷன்
டி. பிரகாஷ் ராவ்

முதலியோர் நடித்த
அமரதீபம்

கதை வசனம்
ஸ்ரீதர்

CINEMAS LIMITED
117. NEW CHETTY St.,
COLOMBO

பெரும்பேர் இயமன்

பொ. கிருஷ்ணன்

மரணத்திற்கு அதி தேவதை இயமன். இத் தெய்வத்தின் வழுவா நீதித்திறனை நோக்கி இயமதர்மராஜா என்று அழைப்பர். ஆன்மாக்களின் வினைப்பயனுக் கேற்ப உடலிலிருந்து உயிரைப் பிரிக்கும் இக் கூற்றுவன் ஆன்மாக்கள் தாம் கொண்ட உடலில் வாழவேண்டிய கால எல்லை நோக்கி அவர்களுக்கு அளந்து கொடுக்கப்பட்ட எல்லை மீறுது அவர்களை இயமதர்மராஜாவாகிய தம்மிடம் சேர்ப்பிக்கும் காலன் என்பவனுடனும் சித்திரகுப்த னென் கின்ற கணக்குப் பதிவாளனுடனும் வேறும் சில தூதுவருடனும் தன் உத்தியோகத்தை நேர்மை, திறமை, காலக்கடமை திறம்பாமற் செவ்வனே நடாத்துவான். இந்தப் பெரிய அழித்தற் றொழிலை நடாத்தும் தலைவனுக்கோ ஓய்வென்பதே இல்லை. இந்தப் பெரிய உத்தியோகத்துக்கோ பாவம் அவனுக்கு 'பென்ஷன்' என்னும் உபகாரப் பணமும் இல்லை. அரசியல் வாதிகளே மக்களுக்குத் தொண்டு செய்யப் பென்னம் பெரிய தொகையெல்லாம் செலவு செய்து ஆட்சிமன்றத்துட் புகுந்து தாம் செய்த சேவைக்காக 'பென்ஷன்' என்னும் உபகாரப் பணம் பெற்றாலோ என்று (தன் மதிப்புமிக்க தலைவர்களாகிய பொன். இராமநாதன், தங்கமான அருணாசலம் துரை இவ்வுலகில் இல்லாத துணிவால்) நினைந்து வாயூறும் இக்காலத்துக்கு பற்பல வருடாதி வருடங்களுக்கு முன்னே உத்தியோகம் தொடங்கிய இயமதர்ம ராஜாவுக்கோ 'பென்ஷன்' என்ற பேச்சே இல்லை. வேலை திறமையாக நடக்கிறதென்று காட்டுவதற்கு இக்காலத்திற்போல ஆயிரக் கணக்கான மைல்களுக் கப்பாலுள்ள நிபுணர்களை வலிந்தழைத்துப் பொருளை அள்ளி வீசும் முறை யொன்றும் இயமராஜாவுடைய நிர்வாகப் பகுதியுட் புகாமையால் அவர் தாமே சகல கருமங்களையும் பார்க்கவேண்டும். பாவம்! ஓய்வொழிச்சலின்றி நேரகாலத்தோடு இத் தொல்லையான ஆன்ம வர்க்கங்களை மரண உலகத்துக்குக் கொண்டுவந்து சேர்க்கும் கடமையைச் செய்யும் இயமன் அருமையாகத் தப்பித் தவறிப் பிழை செய்யாமல் விடுவதுதா னெங்ஙனம்?

தனக்குரிய கால எல்லை வந்தும் இயம உலகத்துக்கு வர ஒருப்படாது எத்தனையோ தூதுவர்களுக்குத் தொல்லை கொடுத்த பிரம்மஸ்ரீ மார்க்கண்டனை நினைத்தவுடன் தர்மராஜாவின் கண்ணில் நெருப்புப் பொறி பறந்தது. காலனுக்குந் தலைவனுகிய தனக்குக் காலகாலன் தந்துள்ள ஆஞ்ஞைப்படியே கடமை யாற்றும் தத்துவ முண்டென்று நினைத்தவுடன், காலகாலன் கழலடியில் ஒன்றியுருகி ஒன்றிய பிராமண முனையை, சிவ சந்நிதானம் என்றும் பாராது, பாசம்வீசி இழுக்கத் துணிவு கொண்டான் எமதர்மராஜா. இக்காலச் சில்லறை யதிகாரிகள் சிலர், நற்குணமுடைய ஈவிரக்கம் பார்க்கும் பேரதிகாரிகளில்லாத நேரத்து, தம் கடமையி னெல்லையை மீறிச் சர்வாதிகாரிகளாக (உத்தியோகம் பார்க்கத் தொடங்கிய அண்மைக் காலத்திலேயே) நடந்துகொள்ளும்போது பழைய தர்மராஜா தம் பல தொல்லைகளிடையே சற்றே துணிவுகொண்டதுதான் (இக்கால முறைப்படி) அவ்வளவு கடூர பிழையன்று. எனினும் பென்னம் பெரும் தமிழ்ப்புலவன் நக்கீரனுக்கே நெற்றிவிழி காட்டி உடலில் நெருப்பெரிவது போல அழல்நோ யூட்டிய சிவன் சந்நிதானத்தில் இவன் வாலாட்டத் தொடங்கியது அனர்த்தமாய் முடிந்தது. மயிரிழையும் நீதிதவறாது நடக்க வேண்டியவன், பக்தன் நிலையை ஆராய்ந்து பாராத அவசர புத்தியால், கடுவிடமுண்டு மரணத்தை வென்ற முதல்வன் சற்றே திருப்பாதத்தை யுயர்த்தவே திக்கெல்லையிற் போய் விழுந்தான். உடலெலும்புக ளெல்லாம் பொடிப் பொடியாய் நொருங்கத் தசையெல்லாம் அழுகற் பூசினிக்காய் சிதறிய தன்மையிற் குழம்பிக் கிடந்து உயிர் ஊசலாடிய நிலையில் மிக மோசமான ஒரு கருமம் நிகழ்ந்தது. பனையால் விழுந்தவனை மாடேறி மிதிக்கும் பான்மையிற் காலனேறி வந்த எருமைக்கடாவே அவன்மீது

விழுந்து துண்டந் துண்டமாய்ச் சிதறியது. பாவம்! இயமராஜா ஆரோகணித்த கடாவே அவர்மீது ஆரோகணிக்கலாயிற்று. எத்தனையோ ஒட்டுக்களும் தையல்களும் போட்டு, விழுந்த இயமனை ஒருமாதிரிச் சரிக்கட்டி, ஓடிய உயிரையும் உடலுக்குள் ஓட்டி, உருப்படியாக்கிவிட்டார்கள். முதல்வனும் பிராமணப் பையனும் பரிவுகொண்டு பார்த்தருளியமையால் முறிந்த இயமனும் ஒருமாதிரி, கடாவுடன் நிமிர்ந்துவிட்டான். வீடுவந்துசேர்ந்த இயமன்,மனையாளாகிய இயமியின் சொற்படி வைத்திய குழுவின் சிபார்சுப்படி உத்தியோகம் பார்க்காவிட்டாலும் இனிமேலாவது இப்படி விழுந்து உயிர் சிதையா வழியைத் தேடத் தொடங்கினன். வைத்திய நாதனாகிய சிவபெருமான் சந்நிதானத்துக்கு எந்த வைத்தியர் குழுவும் இயமனின் தகுதியின்மையை எடுத்துக்காட்டமுடியாமையினால் இயமனே திண்டாடித் திண்டாடி இந்த உத்தியோகத்தை அஞ்சி யஞ்சித் தன் னதிகார வெல்லையை மிஞ்சி எதுவுஞ் செய்யாது பார்க்க நேர்ந்தது. "முரிவு பலமோ, முரிந்தனவெல்லாம் பொருந்திவிட்டனவோ, உடலிரணங்கள் எப்படி" யெனச் சுகம்விசாரிக்க வந்த தன் கீழதிகாரிகளைப் பார்க்குந் தோறும் இயமனை வெட்கம் பிய்த்துப் பிடுங்கித் தின்னத் தொடங்கிற்று. அதன்மேல் இயமனும் மிகவும் புத்தியாக நடக்கத் தொடங்கினன்.

இந்தக் காலனையே கலக்கிய பெருவலி மிக்க பத்துப் பெருந்தலையுடைய இராவணன் கயிலைமலையை எடுத்தஞான்று மலைமகள்கோன் கோபமின்றிச் சிறிதே சிரித்துத் தன் சேவடிக் கொழுந்தைச் சற்றே யூன்றக் கண்வழி குருதி சோர அவ் விலங்கை வேந்தனே விழி பிதுங்கி வாய் பிளந்தானையின் காலன் காலகாலனது திருவடிப் பெருமையை யறிந்து புத்தியாக நடவாதிருக்க இயலுமோ? 'சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாது' என்பதுபோல பக்தர்கள் பரசிவத்தை வணங்கக் காணுந்தோறும், போய் மீண்டுவந்த உயிர் மீண்டும் போவது போன்ற பல உணர்ச்சி இயமனை ஆட்கொண்டது. அதன் மேல் அவன் அடிக்கடி தன் கீழுள்ள அதிகாரிகள் யாவரையும் அழைத்து ஆலோசனைக் கூட்டம் நடாத்துவது வழக்கம். ஒருதினம் தன் கீழுத்தியோகத்தரை அழைத்த இயமன் திடீரென இருகரமும் கூப்பி எழுந்துநிற்கலாயினன். பரிவாரங்களோ எஜமான் தங்களைக் கும்பிடுகிறாரோ, காலகாலன் காலுயர்த்த விழுந்து கலங்கிய மூளைக் கலக்கம் இன்னமுந் தீர்ந்திலதோ என அறியாராய்த் திகைத்தனர். இயமன் கும்பிட்டது காளத்திநாதன் வீற்றிருக்கும் திக்கை நோக்கியே. கும்பிட்டதும் தன் இரு கையையும் அமைத்து ஒரு பெரும் உய்வழி கூறலாயினன். காளத்திநாதனுடைய பக்தர்களைக் கண்டால் தூதுவர்கள் அவர்களுடைய கண்ணுக் கெதிர்ப் படாமலே அவர்களுக்கொரு கும்பிடு போட்டு விட்டுப் பணிந்தபடியே அதிக தூரத்தில் விலகிச் செல்லவேண்டும் என்பதுதான் அந்த உபாய உய்வழி. நக்கீரர் திருவாக்காலேயே நாம் அதனை (பதினேராந் திருமுறையில் உள்ளபடி) கேட்போமாக.

"தொழுது நமனுந்தன் தூதுவர்க்குச் சொல்லும்
'வழுவில்சீர்க் காளத்தி மன்னன்—பழுதிலாப்
பக்தர்களைக் கண்டாற் பணிந்தகலப் போமின்கள்
எத்தனையுஞ் சேய்த்தாக' என்று."

யாராவது பக்தர்கள் செம்பொன் மன்றிற் சிவன் சீறடிகளைத் தொழக்காணின் கூற்றுவன் அவர்களைக் கைகுவித்துக் கும்பிடுவானென்று குமரகுருபர சுவாமிகள் இயமன் இறைவன் காலடிக்கண் பட்ட அவஸ்தை அனுபவத்தை நகைச் சுவையோடு நயம்மிக,

"கங்கையாள் கேள்வன் கழறெழுஉக் கைகூப்பி
நின்றிறைஞ்சச் சென்றிறஞ்சுங் கூற்று"

என்று கூறுகின்றார். அடியார்களோ சிவனை நின்றநிலையில் இறைஞ்சினால், இயமனே தன் உலகிலிருந்து அதி வேகமாகப் புறப்பட்டு அவ் வடியார்களைச் சென்று சென்று தேடித் தேடி வணங்கச்செய்த வல்லமை உண்மைப் பக்தனாகிய மார்க்கண்டேயனுடையதன்றே? இயமன் மார்க்கண்டப் பிள்ளையிடம் தேடிக் கற்ற பாடம் அவன் மனதிற் பதிந்ததோடு அவனுக்கு நல்ல பிரயோக அறிவையும் கொடுத்தது.

இதுவரை சிவனுக்கும் அடியாருக்கும் பயந்த இயமன் வேறு ஏதாவது காரணத்திற்காக இரு கரமுங் குவிக்கும் எல்லோருக்கும் பயப்படத் தொடங்கிவிட்டான். அவன் மனையாள் கூட அவன்செயலைப் பார்த்து, "நாயகா! தாங்கள் அரசியற் சபைத் தெரிவுக்கு நிற்கும் அபேட்சகரைப் போல வருவார் போவார், அறிந்தார் அறியாதார், கண்ணற் காண்பார் புறமுதுகு காட்டுவார் யாவருக்கும் ஒருசேரக் கும்பிடு போடுகிறீர்களே! கிராமச்சங்க அங்கத்தவராக

வர ஆவல்கொண்ட படிப்பற்றவர்கூடத் தங்களைப் போலப் பிறரைக் கும்பிடமாட்டார்களே!" என்று கூறுமளவிற்கு இயமன் தாழ்ந்து விட்டான். பெண்களையுமே கும்பிடத் தொடங்கிய இயமன் வயதையும் நோக்காது சிறுபெண்பிள்ளைகளையுமே கும்பிடத் தொடங்கிவிட்டான். அவர்களைக் கும்பிட்டாலுங் காரியமில்லை என்ற அளவிற்கு ஒரு சின்னஞ்சிறு கூடலூர்ப் பெண்பிள்ளையைத் தாழ்ந்து பணிந்த பக்தராகிய புலவருக்குமே எழுத்துமூலம் (வாய்மூலமாயினுங் காரியமில்லை, கழுத்தைக் கொடுத்தாலும் எழுத்தைக் கொடாதே என்ற பழமொழியையும் மறந்து) பணிவான விண்ணப்ப மொன்றினை அனுப்பியேவிட்டான். கூடலில் இருக்கும் என்றும் சிறுபிள்ளையான அப் பெண்பிள்ளையின் கணவன் காலடி தந்த அடியையும் உதையையும் நினைந்துவிட்டான். மீளுட்சியாகிய சிறு பெண்பிள்ளையைப் பக்தர் பணிந்த மாத்திரத்தே அவர் மரண உலகத்திற்கு அப்பாற்பட்டவராகி விட்டபடியால் மரண தேவதையாகிய தனக்கு எத்தகைய தீங்கை இழைப்பிப்பாரோ எனப் பயந்தே அம்மையார்க்கு முன்னின்று விண்ணப்பிக்கும் பக்த பெருமான் திருக்கரத்தில் தப்பாமே விழத் தக்கதாகத் தன் தாழ்மையான விண்ணப்பத்தை அவரிடம் சமர்ப்பிக்கின்றான். அவ் விண்ணப்பத்தை நயமொழுகும் முறையில் நமக்கு எடுத்துக்காட்டுமவர் சிவசத்தியின் பக்த மணியும் தமிழன்னையின் புலவர்மணியுமாகிய பலபட்டடைச் சொக்கநாதரே. இதோ அவ்வரிய விண்ணப்பம்:-

"கான்தெண்ட னிட்ட கருங்குழ
லாளையென் கண்மணியை
தேன்தொண்டை வாய்ச்சியைத் தென்கூட
லிற்சிறு பெண்பிள்ளையை
யான்தெண்ட னிட்ட பொழுதே
இயமன் எனக்கும்'அடி
யேன்தெண்ட னிட்டவிண் ணப்பம்'என்று
ஓலை எழுதுவனே"

தாம் தெண்டனிடத் தொடங்கு முன்னரே பல பல விதமாகத் தெண்டம் சமர்ப்பிக்கும் இயமனிலும் பார்க்க எத்துணைச் சிறப்புடையார் பக்தமணிகள்!

துணைவனைத் தொழு

○●○

நடமாடுங் கோயிலாம் நல்லுயிர்க்கும், படமாடும் கோயிலாம் திருக்கோவிற்கும் நாற்பெருந் தொண்டினை நாளும் இயன்றவாறு இயற்றும் தொண்டரெனும் எழிற்பயிர் செழிக்கப் பொழியும் செழுமழையை, தொண்டர் திருவுள்ளமாகிய தாமரையை மலரச் செய்யும் அறிவொளியை, மும்மலமாகிய 'ஒன்றுய் முகீழ்த்தெழுந்து எத்தனையோ கவடு'விட்ட பெருமரத்தை வேரற வீழ்த்தும் சூறைக் காற்றை, பாவப் பெருநெருப்பினைப் பட்டொழிய அணைக்கும் அருள் நீரை, "ஓர்த்துள்ளம் உள்ளதுணர்க்த" உரவோராம் மெய்யடியார்க்குப் பொய்யாப் பேரின்பை நெஞ்சமே வஞ்சமின்றிக் கருதுவாயாக. அவன் 'அருட்கண்ணே கண்ணுக' வன்றி வேறெருரு வழியானும் காண்டற்கரிய உள் ளொளி பெருக்கும் உலப்பிலாப் பேரொளியை உன்னுவாயாக.

— நீதிநூல்

யாழ்ப்பாணத்தில் நாடகக் கலை

'இலங்கையர்கோன்'

இடது காலுக்கும் வலது காலுக்கும் வித்தியாசம் தெரியாத கிராம நடிகர்களுக்கு ஒரு காலிற் பனை ஓலையையும் மற்றக் காலில் ஒரு சீலைத் துண்டையும் கட்டி "ஓலைக்காலை முன்னே வை, சீலைக்காலைப் பின்னே வை" என்று கூறிப் பல ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக் கிராமங்கள்தோறும் வாழ்ந்த அண்ணாவிமார் கூத்துப் பழக்கியதாகக் கர்ண பரம்பரைக் கதை ஒன்று வழங்குகிறது.

கிராமந்தோறும் வழங்கிவரும் பல கதைகளைப்போல இதுவும் ஒரு புனைந்துரையே. ஆனால், கிராமந்தோறும் கூத்துக்களும் அதன் பிறகு நாடகங்களும் ஆடப்பட்டன. அவற்றைக் கிராம மக்கள் அனைவரும் சென்று கண்டு கேட்டு மகிழ்ந்தார்கள் என்பதுமட்டும் புனைந்துரை ஆகாது. யாழ்ப்பாண மக்கள் அத்துணைப் பெரும் நாடக ரசிகர்களாக இருந்தார்கள்.

நாட்டிய நாடகம்

முதலிற் கூத்து என்ற நாட்டிய நாடகம் வழக்கில் இருந்தது. காத்தவராயன் கதை, பூதத் தம்பி, வள்ளியம்மன் நாட்டியம் முதலியன இந்த நாடகங்களிற் சில. 'ஓலைக் காலை முன்னே வைத்துச் சீலைக்காலைப் பின்னே வை'த்துப் பழகிய நாடகங்கள் இவைதான். யாழ்ப்பாணக் குடாநாட்டிலே இவை இப்பொழுது முற்றாக அழிந்துபோய்விட்டன என்றே சொல்லவேண்டும். இவற்றைப் புதுப்பித்து மேடையிட முயலும் சில பழமை வாதிகளைத் தவிர மற்றையோர் இதை மறந்தே போய்விட்டனர்.

கோயில் முன்றில்களிலும் ஊர் மத்தியிலும் அமைந்த வட்டவடிவமான மண் மேடைகளில் ஆடப்பட்ட இந்தப் பாட்டுக்கூத்து நாடகங்கள் மேடைக்குக் கொஞ்சமும் பொருத்தம் இல்லாதவை.

அவைகளிலே பாட்டுநயம் உண்டு. கதகளியை அடியாகக்கொண்ட கூத்துநயம் உண்டு; கதைநயமும் உண்டு. அவை புனருத்தாரணஞ் செய்யப்பட வேண்டுமானால் அவைகள் பிறந்து வளர்ந்த ஊர் முன்றில்களிலும் கோயில் முன்றில்களுமே அன்றி மேடைகளில் அல்ல என்பதைப் புனர்உத்தாரணஞ் செய்ய முயலுவோர் உணர்ந்துகொள்ள வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில்

இந்த நாட்டிய நாடகங்கள் கிழக்கு மாகாணத்தில் வெண்மணல் பரந்த ஊர் முன்றில்களிலே இன்றும் ஆடப்பட்டு வருகின்றன. தென்மோடி என்று புயற் பிரளயம் போன்ற வேகமான ஆட்டமாகவும், வடமோடி என்று சிறிது மென்மையான ஆட்டமாகவும் ஆடுகின்றார்கள். அவைகளைக் கண்டு கேட்டு மகிழும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருந்தது. அவைகளிற் சொல்லிய ஒரு அழகையும் பண்பையும் நான் கண்டேன்.

யாழ்ப்பாணத்திலே இதைப் புனருத்தாரணஞ் செய்ய முயல்பவர்களை, "தயவு செய்து மட்டக்களப்புக்குப் போய் இதைப் படித்து வாருங்கள்" என்றுதான் எனக்குச் சொல்லத் தோன்றுகின்றது.

தனித் தண்ணுமையின் அதிர்வுடன் ஆடப்படும் இந்த நாட்டியத்தின் அழகை ஆரே சொல்லவல்லார்?

'ட்ராமா மோடி'

நாட்டிய நாடகம் அழிந்தவுடன், யாழ்ப்பாணத்தில் 'ட்ராமா மோடி' நாடகம் என்று ஒன்று வளர்ந்தது. அதுவும் ஊர் முன்றில்களிலே ஆடப்பட்டது; ஆனால் மண்மேடைக்குப் பதில் மரமேடைபோட்டு ஆடினார்கள். நாட்டியத்திற்கும் பாட்டுக்கும் பதிலாக நடிப்பும் பாட்டு–விரவிய பேச்சும் வந்தன. தனித்தண்ணுமை [மத்தளம்] என்பதற்குப் பதிலாக தண்ணுமையுடன் பின்னணியாக வீணையையும்

சேர்த்துக்கொண்டார்கள். கட்டியங் கூறும் கோமாளி என்று ஒரு பாத்திரத்தையும் சேர்த்துக்கொண்டார்கள்.

வீரகுமாரன் நாடகம், அரிச்சந்திர நாடகம் என்பன இவற்றுட் சில. ஒரு நாடகத்தை ஒரு வருடம் முழுவதும் ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு 9 மணி தொடக்கம் விடியும்வரை ஆடுவார்களாம். ஊர் முழுவதுமே வந்து மேடைக்கு முன் அமைந்த வெளியில் இருந்து பார்த்து இரசிப்பார்களாம்.

நாடகப் பிரதி என்று ஒன்று இருந்தாலும் நடிகர்களுக்குச் சமயோசிதமாகப் பேசுவதற்கு அதிக சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்தது. வருடத்திலே ஐம்பத்திரண்டுதரம் ஆடும் ஒரே நாடகத்திற் சமயோசிதப் பேச்சுக்கு இடர் இல்லாவிட்டால், நாலு நாட்களோடு அவை சுவை நைந்துபோயிருக்குமே. பிறகு யார் வருவார்கள் ?

சாதாரண கமக்காரர்களே இவைகளிற் பங்கெடுத்துக்கொண்டார்கள். இளம் நடிகர்களுக்கு ஊர் மங்கையரை மனைவியராகக் கவரும் காதல் போட்டிகளாகவும் இந்த நாடகங்கள் அமைந்தன என்றும் நம்ப இடம் உண்டு !

ஈற்றில் இதுவும் அழிந்தது..... இது அழிந்தது இற்றைக்கு எழுபது ஆண்டுகளுக்கும் நாற்பது ஆண்டுகளுக்கும் இடையில் என்று சொல்லலாம்.

தென்னிந்திய நாடகம்

இதன் அழிவுக்குக் காரணம் தென்னிந்தியாவில் இருந்து வந்த 'ட்ராமா' என்ற புது நாடகம் ஆகும். எம். ஆர். கோவிந்தன், அரங்க சாமி நாயுடு, எஸ். ஜி. கிட்டப்பா, கே. பி. சுந்தராம்பாள், நடராஜாச்சாரி முதலியவர்கள் இதைப் பரப்பியவர்களிற் சிலர்.

ஹார்மோனியம், டோலக், மிருதங்கம் முதலிய வாத்தியம் வாசிப்பவர்கள் தங்கள் வாத்தியங்களுடன் மேடையின் இடப்புறம் வீற்றிருப்பார்கள். 'வீற்றிருப்பார்கள்' என, சொல்லின் பொருள் அறிந்தே சொல்லுகின்றேன். ஹார்மோனியம் வாசிப்பவர், ஒரு குட்டி இராஜாபோலத் தம் ஹார்மோனியத்தின் பின் வீற்றேயிருப்பர். அவருக்குப் பின் மேசைகள் மீது டோலக்காரன் மிருதங்கக்காரன், அவர்களும் வீற்றேயிருப்பார்கள். இவர்கள் எல்லாருக்கும் பின், திரைமறைவில் பிற்பாட்டுக்காரன் பதுங்கிநிற்பான்.

நாடகபாத்திரம் ஒவ்வொருவரும் மேடை மேல் தோன்றுமுன் ஒரு பாட்டுப் பாடுவார். ஹார்மோனியக்காரனும் பின்பாட்டுப் பாடுபவரும் அதைத் தொடர்ந்து பாடுவார்கள். பாட்டின் பாதி பாடியவுடன் நடிகர் சபையோரின் பலத்த கரகோஷத்தினிடையே மேடை மீது தோன்றி ஹார்மோனியத் தருகில் நின்று பாட்டின் மிகுதியையும் பாடி முடிப்பார். 'திரிலோகமும் புகழும் சுந்தர, தீர வீர சூர னனே', 'ஜய ஜய கோகுல பால' முதலிய பாட்டுகள் இப்படிப் பிரபல்யம் அடைந்தவை.

அதன் பிறகு எல்லாம் பாட்டு மயமாகவே இருக்கும். பாட்டிலே காதல் செய்வார்கள், பாட்டிலே போட்டாபோட்டி என்ற சண்டை போடுவார்கள், பாட்டிலே அழுவார்கள், பாட்டோடு சாவார்கள்.....இப்படி எல்லாம் பாட்டு மயமாக இருக்கும். அரிச்சந்திர நாடகத்தைப் பார்த்த ஒரு ஆங்கிலேயர் தேவதாசனைக் கடித்த பாம்புமட்டும் ஏன் கடிக்கமுன் ஒரு பாட்டுப் பாடவில்லை என்று ஐயம் தெரிவித்ததாக கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எங்கோ ஓர் இடத்திற் குறிப்பிட்டிருக்கிறார்.

சங்கரதாஸ் சுவாமிகள், பாஸ்கரதாஸ் முதலியவர்கள் இத்தகைய 'ட்ராமா' நாடகங்களின் ஆசிரியர்கள். வள்ளி திருமணம், சத்தியவான் சாவித்திரி, கோவலன், நல்லதங்காள், குலேபக்காவலி, சதாரம் முதலியன பிரபலம் அடைந்த 'ட்ராமா' நாடகங்களிற் சில.

யாழ்ப்பாணத்தில்

இந்த இந்திய நாடகங்களைப் பின்பற்றி யாழ்ப்பாணத்திற் சில ஊர்களிலேயும் 'ட்ராமா' நாடகங்கள் நடக்கலாயின. மேடையும் கொட்டகையும் அமைத்து, பந்தங்களுக்குப் பதில் 'பெற்ரோ மாக்ஸ்' விளக்குகள் வைத்து, இலவசமாக நடந்ததற்குப் பதில் பிரவேசச் சீட்டு வைத்துப் பணம் அறவாக்கி, இந்த நாடகங்கள் நடைபெற்றன. சுந்தரம்பிள்ளை, ஆழ்வார் முதலிய யாழ்ப்பாணத்து நடிகர்கள் இதிற் திறமை காட்டிச் சிறிது புகழ் அடைந்தார்கள்.

இதற்கிடையில் பாவைக் கூத்து என்றும் ஒரு நாடகக்கலை வளர்ந்தது. சிறு பாவைகளை மேடைமேல் வைத்து மேடையின் கீழிருந்து ஆட்டும் ஒரு முறையும், பெரும்பாவைகளை, அவற்றின் பின் வைத்த திரை மறைவில் நின்று ஆட்டும் ஒரு முறையும் ஆக இரண்டு முறைகள் யாழ்ப்பாணத்தில் நிலவி வந்திருக்கின்றன. பாவைகள் நடிகர் போல் இயங்கும்; பாட்டுக்களும் வசனங்களும் முறையே மேடையின் கீழும் பின்னும் இருப்பவர்களே பாடிப் பேசுவார்கள். இங்கிலாந்து முதலிய மேலைத் தேச நாடுகளில் வளர்ந்த 'பஞ்ச் அன்ட் ஜூடி' பாவை நாடகங்களைப்போல், இவை அவ்வளவு

தூரம் யாழ்ப்பாணத்து மக்களைக் கவரவில்லை என்றே சொல்லவேண்டியிருக்கின்றது.

இக்கலையும் இன்று அழிந்துபோயிற்று. அதன் பிறகு சினிமா வந்தது. அதோடு யாழ்ப்பாணத்தில் நாடகக் கலையே அழிந்து போய்விட்டது. உயர்ந்த நாடக இரசிகர்களான யாழ்ப்பாண மக்கள் சினிமா என்ற சலனப் படத்தைக் கண்டு மயங்கித் தாம் பரம்பரை பரம்பரையாகப் போற்றி வளர்த்துவந்த உயர்ந்த கலையை மறந்துவிட்டார்கள் என்று வெட்கத் தோடும் துக்கத்தோடும் சொல்லவேண்டி யிருக்கிறது.

இன்றைய நிலை

பள்ளிக்கூடப் பிள்ளைகள், கலாசாலை சர்வகலாசாலை மாணவர்கள் இடையிடையே நாடகம் இன்று போடுகின்றார்கள். ஆனால் அவற்றில் அதிகமானவை, நாடக இரசிகர் களுக்கு ஆர்வம் தராதவையாய், சுவையும் பொருளும் இன்றி வறிதே இருக்கின்றன. இரண்டொரு நல்ல நாடகங்கள் மேடையிடப் பட்டால் அவை பணமின்மை, நடிகர்களிடையே ஆர்வமின்மை முதலிய காரணங்களால் மறு மேடை காணுது மாண்டுபோகின்றன.

கலைகள் பெண்கள் போன்ற சுவாபம் படைத்தவை. அதிலும் நாடகக் கலை என்ற மாது, ஆடை விளிம்பை முத்தமிட்டு அவளை ஒரு பெரும் பீடத்தில் அமர்த்தி வணங்கும் காதலனை விட, கன்னத்திலே தட்டிக் களி மயக்காட்டிக் காதல் செய்யும் காதலனையே அதிகம் விரும்புவாள் என்று சோமசெற் மோம் என்ற ஆங்கில நாடகாசிரியர் ஒரு இடத்தில் கூறியிருக்கிறார்.

அது இன்றைய எங்கள் நிலைமைக்கு முற் றிலும் பொருந்தும். நாடக இரசிகர்களிடை யேயும், நடிகர் நாடகாசிரியர்கள் இடையேயும் கவலை யுறுது நாடகமங்கையைக் காதல் செய் யும் மனப்பான்மை வேண்டும்.

ஊருக்கு ஊர், பள்ளிக்கூட்டத்திற்குப் பள்ளிக்கூடம் நாடக சபைகள் தோன்றிச் சிறு வாழ்வு வாழ்ந்து மறைந்து போகின்றன. உருப் படியான ஒரு நாடகத்தை மேடையிட்ட சபை கிடையாது.

எங்கள் மத்தியிலே நடிகர்களுக்குக் குறை வில்லை. நாடகாசிரியர்களுக்குங் குறைவில்லை. பாட்டு இயற்றுபவர்களுக்குங் குறைவில்லை. தயாரிப்பாளர்கள், மேடை வல்லுநர்கள்; 'மேக் அப்' வல்லுநர்கள், ஒளி ஒலி வல் லுநர்கள் யாருக்குமே குறைவில்லை. பணம் கொடுத்துதவும் ஆதரவாளர்களுக்கும் குறை வில்லை. அத்தோடு என்றும் இருக்கவே இருக் கிறது, யாழ்ப்பாண மக்களிடையே நாடக இரசனை என்ற அழியாத சம்பத்து.

ஒரே ஒரு காரணம்

இவ்வளவு இருந்தும் இன்றுவரை ஏன் உருப்படியான ஒரு நாடகம் மேடையிடப்பட வில்லை?

இதற்கு ஒரே ஒரு காரணந்தான் என்னற் கூறமுடியும். எங்களிடம்—அதாவது: எங்கள் நடிகர்கள், நாடகாசிரியர்கள், நாடகத்தோடு சம்பந்தப்பட்ட மற்றவர்களிடையே—துணிவு என் பதே இல்லை.

மேலைத்தேச நாடுகளில் 'ஒப்பெரு' என்ற இசை நாடகங்கள் என்ன, வேறு வசன நாடகங் கள் என்ன வெற்றிக்குமேல் வெற்றியாகக் கண்டுகொண்டே போகின்றன.

'ஒப்பெரு'க்களிலே, டி. கே. எஸ். சகோதரர் கள் இலங்கையில் மேடையிட்ட நாடகங்கள் போல, 'சீன்ஸ்' என்ற திரைச்சித்திரங்களும் மின்சார ஜாலங்களும் கையாளுவார்கள். மற்ற நாடகங்களிலே நாடகக் காட்சிகளுக்கு ஏற்ற 'செட்டிங்ஸ்' என்ற படுதா அல்லது அட்டைக் காட்சிகளும், மின்சார உத்திகளும் கையாளுவார்கள்.

எமக்கும் அவை எல்லாங் கைவருமே! மேலைநாடுகளில் இப்பொழுது ஒற்றையங்க நாடகம் என்ற புது நாடகக்கலை ஒன்று உருவாகி வருகின்றது. எண்ணிறந்த நாடகாசிரியர்கள் ஒற்றையங்க நாடகங்கள் எழுதுகின்றார்கள்..... அவைகளுக்கு இன்று பிரமாதமான மதிப்பு அங்கே!

இங்கே! ஒற்றைஅங்க நாடகம் என்றால் என்ன என்று கேட்கும் நிலைமையில் இருக் கின்றோம்...

எங்கள் கலை வாழ்வு மட்டும் என்ன, சமு தாய வாழ்வும் வளம்பெற வேண்டுமானால் நாடகக் கலை எங்கள் வாழ்வின் ஒரு முக்கிய அங்கம் ஆகியே தீரவேண்டும்.

நாடகங்களைத் தகுந்த முறையில் மேடை இடவும்; நடிகர்கள், எழுத்தாளர்கள், தயாரிப் பாளர்கள் முதலியோரைப் பயிற்றுவிக்கவும்; நாட கங்களுக்கு வேண்டிய உபகரணங்களையெல் லாம் சேகரித்து வைக்கவும்; நாடகக் கலையைப் பற்றிய சமய நூல்களுங்கொண்ட வாசிகசாலை ஒன்று வைத்து நடத்தவும் வல்ல ஒரு தேசிய நாடக ஸ்தாபனமும் மிக அவசியம்.


யார் இவைகளைச் சிந்தையில் வைத்துச் செயலில் இறங்குவார்கள்? எப்பொழுது?

அந்த நன்னாள் வரும்வரை — "தமிழ் நாடகக் கலையே வாழ்க நின் கொற்றம்!" என்று வாழ்த்திக் காத்திருக்க நான் சித்தமாக இருக் கிறேன்.


எல்லோருஞ் சமம்

※

ஆலயப் பிரவேச இயக்கம் இந் நாட்டில் வெற்றியுற்றிருப்பதைக் கண்டு 'ஈழகேசரி' கழிபேருவகை கொள்கின்றது. 1956ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9ஆந் திகதி நல்லூர்க் கந்தசுவாமி கோவிலும், வண்ணைப் பண்ணைச் சிவன் கோவிலும், யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலும் ஹரிஜனர்களுக்குத் திறந்துவிடப்பட்டன. புராதனப் பெருமைக்கு இருப்பிடமான இக் கோவில்களின் தர்மகர்த்தாக்களின் முன்மாதிரியைப் பின்பற்றி வடபகுதியிலுள்ள வேறும் பல கோவில்கள் ஹரிஜனர்களை உள்ளே அனுமதித்து இந்து சமயத்தின் களங்கத்தை நீக்கி மக்களின் மன மாசை அகற்றிவிட்டன. யாழ்ப்பாணம் சாதித் துள்ள இவ்வற்புதம் சைவ சமயத்தையே புனிதமாக்கிவிட்டது.



யாழ்ப்பாணம். வண்ணை வைத்தீசுவரன் கோவிலுட் சென்று ஹரிஜன பக்தர்கள் இறைவழிபாடு செய்யுங் காட்சி.



சரித்திரப் பிரசித்தி வாய்ந்த யாழ்ப்பாணம் [redacted] கோவிலுள் ஹரிஜனர் வணங்குங் காட்சி.

பண்ணி னேர்மொழி
யாளுமை பங்கரோ
மண்ணி னுர்வலஞ்
செய்ம்மறைக் காடரோ
கண்ணி னுலுமைக்
காணக் கதவினைத்
திண்ண மாகத்தி
றந்தருள் செய்ம்மினே.



இசைப் புலவருக்குப் பொற்கிழி

வேலணையில் நடைபெற்ற திருமுறை விழாவின்போது, திருப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார், ஈழத்து இசைப் புலவர் என். சண்முகரத்தினம் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்துப் பாராட்டினர்கள் சுன்னாகம், இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற பாராட்டு விழாவின்போது மக்கள் சார்பில் இசைப் புலவர் சண்முகரத்தினம் அவர்களுக்குப் பொற்கிழி அளிக்கப்பெற்றது. மாகாண அதிபதி திரு. எம். ஸ்ரீகந்தா அவர்கள் இசைப் புலவருக்குப் பொற்கிழி அளித்து அவரது கலைப் பணியை வாழ்த்தினர்கள்.

இசைக் கலை வளர்ச்சி

இசைப்புலவர் என். சண்முகரத்தினம்

உலகம் தோன்றிய போதே இசையுடன் தோன்றிற்று. தோற்றுவித்த இறைவனே இசைவடிவினன். இவ்வுலகம் இயங்குவதும் இசையால். உலகத்து சராசரங்கள் வழிபடுவதும் இசையால். கலை, நாகரிகம், மக்கள் வாழ்வு, இன்பம், முத்தி முதலியன வெல்லாம் இசைமயம். இசையானது உலகத்தில் எப் பொழுது அற்றுப்போகுமோ அப்பொழுதே உலகம் அழிந்ததென்று சொல்லவேண்டும்.

உயிரொடு கலந்து நிற்பது

இத்தன்மை வாய்ந்த இசையானது உலக மக்கள் வாழ்வில் உயிரொடு கலந்து நின்று உறுதுணையளிக்கிறது. இவற்றைத் தெரிந் தோருக்கும், தெரியாதோருக்கும் எடுத்துக் காட்டி இன்பத் தமிழொடு பாடித் தம் வாழ்க்கை யையே இறைவனுடைசைந்த வாழ்வு ஆக்கி மாபெரும் அற்புதங்களைச் செய்தவர்கள் நம் செந்தமிழ் ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலிய மகான்கள். இவர்க ளுடைய வரலாறுகளை நாம் பலகாலும் படித்துங் கேட்டு மின்புறுகின்றோம்.ஆனல் நாம் அவற்றிலே குறிப்பிடவேண்டியது, இசையின் வலுவினு லேயே இவர்கள் இத்துணைப் பெரிய தெய்வீகத் தைப் பெற்றிருந்தனர் என்பதே. எம்பெருமான் இசையின்பத்தைத் தள்ளிவிட்டுப் பராமுகமா யிரார். அடியார்கள் கனிவொடு பாடினல் வெகு விரைவில் எதிர்வருவார். அவர் அடி யார்கள் மனத்திலேயே வாழ்கிறார். வேறெங்கு இறைவனைத் தேடிச் செல்ல வேண்டும்? 'கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாக, பாதத்தைத் தொழுகின்ற பரஞ்சோதி பயிலு மிடம்' என்பது ஈண்டு சிந்திக்கத்தக்கது. இசை பாடும் அடியார்கள் மனத்தில் சும்மா வீற்றிருக்க வில்லை!

இசை சாதித்த அற்புதங்கள்

'ஏழிசையாய் இசைப்பயனுய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய்' அடியார்க்கு எளியவன் அம்பலவாணன் தோழனுகி, உடன் நின்று உதவிப் பரவையிடந் தூது சென்றது எதனல்? ஊமையை வாய்பேசச் செய்தது எதனல்? முதலையுண்ட பிள்ளையைத் திருப்பி உயிரொடு தரச்செய்தது எதன் வலுவால்! இப்படியெல்லாம் இசையின் சக்தியினல், இனிது பாடிப் பெரும் அற்புதச் செயல்கள் பல ஆற்றியுள்ளார்கள். இவற்றை யெல்லாம் ஒவ் வொன்றுகக் குறிப்பிட இங்கு இடந் தராது.

இசைபாடு மடியார்கள், முறை வழுவாது தூய்மையான மனத்தினோடு இறைவனை மனங் குளிரச் செய்வதற்கே இசை யுரியது என்னும் ஒரே திடசித்தத்தோடு பாடிவந்தால் இவர்க ளுடைய மனந் தூய்மை யடைந்து வலுப்பெற்று எதற்கும் அஞ்சாத் தன்மையுடனும், நீதிநெறிக ளுடனும் வாழும் ஆற்றல் ஏற்படும். எம்பிரான் திருவடி யொன்றையே நம்பினல் அவர் 'வேண் டுவார் வேண்டுவன' ஈவார். அத்தகைய நம் பிக்கை இசை யறிவால் இனிது வளரும். தூய்மையுடன் இசை பயில்வோர் தாம் வாழுங் காலத்திற் சகல இன்பங்களையும் பெற்று இறுதி யில் இறைவனடி சேருவர்.

இசையின் இக்கால நிலை

இக்காலத்தில் வியாபாரங்களுக்கும், தம்மை விலைப்படுத்துவதற்குங்கூட இசை பயன்படுகிற தென்றல், இன்றைய இசையின் நிலையைப்பற்றி நாம் வேறென்ன சொல்வது?

சொல்லுதற்கரிய மகத்துவமுள்ள இந்த இசையை நாம் எப்படிப் பேணி வளர்ப்பது? உலகத்தில் ஒரு சாரார் நினைப்பதுபோல் இது ஒரு சாதாரண கலையா? இசையை இனிது பாடுபவன் சாதாரண பாட்டுக்காரனு? இசை

இவ்வுலகம் முழுவதுக்கும் தேவையான ஒரு பெரும் பொதுப் பொருள். இக்கலை வளர்ச்சி யடைவதன் மூலம் பக்தி, அறம் முதலியன வளர்ந்தோங்கத் துட்ட கருமங்களும், பஞ்சமா பாதகங்களும் ஒழியும்.

தெய்வீகத்தன்மை பொருந்திய இந்த அற் புதக் கலையை, கலைக்கெனவே கற்கப் பலர் முன் வரவேண்டும். கற்றுக்கொள்வதற்குப் போது மான வசதியுள்ள கலைக்கோயில்களும் எழ வேண்டும். எம் நாட்டு மக்களின் முன்னேற் றத்திற்காகக் கற்றுக் கொடுக்குந் தன்மை வாய்ந்த ஆசிரியர்களும் முன்வரவேண்டும். கற்றுத் தேறி ஒழுக்கத்துடன் இசைபாடி உய்விக் கும் அடியார்களைத் தக்கவாறு ஆதரிக்கப் பெரு மக்களும் முன்வரவேண்டும்.

கலைஞன் சேவையைப் பயன்படுத்துக

கலைஞனை ஆதரித்தால் மட்டுமே கலை வளர முடியும். கலைக்கூடங்களையும், கலை அரங்கு களையும் நடாத்தக் கலைஞனின் சேவையையே பெரிதும் பயன்படுத்த வேண்டும். இசைக்கலைக் கென இசை விழாக்கள் பல நடாத்தப்படுகின் றன. தலைவர்களுடைய பேருரைகளில் இசை யின் மகிமையும், வளர்க்கும் முறைமையும் ஆவசியகமும்வற்புறுத்தப்பட்டனவாகப்பத்திரிகை களிலும் செய்திகள் வெளிவருகின்றன. பேருரை ஆற்றிய அடுத்த கணமே, இசை நிகழ்ச்சியையுங் கேளாது காதை மூடிக்கொண்டு தலைவர்கள் வெளியேறி விரைந்து வீடு சேரு கின்றனர்.

இசை வளர்க்குங் கைங்கரியங்களிற் பங்கு பற்றப் பெரியார்கள் பலர் பின்வாங்குகின்றனர். பேச்சாலும், எழுத்தாலும், பத்திரிகைச் செய்தி யாலும் மட்டும் இசை வளர்த்துவிடுவோ மெனத் திருப்தியடைந்தாற் போதுமா ? இவை மட்டும் போதா. பெரியார்கள் பலர் இசைக் கலை வளர்ச்சிக்கான வழிவகைகளை வகுக்க வேண்டும். அரசினரின் அனுசரணை கலைஞர் களுக்குக் கிடைக்க வேண்டும். இன்று நம் நாட்டில் இசைவாணர்களும், பொதுமக்களுமே இத்தொண்டில் அதிக பங்குபற்றக்கூடியவர்கள். பிறதுறைகளிலும் உழைக்கும் பெரியார்கள் தத்தம் ஓய்வு நேரங்களில் இசைக்கலை வளர்ச்சிக் குப் பாடுபடலாம்.

கற்றுப் பாடி இசை பரப்பி நாட்டின் நலத்தை மேலோங்கச் செய்யுஞ் சக்தியற்ற சாரீரமற்றவர்களும், கற்குந் திறமையற்றவர்க ளும், இசைவழியிற் காலஞ் செலவிட நேரமற்ற ஏனையோருங் கேட்டு, இன்புற்று நன்மையடை தற்கு இசைக் கழகங்கள் பல அமைத்தல் வேண்டும். இசை பயில வல்லவர்களுக்கு ஏற்ற உயர்தர இசைக் கல்லூரிகளும் விரை வில் நம் நாட்டில் நிறுவப்பெற வேண்டும். இவற்றுக்காக உழைக்க எல்லோரும் முன்வர வேண்டும். தமிழ் இசையால் நமது சமயம், இனம், நாடு என்பவற்றை நன்குயர்த்து வோம்! சேரவாருங்கள் செந்தமிழ் மக்களே!

பழந்தமிழ் இசைக்கருவிகள்

★

தமிழ் மக்கள் குழலும் யாழும் ஆகிய இசைக்கருவிகளின் துணைகொண்டு பல்வேறு இசை நுட்பங்களை வெளியிட்டுள்ளார்கள் என்பது முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தினாலும் அதன் உரைகளாலும் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையுமாகிய சங்க இலக்கியங்களிற் காணப்படும் இசை நூற் குறிப்புக்களாலும் நன்கு துணியப்படும். பழந்தமிழ் மக்கள் வாசித்து மகிழ்ந்த யாழ் என்னும் இசைக்கருவி தமிழ் மக்களது விழிப்பின்மையால் பிற்காலத்தில் வழக்கற்று மறைந்தது. வழக்கற்று மறைந்த யாழ்க்கருவியின் இயல்பும், அதன்கண் இசைக்கப்பெற்ற பன்னிரு பாலைகளின் பயனும், குறிஞ்சி பாலை முல்லை மருதம் என்னும் நாற்பெரும் பண்களின் இயல்பும், அவற்றின் வழியமைந்த நூற்றுமூன்று பண்களின் திறனும் ஆகியவற்றை இக்காலத்திலும் நன்கறிந்து பயன் படுத்தி மகிழும்வண்ணம் சேரமுனிவராகிய இளங்கோவடிகள் அறிவுறுத்திய இசைத் தமிழ் நுட்பங் களை அருள்மிகு விபுலாநந்த அடிகளார் தாம் இயற்றிய இசைத்தமிழ் நூலாகிய யாழ்நூலில் தெளி வாக அறிவுறுத்தியுள்ளார்கள். அடிகளாரது ஆராய்ச்சியால் உருப்பெற்ற பழந்தமிழ் இசைக் கருவிகளாகிய முளரி யாழ், செம்முறைக் கேள்வியாகிய சகோட யாழ், பெருங்கல மென வழங்கும் ஆயிர நரம்புடைய பேரியாழ் முதலிய பழந் தமிழ் இசைக்கருவிகளை முறையாக அமைத்து அக் கருவிகளின் வழியாகப் பண்டைத் தமிழர் கையாண்ட சங்ககால இசைநலங்களை உலகமெலாம் பரவச் செய்தல் தமிழ் மக்களாகிய நமது கடமையாகும்.

—க. வெள்ளைவாரணனார்



செல்வச் சந்நிதி — தொண்டைமானாறு


மத்தளம் வார்கொம்பு வார்குழற் கின்னரம் வாழ்த்தெடுப்பப்
பத்தியி னூற்பலர் போற்றநற் பாற்கா வடியெடுக்கும்
தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் கோவில்.



வல்லிபுர விஷ்ணு ஆலயம்

" அல்லிவர் கூந்தனல் லாய்ச்சியர் நாட்டவ் வருமுறியி
லெல்லிவர் வெண்ணெய் திருடியக் கோவிய வேந்திழையார்ப்
புல்லி நடனம் புரிந்தோ ரரங்கம் பொலிந்தபெம்மான்
வல்லி புரப்பதி வாழும் " — *வல்லிபுர விஷ்ணு ஆலயம்.*

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பழைய தலைநகரங்களி லொன்றுகிய சிங்கை நகரம் இவ் வாலயத்தின் பக்கத்தே யிருந்ததென்பர் ஆராய்ச்சியாளர்.



கந்தவனக்கடவை முருகன் ஆலயம்

பதஞ்சேர்ந்து விடாதே தாள்பெற
அருள்புரிந்த பிரானூர் மாபதி
பரவு கந்தசுவாமீ கானகம் *எனப்படும்*
கந்தவனக்கடவை முருகன் ஆலயம்.



வல்வெட்டித்துறைச் சிவன் கோவில்

மணியார் கடலார் வளமாரும் மாவீ ழத்தின் முகமாகும்
அணியாழ்ப் பாண திலகமென அமரும் வல்வை வைத்யேசா
பணியாய் வேணிப் பிரானேநின் பதும பாதம் பணிந்தடியேன்
தணியாத் துயரந் தணிந்திடவே சற்றே அருணைக் களிப்பாயே.

எனப் பக்தியுடன் பாடப்பெறும் வல்வை வைத்தீசுவர ஆலயத்துக்கு அதன் வண்ணக் கோபுரம் ஒரு தனியழகை அளித்து நிற்கின்றது. ஆசாரமிக்க அப் பகுதிமக்களால் மிக ஒழுங்குடன் நடாத்தப்படும் விழாக்கள் யாழ்ப்பாணத்தில் மிகப் பிரசித்திபெற்றவை.



நாகர்கோவிலிலுள்ள நாகதம்பிரான் கோவில்

நாக வழிபாடு தொன்றுதொட்டு நிலவி வருகின்றது. பருத்தித்துறையிலிருந்து ஏழுமைல் தூரத்திலுள்ளது நாகர்கோவில். இங்குள்ள நாகதம்பிரான் கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் 'கப்பல் திருவிழா'வுக்குப் பக்தர்கள் திரண்டு செல்வார்கள். இதோ! மருதமரச்சோலையின் நடுவே நிற்பதுதான் நாகதம்பிரான் கோவில்.



நாகர்கோவில் மருதமரச் சோலை

பருத்து வளர்ந்த மருதமரங்களைச் சோலையாகக் கொண்ட நாகதம்பிரான் கோவிலுக்குச் செல்பவர்களை அதிசயிக்கச் செய்யும் பிரமாண்டமான மருதமரம் பெருவனப்புடன் காட்சியளிக்கின்றது.

EVEREADY
TRADE-MARKS
MINI-MAX
Radio Batteries
Packed with Power



மிக வெப்பமுள்ள தன்மைகளுக்குப் பொருத்தமான முறையில் வெப்பமான நாடுகளிலே தயார் செய்யப்பெற்ற **எவரெடி ரேடியோ பற்றறி** இது ஒன்றே.

Sole Distributors :

MAHADAVANS LTD.
MAHARAJA BUILDING
COLOMBO

ஏக விநியோகஸ்தர்கள் :

மகாதேவன்ஸ் லிமிட்.
மகாராஜா பில்டிங்,
கொழும்பு

இலங்கையின் விவசாய கைத்தொழில் அபிவிருத்திக்கு ஆற்றல் புரிகிறோம்

★ ★ ★

நாம் கையாளும் வேலைகளிற் சில :


- ★ இரும்புக் கேடர் வேலைகள்
- ★ இரும்புப் பாலங்கள்
- ★ தண்ணீர்த் தாங்கிகள்
- ★ சுருக்குக் கதவுகள்
- ★ வர்ண வேலைக ளமைந்த இரும்புப் படலைகள்
- ★ யந்திரங்கள் பழுதுபார்த்தல்

வேலை ஸ்தலம் :

நாம் எமது வேலை ஸ்தலத்தில், இரும்பு, சீனேச்சட்டி, பித்தளை, அலுமீனியம், செம்பு, ஈயம் முதலிய உலோகங்களை உருக்கிக் கிடாரம், கோயில் மணி, பல் ரூதை, கரத்தைப் பூண், கரத்தை அச்சு ஆதியன செய்யும் வேலைகளை ஏற்றுக்கொள்ளுகிறோம்.

கட்டிட நிர்மாண வேலைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

நாம் கட்டிய கட்டிடங்களிற் சில :



இராமநாதன் மண்டபம் — பல்கலைக் கழகம்
பேராதனை

- இராமநாதன் மண்டபம் — பல்கலைக் கழகம்
- கெல்டா ஒபயசேகரா மண்டபம் -- பல்கலைக்கழகம்
- புதிய நீதிஸ்தலம் — பாணந்துறை
- புதிய நீதிஸ்தலம் — கம்பகா
- நடை மாடம் —ரத்மலானை ஆகாயநிலையம்
- பம்பலப்பிட்டி மாடி
- பிங்கான்பண்ட உற்பத்திச் சாலை — நீர்கொழும்பு
- குடி வாடிகள் — விவசாய அபிவிருத்திக் கமம், மகாஇலுப்பலம்
- யாழ்ப்பாண அரசினர் ஆஸ்பத்திரி புதிய மருந்துச்சாலை
- பரிசோதனைநிலையம் அரசினர் ஆஸ்பத்திரி, முல்லேரியாவை
- புதிய வாசிகசாலை — பல்கலைக்கழகம்
- புதிய விவசாய படிப்பறை — பல்கலைக்கழகம்

இன்னும் பல.

நீங்கள் விரும்புவது திருப்திகரமான வேலை — எங்களிடம் வாருங்கள்.

★ ★ ★

சாமுவேல், சன்ஸ் அன் கம்பெனி லிமிட்.

பிரபல இரும்பு, யந்திர வியாபாரிகளும் கொந்திராத்துக்காரரும்

371, பழைய சோனக தெரு — தபாற்பெட்டி 46 — கொழும்பு

கிளை ஸ்தாபனம் : ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம்

உள்ளப் பெருக்கு

— சி. வைத்தியலிங்கம் —

பல மாசங்களாய் அனலைக் கக்கிக்கொண்டிருந்த அந்தப் பிராந்தியத்திற் சென்ற சில நாட்களாய் மழை பெய்துகொண்டிருந்தது. மணலை அள்ளி எறிந்து விளையாடிய காற்றுத் தணிந்து பருவகாலப் பெண்போல் அடங்கி அமைதியுடன் வீசத் தொடங்கியிருந்தது.

பள்ள சேரியிலுள்ள குடிசைகள் எல்லாம் அன்று ஓய்ந்து கிடந்தன. பள்ளரும் பள்ளிகளும் வயலில் வேலைதேடிப் போய்விட்டார்கள். ஆடுகள் தாழ்வாரத்தில் ஆறஅமர இரையெடுத்துக்கொண்டு கிடந்தன. வாசற்புறத்தில் நாய்கள் வாலைச் சுருட்டிக்கொண்டு படுத்துத் தூங்கின. சேரிக்கு முன்னல் தேங்கி நின்ற வெள்ளத்திலே பள்ளச் சிறுவர் அரை நிர்வாணத்துடன் விளையாடிக்கொண்டு நின்றனர். மேலே வானம் கறுத்து மழைத் தூற்றல் ஆரம்பித்திருந்தது. அப்பொழுது குடிசைப் பக்கத்தில் பாய்ந்துவந்த பசு ஒன்றைத் துரத்திக்கொண்டு கையிற் கோலுடன் ஒரு இளம்பெண் ஓடிவந்தாள். ''உன்னை விட்டேனே பார், அட சனியனே! நாசமாய்ப் போ'' என்று திட்டிக்கொண்டு கையிலிருந்த கோலால் ஓங்கிப் பசுவின் மேல் ஓர் அடி அடித்துவிட்டு, துரத்திக்கொண்டே ஓடினாள். அவள் ஓடி ஒரு மூலையில் திரும்பும் போது ''ஏ! தெய்வி! மாட்டை ஏன் இப்படி அடிக்கிறாய்? அது உன்னை என்ன செய்துவிட்டது?'' என்று கேட்டுக்கொண்டு எதிர்ப்புறத்திலிருந்துவந்தான் ஒரு வாலிபன். அவனைக் கண்டதும் இவள் சற்று நின்று நிதானமாய் அவனை நிமிர்ந்து நோக்கி, ''முருகா! இது உன் வீட்டு மாடா? எனக்குத் தெரியாமல் போய்விட்டதே. தெரிந்திருந்தால் ....'' என்று நிறுத்திக் கொண்டாள்.

''தெரிந்திருந்தால் அதன் காலையும் முறித்திருப்பாயாக்கும்; அதைத்தானே சொல்ல வந்தாய்'' என்று சொல்லியவண்ணம் மெல்லச் சிரித்தான்.

''சச்சே, உன் மாட்டைப் பிடித்து வைத்துக் கொஞ்சி விளையாடியிருப்பேன். மாடு வைத்து வளர்க்கத் தெரியாதவனுக்கு மாடு என்ன வேண்டிக் கிடக்கிறது? எப்படி மதமத வென்று வளர்ந்திருந்தது; என் கீரைப்பாத்தியை வந்துபார். பயித்தங்கொடி ஒரு சதத்துக்கு உதவுமா? வந்து பார்'' என்று கத்தினாள்.

''சரிதான் தெய்வி, கோவிக்காதே. வாயில்லாப் பிராணி தெரிந்தா செய்கிறது. அதற்கு மாடடை இப்படி அடித்தால்.''

''எல்லாம் என் பிழை முருகா. மாட்டுக்கு வைத்த இந்த அடியை நான் வைக்கிற இடத்தில் வைத்திருக்கவேணும்'' என்று ஆக்ரோஷத்துடன் கூறிவிட்டு விறுவிறென்று திரும்பித் தன் குடிசையை நோக்கிப் போனாள். அள்ளிச் செருகிய கூந்தலுடன் ஒய்யாரமாய் அவள் நடந்து போவதை முருகன் பார்த்துக்கொண்டு நின்றான். பொங்கிப் பூரித்து நிற்கும் அவள் அவயவங்களிலிருந்து உதிர்ந்துகொண்டிருந்த பருவகால எழிலிலே மயங்கிப்போனான்.

மேற்புறத்திலுள்ள தன் வீட்டு வாசலில் நின்று இவர்களைக் கவனித்துக்கொண்டிருந்த முத்துப் பரியாரியார், தெய்வி கடைசியாகச் சொன்ன வார்த்தைகளைக் கேட்டதும் விறைத்துப்போனார். விபூதியை எடுத்து நெற்றி நிறையப் பூசிக்கொண்டார். ஒரு துண்டை எடுத்துத் தலையில் முண்டாசாகக் கட்டினார். ஒரு சால்வையை எடுத்து அரையிலே வரிந்து கட்டிக் கொண்டார். ஒரு துவாயை எடுத்து ஒற்றைத் தோளில் போட்டுக்கொண்டு வெளியில் வந்தார். மருந்துப் பெட்டியைத் திறந்து ஒருமுறை பார்த்துவிட்டு, அதை மூடித் தன் கக்கத்துக்குள் வைத்துக்கொண்டு தினமும் தான் பார்க்கவேண்டிய நோயாளிகளைக் கவனிக்க ஊர்வலம் கிளம்பி விட்டார். நேரே அவர் தெய்வியின் குடிசைக்குச் சென்றபொழுது ஏதோ தாய்க்கும் மகளுக்கு மிடையில் வாக்குவாதம் நடந்துகொண்டிருந்தது.

தெய்வியின் தாய் நோயின் கொடுமையால் உருக்குலைந்து பாயிற் படுத்துக் கிடந்தாள். அவள் கையைப் பிடித்து நாடி பார்த்து, ஒரு மருந்தைக் கொடுத்துவிட்டு வெளியில் வந்தார். தெய்வி ஆட்டுக்குட்டிகளுக்குக் குழை கொடுத் துக்கொண்டு நின்றாள். பரியாரியார் அவளை அணுகி, ''தெய்வி, நானும் சற்றுமுன் எல்லாம் பார்த்துக்கொண்டுதான் நின்றேன். எப்படியிருந் தாலும் நீ பெண்பிள்ளை, இப்படிப் பேசியிருக் கவே கூடாது'' என்றார்.

அவள் கண்களிலே ஆத்திரத்துடன் கூடிய ஒரு ஒளி வீசியது. ''எப்பொழுது பார்த்தாலும் இவர்கள் என்னை நையாண்டி பண்ணுகிறார் கள். நான் வயலுக்கு வேலைதேடிப் போக வில்லையாம். மற்ற இளம் பெண்களைப்போல் வம்பு பேசிச் சிரிக்கவில்லையாம். 'ருங்கிக்காரி' என்று கதை கட்டித் திரிகிறார்கள்'' என்றாள்.

''ஆனால் நீ அடக்கமாய் இனிமையாய்ப் பேசக்கூடாதா? எப்பவோ ஒருநாள் ஆண் பிள்ளை ஒருவனுக்குப் பணிந்துதானே நீ ஆக வேணும். ஏன் உன்னை அவன் வீரனுக்குத் தானே கொடுப்பதாக ஒரு பேச்சிருந்தது.''

அவள் ஒன்றுமே பேசாது மௌனமாயிருந் தாள்.

''ஏன் அவனை உனக்குப் பிடிக்கவில்லையா? நல்ல உழைப்பாளி. தேகக்கட்டுடன் கூடிய நல்ல ஆம்பிள்ளை. உன்னையும் உன் தாயையும் ஒரு குறையும் வராமற் பார்த்துக்கொள்வான்.''

''நாங்களோ ஒன்றுக்கும் வழியில்லாத ஏழைகள் நயிந்தை. என் ஆத்தையும் படுத்த படுக்கையாய் இன்னும் எத்தனை வருஷங்க ளுக்கோ. இந்தப் பாரத்தையெல்லாம் ஏன் பிறர் தலையிற் கட்டவேணும்?'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் சொன்னாள்.

''அப்படியானால் வேறு எவரையாவது மன தில் வைத்திருக்கிறாயா? உன்னையே சுற்றிக் கொண்டு திரிகிறானே முருகன்; அவன்மேல்...''

''எனக்கு ஒருவனுமே வேண்டாம்; என் றுமே நான் எவரையும் கட்டிக்கொள்ளப்போவ தில்லை'' என்று முணுமுணுத்தாள்.

''உன்னையும் ருங்கிக்காரி என்று அவன்கள் சொல்வதிற் குற்றமில்லை, தெய்வி. இந்தப் பரந்த உலகத்திலே நீ ஒரு தனிமரம் என்பதை எப் பொழுதாவது யோசித்திருக்கிறாயா? ஏன் இப் படிப் பிடிவாதம் செய்கிறாய்?''

அவள் ஒன்றுமே பேசாது தன் காலால் நிலத்தைக் கீறிக்கொண்டு நின்றாள்.

''என்னைப் பார் தெய்வி, எனக்கோ வயசு அறுபதை அடுத்துவிட்டது. 25 வருஷங்களுக்கு முன் நான் இங்கே குடியேறியபொழுது உன் அப்பன்தான் எனக்கு ஒத்தாசையாக இருந் தான். நீ இன்னும் குழந்தை என்பதை மறந்து விடாதே. உலகத்தைப்பற்றி உனக்கு ஒன்றுமே தெரியாது. நீ சொல்லும் காரணத்தில் நியாய மிருந்தால் நானே உனக்கு உதவியாய் இருப் பேன் என்பதை மனதில் வைத்துக்கொள்'' என்றான்.

''அது தெரியாதா நயிந்தை. நீங்கள்தானே எங்களுக்குக் கண்கண்ட தெய்வம். உங்கள் அன்பு இல்லாவிட்டால் என் ஆத்தை செத்து...'' அவளால் பேசமுடியவில்லை. அழுகை கலந்த குரலில் ''ஆனால் உங்களைக் கும்பிடுகிறேன், காரணம் கேட்கவேண்டாம். நான் அதைச் சொல்ல விரும்பவில்லை'' என்றாள்.

முத்துப் பரியாரியார் ''தெய்வி, உன் போக்கே எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. உனக்கு மனசுக்குவருத்தமானால் சொல்லவேண் டாம். எல்லாம் காலம் வந்ததும் உன்னைக் கேட் டுக்கொண்டுதான் வரப்போகிறதா?'' என்று கூறியவண்ணம் அடி எடுத்துவைத்தார்.

'என்ன விசித்திரமான பெண். பள்ளர் வகுப்பிலே பிறந்துவளர்ந்த இந்தப் பெண்ணுக்கு இவ்வளவு மனோதிடமும் வைராக்கிய சுபாவ மும் எப்படி வந்தது' என்று யோசித்தவண்ணம் ஒழுங்கைவழியே போய்க்கொண்டிருந்தார். வழி யிலே நின்ற வெள்ளத்தைக் கண்டதும் எல்லா வற்றையும் மறந்து குழந்தைபோல் தண்ணீரைக் கலக்கிக்கொண்டு நடக்கலானார்.

தூற்றலாய்ப் பெய்துகொண்டிருந்த மழை ஏதோ வஞ்சம் தீர்ப்பது போல் பாட்டம் பாட்டமாய்ப் பெய்து, அடைமழையாய்ப் பொழிந்து தள்ளிவிட்டு விறுக்கென்று போய் விட்டது. வானிலே கார் ஓட்டம் குறைந்து சூரிய ஒளிவெள்ளம் பரவிக்கொண்டிருந்தது. வயல்களிலும் பனங்கூடல்களிலும் தேங்கி நின்ற வெள்ளம் வடிந்து புல் பூண்டுகள் முளை விட்டுக்கொண் டிருந்தன. பரட்டைவற்றிப்

போய்க் கிடந்த கடுகுநாவலும், காட்டு முல்லை யும் இலைவிடத் தொடங்கியிருந்தன. கொடி கள் காய்ந்து செத்துப்போன அடி வேரிலிருந்து தும்பங்கொடி அரும்புகள் வெளிவந்துகொண் டிருந்தன. கோடைகாலத்திலே மறைந்து போன கார்த்திகைச் செடிகள் புஷ்பிக்கத் தொடங்கிவிட்டன. தெய்வியின் காய்கறித் தோட்டத்தில் பாவலும், கத்தரியும், தக்காளியும் பூத்துக் காய்த்து நின்றன. முளைக் கீரை கொய்து சமைக்க வேண்டிய பருவத்தை அடைந்திருந்தது.

அன்று நாலு மைல் தூரத்தில் இருந்த சந்தைக்குத் தெய்வி காய்கறி கீரைவகைகளை ஒரு கடகத்திற் சுமந்துகொண்டு போயிருந் தாள். அவைகளை விற்று முடிந்ததுந்தான் மாலை ஏழு மணியாகப்போகிற தென்பதைக் கவனித்தாள். வியாபாரமே அன்று அவ்வளவு விறுவிறுப்பாக இல்லை. அவளுடன் பேச வேண்டுமென்று ஆசையினற் பலர் வந்து காய் கறி விலை கேட்டார்களே யொழிய வியாபாரம் சரிவர நடக்கவில்லை. அவசரமாய்த் தாய்க்கு வேண்டிய சில மருந்துகளையும் சாப்பாட்டுக்கு வேண்டிய சாமான்களையும் வாங்கிக்கொண்டு அவள் புறப்படும்பொழுது முருகன் ஒரு கடை யில் நிற்பதைக் கவனித்தாள். அவன் தன்னைப் பார்க்குமுன் அவ்விடத்திலிருந்து போய்விட வேண்டுமென்ற எண்ணத்துடன் துரிதமாய் நடக்கத் தொடங்கினாள்.

முன் நிலாக்காலமாதலால் இன்னும் இருள் சூழவில்லை. மேலே கிளம்பிக்கொண்டிருந்த இளமதி, சரத்கால மேகமண்டலத்திலிருந்து ஒளியைக் கக்க முடியாமல் தத்தளித்துக்கொண் டிருந்தது. வீதிவழியாக வந்துகொண்டிருந்த தெய்வி பனங்கூடல் ஊடாகப் போகும் ஒழுங் கையில் இறங்கிப் போய்க்கொண்டிருந்தாள்.

அப்பொழுது பின்னால் யாரோ ஓடிவரு வது போன்ற ஓர் உணர்வு அவளுக்கு ஏற்பட் டது. சற்று நின்று திரும்பிப் பார்த்தாள். ஒன்றுமே தோன்றவில்லை. நல்லாய் ஊன்றி உற்று நோக்கினாள். எவரும் கண்ணுக்குப் புலப்படவில்லை. அவள் திரும்பி விரைவாய் நடந்துபோய்க்கொண்டிருக்கையில் "தெய்வி!" என்று யாரோ கூப்பிடுவது கேட்டது. அவள் திகைத்துப்போய் "யார் அது?" என்று கேட் டுக்கொண்டே கூர்ந்து கவனித்தாள். முருகன் இளைக்க இளைக்க ஓடிவந்துகொண்டிருந்தான்.

"தெய்வி, இந்த நேரத்தில் தனிவழி போய்க்கொண்டிருக்கிறாய். உனக்குப் பயமாக இல்லையா?" என்று கேட்டான்.

அவள் திரும்பியும் பாராமல் "யாருக்குப் பயப்பட வேண்டும்? உன்னைப் பார்க்கத்தான் பயமாயிருக்கிறது" என்றாள்.

"நான் என்ன பேயா, பிசாசா, அப்படி நீ பயப்பட? இல்லை, நீ இளம்பெண், தனிமை யில் போகிறாயே" என்று கேட்டான்.

"என்னைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம். உன் வழியைப் பார்த்துக்கொண்டு நீ போ" என்றாள்.

"பேச்சுத் துணையாக இருக்குமே என்று நினைத்தேன். இந்தா தெய்வி, நாக்கு வரண்டு போய் இருக்கும். இந்த 'பீடா' வெத்திலையைச் சாப்பிட்டுப்பார்" என்று சொல்லி எடுத்து நீட்டினான்.

"நீதான் சாப்பிடு, எனக்கு அது தின்று பழக்கமில்லை. வரும்பொழுது காய்ப்பாக்குடன் நாட்டு வெத்திலையும் போட்டுக்கொண்டுதான் வந்தேன்" என்றாள்.

"சரி அப்படியானால் வேண்டாம்."

இருவரும் ஒன்றுமே பேசாமல் நடந்து கொண்டிருந்தனர்.

"அதெல்லாம் இருக்கட்டும் தெய்வி, இன்று நான் உன்னிடம் ஒரு வார்த்தை கேட்க வேண்டுமென்றுதான் ஓடோடியும் வந்தேன். உன்னை வீரனுக்குக் கொடுக்க எல்லா ஏற் பாடும் நடந்து வருவதாகச் சேரியிலே பேச்சு நடக்கிறது. இது உண்மைதானா?" என்றான்.

"நீ யார் அதைக் கேட்க?" என்று சீறினாள்.

"எனக்கும் இதிற் பல நாட்களாய் ஒரு கண் இருப்பதால்தான் கேட்கிறேன்; நீயே என் மன நிலையை அறிந்திருந்தும் இப்படிப் பேசுகிறாய்".

"நான் சொல்ல என்ன இருக்கு? நீயும் மனசில் ஏதோ வைத்துக்கொண்டு அலைவதாகச் சேரியிலே பேச்சு நடக்கிறது. எலும்பில்லாத நாக்கினால் எதையும் பேசுவார்கள். என்னைப் பொறுத்த அளவில் ....". மேலும் சொல்ல முடியாதவள் போல் நிறுத்திக்கொண்டாள்.

பின்னர் "உன்னை என் புருஷனை நான் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. உன்னை மாத்திரமென்ன, எவரையும் ஏற்றுக்கொள்ளமாட்டேன்" என்றாள்.

"இப்ப அப்படித்தான் சொல்லுவாய். ஒரு நாளில்லாவிட்டால் இன்னொரு நாள் நீ தனியன் என்பதை உணராமல் இருக்கப் போவதில்லை. அப்போ எவனையாவது ஒருவனைக் கட்டித்தானே ஆகவேண்டும்".

"அப்படித்தான் என் மனசு மாறினால் உனக்கென்ன ?"

"எனக்கென்னவா ? எனக்கென்னவென்று கேட்கிறாய் ?" என்று அவன் உரத்துக் கேட்கும் பொழுது அவனிடத்திலிருந்து கள் நாற்றம் அடித்தது.

அவளை நெருங்கி, "நான் உயிருடன் இருக்கும் வரையில் உன்னைத் தொடுகிறவனை நானும் பார்க்கத்தான் போகிறேன்" என்று கறுவினான், அவளை உறுத்துப்பார்த்து.

"என்னைத் தொட உனக்கு என்ன உரிமை இருக்கிறது"? என்று கேட்டாள்.

"என்ன உரிமையா?" என்று வெறிகொண்டவன் போல் ஆவேசத்துடன் கத்திக்கொண்டு பாய்ந்து அவள் கையைப்பிடித்தான். திடீரென்று எதிர்ப்புறத்திலிருந்து "யாரடா அவன்?" என்று கூவிக்கொண்டு யாரோ ஓடிவந்து அவன் கைகளைப்பற்றி இழுக்கவே, முருகன் திரும்பிப் பார்த்தான். வீரன் அனல் கக்கும் கொடூரப் பார்வையுடன் முறைத்து நோக்கிக்கொண்டு நின்றான்.

"ஓகோ ! நீயா ?" என்று சொல்லிக் கொண்டே "எட்ரு கையை" என்று கூச்சலுடன் ஓங்கி வீரனின் கன்னத்தில் ஓர் அறை வைத்துவிட்டான். குண்டுபட்ட புலிபோல் வீரன் அவன் மேற் பாய்ந்து பிடரியின்மேல் குத்தினான். பதிலுக்கு முருகன் எதிரியின் முகவாய்க்கட்டிலே பலங்கொண்டமட்டும் ஒரு குத்துக் கொடுத்தான். வீரன் சமாளித்துக் கொண்டு எதிரியின் பின்புறமாக வந்து அவன் கால்களுக்கிடையிலே தன் காலைக் கொடுத்து அவனைக் குப்புறவீழ்த்தினான். இருவரும் ஒருவரை யொருவர் அமுக்கிக்கொண்டு புரண்டார்கள்.

எதிர்பாராமல் மின்வேகத்துடன் வந்து தாக்கிய இந்த அதிர்ச்சியால் தெய்வி ஒடுங்கிப் போனாள். வாய் அடைத்து இவர்களையே நடுக்கத்துடன் பார்த்துக்கொண்டு நின்றாள்.

முருகன் தன் பலங்கொண்ட மட்டும் வீரன் கழுத்தில் கையை வைத்து நெரித்துக்கொண்டு தலையைப் பூமியுடன் சேர்த்து மோதினான். அவன் திமிறிக்கொண்டு சாதுர்யமாய் முருகனைக் கீழே வீழ்த்தி அவன் மேல் ஏறியிருந்துகொண்டு கையை ஓங்கி விசையுடன் மூக்கிலும் நெஞ்சிலும் குத்துவிட்டான். முருகன் அப்படியே சாய்ந்துபோனான். அவன் மூக்கிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்தோடியது.

"சனியனே தொலைந்துபோ" என்று சொல்லிக்கொண்டு வீரன் எழுந்துவந்து பார்த்தான். தூரத்தில் வழிப்போக்கர் யாரோ வருவதுபோல் இருந்தது. "தெய்வி, இங்கே நாம் இனியும் நிற்பது புத்தியில்லை. கொஞ்சம் எட்டிநட" என்று சொல்லிய வண்ணம் முன்னே நடந்தான். தெய்வி சூத்திரப்பாவை போல் இயங்கத் தொடங்கினாள்.

அப்பொழுது, நிலா, தன் அற்பகால வாழ்வு முடிந்து மேற்கு வாயிலில் வீழ்ந்து கொண்டிருந்தது. பனிப்படலம் வந்து கவிந்து காரிருள் சூழ்ந்துகொண்டு வந்தது. பழகிய பாதைவழியாற் கஷ்டமில்லாமல் இருவரும் போய்க்கொண்டிருந்தார்கள். ஒரு வார்த்தை தானும் அவர்கள் பேசவில்லை.

அவர்கள் சேரியை அடைந்தபொழுது ஒழுங்கைகளில் மக்கள் நடமாட்டமே இல்லை. பள்ள சேரியே நேரத்துடன் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டது. நாய்கள் ஒன்றன் பின் ஒன்றாய் ஓலமிட்டவண்ணமிருந்தன. தூரத்திலே எவனோ குடிவெறியிலே குரல் எடுத்துப் பாடிக்கொண்டு தனிவழி போய்க்கொண்டிருந்தான்.....

பிரியும்பொழுது "சரி, நேரமாகிறது தெய்வி, போய்த் தூங்கு, நான் நாளை வருவதாக ஆத்தையிடம் சொல்லு" என்று கூறிவிட்டு வீரன் போனான். தெய்வி தன் குடிசையை அடைந்ததும் அவள் தாய் "பார்த்துப் பார்த்துக் கண்ணும் பூத்துப்போச்சு. குமர்ப் பிள்ளை, இத்தனை நேரம் இருட்டிலை தன்னந் தனிய வாறதென்றால் ... ... ஏன் தெய்வி, எங்க வீரனிடம் சொல்லி அனுப்பினேன்.

அவனைக் கண்டியா?" என்று படுக்கையிற் கிடந்தபடி கேட்டாள்.

"வந்தான் ஆத்தா, நீ சாப்பிட்டியா? எனக்கு ஒரே தலைவலியாய் இருக்கு. நீ தூங்கு, எனக்கு ஒன்றுமே வேண்டாம், நான் படுக்கப் போறேன்" என்று சொல்லியவண்ணம் கடகத்தை ஒரு மூலையில் வைத்துவிட்டுப் படுக்கையை எடுத்து விரித்தாள்.

"என்னவோ அந்த அண்ணமார்தான் கண் திறக்கவேணும். வீரனும் உன்மேல் உசிராயிருக்கிறான்."

"சரி ஆத்தை, நீ பேசாமல் தூங்கு. எல்லாம் காலையில் பேசிக்கொள்ளலாம்" என்று படுக்கையில் வீழ்ந்துவிட்டாள்.

எவ்வளவுக்கு உடல் அயர்ச்சியும் மனச் சோர்வும் தூக்கத்தை எதிர்பார்த்திருந்தபோதிலும் அவள் மனசு ஒடுங்க மறுத்துவிட்டது. அன்று நடந்த சம்பவங்கள் மீண்டும் மீண்டும் அவள் மனசில் தோன்றிப் பலவித உணர்ச்சிகள் பெருகத் தொடங்கின. "வீரன் இன்று வந்திராவிட்டால் என்ன நேர்ந்திருக்கும்... ... எப்படியிருந்தாலும் நான் முருகனுடன் அப்படிப் பேசியிருக்கவேண்டாம் ... ... வீரன் ஏன் அந்தச் சமயத்தில் வந்தான் .. .. அப்படி! என்ன குரூரமான சண்டை ... ..

பலமணி நேரமாய் இந்தச் சிந்தனைச் சங்கிலியிற் சிக்கி நித்திரையே வராமற் புரண்டு கொண்டிருந்தாள். விழிப்பும் அயர்வும் கலந்த நிலையில் எத்தனையோ பயங்கரமான எண்ணங்கள் அவளை வந்து நடுங்கச் செய்தன. "முருகன் குடிசைக்கு வந்தானே.....அல்லது வரவில்லையோ? அவனைக் கிடந்த இடத்தில் விட்டு விட்டு வந்தோமே..... சீ! என்ன கொடுமை .....ஒருவேளை..... ஒருவேளை....." என்று ஒரு எண்ண அலை வந்து மோதியதோ இல்லையோ, அவள் உடல் எல்லாம் பயத்தினற் குளிரத் தொடங்கியது ; மேனி நடுக்கம் எடுத்தது. மனம் நிலைகொள்ளாமல் தத்தளித்தது. யாருக்காவது சொல்லி அழவேண்டும்போல் இருந்தது. உடனே படுக்கையை விட்டு வெளியே வந்து முத்துப் பரியாரியார் குடிசையை நோக்கி ஓடினாள். அவள் கூப்பிடுவதைக் கேட்டுக் கண் விழித்துக்கொண்ட பரியாரியார் பரபரப்புடன் "ஏன் தெய்வி, உன் ஆத்தைக்கு ஏதாவது" என்று தொடங்கினர்.

"இல்லை நயிந்தை, அதல்ல....."

"அப்படியானால், இந்நேரத்தில் எங்கே கிளம்பினாய்?"

"உங்களைத்தான் காண வந்தேன்" என்று சொல்லி, அன்றிரவு நடந்தவைகள் முழுவதையும் ஒன்றும் ஒளிக்காமல் அவரிடம் சொன்னாள்.

"இப்போ, என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?"

"ஒருக்கா, என்னுடன் அவன் குடிசைக்கு வந்து பார்த்து வரவேணும் நயிந்தை."

முத்துப் பரியாரியார் விபூதியை எடுத்து நெற்றி நிறையப் பூசிக்கொண்டார். ஒரு துண்டை எடுத்துத் தலையில் முண்டாசாகக் கட்டினார். ஒரு சால்வையை எடுத்து அரையில் வரிந்து கட்டிக்கொண்டார். ஒரு துவாயை எடுத்து ஒற்றைத் தோளிற் போட்டுக்கொண்டு வெளியில் வந்தார். மருந்துப் பெட்டியைத் திறந்து ஒரு முறை பார்த்துவிட்டு அதை மூடித் தன் கக்கத்துக்குள் வைத்துக்கொண்டு தெய்வி பின்தொடரக் கிளம்பிவிட்டார்.

படலைத் திறந்துகொண்டு இருவரும் குடிசையுள் நுழைந்து பார்த்தனர். ஒரு கைவிளக்கு மினுங்கிக்கொண்டிருந்தது. படுக்கையில் எவரையுங் காணவில்லை. தெய்வியின் நெஞ்சு நின்று விடும்போல அடித்துக்கொண்டது. பரியாரியார் கட்டிலுக்கப்பால் ஒரு ஒதுக்கை எட்டிப் பார்த்தார். அனுங்கிக்கொண்டு படுக்கையிற் புரண்டு கொண்டிருந்தான் முருகன். அரவங் கேட்டுத் தன் கண்களை விழித்துப்பார்த்தான். முன்னற் பரியாரியாரும் தெய்வியும் நின்றார்கள். அவன் தன் கண்களை நம்பாமல் மீண்டும் துடைத்துப் பார்த்துக்கொண்டான். ஆச்சரியமாயிருந்தது!

முத்துப் பரியாரியார் அவனுடைய காயங்களைப் பார்த்து முதலில் ஒரு தைலத்தை எடுத்துத் தடவிவிட்டு, ஏதோ மருந்துகளை வைத்துக் கட்டினர். தெய்வி கொஞ்சம் தைரியத்துடன் "இப்ப நோ எப்படி இருக்கு? குறைந்திருக்கிறதா?" என்று கேட்டாள். முருகன் அவளை மிகவும் வாஞ்சையுடன் பார்த்துக் கொண்டே "பனைமரம் ஏறி ஏறி வைரம் பாய்ந்திருக்கும் இந்த உடம்பில் வலி ஏது தெய்வி? மனம்தான் நொந்துபோய்க் கிடக்கிறது. இச்சை வெறியிலே மிருகம்போல் நடந்துகொண்டேன். மனசுக்கு எடுக்காதே" என்றான்.

"ஆனல், நானும் அப்படியெல்லாம் துடுத் காய்ப் பேசியிருக்கவே கூடாது முருகா."

முருகன் சற்று வியப்புடன் "நானும் அப் படிப் பேசி உன்னைத் தூண்டி யிருக்கவே கூடாது."

"அச்சமயத்தில் வீரனும் வந்து—"

உடனே முருகன் இடைமறித்து, 'அவன் வந்தது நல்லதாய்ப்போச்சு. அடி வீழ்ந்ததும்தான் வெறி முறிந்து என் மனசும் தெளிவு பெற்றது."

"அதற்கு இப்படியும் அடிப்பார்களா? அடித்த அடியில் ஏதாவது எக்கச்சக்கமாய் கடந்துபோனல்....."

"நான் இறந்துதான்போனல் யாருக்கென்ன தெய்வி? நான் ஒரு தனிமரம்" என்று கையை விரித்தபொழுது அவன் குரல் தழதழத்தது. "நீ, போ தெய்வி, பரியாரி ஐயா வாசலிற் காத்துக்கொண்டு நிற்கிறார். விடியப்போகிறது" என்றன்.

தெய்வி வாசலை நோக்கிப் போய்த் தயங்கி னள். திடீரென்று திரும்பி ஓடிவந்து அவள் கால்களைக் கட்டிக்கொண்டு " என்னற் பொறுக்க முடியவில்லை, முருகு, நீ இப்படிப் பேசுவதை என்னல் தாங்கமுடியவில்லை" என்று கதறினள்.


முருகன் ஆச்சரியத்தினற் கல்லாய்ச் சமைந்துபோனன். அவனுடைய கண்களிலே பேருணர்ச்சியுடன் கூடிய உஷ்ணக் கண்ணீர் நிறைந்துகொண்டிருந்தது.

"நான் சொல்வதைக் கொஞ்சம் கேள். என் ஆத்தை வாழ்க்கையிற் கண்டது அடியும் உதையும்தான். என் அப்பன் தினமும் குடித்து விட்டு இரவு சாமங்கழித்து வந்து என் தாயை அடித்து உதைத்த நாட்கள் இன்னும் என் நினை வில் இருக்கின்றன. அவள் எதிர்த்து ஒரு சொல் பேசமாட்டாள், எவருக்கும் சொல்லமாட்டாள், எதையும் சகித்துவந்தாள். அப்போ பிடித்த நோய் அவளை இன்றும்தான் அரித்துத் தின்று கொண்டுவருகிறது. என் இள நெஞ்சிலே பட்ட இந்தச் சூடு ஆறவில்லை. அந்தப் பயங்கர மான இரவுகளை நினைத்து நடுங்குவேன். ஆண்களையே வெறுக்கத் தொடங்கினேன்."

முருகன் ஒன்றுமே விளங்காமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அவனையும் அறி யாமல் அவன் கரம் அவள் தலையைத் தடவிக் கொண்டிருந்தது.

"இதனல்தான் நான் எவரையும் கட்டிக் கொள்வதில்லை யென்று மனசிற் சபதஞ் செய்து கொண்டேன். ஆனல் என்னையும் மீறி உன் மேல் என் நெஞ்சம் சுரந்துகொண்டிருந்தது. அது பெருக்கெடுக்காமல் அணைபோடவே நான் உன்னை அலட்சியமாய், துடுக்காய் எறிந்து பேசிவந்தேன். இனி, எல்லை மீறி விட்டது, என் இருதயம் தாங்காது, முருகு" என்று விம்மிப் பொருமினள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு நின்ற முத்துப்பரியாரியார் இளம் உள்ளங் களின் விசித்திரமான மனப்போக்கை அறியமுடி யாது திகைத்துப்போனர்.



குரும்பசிட்டி சன்மார்க்க சபை வெளியீடு



வித்தியாபகுதியாரின் புதிய சைவசமய பாடத் திட்டத்திற் கமைவாக
சைவசமய போதினி 2, 3, 4, 5ஆம் புத்தகங்கள் வெளிவருகின்றன.

சுன்னகம்: தனலக்குமி புத்தகசாலை

வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பக வெளியீடுகள்

வித்தியா பிரசுர சபையாரால் அங்கீகரிக்கப்பெற்றவை

பாலபோதினி

	ரூ.	ச.
அரிவரிப் புத்தகம் (கீழ்ப்பிரிவு)		40
முதற் ,,		50
இரண்டாம் ,, ...		60
மூன்றும் ,, ...		70
நான்காம் ,, ...		80
ஐந்தாம் ,, ...		90
ஆறும் ,, ...	1	10
ஏழாம் ,, ...	1	15

உபபாட புத்தகங்கள்

பரதன்	40
இராசா தேசிங்கு	50
தமயந்தி	60
இராமாயணச் சுருக்கம்	60
குசேலர் சரிதம்	60
இதோபதேசம்	75
சாவித்திரி	75
திருமாவளவன்	1-00
கிராதார்ச்சுனீயம்	1-00

பாஷை

மொழிப்பயிற்சி 1ஆம் புத்தகம்	60
,, ,, 2 ,,	85
,, ,, 3 ,,	1-00
,, ,, 4 ,,	1-10
,, ,, 5 ,,	1-20
,, ,, J. S. C. (அச்சில்)	1-25
தமிழ்மொழிப் பயிற்சியுந் தேர்ச்சியும்	1-60
பயிற்சிமூலம் பாஷைத் தேர்ச்சி	1-50
5ஆம் வகுப்புப் பாஷைப் பயிற்சி	1-00

இலக்கியம்

	ரூ.	ச.
தமிழ் மஞ்சரி	1	00
தமிழ் இலக்கியத் திரட்டு	1	15
தமிழ் மலர் மாலை	1	25
தமிழ் இலக்கியச் சுடர்	1	25
தமிழ் இலக்கியக் கோவை	1	50
உரைநடைச் சிலம்பு (1)	1	50
உரைநடைச் சிலம்பு (2)	1	50
உரைநடை விருந்து	1	50
அரிச்சந்திர புராணம் மயானகாண்டம்	1	00
நளவெண்பாச் சுருக்கம் உரையுடன்	1	75
,, சுயம்வரகாண்டம் ,,		60
,, கலிதொடர் காண்டம் ,,	1	20

சரித்திரம்

சரித்திர கதாவாசகம் 2ஆம் வகுப்பு	60
,, ,, 3 ,,	75
,, ,, 4 ,,	90
,, ,, 5 ,,	1-80
இலங்கையும் உலகமும் 6 ,,	2-25

பூமிசாஸ்திரம்

பூமிசாஸ்திரக் கதைகள் 2ஆம் வகு.	60
,, ,, 3 ,,	70
பூகோளத்தொடர்பூமிசாஸ்திரம் (4)	1-00
,, ,, ,, (5)	1-25

சுகாதாரம்

சுகாதார வாசகம் 2ஆம், 3ஆம் வ.	90
,, ,, 4 ,, 5 ,,	1-25

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

விற்பனை உரிமையாளர்:

சுன்னாகம்: தனலக்குமி புத்தகசாலை

மந்திரத்தில் மரங்கனி

★ ★ அகிலன் ★ ★

அது அந்தக் காலம். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ... ...

அன்றைக்கும் இதே சூரியன், இதே சந்திரன், இதேபோல மனிதர்கள்தாம். மனித உணர்ச்சிகளும், மிருக உணர்ச்சிகளும் கிட்டத்தட்ட இன்றைக்கு இருக்கிறமாதிரித்தான் அன்றைக்கும் இருந்தன. மனிதர்களில் நல்லவர்களும் பொல்லாதவர்களும் இருந்தார்கள். மிருகங்களில் பசுக்களும் புலிகளும் இருந்தன. சமுத்திரங்களில் வழக்கம்போற் பெரிய மீன்கள் சிறிய மீன்களை விழுங்கியே உயிர் வாழ்ந்தன.

பசுக்களின் கூட்டத்திற்கு அப்போது பஞ்சமில்லை. 'கோமாதா' என்று கும்பிட்டுக் கொண்டே மனிதர்கள் அதன் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்தார்கள். அப்படி ஒன்றும் கும்பிடாமலே புலிகள் அதை ஒரே அடியாக அடித்துக்கொன்றன. மனிதர்கள் குடித்தது பால் என்ற வெள்ளை இரத்தம்; புலிகள் குடித்தது இரத்தம் என்ற சிவப்பு இரத்தம்.

மனிதன் தந்திரத்தால் வாழ்ந்தான். மிருகம் உடல் வலியால் வாழ்ந்தது. வேற்றுமை இவ்வளவுதான்.

அது அந்தக்காலம் என்றேனே? அன்றைக்கு அமாவாசை.

அமாவாசை என்றால் இந்தக்காலத்து அமாவாசை யன்று. வானத்தைப் பார்த்து 'எலெக்ட்ரிக்' வெளிச்சம் எக்காளம் போடுகின்றனவே, இந்தமாதிரி அமாவாசையா அது? வானத்திலாவது மீன்களைக் காணலாம். தரையோ மீன்களுமில்லாத வானம்போலிருக்கும்.

எல்லாம் ஒரே கருப்பு மயம். மலை, மலையடிவாரம், கிராமத்துக் கூரை வீடுகள், மரம்மட்டைகள், கிராமத்தை வளைத்துக்கொண்டு நகரும் சிற்றாறு, ஆற்றங்கரை நாணற்புதர் எல்லாம் ஒரே கருப்பு மயந்தான். வெயிலில் வெளேரென்று சிரிக்கும் நாணமற்ற நாணற் பெண்களின் பூக்கொண்டைகூட இருளிலே கருப்பாய்க் கரைந்துபோகும்.

'கருகும்'மென்ற இருட்டு. தெருவில் மனிதர்கள் நடமாடமாட்டார்கள். காற்றுக் கருப்புத்தான் நடமாடும்.

தேவர்களும் பூத பைசாசங்களும், மோகினிகளும் மனிதர்கள் கண்ணிற் படாமலிருப்பதற்காக அப்போதுதான் பூலோகத்திற்கு வருவார்களாம். மந்திர தந்திரங்களைச் செய்வோருக்கும் அமாவாசை இரவைப்போல் வேறு பொழுது கிடைப்பதில்லை. இருட்டுக்கும் இரகசியத்திற்கும் எந்தனை பொருத்தம்!

அன்றைக்கு அமாவாசை என்றேனே? அப்போது நடுச்சாமம்.

இரவோடு இரவோ அல்லது இரவிற் கலந்த பகலோ ஒன்றில் ஒன்று கட்டுண்டு கிடக்கும் சலனமற்ற பொழுது.

இடைகளிற் கால்நடைகள் அசைவற்று நின்றன. மரங்களில் இலைகளின் சலசலப்பில்லை. ஆந்தைக் குரல்களும் ஓய்ந்துவிட்டன. ஊருக்கு வெளியே புதர்களில் ஊளையிட்ட குள்ளநரிக் கூட்டங்களும் தங்கள் ஆலாபனைகளை அடக்கிக் கொண்டன. மலைகளுக்கப்பால் தொலைவில் உறுமிய ஒற்றைப் புலியின் தனிக்குரல் கிராமத்திற் கேட்கவில்லை.

அந்த நடுச்சாம நேரத்தில் தேவதத்தன் தன்னுடைய இஷ்ட தெய்வத்தை வசியப்படுத்திக்கொண்டிருந்தான். அதன் முன்னிலையில் அமர்ந்து மந்திர உச்சாடனத்தில ஈடுபட்டிருந்தான்.

அவனுடைய பனை ஓலைக் கூரை வீட்டில் அப்போது விளக்கு எரிந்தது. பெரிய அகல் விளக்கில் நெய் நிரம்பி வழியச் சுடர் நீண்டு பரந்து ஒளி உமிழ்ந்தது. அவன் அப்போது

நிமிர்ந்த நெஞ்சோடு பத்மாசனத் தோற்றத்தில் வீற்றிருந்தான். அவனுக்கு நேர் எதிரில் விளக் கருகே அவனுடைய இஷ்ட தேவதையின் உரு வம் இருந்தது.

களி மண்ணாலான பெண்ணுருவம் அது. அந்தக் கிராமத்தின் எழிலரசி சுகலா அவள்.

சுகலாவின் அழகு மேனியை அவ்வளவு எளிதாய்க் களிமண்ணில் வடித்துவிட முடி யாது. சிற்பக் கலையிற் சிறந்தவன்கூட அந்த வண்ண முகத்தின் விழிக்கோணத்தைத் தன் னுற் கொண்டுவர முடியாமல் திகைப்பான். தேவதத்தன் கலைஞனுமில்லை. காதலுள்ளங் கொண்ட இளைஞன். ஏதோ ஆர்வத்தாற் செய் திருந்தான்.

பருவ மழை தவறிப்போனதால் வடக்கே இருந்து குடிபெயர்ந்து அவர்கள் அந்தக் கிரா மத்திற்கு வந்து சேர்ந்தார்கள். வந்தும் ஓராண் டுக்கு மேலாகிவிட்டது. வந்த நாளிலிருந்து அந் தக் கிராமத்து இளைஞர் கூட்டத்தையே ஒரு கலக்குக் கலக்கிவிட்டாள் அந்தக் கன்னி. இத் தனைக்கும் அவள் விபரமறியாப் பெண்; கபட மறியாப் பேதை.

தேவதத்தன் ஆற்றங்கரையில் அவள் நீராட வந்தபோது அவளைக் கண்ணிமைக்கா மற் கவனித்திருக்கிறான். அப்படியே அணு அணுவாய்க் கடித்து மென்றுவிடவும் ஆசைப் பட்டிருக்கிறான். ஆனால் அவள் அவனைச் சட்டைசெய்யவே இல்லை. தன்னுடைய அன் புக்குரிய பசுக் கன்றுக்குட்டியைப் பார்ப்பது போலக்கூட அவள் அவனைப் பார்க்கவில்லை.

அவனும் அழகன்; இளைஞன்; உடற் கட் டுள்ள பிரமசாரி. ஆனால் ஏனோ அவனுக்குத் தன்னம்பிக்கையை விட மந்திரத்தில் நம்பிக்கை அதிகமாயிற்று. அவனுடைய சூழ்நிலை அப்படி.

களிமண் உருவம் அவளைப்போல இல்லை. ஆனால் கல்லிற் கடவுளைக் காணும் பக்தனைப் போற் களிமண்ணில் அவன் தன் காதலியைக் கண்டான்.

அவனுடைய கண்ணிமைகள் துடிக்கவில்லை. சுகலாவின் கண்களை அவை கவ்விக்கொண் டிருந்தன. அவனது கரங்களில் நாணேற்றப் பட்ட ஒரு வில்லும் அம்பும், வாய் ஏதோ மந்தி ரங்களை முணுமுணுக்க, கையிலிருந்த கூரிய அம்பின் நுனியால் அவன் அவளுடைய இத யத்தைத் துளைத்துக் கொண்டிருந்தான்—இடது புற மார்பகத்தை ஒட்டி இதயம் இருக்கும் இடத் திற்கு நேரே அவன் அந்த அம்பால் குத்தித் துளைத்துக்கொண்டிருந்தான்.

அம்பு கருங்காலித் தண்டாலானது. அதன் முகப்பிற் கூரிய முள்ளும் பின்புறம் ஆந்தைச் சிறகுகளும் பொருத்தப்பெற்றிருந்தன. காம தேவனின் மலர்க்கணையென்று பாவிக்கப்பெற்ற அந்த அம்பின் கூர்முனையால் அவன் அவள் நெஞ்சைக் குத்திக் கிழித்துக்கொண்டிருந்தான்.

இன்றோடு சரியாக ஒரு மண்டலம் முடி வடைகிறது. சரியாக நாற்பத்திஐந்து நாட்கள்.

முதல் பௌர்ணமியன்று தொடங்கி அதற் கப்புறம் இடையில் ஓர் அமாவாசையும் ஒரு பௌர்ணமியும் வந்துவிட்டன. இது இரண்டா வது அமாவாசை. தவத்தின் கடைசிநாள்.

இன்று அவள் வந்துவிடுவாள். வந்தே ஆகவேண்டும். மந்திரம் பொய்க்குமா?

நூற்றிஎட்டு, ஆயிரத்துஎட்டு, லட்சத்து எட்டு என்ற அளவில் அவன் உருவேற்றி வைத்திருந்தான். இப்போதுகூட ஜ்வரவேகத் திலே சொற்கள் பாய்ந்தன.

"காமதேவனின் இந்தக் கூரிய பாணம் உன் நெஞ்சைக் கலக்கட்டும். அதன் அமைதி யைப் போக்கி உன்னை உறக்கமற்றவளாகச் செய்யட்டும். நீ உன் படுக்கையில் ஓய்வுபெரு மல் தவிப்பாயாக!

"மாறனம்பாகிய இந்த உறுதிமிக்க கருங் காலித் தண்டே என் ஆசை, உன்னிடம் பறக் கத் துடிக்கும் என் ஆர்வமே ஆந்தைச் சிறகு. என் காதலே உன் உள்ளத்தை ஊடுருவும் கூரிய முள்ளின் நுனி. நான் குறி தவறுது மன்மதனின் துணைகொண்டு உன் நெஞ்சைத் துளைக்கிறேன். நீ உன் நினைவழிந்து என்னிடம் ஓடிவா!"

அவனுக்குத் தன்னுடைய வெற்றியில் ஏற் கனவே நம்பிக்கை பிறந்துவிட்டது.

அவனுடைய மந்திரம் வீண் போகவில்லை. முன்பெல்லாம் ஆற்றங் கரையில் அவனைச் சட்டை செய்யாது நடந்தவள், இந்த ஒரு மண் டலத்தின் பாதிக்குள் அவனை அடிக்கடி உற் றுப்பார்த்தாள். பார்வையில் மருட்சியில்லை; மிரட்சி. தெளிவற்ற ஒரு கேள்விக்குறி.

அவனுடைய கண்களுக்கு அவள் கட்டுப் பட்டாள்.

தேவதத்தனின் மந்திரங்கள் ஜன்னிவேகத் தின் உச்ச நிலையை அடைந்துகொண்டிருந்தன. அவன் சொற்களோ மளமளவென்று உதிர்த் தான்:

"விரகதாபத்தால் அவள் வெந்து கருகட் டும்; சித்தம் கலங்கி, வாய் உலர்ந்து, கர்வம் அழிந்து அவள் என்னிடம் ஓடோடியும் வரட் டும். காமதேவனே! நீ அவள் நினைவைப் பொசுக்கி அவளை என் அடிமையாக்கு. என் னுடைய தனிமையைப் போக்க அவளைத் தனியே கொண்டுவா!

"காதலி! உன் பெற்றோரிடமிருந்து உன் னைப் பற்றி இழுக்கிறேன். நீ அவர்களுடைய ஆதிக்கத்திலோ, உன்னுடைய ஆதிக்கத்திலோ இல்லாமல் என் ஆதிக்கத்திற்கு விரைந்து வா!

"நித்திராதேவி! அவளது தாய்தந்தை, உற் றம் சுற்றம், அக்கம்பக்கம் எல்லோரையும் நீ ஆழ்ந்து உறங்கச்செய்; அவள் வரும் வழியெல் லாம் அவளைக் காணக்கூடிய உலகமெல்லாம் உன் ஆட்சியில் கண்மூடி உறங்கட்டும். குலைக் கும் தெரு நாய்களுக்குக்கூட நீ தூக்கத்தைக் கொடுத்துவிடு."

களிமண் சிலைக்கு முன்னே வெண்கலச் சிலையாக அவன் வீற்றிருந்தான். அவனுடைய பரந்த மார்பிலும், திரண்ட தோளிலும் உருண்ட கரங்களிலும் விளக்கொளி விளையாடித் திளைத் தது. தலையின் கேசத்தை உச்சியின் ஓரத்தில் ஒருபுறமாய் ஒதுக்கிக் கட்டியிருந்தான்.

திடீரென்று மந்திர ஒலியின் வேகம் இன் னும் பன்மடங்காயிற்று. சொற்கள் அவனுள் ளடங்காமல் வெடித்துக் கொட்டின. கோடை மழையில் அடித்துவிழும் பெருந் துளிகள்போல் அவை சத்தமெழுப்பின. ஆனால் அவை நீர்த் துளிகளல்ல; நெருப்புத் துளிகள்.

அவன் ஏதோ முத்தாய்ப்பு வைத்தது போல் அலறினான்.

"வா, வா, வா! வா சுகலா! உடனே வா! ஓடிவா!"

வீட்டிற்கு வெளியே இருளின் மையத்தில் ஓர் ஓசை கருப்பெறுவதுபோல் மெல்லத் தொடங் கியது. பின்பு சிறிது சிறிதாக அது உரம்பெற் றது; சுருவளியாகச் சுழன்று, பேய்க் காற்றுகச் சீறி, புயலாக உறுமிக்கொண்டு வந்தது.

பாய்ந்து வரும் பெண் புலியைத் தாங்கி வரும் புயலின் ஓங்காரமா அது?

கதவு படீரென்று திறந்தது. அங்கே காற் றால் அலைக்கழிக்கப்பெற்ற அன்னத்தின் வெண் குஞ்சுபோல் அவள் நின்றுகொண்டிருந்தாள்.

அவள் சுகலா!

ஆம்; சின்னஞ்சிறு அன்னத்தின் குஞ்சு, காற்றின் கொடுமையைத் தாங்கமுடியாமல் தன் சிறகுகளைச் சுருக்கிக்கொண்டு நிற்பதுபோல் நின்றாள்.

வேர்க்க விறுவிறுக்க, மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்க அவள் தன்னுடைய ஒரே பூந் துகிலை இழுத்து மூடிக்கொண்டு நின்ற தோற் றம் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. கண்களிற் பயப்பிராந்தி; ரோஜா நிறச் சிவப்புக் கன்னங் களில் இரத்தம் வற்றிப்போன வெளுமை.

ஆனால் அவளோடு பிறந்து வளர்ந்து, இப் போது பரிபூரணமாய் வளர்ந்துவிட்ட அழகு இருக்கிறதே, அது அவளுடைய இந்த நிலையி லும் ஆயிரம்மடங்கு அதிகமாய்த் தன் கிரணங் களைச் சொரிந்தது.

தந்தத்தால் கடைந்தெடுத்த அவள் மேனி யைத் தேவதத்தன் மெய்மறந்து பார்த்தான். சொக்கும் நிலவாலான அவள் முகம் அவனைத் திணறஅடித்தது.

"சுகலா!"

அவள் பதிலளிக்காமல் அவனை வெறித்துப் பார்த்தாள்.

"சுகலா!"

மீண்டும் அவள் பதிலளிக்கவில்லை.

"வா, இங்கே!"

அவள் வந்தாள்.

"இன்னும் அருகில் வா!"

இன்னும் அருகில் வந்தாள்.

அவன் அவளுடைய கரத்தைப் பற்றினான். அதை அவள் மறுக்கவில்லை. அவளிடம் சுய

உணர்வு சிறிதுகூட இல்லை. அவள் அப்போதைக்கு ஜடப்பொருள். அந்தக் களிமண் உருவம்.

திறந்த கதவின் வழியே புகுந்த காற்று உள்ளே இருந்த அகல் விளக்கை அணைத்தது. அங்கே இருளின் ஆட்சி.

ஓராண்டு காலமாய்க் கனிந்த நெருப்பை, ஒரு மண்டல காலமாய் ஊதிச் சிவக்க வைத்த தீயை, அவன் அந்த ஒரே நாழிகையில் அணைத்துக்கொண்டான்.

அவன் எண்ணம் அவளிடம் ஈடேறியது.

அவள் எதையும் அறிந்துகொள்ளவில்லை; எதையும் உணர்ந்துகொள்ளவில்லை; அவளுக்கு ஒன்றுமே தெரியாது. அவள் மரக்கட்டை.

அந்த நாழிகை சென்றவுடன், தேவதத்தன் இரு கட்டைகளின் மத்தியில் உலர்ந்த தர்ப்பையைப் போட்டுத் தீக்கடைந்தான். மறுபடியும் அகல் விளக்கை ஏற்றினான். வெளிச்சத்தில் அவளை உற்றுப்பார்த்தான்.

பிரேதமாய்க் கிடந்த அவளுக்கு மெல்ல மெல்ல உயிர் வருகிறமாதிரித்தோன்றியது. திடீரென்று தனது இடதுபுற மார்பகத்தை அழுத்திப் பிடித்துக்கொண்டு 'ஓ'வென்றழுதாள், நெஞ்சைப் புழுக்குடைவதைப்போல் துடிதுடித்துப்போனாள்.

"ஏன்? காமன் அம்பு இன்னுமா உன்னைத் துளைக்கிறது?"

அவன் குரலில் வெற்றி ஒலி; ஆனால் அவள் அவனை வெறுப்போடு பார்த்தாள்.

வாய்திறந்து அவள் பேசவே இல்லை.

மீண்டும் அவள் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு அலறினாள்.

"ஆ"

பரக்கப் பரக்க எழுந்து தன் ஆடையைக் கூடச் சரிப்படுத்திக்கொள்ளாமல் அவள் வெளியே ஓடினாள். தடுக்கவந்த அவன் கரத்தை முறித்து ஒதுக்கிவிட்டு விரைந்தாள்.

அவளுடைய வீட்டை நோக்கி அவள் ஓடவில்லை. நேர் எதிர்த்திசையின் இருளில் அவள் கலந்துகொண்டிருந்தாள்.

எங்கே போகிறாள்?

தேவதத்தன் அவளைப் பின்பற்றினான். ஆனால் அவனால் அவளைப் பிடிக்கமுடியவில்லை. அடிக்கடி உருவமற்ற ஒருகரம் அவனைத் தடுத்து நிறுத்துவதுபோல் தோன்றியதால் அவன் அதைத் திமிறிக்கொண்டு அவளைப் பின்பற்ற வேண்டியிருந்தது. அவளோ காற்றோடு காற்றாய்ப் போய்க்கொண்டிருந்தாள்.

திடீரென்று தெருவுக்கப்பால் தனியே இருந்த சஞ்சயனின் வீட்டுக் கதவின்முன் போய்க் கணப்பொழுது நின்றாள் சுகலா. படீரென்று உள்ளே தள்ளிக்கொண்டு நுழைந்தாள். மறுகணமே கதவு மூடப்பட்டது.

தேவதத்தன் திடுக்கிட்டான். சஞ்சயனிடம் இவளுக்கென்ன வேலை. - கதவிடுக்கில் எல்லாம் தெரிந்தன.

அங்கும் ஒரு களிமண் சிலை இருந்தது. கிட்டத்தட்ட சுகலாவைப் போலவே இருந்தது அது. அதன் எதிரில் சஞ்சயன் கையில் நாணேறிய அம்பும் வில்லுமாய் உட்கார்ந்திருந்தான். அந்தக் களிமண் சிலையாகிய பெண்ணின் இருதயம் சல்லடைக் கண்களாய்த் துளைக்கப்பட்டிருந்தது.

சஞ்சயனின் கண்களில் வெறி துள்ளியது. அவனது கரகரத்த குரலைத் தேவதத்தன் கேட்டான்.

"ஆ, பிரியே! வந்தாயா? வா! இத்தனை நாள் உனக்காகத்தான் தவங்கிடந்தேன்! என் அருகில் வா.

அவள் அருகில் போனாள்.

சஞ்சயன் விகாரமான மனிதன். எலும்பும் தோலுமாய்த் தாடியும் மீசையும் வளர்த்துக் கொண்டு பயங்கரமாயிருப்பான். அந்த அகல் விளக்கின் ஒளியில்கூட அவனுடைய தோலின் சுருக்கங்கள் நன்றாய்த் தெரிந்தன.

அப்படியே அவன் கழுத்தை நெரித்துக் கொன்றுவிட நினைத்தான் தேவதத்தன்.

அதற்குள் உள்ளே சஞ்சயனின் சிரிப்பொலி கிடுகிடுத்தது. மோப்பம் பிடிக்கும் வேட்டை நாய்போல் அவன் நாலு புறமும் திரும்பி முகர்ந்து பார்த்தான். முகம் இன்னும் அதிக விகாரமாக மாறிற்று.

"என்ன எதிர்ப்பு இது! — மித்திரனே! காற்றிற் கலக்கம் தெரிகிறதே! நீ கவனிக்க வில்லையா? எதிர்ப்பை எரித்துவிடு! எதிர்ப்பவனின் வல்லமையைத் தகர்த்துவிடு!"

தேவதத்தனின் உடல்வலி ஒரே கணத்தில் அவனைவிட்டுக் கழன்றோடியதுபோல் தோன்றியது. அவன் கலகலத்துப் போனான்.

உள்ளே சஞ்சயனின் குரல்.

"சுகலா! என் இஷ்ட தேவியே! என்னிடம் வா! என்னோடு என்றென்றும் இன்பமாய்க் களித்திரு. நீ என் ரதி! நான் உன் மன்மதன்!"

அப்புறம் அங்கே சுத்தப் பழைய கதைதான் திரும்பவும் நடந்தது.

சஞ்சயன் என்ற குரூபி அந்த அழகுத் தெய்வத்தை அழித்துக்கொண்டிருந்தான்.

விளக்கு எரிந்துகொண்டுதானிருந்தது.

தேவதத்தனின் கண்கள் வெளியே பிதுங்கி விடுபவைபோல் விழித்தன. காலத்தாற் கனியாத கனி. இயற்கையான காதற் கதிரொளியாற் கனியாத கனி. மந்திரக்காரனின் கைபட்டுக் கன்றிக்கொண்டிருப்பதைக் காண அவனுக்குச் சகிக்கவில்லை. வீணான மந்திரத்தால் வெம்பிக்கொண்டிருப்பதைக் காண அவனுக்கு வேதனை தாங்கவில்லை.

வெறிபிடித்த வேகத்தில் அவன் தன் வீட்டிற்கு ஓடிவந்தான்.

அரை நாழிகைப் பொழுதுக்கெல்லாம் அந்தக் கிராமத்தில் அமாவாசை இருள் கிழிந்து கொண்டிருந்தது. தேவதத்தனின் கூரை வீடு தங்கமயமான ஒளியைக் கக்கிக்கொண்டு கொழுந்துவிட்டெரிந்தது. அவன் அப்போது அந்த எரியும் வீட்டிற்குள் அந்தக் களிமண் உருவத்தை அணைத்துக்கொண்டு கண்மூடித் தியானத்தில் அமர்ந்திருந்தான்.

தமிழ்த்தாய்க்குப் புதிய அணிகலன்

★

ஐரோப்பியரின் தொடர்பால் தமிழ் இலக்கியத்தில் ஒரு மறுமலர்ச்சியினைக் காண்கின்றோம். அறிஞர் பலர் மேனாட்டு மொழிகளிலும் பிற இந்திய மொழிகளிலும் உள்ள சிறு கதைகளையும் நவீனங்களையும் நாடகங்களையும் தமிழில் மொழிபெயர்த்துத் தமிழ்த் தாய்க்குப் புதிய அணிகலன் சூட்டினர். முன்பு தமிழ் மக்கள் பஞ்சதந்திரம், விநோதரச மஞ்சரி, விக்ரமாதித்தியன் கதை முதலிய கதைகளைப் படித்து இன்புற்றனர். ஆனால் இப்போது நாம் மிகச் சிறந்த சிறுகதைகளையும் நவீனங்களையும் பெற்றுள்ளோம். கல்கி (ஆர். கிருஷ்ணமூர்த்தி) அவர்களைச் சிறுகதையின் தந்தை எனக் கூறுவோமாகில் அது புனைந்துரையாகாது. சிறந்த சிறுகதைகளை எழுதிய புதுமைப்பித்தன் (எஸ். விருத்தாசலம்), கு. பா. இராஜகோபாலன் இவர்களை நாம் மறக்கமுடியாது. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய 'சிதம்பரம்' என்ற சிறுகதை, ஸ்ரீ. இராஜகோபாலாச்சாரி (இராஜாஜி) அவர்கள் எழுதிய 'கூனிசுந்தரி', கு. பா. இராஜகோபாலன் இயற்றிய 'தமிழ் மங்கை', ஜீவா (நாரண துரைக்கண்ணன்) எழுதிய 'வேதாந்த கேசரி' என்பவை நமது உணர்ச்சியை எழுப்பக்கூடிய சிறுகதைகளாக அமைந்துள்ளன. டாக்டர் மு. வரதராசனார், கி. வா. ஜகந்நாதன் ஆகிய இவர்கள் எழுதிய சிறுகதைகளில் தமிழ் இலக்கிய நறுமணம் இலங்கக் காணலாம். ஸ்ரீ. இராஜகோபாலாச்சாரியார், ஏ. எஸ். பி. ஐயர், யோகி சுத்தானந்த பாரதியார், ஸ்ரீ. என். அண்ணாத்துரை ஆகிய இவர்கள் தாம் எழுதும் சிறுகதைகளின் வாயிலாகத் தமது கருத்துக்களைப் பரப்பிவருகின்றார்கள்.

தமிழ் நாட்டிற் பல நவீனங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் முதன் முதலாகத் தோன்றி வெளிவந்த நவீனம் மாயூரம் வேதநாயகம்பிள்ளை அவர்கள் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரமாகும். இரண்டாவது, பீ. ஏ. இராஜம் ஐயர் அவர்கள் எழுதிய கமலாம்பாள் சரித்திரம். ஆரணி குப்புசாமி முதலியார், பொன்னுசாமிபிள்ளை, வடலூர் துரைசாமி ஐயங்கார், வை. மு. கோதைநாயகி அம்மாள், நாடோடி, வ. ரா., எஸ். வி. வி., மு. கருணாநிதி ஆகிய பல அறிஞர் சிறந்த நவீனங்கள் எழுதியுள்ளனர். அவற்றுள் பல நவீனங்கள் ஆங்கிலத்திலும் பிற மேனாட்டு மொழிகளிலும் எழுதியுள்ள நவீனங்களைப் பின்பற்றி எழுதப்பட்டன என்பதை அவைகளைக் கூர்ந்து படிப்போர் அறிந்துகொள்வர்.

—பூ. ஆலாலசுந்தரஞ்செட்டியார், எம். ஏ.

பிரயாணி

சம்பந்தன்

மைதிலி வெகு நேரம் பேசிவிட்டாள். ஜனங்களோ அவளை வார்த்தைக்கு வார்த்தை உற்சாகப்படுத்திக்கொண்டிருந்தார்கள். அவளுடைய குரலும் வெண்கலம்போற் கணீர் என்று ஒலித்துக்கொண்டிருந்தது.

"யார்என்ன சொன்னாலும் மனச்சாக்ஷிக்கு விலை கொடுங்கள். மனச்சாக்ஷியை மறைக்க எண்ணும்போதுதான் மனிதன் தருமப் போர் வைக்குள் நுழையப் பார்க்கிறான். மகாபாதகங் களைச் செய்கிறவன்கூட தன் ஈனத்தனமான செய்கைகளுக்கெல்லாம் தருமம் பேசுகிறதை நீங்கள் கேட்கவில்லையா? இனி, சுயமாகச் சிந் திக்கவிடாத எந்தத் தரும நூலையும் எரித்து விடுங்கள். நியாயத்துக்குப் புறம்பான அற்புத சாஸ்திரங்கள் நமக்கு வேண்டாம்."

ஜனங்கள் கரகோஷஞ் செய்தார்கள். தன் நெற்றியில் அரும்பி வடிந்துகொண்டிருந்த வியர் வையைக் கைக்குட்டை ஒன்றினால் ஒற்றிக் கொண்டே அவள் திரும்பினாள். அவளுக்கு முன்னால் ஏதோ புரியாத தத்துவங்களைப்போல் உட்கார்ந்திருந்த அந்த இளைஞனுடைய முகத் தில் இலேசாக ஒரு சிரிப்புத் தோன்றி மறைந் தது. அதை அவதானித்ததும் அவள் ஏனோ மருண்டுபோனாள். ஆயினும் தன்னைச் சமா ளித்துக்கொண்டு இப்படி ஆரம்பித்தாள்:

"மடமைகள் நிறைந்த பழமை என்ற கட் டுப்பாடுகளுக்குள் ஊறிப்போனவர்கள்—அவர் கள் எத்தனை நூல்களை நெட்டுருப்பண்ணின வர்களானாலும்—எத்தனை பட்டங்களைச் சுமந்து கொண்டவர்கள் என்றாலும்—அவர்களுடைய வார்த்தைகளுக்கு விலை வைக்க முடியாது. பிற் போக்கான அந்த மனிதர்களுடைய போதனை கள் நம்மை வெகுதூரம் ஆழத்தில் தள்ளிவிடக் கூடும். இதை நீங்கள் நன்றாக உணர்ந்து கொள்ளவேண்டும்."

ஜனங்கள் உணர்ச்சியோடு கை கொட்டி னார்கள். பேச்சுத் தொடர்ந்து போய்க் கொண்டே யிருந்தது.

"நமது வாழ்க்கை ஏமாற்றங்களுக்கு நடு வில் அகப்பட்டுக்கிடந்து இழுபடக்கூடாது. அது தன்னம்பிக்கையின் அணைப்பிலே எல்லாக் கட் டுப்பாடுகளையும் கடந்துகொண்டு சுதந்திரத் துடன் கெம்பீரமாக நிமிர்ந்து நடக்கவேண்டும்."

சபையோர் கைகொட்டக் கொஞ்சம் 'லீவு' விட்டு அவள் முடிவுரையை ஆரம்பித்தாள்.

"கடைசியாக ஒன்று சொல்லுகிறேன். எதிர் கால உலகத்துக்கு இளைஞர்களே அஸ்திவார மானவர்கள். புதுயுகத்தின் மறுமலர்ச்சி அவர்க ளது உள்ளங்களிலேதான் ஊற்றெடுக்கவேண் டும். நைந்துபோன பழமை என்னும் பிற்போக் குச் சக்தி எந்த ரூபத்தில் வந்தாலும் அதைத் தகர்த்துக்கொண்டு முன்னேறுவது அவர்க ளுடைய கடமையாகும். எதிர்கால உலகம் இளை ஞர்களிடம் கேட்பதும் இதையேதான்."

கரகோஷம் வானைமுட்டி மெல்ல ஓய்ந்தது. மைதிலி நமஸ்காரம் சொல்லிவிட்டு உட்கார்ந் தாள். அவளது உள்ளம் வெற்றிப் பெருமிதத் தில் மலர்ந்து குமுறியது. ஆயினும் அவள் கண் கள் பக்கத்தில் ஒடுங்கி உட்கார்ந்திருக்கும் அந்த இளைஞனை ஆராயத் தொடங்கின. அவனோ சிந்தனையிலாழ்ந்து நிலத்தையே பார்த்தபடி இருந்தான். எல்லாரும் கைகொட்டி முடிகிற சமயம் அவன் கைகளும் இரண்டொரு தரம் ஒன்றையொன்று முட்டி விலகின.

அவன் அப்படி அசட்டை செய்வதுபோல இருந்தது அவளுக்குப் பொறுக்க முடியாத வேதனையைச் செய்தது. அதற்குள் அந்தக் கூட் டத்துக்குத் தலைமை வகித்தவர் ஏதேதோ பேசிவிட்டு மைதிலியைப்பற்றி ஒரு அத்தியாயம்

புகழ்ந்து கொட்டினர். அதுகூட அந்த நிலையில் அவளுக்கு இனிக்கவில்லை. ஓரக்கண்ணால் அந்த இளைஞனைக் கவனித்தபடியே ஒரு புறத்தில் உட்கார்ந்திருந்தாள்.

தலைவர் உட்கார்ந்ததும் எல்லோரும் எழுந்தார்கள். அதற்குள் யாரோ ஒருவர் ஓடிவந்து அந்தத் தலைவருடைய காதோடு குனிந்து 'சிவராமனைப்பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லையே' என்று வருத்தப்பட்டார்.

"அவர் தன்னைப்பற்றி 'ஒன்றுமே பேசக்கூடாது' என்று கேட்டுக்கொண்டார்." தலைவருடைய இந்தப் பதில் மைதிலியின் காதுக்கும் எட்டியது. உடனே அவள் மிகுந்த ஆச்சரியத்தோடு திரும்பினாள். அதற்குள் அவன் கூட்டத்துக்குள் கலந்து மறைந்துவிட்டான்.

—2—

நாட்கள் கழிந்துகொண்டிருந்தன. பிரசங்கங்களைப்பற்றிய எண்ணங்கள் உண்டாகும் போதெல்லாம் மைதிலிக்குச் சிவராமனைப்பற்றிய நினைவு வரத்தான் செய்தது. அவனை ஒருமுறையாவது சந்திக்க வேண்டும் என அவளுடைய மனம் ஆசைப்பட்டது. ஆயினும் அது கைகூடாமலே காலம் ஓடிக்கொண்டிருந்தது.

அன்று, அவள் சமுத்திரக் கரைக்குத் தனியாகவே வந்தாள். அவளுடைய மனமோ சமீபத்திற் பேசவேண்டிய ஒரு விஷயத்தைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தது. மாலையின் தங்க ஒளி, பரந்துகிடந்த வெள்ளி மணலையும் நீர்ப்பரப்பையும் முத்தமிட்டு ஸ்வர்க்கத்தை ஞாபகப்படுத்துவதுபோல் இருந்தது. ஜனங்கள் கூட்டங் கூட்டமாக அங்கும் இங்கும் இருந்து ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார்கள்.

மைதிலி, அலைகள் கழுவிவிட்ட புதுமணல் மீது நடந்தாள். குளிர்ந்த காற்றும் ஈர மணலும் அவளை 'இன்னும் நட' என்று தூண்டிக்கொண்டிருந்தன. அதனால் ஜன நடமாட்டம் குறைவான எல்லை வந்தபின்னும் அவள் திரும்பாமல் நடந்துகொண்டேயிருந்தாள்.

அந்த ஒதுக்கிலேதான் சிவராமன் தன்னை மறந்த நிலையில் உட்கார்ந்திருந்தான். நீலக் கடலையும் பரந்துகிடந்த பொன் வானத்தையுங் கூட அவன் கண்கள் பார்க்க விரும்பாதவை போல நிலத்தையே நோக்கியபடியிருந்தன.

அவனிருந்த அந்நிலை அவளுக்கு வேதனையை உண்டுபண்ணியது. 'வாழ்வில் மனமுடைந்து சாந்தியைத் தேடுகிறாரோ' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு மெல்ல மெல்ல நடந்துசென்று அவன் எதிரே போய் நின்றாள். திடீரென்று ஒருபெண் தன்முன்னே வந்து நின்றதும் அவன் தடுமாறி எழுந்துவிட்டான்.

மைதிலி மெல்லச் சிரித்துக்கொண்டே, "என்னை ஞாபகமிருக்கிறதா?" என்று கேட்டாள்.

அவன் மௌனமாகவே நின்று 'ஆம்' என்று தலையை அசைத்தான். சிறிது நேரம் வரை இரண்டு பேருமே பேச முடியாதவர்களாகி நின்றார்கள். பிறகு அவள் எப்படியோ ஆரம்பித்தாள்.

"உங்களுடைய ஆழ்ந்த சிந்தனைகளுக்கு இடையூறு உண்டுபண்ணிவிட்டேன். என்னை மன்னிக்கவேண்டும்."

அவன் ஒருமாதிரித் தன்னைச் சரிப்படுத்திக்கொண்டு, "அப்படி ஒன்றையுமே நீங்கள் செய்துவிடவில்லை" என்றான்.

அவளுக்கு மேலும் பேசவேண்டிய தேவையிருந்தது. ஆனாலும் பேச்சு வரவில்லை. சபையிற் பிரசங்கஞ் செய்வதுபோல இது அவ்வளவு சுலபமாகவும் தெரியவில்லை. அதனால் கஷ்டப்பட்டுக்கொண்டே சும்மா நின்றாள்.

அப்போது அவன் பேசினான்:

"தனியாக வந்து இங்கே நிற்கிறீர்களே?"

கேட்டபிறகுதான் எதற்காக இப்படிச் செய்தேன் என்று அவன் தன்னைத்தான் நொந்துகொண்டான். அதற்குள் அவள் "நீங்களுந்தான் தனியாக வந்து நிற்கிறீர்கள். நான்மட்டும் ஏன் அப்படிச் செய்யக்கூடாது?" என்று கேட்டாள்.

சிவராமன் சிரித்தான். அந்தச் சிரிப்பு அவளுக்குப் பழைய நினைவுகளைக் கிளறிவிட்டது. உடனே அவள் வேதனை கலந்த குரலில் "நீங்கள் பெண்ணுலகத்தையே கேலி செய்கிறீர்கள். உங்களைப் போன்றவர்கள் இப்படி நடந்து கொள்வது உண்மையில் வருத்தப்படவேண்டிய விஷயந்தான்" என்று சொல்லி நிறுத்தினாள்.

அவன் சாந்தமாகவும் நிதானமாகவும் பேசினான்: "நான் இதுவரை யாரையுமே கேலி

செய்ய எண்ணியதுமில்லை; ஆயினும் என்னை யறியாமலே தவறு நேர்ந்திருக்கலாம். தயவு செய்து மன்னித்துக்கொள்ளுங்கள்."

மைதிலி பேச்சற்று நின்றாள். பந்தங்களி னின்றும் மெல்ல மெல்ல விடுபடுவது போன்ற ஓர் இன்ப உணர்ச்சி அவளைப் பரவசப்படுத் திக்கொண்டிருந்தது. சிறிது பொறுத்து "என்னை மன்னிக்க வேண்டும்" என்று தாழ்மையோடு கேட்டாள்.

"நீங்கள் ஏதாவது பிழை செய்தீர்களா? அப்படியானால் நான் உங்கள்மீது சுமத்தியபழி நியாயமானது என்றாகிவிடும்; இல்லையா?"

அவளோடு சேர்ந்து சிவராமனுமே சிரித் தான். பிறகு "உங்களிடம் ஒன்று கேட்கவேண் டும் என இருந்தேன். கேட்கலாமா?" என்று மைதிலி நிறுத்தினாள்.

"நன்றாகக் கேளுங்கள்" என்றான் சிவராமன்.

"உபயோகமான உங்கள் சக்திகளையெல் லாம் அடக்கி வைத்துக்கொண்டு ஏன் ஒதுங்கி வாழுகிறீர்கள்? எனக்கு உண்மை சொல்ல வேண்டும்."

அவன் மௌனமாகி நின்றான். அவளோ திருப்பித் திருப்பி அதையே கேட்டாள்.

"என்னிடம் அப்படி என்ன சக்தியைக் கண்டீர்கள். உண்மையில் நான் எதையும் அடக்கி வைத்திருக்கவுமில்லை; ஒதுங்கி வாழவு மில்லை."

"பெரியமனிதர்களும் பொய்சொல்லத்தெரிந்து கொண்டுதானிருக்கிறார்கள்; இல்லையா?"

ஆச்சரியமான அந்தப் பெண்ணை அவன் ஒருமுறை உற்றுக் கவனித்துவிட்டு "நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை" என்றான்.

"பார்த்தீர்களா, மறுபடியும் என்னைப் பரி காசம் செய்ய ஆரம்பித்துவிட்டீர்களே" என்று சொன்னவள் அவனைப் பேசவிடாமலே பிறகும் ஆரம்பித்தாள்.

"அறிவில்லாதவர்கள் ஆயிரம் பிழைகளைச் செய்தாலும் பெரியோர்கள் தாமாகவே மன் னித்துவிடுகிறார்கள். அழிவற்ற இந்த நம்பிக்கை யோடு உங்களிடம் விடைபெறுகிறேன்."

அவன் நமஸ்கரித்தான். அவளும் அவ் வாறே செய்துகொண்டு "தனியாக வந்து நிற் கிறாயே என்று அப்பொழுதே சொன்னீர்கள். இருள் மேலும் பரவிவிட்டது. நீங்களும் வரு கிறீர்களா?" என்று கேட்டாள்.

ஒருவரோடொருவர் ஒன்றும் பேசாமலே சிறிதுநேரம் நடந்தார்கள். அதற்குள் அவள் திரும்பி நின்று, "நீங்கள் என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"சும்மாதான் இருக்கிறேன்."

"அப்படியானால் பைத்தியம் பிடித்து விடாதா?"

"படிக்கிறேன்."

"அது என்ன படிப்போ?"

அவன் சிரித்துக்கொண்டே சொன்னான்: "நீங்களே எனக்கு ஒரு புதிய பாடமாகத் தான் தோன்றுகிறீர்கள்".

அவளும் 'கலகல'வென்று சிரித்தாள். பிறகு, "பாக்கியவசத்தால் உங்களை இன்று சந்தித் தேன்" என்று சொல்லிப் பிரிந்து சென்றாள்.

—3—

மற்ற நாள்: அஸ்தமனத்துக்கு வெகுநேரத் துக்கு முன்பே மைதிலி சமுத்திரக் கரைக்குக் கிளம்பிவிட்டாள். அவனைக் காணவேண்டும் என்ற ஆசை அப்படி அவளைத் தூண்டிக் கொண்டிருந்தது. 'அவர் அங்கேதான் இருப் பார்' என எண்ணியவளாய் நேராகவே முதல் நாள் அவனைச் சந்தித்த இடத்துக்குச் சென் றாள். ஆனால் அவனை அங்கே காணவில்லை. ஆயினும் 'வருவார்' என்று அடிக்கடி தன்னைத் தான் ஆறுதல் செய்துகொண்டே அங்கே உட் கார்ந்திருந்தாள்.

பொழுது போய்க்கொண்டிருந்தது. எத் தனையோபேர் வந்தார்கள்; போனார்கள். அவன் மட்டும் வரவில்லை. கடைசியில் இருள் பரவு கிற நேரமாகிவிட்டது. 'இனி எங்கே வரப் போகிறார்?' என்ற வேதனையோடு எழுந்து நடந்தாள். தெருவுக்கு ஏறும்போது எங் கிருந்தோ அவள் இதயத்தைத் தொட்ட அந்தக் குரல் காற்றில் மிதந்துவந்து அவளது காதிலே விழுந்தது. நடப்பதை நிறுத்திவிட்டுத் திரும்பிப் பார்த்தாள். சற்றுத் தொலைவில் யாரோ

இருவர் உட்கார்ந்திருப்பது நன்றாகத் தெரிந்தது. மறுபடியும் காதைக் கொடுத்துக் கேட்டாள். சந்தேகமில்லை. சிவராமனுடைய குரல்தான் அது.

அவள் மெல்ல நடந்து அவர்களுக்குப் பின் புறமாக உட்கார்ந்தாள். அப்பொழுது சிவராமனுக்குப் பக்கத்திலிருந்த பையனே பேசினான்:

"ஆறேழு வருஷங்களுக்கு முன்னடியே செத்திட்டாங்களாம்."

"அம்மா, இருக்கிறாளா?" இது சிவராமனுடைய குரல்.

"ஆமாம், இருக்குது."

"எங்கே?"

"பட்டணத்திலேதான்."

"பட்டணத்திலேதான் என்றால் எங்கே?"

"தெரியாது. எங்கும் திரியும்."

"அப்படியானால் நீ உன் அம்மாவைக் காணுகிறதில்லையா?"

"அதிக நாளாச்சு."

"உனக்குத் தம்பி தங்கை இல்லையா?"

"தங்கை இருக்குது. அதுக்கு ஒரு வயசு கூட இருக்காது."

சிவராமன் பேச்சை நிறுத்திவிட்டுச் சும்மா இருந்தான்.

"சாமீ! பசிக்குது. ஏதாவது குடுங்கோ" என்றான் சிறுவன்.

சிவராமனுடைய கைகள் சட்டைப் பைகளைத் துழாவின. பையனே அந்தக் கைகளையே பார்த்தபடியிருந்தான். பைகளுக்குள் நுழைந்த கைகள் வெளியே வர மறுப்பவைபோல அப்படியே கிடந்தன. அப்போதுதான் பின்புறத்திலிருந்து மைதிலியின் குரல் கேட்டது.

"இங்கே இருக்கிறது கொடுங்கள்."

சிவராமன் திரும்பினான். பையனை அவளிடம் ஓடினான். அவள் அந்தப் பையனை அனுப்பிவிட்டு எழுந்து கிட்ட வந்தாள். வந்து கொண்டிருந்த மைதிலியைப் பார்த்துக் கொண்டே "பணம் இங்கே இருக்கிறதே" என்றான் சிவராமன்.

"அப்படியானால் என்ன யோசித்துக்கொண்டிருந்தீர்கள்?" என்று அவள் கேட்டாள்.

"நன்றாக ஆராய்ந்து பார்த்தால் யோசிக்காமல் இருக்கவும் முடியவில்லை. யோசித்தும் ஒரு பயனும் ஏற்படுவதில்லை."

"என்ன புதிர் போடுகிறீர்களே?"

"இந்த உலகமே அவிழ்க்கமுடியாத ஒரு புதிர்தானே!"

சிறிது நேரம்வரை ஒருவரைஒருவர் பார்த்தபடி சும்மா இருந்தார்கள். பிறகு அவள் எதையோ ஒன்றை வைத்துக்கொண்டு பேச்சை ஆரம்பித்தாள்.

"ஒரு சந்தேகம் உங்களிடம் கேட்கப்போகிறேன்."

"நன்றாகக் கேளுங்கள்; முடியுமானால் சொல்லுகிறேன்."

"சிலர் மிகச் சாதாரண நோக்கங்களை உடையவர்களாகவும் வேறு சிலர் அசாதாரண நோக்கங்களை உடையவர்களாகவும் இருக்கிறார்கள். ஒவ்வொருவருடைய நோக்கங்களும் கைகூடும்போது உண்டாகிற திருப்தியோ இன்பமோ அளவில் வித்தியாசமாக இருக்கிறதா?"

சிவராமன் நிதானித்துக் கேட்டுக்கொண்டிருந்தான்.

மைதிலி அதையே வேறொரு விதமாக ஆரம்பித்தாள்.

"எனக்குப் பசிக்கிறது. நான் அதற்காக முயற்சிக்கிறேன். என் பசி ஆறினதும் நான் திருப்தியடைகிறேன். நீங்களோ உலகத்தின் பசியைப் போக்க முயலுகிறீர்கள். உங்கள் நோக்கம் நிறைவேற எவ்வளவோ பாடுபட வேண்டியிருக்கிறது. அப்படிப் பாடுபட்டு அதுவும் சித்தியாகிறது என்று வைத்துக்கொள்வோம். அப்போது நீங்களும் திருப்தியடைகிறீர்கள். இந்த இரண்டுபேருடைய மனமும் திருப்தியடைவதால் உண்டாகிற இன்பத்தின் அளவில் வித்தியாசம் இருக்கிறதா?"

இதுவரை மௌனமாக இருந்தவன் பேச ஆரம்பித்தான்.

" சாதாரண இச்சைகளையும், உயர்ந்த லக்ஷியங்களையும் எப்படி ஒன்றாக மதிக்க முடியும்? இச்சைகள் உடம்பின் பசி. லக்ஷியங்கள் உயிரின் தாகம். அப்படியே இச்சைகள் கைகூடும்போது ஏற்படுகிற திருப்திக்கும் லக்ஷியங்கள் சித்திக்கும்போது கிடைக்கிற ஆநந்தத்துக்கும் சம்பந்தமே கூறமுடியாது."

அவள் மௌனமாகி உட்கார்ந்திருந்தாள். அவனே அவ்வளவோடு பேச்சை நிறுத்தி விட்டு எழுந்து நடக்க ஆயத்தமானான். பிறகு அவளும் எழுந்து அவனைத் தொடர்ந்து நடந் தாள். வழியில் வந்துகொண்டிருக்கும்போது அவள் வேண்டுமென்றே இதைச் சொன்னாள்.

" ஆழ்ந்த தத்துவங்களில் மூழ்கி அவிழ்க்க முடியாத பெரிய சிக்கல்களைத் தூக்கிக்கொண்டு சங்கடப்படுவதைவிட, செய்யத்தக்க சாதாரண மானவைகளையே தொடங்கி முடிப்பது மேல் என்றே நான் கருதுகிறேன். "

" ஒவ்வொருவரும் தங்களால் முடிந்ததைச் செய்கிறார்கள்; நாமேன் இதிற் சங்கடப்பட வேண்டும். "

சிவராமனுடைய வார்த்தைகள் அவளைப் பேச்சின்றி நடக்கச் செய்தன. பிறகு அவரவர் வழியாற் பிரிந்து சென்றார்கள்.

—4—

இப்பொழுதெல்லாம் அவர்கள் நெருங்கிப் பழகினார்கள். மனம்விட்டு எந்த விஷயத்தை யும் பேசுவதற்குரிய ' தெம்பு ' அவளுக்கு உண்டாகிவிட்டது. சில சமயங்களில் ' வாருங் கள் ' என்று அவனை இழுத்துக்கொண்டு வீட்டுக்கே வந்துவிடுவாள். அவனைக் காணமல் இருப்பதென்பதும் அவளுக்கு முடியாத காரிய மாகி வந்துவிட்டது.

அன்று வீட்டின் முன்புறத்தில் இரண்டு பேருமே உட்கார்ந்திருந்தார்கள். எப்படியாவது அவனைத் தோற்கடித்து அகப்படுத்திவிட வேண்டும் என அவள் ஆசைப்பட்டாள். அன்றைய மனநிலையும் தனிமையும் ' தொடங்கு ' என்று அவளைத் தூண்டின.

" ஒரு விஷயம் " என்று மைதிலி ஆரம்பித் தாள்.

" என்ன ? சொல்லுங்கள் " என்றான் சிவராமன். ஆனால் அவளால் உடனே ஆரம் பிக்கமுடியவில்லை. தயங்கினாள். அவனே அவளது முகத்தைப் பார்த்தபடியே விஷயத்தை எதிர்பார்த்தான்.

கொஞ்சம் பொறுத்தே மிகக் கஷ்டப்பட்டுக் கொண்டு " ' கல்யாணம் ' என்பதைப் பற்றித் தான் கேட்கிறேன் " என்று மொட்டையாக நிறுத்தினாள்.

" யாருடைய கல்யாணத்தைப் பற்றியோ ?" என்று கேட்டுவிட்டு அவன் சிரித்தான். அது அவளை மேலும் சங்கடத்துக்குள்ளாக்கி விட்டது. ஆயினும் ஒருவாறு சமாளித்துக்கொண்டு துணிந்து பேசத் தொடங்கினாள்.

" பொதுவாகத்தான் கேட்டேன். ஒவ் வொருவரும் அதைச் செய்துகொள்ளத்தான் வேண்டுமா என்பதுதான் பிரச்சினை."

" அது அவரவரைப் பொறுத்த விஷயம்."

"நான் அதைக் கேட்கவில்லை. கல்யாணம் செய்துகொள்கிறார்களே, அவர்கள் தவறு செய்கிறார்களா ? அல்லது செய்யாது விடுபவர் கள்தான் தவறு செய்கிறார்களா ?"

" உங்கள் கேள்வியை நான் இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. "

அவள் இப்பொழுது ஒரு மாதிரி விஷயத் தில் இறங்கினாள்.

" இயற்கையைப் பிசகானது என்று யாரா லும் சொல்லமுடியாது. அப்படியானால் இயற் கையின் கட்டளைக்கு அமைகிறவர்களை எவ் வாறு பிழை என்று சொல்லலாம். அவ்விதமே இயற்கையைப் புறக்கணித்து வாழுபவர்களை நியாயமானவர்கள் என்று சொல்லுவதும் தவறே."

" எடுத்ததற்கெல்லாம் ' இது இயற்கையின் கட்டளை ' என்று நாம் சொல்லமுடியாது. அது பெரிய பிசகாகும்."

இந்தப் பதில் அவளைக் கொஞ்சம் தடு மாறும்படி செய்தது. ஆயினும் சமாளித்துக் கொண்டு வேறொரு பக்கத்தால் நுழையப் பார்த்தாள்.

" நல்லது ; இன்னுமொன்று உங்களைக் கேட்கப் போகிறேன். அதற்கும் பதில் சொல்லி விடுங்கள்."

அவள் பேசுவதை நிறுத்திவிட்டு அவனது முகத்தைப் பார்த்தாள்.

" சரி, சொல்லிவிடுங்களேன் " என்றான் சிவராமன்.

" என்னையோ, உங்களையோ அல்லது வேறொருவரையோ எடுத்துக்கொள்ளுங்கள். ஒவ்வொருவரும் இந்த உலகுக்கு வர ஒரு தாயும் தந்தையும் இன்றியமையாதிருந்தனர். அப் படியே அந்தத் தாய்க்கும் தந்தைக்கும் ஒவ்

வொரு தாய் தந்தையர் இருக்கவே செய்தனர். இவ்வாறு ஒரு நூறு சந்ததியைக் கணக்கிடுங்கள். எத்தனையோ கோடானு கோடி தாய் தந்தை யர்கள் சம்பந்தப்பட்டே இந்தத் தொடர் நீண் டிருக்கிறது. இடையில் ஒரு தாயோ தந்தையோ இல்லையென்றுல் நம்மில் யாரும் பிறந்திருக்க முடியாதல்லவா? இப்படியாகத் தொடர்ந்து வந்த இந்த அற்புதமான சங்கிலியை நடுவில் நிறுத்திவிட யாருக்கும் அதிகாரமில்லை யென்றே நான் கருதுகிறேன்."

மைதிலி பேச்சை முடித்துவிட்டுச் சும்மா இருந்தாள். அவன் உடனே பதிலுக்குப் புதிர் போடுகிறவனைப் போல ஆரம்பித்தான்.

" இந்த உலகத்திற் காலத்துக்குக் காலம் எண்ணற்ற ஜீவ வர்க்கங்கள் தோன்றின. அவற்றுட் பல முற்றுக அழிந்து மறைந்தும் போயின. அதனுல் இந்த உலகத்துக்கு ஏதாவது குறை ஏற்பட்டதா? அதுபோல மனித ஜாதியும் பூண்டோடு அழியினும் அழிந்துபோகட்டும். அதற்காக நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்?"

இந்தப் பேச்சு அவளது உள்ளத்தைத் தாக்கி வேதனையை உண்டுபண்ணியது. அவள் அதை வெளிக்குக் காட்டாமலே மறைக்கப் பிரயத்தனப்பட்டாள். ஆயினும் அவளால் எதைப்பற்றியும் பேச முடியவில்லை. சும்மா இருக்கவும் இயலாத ஒரு நிலை அவளைச் சூழ்ந்து கொண்டது. அப்பொழுதுதான் அவளுடைய தாயார் வேலைகளை முடித்துவிட்டு அங்கே வந்து சேர்ந்தாள். அந்த அம்மாள் வந்து உட்கார்ந்த துமே சிவராமனைப் பார்த்து " அப்பனே ஒரு தொழிலுமே செய்வதில்லை என்று இருக்கிறு யாமே ஏன்?" என்று கேட்டாள்.

" அம்மா! எத்தனை நண்பர்கள் வற்புறுத்திக் கேட்டுவிட்டார்கள். ' ஒன்றுமேசெய்யமுடியாது ' என மறுத்துவிட்டார் " என்றுள் மைதிலி.

" ஆமாம்; எனக்கு அந்த வேலைகள் பிடிக்க வில்லை."

சிவராமன் சொல்லிமுடிப்பதற்குள் மைதிலி வேண்டுமென்றே இப்படிக் கேட்டாள்:

" அப்படியானுல் உங்களுக்குப் பிடித்தமான வேலை எதுவோ?"

" மண் சுமப்பது. அல்லது அது போல வேறென்று."

எல்லாரும் சேர்ந்து சிரித்தார்கள். பிறகு அந்த அம்மாள், அவனுடைய முகத்தைப் பார்த்துக்கொண்டே 'வாழ்க்கை என்று ஒன்று இருக்கிறதே. அதை எப்படியாவது இழுக்கவேண்டு மல்லவா?' என்றுள்.

சிவராமன் சொன்னன்:

" அம்மா, வாழவேண்டு மென்பதும் அவசி யந்தான். அதற்காக நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக்கூடாது. கேவலமாக வாழ்வதைவிடச் சும்மா இருந்து சாவது எவ்வளவோ மேல்."

மைதிலி மௌனத்திலாழ்ந்திருந்தாள். அவ ளுடைய தாயாரும் பேச விரும்பாதவளாகிச் சும்மா இருந்தாள். சிறிது நேரத்திற்குள் அவ னும் எழுந்து விடைபெற்றுக்கொண்டு வெளியே சென்றன்.

— 5 —

கடந்த இரண்டு நாட்களாக அவன் அங்கே வரவில்லை. மைதிலி தானுகவே பார்க்கப் போனுள்.

அவனுடைய அறைக்கதவு மூடிக்கிடந்தது. கதவோடு காத்துநின்ற வாடகைப்பணம் வாங்கு கிற மனிதன் அவளைக் கண்டதும் " அம்மா, இந்தமாசம் தன்னிடமே பணத்துக்குவரவேண்டு மென்றுர்" எனத் தயங்கினன்.

"எத்தனை தடவை உன்னிடம் சொல்லிவிட் டேன். இனிமேல் நீ ஒருபோதும் பணத்துக்கு இங்கே வரக்கூடாது" என்று அவள் கண்டிப் பாகச் சொல்லி அவனை அனுப்பிவிட்டு யன்னல் வழியாக உள்ளே பார்த்தாள்.

வெறுந் தரையிலே துணியை விரித்து அதன் மேற் கையே தலையணையாக அவன் தூங்கிக் கொண்டிருந்தான். ஏதோ ஒரு புஸ்தகம் பக்கத்திலே கிடந்தது.

அந்தக் காட்சி அவளுடைய நெஞ்சை உருக் கியது! கடவுளே, என்று வாய்விட்டுச் சொல்லி அவள் பெருமூச்சுவிட்டாள். அப் போது பக்கத்து அறையில் குடியிருப்பவர் ஒரு வர் வெளியேவந்து, "அம்மா,இரவு முழுவதுமே ஏதோ படித்துக்கொண்டிருந்தார். பிறகு வாந்தி யெடுத்தார். காலையிலேதான் நித்திரையாகி யிருப்பார் என எண்ணுகிறேன்" என்று சொல்லி விட்டுச் சென்றுர்.

அவள் மற்றப் பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு நின்று கண்களைத் துடைத்தாள்.

பிறகு மெல்ல மெல்ல நடந்து வீட்டுக்கு வந்தாள். ஆயினும் அவளால் இருக்க முடியவில்லை. சிறிது நேரத்துள் மறுபடியும் கிளம்பி அங்கே சென்றாள்.

கதவு முன்போலவே தாழிடப்பட்டிருந்தது. அறையினுள்ளே அவனைக் காணவில்லை. ஆனால் மைதிலி பைத்தியக்காரியைப் போலத் திரும்பி வீட்டை நோக்கி நடந்தாள். எதிர் பாராதவிதத்தில் சிவராமனை வழியிலேயே சந் தித்தாள். அவளுடைய உள்ளத்திலே இத்தனை நேரமாகக் குமுறிக்கொண்டிருந்த வேதனை கோபமாக மாறிவிட்டது.

"நீங்கள் யாருடைய சொல்லையும் லக்ஷி யம் செய்யமாட்டீர்களா?"

இதைக் கேட்டதும் அவன் சிரித்தபடியே, "ஏன் இப்படிக் கோபிக்கிறீர்கள்?" என்றான்.

"இரவு தூங்கினீர்களா? அப்படி எந்தப் பரீக்ஷைக்குப் படிக்கிறீர்கள்? வாந்தியெடுத் தீர்களாமே?"

அவள் ஒன்றன்பின் ஒன்றாகக் கேள்வி களை அடுக்கிக்கொண்டே போனாள். அவனை எல்லாவற்றிற்கும் பொதுவாக "எனக்கு இவை யெல்லாம் பழக்கமாகிவிட்டன" என்று சமாளித் தான். உடனே அவள் தொடர்ந்து உரிமை யோடு "நல்லது, இப்பொழுது வீட்டுக்கு வரு கிறீர்களா இல்லையா?" என்று கேட்டாள்.

"அங்கே இப்போது எதற்காக?"

"நீங்கள் வரத்தான் வேண்டும்."

அவன் மறுக்கவில்லை. அவளுக்குப் பின் னால் நடந்து சென்றான். வீட்டுக்குள் நுழைந்த தும் அவள் தாயைக் கூப்பிட்டு, "நித்திரையும் நல்ல சாப்பாடும் இல்லாமல் எத்தனை நாளைக்கு இப்படி இருக்கலாம் என்று நீங்களே இவரைக் கேளுங்கள்" என்றாள்.

"சிவராமா! நீ இனி இங்கேயே சாப்பி டேன்" என்று அந்த அம்மாள் தாயின் உள் ளத்தோடு அன்புக் குரலால் கேட்டாள்.

அவன் ஆமென்றே இல்லையென்றே சொல் லாமல் மௌனமாக இருந்தான். பிறகு "அம்மா, ஸ்நானஞ் செய்துவிட்டு வருகிறேன்" என்று எழுந்து வெளியே சென்றான்.

அவன் சென்றதும் 'நடக்கமுடியாதது நடந்து விட்டது' என்று அவள் பரவசமானாள். அவ ளுடைய உள்ளத்தின் மலர்ச்சி அந்த வீட்டின் ஒவ்வொரு அணுவிலும் பிரதிபிம்பித்தது. அவள் ஓடியோடி எத்தனையோ ஆயத்தங்களை யெல் லாம் செய்தாள். 'என் தெய்வத்துக்கு நேருக்கு நேர் நின்று பணிவிடை செய்யும் பாக்கியத் தைப் பெற்றவள் நான்' என்று அடிக்கடி சொல்லிக்கொண்டாள்.

பிறகு சிவராமன் அங்கே வந்ததும்—சாப் பிட்டதும் இப்படியென்று சொல்ல முடியாததும் —மறக்க முடியாததுமாகிய ஒருவித இன்பப் போதையை அவளுக்கு உண்டுபண்ணியது.

இரவுக்கும் அவன் வந்து சாப்பிட்டுவிட்டே சென்றான்.

—6—

மறுநாள் நித்திரைவிட் டெழும்பும்போதே 'காப்பி சாப்பிட இப்போது வருவார்' என்ற ஆனந்தத்தோடு அவள் எழுந்தாள். பிறகு எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டுக் காத் திருந்தாள்.

நேரம் மெல்லமெல்லக் கழிந்து சென்றது. மைதிலி தெருவைப் பார்த்துக்கொண்டே கத வோடு வந்துநின்றாள். அவன் வரவில்லை. ஆனால் அவனெழுதிய ஒரு கடிதம்மட்டும் வந்து சேர்ந் தது.

பதறிக்கொண்டே அதைப் பிரித்துப் படித் தாள்.

மைதிலி,

வழியில்—வண்டியில் சந்திப்பதுபோல நாங்களும் சந்தித்தோம். எனக்காக நீயும், உனக்காக நானும் பிரயாணத்தை நிறுத்தி விடலாகாது. இன்னும் கொஞ்ச நாட்கள் சென்றால் நானே அந்தப் பிழையைச் செய்து விடவும்கூடும். ஆதலால் உன்னிடம் விடை பெற்றுக்கொள்ளுகிறேன்.

அம்மாவின் பாதங்களில் என் ஆழ்ந்த வணக்கத்தைச் சமர்ப்பித்துவிடு.

சிவராமன்.

மரணஞ் சூழ்ந்தபிறகும் பிடித்துக்கொண் டிருக்கும் உலக இச்சைகள்போல மறுபடியும் 'அவனைத் தேடு' என்று ஏதோ ஒன்று அவளைத் தூண்டியது. கஷ்டப்பட்டுக் கண்களை மேலே தூக்கினாள். எங்கும் இருள் கவிந்து வருவது போல இருந்தது. கண்களை இறுக மூடிக் கொண்டு அப்படியே உட்கார்ந்தாள்.



மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவில்

"கருதடி யார்தம் நினைவுகை கூடக் கருணைமத
மொருதலை யர்கப் பொழியும்ப லானனத் தோனசுரன்
பொருதலை மேவ வொளிராகு வாகப் புரந்தபிரான்
மருதடி வாழும் பதி"

மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவில்.



பொன்னாலை வரதராசப் பெருமாள் கோவில்


'சந்தன மரங்களகில் சாதிபல ஓதிய தருக்கள் நிறையச்
சுந்தர நெடுங்கடல் வளைந்திட முகுந்தனுறை தொல்பதி யதாம்
பந்தணி முலைச்சியர்கள் பாடிநட மாடஇமை யோர்கள் பரவ
இந்திரன் வணங்கிட இருப்பதுபொன் னாலையம் எனும் பதியதே'
எனப் புகழ்பெறும் பொன்னாலை வரதராசப் பெருமாள் கோவில்.

NEW!
COMMER

'SUPERPOISE'

2·5 TON PETROL & DIESEL TRUCKS

WITH 'FULL-VIEW'
3-SEAT COMFORT CAB AND
OPTIONAL OVERDRIVE



TOUGH! RELIABLE! SAFE! ECONOMICAL!

THERE IS A **COMMER TRUCK** FOR EVERY PURPOSE.
WRITE OR CALL ON US FOR
FULL PARTICULARS.

Distributors :

GLOBE MOTORS Ltd.

103, TURRET ROAD — *Tel:* 6272 — **COLOMBO 7**

புறூடென்ஷல் நன்கொடைப் பணம்

மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது

1955ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் தேதி நடைபெற்ற கணக்குப் பரிசோதனையின் பேரில இலங்கையில் எடுக்கப்பெற்ற இன்சூரன்ஸ் பத்திரங்களின் போனஸ் (நன்கொடைப்பணம்) ஆயிரம் ரூபாவிற்கு பன்னிரண்டு ரூபாய் விகிதம் வழங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

கவர்ச்சிமிகு திட்டங்களுக்கும், அவை பற்றிய சகல விபரங்களுக்கும் எங்கள் உள்ளூர்ப் பிரதிநிதிகளுடன் ஆலோசிக்கவும். அல்லது கீழ்க்காணும் விலாசத்திற்கு நேரே மனுச் செய்யவும்.

த றெசிடென்ற் செக்கிறேட்டரி

த புறூடென்ஷல் அசுரன்ஸ் கம்பெனி லிமிட்டெட்

தபால் பெட்டி நம். 45, கொழும்பு 1.

THE PRUDENTIAL ASSURANCE COMPANY LIMITED

(INCORPORATED IN ENGLAND)

P. O. Box 45 :: COLOMBO

நேரு புத்தகசாலை

125, செட்டியார் தெரு, கொழும்பு 11

★ ★

புத்தகங்களும் பள்ளிக்கூட உபகரணங்களும் வண்ணப் படங்களும், கண்ணாடி வகைகளும் தொகைக்கும் சில்லறைக்கும் கிடைக்கும். புத்தகங்கள் வெளியிடுவதுடன் கண்கவர் கலண்டர்களுந் தயார் செய்கின்றோம்.

PUBLISHERS, BOOK-SELLERS, STATIONERS, PICTURE & GLASS MERCHANTS & CALENDAR MANUFACTURERS

THE NEHRU BOOK DEPOT

125, SEA STREET, :: COLOMBO 11

பிழையும் சரியும்

← கசின் →

இக்காலத்திற் சினிமாக்களிலே 'வில்லன்' என்று ஒரு பாத்திரம் சிருட்டிக்கப்படுகிறது. இந்த 'வில்லன்' இல்லாவிட்டாற் கதை நடக்காது. ஆகவே, கதையின் சாரதி என்றுகூட 'வில்லனை'ச் சொல்லலாம். இப்பொழுது கூறப் போகும் கதையில் நான் ஒரு 'வில்லன்' அல்லன்; 'வில்லனை'ப் போலத் துஷ்டத்தனங்கள் செய்யவு மில்லை.

'வில்லன்' என்ற பாத்திரத்திற்கு எதிரான குணங்களே என்னிடம் இருந்தன. கதை முடி வதற்கு அதுவும் சுபமாக முடிவதற்கு நான் ஒரு காரணஸ்தனாக இருந்திருக்கிறேன். கதை யின் விபரங்களைப் பிழையான வழிகளில் அறிந்தவன் என்று என்னைச் சிலர் குற்றஞ் சாட்டலாம். என்ன நோக்கத்திற்காக நான் இந்த விபரங்களை அறிய முயற்சித்தேனோ அதே நோக்கத்தின் பலனை நீங்களும் பெறுவ தற்காக இதைக் கதையாக எழுதுகிறேன்.

* * *

இலங்காமாதா சுதந்திர மடைந்தபின் பல விதமான சீர்திருத்தங்களைப் பெறுகிறுள் என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. இதைச் சில அரசியற் கட்சிகள் மறுக்கவும் கூடும். மற்ற எல்லா விஷயங்களைப் பற்றியும் அபிப் பிராய பேதங்கள் இருந்தபோதிலும், இலங்கை யின் எல்லா மூலை முடுக்குகளிலும் பல உப தபாற்கந்தோர்கள் புதிதாகத் திறக்கப்பட்டன என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். இவ் விதம் புதிதாகத் திறக்கப்பட்ட உப தபாற் கந்தோர்களிற் பந்தனக் குறிச்சி உபதபாற் கந்தோர் என்பதும் ஒன்றாகும். இந்தப் பந்தனக் குறிச்சி உபதபாற்கந்தோர் அதிகாரி உத்தி யோகம், மலடி வயிற்று மகன் போலவும், ஒரு புதையல் எடுத்த தனம் போலவும், எனக்குக் கிடைத்தது.

இந்தத் தபாற் கந்தோர் 'லீ' வகுப்புத் தபாற் கந்தோராக இருந்தபோதிலும், எனது மாத வேதனம் இருபத்தைந்து ரூபாவாக இருந்த போதிலும், அந்த ஊரவர்கள் என்னைப் 'போஸ்மாஸ்ரர்' என்று அழைக்கின்ற ஒன்றே எனக்குப் போதிய திருப்தியாக இருந்தது.

மதிப்புவாய்ந்த உத்தியோகங்களில் வேலை குறைவு என்பது எல்லோராலும் ஒப்புக்கொள் ளக் கூடிய ஒன்றாகும். உபதபாற்கந்தோர் அதிகாரி என்ற இந்த உத்தியோகம் மதிப்பு வாய்ந்த தென்பதை ஆட்சேபிப்பவர்களுக்கு நான் நாள் முழுவதும் போதிய வேலையின்றி யிருந்தேன் என்பது ஒன்றைக் கூறினாலே போதுமானது.

இந்த வேலையிருந்தும் வேலையில்லாச் சிக்கல், கௌரவம் என்று நான் கூறக்கூடிய ஒன்றாகிலும், எனக்கு அது தலைவலியையே கொடுத்தது. புதினப் பத்திரிகை ஒன்றினை வரவழைத்து வாசித்துப் பார்த்தேன். அது வந்த ஒரு மணித்தியாலத்தில் விளம்பரம், விலை வாசி உட்பட முழுவதும் முடிந்துவிடும். அதன்மேல், செய்வதற்கு ஒரு வேலையுமில்லை; பேசுவதற்கு ஒரு மனிதருமில்லை. இது என் னளவில் ஒரு தீராத சிக்கலாக இருந்தது. இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு எனக்கு ஒரு புத்தம் புதிய அருமையான யோசனை தோன்றியது.

நான் வேலைபார்த்து வந்த இந்தப் பந்தனக் குறிச்சி என்ற கிராமத்திற்குத் தபால் விநியோகம் செய்வது கிடையாது. கிராமவாசிகள் வந்து தாங்களே தங்கள் தபால்களைக் கேட்டுப் பெற்றுக்கொண்டு போவார்கள். இதனற் பல ரின் தபால்கள் கந்தோரில் நாட்கணக்காக இருக்கும்.

வேலையற்ற நேரங்களில் அங்கேயிருக்கும் காகிதங்களைப் பிரித்து வாசித்துத் திரும்பவும் ஒட்டிவைப்பது ஒரு நல்ல பொழுது போக்காக எனக்குத் தோன்றியது. கடிதங்களை வாசித்துப்

பார்ப்பதிலும் பார்க்க, அவற்றைப் பிரிப்பதிலும் திரும்ப ஒட்டுவதிலும், அதிக நேரத்தையும், கூடிய கவனத்தையும், எடுக்க வேண்டியிருந்தது. மற்றவர்களுக்குச் சந்தேகம் சிறிதும் புலப்படாதவாறு இத்தொழிலை நுட்பமாகச் செய்ய வேண்டும். இது ஒரு நுட்பமான கைத்தொழில். இதில் அநேக தொழில் நுட்பங்களிருக்கின்றன. இத்தொழில் நுட்பங்களை உலோகோபகாரத்தின் பொருட்டு நான் வெளியிட விரும்பவில்லை.

வேறு இடங்களிலிருந்து அந்த ஊருக்கு வரும் காகிதங்களையும், ஒழுங்காக நான் படித்து வந்தமையால் அநேக இன்பகரமான புதினங்கள் எனக்குத் தெரியவந்தன. பத்திரிகைகளில் தொடர்கதை வாசிப்பதுபோலச் சில விஷயங்களைக் கதைபோலக் காகிதமூலம் ஒழுங்காக அறிந்து வந்தேன்.

சில காகிதங்களை அதைப் பெறுபவரிலும் பார்க்க நான் மிக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். இத்தொழில் எனக்குச் செலவற்ற சிறந்த பொழுதுபோக்காக இருந்தது.

நான் வாசித்த கடிதங்களுள் ஒரு சிறந்த காதற் கடிதத்தைச் சிறிதும் மாற்றாது அப்படியே கீழே தருகிறேன்.

* * *

என் ஆருயிர்க் காதல,

வாரந் தவறாமற் கிடைத்துவரும் தங்கள் காகிதங்களின் சொல்லழகும், பொருளழகும் என்னை எப்பொழுதும் குதூகலத்தில் ஆழ்த்துகின்றன. குறைந்தது ஒரு நாளைக்கு இரண்டு தரமாயினும் தங்கள் கடிதங்களை நான், வாசிக்கத் தவறுவதில்லை. அவற்றை வாசிக்கும் பொழுது நான் அடையும் இன்பந்தான் அதற்குக் காரணமாகும். காகிதங்களை நான் வாசிக்கும்பொழுது தங்களுக்கு மிகவும் சமீபத்தில் இருப்பதுபோன்றதோர் உணர்ச்சி எனக்கு ஏற்படுகிறது. காகிதங்களை வைத்துப் பூட்டியபின் தாங்கள் எனக்கு எட்டாத ஒரு பொருள் போலத் தோற்றமளிக்கிறீர்கள். இத்தோற்றம் எனக்கு வரவரப் பெரிதாகவும் தோற்றுகிறது. இன்னும் சிறிது நீள ஆலோசித்தால் மகா பயங்கரமாகவும் தோற்றுகிறது.

என் அன்பே, என் அந்தரங்கத்திலுள்ள ஒரேயொரு சந்தேகத்தைத் தங்களிடம் கேட்கின்றேன். இதைச் சந்தேகம் என்று அழைப்பதே தவறு. காதலர் பாதையில் சந்தேகத்தின் சாயைக்கே இடமில்லை. ஒரு நினைப்பு, ஓர் எண்ணம், அல்லது ஓர் ஆராய்ச்சி என்று கூறலாம். இதைத் தங்களைக் கேட்கவும் முடியவில்லை. கேட்காமல் இருக்கவும் முடியவில்லை. கேட்கவேண்டுமானாற் போதிய சக்தியும் வேண்டும்.

தங்களைச் சேர்ந்தேயன்றித் தங்களின் வேறுக இப்பொழுது எனக்கு ஒரு சக்தியேயில்லை. தங்களைத்தானே கேட்கிறேன் என்று நினைக்கும்பொழுது, எங்கோ ஒளித்திருந்த சக்தி மெல்ல எட்டித் தலை நீட்டுவதுபோல் இருக்கின்றது. அந்த ஆதாரத்தைப் பற்றிக்கொண்டு இதை எழுதுகிறேன்.

தாங்கள் எங்கள் ஊருக்கு முதன்முதலில் வந்தீர்கள். நான் அப்பொழுது விடுமுறையில் நின்றேன். தங்களுடைய கண்களைத்தான் முதன்முதலிற் கண்டேன். அவை பஞ்சாடு படர்ந்த சோகக் கண்களாக எனக்கு முதலில் தோன்றின. ஆனால் அந்தக் கண்களினுள்ளே நுட்பமாக அவதானிப்பவர்களுக்கு ஒரு குறும்பும், ஆழமான அவதானமும் ஒடிமறைவதைக் கண்டேன்.

பெருந்தொகையான மக்களின் உயிர்களுக்கு அபயம் அளிப்பது போன்று நீண்டு படுத்திருக்கும் குளக்கட்டும், அக்குளக்கட்டின் மேல் பந்தர் போன்றமைந்த மந்த மரச்சோலையும், அவற்றோடு இரகசியம் பேசும் தென்றலும் பின்னணியாகத் தாங்கள் நின்றீர்கள். நான் கண்டேன். இது எனது நெஞ்சில் எழுதிவிட்ட சித்திரம்.

அன்று தொடக்கம் மீண்டும், மீண்டும் தாங்கள் என்னைப் பார்க்க எத்தனைவிதமாகத் தெண்டித்திருக்கிறீர்கள். எத்தனை தந்திரம் செய்திருக்கிறீர்கள். எங்கள் வீட்டுப் பொல்லாத நாய் —வீமன்—அதற்கு எங்கள் ஊரே நடுங்குமே. அதைக்கூடத் தாங்கள் ஒரு திரணமாக மதிக்கவில்லையே.

அன்றொருநாள் மத்தியானம் அதை நினைத்தால் எனக்கு இப்பொழுதும் சரீரம் நடுங்கும். அப்பா சாப்பாடு முடிந்து அயர்ந்து தூங்கும் நேரம்; நீங்கள் கிணற்றோரத்தால் வேலியைக் கடந்து மெல்ல மெல்ல வரும்பொழுது, உங்களை வீமன் கண்டு துரத்தியது. நீங்கள் ஓடிப் போய் மாமரத்தில் ஏறினீர்கள். அந்தப் பொல்லாத நாய் அந்த அளவில் விடாமல்

மாமரத்தைச் சுற்றிச் சுற்றிக் குலைத்து வந்தது. அப்பாவின் தூக்கம் கலைந்து, எழுந்து எண்ணெய் பூசி மினுமினுப்பாக வைத்திருந்த துப்பாக்கியையும் தூக்கிக்கொண்டு மாமரத்தை நோக்கிச் செல்ல நான் பயந்த பயத்தை நினைக்க எனக்கு இப்பொழுதும் பயமாயிருக்கிறது. தங்களைச் சுட்டுவீழ்த்திப்போடுவாரோ என்று நடுங்கினேன்.

அப்பா அண்ணாந்து பார்த்துத் தாங்கள் எனக் கண்டதும், 'நன்றாகப் பழுத்த பழங்கள் என்னிடம் வீட்டில் இருக்கின்றன. என்னைக் கேட்டால் கொடுத்திருப்பேனே' என்று தங்களைக் கூட்டிக்கொண்டுபோய் மாம்பழம் கொடுத்தனுப்பினரே; அப்பொழுதெல்லாம் கடவுள் எங்களுடைய பக்கம் என்று நாங்கள் பேசிக் கொள்வோம் அல்லவா.

எங்கள் வீமன் நாயை நினைக்கும்பொழுது எனக்கு இன்னொரு சிரிப்பான சம்பவம் எப்பொழுதும் நினைவுவரும். எங்களைப்பற்றி அப்பாவிடம் கோள்சொல்லும் நாகமணிக் கிழவனை வீமன் ஒருநாள் மாட்டுக் கொட்டிலுக்குள் பாய்ச்சுக் காட்டினதை நினைத்தால் எனக்கு இப்பொழுதும் சிரிப்பு வருகிறது. கிழவனுக்கு அது காணாது.

பாடசாலை விடுமுறைக் காலம், கடமை செய்யும் காலம்போலவும்; கடமை செய்யுங் காலம் விடுமுறைக் காலம்போலவும் நீங்கள் பாவித்தீர்கள். பாடசாலை நாட்களில் லீவு எடுத்துக்கொண்டு வந்து, எங்கள் கல்லூரிப் பக்கம் வருவீர்கள். விடுமுறை நாட்களில் நான் வீட்டில் நிற்கும்பொழுது, படிப்பிப்பதிற் பெருங் கவனம் உள்ளவர்போல் விடுமுறை நாட்களிலும் வகுப்புவைத்து நடத்துவீர்கள். இச்செயல்கள் எல்லாவற்றையும் நான் எப்பொழுதும் நினைத்து அகமகிழ்வேன்.

ஆம்; கடைசியாக நான் தங்களை யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற் சந்தித்த பொழுது, எவ்வளவு அன்பாக என்னை நடத்தினீர்கள். ஏன்? இப்பொழுதும் என்ன? எவ்வளவு அன்பாகக் காகிதம் எழுதுகிறீர்கள்.

தாங்கள் தங்கள் அன்புச் சின்னமாக எனக் களித்த கணையாழி, அது எனக்கு எவ்வளவு ஆறுதலளிக்கின்றது. எங்கள் எல்லை காணமுடியாத இந்த அன்புச் சமவெளியில் இந்தக் கணையாழி அணுவாகக் கிடந்து மின்னுகிறதே.

அன்று நான் இளைக்க இளைக்க யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு ஓடிவந்தபொழுது நீங்கள் ஆபத்பாந்தவன்மாதிரி நின்றீர்களே. இது அன்புடையார் இருவருக்கிடையில் ஏற்படும் தெய்வத் தொடர்பல்லவா?

'அப்பாவுக்கு வருத்தங் கடுமை,' என்று தந்தி வந்ததும், நான் கல்லூரியிலிருந்து ஓடோடியும் புகையிரத நிலையத்திற்கு வந்தேன். 'நீ இந்த வண்டியைப் பிடிக்கமாட்டாய்' என்று கல்லூரியில்உள்ளவர்கள் தடுத்தார்கள்.'முயன்று பார்ப்போம்' என்று ஓடிவந்தேன். நிலையத்து மேடையிற் புகைவண்டி, யானை காதை ஆட்டிக்கொண்டு நிற்பது போலப் புகையை ஊதிக் கொண்டு நின்றது. புகையிரதச் சீட்டுப் பெற்ற பின் வண்டியி லேறுவதாலல் வண்டி சென்று விடும். அந்தச் சனக் கூட்டத்தைக் கண்டவுடன் 'தாங்களும் அதில் ஒருவராக நிற்க மாட்டீர்களோ' வென்று நினைத்தேன்.

என்ன அதிசயம்! தாங்கள் அங்கே நின்றீர்கள். நான் காண்பது உண்மைதானா என்று உணர்வதற்குக் கண்களை அகல விழித்துப் பார்த்தேன். தாங்கள் புன்சிரிப்புடன் என்னை நோக்கி வந்தீர்கள். புகையிரதம் குழல் ஊதி விட்டது. 'ஐயோ! டிக்கெற் எடுக்கவில்லையே. அப்பாவுக்கு வருத்தம் கடுமையாம்' என்றேன். உடனே நீங்கள் என்னிடம் டிக்கெற் இருக்கிறதென்று சொல்லி, டிக்கெற்றும் தந்து, ஸ்திரிகள் வண்டியில் ஏற்றியும் அனுப்பினீர்கள்.

நீங்கள் எங்கள் ஊருக்குப் புகையிரதச் சீட்டு எடுத்து வைத்திருந்த மர்மம் எனக்குச் சிறிதேனும் விளங்கவில்லை. என்னிடம் டிக்கெற்றைக் கொடுத்த பின்னர், நீங்களும் வண்டியில் ஏறினீர்களே. பின்னர் நீங்கள் எங்கள் ஊரில் வந்து இறங்கவில்லை. டிக்கெற் இல்லாமல் நீங்கள் எப்படிப் பிரயாணஞ் செய்தீர்கள்? இவைகளைப் பற்றித் தாங்கள் எழுதும் காகிதங்களில் ஒன்றும் குறிக்க வில்லையே. இவற்றைப்பற்றி எத்தனை முறை விசாரித்தேன். நீங்கள் இவ்விஷயத்தில் மௌனம் சாதிக்கிறீர்கள்.

நீங்கள் சில சமயம் அன்று பெரும் துன்பத்திற்காளாகினீர்களோ? சீட்டின்றிப் பிர

யாணஞ் செய்து அவமானப்பட்டீர்களோ? நான் துன்பப்படுவேன் என்று மறைக்கி றீர்களோ?

என் அன்பே, தாங்கள் எனக்கு ஒன்றும் தெரிவியாமல் மறைப்பதுதானே, எனக்குப் பெருந் துன்பத்தைக் கொடுக்கின்றது. இதை விடப் பெரிய துன்பமா இருக்கிறது?

என்னுயிரே, நீங்கள் இவைகளெல்லா வற்றிற்கும் சமாதானம் சொன்னலும், இன் னொரு எண்ணம் என் இருதயத்திற் கணந் தோறும் முள் போல் தைக்கின்றது.

என்னைத் தாங்கள் காண முன்பெல்லாம் புழுவாய்த் துடிப்பீர்கள். ஆனல் அப்பொழுது சந்தர்ப்பம் அதிகமாகக் கிடையாது. இப் பொழுது எனக்குத் தகப்பனர் இல்லை. கல் லூரிப் படிப்பும் இல்லை. எந்த நேரமும் என்னைக் காணலாமே. இங்ஙனமிருந்தும் தாங்கள் இதுவரை என்னைக் காண முயற்சிக்க வில்லை. நான் தங்களிடம் புறப்பட்டு வரமுடி யுமா? அதைத் தாங்கள் விரும்புவீர்களா?

அன்று தாங்கள் புகையிரதத்தில் டிக்கெற் இன்றிப் பிரயாணஞ் செய்து துன்பப்பட நான் அதைப்பற்றி விசாரியாமற் சுகமாகப் பிரயாணஞ் செய்தேனென்று, என்மீது கோபமாக இருக் கிறீர்களா?

என் அன்பே, நான் என்ன நிகழும் என்றே யோசிக்கவில்லை. நான் வாய் திறக்க முன்னர் புகையிரதம் புறப்பட்டுவிட்டது. தாங்களும் மறைந்துவிட்டீர்கள். ஏற்கனவே தகப்பனரின் நிலைவரத்தை யறிந்து கலங்கி யிருந்தேன். தங்களின் திடீர்ச் சந்திப்பு எனது மூளையை மேலும் ஸ்தம்பிக்கச் செய்தது. இவைகளைச் சமாளித்துக் கொண்டு நான் சிந்திக்கத் தொடங்கமுன் புகையிரதம் புறப்பட்டு விட்டது. நான் பெண்பேதை பின் என்ன செய்ய முடியும்.

தங்களின் அன்பான காகிதங்கள் தான் என்னை இப்பொழுதும் உயிருடன் வைத்திருக் கின்றன. அவைதான் என் நம்பிக்கையை இன்னும் தளரவிடவில்லை. தம்பிக்கையீனம் என்ற சொல்லையே என்னுல் நினைக்க முடிய வில்லை. இவற்றின் மத்தியில் நீங்கள் என் னைப் பார்க்க இதுவரை வரவில்லையே என்ற ஆராய்ச்சி புகுந்து என் மூளையைக் குழப்பு கின்றது. மூளை என்று ஒன்று இல்லாமல் மேற்படி ஆராய்ச்சியே மூளையாகப் பரிணமித்து விடுமோ வென்று அஞ்சுகின்றேன்.

வாடிவதங்கிக்கொண்டிருக்கும் இளம் பயிர் மழை வெள்ளத்தைக் கண்டது போல விரை வில் தாங்கள் என் முன்னிலையில் தோன்று வீர்கள் என்று என் அந்தராத்மா கூறிக்கொண் டிருக்கிறது. அத்தருணம் நான் தங்களோடு கோபித்துக்கொண்டு மறுபக்கம் திரும்பி நிற்பேன். இப்படி எத்தனையோ மனக் கோட் டைகள் பகற்கனவுகள் கண்டுகொண்டிருக் கிறேன். ஆனல் ஒன்றுமட்டும் நிச்சயம் சொல்லு கிறேன். இனிமேல் தங்களைச் சந்திப்பதாகிய அப்பெரும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமே யாயின் பின் ஒருபோதும் தங்களை விட்டுப் பிரியவேமாட்டேன். இது எனது உறுதியான தீர்மானமாகும்.

இங்ஙனம்,

தங்கள்..... .....

* * *

இக் காகிதம் பந்தனக் குறிச்சியிலிருந்து அனுப்பப்பெற்ற காகிதமாகும். இதற்கு வந்த மறுமொழியும், இத்தொடரில் நடந்த கடிதப் போக்குவரத்துகளும் மிகப் பல. அக்காகிதங்கள் எல்லாவற்றிலும் பார்க்க இது, விஷயங்கள் பல பொதிந்திருந்தமையால் அப்படியே பிரதிசெய் திருக்கிறேன். மற்றக் காகிதங்களில் நான் அறிந்தனவற்றையும், நேரில் அறிந்தனவற்றை யும் வைத்துக்கொண்டு ஏனைய நிகழ்ச்சிகளை யும் முடிபையும் தெரிவிக்கிறேன். அதன் பின்னர், நான் தபாற் கந்தோரிற் காகிதங் களை இவ்விதம் திறந்து வாசிப்பது சரியா பிழையா என்று கூறுங்கள்.

பந்தனக் குறிச்சிக்குத் தபாற் கந்தோர் உத்தியோகம் எடுப்பதற்காக நான் எங்கள் பிரதேசப் பாராளுமன்ற அங்கத்தவரை வலை பதற்காகக் கொழும்புக்குப் புகைவண்டியிற் சென்ற பொழுது, ஒரு இளைஞன் அனுராத புரத்தில், தான் தனது புகையிரதச் சீட்டைத் தவற விட்டுவிட்டதாகவும், கணையாழி ஒன்றைக் காட்டி அதை வைத்துக்கொண்டு பணம் தரும் படியும் கேட்டான். சிறிது தூரத்திற்கப்பால் டிக்கெற் பரிசோதகர், டிக்கெற் பரிசோதிக்துக் கொண்டு வருவதைக் கண்டு நானும் அவ்

விளைஞனுக்கு உதவி செய்தேன். ஆனால் பெறுமதி வாய்ந்த அந்த மோதிரத்தை அவன் திருப்பிப் பெறுவதற்கு இலகுவாக நான் எனது விலாசத்தை அவனுக்குத் தெரிவிக்க முன்னர், நான் தேடிச் சென்ற பாராளுமன்ற அங்கத்தவர்—அவ்விடத்திற் சந்தித்த கொழும்பிலிருந்து வந்த—புகைவண்டியில் இருப்பதைக் கண்டு, எனது பிரயாணத்தை அவ்வளவில் முரித்து நான் திரும்ப வேண்டியதாயிற்று. பின்னர் அந்த இளைஞனை நான் சந்திக்கவே யில்லை.


அந்த இளைஞனுக்குத்தான் நான் மேலே எழுதிய காகிதம் அனுப்பப்பட்டதென்பதையும், அவனுக்குக் காதலியாற் கொடுக்கப்பட்ட மோதிரம்தான், என்னிடம் புகைவண்டியில் கொடுக்கப்பட்ட மோதிரம் என்பதையும், காதலின் ஞாபகசின்னமாகக் கொடுக்கப்பட்ட கணையாழியை யிழந்து அவன் தனது காதலியைச் சந்திக்க விரும்பாமையாற்றான், அவன் அவளைப் பார்க்க வராமற் கடத்தி வந்தான் என்பதையும், நான் காகிதங்களைப் பிரித்துவாசித்தமையால் உணர்ந்துகொண்டவையாகும். ஆனால் அவனே, தான் என்ன காரணத்திற்காக வராமல் நிற்கிறான் என்பதை ஒரு காகிதத்திலும் தெரிவிக்கவில்லை. அவளோ அவன் வரவில்லையே யென்று ஒவ்வொரு காகிதத்திலும் துடியாய்த் துடித்து எழுதிக்கொண்டிருந்தாள். நானே இருபகுதியாரின் காகிதங்களையும் வாசித்துத் துடியாய்த் துடித்தேன். முழு விஷயங்களும் என் கையிலிருந்தன. காதலர் இருவரிலும் பார்க்க எனது மனத்துடிப்புத்தான் கூட என்று கூறலாம். இந்நிலைபரத்தில் நான் இக் காதலர்களுக்கு உதவி செய்யின் நான், காகிதங்களைக் களவாகப் பிரித்து வாசிக்கும் குற்றத்தை ஒப்புக்கொண்டாக வேண்டும். அவர்கள் அதை மன்னிப்பார்களோ வென்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே, என்ன செய்வதென்றறியாது நான் துடியாய்த் துடித்தேன். நடப்பதுபோல் நடக்கட்டும் என்று என்னால் இருக்க முடியவில்லை. கணையாழி என்னிடம் இல்லாவிட்டாலும் இருந்து விடலாம். அதையும் வைத்துக் கொண்டு, இரு இளம் உள்ளங்களின் தொடர்பை முரிக்க என் மனம் ஒப்பவில்லை. நான் காகிதங்களைப் பிரித்து வாசிப்பதே பெரிய பிழை. இக் காதலர்களின் தொல்லையை நீக்க மருந்து என் கையிலிருந்தும் அதைப் பிரயோகியாமலிருப்பது அதிலும் பெரும் பிழை. ஆகவே முதலாவது பிழையைச் சரியாக்குவதானால் எனது பிழையை ஒத்துக்கொண்டு காதலர்களைச் சேர்த்துவைப்பதுதான்.

நான் கணையாழி என்னிடம் இருக்கும் விஷயத்தை அவ் விளைஞனுக்கு எழுதி, அவனை வரவழைத்து எனது குற்றங்களையும் ஒப்புக் கொண்டு, கணையாழியையும் அவனிடம் கொடுத்தேன். அத் தம்பதிகள் எனது குற்றத்தை மன்னிக்க முடியாதென்று கூறி, ஒரு வானொலிப்பெட்டியை அங்கும் இங்கும் திருப்பி அதிலிருந்து வரும் ஓசையைக் கேட்டு, அதனால் ஏற்படும் தலைவலியை அனுபவிக்கும்படி செய்துவிட்டுச் சென்றார்கள்.

மணமகன் : முன்னர் பந்தனக் குறிச்சியில் ஆசிரியராக இருந்தவரும் இப்போது கொழும்பு தம்பட்டக் கோட்டையில் ஆசிரியராக இருப்பவருமாகிய திரு. திருஞான சம்பந்தர்.

மணமகள் : பந்தனக் குறிச்சி காலஞ்சென்ற பிரபல நிலச் சொந்தக்காரரான திரு. மாணிக்கம்பிள்ளையின் மகள் செல்வி மங்கையர்க்கரசி.

வாழ்க மணமக்கள்.



தலைக்

வ. அ. இராசரத்தினம்

பாடசாலைக்கு வெளியே, உச்சிப்போதின் கொடுங் கிரணங்களைத் தடுத்து வீழ்த்தும் புனித சேவையோடு, கர்மயோக சாதகஞ் செய்துகொண்டிருந்த வேப்பமரத்தின் கீழே, பிறைச் சந்திரனை வளைந்துநிற்கும் சின்னஞ் சிறுசுகட்டு மத்தியில் நின்றுகொண்டு ஜமிலா பாடிக்கொண்டிருந்தாள்:

கன்னத்தில் முத்தமிட்டால்—உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடி
உன்னைத் தழுவிடிலோ—மனது
உன்மத்த மாகுதடி.

மகாகவி பாரதியாருக்கு இந்தப் பாட்டு ஆத்ம திருப்தியைக் கொடுத்திருக்கும். ஜமிலாவிற்கு ஆத்ம திருப்தியை மட்டுமல்ல வயிற்றுப் பிழைப்புக்கும் வழிகாட்டிற்று. ஆனால் கைப்பிடிச் சுவர் வைத்த பாடசாலைக் கட்டிடத்துள், தன்னைமறந்து, தன் சூழலை மறந்து, அசுணமாச் செவியராகிவிட்டிருந்த ஆசிரியர் ஜபாருக்கு ஆத்ம திருப்தியைக் கொடுத்ததோ என்னவோ, அதற்கு மேலாக, புழுதியையும் சருகுகளையும் சுழற்றிக் கிளப்பி அல்லாட வைக்கும் புதுக் கச்சான் காற்றைப் போல, அந்தப் பாட்டு அவர் மனதின் அடித்தளத்தையே சுழற்றி எண்ணப் புழுதியை — இறந்தகாலச் சருகுகளை—அலைய விட்டு வேடிக்கை பார்த்தது.

பாட்டின் நயத்திலும், பாடம் நடாத்தும் கடமை யுணர்ச்சியிலும் தன்னை மறந்து ஒன்றி விட்ட ஜமிலா திரும்பத் திரும்ப அந்த அடிகளையே, பாடிக்கொண்டிருந்தாள். அவளைத் தொடர்ந்து 'அரிவரி'ப்பிள்ளைகளும் பாடினார்கள். வைகாசி மாதத்துப் புதுத் தளிர் பரப்பிய வேப்பமரத்தின் அடர்த்தியான கிளை கட்கூடாக, வெள்ளிப் புரி போன்று ஒழுகும் சூரிய கிரணங்கள், ஜமிலாவின் வட்டித்து நீண்ட முகத்தில் எறிக்கையில், இயற்கையாகவே பளிச்சென்றிருக்கும் அவள் யௌவன முகத்தில், ஓர் அமைதியான சோபை மின்வெட்டிற்று. ஜமிலா அழகிதான். அதுவும் கொண்டற்காற்றிற் குருத்துக்களை ஆட்டி விகசிக்கும் தென்னஞ்சோலை நிழல் கட்டிக்காத்து வளர்த்த ஈழநாட்டுக் கீழக்கரை அழகி அவள். அலையாடும் தெளிந்த குளத்தின் உள்ளே ஆடி ஆசையும் நெடுங்கழியின் நிழலைப் போன்ற உருவம். கண்ணைப் பறிக்கும் கார்த்திகைப் பூவைப்போன்ற, கொழுந்துவிட்டெரியும் நெருப்புச் சுவாலையைப் போன்ற நிறம். அவள் அழகு யாரையும் மயக்காது. ஆனால் வசீகரிக்கும்.

ஆனால் அவள் அழகு ஆசிரியர் ஜபாரை வசீகரித்ததோ அல்லது மயக்கியதோ! ஆனால் மூன்று மாதங்களுக்குமுன் ஜமிலா முதன் முதலாக அந்தப் பாடசாலைக்கு ஆசிரியையாக வந்த போது 'நமது பெண்களும் ஆண்களோடு சரி நிகர் சமானமாக' ஆகிவிட்டார்களே என்ற பெருமிதத்தில் அவர் தன்னையே மறுந்துபோனார். அன்று தொடங்கி ஒவ்வொரு நாளும் ஜமிலா, வளர்ந்துவரும் முஸ்லீம் பெண்மையின் இலட்சியமாகப் பாடசாலைக்கு வருவாள். பாடம் படிப்பிப்பாள். பாட்டுப் பாடுவாள். அவசிய மேற்பட்டால் தலைமை ஆசிரியர் ஜபாரோடு பேசுவாள். பின்னர் எப்படி வந்தாளோ அப்படியே போய்விடுவாள். ஆனால் அவள் வரவு, புதிதாக வந்த மதயானையின் வரவைப் போல ஜபாரின் மனக்குளத்தைக் கலக்கியது.

இன்றைக்கும் அப்படித்தான். ஜமிலா பாடினாள். ஜபாரின் உள்ளம் கலங்கியது.

ஆனால் இந்தக் கலக்கத்துக்கு ஜமிலா மட்டுந்தான் காரணமா?

* * *

ஜபார் ஆசிரிய கலாசாலையிற் படிக்கையில் எத்தனையோ இலட்சியக் கனவுகளைக் கண்டிருக்கிறான். காதலைப்பற்றி மணித்தியாலக் கணக்கிற் பேசியிருக்கிறான். எத்தனையோ அறிஞர்களின் அடுக்குத் தொடர் வாக்கியங்

கள் அவனுக்கு மனனமாகக் கூட இருந்தன. அவன் கல்லூரியை விட்டு வெளியேறுகையில் யாராவது ஒரு பெண்ணை—அவள் ஏழையாகவே இருந்தாலும்—காதலித்துச் சீதனமில்லாமல் மணந்துகொண்டு வாழவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டான்.

ஆனால் அவன் தன் கனவுலகிலிருந்து வெளிப்பட்டுப் பிரத்தியட்ச உலகிலே ஆசிரியராக வாழத் தொடங்கியபோதுதான், தன் கனவுகளின் செயலற்ற தன்மையை விளங்கிக் கொண்டான். அப் பலவீனமான கனவுகளின் விளைவுகளை அவன் அனுபவிக்கவும் வேண்டியிருந்தது. ஆம்; அவன் புத்தகங்களிற் படித்திருந்த கதாநாயகர்களில் ஒருவனைப் போல எவளாவது ஒரு பெண்ணைக் காதலிக்க மட்டக்களப்பு முஸ்லீம் சமுதாயத்தின் சூழ்நிலை இடந் தரவில்லை. எட்டணை அட்டைப் படங்களிலே காதலனும் காதலியும் கடற்கரையிற் சந்திக்கலாம். ஆனால் மட்டக்களப்புத் தென் கடற்கரைகளிலே ஜபாருக்கு அப்படியொரு காதலி கிடைக்க முடியுமா?

நாட்டுக் கவிகளில் வரும் காதலைப் போல 'வாய்க்காலில் வயலோரம் களத்து மேட்டில்' எழுத்தறியாக் கவி யரசிகளைக் காதலிக்க ஜபாரின் அந்தஸ்து அவனை விடவில்லை.

முடிபாக ஜபாரினால் எவரையுமே காதலிக்க முடியவில்லை. சாந்தமான மட்டக்களப்பு வாவியிலே தண்ணென் றெறிக்கும் வெண்ணிலவும், மோனமும் தனிமையும் சேர்ந்து நீட்டிநிற்கும் மாலைவேளைகளும் அவன்மட்டில் எத்தகைய பயனுமின்றி அவமே கழிந்தன. இதனால் 'ஆதலினாற் காதல் செய்வீர் உலகத்தீரே' என்று பாடிய பாரதியைத் 'தீயிற் போடு' என்று சொல்ல ஓர் புது இயக்கமே நடத்திவிடுவானே என்ற அளவிற்கு ஜபாரின் மனம் ஏமாற்றமும் விரக்தியுமடைந்துவிட்டது.

ஆனாலும் அந்த முஸ்லீம் கிராமத்தின் ஒரே ஓர் ஆசிரியர் என்ற முறையில், கலியாணச் சந்தையில் ஜபாருக்கு நல்ல மதிப்பு இருந்தது. அவன் மட்டும் விரும்பினால் அக் கிராமத்தின் 'பொலிகாளை'யாகவே இருக்கலாம் போல இருந்தது. ஆனால் அவ்வூர் மக்கள் எல்லாரும் 'கல்யாணத்திற்குப் பிறகுதான் காதல் பிறக்கிறது' என்ற தத்துவத்தில் நம்பிக்கைகொண்டார்களோ என்னவோ, அவர்கள் ஜபாரைக் கல்யாணத்திற்குக் கேட்டார்களே தவிர எவருமே 'காதல் செய்வதற்கு' வழிசெய்து வைக்கவில்லை.

இப்படியே இரண்டு வருடங்கள் கடந்து விட்டன.

இப்போதெல்லாம் ஜபாரின் மனதிலே சொல்லிலே சிறைசெய்ய முடியாத மெல்லிசை போன்ற இன்ப நினைவுகள் மெல்ல மெல்லத் தேய்ந்துவிட்டன. ஆனால் அம்மென் நினைவுகளே வயது முற்றிய உடலின் வேட்கையாய்த் தசையின் பிடுங்கலாய்த் திரிந்து அவனை வருத்தின. இயற்கை யுணர்ச்சிக்கு வகை சொல்லவும், தன் தாய் தந்தையரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யவும் கடைசியாய் அவன் பாத்தும்மாவைக் கல்யாணஞ் செய்துகொண்டான்.

பாத்தும்மாவும், அழகிதான். ஆனால் அவள் அழகு களியாட்ட விடுதிகளில் தொங்கும் கண்ணைப் பறிக்கும் மின்சார வெளிச்சமல்ல. இருண்ட அறையின் நடுவே, சேவை வைராக்கியத்தோடு அமைதியாகச் சுடர்விடும் குத்துவிளக்கின் ஒளிதான் அவள் அழகு. ஆனாலும் ஏமாறி, விரக்தியடைந்து இருளோடிப் போயிருந்த ஜபாரின் மனத்தை அது ஒளி செய்யவில்லை.

இந்த அழகில் குடும்பம் நடந்துகொண்டுதான் இருந்தது.

கெட்டழிந்து திரிபவனுக்குக் கல்யாணஞ் செய்துவைத்தால் அவன் திருந்திவிடுவான் என்று சொல்கிறார்கள். அது எவ்வளவு தூரம் உண்மையோ எனக்குத் தெரியாது. ஆனால் ஜபாரைப் பொறுத்த அளவில் இந்தக் கல்யாணம் அவன் மனதிற் குறைந்து கிடந்த ஆசைக் கனவுகட்கு மீண்டும் இயக்கத்தைக் கொடுத்துவிட்டது. அதன் பலன்..... ....

சை! என்ன அநியாயம்! அம்பலவாணனும் அவளுடனேதான் கல்லூரியிற் படித்தான். அயற் கிராமத்திற்றான் அவனும் இப்போகிறான். அவன் எவ்வளவு குதூகலமாய்த் தன் மனைவியோடு பட்டினத்திற்குப் படம்பார்க்கப் போகின்றான்..... கடைக்குப் போகிறான்..... ஆனால் ஜபார்.....?

அவன் மனைவியோடு கூடிக்கொண்டு எங்காவது போகமுடியுமா? தன் இன்ப துன்பங்களி லெல்லாம் மனைவியும் பங்குபற்ற வேண்டும் என்ற நல்லெண்ணம் ஜபாருக்கு இருக்கலாம். தன்னைப் போலத் தன் மனைவிக் கும் எல்லா உரிமைகளும் அளிக்க அவனுக்கு மனதிருக்கலாம். ஆனால் தன் உரிமைகளைக் கூடப் பாத்தும்மா வேண்டாம் என்கிருளே அது ஏன்?

வீட்டிலே கூட அவளோடு நாலு வார்த் தைகள் இன்பமாகப் பேச முடிகிறதா? 'மனைவி படுக்கை யறையில் விபசாரி மாதிரி இருக்க வேண்டும்' என்று யாரோ ஒருவன் எழுதிவைத்திருக்கிருனே. அடடா! இந்தப் பாத்தும்மா எப்போதுதான் முக்காட்டைத் திறக்கப்போகிருளோ.....

பாத்தும்மா—ஏன் முஸ்லீம் பெண்கள் எல்லாரையுமே சித்திரவதை செய்து அந்த வாதையைப் பார்த்துப் பேய்ச் சிரிப்புச் சிரிக்க வேண்டும் போல இருந்தது ஜபாருக்கு.

தன்னைத்தானே சாந்தப்படுத்திக்கொண்டு, எப்போதாவது பாத்தும்மாவிடம் தன் ஆசைகளை வெளிப்படுத்தினால் அதற்கு மௌனமாகக் கண்ணீர் வடிப்பதே அவள் பதிலாக இருந்தது.

ஜபாரின் மனம் அமைதியற்றுத் தவித்தது!

எண்ணுத எண்ணம் எல்லாம் எண்ணி எண்ணி மனம் குழம்பிக்கொண்டபோது ஆயி ரஞ் சங்குகட் கிடையே முழங்கும் பாஞ்ச சன்யச் சங்கு போல அந்த எண்ணம் தலை தூக் கியது: 'இவளைத் தலாக் பண்ணிவிட்டால் என்ன?'

இந்த நிலையில் ஜமிலா அவன் பாடசாலைக்கு உதவியாசிரியையாக வரவே பாத்தும்மாவைத் தலாக் (விவாகரத்து) பண்ணிவிடும் எண்ணம் அவனுள் நாளுக்கு நாள் வலுவடைந்தது. ஆம்; ஜமிலா அவனோடு எத்தனை சரளமாகப் பழகு கிருள்! சிரிக்கச் சிரிக்க எப்படி யெல்லாம் பேசுகிருள். படித்த பெண்ணல்லவா? இவள் மட்டும் என் மனைவியாகிவிட்டாள்..... ஜமிலா வைக் கட்டியணைத்து அவள் அழகான கன் னத்தில் முத்தமிட வேண்டும் போல இருந்தது ஜபாருக்கு.

பாடசாலை மணியடித்தது. ஜமிலா பாட்டை முடித்தாள். அடுத்ததாக ஓய்வு நேரம்.

மனதில் ஓடி நெளிந்த எண்ணங்களை அறுத்துவிட்ட ஜபார், எதையோ தீர்மானித்தவ ராய் ஜமிலாவிடம் வந்து நின்ருர்.

ஜமிலா மரியாதைக்காக எழுந்து நின்ருள். "இருக்கலாமே" என்ருன் ஜபார்.

"காரியமில்லை".

"நீங்கள் வந்த பின்பு எவ்வளவோ ஆறுத லாக இருக்கிறது".

"தங்கள் வேலையின் பாரத்தைப் பகிர்ந்து கொண்டதாலிருக்கலாம்".

"நன்ருகப் பேசுகிறீர்களே. தங்களைப் போன்ற ஒருவரைத்தான் நானும் காத்துக் கொண்டிருந்தேன்".

"எதற்கு?"

"ஒன்றிற்குமில்லை. பெண்களும் நன்ருகப் பேசவேண்டும் என்பதற்காகத்தான் சொல் கிறேன்".

"அப்படியா? துணிந்து ஆசிரியையாகி விட்டேன்; பேசாமலிருப்பது எப்படி? அப்படி இருக்கவும் நீங்கள் விடமாட்டீர்களே".

"பேசியாவது இன்பமாயிருக்கலாமல்லவா?"

"ஐயோ! அப்போது தாங்கள் இப்போது துன்பமா யிருக்கிறீர்களாக்கும்?"

"துன்பப்படாமலிருக்கமுடியுமா? முஸ் லீம் பெண்கள் எல்லாருமே தங்களைப் போல இருந்தால்.....".

"ஏன்! அவர்கள் எப்படியிருக்கிறர்கள்?" என்று இடைமறித்துக் கேட்டாள் ஜமிலா. ஜபாரின் சுற்றிவளைத்த பேச்சுக்களின் அர்த்தத்தை ஜமிலா வெகு நாட்களுக்கு முன் னமே விளங்கிக்கொண்டிருந்தாள். இப் போதெல்லாம் அவன் உணர்ச்சிகளைக் கிண்டி விட்டு வேடிக்கை பார்ப்பது அவளுக்கு ஒரு ஓய்வுநேர உபயோகம். ஜமிலா இன்றைக்கும் அப்படித்தான் பேசினுள்.

"எப்படியாயினும் அவர்கள் இருக்கட்டும். ஆனல் அவர்கள் எல்லாரும் தங்களைப் போல இருந்தால், என்னைப் போன்ற பலர் 'தலாக்' பண்ணவேண்டிய அவசியமே இராது" என் ருன் ஜபார் நயமாக.

"ஓ! அப்போது 'தலாக்' பண்ண முடிவு செய்துவிட்டீர்களா?" என்ருள் ஜமிலா விஷமத்தோடு

"தாங்கள் மட்டும் இஷ்டப்பட்டால் இன்றைக்கென்ருலும் சரிதான். ஏன் நம் மதமும் அதை அனுமதிக்கின்றதுதானே"

ஜமிலா அடிபட்ட பெண் புலியைப் போல ஜபாரை முறைத்துப் பார்த்தாள். அவள் உதடுகள் துடித்தன. புருவங்கள் விறைத்து நிமிர்ந்தன; பொங்கியெழுந்தன. ஆத்திரத்தையெல்லாம் சேர்த்துத் தன் முன்னுல், நியாயவாதியின் தீர்ப்பை எதிர்பார்த்து நிற்கும் குற்றவாளியைப் போல நிற்கும் ஜபாரைப் பார்த்து 'நீரும் ஒரு ஆசிரியரா? நம் சமுதாயத்தையே சீர்திருத்தும் புனிதமான ஆசிரியத் தொழிலைச் செய்யும் நீரா இப்படிப் பேசுகிறீர். பல தார மணத்தையும் விவாகரத்தையும் எத்தனையோ காரணங்களுக்காக மதம் அனுமதித்திருக்கலாம். ஆனுல் உங்கள் சௌகரியத்திற்காகப் பழைய சட்டையைக் கழற்றி எறிவதுபோல, நினைத்தவுடனேயே ஒரு பெண்ணைத் தள்ளிவைக்க உம் மனச்சாட்சி இடந்தருகிறதா? சரளமாகப் பேசினுல் உடனே நப்பாசை கொள்ளும் உம்மைப் போன்றவர்கள் நம் சமூகத்தில் இருக்கும்வரை முஸ்லீம் பெண்கள் வாய்மூடி ஊமைகளாகவே இருந்துவிடட்டும். இனி மேற் பாடசாலே விஷயத்தைத் தவிர வேறு எதையுமே என்னிடம் பேசவேண்டாம். போம், போம்" என்று பொரிந்து தள்ளினுள்.

மழைபெய்து ஓய்ந்தது போல இருந்தது வகுப்பறை.

சூடுகண்ட பூனையாய் நழுவினுர் ஜபார்.

இப்போது ஜபார் பாத்தும்மாவைத் தலாக் பண்ணிவிட்டாரோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனுல் அதன்பிறகு அவர் ஜமிலா விடம் நெருங்கவில்லே என்பது மட்டும் எனக்கு நன்முகத் தெரியும்.

சிறுகதையின் இலக்கணம்

●○●

வாழ்க்கை யென்ருல் அதிலே எத்தனே சிக்கல்கள்! ஒருவனுடைய வாழ்நாளிலே அவனுடைய மனத்திலே எத்தனே எத்தனே உணர்ச்சிப் போராட்டங்கள் தோன்றுகின்றன! முடிவில்லாத சிக்கல்கள்; ஓயாத போராட்டங்கள்—இவைதாம் வாழ்க்கைப் பிரயாணத்தின் அடிப்படையான இரகசியங்கள்.

வாழ்க்கையும் மனமும் அவற்ருல் வளம்பெறுகின்றன; நலிவடைகின்றன; ஓங்குகின்றன; தாழ்வடைகின்றன; சிறுமை அளிக்கின்றன. வாழ்க்கைக்குச் சுவை அளிப்பவையும் அவையே.

சிக்கல்களேயும் போராட்டங்களேயும் ஒருவன் எப்படிச் சமாளிக்கிருனே அதைப் பொறுத்து அவனுக்குப் பெருமையும் சிறுமையும், உயர்வும் தாழ்வும் ஏற்படுகின்றன.

அவை ஒவ்வொன்றையும் அடிப்படையாகக் கொண்டு அழகான கற்பனேச் சித்திரங்கள், கவிதைகள் உண்டாக்கலாம். வாழ்க்கைச் சம்பவங்களேயும், உள்ளக் குமுறல்களேயும் வண்ணமாகக் கொண்டு கிராமத்தையோ பட்டணத்தையோ திரையாக நிறுத்தி, கற்பனேத் தூரிகையால் நவநவமான ஓவியங்கள் தீட்டலாம். கலேகளுக்கும், இலக்கியத்திற்கும் அவைதானே ஊற்று?

இலக்கியத்திலே பலவகையான துறைகளுண்டு; சிறுகதை அவற்றிலே ஒன்று. ஒவ்வொரு துறைக்கும் ஒரு தனி இலக்கணம் உண்டு; தனிச் சிறப்பும் உண்டு. சிறு கதைக்கும் அவ்வாறுதான்.

சிறுகதை வாழ்க்கையின் முழுப்படமல்ல. அது வாழ்க்கையிலே ஒரு சிறிய, மிகச் சிறிய காட்சி. பலவிதமான வண்ணங்களேயுடைய மலர்களேயும் இலேகளேயுங்கொண்டு தொடுத்த மாலேயாக வாழ்க்கையைக் கற்பனே செய்தால் அந்த மாலேயிலே ஒரு தனி மலருக்குச் சிறுகதையை ஒப்பிடலாம். அதற்குத் தனி உருவம் உண்டு; நிறமுண்டு; மணமுண்டு. வாழ்க்கை என்னும் சுவைமிக்க விரிந்த இராக ஆலாபனேயிலே குறிப்பிட்ட ஓர் அற்புதமான சஞ்சாரம் சிறுகதை.

—பெ. துரன். எம். ஏ.

உருவகக் கதை :

மின்னற் கீற்று

— சு. வே. —

ஓர் இரவு. மாய இருள் உலகை மூடி, தானே உலகமாய்க் காட்சியளித்தது, அறியாமை யென்ற அந்தகாரத்தைப் போலே.

வானத்தில் நட்சத்திர வெண்மலர்கள் மலர்ந் திருக்க வேண்டுமே; அவைகளும் மலரவில்லை. தாரகைச் சிறு சுடர்கள் கண் சிமிட்டி, அந்தக் காரிருளின்வலியைக் குறைத்திருக்கவேண்டுமே; அவைகளும் அணைந்துவிட்டன.

சூல்கொண்ட கார்மேகங்கள் வானவெளி யை அடைத்துக்கொண்டன. அவை இருளுக்கு முழுக் கருமை தீட்டி, கண்ணொளிதானும் நுழையாக் கனத்த இருளாக்கிவிட்டன.

இப்பொழுது, நம்பிக்கை என்ற சிறு ஒளி தானும் காணுத மனித மனமாகிவிட்டது உலகம்.

வானத்தையும், பூமியையும் ஒன்றுக்கி, எங் கும் வியாபகமாய், ஏகமாய், பயங்கரமாய்க் காட்சி தந்தது இருள்; காரிருள்; கனத்த இருள்.

அந்தக் கனத்த இருளைக் கிழித்துக் கொண்டு, மேலே வானிலே ஒரு மின்னற் கீற்று சிரித்தது; ஒரு கணம் உலகமே ஒளி வெள்ளத்தில் மிதந்தது. இந்தக் கோலக் காட்சியை அந்த மின்னல் கண்டது. மின்னலின் மனதுள் ஒரு துடிப்புப் பிறந்தது. அது அகம்பாவமாய் முளைத்து, 'நான்'ய் வளர்ந்து, பொறுமையாய் மலர்ந்தது.

மீண்டும் மின்னல் மின்னியது; தொடர்ந்து இடி இடித்தது.

மின்னல் சிரித்துக்கொண்டு, பெருங் குரல் எடுத்தது: "சூரியனும் சூரியன்! அவன் சக்தி மிகுந்தவனும். அவன் ஒளி உலகத்துக்கு மலர்ச்சி அளிக்கிறதாம்; உயிர்ப்பு ஊட்டுகிறதாம்; இயக் கம் கொடுக்கிறதாம். என்ன அறியாமை! இதோ நான் இந்த உலகத்துக்கு உயிர்ப்பும், இயக்கமும் கொடுக்கிறேன்."

மின்னலுக்கும் இருளுக்குமிடையிற் பெரும் போர் மூண்டது. மின்னல் தன்னொளியால் உலக இருளைத் துடைக்க முயன்றுகொண்டிருந்தது. ஆனால், பாவம்! மின்னல் தன் ஆயுளின் அளவை உணரவில்லை.

மின்னல் மின்னியது; ஒருகணம் இருள் விலகியது; அடுத்த கணம் இருள் முன்னிலும் பார்க்க மகா பயங்கரமாய் உலகை அணைத்துக் கொண்டது. இந்தப் பலப் பரீட்சை தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது.

மின்னல் சலித்துவிடவில்லை; முயன்றது; 'முயற்சி திருவினை ஆக்கும்' என்று உணர்ந் தது; விடியுமட்டும் முயன்றுகொண்டே யிருந்தது.

பொழுது புலர்ந்தது.


கீழ் வான மங்கை, மஞ்சள் குளித்து, செஞ் சாந்து பூசி, மலர்ச்சிபொங்கச் சூரிய தேவனை வரவேற்றாள்.

சூரியன் மெல்ல மெல்ல மேலே வந்தான். அவன் ஒளி உலகிற் பரந்தது; இருள் விலகியது; உலகம் மலர்ந்தது; உயிர்த்தது; இயங்கியது.

காலை ஒளியிலே ஒப்பற்ற கலாசிருஷ்டியாக் கிடந்த உலகம் மின்னலின் கண்ணை உறுத்தியது. "ஆ! என்ன அழகு; என்னகோலக் காட்சி" என்று வியந்தது; முன்னே, இருளைப் பிளந்து தான் தோற்றுவித்த அந்தக் காட்சியையும், உயி ரோவியமான உலகக் காட்சியையும் தன்னுள் தானே ஒப்பிட்டுப் பார்த்து வியந்தது. என் றாலும் அதன் செருக்கு அழியவில்லை; விழுந்து, எழுந்துநின்று மார்தட்டும் சில அரசியல்வாதி களைப் போல. அதனாலே மின்னலும் மின்னிக் கொண்டே இருந்தது.

ஆதவன் முழுச் சோபையுடன் பொலிந் தான்; அந்தப் பொலிவிலே பிறந்த ஒளிக்குமுன் நிற்கமுடியவில்லை, அந்த மின்னலால். மின்னல் தலைவணங்கியது. அப்போதுதான் மின்னலின் அகங்காரம் அழிந்தது; செருக்கு ஒழிந்தது; 'நான்' மறைந்து தெளிவு பிறந்தது. மின்னல் துவண்டுபோய்ச் சூரிய தேவனின் காலடியில் விழுந்தது. பக்தனின் மனோநிலையில் அழுது புலம்பியது: "சூரிய தேவே! போற்றி; போற்றி. நீ மெய்யறிவு; தெளிவின் நிலைக்களன். நான் புல்லறிவு; அகங்கார சின்னம். உன் சக்தி அளப் பரிது; அது இருளைக் கெடுக்கும். நீ என் மன இருளையும் கெடுத்துத் தெளிவூட்டினாய். நீ வாழ்க! வாழ்க!" என்றது.

சூரிய ஒளி, மின்னொளியைத் தன்னொளி யாக்கிக் கொண்டது; மின்னல் மறைந்தது. சூரி யன் மெய்ஞ்ஞானியின் அடக்கத்தோடு, சாந்தம் பொலிய மேலே மேலே வந்துகொண்டிருந்தான்.




ESHVARA SHRINE- SIDE ELEVATION. SCALE-1INCH=3FEET.
SOUTH VIEW. தெற்கின்விமானம் பக்கம்

M. SELLAKKANNU STHAPATI,
M.VAIDHYANATHA STHAPATI,
CONSULTING & PRACTISING ARCHITECTS,
KARAIKUDI. S.INDIA.

ஈழத்து மன்னூர்ப் பகுதியைச் சேர்ந்த மாதோட்ட நன்னகரிற் பழம் பெருமையுடன் விளங்கும் **திருக்கேதீச்சர ஆலயம்** இப் போது 'திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை' யாராற் புதுக்கி அமைக்கப்பெறுகின்றது. இது சம்பந்தராலும் சுந்தரராலும் பாடல் பெற்ற சிவஸ்தலமாகும். இவ் வாலயத்தைப் புனருத்தாரணஞ் செய்யவேண்டுமென்ற எண்ணத்தை 19ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியில் வாழ்ந்த ஆறுமுகநாவலர் அவர்கள் முதன்முதலில் வெளியிட்டிருந்தார்கள். திருக்கேதீச்சரநாதன் ஆலய அமைப் பின் தோற்றங்களை இம் மாதிரிப் படங்கள் காட்டுகின்றன.

PLATE NO 6



THREE STOREYED RAJA GOPURA
FRONT ELEVATION. ராஜகோபுரம் முகப்பு

SCALE-1INCH=3FEET

THREE STOREYED RAJA GOPURA
SIDE ELEVATION.

M SELLAKKANNU STHAPATI,
M.VAIDHYANATHA STHAPATI,
CONSULTING & PRACTISING ARCHITECTS
KARAIKUDI. S.INDIA.

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணி

மணி வாசகங்கள்

'சம்பந்தன்' எழுதியவை

[வித்தியா பகுதியினரின் அங்கீகாரம் பெற்றவை]

முதற் புத்தகம் தொடக்கம் ஏழாம் புத்தகம் வரை வெளியாகியுள்ளது

எங்கும் அறிஞர்களால் ஆதரிக்கப்படும் வாசகங்கள்

குழந்தை உள்ளங்களில் கற்பனைத் திறனைச் சிறப்பிக்கும் பாடங்கள்

பொது விஞ்ஞானம்

ஆறும், ஏழாம், எட்டாம் வகுப்புகளுக்கு

வி. சுப்பிரமணியம் பி. எஸ்ஸி. எழுதியவை

விஞ்ஞானத்தை வகுப்புகளுக்கேற்றவகையிற் கதைபோற் சொல்லுகின்றார் ஆசிரியர்.
ஆசிரியருக்கான குறிப்புக்கள், அனுபந்தங்கள்,
விளைப்பத்திரங்கள், புத்தகங்களை அணிசெய்கின்றன.

※ ★ ※

சண்முகநாதன் புத்தகசாலை

257, காங்கேசன்துறை வீதி ;; வண்ணார்பண்ணை :: யாழ்ப்பாணம்

T' PHONE : 247 T' GRAMS : TRADING

The Malayan Trading Company

சிங்கப்பூர் கம்பெனி, யாழ்ப்பாணம்

128, 130, K. K. S. ROAD :: JAFFNA

※

கட்டடங்களுக்கு வேண்டிய சகல விதமான இரும்புப் பொருள்களுக்கும்
எங்களிடம் விசாரியுங்கள்.

கேடர் வகைகள், எல்லா 'சைஸ்' களிலும் உருண்டைக் கம்பிகள்,
கொங்கிறீற் பலகை (எல்லா வகைகளிலும்), சீமெந்து (காங்கேசன்),
தீந்தை, வாணிஷ் வகைகள், டிஸ்ரெம்பர் (எல்லா நிறங்களிலும்),
கொழுக்கி வகைகள், பித்தளைப் பூட்டுகள் முதலியன

சில்லறையாகவும் தொகையாகவும் நிதானமான
விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

இலங்கையிலிருந்து, இந்தியாமூலமும் நேராகவும் பினாங், சிங்கப்பூர் ஆகிய
இடங்களுக்குப் பிரயாண வசதிகள் ஒழுங்கு செய்யும் பொறுப்புகள் ஏற்கப்படும்.

இது திருட்டல்ல

எஸ். பொன்னுத்துரை, பீ. ஏ.

இரவு ஒன்பது மணிக்குப் பிள்ளையார் கோயில் மணியும் அடித்து விட்டது.

இலேசாகத் தென்றல் வீசிக்கொண்டிருந்தது. அழகுக்கு அழகு சேர்த்ததுபோல ஆகாயத்தில் நிறை கிலா பவனிவந்துகொண்டிருந்தது.

கதாசிரியர் கந்தசுவாமிமட்டும் கவிஞனாகப் பிறந்திருந்தால், இந்த மோகனச் சூழ்நிலையில் எத்தனையோ தேன் கவிதைகளைப் 'பொழிந்து' தள்ளியிருப்பார். கந்தசுவாமி அவ்வளவு பாக்கியம் செய்தவரல்லர். அவர் ஒரு சிறுகதை எழுத்தாளர். இப்பொழுது சிறுகதையொன்றைச் சிருட்டிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார்.

அன்றிரவு எப்படியாவது ஒரு சிறுகதை எழுதி முடித்துவிட வேண்டுமென்ற வெறி அவருக்கு. வெறி என்று சொல்வது அவ்வளவு பொருத்தமில்லை; வாழ்க்கைப் போராட்டம் என்று சொல்வதுதான் சரி. நாளைய தபாலிலேயே கதையை அனுப்பாவிட்டாற் கிடைத்து வரும் கால்வயிற்றுக் கஞ்சிகூடக் 'கோவிந்தா' வாகிவிடும். அவர் ஒரு காலத்திற் கதை எழுதுவது கலை யென்றும்; கலை கலைக்காகத் தான் வாழவேண்டுமென்றும் பெருமை பேசியிருக்கின்றார். ஆனால் இன்று கதை எழுதுவது என்பது வயிற்றுப் பிழைப்பென்பது அவருடைய அனுபவம்.

சிந்தனையில் ஆழ்ந்திருந்த அவர் மேசை மீது சாய்ந்துவிட்டார். அது பயங்கர சப்தத்துடன், 'முறிந்து விழுந்துவிடுவேன்' என்று பயமுறுத்திய வண்ணம், சன்னி வேகத்தில் ஆடியது. அந்த மேசையும் ஒரு மாமாங்க காலமாக உயிர் வாழ்ந்து விட்டது. வீட்டிலிருந்த பழைய 'பக்கூஸ்' பெட்டி யொன்றுதான், கந்தசுவாமியின் கற்பனைத் திறனால், இந்த மேசையாகத் 'திரு அவதாரம்' எடுத்திருந்தது.

மேசையின் ஓலத்திற் கந்தசுவாமியின் மௌனம் கலைந்தது. தாறுமாறுகக் கிடந்த தாள்களை எடுத்து அடுக்கி வைத்தார். பூண் பிடித்த ஒட்டைப் பேனுவை எடுத்துப் பிள்ளையார் சுழி போட்டார்.

பிள்ளையார்சுழி போட்டதுமே, கதாசிரியருக்குக் கற்பனை காட்டாற்று வெள்ளத்தைப் போன்று பெருக்கெடுத்து வருமென்றும், உடனேயே பக்கம் பக்கமாகக் கிறுக்கித்தள்ள ஆரம்பித்துவிடுவார் என்றும் நினைத்துவிடாதீர்கள். அவர் இனித்தான் கதைக்குக் கருத்தேடப் போகின்றார். கதாசிரியர்கள் அனைவரும் 'ஞான நிலையில்'தான் கதைகள் எழுதுகின்றார்கள் என்பதெல்லாம் சுத்த அபத்தம். இப்படியான இனிய நினைவுடன், கதாசிரியர்களாற் கந்தர்வலோகத்தில் வாழமுடியும். ஆனால் வயிற்றை நிரப்பவேண்டுமென்றால் நிசமான உலகிற்கு வந்துதான் ஆகவேண்டும். இதற்காகக் கதாசிரியர்களைக் குறை சொல்லாதீர்கள்.

கந்தசுவாமி கதையைப் பிள்ளையார் சுழியுடனே விட்டு வைப்பதினால் அவரை ஒரு 'ஏனோ தானோ' எழுத்தாளர் என்று நினைத்து விடாதீர்கள். அவர் ஒன்றும் கன்ன பின்ன என்று திருடி, மற்றவர்களுடைய கதைகளுக்கு மெருகிட்டு முன்னுக்கு வரவில்லை. அவருடைய படைப்புகளெல்லாம் சாகாவரம் பெற்றவை.

அவரைப்போன்று சாப்பாட்டுக்குத் 'தரி கணதோம்' போடும் சில எழுத்தாளர். 'அபார சிருஷ்டிகள்' என்று வாயாரப் புகழ்ந்திருக்கலாம். ஆனால் அவருக்கு நாட்டிலே நல்ல பேரும் புகழும் இருக்கவில்லை. காரணம் அவருக்குச் சுட்டுப்போட்டாலும் 'காக்கா பிடி'க்கவோ 'சுயபுராணம் வாசி'க்கவோ தெரியாது. இதனால் அவர் இலைமறை காயாக, பிரசுரகர்த்தாக்கள் என்ற 'பெருச்சாளி'கள் கண்களிற் படாமலிருந்தார்.

அப்படி அவர் கவனிப்பாரற்று இருந்த காலத்திற் கூரையைப் பிய்த்துத் தெய்வம் வரம் அருளியது. 'பரணி' வாரப் பத்திரிகை ஒரு சிறுகதைப் போட்டி நடத்தியது. அதன் முதற் பரிசைக் கந்தசுவாமி தட்டிவிட்டார். அதிலிருந்து அவர் வாழ்க்கையில் ஒரு திருப்பம். அவர் பொந்துக்கிளியானர். வானவெளியிற் பறக்க இயலாது. பத்திரிகையின் கண்ணோட்டம் என்ற கூண்டுக்குள்ளேயே சிறகடித்தார். வாரம் ஒரு கதை வீதம் உற்பத்தி செய்யும் அந்த இயந்திரத்துக்கு மாதம் எண்பது ரூபாய் சம்பளம்.

கதாசிரியர் கந்தசுவாமி கற்பனை உலகிற் சஞ்சரிக்க முயன்றார்; ஆனால் அவருக்குக் கற்பனையே ஓடவில்லை. கற்பனை யென்பது நமது சட்டைப் பையிலா இருக்கின்றது? கற்பனை குப்பை மேட்டில் வளரும் கிள்ளுக் கீரையல்ல, நினைத்தவுடன் கதை யென்ற கறி சமைக்க.

அவர் பேனாவை மேசையில் வைத்துவிட்டு, வெற்றிலைத் தட்டை எடுத்தார். வாய் நிறைய வெற்றிலையைக் குதப்பி, எச்சிலைச் சாளரத்தின் வழியாகத் துப்பினர். பரவலாக விழுந்த வெற்றிலை எச்சில் மண்ணெண்ணெய் விளக்கை அவித்துவிட்டது. மறுபடியும் விளக்கேற்றத் தீப்பெட்டியைத் தேடி யலைந்தார். 'எங்கே இந்தச் சனியன் நெருப்புப் பெட்டி' என்று முணுமுணுத்தபடி, நிலவின் மங்கல் ஒளியில் தேடினர்.

மேசையிலே திறந்து கிடந்த மைப் போத்தலைக் கவிழ்த்து ஒரு கோர நாடகம் நடத்திய பின்னர்தான், நெருப்புப்பெட்டியை மாடக்குழியில் வைத்தது அவர் ஞாபகத்திற்கு வந்தது. விளக்கை ஏற்றினர்.

வெற்றிலை எச்சிலை மிடறு முறித்து விழுங்கினர். செல்லம்மா ஆஸ்பத்திரிக்குப் போனதும் போதும், நான் படும் பாடும் போதும்' என்று அலுத்துக்கொண்டார்.

கதாசிரியர் கந்தசுவாமியின் மனைவிதான் செல்லம்மா. அவரைத் தன் கழுத்தைத் தொட்டுத் தாலிகட்ட விட்ட குற்றத்திற்காக, ஆறு ஆண்டுகளில் மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்துவிட்டாள். நல்ல வேளையோ என்னவோ ஒரு குழந்தை மண்ணில் அவதரித்த மூன்றும் மாதமே 'பரமபதம்' சேர்ந்துவிட்டது. இப்பொழுது அவள் கந்தசுவாமியைப் பரிதவிக்கவிட்டு நாலாவது பிரசவத்திற்காக அரசினர் கட்டியிருக்கும் 'பிறந்தக'மான பிரசவ விடுதிக்குச் சென்றுவிட்டாள்.

செல்லம்மாவுக்கு முன்னர், கந்தசுவாமியும் இரண்டு மாதங்கள் அரசினர் வைத்திய சாலையை முகாமிட்டிருந்தார். வாய்க்குள் நுழையாத ஒரு முழு நீள லத்தீன் பெயரைக்கொண்டது அந்த வியாதி. அது அவரை இரண்டு காலம் படுத்த படுக்கையாக்கிவிட்டது.

இந்த மூன்று மாத காலமும் தன்னுடைய ஓட்டைப் பேனாவுக்கு ஓய்வு கொடுத்திருந்தார். ஆனால் அது இனித் தூங்கமுடியாது. அப்படி அவரைச் செய்தது 'பரணி'யின் கடிதம்.

'பரணி' ஆசிரியர் அனுப்பிய கடிதம் ஞாபகத்திற்கு வரவே, அவருடைய நினைவுகள் அதில் தேங்கிநின்றன. மறுபடியும் அந்தக் கடிதத்தை வாசிக்க வேண்டுமென்ற தவிப்பு அவருக்கு ஏற்பட்டது! அந்தக் கடிதத்தை வாசிக்கலானர்.

அன்புள்ள கந்தசுவாமி அவர்களுக்கு,

நீங்கள் சுகமடைந்த செய்தி கேட்டு மட்டற்ற மகிழ்ச்சி. சுகமடைந்த பின்னரும் போதுமான ஓய்வும் எடுத்துக்கொண்டீர்கள். இனியாவது நமது பத்திரிகைக்கு ஒழுங்காக எழுதுங்கள். முன்னர்தான் சுகவீனமாக இருந்தீர்கள். இப்பொழுது என்ன வந்துவிட்டது?

நமது கஷ்டமும் உங்களுக்குத் தெரியுமென்று நம்புகின்றோம். எல்லாப் பத்திரிகைகளுமே பிர்லாக்களால் நடத்தப்பட்டால், எழுதாதவர்களுக்கும் சம்பளம் கொடுத்துப் பத்திரிகை நடத்த முடியும். அது நம்மால் முடியாது என்பதை வருத்தத்துடன் ஒப்புக் கொள்ளுகின்றோம்.

நாம் வாராவாரம் எப்படியும் பத்திரிகையின் பக்கங்களை நிரப்ப வேண்டும். உங்களைப் போன்ற நமது நிரந்தர எழுத்தாளர்கள் எழுதினால்தான் நம்மால் பக்கங்களை நிரப்ப முடியும். இந்த உண்மையை நீங்கள் உணருவதாக இல்லை.

இந்த விஷயத்தைக் குறிப்பிடுவதற்கு நம்மை மன்னிக்கவும். 'பரணி'யில் எழுதுவ

தற்கு எத்தனையோ எழுத்தாளர் போட்டி போடுகின்றனர். சினிமாவுக்கு வசனமெழுதிப் புகழ்பெற்ற கலைஞர் உதயணன் கூட நமது பத்திரிகைக்கு எழுத விரும்புகின்றார்.....

ஆனால் உங்களை ஊக்குவிப்பதில் நாம் மகிழ்ச்சியடைவோம். நாளைய தபாலிலேயே, இந்த வார இதழில் வெளியிடத்தக்கதாக ஒரு சிறுகதை அனுப்பிவைக்கவும். இல்லாவிட்டால் நமது ஒப்பந்தத்தை நீக்கிவிட வேண்டி நேரிடும். இப்படிக் கண்டிப்பாக எழுதுவதற்கு வருந்துகின்றோம்.

வணக்கம்.

என்றும், அன்புள்ள,

கருணாகரன்.

'பரணி' ஆசிரியர்.

கடிதத்தை ஒரு உஷ்ணமான பெருமூச்சுடன் வாசித்து முடித்தார். அவர் உள்ளம் வெதும்பியது.

'பத்திராதிபரென்றால் ஆகாயத்திலிருந்து குதித்தவன் என்று நினைத்துக் கொள்வதா? அவர்களும்எழுத்தாளர்களெனமண்ணின்புழுதியிலே பல காலம் புரண்டுதானே முன்னேறினார்கள்? சிறுகதை யென்றால் அது, சிறுகதை யென்றால் இது என்றெலாம் சொல்லித் திரிகின்றார்களே! சிறுகதை யென்பது மீன்பிடித்தொழிலல்ல. பேனா என்ற தூண்டில் முள்ளில், 'பேப்பர்' என்ற இரையைக் குத்தி, கற்பனை என்ற கடலிலே வீசிவிட்டு, மிதப்புத் தாழுகின்றதா என்று பார்த்துக்கொண்டிருக்க ..... அதுவும் ஒரு வாளி கிணற்றுத் தண்ணீரில் தூண்டில் வீசினால் மீன் அகப்படுமா?

'போனாற் போகிறது என்று கேட்கின்றார்; இப்பொழுது எனக்கு என்னவாம்! எனக்கு ஒரு வியாதியுமில்லைத்தான். ஆனால் என் மனைவி யல்லவா ஆஸ்பத்திரியிற் படுத்துக் கிடக்கின்றாள். நாம் என்ன மேற்கு நாடுகளிலா இருக்கின்றோம்? பிள்ளைகளைப் பார்க்க ஒரு தாதியை நியமித்துவிட்டு, சுழலும் மின்சார விசிறிக்குக் கீழிருந்து கதைகளைக் கிறுக்கித் தள்ள..... கேவலம், தமிழ் எழுத்தாளர்! கற்பனைத் திறனையும், பட்ட கஷ்டங்களையும் விட்டுத் தள்ளுங்கள். உபயோகப்படுத்தும் காகிதம் முத்திரை இவற்றின் பெறுமானத்திற் காவது சன்மானம் வேண்டாம்? விளம்பரங்களைப் போன்று கதைகளைப் பிரசுரிப்பதற்குத் தமிழ்ப் பத்திரிகைகள் பணம் வசூலிக்க ஆரம்பித்து விடுமே என்னவோ.....

'கலைஞன் உதயணன் என்றால் கொம்பு முளைத்தவனா? வெறும் கற்றுக்குட்டி. 'கலைஞர்' என்ற பட்டத்தைத் தனக்குத் தானே சூட்டிக் கொண்டு கையிலே 'பைல்' எடுத்துச் செல்பவனெல்லாம் எழுத்தாளனா? ஏதோ அவன் அதிஷ்டம். இரண்டு பெரிய மனிதர்களின் சிபார்சைச் சரி செய்துகொண்டு, சினிமாவில் நுழைந்தான். பார்த்த ஆங்கிலப் படங்களிலும் ஹிந்திப் படங்களிலுமுள்ள காட்சிகளை வெட்டித் தமிழ் மயமாக்கி ஒட்டினான். திருடக்கூட ஒழுங்காக வராது. நட்சத்திரக் குவியல்; பாட்டுகளும் நன்றாக அமைந்துவிட்டன. படம் வெளுத்து வாங்கியது; மேலும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அவருடைய சரக்குடன் இரண்டு மூன்று படங்கள் வெளிவந்தன, எல்லாம் 'மண்' கவ்வின; பட உலகம் அவரை விரட்டியடித்தது. இவரைப் பெரிய எழுத்தாளன் என்று கொண்டாடப் 'பரணி' ஆசிரியருக்கு வெட்கமாக இல்லை. புலமைக் காய்ச்சலல்ல. நான் எந்தப் பந்தயமும் கட்டத் தயாராக இருக்கின்றேன். நான் சிருஷ்டித்த 'கல்லறைக் காவிய'த்தைப் போன்ற ஒரு சிறுகதை எழுதட்டும்; நான் எழுத்துலகிற்கே முழுக்குப் போட்டுவிட்டு எந்தக் குளத்திலோ குட்டையிலோ விழுந்து தொலைக்கின்றேன்...'

கந்தசுவாமியின் உள்ளத்தில் இவ்வாறு பல சிந்தனைகள் குமிழ்விட்டன. எழுத்தாளர் சிந்திக்கும் பிராணிகள்; வாய்பேசாப் பூச்சிகள். அவருக்கு வந்த ரோஷத்தில், 'அப்படியென்றால் கலைஞர் உதயணனைக் கொண்டே எழுதுவியுங்கள்' என்று எழுதியிருப்பார். அதன் பலாபலன் அவருக்குத் தெரியும். கிடைத்துவரும் எண்பது ரூபாயும் நின்றுவிடும். இந்தக் காலத்தில் உத்தியோகங்கள் தெருவிலா போட்டுக்கிடக்கின்றன? எழுத்தாளனுக்குக் கணக்கப்பிள்ளை வேலைதானும் ஒத்துவருமா? ஆனால் பத்திராதிபரைப் பொறுத்த வரையில் யார் எழுதினாலென்ன பக்கங்கள் நிரப்பப்பட வேண்டும். வாசகநேயர் ஏதோ வாசித்தோம் என்று திருப்திப்படும் 'தஞ்சாவூர் பொம்மைகள்'!

கதாசிரியரின் சிந்தனைகளெல்லாம் சிதறி ஓடின. அவற்றை யெல்லாம் வளைத்துப் பிடித்து,

மறுபடியும் சிறுகதை யொன்று உருவாக்கும் பணியிலே படியச் செய்தார்.

ஆம்; வந்துவிட்டது.

கதை அவர் மனதிலே உருவாகியது .... கிராம வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டது. பொன்னி, ஆற்றங்கரைக்குக் கஞ்சிப் பானையுடன் வருகின்றாள். வழியிலே அவள் வருகையை எதிர்பார்த்து நிற்கின்றான் வேலன். அவன் மாமன் மகன் என்றாலும். இரு குடும் பங்களுக்கிடையேயும் வைரப் பகை.....

'ஆகா, அற்புதம்' என்று வாய்விட்டே சொல்லிவிட்டார் கந்தசுவாமி. எத்தனையோ பேர், ஸேக்ஷ்பியர் காலந்தொட்டே கைவைத்த கருவேதான். ஆனால் புதிய பாணியிலே கதை சொல்லிவிடலாமென்ற நம்பிக்கை. கதாசிரியர் கந்தசுவாமி கையிலே பேனாவைத் தூக்கினார். பேனா எழுத ஆரம்பித்தது:

அருவியிற் புதுவெள்ளம் புரண்டு ஓடிக் கொண்டிருந்தது. அந்தப் புதுவெள்ளத்தின் வேகத்திலேயே, உள்ளத்தில் ஆசைகள் என்ற அலைகள் கொந்தளிக்க, தலையிற் கஞ்சிக் கலயத்தை வைத்துக்கொண்டு நடந்தாள் பொன்னி.

.....

"ஐயோ.....! அப்பா....." என்ற பயங்கர அலறலைக் கேட்டுத் திடுக்கிட்டார் கந்தசுவாமி. அவருடைய கற்பனையும் தடைப்பட்டது; எழுத்தும் தடைப்பட்டது.

அவருடைய இரண்டாவது புத்திரப் பாக்கியமான இளங்கோ விழித்துக்கொண்டான். அவன் பாயிலிருந்து எழுந்து உட்கார்ந்து, தூக்கக் கலக்கத்துடன் கண்களைக் கசக்கிய படியே அழுதுகொண்டிருந்தான்.

"என்னடா கழுதை?"

"ஆ..... ஆ....."

"சொல்லித் தொலையடா கழுதை..."

கந்தசுவாமியின் எரிச்சல் அந்தப் பிஞ்சு நெஞ்சுக்கு எங்கே தெரியப்போகின்றது? முதலில் ஆத்திரம்; பின்பு அன்பு சுரக்கின்றது.

"என்னடா இளங்கோ?" என்று செல்லமாகத் தட்டிக்கொடுத்தார். இராகம் ஓய்ந்தது.

"கனவப்பா ..... பிசாசுகள் வந்து....."

"சரி, சரி. கண்ணல்லே! படுத்துக்கொள்."

"எனக்குப் பயமாய் இருக்கு... நீ கூடப் படுத்துக்கோ....."

"நீ முதலிற் படுத்துக்கொள். அப்புறம் அப்பா படுக்கும் .."

"நீ பொய் சொல்லிறாய்...."

* * *

இளங்கோ தூங்கிவிட்டான்.

நேரமும் நடுநிசியைத் தாண்டிவிட்டது.

'இனி எழுதிக் கிழித்தாற்போலதான்' என்று சலித்துக்கொண்டார்.

எழுந்து மேசைக்கு வந்தார். கற்பனை ஓடவில்லை. கதை எழுதவேண்டுமென்றும் தோன்றவில்லை.

அவர் ஆரம்ப எழுத்தாளனாக இருந்த காலத்தில், 'நன்றியுடன் திருப்பி அனுப்பப்பட்டது ..' என்று திரும்பிவந்த கதைகள் ஏதாவது இருக்குமோ என்று துருவிப் பார்த்தார். ஐந்து வருட எழுத்துப் பிழைப்பு. ஒன்றுகூட மிச்சமில்லை.

அவருடைய உடலும் உள்ளமும் சோர்வடைந்தன.

'இது என்ன? இது என் எழுத்துமில்லையே. இது கடிதமல்ல; கதை'— இரண்டு புத்தகங்களுக்கிடையிற் செருகப்பட்டிருந்த அந்தக் கதையைப் பார்த்ததும் அவருடைய கண்கள் ஆச்சரியத்தால் அகல விழித்தன.

அவருடைய தலையில் இன்னும் நரை மயிர் பரவவில்லை. இருந்தும் ஞாபகசக்தி எப்படியெல்லாம் குறைந்துவருகின்றது... ....அப்பாடா! இப்பொழுது அது அவர் ஞாபகத்திற் சிக்கிற்று.

குப்பைத் தொட்டிகளை நிரப்புவதற்காகத் தான் எழுதிக் குவிக்கின்றோம் என்று திருப்திப் படும் ஆயிரம் குட்டி எழுத்தாளர்களுள் ஒருவன் துரைராசா. அது அவனுடைய படைப்புத் தான். கந்தசுவாமியை இலக்கிய வழிகாட்டி என்று நினைத்திருந்த அவன் இவரிடம் அதைத் திருத்தங்களுக்கும் விமர்சனத்திற்கும் சமர்ப்பித் திருந்தான். வேலைப் பளு காரணமாக அதை ஒரு மூலையிலே ஒதுக்கிப் போட்டிருந்தார்.

கதை சுமாராக அமைந்திருந்தது. அங்கும் இங்கும் இலேசாகக் 'கை' வைத்தால் வெளியிடுவதற்குத் தகுதியான கதைதான். இதையே தன் பெயரில்.....

அவர் உள்ளம் துணுக்குற்றது. திருட்டுப் பிழைப்பா? பேனாவைக் கையிலெடுத்த காலந் தொடக்கம், இன்றுவரை அவர் செய்யாத ஒன்று. அவருடைய இலக்கிய வாழ்க்கையில் என்றுமே போக்கமுடியாத கறை.

தேவைதான் மனிதனைத் திருடனாக்கு கின்றது. அதற்கான சமாதானங்களையும் கண்டுபிடிக்கத் தூண்டுகின்றது.

'இது திருட்டல்ல. அவனுக்கு வேறு ஒரு கதையை ஆறுதலாக எழுதிக் கொடுக்கலாம். கதைக்குக் கதை; பண்டமாற்று. அவ்வளவு தானே?'—அங்கலாய்த்த அவர் மனம் அமைதியுற்றது.

* * *

'பரணி'க்கு, அடுத்த நாள் தபாலிலேயே கதாசிரியர் கந்தசுவாமியின் பெயரில் ஒரு கதை பிரயாணம் செய்துகொண்டிருந்தது!

புதுமைப்பித்தன் யார்?

★

புதுமைப்பித்தனின் கதைகள் ஒவ்வொன்றும் ஒரு பிரச்சினையைப் பற்றியதாகவே இருக்கும். அவருடைய கதைகள் பொழுதுபோக்கான கதைகள் அல்ல. அவரது கதைகள் சமூகத்தை நோக்கிப் பல்வேறு ஆணித்தரமான கேள்விக்குறிகளை அடுக்குகின்றன; அழுகி நாற்றமெடுத்துப்போன சமூகத்தின் ஊழல்களைக் கீறிப் பிளந்து காட்டுகின்றன. வாழ்க்கையின் அன்றாடப்பாட்டின் அடிக்குரல் அவரது கதைகளிலே எதிரொலித்தது. சொப்பனவஸ்தையிலே சிக்கி, கனவு காணும் அபூதக் கீலஞனல்ல புதுமைப்பித்தன்.....

நானறிந்த வரையில் 'தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, ஆசியாக் கண்டத்திலேயே புதுமைப்பித்தனுக்கு ஈடான எந்தச் சிறுகதை ஆசிரியனும் இல்லை' என்றே சொல்லத் தோன்றுகிறது.

புதுமைப்பித்தன் யார்?

இலக்கியத் திருடனின் பேய்க் கனவு; புத்தகாசிரியர்களுக்கு ஓட்டக்கூத்தன்; வலுவற்றுக் கிடந்த தமிழ் வசனத்துக்கு வாலிபந் தந்த சஞ்சீவி; உலக இலக்கிய சத் சங்கத்திலே தாமாகவே இடம் பிடித்துக்கொண்ட மேதை; சிறுகதை இலக்கியத்தின் ஆசிய ஜோதி; இளம் எழுத்தாளர்களின் இலட்சியம்; யதார்த்த வாதிகளின் முன்னோடி; தமிழ் நாட்டில் எழுதிப் பிழைப்பது என்பது எத்தனை அபாயகரமானது என்பதைத் தமது உயிரையே பணயம் வைத்துக் காட்டிச் சென்ற உதாரணம்—இவர்தான் புதுமைப்பித்தன்.

நண்பர் மஞ்சேரி ஈச்வரன் புதுமைப்பித்தன் காலமான சமயத்திற் பின்வருமாறு எழுதினர்:

"இன்று செளாவணியிலிருக்குஞ் சிறுகதை எழுத்தாளர் பலரின் உற்பத்திச் சரக்குகள் காலப் போக்கில் தவிடுபொடி யாகும்போதும், புத்தழகும் புதுமையும் பலமும் பெற்றுப் பிரகாசித்து, பாஷையின் பலவீனத்துக்குக் காயகல்பம் அளித்து, மனுஷதத்துவத்தின் இதய ஆழத்தின் இரகசியங்களையும், அறிவின் சக்திக் கூர்மையையும், ஆத்மார்த்த செல்வங்களையும் பிரதிபலித்துக்கொண்டிருக்கும் புதுமைப்பித்தனின் கதைகள் என்றும் நிலைத்திருக்கும்."

வாஸ்தவம். செத்துங் கொடுத்தவன் சீதக்காதி மட்டுமல்ல; நமது புதுமைப்பித்தனுங் கூடத்தான். அவரது சிருஷ்டிகள்.

'காலத்தாற் சாகாது
காலத்தின்
ஏலத்தால் மறியாது!'

—ரகுநாதன்

சுன்னகம் செல்லாச்சியம்மா

ச. அம்பிகைபாகன்

இந்துக்கள் செய்த தவப்பயனுகக் காலத் துக்குக் காலம் பெரியார்கள் தோன்றிச் சமய உண்மைகளை நிலைநாட்டி வருகின்றனர். மேல் நாட்டிற் சமய உண்மைகளில் நம்பிக்கை குறை வதற்கு முக்கிய காரணம் சமய உண்மைகளைத் தங்கள் வாழ்க்கை மூலம் எடுத்துக் காட்டக் கூடிய பெரியார்கள் காலத்துக்குக் காலம் அங்கு தோன்றுமையே.

நாம் இங்கு குறிப்பிடும் அம்மையார் 1929ஆம் ஆண்டு ஜனவரி மாசத்தில்தான் இறைவனடி எய்தினர்கள். ஆனபடியால் இவரை யறிந்தார் பலர் நம் மத்தியில் இப் பொழுதும் இருக்கின்றனர். சிவநெறிப் பற்று மிக்க இவ் அம்மையார் பிற்காலத்திற் 'சுன்னகத் தம்மா' என அழைக்கப்படலாயினர். இவர் சுன்னகக்திலுள்ள ஒரு பிரபல வேளாண் குடும்பத்தில் தோன்றியவர். இவ்வம்மையா ரின் தந்தையார் சுன்னகம் முத்துக்குமாரக் கவிராயரின் *தௌகித்திரனுவர். இவருடைய தம்பியார் திரு. திருவம்பலம். சுன்னகம் கிராமத் தலைவராய் விளங்கியவர்.

இல்வாழ்க்கை

அம்மையார் வைத்தியப்பகுதியிற் கடமை யாற்றிய திரு. தம்பு என்பவரை விவாகஞ் செய்து சில காலம் இல்வாழ்க்கை நடத்தினர். இவ்வில்வாழ்க்கையின் பயனுக ஒரு மகனும் ஒரு மகளும் தோன்றினர். இவ்விருவரும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் வாழ்ந்துவரு கின்றனர். அம்மையார் மகளின் மகளே இவர் அருமையாக வளர்த்துவந்த குழந்தை.

குடும்ப வாழ்க்கையில் இருந்த காலத்திலே குடும்பக் கடமைகளோடு சிவதொண்டு புரிவ திலும் ஈடுபட்டு வந்தார். பிரதான விரதங்களை யெல்லாம் அநுட்டித்துவந்தார். ஆலயங்களில் திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல் முதலிய தொண்டுகளைப் புரிந்துவந்தார். இவர் பிரதான மாக வழிபாடு செய்துவந்த ஆலயம் சுன்னகம் பிள்ளையார் கோயிலாகும். இவரது இந்தக் காலத்து வாழ்க்கையை நோக்கும்போது இவர் சரியை மார்க்கத்தைக் கைக்கொண்டா ரென்று கூறுவது பொருந்தும். கடைசிக் காலம் வரை யும் அம்மையார் புனிதத்தில் நாட்டமுடையவ ராய், தாம் வசித்த வீட்டையும் வளவையும் புனிதமாக வைத்திருந்ததை அன்பர்கள் அறி வார்கள். வீடு மாத்திர மல்ல வளவிற் பெரும் பகுதியும் மெழுக்கிடப்பட்டிருக்கும். அங்குள்ள கிணறு காலத்துக்குக் காலம் இறைக்கப்பட்டு, நீர் பளிங்கு போலிருக்கும். இறைவன் சான்னித் தியம் எங்கும் பிரகாசிக்கும்.

கைம்மை நிலை

இவருக்கு நாற்பதாவது வயதிற் கணவ னிறந்தார். இதோடு இவர் வாழ்க்கையில் ஒரு புதிய கட்டம் ஏற்பட்டது. அணிகலன்கள் சகலதையும் துறந்து வெள்ளையுடை தரித்து உண்டியைச் சுருக்கிக் கைம்மை நோன்பு மேற்கொண்டார். காரைக்கா லம்மையார், கணவன் தம்மைத் துறந்தபின், பேயுருவங் கொண்டது, இங்கு குறிப்பிடத்தக்கது. இந்து தர்மத்தின்படி பெண்கள் தங்கள் உடம்பைப் பேணுவதும், தங்களை அழகு செய்வதும் கணவனின் பொருட்டே. இந்து தர்மத்தின்படி வாழ்ந்த அம்மையார் கணவனிறந்ததும் துறவு நிலையை மேற்கொண்டது ஆச்சரியமல்ல.

இக் காலத்தில் அம்மையார் தினந்தோறும், ஸ்நானஞ் செய்து கடவுள் வழிபாடு செய்த பின்னர், ஒரு வேளை உணவையே உட்கொண்டு வந்தார். தேவார திருவாசகங்களை இடை யருது ஓதிவந்தார். திருமுறைகளை இடைவிடாது ஓதியதினுல்தான் தமக்குத் திருவருள் கைகூடிய தாகப் பிற்காலத்திற் கூறுவர்.

* தௌகித்திரன் = புத்திரியின் மகன்.

ஞான வாழ்க்கை

இப்படி இவர் வழிபாடு செய்துவருங் காலத்தில் எப்படியோ ஒரு சிவலிங்கம் இவர் கைக்குக் கிட்டியது. இதில் அதிசய மென்ன வென்றால், அம்மையார் கணவனிறந்த பின் வீட்டை விட்டு வெளியே போனது கிடை யாது. இறைவனருளால் இவ்விலிங்கம் தம் மிடம் வந்து சேர்ந்ததாக அம்மையார் நம்பினர். இந்த இலிங்கத்துக்கு முறையாக வழிபாடு செய்துவந்தனர்.

இப்படி வழிபாடு செய்துவருங் காலத்தில் அம்மையாருக்கு மனவொருமை ஏற்பட்டு அவர் நெடுநேரம் தியானத்தில் அமர்ந்திருப்பர். இந் நேரங்களிற் கருவி கரணங்களெல்லாம் ஒடுங்கி விடும். சிறிது காலஞ் செல்லத் தியான நிலை முதிர்ந்து சமாதிநிலை கைவரப்பெற்றார். இந்தக் காலங்களில் இறைவன் தமக்குக் கொடுத்த பெரும்பேற்றை யெண்ணியெண்ணிப் பரவசப் படுவர். இந்தநிலை எய்தியபின்னர் உறங்கின வன் கைப்பொருள்போல சகல கிரியைகளையும் கைவிட்டனர். குளித்தல், மயிர் கோதுதல், பல் துலக்கல் முதலிய உடல் சம்பந்தமான செயல் களைத் துறந்தனர். மயிர் சடை பின்னி வளரத் தொடங்கி அம்மையார் நின்றால் நிலத்தைத் தொடுமளவுக்கு வளர்ந்தது. இவர் இக்காலந் தொடங்கி வாழ்ந்த வாழ்க்கை சிவஞான சித்தி யாரிற் சீவன்முக்தர் வாழ்க்கையைப் பற்றிக் கூறியதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியது. இதுபற்றிய சிவஞானசித்தியார் பாட்டைக் கீழே காண்க :

ஞாலமதின் ஞானநிட்டை யுடையோ ருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவதொன் றில்லை
சீலமிலை தவமில்லை விரதமொடாச் சிரமச்
செயலில்லை தியானமிலை சித்தமல மில்லை
கோலமிலை புலனில்லை கரண மில்லை
குணமில்லை குறியில்லை குலமு மில்லை
பாலருடன் உன்மத்தர் பிசாசர்குண மருவிப்
பாடலினொடாடலிவை பயின்றிடினும்பயில்வர்.

அம்மையார் இவ்வளவு உயர்நிலை யடைந் தாரே, இவருக்கு வழிகாட்டிய குரு யார்? என்ற கேள்வி எழுகின்றது. இதற்கு, இவருக்கு, மற்றையவருக்குப்போல் ஒரு குரு இருந்திருக்கவில்லை என்பதே விடை. இறை வனே அறிவுக்கறிவாகியிருந்து இவருக்கு வழி காட்டினர் என்று கூறுவதே பொருந்தும். இது சம்பந்தமாக நடந்த சம்பவத்தை இங்கே கூறுவது பொருத்தமா யிருக்கும். அம்மை யாரைப்பற்றிக் கேள்விப்பட்ட ஒரு சுவாமியார் இவருக்குக் குருவில்லாதபடியாற் பூரண நிலை அடைந்திருக்க முடியாதென்று இவருக்கு உப தேசஞ் செய்யும்பொருட்டு இவர் வீட்டுக்குப் போனர். இந்தச் சுவாமியார் வந்த நோக்கத்தைத் தமது ஞான திருஷ்டியால் அறிந்த அம்மையார் "யாருக்கு உபதேசம் செய்ய வந்தாய், போ வெளியே" என்று அதட்டித் துரத்தினர். இப்படி வருபவரின் நோக்கத்தையும் தன்மை யையும் தாமாகவே அறியுந் தன்மை அம்மை யாருக்கு இருந்தது.

தமிழ்த் துறையிலும் விஞ்ஞானத் துறையி லும் பாண்டித்தியம் பெற்ற ஒருவர் அம்மையா ரிடம் அடிக்கடி வருவார். அவருக்குத் துறவு வாழ்க்கையில் நாட்டமிருந்தபோதிலும் அவ ருள் ளத்திற் கல்விக்கும் அதனால் ஏற்படும் புகழுக் குமே முதலிடம் கொடுத்திருந்தார். ஒருநாள் அவர் வந்ததும் அம்மையார் "கல்வியே பெரி தென்று கதறித் திரிவர் கயவர்" என்று கூறினர். அப்பெரியாரை அறிந்தவர் அம்மையார் அவரைப் பற்றிக் கூறியது உண்மை என்பதை உணர்வர். அவர் கடைசிவரைக்கும் கல்வியென்னும் பல் கடலில் இருந்து பிழைக்கவில்லை.

அடியார் வருகை

அம்மையாரின் ஞான வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட சில பெரியார்களைப்பற்றி இங்கு குறிப்பிடுதல் அவசியம். இவர்களுள் முத லிடம் யோகர் சுவாமிகளுக்கே யுரியது. அம் மையாருக்கும் சுவாமிகளுக்கு மிகுந்த ஆத்மீகத் தொடர்பை வர்ணிப்பதற்கு ஒரு சேக்கிழார் வேண்டும். ஒருவர் நினைக்க மற்றவர் செய லாற்றுவார். இருவரையும் ஒருமித்துக் கண்ட வர் அந்தக் காட்சியை இலகுவில் மறக்கமாட் டார். இதற்குமேல் இவ் விஷயத்தைப்பற்றி இப்பொழுது எழுத அஞ்சி விடுகின்றேன். காரணத்தை அன்பர் அறிவர்.

அம்மையாருக்குப் பலவிதத்தில் தொண் டாற்றிய ஒரு பெரியார் பூசாரிக் கிழவனார் என்பவர். இவர் ஏழாலை வாசி; மிகவும் எளிய வாழ்க்கையை மேற்கொண்டவர்; தாமாகத் தயா ரித்த ஒருவேளை உணவை உட்கொள்ளும் நியதி யுடையவர்; மாலையில் அரிசியுடன் இலை, குழை, காய், கறி முதலியவற்றை வேகவைத்து உண்பர்.

சித்திகள்

அம்மையார் சித்திகள் கைவரப்பெற்றவர். பலருக்குத் தீராத நோய்களை மாற்றியுள்ளார். அம்மையாரில் அதிக விசுவாசமுள்ளவரும் சகோதரிமுறை உடையவருமான ஒருவரின் மகனுக்குச் சுவாதம் ஏற்பட்டு ஆபத்தான நிலையை யடைந்துவிட்டார். வைத்தியரும் கைவிட்டு விட்டனர். அந்தத் தாய் பிள்ளையைத் தூக்கிக்கொண்டு போய் அம்மையார் முன் வளர்த்தினர். அப்பொழுது சுரம் 104° இருக்கும். அம்மையார் தாயிடம் பிள்ளைக்குத் தீர்த்தக் கிணற்றில் (அம்மையார் வீட்டுக் கிணற்றுக்குத் தீர்த்தக்கிணறு என்று பெயர்) தோய வார்க்கும்படியும் தீர்த்தத்தைப் பருக்கும்படியும் கூறினர். அம்மையாரிடம் விசுவாசமுள்ள தாயான படியால் அப்படியே செய்தார். பையனும் சுரம் நீங்கிப் பிழைத்தான். இப்படிப் பிழைத்தவர் நம்மத்தியில் இப்பொழுது வாழ்ந்து வருகிறார்.

இன்னொருவருக்கு வயிற்றுநோவு. சகல வைத்தியம் செய்தும் பலிக்கவில்லை. கடைசியாக அம்மையாரிடம் வந்தார். அவர் ஒரு வாழைப் பழத்தைச் சாப்பிடும்படி கொடுத்தார். அத்துடன் நோய் தீர்ந்தது.

இத்தகைய பெரியார் மகா சமாதியடைந்ததும் ஒருசாரார் இவரைச் சமாதி வைக்க வேண்டுமென்று விரும்பினர். யோகர் சுவாமிகள் பல காரணங்களை எடுத்துக் காட்டித் தகனஞ் செய்வதே முறை என்று கூறினர். அவர் விருப்பத்தின்படி அம்மையாரின் உடல் தகனஞ் செய்யப்பட்டது.

சக்தி தர்மம்

○ ○ ○

"சுத்த அறிவே சிவம்"; வாஸ்தவந்தான். ஆனால் இந்த உலகம் என்ன? இதுவும் சிவமே. அறிவுக்கெட்டாதது; பெயர் சொல்ல முடியாதது; ஆதலால் அப்பொருளுக்கு வெறுமே தத் (அது) என்ற பெயர் காட்டி வேத ரிஷிகள் போற்றினர். பின் அதையே அதிதி யென்றும், விஷ்ணு வென்றும், ருத்ர ரென்றும், ப்ரம்மணஸ்பதி என்றும், இந்திரன், வாயு, ஸூர்யன், அக்நி, மித்திரன், வருணன், பூமி, சிந்து என்றும் பல வகைகளிலே வணங்கினர்கள். தெய்வம் உண்டென்பதை எப்படி யறிந்தோம்? உலகமிருப்பதாலே அறிந்தோம். தெய்வம் உயிர்; உலகம் அதன் வடிவம். உலகந் தெய்வந்தான். உலகத்துச் செய்கைகளெல்லாம் தெய்வத்தின் செய்கைகளே. உலகத்தின் நடைகளிலும் விதிகளிலும் தெய்வத்தை உணரவேண்டும். இந்த வழி யறியாதோர் உலகத்துக்குப் பயப்படுகிறார்கள். இவ்வுலகத்தை விட்டுத் தப்பினால் இன்பமுண்டாகுமென்று நினைக்கிறார்கள். அதிலிருந்து பல்வேறு பிழைகளும் தொல்லைகளும் விளைகின்றன. இந்த உலகம் நாராயணனுடைய லீலை. அவன் தனது சக்தியுடன் விளையாடும் விளையாட்டு. சக்தி மார்க்கத்தில் இந்த உலகத்து ஞானம் அதிகப்படவேண்டும். பராசக்தி தெய்வம். ஆத்மஞானத்தைக் காட்டும் நூல்கள் அவளுடைய வேதம். லௌகிக சாஸ்திரமும் அவளுடைய வேதந்தான். பௌதிக சாஸ்திரம் (ஸயன்ஸ்) சக்தி தர்மத்துக்கு முதலாவது வேதம்—வேதாரம்பம். ஸ்தூலத்தை அறிந்தாலொழிய ஸூக்ஷ்மத்தை நன்கு தெரிந்துகொள்ளமுடியாது. இகலோக ஞானத்தை இகழ்ச்சியாகப் பேசும் 'ஆத்ம சாஸ்திரம்' பொய். உண்மையான ஆத்ம சாஸ்திரம் இகலோக ஞானத்தை வளர்க்கும். வான சாஸ்திரம் இல்லாத நாட்டில் ஞானவாசிட்டம் பயன் தரமாட்டாது. எந்த மதமும் ஆரம்பத்தில் லௌகிக ஞானத்தை இகழவில்லை. எல்லாரும் கண்ணை மூடிக்கொண்டு எப்போதும் சிவனைத் தியானம் செய்துகொண்டிருந்தால் சிவன் கோயிலைக் கட்டியிருக்கமுடியாது. ஒரு வேலையும் நடக்காது. கண்ணைத் திறந்து உலகக் காரியங்கள் செய்துகொண்டே சிவனை அறிய முயல்வதுதான் சரியான ஞானம்.

—சி. சுப்பிரமணிய பாரதியார்



C. C. C. பண்படுத்தும்
புகையிலைப் பசளை

கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனி, லிமிட்

தபாற்பொட்டி 33 :: கொழும்பு

C. C. C. பசளை கிடைக்குமிடங்கள்:

சுன்னாகம்	—	R. M. கான்பாய் ஸ்ரோர்ஸ்
யாழ்ப்பாணம்	—	M. S. மணியம் அன்ட் கோ.
ஊர்காவற்றுறை	—	கைற்ஸ் டிஸ்ரிபியூரோர்ஸ்

ரி. பி. அப்துல் றஹுமான்

அன்ட் கோ.

350, ஸ்கின்னேர்ஸ் வீதி தெற்கு ::: கொழும்பு 10

சகல விதமான இரும்புச் சாமான்கள், யந்திர வகைகள், தண்ணீரிறைக்கும் மின்சார 'பம்பு'கள், கவென்றி விக்ரர் டீசல் இயந்திரங்கள்—4 தொடக்கம் 20 குதிரைப் பவரில்—, நெற்குற்றும் மா அரைக்கும் யந்திரங்கள், இவற்றின் பாட்ஸுகள் விற்பனையாளர்கள்

★ ★ ★

Try us for your MACHINERY & for all your Hardware Requirements. Domestic 'Bloor' Electric Pumps & Coventry Victor Diesel Engine Air Cool and Water Cool **4** to **20** H. P.

Rice Hullers, Grinding Mills and Spare Parts.

★ ★ ★

T. P. ABDUL RAHUMAN & CO.

350, Skinners Road South :: COLOMBO 10

TELEPHONE: **3027** TELEGRAM: **"DAWN"**

SURIYALOKA FIRE WORKS


Proprietor : K. E. PERERA

KIMBULAPITIYA ★ ★ ★ NEGOMBO

சூரிய மான் வெடிகள்

இலங்கையில் உற்பத்தியாக்கும் வெடிகளுட் பிரசித்தமானவை.

ஒவ்வொரு வெடியும்
இடி முழக்கம் போலச் சத்தமுடையது



* தைப்பொங்கல்
* வருஷப் பிறப்பு
* திருவிழாக்கள்
* விவாக தினங்கள்
* மற்றும் சகலவிதமான வைபவங்களிலும்

பயங்கரமில்லாமலே யாரும் உபயோகிக்கக்கூடியவை.

அரசாட்சியினர் நடாத்தும் வாணவேடிக்கைப் போட்டிகளில் ஒவ்வொரு முறையும் பங்கு பற்றித் **தங்கப் பதக்கங்கள்** பெற்றுப் பொது மக்களின் நன் மதிப்பையும் அரசாங்கத்தின் ஆதரவையும் பெற்றுள்ளன.

எல்லா வியாபாரிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

சொந்தக்காரர் : **K. E. பெரேரா**

கிம்புலபிட்டியா :: நீர்கொழும்பு

Y. P. M. மாணிக்கவாசக நாடார்

அன்ட் கோ.

பிரபல கடதாசி வியாபாரிகள்

58, மலிபான் வீதி ---------- கொழும்பு 11

பாட புத்தகங்களைக் கல்விப் பகுதியினர் அங்கீகரிப்பதின் ஒரு பிரதான அம்சம் எங்கள் கடதாசி வகைகளின் தனிச் சிறப்பே.

எங்களிடம்: புத்தகங்கள், புதினப் பத்திரிகைகள், மற்றும் வேண்டிய தேவைகளுக்கு உபயோகிக்கக் கூடிய சகல தினுசான கடதாசி வகைகளும் மொத்த விலைக்கும் சில்லறைக்கும் விற்பதற்கு இருக்கின்றன.

பிரிட்டன், சுவீடன், நோர்வே, கனடா, யப்பான் ஆகிய இடங்களிலிருந்து பலரகக் கடதாசிகளும் நேரடியாக இறக்குமதி செய்கின்றோம்.

இன்னும் பாடசாலைக்குத் தேவையான பென்சில், பேனு கடதாசி வகைகள், 'கார்ட்போட்டு'கள், மாபிள் — கலிக்கோ தினுசுகள் தேவையான மாதிரிகளிற் பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கையின் எப்பாகங்களிலிருந்து வரும் 'ஓடர்'களும் உடனுக்குடன் கவனிக்கப்பட்டு அனுப்பப்படும். கொழும்பு நகரிலே எங்களது விலைகள் அதிசயிக்கத்தக்க குறைவாக இருப்பதை எங்களிடம் தொடர்புள்ள எல்லா வியாபாரிகளும் அறிவார்கள். மற்றவர்களும் எங்களிடம் ஒருமுறை ***வியாபாரத் தொடர்பு வைத்துப் பாருங்கள்.***

Y. P. M. Manickavasaga Nadar & Co.,

PAPER MERCHANTS

58. MALIBAN STREET, :: **COLOMBO 11**

Phones: **4414 & 4114.** Grams: **"PERINBAM"**

தந்தை மொழி

அ. செ. முருகானந்தன்

தலையிலும் காலிலும் கட்டுப் போட்டுக் கொண்டு வேலாயுதம் ஆஸ்பத்திரிப் படுக்கையிற் கிடந்தான். நாலு நாட்களாக அறிவு நினைவு இல்லாமலிருந்து ஐந்தாவது நாள் சற்றே கண் விழித்துப் பார்த்தான்.

நாலு தினங்களுக்கு முன் அவனுக்கு என்ன சம்பவித்தது? ஏன் ஆஸ்பத்திரிக்கு வந்தான்?

அது ஒரு பெரிய கதை. கதையென்றால் உப கதையல்ல. பிற்காலச் சரித்திராசிரியர்கள் அதற்கென்று ஒரு தனி அத்தியாயம் ஒதுக்கப் போகும் சரித்திர முக்கியத்துவம் பெற்ற சம்பவம். அன்று நடைபெற்றதை ஒரு தடவை நினைத்தாலே அவனுக்கு நெஞ்சு வெடித்து விடும்போலிருந்தது. என்ன அக்கிரமம், அவன் குழந்தையாயிருந்தபோது அவனுடைய தாய் எந்த மதுரமான மொழியிலே தாலாட்டுப் பாடி அவனைத் தூங்கவைத்தாளோ அந்தத் தாய்மொழியைப் பேசியதனால் அல்லவா அவன் அடிபட்டுக் காயமடைந்து ஆஸ்பத்திரிக்கு வந்திருக்கிறான்!

வேலாயுதம் அன்றைய தினம் அவன் வேலைபார்த்த கந்தோரில் மத்தியான இடை வேளையின்போது நாலைந்து பேர்களுடன் சேர்ந்துகொண்டு பக்கத்தே காலிமுக மைதானத்தில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தைப் பார்க்கப் போயிருந்தான். சத்தியாக்கிரகிகளைச் சுற்றி மொய்த்துக்கொண்டு மைதானம் எங்கிலும் ஒரே கூட்டம். வேலாயுதமும் அவனது கந்தோர் சகபாடிகளும் கூட்டத்தை ஊடுருவிப் போய்க்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்களுக்குச் சமீபமாக 'ஐயோ' என்று ஒரு குரல் கேட்டது. 'பளார் பளார்' என்று அடி விழும் சத்தமும் கேட்டது. இதெல்லாம் வேலாயுதத்தின் காதோடு மருவினற்போலக் கேட்கவே, அவன் நின்று திரும்பிப் பார்த்தான்.

ஐம்பத்தைந்து வயதிருக்கும், வேட்டிசட்டைக் காரப் பெரியவர் ஒருவர், சாரமும் சட்டையும் அணிந்த யுவர்களின் கூட்டத்தில் மாட்டிக் கொண்டு அவதிப்பட்டார். அவருக்கு அடிக்கு மேல் அடியாக விழுந்தது. அம்மிக் கல்லா யிருக்காமல் எலும்பும் தசையுங் கொண்ட மிருதுவான மனித சடலமாயிருந்ததால் அது நகருவதற்குப் பதில் கீழே விழுந்து உருண்டது. வீராவேசம் பொங்கி நின்ற கூட்டம் கீழே விழுந்தவரின் காலைப் பற்றிக் 'கொற கொற' வென்று இழுத்தது. நிலத்திற் கிடந்த கற்கள் உடலைக் கிழிக்கவே இரத்தம் சீறிப் பாய்ந்தது.

இரத்தத்தைக் கண்டதுதான் வேலாயுதம் வாய்விட்டுக் கத்திவிட்டான். "ஐயோ இதென்ன அநியாயம்" என்று சுத்தமான தமிழில் அவன் தனது மனத்துடிப்பை வெளியே கொட்டிவிட் டான். அவ்வளவுதான், அவன் தலைக்கும் வந்தது ஆபத்து. "அடே, இங்கேயும் ஒரு பறைத் தமிழன்" என்று பல்லைக் கடித்துக் கொண்டு ஒரு கூட்டம் அவனைச் சுற்றி வளைத்தது. நூறு சம்மட்டிகளைக் கொண்டு தாக்குவதுபோல வேலாயுதத்தின் தலை கலங்கிப் போயிற்று. நிற்க முடியாமல் தள்ளாடிக் கீழே சாய்ந்தான். அதற்கு மேல் நடைபெற்ற தொன்றும் அவனுக்குத் தெரியாது.

நாலு தினங்களின் பின் இன்றைக்கு வேலாயுதம் கண் விழித்தபோது தன்னை ஆஸ்பத் திரிக்கு யார் கொண்டுவந்தார்கள் என்பது பற்றி எண்ணி யோசிக்கவில்லை. 'பறைத் தமிழன்' என்ற வார்த்தைகள்தான் இன்னமும் அவன் காதிற் கேட்டன. தலையை அசைக்க முடியாமலிருந்தது. பெரிய கல்லைத் தூக்கி வைத்ததுபோல ஒருசுமை தலையை அழுத்தியது. பெருமூச்செறிந்தான். அந்த நிலையில் வேறு ஒன்றுமே அவனற் செய்ய முடியாமலிருந்தது.

"இப்போது எப்படியிருக்கிறது மிஸ்டர்?" என்று கேட்டுக்கொண்டு ஒரு வைத்தியத்

தாதி வந்தாள். அவள் முதலிற் சிங்களத்திற் பேசினாள். வேலாயுதம் மௌனம் சாதித்தான். பிறகு அவள் ஆங்கிலத்திற் பேசினாள். வேலாயுதம் தமிழிற் பேசினான். தாதியம்மா முகத்தைச் சுளித்துக்கொண்டு திரும்பிப் போய் இன்னொருத்தியை அழைத்துக் கொண்டு வந்தாள். அவர்கள் வந்துபோன பிற்பாடு வேலாயுதம் படுக்கையிற் கிடந்தபடி எவ்வளவோ எண்ணினான். நாலு நாட்களாக அன்னகார மில்லாமல் வயிறு காற்றுப்போல் இலேசாகவிருந்தது. டக்டர்களிடமும் தாதிகளிடமும் உடலை ஒப்படைத்து விட்டதனால் மனக்குதிரை கவலையற்றுப் பறந்து திரிந்தது; அதற்கு ஆஸ்பத்திரிப் படுக்கை தேசிங்கு ராசன் குதிரைமாதிரி. மண்ணையும் விண்ணையும் ஒரே தாவாகத் தாவிப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னே பாய்ந்தது.....

2

பதினைந்து வருஷங்களுக்கு முன்னே வேலாயுதம் உத்தியோகம் பார்ப்பதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் பிரயாணமானான். 'குரோட்டன்' செடிகள் நாட்டினாற் போல இரண்டு பக்கமும் பனை மரங்கள் வளர்ந்து நின்ற சாலைவழியே அவனை ரயிலில் ஏற்றுவதற்கு மாட்டுவண்டியில் ஏற்றிச் சென்ற அவனது தந்தை மாட்டின் கழுத்துச் சதங்கை ஒலிக்கு மேலாக உரத்த குரலில் ஒரு பனந் தோட்டத்தை அவனுக்குக் காட்டிச் சொன்னார்:

"தம்பி, இதோ இந்தப் பனந் தோப்பைப் பார்த்தாயா? பாட்டனார் காலம் முதலாக எங்கள் குடும்பச் சொத்தாக அது இருந்து வந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்பாக உனது படிப்புச் செலவுக்காக வேண்டி அதை ஈடு வைத்துவிட்டேன். மூன்று தலைமுறைக்கு மேல் நாங்கள் பட்டினி கிடக்காமற் கூழ் காய்ச்சிக் கொடுப்பதற்கு உதவியது இந்தப் பனந் தோட்டந்தான், தம்பி. சண்டைக் காலத்திற் கொடிய பஞ்சம் பயமுறுத்தியபோது நாங்கள் கலங்கவில்லை. சூருவளிக் காற்று வீட்டுக் கூரையைப் பிடுங்கி வீசியபோது நாங்கள் அஞ்சவில்லை. தேவ மயனைப்போல இரவு இரவாகப் புதுவீடு கட்டிக்கொண்டோம். பாண்டியர்போல ஒவ்வொன்றும் தலை நிமிர்ந்து நிற்பதைப் பார் தம்பி. வானம் பார்த்த பூமியின் குழந்தைகளை என்றைக்கும் தலைநிமிர்ந்து வாழ வைத்தவை இந்த நெடுமரங்கள்தாம்!

"தம்பி, நீ உத்தியோகம் பார்த்துச் சம்பாதித்து எங்களுக்கு ஒன்றும் அனுப்பவேண்டாம். நீ சந்தோஷமாயிருந்தால் அதுவே எங்களுக்கு மகிழ்ச்சி. எங்கள் குடும்பச் செல்வம் நம்மை விட்டுப் போய்விடாதபடி அதை மீட்டுக் கொடுத்துவிடு. அந்தப் பொறுப்பை மட்டும் ஏற்றுக்கொள். இந்த மாடும் வண்டியும் உள்ள வரை, ஆண்டவன் கருணையால் நமது காலுக்கும் கைக்கும் ஒரு பொல்லாங்கும் நேராத வரை உனது தாயாரை நான் காப்பாற்றிக் கொள்ளுவேன். கடைசியாக, எனது ஒரே ஒரு ஆசையை உன்னிடம் சொல்லுகிறேன் தம்பி, எங்கள் குடும்பச் செல்வமான இந்தப் பனைக்காணியை ஈட்டுக்காரனிடமிருந்து மீட்டு அதிலுள்ள ஒரு பனையின் ஓலைகளை நறுக்கி எடுத்து அதில் உனது கல்யாண அழைப்பு அனுப்பவேண்டும். உனதுதந்தையின் ஆசையை நிறைவேற்றுவாயா மகனே?....."

* * *

அன்றைக்கு ரயில் பிரயாணத்தின்போது யன்னல் சட்டத்திற் கைவைத்து கைமீது தலையைச் சாய்த்து வெளியே பார்வையை ஓட விட்டுக்கொண்டிருந்த வேலாயுதத்துக்கு வெளியே காய்ந்த நிலவு கண்ணிற் படவில்லை; ரயிலின் கடாபுடா சத்தம் காதில் விழவில்லை, "தம்பி, நீ சம்பாதித்து எங்களுக்கு ஒன்றும் அனுப்பவேண்டாம்; நீ சந்தோஷமாயிருந்தால் அதுவே எங்களுக்குப் பெரிய திருப்தி" என்ற தந்தை மொழியே காதிற் கேட்டது. "போய் வா தம்பி" என்று கண்கலங்கியபடி அவனுக்கு விடை கூறி அனுப்பிவிட்டு ரயில், பார்வையிலிருந்து மறையும் வரை அப்படியே மரமாக நின்ற தந்தையின் தோற்றம் அவன் மனத்தை விட்டு அகலவில்லை. வேலாயுதத்தின் கண்களில் துளித்த நீர் கைவழியே ஓடி நிலவொளியில் பிரகாசித்தது. பக்கத்தே இருந்த ஒரு பிரயாணி ஆனையிறவுக் காற்றின் வேகத்தைப் பொறுக்கமாட்டாமல் யன்னற் கண்ணாடியை மூடிவிட எழுந்து வந்தபோது வேலாயுதம் திடுக்குற்று....."சீ..... இதென்ன குழந்தைப்பிள்ளை போல, யாராவது பார்த்தால் சிரிக்கப்போகிறார்கள்" என்று எண்ணிச் சட்டென்று கண்களைத் துடைத்துக்கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தான். ஆனால், மனம் பொன்வயல் கிராமத்து ரயில் நிலையத்தையே இன்னமும் சுற்றி வட்டமிட்டது. 'எனது முதற்

சம்பளத்தை எடுத்து அப்படியே அப்புவுக்கு அனுப்பிவிடவேண்டும். மணி ஓடரைப் பார்த்தால் அவர் மனம் துள்ளிக்குதிக்கும். அதை உடனே தபாற்கந்தோரில் கொண்டுபோய் மாற்றுவாரா அல்லது கண்ணடி பிரேம்போட்டு வீட்டுச் சுவரிலே மாட்டிவைப்பாரா? கண்ணடி போட்டு மாட்டிவைத்துப் பார்த்துக்கொண்டுதானிருப்பார். அப்புவைப்பற்றி எனக்குத் தெரியாதா?' என்று எண்ணியபோது அவனுக்குச் சிரிப்புவந்தது. வாய்விட்டே சிரித்துவிட்டான். எதிரே யிருந்த பிரயாணி இவன் பக்கம் முகத்தைத் திருப்பவே வேலாயுதம் சட்டென்று யன்னலுக்கு வெளியே தலையை நீட்டி ஓடும் நிலத்தைப் பார்த்தான்.....சீ..... ..... இதென்ன பைத்தியகாரச் சிரிப்பு.....யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள்.....என்று தலை குனிந்தபடி எண்ணினான்.

சிரிப்பதற்கும் விடாது, அழுவதற்கும் விடாது, விநோதமான உலகமல்லவா இது!

ரயில் பிரயாணத்தின்போது இப்படிச் சிரிக்கவும் முடியாமல் அழவும் முடியாமல் அவதிப்பட்டுக்கொண்டே இரவு முழுநேரமும் சிந்தனையில் ஆழ்ந்திருந்து விடியக் கொழும்பு போய்ச் சேர்ந்தான். ரயிலை விட்டிறங்கிக் கொட்டாஞ்சேனை விடுதிக்குப் போய்ச்சேர டிராம் வண்டியில் ஏறினான். டிராமில் ஒரே கூட்டமாயிருந்தது. ஒரு பறங்கிப் பெண்ணுக்குப் பக்கத்திற் கொஞ்சம் இடமிருந்தது. ஆனால் அவளுக்கு அருகே உட்காருவதற்கு அவனுக்குக் கூச்சமாயிருந்தது. இதற்கிடையில் டிராம் வண்டிக் கண்டக்டர் வந்து உட்காரும்படி 'உபசாரம்' செய்தான். பறங்கிப் பெண்ணும் சற்று நகர்ந்து இடம் விட்டுக்கொடுத்தாள். ஆனால் அவள் செம்பவழ உதட்டில் அந்தப் புன்சிரிப்பு ஏன் நெளிந்தது? அந்த மயக்க மருந்தை ஏன் அவள் அள்ளி எறிந்தாள்? வேலாயுதம் தடுமாற்றத்தோடு அவளுக்குப் பக்கத்தே உட்கார்ந்தான். டிராம் அடுத்த தங்கலில் நின்றபோது ஏறிய இரண்டாவது பேர்வழி ஒருவனையும் கண்டக்டரின் உபசாரம் வேலாயுதத்துக்குப் பக்கத்தே நெருக்கியடித்துக் கொண்டு அமர்த்திவிடவே, யாழ்ப்பாணத்துக் 'குழந்தை' கொழும்பு மயக்க மருந்தில் மேலும் இரண்டு டோஸை உட்கொண்டுவிட்டது. அந்த நினைவழிவில் மாட்டுவண்டியின் சதங்கை ஒலி மெதுமெதுவாக மறைந்து டிராம் வண்டியின் கணகண ஒலி பெரிதாகக் கேட்டது.....

வேலாயுதம் கொட்டாஞ்சேனையில் எந்த விடுதியிற் குடியிருக்கப் போனானே அந்த விடுதிக்குப் பக்கத்து வீட்டில்தான் அவளும் குடியிருக்க வேணுமா? ஏன் — வேலாயுதத்தின் கந்தோரில்தானே அவளும் 'டைபிஸ்'டாக வேலை பார்க்கவேணும்? 'அப்பு, உன் ஆசையில் மண் விழுந்துவிட்டது. என்னை விழுங்குவதற்கு வாயைத் திறந்துகொண்டிருந்த பட்டணத்தின் வாய்க்குள் அகப்பட்டுக் கொண்டேன்' என்று வேலாயுதம் தகப்பனுருக்குக் கடிதம் எழுதவில்லை. கடிதம் எழுதவேண்டுமென்று அவன் எண்ணவேயில்லை. 'சுகமாக வந்து சேர்ந்தேன்' என்று ஒரு வரியில் ஒரு கடிதம் கீறிப் போட்டான். அதுதான் அவன் எழுதிய கடைசிக் கடிதம்.

பல மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் ஒரு 'கொழும்புக்காகிதம்' வேலாயுதத்தின் தகப்பனுருக்குக் கிடைத்தது. ஆவலோடு அதைப் பிரித்துப் படித்த கிழவன் உடனே மூர்ச்சையாகி விடவில்லை. தெருவாசலுக்கு வந்து மாரியம்மன் கோவிலைப் பார்த்துக் கும்பிட்டு விட்டு நேரே தபாற் கந்தோருக்குப் போய் ஒரு தந்தி அனுப்பினார். அடுத்த நாள் ஒரு காகிதமும் எழுதித் தபாலிற் போட்டார்.

'தம்பி! எப்படியும் நீ சந்தோஷமா யிருந்தால் அது போதும். பணைக்காணி ஈட்டில் மூழ்கிப் போய்விட்டது. அதிற் கிடைத்த சொற்ப தொகைக்குப் புதிதாக ஒரு மாடும் வண்டியும் வாங்கியிருக்கிறேன். உன்னை ஒரு தடவை பார்க்கவேணுமென்று உன் அம்மா ஆசைப்படுகிறாள். நீ கேட்டுக்கொண்ட மாதிரியே தந்தி அனுப்பியிருக்கு.'

கடிதத்தை வேலாயுதம் வாசித்தபோது தலையைச் சுவரில் மோதிக்கொண்டு கதறவில்லை. பேராதனைப் பூந்தோட்டத்தில், மகாவலி கங்கையின் புற் படுகையில் அமர்ந்து பறங்கிப் பெண்ணோடு பேசிச்சிரிப்பதற்கு ஒரு நல்ல தமாஷ் கிடைத்துவிட்டதென்றுதான் அவன் அப்பொழுது எண்ணினான்.

அவளுடைய மோகனச் சிரிப்புக்காக அவன் அந்த ஆற்றிற் குதிப்பதற்கே தயாராக விருந்தான். அம்மாவை ஆபத்துக் குட்படுத்துவது ஒரு பெரிய காரியமா?

தகப்பனார் அனுப்பிய தந்தியைப்பற்றி அவன் பேராதனைப் பூந்தோட்டத்தில் உல்லாசமாகக் குலாவிக்கொண்டிருந்த சமயம் பறங்கிப் பெண்ணிடம் சொன்னான். ஆனால் என்ன விபரீதம், கல கல வென்று சிரிப்பொலியை எதிர்பார்த்தவன், பொலு பொலு வென்று ஒரு பெண் கண்ணீர் வடிப்பதையல்லவா பார்க்க நேர்ந்தது.

"இவ்வளவு கடின இருதயம் படைத்தவராயிருப்பீரென்று நான் எதிர் பார்க்கவேயில்லை. காதற் கேளிக்கை ஆடுவதற்காக 'அம்மா ஆபத்தாயிருக்கிறாள்' என்று பொய்சொல்லித் தானா லீவு எடுக்கவேணும்? இதற்குத்தானா அந்தப் பெண் உம்மைப் பெற்று வளர்த்துப் படாத பாடுபட்டு ஆளாக்கி விட்டாள்?" என்று அவனது காதலி அவனைக் கடிந்து கொண்டபோது வேலாயுதம் அயர்ந்து போனான். "நீர் எனக்கு எழுதிய கடிதம் தவறுதலாக உமது தந்தையின் கைக்குப் போய்ச் சேர்ந்தது. பாவம், பிள்ளை மீது வைத்த பாசத்தினால் அந்த மனுஷன் இவ்வளவு பொறுமை காட்டினார். ஆனாற் கடிதம் என்கைக்கு வந்திருந்தால், அதற்கிணங்கி இந்தமாதிரித் துரோகமான ஒரு பொய்த் தந்தி அனுப்பியிருப்பேனென்று எண்ணுகிறீரா? நீர் மகா மோசமான ஆள். இப்படி உள்ளத்தை எந்தப் பெண்ணுமே விரும்பமாட்டாள்." என்று அவள் சீறினாள்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு அவள் அவனோடு பழகுவதே ஒரு மாதிரித்தான்.

3

"என்ன மிஸ்டர் வாய்புலம்புகிறீர்? காய்ச்சலடிக்கிறதா"? என்ற குரல் கேட்டு வேலாயுதம் திடுக்குற்றுக் கண் விழித்தான்.

ஊசி மருந்தும் கையுமாக தாதி பக்கத்தே நின்றாள். "தாய் மொழியைப் பாதுகாக்கச் சத்தியாக்கிரகம் செய்யப் போனீரா? பாவம், தன்னைப் பாதுகாத்துக்கொள்ளத்தான் தெரியவில்லை" என்றாள் அந்தக் குறும்புக்காரி. "அதெல்லாம் ஒன்றுமில்லை, நேர்ஸ், எனது தந்தை மொழிக்குத் துரோகம் செய்தேன்; அதனால் என் தாய்மொழியின் பெயரால் அடிபட்டேன்; உடனே ஊருக்குப் போய் என் தந்தையின் காலில் விழ வேண்டும். இதோ இப்பொழுதே போய்விடுகிறேன்..."

படுக்கையிலிருந்து எழுந்திருந்தவனைப் பிடித்துப் படுக்கையிற் கிடத்திவிட்டு "சரிதான், நோய் முற்றிவிட்டது. இதோ இந்த ஊசியைப் போட்டுக் கொள்ளும்" என்று ஊசிமருந்தை அவன் கையில் ஏற்றினாள் மிஸ்ஸியம்மா.

4

ஒரு மாதத்தின் பின் பொன்வயல் கிராமத்துச் சாலைவழியே மாட்டுவண்டியில் வீடுநோக்கிப் போய்க்கொண்டிருந்த வேலாயுதத்தின் காதில் மாட்டின் சதங்கை ஒலி கணீர் கணீர் என்று மறுபடியும் ஒலித்தது.

பண்டைத் தமிழ் நாட்டில்.....

★

பல காலமாகப் பண்டைத் தமிழகத்தின் பெருமை பற்றியும் பண்பாட்டின் சிறப்பைப்பற்றியும் கேள்விப்பட்டுக்கொண்டிருந்தேன்; படித்துமிருந்தேன். ஆனாலும் கேட்டது படித்தது எதுவும் உள்ளத்தில் நன்கு பதியவில்லை! நம்பிக்கையும் அவ்வளவாக உண்டாகவில்லை.

மகாபலிபுரம் என்று வழங்கும் மாமல்லபுரத்துக்குச் சென்று கண்ணால் நேரிலே பார்த்த பிறகு நம்பிக்கை ஏற்பட்டது. ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் நமது செந்தமிழ் நாட்டில் இவ்வளவு அற்புதமான சிற்பங்களைச் செய்த மகா சிற்பிகள் இருந்தார்கள்! அவர்களை ஆதரித்துப் போஷித்து உற்சாகப்படுத்தி அவர்களுடைய கலைத்திறனைப் பிரகாசிக்கச் செய்த மன்னர்களும் இருந்தார்கள்.

அப்படியென்றால், அந்தக் காலத்தில் தமிழகத்தின் பண்பாடும் சமூக வாழ்க்கையும் எவ்வளவு மேம்பட்டிருக்க வேண்டும்? அத்தகைய மேம்பாட்டை ஒரு சமூகம் அடையவேண்டுமானால் அதற்கு எத்தனை நூற்றாண்டுகளுக்கு முன்னாலிருந்து அச்சமூகத்திலே கலையும் கல்வியும் நல்லரசாட்சியும் நல்லொழுக்கமும் வளர்ந்துவந்திருக்கவேண்டும்? இதையெல்லாம் நினைக்க நினைக்கப் பண்டைத் தமிழ் நாட்டில் வாழ்ந்த நம் மூதாதையர்களிடம் பக்தியும் மரியாதையும் பொங்கி வளர்ந்தன.

—ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி)



யாழ்ப்பாணம் அத்தியடிச் சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகர் கோவில்

ஏறக்குறைய 200 ஆண்டுகட்கு முன்னர் இக்கோவில் அத்தியடியில் நிறுவப் பெற்றது. இக்கோவிலின் மூல ஸ்தானத்திலுள்ள நர்த்தன விநாயகர் விக் கிரகம் தில்லைச் சிதம்பரத்திலிருந்து வரவழைக்கப்பெற்றது. ஆனமையாற்றுன் 'நர்த்தன விநாயகர்' எனக் காரணப்பெயர் கொள்ளலாயிற்று. சிற்பநூல் வல்லுநர் இவ் விக்கிரகத்தின் அமைப்பினைப் பாராட்டியுள்ளனர். இவ்வால யத்தின் தேர்த்திருவிழா தமிழ் வருடப்பிறப்பன்று நடைபெறுவது வழக்கம்.

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க

எனப் பக்தர்கள் பிள்ளையாரை நாளும் போற்றி வணங்கும் கோவில்களுட் சிறப்பு மிக்கதொன்றுக யாழ்ப்பாணம் அத்தியடிப் பிள்ளையார்கோவிலும் விளங்குகின்றது.

சுன்னாகம், திருமகள் அழுத்தகம்

அற்புதமான
வர்ண வேலைகளுக்கும்
அழகிய
அச்சு வேலைகளுக்கும்
பெயர் பெற்றது
for
EVERYTHING IN
QUALITY PRINTING

அச்சியந்திரங்களில் உலகப் பிரசித்திபெற்ற

'ஹைடில்பேர்க்'

போன்ற நவீன யந்திர சாதனங்களுடன் கூடிய அழுத்தகம்



DIAL **805**

THIRUMAKAL PRESS, CHUNNAKAM

வைர மோதிரம்

★ நீலா ராமமூர்த்தி ★

"அம்மா, இன்னுமா உப்புமா கிளறுகிறுய்?" என்ற லலிதாவின் குரல் கேட்டுச் சிந்தனை கலைந்த காவேரி, கண்ணிலே துளிர்த்த நீரைச் சுண்டிவிட்டபடி, கவலை நிறைந்த குரலில் "ராமு ஏதாவது சொன்னனை லலி?" என்றுள்.

லலிதா சிரித்தாள். "உண்மையாகச் சொல்கிறேன் லலி, அவன் முகத்திலே விழிக்கக் கூட என் மனம் கூசுகிறது" என்று பெரு மூச்சு விட்டாள் காவேரி.

காவேரியின் கழுத்தைக் கட்டிக்கொண்ட லலிதா கொஞ்சலாக "அசட்டு அம்மாவே, ஏன் இப்படிக் கவலைப்படுகிறுய்? அத்தானின் தோற்றம்தான் மாறியிருக்கிறதே தவிர, அவருடைய நல்ல குணம் எள்ளளவுகூட மாறவில்லை. போனதைப்பற்றி ஒரு வார்த்தை பேசவில்லை. அவர் அப்பாவிடம் அந்த மோதிரத்தைக் கொடுத்தபோதுகூட "நான் இன்று நல்ல நிலைமைக்கு வந்ததே உங்களால்தான்" எனக் கூறினர் என்றுள்.

"நான் பொல்லாதவளடி லலி" என்று நடுவிற் குறுக்கிட்ட காவேரி, முகத்தை மூடிக் கொண்டு விம்மினுள்.

அவள் கண்களைத் தன் புடவைத் தலைப்பாற் துடைத்த லலிதா, "அப்படி யாரும் நினைக்கவில்லையம்மா உன்னைப்பற்றி; கவலைப் படாதே! பழைய விசுவாசத்தை மறக்கவேயில்லை அத்தான்" என்றுள்.

ஒருவாறு மனம் தேறிய காவேரி கண்ணைத் துடைத்துக்கொண்டு ஒரு வெள்ளித் தட்டில் உப்புமாவையும் அல்வாத் துண்டுகளையும் வைத்து, "இந்தா லலி" என்றுள். "மள மளவென்று காரியத்தை முடித்துக்கொண்டு கிளம்பு அம்மா எங்களோடு சினிமாவிற்கு" என்ற லலிதா அடுத்த நிமிஷமே சிட்டாய்ப் பறந்தாள் மாடியறைக்கு. காவேரி கல்லாய்ச் சமைந்தாள் மறுபடியும்.

* * *

ராமு காவேரியின் மைத்துனி பிள்ளை. பிறந்த சில வருஷங்களிலேயே பெற்றோரை யிழந்த துர்ப்பாக்கியசாலி அவன்.

புத்தனேரி கிராம முனிசீப்பாயிருந்த அவன் தந்தை அவன் ஐந்து வயதுக் குழந்தையாயிருந்தபோது அகால மரணமடைந்தார். அந்த ஏக்கத்திலேயே நோயாளியாகிய அவன் தாய், மூன்று வருடங்கள்வரை காவேரியின் பாதுகாப்பிலிருந்து காலமானுள். சாகும்போது தன் மகன் ராமுவை அவள் கையில் ஒப்புவித்து விட்டுத்தான் சென்றுள். காவேரிக்கு மிகவும் இளகிய மனமாதலால் ராமுவின் தாய் பிழைக்க வேண்டுமே என்று மனதாரப் பாடுபட்டாள். பலன் இல்லாமற் போயிற்று. என்றாலும் போகிறவளுடைய மனச் சாந்திக்காக.....

"ராமுவைப் பற்றிக் கவலைப்படாதிர்கள் அக்கா, நான் காப்பாற்றுகிறேன், கடைசி வரையில். லலியைக் கல்யாணம் கூடச் செய்து வைக்கிறேன்" என்றுள். அப்பொழுது லலிதா நான்கு வயதுக் குழந்தை. காவேரியின் அன்பு மொழியிலேயே மன நிம்மதி யடைந்த ராமுவின் தாயார் அன்றைக்கு மறுநாளே நிம்மதியாகக் கண்ணை மூடினுள்.

ஆண்டுகள் பல ஓடின. லலிதாவும் ராமுவும் படிப்பிலும் அழகிலும் புத்திசாலித்தனத்திலும் நாளுக்குநாள் முன்னேறினர். பெண் வளர, வளர தாயின் மனமும் மாறி வந்தது.

அரைக் காசுக்கு வழியில்லாத ராமுவிற்கா லலிதாவைக் கொடுப்பது. அவளுடைய அழகிற்கும் சமர்த்திற்கும் நான், நீ, என்று போட்டி போட்டுக்கொண்டு வரமாட்டார்களா பெரிய

இடத்துப் பிள்ளைகள் என்று அவள் கருத லானாள்.

லலிதாவோ ராமுவைத் தன் உயிர் நிலை யாகவே மதித்தாள். கல்யாண விஷயத்திற் காவேரியின் மனம் மாறியதைக் கண்டு எதிர்க்க ஆரம்பித்தாள். ராமு இருக்கிறவரை லலிதா தன் வழிக்கு வரமாட்டாள் என்பதை யுணர்ந்த காவேரி அவன் எட்டாம் வகுப்பை முடித்தது முதலே ஒரு வேலையைத் தேடிக்கொள்ளும் படி தூண்டினாள். மாமியின் மன நிலையைக் கண்டு வெதும்பிய ராமுவும் உத்தியோக வேட்டையில் இறங்கினான். வேலை இலகுவிற் கிடைப்பதாயில்லை. மனங்கசந்தாள் காவேரி. அவனுடைய துரதிர்ஷ்டத்தைக் குறித்து சதா ஏசினாள். வேதனையினால் வாடினான் ராமு. இப்படியாக ஒன்றரை வருஷம் ஆன பிறகு ஒரு வேலை கிடைக்கும் போல் இருந்தது. அதற் கும் ஐந்நூறு ரூபாய் பிணைப்பணமாகக் கட்ட வேண்டியிருந்தது. என்ன செய்வான் ராமு.

காவேரியிடம் போய்க் கெஞ்சினான். அவ ளோ "ஐந்து காசு கூடக் கிடையாது; இங்கே இவ்வளவு நாள் உனக்காக நான் செலவழித்த தெல்லாம் போதாதா, இது வேறே தெண்டமா" என்று நிர்த்தாட்சண்யமாகப் பேசிவிட்டாள். அருகிலிருந்த லலிதாவின் முகம் அதைக்கேட்டு வாடியது; கண் கலங்கியது. ஒன்றும் பேச வில்லை.

மாமியின் பதிலால் மனம் நொந்த ராமு, அன்றைக்கே சென்னை புறப்பட்டான், யார் காலிலாவது விழுந்து, எப்படியாவது ஓர் உத்தி யோகத்தைத் தேடிக்கொள்ளலாம் என்ற உத் தேசத்துடன்.

புறப்பட அரை மணி நேரம் இருக்கும் போது, லலிதாவின் தந்தை, "பெட்டிக்குள் இருந்த என் வைர மோதிரத்தைக் காணோமே, பார்த்தாயாடி" என்று கலவரத்துடன், கூவிக் கொண்டே வந்தார்.

திக் என்றது காவேரிக்கு. ராமுவை ஒரு பார்வை பார்த்துவிட்டுத் தேடினாள். லலிதாவும் எங்கெங்கோ தேடினாள். ராமுவிற்கு வயிற்றை என்னவோ செய்தது. மாமி தன்னைச் சந்தேகிப் பாளோ என்ற திகில் ஏற்பட்டது மனதில்; பயத்துடன் அடிக்கடி லலிதாவைப் பார்த்தான். அவளும் கவலை வேண்டாம் அத்தான், நான் இருக்கிறேன் என்ற அர்த்த பாவத்துடன் பார்த்தாள் அவனை.

எனினும், அவன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. தேடி ஆடி ஓய்ந்துபோன காவேரி கடும் புயல்போல் பாய்ந்தாள்.

எடுத்த எடுப்பிலேயே "நீ தானே எடுத் தாய் ராமு, மோதிரத்தை" என்று சீறினாள்.

ஆத்திரத்தினாலும் அவமானத்தினாலும் துடித்த ராமு, "அனுசியமாய்ப் பேசாதேங்கோ மாமி" என்று தன் பெட்டி, படுக்கை, முதலியவைகளை எல்லாம் உதறிக் காட்டினான். அப்பொழுதும் காவேரி நம்பவில்லை. ஒரு பாவமும் அறியாத அவனை வாயில் வந்தவாறு பேசினாள்.

முடிவில் முற்றிலும் புண்ணை மனதோடும் திருடன் என்ற பெரும் பழியோடும், கண்ணும் கண்ணீருமாக ரயிலேறினான், அனுதை ராமு.

மாதம் பல மறைந்தது. மோதிர விஷ யத்தை ஒருவாறு மறந்த காவேரி, லலிதாவின் கல்யாண விஷயத்தில் முனைந்தாள். லலிதாவின் தந்தை நியாயவாதி தியாகராஜன் ஒரு அப்பாவி. ஆதலால், காவேரி வைத்தது சட்டமாயிருந்தது வீட்டில். சதா சட்டப் புஸ்தகமும் கையுமா யிருந்த அவருக்குக் குடும்ப விஷயத்திலேயே சிரத்தையில்லாமல் இருந்தது. எது எப்படிப் போனாலென்ன, நம் காரியம் உண்டு, நாம் உண்டு, என்பதுதான் அவர் கொள்கை. நிற்க, காவேரி ஒரு வார்த்தை சொன்னதுமே லலிதா வுக்கு வரன் தேட ஆரம்பித்துவிட்டார் தியாக ராஜன். ஆனால் என்ன துரதிர்ஷ்டம், அவர் பார்த்த வரன்களில் ஒன்றுவது அமையவில்லை. காரணம் வரதட்சணைப் பேய்தான்.

தியாகராஜனுக்கு அதிக வரும்படியுமில்லை. பூர்வீக சொத்தும் இல்லை. நல்ல சாமர்த்திய மும் இல்லை. இப்படியிருக்க, பெரிய இடம் எப்படிக் கிடைக்கும்? கிடைத்தாலும் ஆயிரம் பதினாயிரம் என்று வாரியிறைத்துக் கல்யாணம் செய்ய வழி ஏது?

காவேரியின் மனம் உடைந்தது. அவ ளுடைய மனக்கோட்டை இடிந்து தரை மட்ட மாகியது. அழகு மட்டும் போதாது; ஒரு பெண் பணக்காரப் புருஷனை யடைய ஐசுவரியமும் வேண்டும் என்ற உண்மையை யுணர்ந்தாள்.

அது முதல் அவள் மனமும் மாறியது. ராமுவிடம் ஏற்பட்ட அலட்சியமும் மறைந்தது. கையிலே வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவானேன்? ராமுவிற்கு என்ன குறைச்சல்? என்ற ஆராய்ச்சியிலும் இறங்கினாள். தியாகராஜனின் மனமும் அதே எண்ணத்தைக்கொண்டிருந்தது.

தான் ராமுவை மனம் நோகப் பேசி விரட்டியதை எண்ணி நாளுக்கு நாள் உருகினாள் காவேரி. அவள் மனதிற் பழைய பாசம் பற்று மடங்காகப் பெருகிவிட்டதால், 'பாவம், ராமு எங்கே இருக்கிறானோ, என்ன செய்கிறானோ, எப்படி அலைகிறானோ' என்று சதா வருந்தினாள். 'அவனைப் போன்ற நல்ல பிள்ளை கிடைக்குமா உலகில். அகியாயமாய்த் திருட்டுப்பட்டம் கட்டித் துரத்தினேனே. பண்டம் ஓரிடம், பழி பத்திடம்' என்று ஆகியிருந்தால்? என்று புலம்பினாள்.

எப்படியாவது ராமுவைக் கண்டுபிடித்து லலிதாவை அவன் கையில் ஒப்புவித்துவிட வேண்டும் என்ற தீர்மானமும் ஏற்பட்டதால், கணவனைத் துணைத்தெடுத்தாள் அவனைக் கண்டுபிடிக்கும்படி. அவரும் எவ்வளவோ முயற்சி எடுத்துக்கொண்டார். முடியவில்லை.

கவலையால் மெலிந்தாள் காவேரி. ராமு வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்ற இரண்டாம் வருஷம் அது.

தாயின் மனதை மேலும் பரிசோதிக்க விரும்பாத லலிதா, ஒரு நாள் "மோதிரத்தைத் திருடியவர் அத்தான் இல்லையம்மா, நான்தான்" என்ற உண்மையை ஒப்புக்கொண்டாள். "நீயா" என்று திகைத்தாள் காவேரி.

சத்தியமாய் நான்தான் அம்மா, அவரில்லை. அன்று நீ அவருக்கு ஐந்நூறு ரூபாய் பணம் கொடுக்க மறுத்ததைக் கண்டு என் மனம் பொறுக்கவில்லை. அவர் மீது இருந்த ஆசையும், இரக்கமும் எனக்குப் பெரும் துணிச்சலைக் கொடுத்தது. சமயம் பார்த்து பெட்டியிலிருந்த மோதிரத்தைத் திருடினேன். எல்லோரும் தேடி ஆடி ஓய்ந்து அத்தானும் ரயிலுக்குக் கிளம்பிய சமயத்தில், எப்படியோ அவருடைய சட்டைப் பையிலும் அதைப் போட்டுவிட்டேன்.

கூட ஒரு கடிதமும் எழுதி வைத்தேன். அதில் 'என்னை நீங்கள் நேசிப்பது உண்மையானால், தைரியமாக உபயோகிக்துக்கொள்ளுங்கள் இந்த வைர மோதிரத்தை. நல்ல காலம் வரும்போது திருப்பிவிட்டு, என்னையும் அடையலாம். என் செய்கை உங்கள் மனத்தை வருத்தும். கவலை வேண்டாம். சமயம் பார்த்துக் குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்பும் கேட்டுக்கொள்கிறேன். தண்டனை கிடைத்தால் அதையும் சந்தோஷமாக அனுபவிக்கிறேன்' என்று எழுதியிருந்தேன் என்றாள். ராமு, தனக்கு எழுதிய கடிதம் ஒன்றையும் லலிதா கொணர்ந்து காட்டினாள். "லலிதா, என்ன சொன்னாலும் நீ செய்த காரியம் பிசகுதான். மெய்யாகவே திருடனுக்கி விட்டாய் என்னை. என்றாலும் நான் உனக்கு, உன் வார்த்தைக்கு, கட்டுப்பட்டவன்; ஆதலால் வந்த பெயரோ வந்து விட்டது. நீ சொன்னபடிதான் செய்வோமே என்ற துணிச்சலில் இறங்கிவிட்டேன். வேலை கிடைப்பது நிச்சயம்; கிடைத்துவிட்டதாகவே வைத்துக்கொள். ஆனால் எனக்கு நல்ல காலமும் வருமா, நம் மனோரதம் ஈடேறுமா, உன்னைக் கல்யாணம் செய்துகொள்ளும் பாக்கியம் கிடைக்குமா"—ராமுவின் கடிதத்தைப் பார்த்துக் கண்ணீர் சிந்தினாள் காவேரி.

"உடனே வரவழை லலி அவனை, ஒரு கடிதம் போட்டு" என்றாள். "ஆகட்டும் அம்மா" என்றாள் லலிதா அகம் மகிழ.

அவள் கடிதம் போட்ட எட்டாம் நாளே வந்தான் ராமு. முற்றிலும் மாறுபட்ட தோற்றத்துடன் சிரித்த முகமாய் மோட்டாரை விட்டு இறங்கிய அவனைக் கண்டதும் காவேரி உள்ளே போய் ஒளிந்துகொண்டாள்.

லலிதாவும் அவள் தந்தையுமே உபசரித்தனர் அவனை. ராமுவின் வளர்ச்சியையும் செல்வாக்கையும் கண்டு பூரித்துப்போன தியாகராஜன் வாய் ஓயாமற் புகழ்ந்தார் காவேரியிடம். அவளோ அவன் முகத்தில் எப்படி விழிப்பது என்ற கவலையிலேயே மூழ்கினாள்.

"அம்மா அம்மா.....!" காவேரியின் சிந்தனைத் தொடர் மறுபடியும் அறுந்தது. சற்றுத் தெளிந்த மனதுடன் லலிதாவின் முகத்தைப் பார்த்தாள்.

பாசத்துடன் அவள் கைகளைப் பற்றிய லலிதா "அத்தான் தற்போதுள்ள நல்ல நிலை

மைக்கு எப்படி வந்தார் என்பதைக் கேட்க வில்லையே அம்மா நீ; நானே சொல்கிறேன், கேள். இங்கிருந்து போனதும் அந்தக் கம்பெனி முதலாளியைப் பார்த்தாராம். அவர் வெகு நல்லவராம். அத்தானுடைய சோகக் கதை யைக் கேட்டதும் மனம் இரங்கி 'முற்பணத் திற் பாதி கட்டு, போதும்' என்றாராம். அப் படியே கட்டினாராம். அத்தானும் வைர மோதி ரத்தை அடைவு வைத்து. முதலாளியின் வீட்டிலேயே ஒரு அறையிற் குடியிருந்து கொண்டு மிகவும் எளிய முறையில் வாழ்க்கை யை நடத்தினாராம். மாதச் சம்பளமாக வந்த நூறு ரூபாயில் பாதிப் பங்கை அப்படியே சேர்த்தும் வைத்தாராம். வேலை விஷயத்தில் இவருடைய உண்மையான உழைப்பைக் கண்டு ஆறு மாதத்திற்கு முன் இருபத்து ஐந்து ரூபாய் அதிகச் சம்பளம் போட்டாராம் முதலாளி. இதெல்லாம் அடிக்கடி அவர் எனக்கு எழுதிய கடிதத்திலிருந்து தெரிந்த விஷயம். போன வாரம் நான் கடிதம் எழுதிய தும் வைர மோதிரத்தை மீட்டுக்கொண்டு வந்து விட்டார் ஒரு மாத லீவில் ' என்றாள்.

அப்போது அங்கே வந்த ராமு குறும்புச் சிரிப்புடன் "என்ன மாமி இது, கண்ணி லேயே படமாட்டேன் என்கிறீர்களே. இன் னமுமா என்னைத் திருடனாக மதிக்கிறீர்கள்?" என்றான் லலிதாவையும் பார்த்துக்கொண்டே.

"சந்தேகம் என்ன ராமு, உண்மை யில் நீ ஒரு பெரிய திருடன்தான்" என்றாள் காவேரி பளிச் என்று. ராமு பழைய நற்குணத் துடனேயே இருப்பதைப் பார்த்த காவேரி பரிபூரண அமைதியடைந்தாளாதலால் அவ ளுடைய இயற்கையான பரிகாசப் பேச்சு இப்படி எழுந்தது.

மாமியின் வார்த்தையைக் கேட்ட ராமு "என்ன நான் திருடனா?" என்றான் பதட்டத் துடன். "உனக்கென்ன பைத்தியமா?" என்று கூச்சலிட்டாள் லலிதா. காவேரியோ தான் பட்ட கவலையை எல்லாம் மறந்து சிரித்தாள்.

"மெய்யாகவே நீ திருடன்தான் ராமு! எங்கள் லலிதாவின் உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் திருடிக்கொண்டு அவளைப் பைத்தியக்காரியைப் போல் இங்கே பரிதவிக்க விட்டு நீ மட்டும் ....."

"அப்பாடா, இவ்வளவு தானா!" என்று நல்ல மூச்சு விட்டனர் காதலர் இருவரும். மாமி இதற்காக நீங்கள் கொடுக் கும் எந்தத் தண்டனையையும் ஏற்கச் சித்தமா யிருக்கிறேன் என்று தலை வணங்கிய ராமு சிரித்தான்.

தண்டனை இல்லாமல் தப்பமுடியுமா? ஆனால் அது என்ன தண்டனை தெரியுமா? என்று சொல்லிவிட்டுக் காவேரி தன் மகளைத் திரும்பிப் பார்த்தாள்.

லலிதா நின்ற இடத்தில் அவளைக் காண வில்லை, மின்னிமறைந்ததுபோல உள்ளே ஓடி விட்டாள்.

"இந்தமாதக் கடைசியிலேயே திவ்விய மான முகூர்த்தம் இருக்கிறதாம். என்ன சொல்கிறாய் காவேரி" என்று கேட்டுக் கொண்டே நுழைந்தார் தியாகராசன்.

"இவ்வளவு எளிதில் எங்கள் மனோரதம் நிறைவேறு மென்று நாங்கள் எதிர்பார்க்கவே யில்லை" என்று இரு உள்ளங்கள் ஒரே சமயத் தில் எண்ணின.



சுழற்று மணிவிளக்குகள்

மணி ஓசை

★

இருந்தமிழே ! உன்னுல் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றுலும் வேண்டேன்

என்ற மனவுறுதியுடன் தமது எழுத்தாலும், பேச்சாலும், செயலாலும் ஈழநாட்டில் இருபத்தைந்து ஆண்டுகளாகப் பாடுபட்டு உழைத்துவந்தது ஒரு திருக்கூட்டம்.

இன்று, 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்; தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன்' என்று நாமனைவரும் முழங்குகின்றோம்; ஆர்ப்பரிக்கின்றோம்.

இப்படிப் பொங்கித் ததும்பும் இந்தத் தமிழ் உணர்ச்சிக்கு வித்திட்டுக் கனி பிடுங்கிய பெருமை அன்று தமிழ் தந்த இச் செம்மல்களுக்கே உரியதாகும்.


இந்த உணர்ச்சியை வாய்க்காலிட்டுப் பாய்ச்சி உத்தமப் பணியாற்றிய வர்களே ஈழத்தின் ஒளி விளக்குகள்; இணையிலா மாணிக்கங்கள். இவர்களுக்கு முன்னதாகவே தமிழ்ச் சுடர்மணிகள் பலர் தோன்றி வழிகாட்டிச் சென்றுள்ளனர். அப் பெருமக்களையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை.

இங்கு ஒளிவீசும் பதினைந்து மணிவிளக்குகளும் தமிழுக்காக உழைத்த வர்கள். இவர்களிற் சமயத்தொண்டாற்றியோரும், பத்திரிகைத் துறையிற் பாடு பட்டோரும், வழிவழிவந்த வைத்தியத் துறையிற் கைவரப்பெற்றோரும், கூட்டுறவு இயக்கத்தைப் பேணி வளர்த்தோரு முளர். இவ்வாறு பலதிறப்பட்ட பணியாற்றி அமரவாழ்வெய்தியுள்ள நந்தா விளக்குகளுக்குத் தமிழ் மக்கள் மணிமண்டபம் கட்டவில்லை. அவர்களை நாம் மறந்தால் எமக்கு மீட்சியில்லை.

ஈழகேசரியுடன் நெருங்கிய தொடர்பு பூண்டிருந்த இப் பெருமக்களுக்கு இவ் வெள்ளி விழா மலரில் ஒரு மணிமண்டபத்தை அமைத்து ஒளிவிளக்கேற்ற வேண்டுமென ஆசைப்பட்டோம். எமது ஆசையைக் 'கரவைக்கவி கந்தப்பனர்' எனும் புனைபெயருக்குள் மறைந்து நின்று எழுத்துலகிற் பல காரியங்களைச் சாதித்துவரும் **திரு. கனக. செந்திநாதன்** மிகச் சிறப்பாக நிறைவேற்றியிருக்கின்றார்.

பொன் வைக்க வேண்டிய பெருமக்களுக்குப் பூ வைத்திருக்கின்றோம்.


அடையா நெடுங்கதவாகிய இம் மணிமண்டபத்துக்குள் இனி அடி யெடுத்து வைப்போம். அங்குள்ள ஒளிப்பிரவாகத்துட் குளிப்போம்.



சைவப் பெரியார் சிவபாதசுந்தரம்

※


தூய வெண்ணீறு நெற்றியிற் றுலங்க, வெள்ளைநிறவேட்டியை மடித்துக்கட்டி, பொருத்தமான சால்வையாற் போர்த்துக்கொண்டு, பெயர்பெற்ற சைவக் குடுமியுடன் குமிழிமிதியடியில், இந்த இருபதாம் நூற்றாண்டின் மத்தியிலும், உலாவி வந்தாரே ஒருவர் அவர்தான் சைவப் பெரியார் சிவபாதசுந்தரமவர்கள். சாதாரண பீ. ஏ. பட்டதாரிகள் பட்டங்களால் மதிப்படைய, பீ. ஏ. பட்டமே அவரால் மதிப்படைந்தது. பெரும் சிந்தனையாளரான பேராசிரியரவர்கள், விரிவுரை ஆற்றும்போதும், அன்பர்களுடன் அளவளாவும்போதும் தர்க்கமுறையில், அழகு பட, தாம் சிரிக்காமலே பிறரைச் சிரிக்கவைத்து, விஷயத்தை விளக்குவார்கள். அவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதிய நூல்கள் பல. அவற்றுள் அகநூலும், திருவருட் பயன் உரையும், சைவபோதக் கதைகளும் எம் நினைவைவிட்டகலாதன. புலோலி, சிவபாதசுந்தரமவர்கள் தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் சைவஉலகத் துக்கே அர்ப்பணித்தவர். அவரின் ஒவ்வொரு மூச்சும் சைவமூச்சாயிருந்தது. அவரின் இறுதி மூச்சு திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணியாகும். சைவ நன் மக்கள் அவரைக் கௌரவிக்க விரும்பினால் அத்திருப்பணியில் முழுமூச்சுடன் ஈடுபடவேண்டிய கடப்பாடுடையர்.



நல்லூர், சுவாமி ஞானப்பிரகாசர்

※


ஜேர்மனிய அரசாங்கம் தனது தபால் முத்திரை ஒன்றிலே நமது தமிழ்ப் பெரியார் ஒருவரின் உருவத்தைப் பொறித்து வெளியிட்டதென்றால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். ஆனால் இது உண்மை. அத்தகைய புகழுக்குப் பாத்திரமானவர்தான் நல்லூர், சுவாமி ஞானப்பிரகாசரவர்கள். வடமொழி, தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் நன்கு கற்றிருந்த சுவாமியவர்கள் எழுபது மொழிகளைப்பற்றி அறிந்திருந்தார்கள். தமிழர் பூர்வீக சரித்திரம், யாழ்ப்பாணத் தரசர், யாழ்ப்பாணச் சரித்திரம், இந்திய நாகரிகம், தமிழர் வரலாறு, தமிழரிடையே சாதி பிறந்த முறை, தமிழரின் பூர்வ இருப்பிடம், தமிழ் அமைப்புற்ற வரலாறு, தமிழ்ச் சொற் பிதிர், தமிழ்த் தாதுக்கள், மொழிக்குடும்பம், தருக்க சாஸ்திரம் என்பன சுவாமியவர்களின் அரிய நூல்களாகும். ஒரு மொழியின் ஆராய்ச்சி வேலைகளில் அகராதி தொகுப்பதும் ஒரு துறையாகும். மிகக் கடினமான இத் துறையிலே யாழ்ப்பாணம் என்றுமே முன்னணியில் நின்றிருப்பதை எவருமே ஒப்புவர். இந்த அகராதி வரிசையிற் புதியதொரு பாதையை வகுத்துத் தமிழ்ச் சொற் பிறப்பு ஒப்பியல் அகராதி என்ற பெரும் பணியைச் செய்த இத் தொண்டே சுவாமியவர்களைத் தமிழரும், மேலைநாட்டாரும் என்றென்றும் நினைவில் வைத்திருக்கப் போதுமானது.



நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

சொல்லென்ற மலரிலே பொருளென்ற புதுமதுச் சொட்டிச் சுரக்கு மமிர்த சுரபியாய் ஒளிர்ந்து, ஈழநாடு பெருமைகொள்ள, இரசிக உலகம் வாயூற ஆயிரம்—பதினாயிரம் கவிதைகளால் தமிழன்னையை அலங்கரித்த பெருமைக்குரியவர்தான் 'தங்கத் தாத்தா' நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவராவர். அவரது ஆடிப்பிறப் பையும், கத்தரி வெருளியையும் படிக்காத இளம் மாணவர்களையும், அதிரவரு மாணிக்க கங்கையாறு பாயும் இலங்கை வளத்தைக் கேட்காத தமிழ் மகனையும், பனைமரக் கும்மியையும் தாலவிலாசத்தையும் பார்த்து வாயூறுத இரசிகனையும் இந் நாட்டிற் காணமுடியாது. ஏருத மேடும், தாயாட்டின் கதறலும், இலவுகாத்த கிளியும் எங்கள் புலவரீந்த அரும்பெரும் நிதியங்கள். 'அன்னநடை பிடியினடை' என்ற ஆறுமுகநாவலர் பாடலும், தளர்விலாத் தொண்டு செய்தமைக்காகச் சூட்டிய 'தாரமாய்த் தாயாளுள் கை'யும் அவர் நமக்குத் தந்த முது சொத்துகள். நாமகள் புகழ் மாலையும், கதிரைச் சிலேடை வெண்பாவும், தந்தையார் பதிற்றுப் பத்தும், மரதன் ஓட்டமும், மருதடி விநாயகர் பாமாலையும், சூரியன் துதியும், சுகாதாரக் கும்மியும், சாவித்திரி கதையும், உயிரிளங்குமரன் நாடகமும் அவர் ஆண்டாண்டாய் அனுபவிக்கத் தந்த செல்வங்கள். இன்னும் எத்தனை எத்தனையோ!


செந்தமிழ் மக்களே வாரீர்—அவர் செப்பும் தமிழ்மொழிச் சீரினைத் தேரீர்.



அழகசுந்தர தேசிகர்

※

வாலிப மாநாட்டினரின் ஆண்டுக் கூட்டமொன்று சுன்னாகத்தில் நடை பெற்றுக்கொண்டிருந்தபொழுது அங்கு இலக்கிய விரிவுரை ஆற்ற வந்த ஒருவர் திடீரென்று, 'நான் என் விரிவுரையை ஆற்றப்போவதில்லை; சூழ் நிலைக்குத் தக்கபடி அரசியலில் ஆனை, ஆவன்னை என்பதைப்பற்றிப் பேசப் போகிறேன்' என்று கூறிவிட்டு, 'அறஞ்செய விரும்பு', 'ஆறுவது சினம்' என்ற இருபெரும் பொருள்பற்றி அழகாகப் பேசிமுடித்தார். அவர் யார் தெரியுமா? அவர்தான் தமிழ் வளர்த்த தாமோதரனாரின் திருக்குமாரரும், இலங்கைச் சர்வ கலாசாலையின் தமிழ்ப் பேராசிரியராயிருந்தவருமான வண. பிரான்சிஸ் கிங்ஸ்பெரி என்ற அழகசுந்தர தேசிகர். பரந்த முகம், நரைத்த தாடி, ஆங்கில உடை, தூலித்த சரீரம், நகைச்சுவையை வாரி வழங்கும் வாய். இவைதாம் அவர்தம் புறத் தோற்றம். அவர் அகம் தூய்மையானது. சமரசபாவ முடையது. எந்த விஷயத்தை யும் ஆராய்ந்து, தான் சரியெனக் கண்டதைத் துணிவுடன் கையாண்டவர் அவர். 'யாம் ஐவேம்' என்ற மொழிபெயர்ப்புப் பாடலின் நயமே தேசிகரைப் படம் பிடித்துக் காட்டும். இராமன் கதை, பாண்டவர் கதை, சந்திரகாசம், மனோன்மணி நாடகம் என அவர் எழுதிய நூல்கள் மாணவர்க்குப் புது விருந்தாயமைந்துள்ளன. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதே தேசிகரின் இலட்சியமா யிருந்தது.



விபுலாநந்த அடிகளார்


※

செந்தமிழ்த் தாயருளாலும், நுண்மதியாலும், பழநூற்றேர்ச்சியாலும் சந்த யாழ் நூலியற்றித் தமிழுலகிற் கருளியவர்தான் விபுலாநந்த அடிகளார் அவர்கள். அடிகளார் கிழக்கிலங்கையிலே மயில்வாகனராய்ப் பிறந்து, ஆங்கிலப்பட்டதாரியாய், மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதராய், அண்ணாமலைச் சர்வகலாசாலைத் தமிழ்த்துறைத் தலைவராய், 'வேதாந்தகேசரி', 'பிரபுத்தபாரதம்' ஆசிரியராய், இலங்கைப் பல்கலைக் கழக முதற் தமிழ்ப் பேராசிரியராய்த் திகழ்ந்து ஈழம் முதல் இமயம்வரை தமிழ்த் தொண்டு செய்தமையை நாடு அறியும். ஆங்கிலவாணியும் மதங்க சூளாமணியும் அவரது இரண்டு கண்கள். அஞ்சினர்க்குச் சதமரணம் என்ற யூலியஸ் சீசரது பாட்டொன்றே அவர் திறமையை எடுத்துக்காட்டப் போதுமானது. கங்கையில் எழுதிவிட்ட ஓலையும், கண்ணப்பரைப் பாடிய அன்பும், பூஞ்சோலை காவலனும், நல்லூரக ராறுமுகநாவலனும் அவர் நமக்களித்த கவிதைச் செல்வங்களாகும். கவியும்-சால்பும், மலையும்-கடலும், நிலவும்-பொழிலும், வண்ணமும்-வடிவும், பண்ணும்-திறனும், குழலும்-யாழும் என்ற கட்டுரைகளின் ஆழ்ந்தகன்ற பொருட் பொலிவை என்னென்பது. இமயம் சேர்ந்த காக்கையையும் நீரரமகளிர் இன்னிசைப் பாடலையும் நாம் மறந்துவிட முடியுமா? ஆனால் அவர் நினைவுக் கறிகுறியாகத் தமிழ் வளர்க்குஞ் சங்க மெதுவாவது இவற்றை அச்சிட்டு வெளிப்படுத்துவதுதான் வருங்காலச் சந்ததிக்குச் செய்யும் உபகாரமாகும்.



குருகவி மகாலிங்கசிவம்

காந்தீயமா, சக்திவழிபாடா, கம்பராமாயணமா, திருக்குறள் விளக்கமா, சொல்லாராய்ச்சியா எதுவானாலும் முன் ஆயத்தமெதுவுமின்றித் 'தொட்டனைத் தூறும் மணற்கேணி' போலக் கற்பனைச் சுரங்கத்திலிருந்து அனாயாசமாக அள்ளி அள்ளித் தன் மேடைப் பேச்சுமூலம் வாரி வழங்கியவர்தான் மகாலிங்கசிவமவர்கள். பிரபல உரையாசிரியர் மட்டுவில், திரு. க. வேற்பிள்ளையின் புத்திரனாகப் பிறந்து, மண்சோறு ஆக்கி விளையாடும்போதே கற்பனைமிக்க கவியெனப் பெயர்பெற்று, பழனிக் குமரன்மீது கவியாத்து, குருகவியெனப் பிரசித்தமாகிக் கற்பனைசக்தியின் கடைசி மூச்சாகத் திகழ்ந்தவர் அவர். 'குரங்கே உனக்கு மரந்தடி தானென்ன குத்தகையோ? சிரங்கே உனக்குப் பெருந்தொடை தானென்ன சீதனமோ?' என்ற கவிதையும், கண்ணுவ மகரிஷி சகுந்தலையை வாழ்த்தி வழியனுப்பும் 'மங்கையிவள் செலும்வழியில்' என்ற பாடலும் அவரை நினைவில் வைத்திருக்கப் போதுமானவை. அரசியல் மேடைகளிலும், இலக்கிய அரங்கங்களிலும் இப்போது பலர் 'சொற்பல'த்தாற் கர்ச்சிக்கிறார்கள்; இதயம் வெடிக்கக் குமுறுகிறார்கள். இவர்களைப் பார்க்கும்போதும் இவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்கும்போதும் 'ஐயோ! அவரில்லாது போய்விட்டாரே' என்ற ஏக்கம் வரத்தான் செய்கிறது. அந்த அவர், கற்பனைச் செல்வர் மகாலிங்கசிவந்தான். அவரோடு அந்தக் கலையும் மங்கி மடிந்துவிட்டது உண்மை.



புலவர்மணி நவநீதகிருஷ்ணபாரதியார்

※


பழைய குருகுல மரபிலே தமிழை முறையாகக் கற்றுத் தேறி, சங்கச் செய்யுள் நடையிற் பாக்கள் ஆக்கும் புலவர் பரம்பரை அருகிவரும் இக்காலத்தில் அதற்கு எடுத்துக்காட்டாகப் புலவர்மணி நவநீதகிருஷ்ண பாரதியார் இருந்து வந்தார். சோழவள நாட்டுத் திருக்கண்ணபுரத்துப் பெருமகனுகிய இவரை ஈழ வளநாட்டு மாவையம்பதி சுவீகார புத்திரனுக ஆக்கிக்கொண்டது. சேர் பொன். இராமநாதனின் மதிப்புக்குப் பாத்திரராகிய இவர், இராமநாதன் கல்லூரியிலும் பரமேசுவரக் கல்லூரியிலும் கடமை ஆற்றினுர். 1922ஆம் ஆண்டு அவர் வெளி யிட்ட உலகியல் விளக்கம் என்னும் செய்யுள் நூல் பாவலர், நாவலர் என்போரின் பெரு மதிப்பினைப் பெற்றுப் பாரதியாரின் பெருமைக்கு நிலைக்களனுக விளங்குகிறது. சமீபத்தில் வெளியிட்ட அவரது திருவாசக விரிவுரை அவரது புலமைமிக்க சங்கநூல் ஆட்சியை விளக்குந் தன்மையதாக மிளிர்கின்றது. பாரதியாரவர்கள் தமிழறிஞர் மாத்திரமன்றி, சுதந்தர நாட்டமுடைய தீர புருடராகவும் விளங்கினுர். காந்தி யடிகளின் கொள்கைகளைப் பின்பற்றி அவர் எழுதிய காந்தி வெண்பா என்ற அச்சுவாகனமேறுத நூல் அவர் உள்ளத்தின் பிரதிபலிப்பாகும். பறம்புமலைப் பாரி, செழுங்கதிர்ச் செல்வம், திருவடிக் கதம்பம், இலங்கைத் தலைவர்களைப் பற்றிய பாடல்கள் இவரது புலமையின் பெறுபேறுகள். "யான் மீண்டும் தமிழ் நாட்டிலே தமிழ் மகனுகப் பிறந்து தமிழுக்குத் தொண்டு செய்யவே விரும்பு கிறேன்" என்று கூறி மறைந்த இச் செழுங்கதிர்ச் செல்வம் மீண்டுந் தமிழ் நாட்டில் உதிக்கத் தமிழர் தவஞ் செய்யவேண்டும்.



முதுதமிழ்ப்புலவர் நல்லதம்பி


※

கொழும்பு சாஹிராக் கல்லூரியிலே தலைமைத் தமிழ் ஆசிரியராக இருபத்தெட்டு ஆண்டுகள் இருந்து இலங்கை முஸ்லீம் மக்கள் மத்தியிலே தமிழார்வத்தை வளர்த்தவர், ஆங்கில நாகரிகத்தில் அக்காலத்தில் திளைத்த கொழும்புத் தமிழரிடையே தமிழ் உணர்ச்சியை ஊட்டியவர், முதுதமிழ்ப்புலவர் நல்லதம்பியெனின் அது மிகையன்று. இலங்கையிலே இஸ்லாமிய இலக்கியங்களைப்பற்றியும், அவற்றின் தத்துவங்களைப்பற்றியும் அறிந்த தமிழ்மகன் அவர்தான். சிறுவர்க்கேற்ற இனிய, எளிய பாடல்கள் இயற்றுவதில் ஆற்றல் வாய்ந்தவர் புலவரவர்கள். இலங்கைச் சுதந்திர விழாவை முன்னிட்டு நடைபெற்ற 'மரதன்' தமிழ்ப் பாடற் போட்டியிலே முதற் பரிசும் பெற்றமை அவரது புகழை உயர்த்தியது. தாகூர் காணும் தோட்டி, ஆய் அண்டிரனும் ஓடைகிழாரும், பாவலன் பாரதி, சிதனச் சிந்து, பொன் பெற்ற துறவி முதலிய அவரது கவிதைகள் பிரசித்தமானவை. சங்கநூ லாராய்ச்சி கைவரப்பெற்ற இப்பெரியார் இலங்கைப் பல்கலைக் கழகத்திலே சிறிதுகாலம் விரிவுரையாளராகவும் பணியாற்றினர். அவர் எழுதிய கவிதைக் கடிதங்கள் மிகச் சுவையுள்ளன. சிறூர் உளப் பாங்குக்கேற்ப அவர் எழுதிய ஈழவாசக வாசிப்புப் புத்தகங்களும், மொழிப்பயிற்சி நூல்களும் உயர்தரமானவை. இவருடைய ஆற்றலைத் தென்னிந்தியாவும் இலங்கையும் போற்றிக் கௌரவித்தது. பரந்த நோக்கமும் உயர்ந்த இலட்சியமுங் கொண்டு எளிய வாழ்க்கை வாழ்ந்த 'நல்லதம்பிப் பாவலன்' எல்லோரதும் இனிய நண்பன்; நன்றி மறவாத நல்லியல்புடையவர்; வெகு அடக்கமானவர். சொற்களைக் கொண்டு அம்மானை ஆடும் இக்காலக் கவிதை உலகைப் பார்க்கும்போது அவர் நினைவு தமிழ்பேசும் மக்களிடை உதித்தே தீரும்.



சங்கம் வளர்த்த சதாசிவ ஐயர்

சங்கமிருந்து தமிழாராய்ந்த மதுரையம்பதியிலே பெருமக்கள் பலர் நான்காம் சங்கமாக மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவித் தமிழிற் பரீக்ஷைகள் நடாத்தி வருவதைக் கண்ணுற்று, இவ் வீழமண்டலத்திலும் அப்படி ஒரு சங்கத்தை நிறுவினு லென்ன என்று யோசித்து, முனைந்து, முயற்சி செய்து வெற்றியும் கண்டவர்தான் சதாசிவ ஐயரவர்கள். அவர் நிறுவிய சங்கந்தான் 'ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கம்.' ஊருக்கொரு பண்டிதரும் மேடைக்குப் பல பேச்சாளர்களு மாக நிரம்பியிருக்கும் இந்த வளர்ச்சிக்கு வித்திட்ட பெருமை ஐயரவர்களையே சேர்ந்தது. தமிழிலும் வடமொழியிலும் முறையாகப் பயின்று மாணவர்கள் சிறந் தோங்க வேண்டுமென்று சுன்னகத்தில் ஒரு பிராசீன பாடசாலையையும் நிறுவித் தகுந்த வித்துவான்களையும் நியமித்தார். கரவை வேலன் கோவை, ஐங்குறு நூறு, வசந்தன் கவித் திரட்டு ஆகிய நூல்களை அவர் அரிதில் முயன்று வெளியிடவும் செய்தார். பகுதி வித்தியாதரிசகராக இருந்த ஐயரவர்கள், இளம் மாணவர்களது இடர்ப்பாட்டை நீக்கத் தமிழ்மொழிப் பயிற்சியுந் தேர்ச்சியும் என்ற அரிய நூலை உதவினர். தேவி தோத்திர மஞ்சரி, இருது சங்கார காவியம் இவற்றைக் கவிதை உருவத்திலே அவர் ஆக்கினர். அவர் நிறைந்த உழைப்பாளி. பலரையும் தன்னுடன் சேர்த்துக் காரியம் பார்க்கக்கூடிய திறமைசாலி. அவரைப் போலச் சங்கமமைத்துத் தமிழ் வளர்க்கக்கூடியவர் இப்போது யாரிருக்கிறார்? ஐயர் தோற்றுவித்த, கலையாக்கங் கருதிய, வெளியீடான 'கலாநிதி'யை நிலைக்கச் செய்ய வேண்டியது அவரது நினைவை நிலைபெறச் செய்வதாகும்.




ஆசுகவி வேலுப்பிள்ளை

※

'அச்சமென்பதிருப்பினும் இல்லாமை சொல்லேன், அதிகநிதி வழங்கினும் இல்லாமை சொல்லேன், பக்ஷத்துக்காயும் நானிலாமை சொல்லேன், பரிகசிப் பவரைத் துணிந்து பரிகசிப்பேன்' என்று தலைநிமிர்ந்து இறுமாப்போடு பாடுங் கவிஞர் யார் தெரியுமா? கல்லடி வேலுப்பிள்ளை என்று பிரசித்தமுற்ற வயாவிளான், ஆசுகவி வேலுப்பிள்ளையாவர். வலிந்து கேட்போரைத் தாக்கும்படி நகைச்சுவையுடன் விடை கூறுவதிலும், அப்படியான பாடல்களைப் பாடுவதிலும் அவருக்கு நிகர் அவரே. அவரைப்பற்றிய கதைகள் கிளைவிட்டுப் பரந்து, கற்பனைகளோடு சேர்த்துக் கிராமங் கிராமமாகப் பலபடி பேசப்படுகின்றன. 'யதார்த்தவாதி வெகுஜன விரோதி' என்ற இலட்சியத்தைக் கடைப்பிடித்துச் 'சுதேச நாட்டியம்' என்ற பத்திரிகையை நடாத்தி எதிரிகளைக் கதிகலங்க அடித்தார் அவர். அவரது 'யாழ்ப் பாண வைபவ கௌமுதி' மிகப் பிரசித்தமான நூலாகும். பிற்காலத்தில், 'உன் சித்தாந்தமென்ன', 'கதிரை வேலவர் பதிகம்' என அவர் பாடியுள்ள பாக்கள் மனதை உருக்கக்கூடியன. நகைச்சுவை செறிந்த அவரது வாழ்க்கையை எடுத்துக் காட்டும் அரிய வரலாறும் இனிய பாக்களின் தொகுதியும் இப்போது எழுதப் படாவிட்டாற் பிற்சந்ததியார் அவரை எப்படி நினைவில் வைத்திருக்கப்போகி றார்கள்? அவரைப்பற்றி நீங்கள் நினைவில் வைத்திருக்க இதோ ஒரு பாடல்:


''தீவிரவி வேகவிடை செப்பவிரண் டர்த்தமொழி
கூற வெதிரிகளை வைக்குறுக்க — மேவிடிபோற்
கண்டனங்கீ றக்கல் லடியானைப் போலொருவ
ருண்டென் றெவருமுரை யார்''



தேசாபிமானி மாசிலாமணி

※

ஈழ நன்னாடு அரசியற்றுறையிலே முன்னேறவும், தாய்மொழியிலே சிறந்தோங்கவும், தமிழ்ப் பண்பாட்டிலே வழுவாதிருக்கவும் வேண்டுமென்ற பெரு நோக்கோடு 'தேசாபிமானி' என்ற பத்திரிகை மூலம் அருஞ்சேவை செய்தவர்தான் ஈழத்து, ரீ.பி. மாசிலாமணிப்பிள்ளை அவர்கள். திருவாங்கூர் உயர் நீதிமன்றத்து நீதி அரசராய் விளங்கிய செல்லப்பாபிள்ளையின் மரபுவழி வந்தவர் இம்மணி. அடிமை வாழ்க்கையை அறவே வெறுத்துச் சுதந்திர புருடராய் வாழ விரும்பிய இவரின் உள்ளம் பத்திரிகைத் துறையை நாடியது. கொழும்பிலே 'தி பீப்பிள்ஸ் மகசீன்' (T. P. M.) எனும் ஆங்கில வாரப் பத்திரிகையையும், யாழ்ப்பாணத்திலே 'தேசாபிமானி' என்ற வாரமிருமுறைப் பத்திரிகையையும் நடாத்தினார். கேலிச் சித்திரங்களையும், தீவிரமான அரசியல் — சமூக அபிப்பிராயங்களையும் வெளியிட்டதனால் 'தேசாபிமானி' ஒரு நிகரற்ற பத்திரிகையாக விளங்கிற்று. தேச ஊழியர் சங்கம், தமிழ் மகளிர் கழகம், சங்கீத சமாஜம் ஆகிய சபைகளை நிறுவி மக்களிடையே தேச பக்தியையும், கலாரசனையையும் வளர்ச்சியுறச் செய்தமையில் மாசிலாமணிப் பிள்ளைக்குப் பெரும்பங்குண்டு. மாதவி வாசித்த மகரயாழைக் கண்டுபிடித்த பெருமை இவருக்கு முரியது. இரசாயன சாஸ்திரம், கிருக பரிபாலனம், தென்னிந்திய சங்கீதம், வாழ்க்கை நூல் என்பன அவரது எழுதுகோலீந்த பெரு நிதியங்கள். மகளிர் முன்னேற்றங் கருதி உழைத்த பெருமகனுருக்கு அவர்தம் மனைவியார் அமைத்த ஞாபகச் சின்னம் 'தமிழ் மகள்'. அதை வாழ்விப்பது அவரைப் போற்றுவதாகும்.



இந்துசாதனம் திருஞானசம்பந்தர்

இந்துசாதனம் சம்பந்தர் என்றவுடன் நமது மனக்கண்முன் தோன்றுவது உலகம் பலவிதக் கதைகள்தாம். இக் கதைகளே உண்மையான ஈழநாட்டுக் கதைகளாகும். கோபால—நேசரத்தினம், குலரத்தினம்—நேசமணி, காசிநாதன்—நேசமலர் என்ற இக் கதைகளே விருப்பத்தோடு படித்து அனுபவித்தவர்கள் பலர். அவை சரளமான நடையுடனும் வற்றாத நகைச் சுவையுடனும் திகழ்ந்தமையால் வாசகர்களே வசீகரித்தன. திருஞானசம்பந்தர் பத்திராசிரியர்; பல நூல்களின் ஆசிரியர்; இவற்றோடு நாடகாசிரியருமாவர். 1913 இல் சரசுவதிவிலாச சபையை நிறுவி இராமாயணம்—அயோத்தியா காண்டத்தைத் தாமே நாடகமாக எழுதி நகைச் சுவைப் பாத்திரமேற்று நடித்து அக் கலை வளருவதற்குப் பேருதவி புரிந்தார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 35 வருட காலம் ஆசிரியப்பணி பூண்ட பிள்ளையவர்களின் கற்பிக்கும் ஆற்றலை இன்றும் பலர் நினைந்து வாழுறுகின்றனர். உரையாசிரியர் மட்டுவில் திரு. க. வேற்பிள்ளை அவர்களின் குமாரர்களுளொருவராகிய இவர்க்குத் தமிழ் நடையும் ஆசிரியத் தொழிலும் பரம்பரைச் சொத்துக்கள். குலவித்தை கல்லாமற் பாகம் படுமன்றே! நாவலர் நடையைப் பின்பற்றித் தாம் எழுதுவதாகப் பெருமை யடைந்திருந்த 'பண்டிதர்' திருஞானசம்பந்தர் அவர்களுக்குத் தமிழ்ப் பத்திரிகை உலகில் ஒரு தனியிடமுண்டு.



வைத்திய வள்ளல் கதிரைவேற்பிள்ளை

※

"பண்டிதர்க்கும் பாவலர்க்கும் மருந்துதவித் தமிழ் வளர்த்த பான்மையாலே, எண்டிசையும் புகழ அவர் கவிபெற்றிங் கிசையதுவு மெய்தி நின்றுய்" என்று வித்துவசிரோமணி சி. கணேசையர் அவர்களாற் பாராட்டப்பெற்றவர்தாம் வைத்திய வள்ளல் கதிரைவேற்பிள்ளையவர்கள். பிள்ளையவர்களது வீட்டுத் திண்ணையிலே பெரும் பண்டிதர்களும், அரசாங்க உத்தியோகத்தர்களும், வர்த்தக மன்னர்களும், பள்ளிக்கூட ஆசிரியர்களும், ஏழைப் பெற்றோர்களும் எப்போதும் குழுமியிருப்பர். வைத்திய வள்ளல் யாதொரு பேதாபேதமுமின்றி முகமலர்ச்சியுடன் அன்போடு மருந்துதவி அகமகிழ்வித்து அனுப்பிவைப்பார். அவர் பிரபுக்களின் சூளாமணி. அதே சமயத்தில் ஏழைகளின் தயாநிதி. பழமையை ஓம்பிப் பாதுகாத்துப் புதுமைக்கும் இடம் தந்து தங்கள் பரம்பரை வைத்தியத்துக்கு ஒளிதந்தவர் அவர். இசைப்பிரியராகவுங் கலாரசிகராகவும் சமய ஆர்வமுடையவராகவும் விளங்கினர். பிள்ளையவர்களின் வீட்டிலே புத்தரும் காந்தியும் விவேகானந்தரும் எப்போதும் ஒளிதந்தனர். கஸ்தூரியார் மனைக்குச் செல்பவர்கள் அருட்குரவர் யோகர் சுவாமிகளின் தரிசனத்தைப் பெறுவதுமுண்டு. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய வைத்தியமணி அவர்களைப் பொதுமக்கள் 'மகான்' என்றே அழைத்தார்கள். மருந்துதவி வாழ்வித்த மாலே போல் வையம் மருந்துதவி வாழ்வித்த வள்ளல் மறைந்து விட்டார். இந்தச் செஞ்ஞாயிறு இனியும் உதிக்குமா?



பொதுநலத் தொண்டன் இராசரத்தினம்

※

யாழ்ப்பாணத்துக் கமக்காரரின் செல்வ நிலை சென்ற பல நூற்றாண்டுகளாக மலையாளப் புகையிலை வியாபாரத்தைப் பொறுத்திருந்ததையும், அது வியாபாரிகளாற் சீரழிக்கப்பட்டு வந்ததையும் கண்டு யாழ்ப்பாணம்-மலையாளப் புகையிலை ஐக்கிய வியாபார சங்கத்தை நிறுவி, இறுதிவரையும் அதன் தலைவராயமர்ந்து, சங்கத்தைத் தளர விடாமல் நடாத்தி வெற்றிகண்ட பெருமைக்குரியவரே பொதுநலத்தொண்டன் ரி. ஸி. இராசரத்தினமவர்கள். மேடையேறிக் கர்ச்சிக்கும் இக்கால அரசியல் வாதிகளைப் போன்றவரல்லர் அவர். உண்மையான தொண்டை மக்களுக்கு எப்படிச் செய்யவேண்டும் என்பதை ஆராய்ந்து, சிந்தித்து மக்களோடு தானும் ஒத்துழைத்து வழிகாட்டியவர். அதனாலேதான் அவர் மக்களின் தலைவரானார்; கமக்காரரின் நண்பரானார். இலங்கை மக்கள் யாவரும் ஒற்றுமையுடையராய்த் தாராள மனப்பான்மையுடன் தொண்டாற்றினாலன்றி உண்மையான உயர்வை இந்நாடு அடையமாட்டாது என்ற பெரு நோக்குடையவராதலின், முற்போக்கான அரசியல் இயக்கங்கள் பலவற்றிலும் பங்குபற்றினார். அமெரிக்க மிஷன் ஸ்தாபனங்களின் பரிபாலனத்திற் பொறுப்புமிக்க பதவிகளை வகித்து வந்தார். வழக்கறிஞராகிப் புகழும் பொருளும் ஈட்டி நல்வாழ்வு வாழ்ந்த இராசரத்தினமவர்களது தமிழ் நடை ஆரம்பகாலத்திற் சிறிது தட்டுத் தடங்கலாக இருந்தாலும், பொதுமக்களிடம் அவர்களது மொழியிலேயே பேசவேண்டும் என்ற குன்றா ஆர்வத்தினால் நல்ல தமிழ்ப் பத்திரிகைகளை வாசித்துத் தமிழ்ப்பேசும் வன்மையை விருத்தியாக்கிக் கொண்டார். அவரது பெருஞ் சேவையை அரசாங்கம் பயன்படுத்திக் கௌரவித்தது. நல்ல கிறீஸ்தவராயும் பொதுநலத் தொண்டராயும் இருந்த இராசரத்தினம் போன்ற தலைவர்களையே ஈழவளநாடு இன்று வேண்டி நிற்கின்றது.

வாழ்க்கைத் தத்துவம்

சத்தியதேவி துரைசிங்கம்

நமது கண்முன்னே உலகமும் பல்வேறு பொருள்களும் பரந்துகிடக்கின்றன. இவற்றை, ஒவ்வொருவரும் தத்தம் பக்குவத்துக்குத் தக்கதாக, வெவ்வேறு விதமாய் நோக்குவார்கள். இலக்கணநூலார் பொருள்களை, உயர்திணைப் பொருள், அஃறிணைப்பொருள் எனவும் வகுப்பர். விஞ்ஞானிகள், திடப்பொருள், திரவப் பொருள், வாயுப்பொருள் முதலியனவாக வகுப்பர். சாதாரண மனிதனின் கண் முன்னே, உலகப்பொருள்கள் கோடானு கோடி பேதமாகக் காட்சி யளிக்கின்றன. அவன், உலகத்துள்ள உயிர்ப் பொருள்களும் உயிரில்லாத பொருள்களும் ஆகிய எல்லாம், தனது புலன்களின் பசியைத் தணிப்பதற்காக இறைவனற் படைக்கப்பட்டன என்று கருதுகின்றன். தன் வயிற்றுக்காக அவற்றைக் கொல்லவும் வஞ்சிக்கவும் அவன் தயங்குவ தில்லை. ஆனல் புராண புருடர்களாகிய மெஞ்ஞானிகளுக்கு உலகம் மூன்றே மூன்று பொருள்களாகக் காட்சியளிக்கின்றது.

1. **எங்கும் எவற்றிலும் கலந்திருக்கும் கருணைவடிவான இறைவன்.**
2. **அவன் பாதங்களை வணங்க உடம் பெடுத்த ஜீவர்கள்.**
3. **அவன் பாதங்களில் அருச்சனை செய்வதற் கென்று தமக்கு அவனற் கொடுக்கப் பட்டுள்ள பூசனைப்பொருள்கள்.**

சுருக்கமாகக் கூறினல், பூசையை ஏற்பவன், பூசிப்பவர், பூசைப் பொருள்கள் மூன்றும் அடங்கியதே ஞானிகளின் உலகம்.

உலகில் துன்பம் நீங்கி நல்வாழ்வு வாழ விரும்பும் ஆடவர், மகளிர் இருபாலாரும் உலகத்தை இத்தகைய நோக்குடன் பார்ப்பது அவசியம். இத் தத்துவ ஞானம், நமது வாழ்க்கையிற் கலக்கும்படி செய்தல் மிகவும் கடினமானது என்றாலும், நாம் இறுதியில் அடைய வேண்டிய இலட்சியம் இதுவேயாகும்.

பெரியோர்களின் வாழ்க்கை முன்மாதிரி

நமது நாட்டிலும், தாய் நாடான புண்ணிய பாரத பூமியிலும் அருள்வயப்பட்ட மகாஞானிகள் வாழ்ந்திருந்தார்கள். அவர்களுட் பலர் கடுந்தவம் செய்து இறைவன் திருவருளைப் பெற்றார்கள். இன்னும் பலர் உலகைத் துறவாது இல்லில் இருந்து முன்கூறிய பத்தி பாவனையுடன் வாழ்ந்து பரம்பொருளைக் கண்டார்கள்; தம்மிடம் இருந்த பொருள்களை யெல்லாம் இறைவனுக்கும், இறைவனடியார்க்கும் அர்ப்பணித்து 'மிச்சிலை' நுகர்ந்து வாழ்க்கை நடத்தினர்கள். ஓர் அடியார் தமது நிலம் முதலிய அனைத்தையும், சிவனடியார் பூசைக்காக விற்று எஞ்சியிருந்த வீட்டையும், அடியாருக்குச் சமையல் செய்ய, பிடுங்கி விறகாக்கினர் எனக் கூறப்படுகிறது. தமது மனைவியைச் சிவனுக்குத் தானம் செய்தார் ஒரு பக்தர். தம் மனைவியின் கழுத்திற் ருலியைக் குங்கிலியத்துக்குக் கொள்முதலாக்கினர் இன்னெருவர். தாம் வருந்திப் பெற்று வளர்த்த ஒரே மகனின் உடலை இறைவனுக்கு நைவேத்தியப் பொருளாக்கினர் சிறுத்தொண்டர். வீடுவாசல், மனைவி மக்கள், பொருள், பொன் என எமது மனவிகாரத்தாற் பல உருவிற்ருேன்றும் உடைமைகள் யாவும், பரம்பொருளுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டிய பூசனைப்பொருள்களே. உண்மைப் பொருளாகிய அவன் முன்பு இவை யாவற்றையும் தன்னையும் சூனியமாகக் கருதும் தகுதியொன்றே மனிதனை உயர்த்தி அவனை இறைவனுடன் கலக்கச் செய்ய வல்லது. இத் தகுதியைப் பெறுவதற்கு, நமது வாழ்க்கையைச் சமயம், அரசியல், பொருளியல் எனக் கூறு செய்யாது முழு வாழ்க்கையையும் வழிபாட்டு மயமாக ஆக்கவேண்டும்.

புத்துயிரளிக்க வேண்டும்

நம்முன்னேர்களுடைய வாழ்க்கை முழுவதும் பக்திமயமாக ஆக்கப்பட்டிருந்தது. அவரவர் தகுதிக்கேற்றபடி எவ்வித இடையூறுமின்றி — குழப்பங்கள் இன்றி — அமைதியான வாழ்வு

நடைபெற்றது. வாழ்க்கைக்கு வரம்பு செய்வ தற்கான வருணச்சிரமதர்மங்களை தத்துவ முறையில் அமைத்துச் சரியாக அநுட்டித் தார்கள். அறிவும் ஒழுக்கமும் மனப் பண் பாடும் உயர்வு தாழ்வுகளை அளக்கும் கருவிகளா யிருந்தன. இவற்றிற் கூடிய தகுதி யுள்ளவர்கள் மற்றவர்களிடம் அன்பும் அருளும் பூண்டு, அவர்களைக் கைதூக்கிவிட ஆவன செய்தார்கள். படி குறைந்தவர்கள் உயர்ந் தோரது முன்மாதிரியைப் பின்பற்றித் தமது அறிவு ஒழுக்கங்களை விருத்திசெய்யக் கடமைப் பட்டிருந்தார்கள். எல்லா வருணங்களைச் சேர்ந் தவர்களிலும் தத்தம் ஒழுக்க நெறியில் நின்று, கருமங்களைச் செய்து முத்திபெற்றவர்கள் உளர்.

நமது வாழ்க்கைக் கட்டடம் அவர்கள் இட்ட அத்திபாரத்திலே கட்டப்பட்டது என்ரு லும், அந்தத் தத்துவ முறையான அத்திபாரத் தைப் பெரும்பாலும் அழித்துவிட்டோம். அதனல் நமது வாழ்க்கை குழப்பம் நிறைந்ததாய் இருக்கிறது. பஞ்சமாபாதகங்களின் நீங்கிய ஆசாரம்—ஒழுக்கசீலம்—என்ற உண்மைத் தத் துவம் நமது வாழ்க்கைமுறையில் துளியளவும் அனுஷ்டானத்தில் இல்லை யென்று கூறலாம். அதனற் பலவிதமாகக் குழம்பிக் கிடக்கும் சமு தாயம் முழுவதும் விழிப்படைந்து வாழ்வுக்குப் புத்துயிரளிக்க முயலவேண்டும்.

சிறந்த தத்துவஞான அறிவும், செயற்றிற னும், பக்தியும் நிரம்பிய பூரணமான மக்களைத் தோற்றுவிப்பது நமது பண்பாட்டின் மறுமலர்ச் சிக்கு அவசியமாகும். அதற்கு நமது வாழ்க்கை யாகிய புத்தகம் அவர்களுக்கு உதவவேண்டும்.

பெண்ணின் வாழ்க்கையிலே

நமது புராதனப் பெண்மணிகளின் வாழ்க்கை முழுவதிலும் பத்தியும் ஆசாரமும் தத்துவ விளக்கமும் நிறைந்திருந்தமை புலனு கும். காலையில் எழுந்ததும் பழந்தமிழ்ப் பெண்மணி தன்முன், தான் வணங்கும் கடவுள், தனது சேவையை ஏற்றுக்கொள்ளும்படி கண வன், குழந்தைகள், சகோதரர்கள், தாய் தந்தை யர்கள் என்ற பல்வேறு வடிவங்களில் நிற்பதாக உணர்ந்து தன் சேவையை ஆரம்பித்தாள். அவர்களை உண்பித்துப் பின்பு தான் உண்டாள்; அவர்களை அணிவித்துப் பின்பு தான் அணிந் தாள். சுகம், துன்பம் இரண்டையும் முன் வைத்து ஒன்றைத் தெரிவுசெய்யும்படி கேட் டால், சுகத்தைப் பிறருக்களித்துத் துன்பத்தைத் தான் பொறுக்கி யெடுக்கும் பண்பை அவளிடம் காணலாம். இன்றைய நவநாகரிகப் பெண்க ளிடம் பல சிறப்புக்கள் இருந்தபொழுதிலும், முற்கூறிய இலட்சியப் பெண்ணிடமுள்ள பொறுமையும், சகிப்புத்தன்மையும், நம்பிக்கையும் உடல்வலியும்பக்திபாவனையும் கொடுக்கும் சாந்தி நிலையை இவர்களிடம் காண்பது அரிதாகும்.

பார்வதிதேவியின் உதாரணம்

உலக அன்னையும், திருவருட் சக்தியுமாகிய உமாதேவியார், இமயமலையரசன் மகளாகப் பிறந்திருந்தார். உரியகாலம் வந்ததும் இறைவன் திருவடிகளையடையும் வேட்கைகொண்டு கடுந் தவம் செய்தார். இறைவன் ஒரு விருத்தப் பிராமணராகித் தேவிமுன் வந்தார். " பேதைப் பெண்ணே, சகல சுகபோகங்களையும் உனக்கு அளிக்கத்தக்க இந்திரன் முதலிய தேவர்கள் எல்லாரும் இருக்கிறார்கள். அவர்களையடைய விரும்பாது, ஊரும், பேரும், உருவும் அற்றவ னும், ஆபரணங்களுக்குப் பதில் பாம்புகளை அணிந்தவனும், பட்டாடைக்குப் பதில் புலித் தோலை யணிந்தவனும், வீடுவாசலற்றுச் சுடலை யில் நின்றுடுபவனுமாகிய சிவனை அடைய விரும்பினையே! உன் புத்தி சரியாய் இருக் கிறதா?" என்று கேலி செய்தார். பார்வதி தேவி " புத்திகெட்ட கிழவரே, இந்திரன் முத லிய தேவர்களுடைய பதவிகளால் என்ன பிரயோசனம்? தனக்கென ஒன்றையும் விரும்பாத பரமசிவனை யடையவே நான் விரும்புகிறேன்; அவர் பாதங்களை யடைய இன் னும் கடுந்தவஞ் செய்வேன்; நீர் அப்பாற் செல்லும்" என்று பதிலளித்தார். இக் கந்த புராணக்கதை பெண்மையின் தவவலிமை, தத்துவ உணர்வு, எளிமையும் தூய்மையும் விரும்பும் மனப்பாங்கு முதலியவற்றை உல குக்கு எடுத்துக்காட்டி வற்புறுத்துவதாகும். நளாயினி, சீதை, சாவித்திரி முதலிய யாவரும் இப்பண்பிற் றிளைத்துப் பக்தி வாழ்வு வாழ்ந் தார்கள். தன் மகன் மேனாட்டிலும் கள்ளும், காமமும், புலாலும் தவிர்த்து வாழவேண்டு மென்று வாக்குறுதி பெற்ற (மகாத்மாவின் தாயார்) புத்லிபாயும், சேவையே உருவெடுத்த ருக்மணி தேவியும் (வினோபாவின் தாயார்) இவ்வழி வந்த பாரதப் பெண்மணிகளாவார்.

மனித நீதியை விற்றுப் பணத்தையும், ஆன்ம சிந்தனைகளை விற்றுச் சுகபோகங்களையும். விலைக்கு வாங்கும் மேல்நாட்டு நாகரிகம் வெகு துரிதமாய்ப் பரவியபோதும், நமது பண்பாட்டை முற்றுக அழித்துவிடமுடியவில்லை. காரணம் நமது தாய்மார்களின் உறுதிப்பாடேயாகும். இனியும் பெண்ணினம் உறுதி தவருது நின்று நமது வாழ்க்கைத் தத்துவங்களை உலகுக்கு எடுத்துக்காட்டுவது அவசியமாகின்றது.

கண்காணாக் கதிர்கள்

★ இ. அம்பிகைபாகன் ★

படம் பிடித்துப் பார்த்து வைத்தியஞ் செய்யும் முறை, இன்று சாதாரணமாகிவிட்டது. எலும்புகளில் ஏற்படும் முறிவுகள், கண் பார்வைக்குத் தோன்றுத உடலின் உட்பாக நோய்கள் ஆகியவற்றைப் படம் பிடித்துச் சுலபமாக அறிந்துகொள்கிறார்கள். இவ்வாறு, வைத்தியத் துறையிற் பேருதவியாகி மனித சமுதாயத்திற்கு வாழ்வளிக்கும் படம் பிடிக்கும் முறைதான் என்ன?

பசுமையான ஒளி

ஒரு மீட்டர் நீளமும், ஐந்து செ. மீ. விட்டமுமுள்ள ஒரு பளிங்குக் குழாயினுள்ளே, இரு நுனிகளிலும் இரு முனைகள் (Poles)) பொருத்தி, அவற்றை ஒரு தூண்டு சுருளின் (Induction Coil) முனைகளோடு இணைத்தால் முதலில் நாம் ஒருவித மாற்றத்தையும் காண முடியாது. பின் குழாயினுள்ளே உள்ள வாயுவைக் குறைத்து, அதன்மூலம் உள் அமுக்கத்தை (Pressure) க் குறைத்தால், வெடிக்குஞ் சப்தத்துடன், இரு முனைகளுக்கு மிடையே மின்னல் கொடியை ஒத்த ஓர் ஒளி தோன்றும். அமுக்கம் மேலும் குறைக்கப்பட்டு, ஒரு செ. மீ. பாதரச அளவுக்கு வந்ததும், அவ்வொளிக் கொடி பரந்து; குழாய் நிரம்பத் தோன்றும். இது, நேர் நிரல் (Positive Column) எனப்படும்.

வாயுவின் அமுக்கம் மேலும் குறைக்கப்பட்டு, ·001 மி. மீ. பாதரச அளவுக்கு வந்ததும் அம் மின்பாய்ச்சலில் ஒரு பெரு மாற்றம் ஏற்படும். இங்கிலீயில், நேர் நிரல் எனப்படும் பகுதியின் ஒளி முற்றும் மறைந்துவிட, எதிர் முனை (Negative pole) யின் எதிரே உள்ள பளிங்குச் சுவரில் ஒரு பசுமையான ஒளி தோன்றும். எதிர் முனையிலிருந்து கண்ணுக்குத் தோன்றுத ஒரு கதிர்க்கற்றை, நேர்முனையை நோக்கிச் செல்கின்றது; அக்கதிர்க்கற்றை பளிங்கிலே விழும் வேளையில்தான் முன் குறிப்பிட்ட பசுமையான ஒளி தோன்றுகிறது. அக்கதிர்கள் எதிர் மின்வாய்க்கதிர்கள் (Kathode Rays) எனப்படும்.

ரொஞ்ஜன் கதிர்கள்

எதிர் மின்வாய்க் கதிர்கள் பளிங்கில் விழும்போது, ஒரு பசுமையான ஒளி உண்டாகின்றதல்லவா? அதே வேளையில், அப் பசும் ஒளியுடன் கூட, கண் பார்வைக்குத் தோன்றுத வேறு கதிர்களும் உண்டாகின்றன. அக் கதிர்களுக்குச் சில சிறப்பான பண்புகளுள. இவ்வுண்மைகளை எல்லாம் ரொஞ்ஜன் என்னும் அறிஞர் ஆராய்ந்தறிந்தார். இக்கதிர்கள் 'ரொஞ்ஜன் கதிர்கள்' (Rontgen rays) அல்லது கதிர்கள், X - கதிர்கள் (X-rays) அல்லது ஊடுருவு கதிர்கள் எனப்படும்.

இக்கதிர்கள், காந்தப் புலங்களினாலும் நிலை மின்சாரப் புலங்களினாலும் தாக்கப்படுவதில்லை. இவை நேர்வரைகளிலேதான் செல்லும். சாதாரண ஒளிக்கதிர்கள் ஊடுருவிச் செல்ல முடியாத சில பொருள்களை ஊடுருவிச் செல்லும் இயல்பு இவைகளுக்குண்டு.

நமது உடம்பினூடாக ஊடுருவிச் செல்லும் போது சதையினூடாக மட்டுமே இவை செல்லும். எலும்புகளினூடாக இவை செல்வதில்லை. உடம்பினுள்ளே தற்செயலாக ஏதாவது ஊசி, சன்னம் முதலியவை சென்றிருந்தால், அவற்றினூடாகவும் இக்கதிர்கள் செல்வதில்லை. எனவே ஊடுருவிச் செல்லமுடியாத பொருள்களின் நிழல்களைத் திரையிலே பெறுவது சாத்தியம். இவை தாக்கக்கூடிய படம் பதியும் தகடுகளில், இவற்றால் ஏற்படும் நிழல்களைப் பெற்றால், இக்கதிர்களின் பாதையிற் குறுக்கிட்ட எலும்பு, சன்னம், ஊசி முதலியவற்றின் வடிவங்கள் தகடுகளிலே தெளிவாகத் தோன்றும். அவற்றைச் சரிப்படுத்தினால், 'பொருள்களின் ஊடுருவு கதிர்ப்படம்' (An X-ray picture of the object - Radiograph) கிடைக்கும்.

பல வழிகளிற் பயன்

உணவுக் குழாயில் (Alimentary Canal) ஏதாவது நோய் இருப்பின், நோயாளிக்குச் சற்று நிமிஸயம் (Bismuth) உட்கொள்ளக் கொடுத்துப் 'படம்' பிடிப்பார்கள். நிமிஸயத்திற்குப் பதிலாக 'பாரிய கந்தகை' (Barium Sulphate) யும் உபயோகிக்கப்படுகிறது. இவை ஊடுருவு கதிர்களை உறிஞ்சிக்கொள்கின்றபடியால் தெளிவான நிழல் திரையிலே தோன்றும்.

* * *

நாம் அறிந்தமட்டில், வைத்தியசாலைகளில் மிகவும் பயன்படும் ஊடுருவுக் கதிர்கள், வேறும் பல முக்கியமான வழிகளிற் பயன்படுகின்றன என்பதைப் பலர் அறியாமல் இருக்கலாம்.

தொழிற்சாலைகளிற் செய்யப்படும் உலோகப் பொருள்களிலும் எந்திரங்களின் பகுதிகளிலும் முள்ள குறைகளை இக்கதிர்கள் தெளிவாக விளக்கும் பண்புடையவை. ஆகாய விமானங்கள், மற்றும் எந்திரங்கள் ஆகியவற்றின் பாகங்களைச் சோதனை செய்வதில் ஒரு முக்கிய பங்கு இக்கதிர்களுக்கு உண்டு.

ஆரம்பத்தில் வைத்தியர்களின் உதவிக்கு மட்டும் கைகொடுத்து உதவிய ஊடுருவு கதிர்கள், இன்று சகல துறைகளிலும் மிகவும் உபயோகமானதாக இருக்கின்றன. வைத்தியத் துறையில் உறுதுணையாக விளங்கிவரும் இக் கதிர்கள், இன்று சகல தொழிற் துறைகளுக்கும் உற்ற நண்பனாக விளங்குவதிற் புதுமை எதுவும் இல்லையே!

சாதாரண மனிதனும் விஞ்ஞானமும்


★

சாதாரண மனிதன் விஞ்ஞானம் என்றால் என்ன என நினைக்கின்றான் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். சோதனைச் சாலைகளில் வேலை செய்கிறவர்களாயும், நவீனக் கைத்தொழிலுக்கும் வைத்தியத்துக்கும் காரணமான புதிய விஷயங்களைக் கண்டு பிடித்தவர்களாயும் உள்ள மக்கள் செய்யும் காரியங்களையே அவன் மனத்தில் எண்ணுகிறான். சிலர் மறைமுகமாகவோ நேர்முகமாகவோ விஞ்ஞானத்தைக் குறை கூறுகிறார்கள்; விஞ்ஞானத்தைப் போரில் பயன்படுத்துவதை, முக்கியமாக அதில் அணுவின் சக்தியை உபயோகிப்பதை, அவர்கள் தங்களுடைய எண்ணங்களின் முன்னணியிற் கொண்டிருக்கலாம். வேறு சிலர் தங்களுடைய சொந்தக் கருத்தைப் பிறர் மதிக்கும் பொருட்டு, அது 'விஞ்ஞானப் பண்பு'ள்ளது என்று சுட்டுகிறார்கள்; விஞ்ஞானத்தைப் பல துறைகளில், முக்கியமாக—வைத்தியத்துறையில் பயன்படுத்தியதால் விளைந்துள்ள சிறந்த நன்மைகளைப் பலரும் அறிந்திருக்கும் காரணத்தாற்றான் தங்கள் கருத்துக்கு அவர்கள் இவ்வாதரவு பெற முயலுகிறார்கள்.

—ஜேம்ஸ் பி. கோனன்ட்

தோற்
செருப்புகள்

இலங்கையிலே தயார்செய்யப்பெற்றவை.



விலை ரூ.
5-90

அளவு:
4-10

'வெயரோல்'

மேற்பாகம் முழுவதும் தோல். கீழ்ப்பாதமும், குதியும்
வார்த்தெடுத்த றப்பரால் உருவாக்கப்பெற்றுள்ளன.

Bata

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்

150, ஆஸ்பத்திரி வீதி :: யாழ்ப்பாணம்

ரெலிபோன்: 70 & 137 ஆரம்பம்: 1918 தந்தி: 'லக்ஷ்மி'

கீழ்க்கண்டவைகளுக்கு ஏஜண்டுகள்:

★ ஒஸ்ரின் கார்கள், வான்கள்,
★ மொறிஸ் கொம்மேஷல் வான்கள், டிரக்குகள்,
★ பிலிப்ஸ் றேடியோக்கள்,
★ இங்கிலீஷ் இலக்றிக் றிவிறிஜிறேற்றர்கள்,
★ றப்பியர் தண்ணீர்ப் பம்புகள்,
★ நாஷனல் நெல்குற்றும் யந்திரங்கள்,
★ வுளோறன்ஸ் குக்கர் அடுப்புகள்,
★ றலி சைக்கிள்கள்,
★ றெமிங்ரன் ரைப்றைற்றர்கள்,
★ றெமிங்ரன் கூட்டல் கணித்தல் யந்திரங்கள்,
★ எக்சைட் லூக்காஸ் பற்றறிகள்

★ ★ ★

எங்கள் புதிய சேவை நிலையத்தில் மோட்டார் வாகனங்கள் கழுவுதல், எண்ணெய் அடித்தல் முதலிய வேலைகள் தற்கால விசேஷ முறையிற் செய்துகொடுக்கப்படும்.

றேடியோ பழுது பார்த்தல், பற்றறிகள் சார்ஜ் செய்தல் முதலிய வேலைகளும் குறிக்கப்பட்ட திகதியிற் செய்துகொடுக்கப்படும்.

மணிக்கூண்டு வீதியிலுள்ள எங்கள் மோட்டார் ரேடியோ ஸ்தாபனத்துக்கு வந்துபாருங்கள்.

150, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள எங்கள் பிரதான ஸ்தாபனத்தில்

* நெல், * அரிசி,
* நவ தானியங்களும்,
* பலவித சாய்ப்புச் சாமான்களும்

நிதான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

★ ★ ★

உங்கள் யாபேரினதும் ஆதரவை வேண்டுகிறோம்

The Jaffna Co-operative Stores Ltd.

150, Hospital Road, JAFFNA.

எதிர்கால உலகம்

← சண்பகம் →

எதிர்கால உலகம் எப்படி இருக்கும்? இது மிகப் பெரியதொரு சிக்கலாகிவிட்டது? ஆனல் இச் சிக்கலுக்குத் தகுந்த பதில் அளிப்பது எளிதல்ல. இன்று கொம்யூனிசமும் முதலாளித்வமும் பயங்கரமான போட்டிகளில் ஈடுபட்டிருக்கின்றன. இவ்விரண்டினிடையேயும் உலகம் சிக்கிக்கொண்டு அல்லற்படுகிறது. ஆகவே, இவற்றில் எது வெற்றி பெறுகிறதோ, அதிலே தான் உலகத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது எனலாம். ஆனல் இது ஒரு புத்திசாலித்தனமான விடையாகத் தெரியவில்லை. ஏனென்றல், கொம்யூனிஸம்—முதலாளித்வம் ஆகிய இரண்டு சித்தாந்தங்களும் மக்கள் விருப்பம், நாட்டின் சூழ்நிலை ஆகியவற்றிற்கு ஏற்ப உலகில் நிலை பெறலாம். அவை ஒன்றோடொன்று போரிட வேண்டுமென்றே, அல்லது போரில் தோல்வியுறும் ஒன்று முற்றுக அழிந்து விடுமென்றே எண்ணமுடியாது.

விஞ்ஞானியின் கையில்

ஆகவே, தேசாதிபதி கே. எம். முன்ஷி அவர்கள் கூறுவது போல எதிர்கால உலகம் விஞ்ஞானிகள் கையிலேதான் தங்கியுள்ளது. உலகின் எங்கோ ஒரு மூலையிலிருந்து கொண்டு விஞ்ஞானிகள் சிலர் ஒன்று கூடியோ, அல்லது தனித்திருந்தோ ஏதாவது செய்தால் அது மனித சமுதாயம் முழுவதையுமே பாதிக்கிறது. விஞ்ஞானி ஒருவன் வாழ்வியைக் கண்டுபிடித்தால், அது அவனுடைய தனிச் சொத்தாக இல்லாமல் உலகமெல்லாம் பரவுகிறது. அங்ஙனமே அணுகுண்டை எங்கோ ஒரு விஞ்ஞானி பரீட்சித்துப் பார்த்தாலும் உலகம் முழுவதுமே அவனை ஆவலோடும், பயத்தோடும் திரும்பிப் பார்க்கிறது. எனவே, 'உலகின் விதி' விஞ்ஞானியின் கையில் இருக்கிறது என எண்ணுவதும், விஞ்ஞானி எங்ஙனம் தன் தொழிலை வளர்த்துக்கொள்ளுகிறன் என்பதை ஆராய்வதும் நியாயமானதேயாகும்.

சில காலத்திற்கு முன்பு கூடிய ஜனீவா மகா நாட்டின் வெற்றி தோல்விகளிற் சிலருக்கு ஐயப்பாடு உண்டு. ஆனல், விஞ்ஞானத் துறையில் அது செய்த முடிவு மகத்தானதும் மக்களினம் தலைவணங்க வேண்டிய ஒன்றுமாகும். ஜனீவா மகாநாடு ஆக்க நலன்களுக்கு அணுசக்தியைப் பயன்படுத்த வேண்டும் எனச் செய்த முடிவு மிக முக்கியமானதாகும். அன்றையிலிருந்து வைத்திய; விவசாய, கைத்தொழில் முதலிய துறைகளுக்கு அணுசக்தியைப் பயன்படுத்துவது பற்றி அறிஞர்கள் அதி தீவிரமாகச் சிந்தித்து வருகிறார்கள். இதனை அறிவியல் துறையில் நம் கண்ணிற் காணுகின்ற மறுமலர்ச்சி எனலாம்.

உலகமக்கள் தொகை அதிகரித்தல்

மக்கள் தொகை அதிவிரைவாக வளர்ந்து வரும் காலம் இது. "ஒரு செகண்டில் இரண்டு குழந்தைகள் பிறக்கின்றன; இருபத்து நான்கு மணி நேரத்தில் ஏறக்குறைய ஓர் இலட்சம் புதிய மனித உயிர்கள் இங்கு வாழ வருகின்றன. இந்தக் கணக்குப்படி பார்த்தால் உலக மக்கள் தொகை ஒரு வருடத்தில் 36·5 மில்லியனை வளருகிறது" என்றார் ஸ்ரீ முன்ஷி அவர்கள். உலகத்தின் செல்வ நிலையைப் பொறுத்த வரையில் இவ் வளர்ச்சி மிகப் பயங்கரமானது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இந்தச் சிக்கல் பொருளாதார அறிவியல் அறிஞர்களின் ஆராய்ச்சிக்கு உரியதாகும்.

ஒரு சில இடங்களிற் கர்ப்பத்தடையினல் மக்கள் தொகையைக் குறைக்க (காரணம், எல்லோரும் இம்முறையை வரவேற்கவில்லை) முயல்வதோ, அல்லது இன்று நடைமுறையிலுள்ள விவசாய சாதனங்களின் மூலம் கொஞ்சம் அதிகப்படியான ஏக்கர் நிலங்களைப் பயிரிடுவதினலோ சிக்கல் தீர்ந்து விட்டதாக எண்ண முடியாது. விஞ்ஞானிகள் சிலர் கூறுவதுபோல

வனந்தரங்களையும் நீண்ட தரிசு நிலங்களையும் விவசாயப் பண்ணைகளாக்கிச் சூரியக் கதிர்ச் சக்தி மூலமும், அணுசக்தி மூலமும் உணவுப் பண்டங்களைப் பெருக்க வேண்டும். இத்துறையிலே தேசிய, அரசியல் வேறுபாடுகளை மறந்து விட்டு மக்கள் இனத்தின் சுபீட்சம் ஒன்றே நோக்கமாகக் கொண்டு அறிவியல் அறிஞர்களும், பிற தலைவர்களும் உழைத்தல் அவசியம்.

ஐன்ஸ்டையின் அறிவியற் சித்தாந்தம்

சென்ற நூறு ஆண்டுகளில் இயற்கையின் இரகசியங்களை அறிந்து, ஆராய்ந்து விஞ்ஞானம் எவ்வளவு விரைவாக வளர்ந்ததோ அவ்வளவுக்கும் நேர்மாறாக மந்த நிலையில் ஆத்மீகம் பின் தங்கியுள்ளது. வாழ்க்கையின் தத்துவங்கள் மறக்கப்பட்டு, சரித்திரம் கற்பிக்குப் போதனைகள் மறக்கப்பட்டு, வெறுமனே வீம்பாலும் படை பலத்தாலும் ஆரவாரம் செய்யும் தன்மையே வளர்ந்துள்ளது. சுருங்கக் கூறின், உலோகாயதம் மற்றவற்றைக் கபளீகரம் செய்து விட்டது எனலாம்.

தனது ஒரே அறிவியற் சித்தாந்தக் கொள்கையினால் — Theory of Relativity — உலகத்தின் 'தலைவிதி'யை நிர்ணயிக்க முயன்ற பிரபல விஞ்ஞானியான ஐன்ஸ்டைன் அவர்கள் உலகத்தின் எதிர்காலத்தைப் பற்றிக் கூறியுள்ளதை ஆராய்தல் வேண்டும். ''எனக்கு மூன்றாவது உலக யுத்தத்தில் என்னென்ன ஆயுதங்கள் உபயோகப்படுமென்பது தெரியாது. ஆனால் நான்காவது உலகப் போரில் எத்தகைய ஆயுதங்கள் பயன்படுத்தப் படுமென்று கூறிவிடலாம்;— அதாவது கல்லாயுதங்கள்.'' இதிலிருந்து மூன்றாவது உலக யுத்தம் எவ்வளவு பயங்கரமானது என்பதும், அது மனித இனத்திற்கு எவ்வளவு சாபக்கேடானது என்பதும் ஒருவாறு புலனாகின்றதன்றோ?

அன்பை வளர்ப்போம்

ஆகவே, எதிர்கால உலகத்தில் இன்னல்கள் குறைந்து மக்களினம் சுகமாக வாழவேண்டுமென்பதில் அக்கறை கொண்டவர்கள் இந்நாள் வரையில் தத்துவ ஞானத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் இடையில் ஏற்பட்டு வந்த பெரும் பிளவை மூடி அவ்விரு துறைகளையும் ஒத்துப் போகச் செய்தல் வேண்டும். விஞ்ஞானத்தின் கண்டு பிடிப்புகளினால் மனிதனுடைய சுய தேவைகள் பூர்த்தியாக வேண்டுமே தவிர அவனுக்கிருக்கும் அச்சத்தை வளர்த்துத் துன்பத்தைப் பெருக்கக்கூடாது. அடுத்தபடி, தத்துவ தரிசனத்தினால் மக்கள் ஒருவருக்கொருவர் அன்பை வளர்த்துச் சுயநலமற்ற சேவைகளில் ஈடுபட வேண்டும். இந்தவகையில் தான் வருங்கால உலகத்தில் அமைதியும், இன்பமும் பெருக முடியும்.

மனிதகுல உரிமைகள்

மனிதகுல உரிமைகள் பாதிக்கப்படும்போது அதிலே தலையிட்டு நீதிகாணும் 'தலையிடுங் கொள்கை'யைக் கடைப்பிடிக்க மனிதன் கற்றுக் கொள்ளவேண்டும். உலகில் எப்பகுதியில் வேண்டுமானாலும் போகவும், வாழவும், வேலை செய்யவும், சாகவும் மனிதனுக்கு உரிமை அங்கிகரிக்கப்படவேண்டும். ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குப் போகவும், அங்கு வசிக்கவும் விதிக்கப்படும் தடைகள் நீக்கப்படவேண்டும். குடியுரிமையும், பிறப்புரிமையும் பிறந்த இடத்தை மட்டுமே பொறுத்ததாக இருக்கக் கூடாது. இத்தகைய பாகுபாடற்ற கண்ணோட்டம் இன்றுள்ள சர்வதேச தகராறுகள் பலவற்றுக்குப் பரிகாரங் காண உதவியாயிருக்கும்.

—டக்டர் லோஹியா

அருள் நெறி

வித்துவான், பொன். அ. கனகசபை ★

மனித சமுதாயம் அருள் நெறியாளர் காட்டும் அடிப்பாட்டிலேயே நடந்து வருகின்றது. புறத்தேயுள்ள பகையை வென்று பூமியை ஆள்வோர்தாமும் அகத்தேயுள்ள பகையை வென்ற அறநெறியாளரையே பின்பற்றுகின்றார்கள். அருள்நெறியாளரின் அருட்செல்வமே, செல்வத்துளெல்லாந் தலைசிறந்த செல்வம். மண்ணுலகில் நல்லவண்ணம் வாழ்வதற்கு இவ் அருள்நெறியே வழிகாட்டுகின்றது.

அருள்நெறி முதன்முதலாக அரும்பிய நிலம் தமிழ் நிலம். பழந் தமிழ் நாட்டினர், பரந்து விரிந்த ஆகாயத்திலும் பரமன் அருளைப் பார்த்தார்கள். ஓங்கி உயர்ந்த மலையில் உள்ளொளியைப் பெருக்கினர்கள். 'இழும்' என இழிந்து வரும் அருவியிலும் இறை யருளையே கேட்டார்கள். மாலைமதியமும் வீசுதென்றலும் மக்களை அருள் நெறிக்கே ஆற்றுப்படுத்தின. இயற்கையினூடாக விளங்கிய இறைவனருள், எல்லோர்க்கும் இன்பத்தையே தந்தது.

பால் நினைந் தூட்டும் தாயினும் பார்க்கப் பரிவுடையதாகவே அருளைப் பாடினர்கள். அவ்வருளை உலகப் பெண்ணாகவே கற்பனைசெய்து 'உமாதேவி' எனப் பெயரும் இட்டார்கள். உருவமில்லாமல் எங்கும் வியாபித்துள்ள இறையருளுக்கு — உமாதேவிக்கு — உருவமுந் நிறமுங் கொடுத்தார்கள். உருவின்றி எங்கும் வியாபகமான உமையம்மையாரை நீல நிறத்தவராகவே நினைந் துருகினர்கள். மெய்ஞ்ஞானிகள் கண்ட இவ் வுண்மையை இன்று விஞ்ஞானிகள் நிரூபித்துவிட்டார்கள். எங்கும் வியாபித்துள்ளதோர் உருவமும் இல்லாத ஆகாயத்தின் நிறம் நீலம் என்றே ஆராய்ச்சியாளர் நிறுவியுள்ளார்கள். ஆயினும் மெய்ஞ்ஞானச் செய்திகளுட் பல விஞ்ஞானத்தால் உணரவும் உணர்த்தவும் முடியாதவை. அருள் நெறியாளர்களே அவற்றை அநுபவிக்க முடியும். ஆதலினாலே தான் அருள்நெறியாளர்கள் கல்லிலுங் கடவுளைக் கண்டார்கள்; கல்லைக் கலையாக்கிக் கலையைக் கடவுளாக்கினர்கள்.

முரஞ்சியூர் முடிநாகனர், முதற்சங்கத்தில் அங்கம் வகித்த அருள்நெறிச் செல்வர்; ஈழநாடு ஈன்றெடுத்த இன் தமிழ்ச் சான்றோர்; இலங்கையிலிருந்து இமயம் வரை அருள்நெறிப் பிரசாரஞ்செய்த அந்தணாளர். அவர் இமயத்தில் வசித்த அருள்நெறியாளர்களை இதயபூர்வமாகப் போற்றினர். அவர்கள் முத்தீவேட்டு வழிபாடாற்றும் முறைமையினையும் புறநானூற்றிற் போற்றிப் பாடினர். இமய மலையிலும் பொதியமலையிலும் அருள்நெறியாளர்கள் இருப்பதனாலேயே அவை அழியா வரம் பெற்று விளங்குகின்றன.

அருள்நெறியாளர்கள் காலையிற் கண்விழிக்கும்போது 'போற்றினன் வாழ்முத லாகிய பொருளே' எனப் பள்ளி எழுச்சி பாடியே கண் விழித்தார்கள். இமைப்போதும் இறைவனை மறவாது வழிபட்டார்கள். உண்ணும் நீரினும் உயிரினும் பெரிதாக இறைவனை மதித்தார்கள். பாழிலே மேட்டிலே பாய்கின்ற நீரைப் பயிரிலே பள்ளத்திலே பாய்ச்சுதல்போலப் பயன்பட்ட முயற்சியாகவே அருள்நெறிவாழ்வைக் கருதினர்கள். ஆண்களிலும் பார்க்கப் பெண்களே அருள் நெறியைப் பேணி வளர்த்தார்கள். காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், திலகவதியார் போன்ற பெண்மணிகள் ஆற்றிய அருள் நெறிப் பணியாலன்றே நாமுஞ் சைவரென நாடறிய வாழ்கின்றோம்!

அன்னையர்கள் பாலூட்டும்போது அருட்பாலையுங் கலந்தூட்டினர்கள். 'தெய்வம் இகழேல்', 'திருமாலுக் கடிமை செய்' என்பவற்றைப் பால் மணம் மாறுப் பருவத்திலேயே பாலருக்குப் பயிற்றினர்கள். சீருஞ் சிறப்பும் பெற்ற தெய்வ சமுதாயத்தை ஆக்குவதற்காகவே, செல்வக் குழந்தைகளைத் தெய்வத்

தலங்களுக்குச் சுமந்து சென்றார்கள். 'மக்கள் — துங்கமுயர்ந்து வளர்கெனக் கோயில்கள் சூழ்ந்ததும் இந்நாடே' எனப் பாரதியார் அவர் களைப் பாராட்டினர். பெற்ற தாயரது உடல் மண்ணே, பிறந்த திருநாட்டுக்கு அருளொளி யைக் கொடுக்கின்றது. செந்தமிழ் நாட்டு மண் ணின் தெய்வத்தன்மையை உணர்த்துவதற் கன்றே சிவபெருமான் மண்சுமந்த திருவிளை யாடலைச் செய்தருளினர். தமிழ் மண்ணிலன்றி வைகையாற்றிலும் இந்துமாக் கடலிலும் அருள் நெறி கலந்திருக்கின்றது. வைகையாற்றிலே ஞானசம்பந்தரின் அருள்நெறி ஏடு தவழ்ந்து சென்றது. இந்துமாக்கடலிலே காலங்கடந்த அருள்நெறி ஏடுகள் கரைந்து கலந்திருக்கின்றன. திருஞானசம்பந்தரின் தெய்வப்பாடலை எரியாது காத்ததும் இந்நிலத்து நெருப்பல்லவா?

ஈழவள நாட்டுக்கும் இமயமலைக்கும் இடையே மண்டிக்கிடந்த அருள்நெறியை, மண் ணுலகம் முழுவதற்கும் பரப்ப முற்பட்டவர்கள் நம்முன்னோர்கள். தென்னாடுடைய சிவனே எந் நாட்டவர்க்கும் இறைவனைக் காட்டிய பெருமை மணிவாசகரைச் சார்ந்ததாகும். மணி வாசகரைப் பின்பற்றியே திருஞானசம்பந்தர் 'ஞாலகின்புகழே மிகவேண்டும் தென் ஆலவாயி லுறையும் எம்ஆதியே' எனப் பாடினர். சுந்த ரர் 'அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன்' எனப் பரவினர். 'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்' எனப் பணிந்தார் சேக்கிழார் பெருமான்.

நம்முன்னோர் நமக்குத் தேடித்தந்த திரவி யங்கள் ஆலயங்களிலே இருக்கின்றன. அப்ப ரடிகளின் திருப்பணியை மேற்கொண்டு ஆலயங் களைப் புனிதப்படுத்துவோம். தமிழோடிசை பாடி, உள்ளங்கலந்த வழிபாட்டை ஆலயங்க ளிலே உண்டாக்குவோம்; செந்தமிழ் ஆலயங் களிலே பைந்தமிழ் முழங்கச் செய்வோம். சிவ னடியார் ஆகிய நாம் மக்கள் சேவையை மகே சுரன் சேவையாக எண்ணியன்றே செய்தல் வேண்டும்.

"முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே."

என்ற திருவாசகத்தைப் பொன்னே போற் போற்றும் நாம் 'பழமைக்குப் பழமையாயிருக் கும் பரம்பொருளே புதுமைக்குப் புதுமையா யிருந்து புதுவழி காட்டுகின்றார்' என்ற மணி வாசகர் கூற்றைத் தெரிந்துகொண்டால், அருள் நெறி வாழ்விலே காணப்படும் மூடக் கொள்கைகளும் குருட்டு நம்பிக்கைகளும் விட்டு விலகும்; அருள் நெறியிலே மறுமலர்ச்சி ஏற்படும். திருமூலர் முதல் குன்றக்குடி அடி களார் வரை நம் நாட்டிலே தோன்றிய சமயச் சான்றோர்கள் சீர்திருத்தப் போக்கிலேயே அருள் நெறியை வளர்த்துவருகின்றார்கள். அவர்கள் தம் அருள் நெறித் தொண்டு வாழ்க!

மிக உயர்ந்த நிலையில் இருப்பவன் மனிதன்

தோற்றத்துக்கு வந்துள்ள இப்பிரபஞ்சம் இருக்கிறது; இதனுள் மனிதனுக்கு நிகரானது வேறொன்றுமில்லை. தோன்றியுள்ளவைகளுள் மிக மிக உயர்ந்த நிலையில் இருப்பவன் மனிதன் என்பது வேதாந்தத்தின் கோட்பாடு. இப் பிரபஞ்சத்திலுள்ள கர்ம பூமியாகிய இவ்வுலகம் ஒப்பற்ற தாகும். ஏனென்றால் ஜீவாத்மன் பரிபூரணநிலை அடைதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் அமைந் துள்ளது இவ்வுலகம். பரிபூரணநிலை அடைய விரும்பினால் அதன் பொருட்டுத் தேவர்களும் இந்த மண்ணுலகுக்கு மக்களாக வந்தாக வேண்டும். மானுடப் பிறவியே பிறவிகள் அனைத்திலும் அரிதிலும் அரிது ஆகிறது. பரிபூரணநிலை அடைவதற்கு நல்ல வாய்ப்பைக் கொடுப்பது இம் மானுடப் பிறவி.

—சுவாமி விவேகானந்தர்

அநாதைகள் வாழ்கிறார்கள்


பண்டித வ. நடராஜன்

ஆரண்யத்திலே, இராமனுஞ் சீதையுந் தங்குவதற்காக, இலக்குவனுலாக்கப்பட்ட பன்ன சாலையை ஸ்ரீராமன் பார்த்தான். அரசகுமார னொருவன் அத்தகைய சிறந்த பன்னசாலை ஒன்றை அமைத்ததைக் கண்டு, அவன் மனம் வியப்படைந்தது. 'பூவிலும் மெல்லியன வாய சீதையின் பாதங்கள் பரற்கற்களுள்ள கானில் நடந்துவந்தமை அரிய காரியந்தான்! ஆனல், தன் தம்பியின் கை இப் பன்ன சாலையைச் சமைத்தது அதைவிட அரிய காரியம்! 'உலகில் எதுவு மற்றவர்க்கு — எவ்வித துணையுமில்லாதவர்க்கு — அரிய தான ஒரு காரியமு மில்லைப் போலும்!' என்னும் பொருளில் இராமன் கூற்றுக "யாவை யாதுமிலார்க்கரிதாயவே", எனக் கம்பர் கூறியுள்ளார்.



டக்டர் எஸ். சுப்பிரமணியம் அவர்கள்

ஆம்; உலகிற் பெரிய காரியங்கள் பல, அநாதைகளாலேயே சாதிக்கப்பட்டிருக்கின்றன. உலகப் பிரசித்திபெற்று விளங்கும் ஐக்கிய இயக்கம் ஏழைகளின் இயக்கமே. ஆயினும் அதற்குக் கருணையுள்ளம் படைத்த பெருமக்களின் தொண்டும் இன்றியமையாதிருந்தது. இத்தகைய கருணை வள்ளல்களால் எத்தனையோ புண்ணிய கைங்கரியங்கள் நடைபெற்றிருக்கின்றன!



டக்டர் எஸ். சபாபதிப்பிள்ளை அவர்கள்

இரு பேருள்ளங்கள்

யாழ்ப்பாணச் சைவ அநாதை சாலையை அறிந்தோர் திருநெல்வேலி, டக்டர் எஸ். சபாபதிப் பிள்ளை அவர்களை நினையாதிருக்க முடியாது. இந்த டக்டர்களின் மனந்தான் எவ்வளவு மென்மையானது! எவ்வளவு இரக்கமுடையது! இத்தகைய இரண்டு அன்புள்ளங்கள் இல்லையெனில் இன்று சைவ அநாதசாலையை நாம் காணமுடியுமோ என்பது சந்தேகமே. துர்ப்பாக்கியசாலிகளான ஏழை அநாதைச்சிறுவர் களது வாழ்வின் கொடுமை, பரிதாபநிலைமை டக்டர் சபாபதிப்பிள்ளை அவர்களது மனத்தை — புனிதமான இளகிய உள்ளத்தை — வாட்டியிருக்க வேண்டும்! இம் மன வியல்பு வறுமை காரணமாக — அநாதரவு காரணமாக — மதம் மாறும் சிறுமையை நீக்கவேண்டு மென்னும் நோக்கங்கொண்ட திருவாளர் சு. இராசரத்தினம் (இந்துப்போட்) அவர்களுக்குத் தெரிந்தால் அவர் சும்மாவிடுவாரா? ஆகவே, 1928ஆம்

ஆண்டு விஜயதசமித் தினத்தன்று சைவ அநாதசாலை ஆரம்பமாயிற்று. சிறிது சிறிதாக வளரத் தொடங்கியது. இதன் வளர்ச்சிக்குப் பேருதவிபுரிபவரும், ஒரு டக்டரே. இக்காலத்துப் பேருபகாரியாய் விளங்கும் டக்டர் சுப்பிரமணியம் அவர்கள் சைவ அநாதசாலையிலுள்ள நூற்றுக்கணக்கான சிறுவர்களின் வாழ்வுக்கு, பொருளுதவியும், இலவச வைத்திய உதவியும் புரிந்துவருகிறார். சைவ அநாதைச் சிறுவர்கள் அதிர்ஷ்டசாலிகள் போலும்! வாழ்க டக்டர்கள்! வாழ்க அவர்களது இரக்கம் வாய்ந்த பேருள்ளங்கள்!

ஒரு கடிதம்

சில ஆண்டுகளின் முன்னர், ஒரு நாள் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் எட்டாம் வகுப்பிலே, தமிழ் வியாச பாடம் நடந்துகொண்டிருந்தது. விடுதியில் வதியும் மாணவர்கள் வருட ஆரம்பத்தில், வகுப்புப் பாடநூல்கள் வாங்குவதற்காகப் பணம்பெறும் பொருட்டு அவ்வவர்களின் பெற்றோர்களுக்குக் கடித மெழுதுமாறு அவ்வகுப்பு மாணவருக்குக் கூறப்பட்டது. எழுதப்பட்ட அப்பியாச புத்தகங்களை ஆசிரியர் திருத்திக்கொண்டிருந்தார். அவற்றுள் ஒரு புத்தகத்தில் விலாசதாரரின் விலாசம் கீழ்வருமாறு எழுதப்பட்டிருந்தது:

திரு. ..... அவர்கள்,
111, அருணகிரி ரோட், கயிலாயம் போஸ்ற்,
பெருஞ்சுடலைவழி.

இதனை வாசித்த ஆசிரியர் ஆச்சரியத்துடன் கடிதத்தை வாசித்தார். அதில்,


"அன்புள்ள தந்தையார் அவர்களுக்கு,

ஐயா, உம்மைப் படத்திலன்றி நேரே பார்த்தறியேன். என்னையும் என் சகோதரங்களையும் பாதுகாக்கும் பொறுப் பேற்ற நீர், அதற்குப் பயந்து எங்களைப் பிரிந்துவிட்டீர். தயவுசெய்து இந்த அநாதசாலைக்கு ஒருமுறை வாருங்கள். என்னைப் போல நூற்றுக்கணக்கான அநாதைகளுக்கும் வாழ்வு உண்டு என்பதைச் செய்கை முறையிற் காட்டும் எங்கள் 'அப்பு'வை ஒருமுறை பாருங்கள். அவர்தான் திருவாளர் சு. இராசரத்தினம் அவர்கள்; சைவ வித்தியா விருத்திச் சங்கக் காரியதரிசி".....

என இங்ஙனம் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது.

வாழ்க்கைக்கு வேண்டிய உதவிகள்

ஆசிரியர் அப்பியாச மெழுதிய மாணவியை அழைத்து விசாரித்தார். துன்பக் கதை யொன்று வெளிவந்தது. துர்ப்பாக்கியக் குழந்தை ஒன்று, இம் மாய உலகில் முதற் குரலிட இரண்டு மாதங்களுக்கு முன்னரே, தன் தந்தையை இழந்துவிட்டது. ஐந்து ஆண்டுகளுக்குள் தாயையும் இழந்தது. யாரோ புண்ணியசீலர்களின் உதவியால் அக் குழந்தை சைவ அநாத சாலையை அடைந்தது. அங்கே அது உணவு, உடை, புத்தகம் என்பவற்றை இலவசமாகப் பெற்றுக் கல்வி கற்றுவருகிறது. அக் குழந்தை வேறு யாருமன்று. சாட்சாத் அம் மாணவியேதான்! இங்ஙனமாக அங்கே நூற்றுக்கணக்கான அநாதையான ஆண்களும் பெண்களும் வாழ்கிறார்கள். ஆம்; வாழ்கிறார்கள். ஏனெனில், அநாதபிள்ளைகளுக்குக் கல்விபெற வசதி செய்துவரும் திருவாளர் இராசரத்தினம் அவர்கள், அநாதைகளை ஒழுக்கமுள்ளவர்களாக்கி — ஆசிரியர்களாக்கி — பட்டதாரிகளாக்கி — சங்கீத பூஷணங்களாக்கி — அரசாங்க உத்தியோகத்தர்களாக்கி, வருவாய் பெற்று வாழச்செய்வதோடமையாது அவர்களுக்குத் திருமணமும் செய்வித்து வாழவைக்கிறார்! வாழ்வுக்கு வேறென்ன வேண்டும்!



திரு. சு. இராசரத்தினம் அவர்கள்

வாடகை வீட்டில்

1928ஆம் ஆண்டு வாடகை வீட்டில் ஏழு மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட அநாதசாலை, அடுத்த ஆண்டு 63 மாணவர்களுடைய சாலையாய் வளர்ந்துவிட, அவர்களைப் பராபரிக்கும் பொறுப்பைத் திருவாளர் சி. முருகேசு ஆசிரியர் அவர்கள் ஏற்றுக் கொண்டாராம்! உண்மையில் அவர் அவ்வநாதைகளின் தந்தை போலவே தொண்டுகள் செய்ததாக, அக்காலத்தில் அநாத மாணவர்களாயிருந்து இப்போது பல்வேறு தொழில் புரியும், பலர் வாழ்த்துகிறார்கள்!

ஒரேயொரு கிணறு; பாதாளக் கிணறு. நாற்பதடி ஆழம்; அதுவும் வல்லூற்றுவரி.

'கயிறுகுறுமுகவை' எனப் பதிற்றுப்பத்தில் வருணிக்கப்படும் 'வாளி' போன்ற 'வாளி'யால் பாதாளத்திலிருந்து நீர் பெறவேண்டும்! 63 மாணவர் — அதுவும் தண்ணீர் அள்ளமுடியாத சிறுவர் — அக் கிணற்றினுதவியாற் குளிக்கவும் வேண்டும்; சீலை துவைக்கவும் வேண்டும்!



திரு. சி. முருகேசு ஆசிரியர் அவர்கள்




திருமதி இ. இராசம்மையார் அவர்கள்


ஒருமுறை கற்பனை செய்து பாருங்கள். ஆயினும் சிறுவர்— கைகிறைய முத்தும் பவளமும் போன்ற சிரங்குள்ள பாலர் — முறை தவருது குளித்தனர்! சீலை துவைத்தனர்! 'எப்படிப் பாடினரோ' என்றெரு பாடல் ஞாபகமுள்ளவர்கள் 'எப்படி நடத்தினரோ' அந்தக் காலத்தில் என ஒரு பாடல் பாடிவிடலாம்; ஏன்? ஒரு புராணமும் பாடிவிடலாம் போலத் தோன்றுகிறது!

பத்தாண்டுகளுக்குப் பின்


1938ஆம் ஆண்டில், அதாவது அநாதசாலை ஆரம்பித்துப் பத்து வருடங்களின் பின், திரு வாளர் ஏ. செல்லப்பா அவர்களின் முயற்சியால் (அக்காலத்து சைவ வி. வி. சங்க முகாமைக் காரராயிருந்தவர்) அநாதைகளான பெண்களும் சேர்க்கப் பட்டனர். பெண் குழந்தைகளின் மேற்பார்வையாளராக முதன்முதல், 'ஈழகேசரி' ஆசிரியர் திரு. இராஜ அரியரத்தினம் அவர்களின் தாயாராகிய இராசம்மையார் அவர்கள் கடமையாற்றினர்கள். [திருமதி இ. இராசம்மா அவர்கள் நுணவில் சைவ வித்தியா விருத்திச் சங்கத் தமிழ் வித்தியாசாலைகளில் ஆசிரியையாகக் கடமையாற்றி இளைப்பாறியவர்கள்.] இவ்வாறு பலரின் உதவியால் சைவ அநாதசாலை வளர்ந்தது. இன்று சை. வி. வி. ச. முகாமைக்காரராகிய திரு. எஸ். அட்சலிங்கம் அவர்களது முகாமையின்கீழ் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. பொ. செல்வத்துரை அவர்களதும், உதவியாசிரியைகளதும்



திரு. ஏ. செல்லப்பா அவர்கள்



திரு. எஸ். அட்சலிங்கம் அவர்கள்



அநாதைச் சிறுவர்களின் இன்றைய பாதுகாவலர்கள்
(முத்துத்தம்பிவித்தியாசாலைத் தலைமையாசிரியரும் உதவியாசிரியைகளும்)

மேற்பார்வையில் அநாதசாலை வளர்கிறது. இன்று சைவ அநாதசாலையிற் பெண்களின் தொகையே அதிகம். அகில இலங்கையிலும் முதன்மையான அநாதசாலையாக விளங்குவது சைவ அநாதசாலையே!

அதிசயமான காரியம்

ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்துவ தென்பது சாதாரண காரியமன்று. அதுவும் அநாத ஸ்தாபன மொன்றை ஆரம்பித்து நடத்துவது எத்துணைக் கஷ்டமான வேலை! அதுவும் பொருளாதாரத்திற் கீழ் நிலையி லுள்ள சைவ வித்தியா விருத்திச் சங்கம் இம் முயற்சியிலிறங்கி இதனை நடத்துவது எவ்வளவு அதிசயம்! ஆனல் இந்த அதி சயங்கள் எல்லாம் திரு. இராசரத்தினம் போன்ற கருமவீரர்களின் முன் எம்மாத்திரம்! அரிசியும் விறகுந் தேடிக்கொண்டு சமையல் வேலையை ஆரம்பிப்பவரல்லர் ஸ்ரீமான் இராச ரத்தினம் அவர்கள். அவர், உலைவைத்து அது கொதிக்கும்போது அரிசியை எப்படியாவது இரவல் வாங்கி உணவாக்கும் கருமவீரர் கோஷ்டியைச் சேர்ந்தவர்! இதனலேயே அவர் பல வெற்றிகளை அடைந்தார். அவ் வெற்றியின் ஒரு சின்னமே சைவ அநாதசாலையின் வளர்ச்சி. இவ்வநாதசாலையின் வளர்ச்சி இன்று அகில இலங்கையினதும் மதிப்பைப்பெற்று விளங்குகிறது என்று நான் கூறினல் நீங்கள் ஆச்சரியமடைவீர்களா? தயவுசெய்து கீழேவரும் சம்பாஷணையைப் படியுங்கள். இதிலுள்ள வினுக்கள் திருநெல்வேலி முத்துத்தம்பி வித் தியாசாலைத் தலைமையாசிரியரால் வினவப் பட்டவை; விடைகள் ஓர் அநாதைச் சிறுவ னுடையன:

தம்பீ! உன்னை இங்கே கொண்டுவந்தது யார்?

பொலீசார் கொண்டுவந்து சேர்த்தார்கள்.

எங்கேயிருந்து அவர்கள் உன்னைக் கூட்டிக் கொண்டுவந்தார்கள்?

யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்திலிருந்து கூட்டிவந்தார்கள்.

உனது சொந்த ஊர் எது?

பூவரசங்குளம்.

அது எங்கேயுள்ளது?

வவனியாவிலிருந்து மன்னருக்குப் போகும் வழியிலுள்ளது.

நீ எப்படி யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தை அடைந்தாய்?

இவ்வாறு வினவும் விடையுமாய் வந்த கதை பின்வருமாறு:

சிறுவன் நகுலனின் கதை

அநாதைச் சிறுவன் நகுலனின் தந்தை, நகு லனுக்கு ஆறு வயதானபோது இறந்துவிட் டார். நகுலனுக்கு இரண்டு சகோதரரும், ஒரு சகோதரியுமிருந்தனர். இந்நிலையில் நகுலனின் தாயார் மறுதாரம் மணமுடித்தார். சிறிய தந்தை யார் குடிப்பழக்கமுடையவர். அவரின் கொடுமை அக் குழந்தைகளாற் ருங்க முடிய



அநாதசாலைச் சிறுவர்களும் சிறுமியரும்

சைவ அநாதசாலை — சில தோற்றங்கள்



காலை ஆராதனையின்பொருட்டு 'இராமநாதன்' மண்டபத்துக்குள் மாணவிகள் செல்கின்றனர்




மாணவிகள் போசனத்தின்பின் விடுதிக்குச் செல்கின்றனர்



ஆராதனைக்குச் சென்றுகொண்டிருக்கும் மாணவிகள்



மாணவிகள் வசிக்கும் 'சுப்பிரமணிய' மண்டப விடுதி



காலை ஆராதனை நடைபெறுகிறது



பெண்கள் விடுதிச்சாலை வாசலிற் சில ஆசிரியைகள்



சிறுவர்களும் சிறுமிகளும் வகுப்பறைகளில்



சிறுவர்கள் தொட்டியிலிருந்து நீர் அள்ளுகிறார்கள்

வில்லை. முக்கியமாக நகுலனுற் முங்கமுடிய வில்லை. அவன் பிஞ்சுள்ளம் வீட்டிலிருந்து வெளியேறுமாறு அவனைத் தூண்டிற்று. ஒருநாள் புறப்பட்டேவிட்டான்; மனம்போனபடி நடந் தான். ஒரு பைசிக்கில் வண்டி வந்தது. அதன் பின்புறமாக ஏறி வவனியாவை அடைந்தான். ஒரு 'மோட்டார் லொறி'யைக் கண்டான்; அது பாரம் ஏற்றியபடி நின்றது; அதன் சாரதியின் உதவியால் 'லொறி' மூலம் கெக்கரியாவை அடைந்தான். அங்கே இறங்கிய அவன், ஒரு 'பெற்ரோல்' நிலையத்தண்டை படுத்திருந்தான். நித்திரையாயிருந்த அவனை யாரோ எழுப்பி னர்கள். பொலீசார்! அவர்களுக்குத் தன் கதையைச் சொன்னன் நகுலன். அவர்கள் அவனை அழைத்துச் சென்று அநுரதபுரிக் கோட்டில் ஒப்படைத்தனர். நீதிவான் நகுலனது துன்பக் கதையைக் கேட்டு, யாழ்ப்பாணம் சைவ அநாதசாலைக்குப் பொலீசாருடன் அனுப்பி வைத்தார். சைவ அநாதசாலையின் சிறப்பு அநுரதபுரிக் கோட்டுக்குச் சென்றமை ஆச்சரிய மன்று. ஆயின், கால்போன வாக்கிற் சென்ற நகுலன் மகிழ்ச்சியோடு கல்வி வசதி பெற்று வாழ வசதி கிடைத்தது ஆச்சரியந்தான்! இன்னுமொன்று:


சுவீகாரப் புத்திரன் ஒருவன்

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியா சாலையின் இப்போதைய தலைமையாசிரியர் — இனி வரவிருக்கும் தலைமையாசிரியர்கள், அத் தனை பேரதும் சுவீகாரப் புத்திரன் ஒருவன் இப்பொழுது சைவ அநாதசாலையில் வளர்கி ருன். அவன்தான் முத்துலிங்கம்!


அவன் தன் பெற்ற தாயையும் அறியான், தந்தையையும் அறியான். கொழும்பு மாநகரில் கந்தலுடையுடன் எச்சிலிலை பொறுக்கி யுண்ட முத்துலிங்கம், அரசினர் உத்தியோகஸ்தர் ஒருவ ருடைய (Probation Officer) உதவியாற் சைவ அநாதசாலையை அடைந்தான். அரசாங்க உதவி யோடு ஒரு நிபந்தனையுடன் அனுப்பிவைக்கப் பட்டான். அரசாங்கம் மாதம் 30 ரூபாய் வீதம் சில காலத்துக்கு அவனுக்கு உபகாரப்பணம் அனுப்பிவைக்கும். ஆயின், அவன் முத்துத்தம்பி வித்தியாசாலைத் தலைமையாசிரியரின் 'சுவீகாரப் புத்திரன்' என்பது அந்நிபந்தனை. அவன்தான் இலங்கையின் எதிர்கால ஆட்சித் தலைவனே யாரறிவார்! ஆனால், அவன் இப்பொழுது குஷி யாய் வாழ்கிருன்.



பாலர்களும் பாலிகைகளும் ஆராதனையின் பின்பு கோவிலிலிருந்து பாடசாலைக்குச் செல்கின்றனர்




சிறுவர்களும் சிறுமிகளும் வகுப்பறைகளில்




பாலர் வகுப்பு நடைபெறுகிறது

"அநாதைகளுக்கு, ஆண்டவன் துணை உண்டு; சைவ அநாதசாலை உண்டு, என்றுவது ஒரு சிறு மன நிம்மதி உண்டல்லவா, சைவ அநாத சாலையால். ஆனால், அவ் வநாதசாலைச் சிறுவர் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு, சிறுமிகள் நீராட ஒரு தொட்டியும், ஆராதனை மண்டபமொன்றும் இப்போதைக்குக் கிடைத்துவிட்டால்" என்று கூறிக் குறைப்பட்டார் தலைமையாசிரியர் கடைசியாக.



யாழ்ப்பாணம் மணிக்கூண்டுக் கோபுரம்

கண்கவர் களியாட்டங்களையும், அரசியல்வாதிகளின் ஆர்ப்பாட்டங்களையும், அலைமோதும் மக்கட் கூட்டங்களையும் கண்டுகொண்டும் தன்னிலையிற் தாழாது தலைநிமிர்ந்து நிற்கும் யாழ்ப்பாண நகரிலுள்ள மணிக்கூண்டுக் கோபுரம்.



பூதத்தம்பி முதலியார் வீட்டு முகப்பு


கற்பினைக் கண்ணெனப் போற்றிய வீரப் பெண்மணியின் வரலாற்றினைப் பின்னணியாகக் கொண்ட பூதத்தம்பியின் நினைவாக இன்று யாழ்ப்பாணம் சட்டநாதர் ஆலயத்தின் அருகே நின்று நிலவும் பூதத்தம்பி முதலியாரின் வீட்டு முகப்பு இது. யாழ்ப்பாணத்தை ஆண்ட ஒல்லாந்தர் காலத்து ஆட்சியை இன்றும் நினைவூட்டுகின்றது வனப்புமிக்க இக் கட்டடம்.



காங்கேசன்துறை கலங்கரை விளக்கம்

" இடிகரை மணற் பரப்பில் எழுந்துமே லோங்கி நின்று
கொடுங்கடல் வாழ்வோர்க் கெல்லாம் குறிப்போலே இரவிற் தந்து "


கம்பீரத்தோடு காட்சியளிக்கும் காங்கேசன்துறைக் கலங்கரை விளக்கம்.



கீரிமலைக் கேணி


மற்றுள தீர்த்தமேல் மரபி னுடொறு
முற்றுமுழ் குனர்க்குறு பயனே யோர்தரம்
பற்றினே டிந்நதி படிந்து ளார்நனி
பெற்றிடு வார்தவஞ் செய்த பேற்றினுல்

என்று போற்றப்படும் நகுலமலை வான்புனல் — இப்போது கிரிமலைக் கேணியாகத்தான் இருக்கிறது. ஆடி அமாவாசைத் தீர்த்தமாட இலட்சக்கணக்கான பக்தர்கள் வந்து கூடும் இடம் கீரிமலைதான்.



யாழ்ப்பாணம் – பண்ணைத் துறை

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு அப்பாலுள்ள சப்த தீவுகளையும் அடைவதற்கு ஓர் 'ஆற்றுப் படை'யாக அமைந்துள்ள யாழ்ப்பாணம் பண்ணைத் துறையின் அமைதியான காட்சி இது. மாலைவேளையில் இது மக்களுக்கு உல்லாசப் பொழுதுபோக்குக்கு ஏற்றதோர் மனோரம்மியமான இடமாகவும்அமைந்துள்ளது.



காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலை

இலங்கையின் பொருளாதாரச் சீரமைப்பின் ஓர் அங்கமாக விளங்கும் காங்கேசன் துறைச் சீமெந்துத் தொழிற்சாலை நவீன முறைப்படி நிறுவப்பெற்றதொன்று. அப்படி யிருந்தும் இலங்கைக்குத் தேவையான சீமெந்தைத் தயார்செய்ய முடியவில்லை. அரசினர் இத் தொழிற்சாலையை விரிவாக்கி மேலுமொரு 'சூளை'யை அமைப்பார்களாயின் போதியளவு சீமெந்தைப் பெறுவது சாத்தியமாகுமென்பதை எதிர்பார்க்கலாம்.




காங்கேசன்துறைத் துறைமுகம்

கலங்கரைவிளக்கத்துடன் கவினுறத் துலங்கும் காங்கேசன்துறைத் துறைமுகத்தை நவீன வசதிகளுடன் புதுக்கி அமைக்கும் நாள் எந்நாளோ? இதற்கென அரசாங்கம் ஒதுக்கியுள்ள பணம் எங்கே?



ஊர்காவற்றுறைத் துறைமுகம்

பண்டுதொட்டுத் தமிழகத்தின் தொடர்பை வளர்த்துவர உதவும் ஈழநாட்டுத் துறை முகங்களில், ஊர்காவற்றுறைத் துறைமுகமும் ஒன்று. எக்காலத்திலும் மரக்கலங்கள் வந்தடைவதற்கு வாய்ப்பாக அமைந்துள்ள இத் துறைமுகம் நவீன வசதிகளுடன் அமைக்கப்பெறின் வாணிபம் மிக நன்று வளருமென்பதற்குச் சந்தேகமேயில்லை.



பருத்தித்துறைத் துறைமுகம்


" சுருட்டு திரையின் பெரும் பரவை
துழாவிப் பயிலும் பல கலங்கள்
தொடர்ந்து தொடர்ந்து நனி யொதுங்கித்
துயரந் தவிர்ந்து பள்ளி கொள்ளப் "

பயன்படும் பருத்தித்துறைத் துறைமுகம்.




தொண்டமானுறு — கடலணைக் கட்டு

வானம் பார்த்த பூமியாகிய யாழ்ப்பாணத்தை, வளங் கொழிக்கும் நாடாக்க அன்று அரசியல் ஞானி, திரு. க. பாலசிங்கம் கண்ட கடலேரித் திட்டக் கனவை நனவாக்கக் கட்டிய தொண்டமானுற்றுக் கடலணைக்கட்டின் கவினுறு காட்சி.



காரைநகர்க் கரையிலே

ஊர்காவற்றுறையிலிருந்து நீலக் கடலைத் தாண்டி
இயந்திரப் படகில் ஏறிவரும் பிரயாணிகள்
காரைநகர்க் கரையை வந்தடையுங் காட்சி.



ஊர்காவற்றுறைக் கடற்கோட்டை

பார்க்கப் பரவசமூட்டிக்கொண்டு பரந்த கடலின் நடுவே நிற்கும் பறங்கியராற் கட்டப்பட்ட இக் கோட்டை, பழையகால வரலாற்றின் சின்னமாக இன்றும் ஊர்காவற்றுறையில் நிமிர்ந்து நிற்கின்றது.



சுன்னாகம் சந்தை

முற்றல் வெண்டிக்காய் முளைக்கீரை பூசினிக்காய்
கத்தரிக்காய் மாங்காய் கடற்காய் எனப்பலவாய்
விற்றிடுவார் அங்கே வேண்டப் பலர்வருவார்.
எங்கே? சுன்னாகம் சந்தையில்.




இணுவில் 'மக்லோட்' வைத்தியசாலை

கர்ப்ப வதிகளைக் கவனமாய்க் காத்தும்,
பெற்றிடும் மகவைப் பிரியமாய்ப் பேணியும்,
உற்றிடும் பிணிபல அற்றிடும் வண்ணம்
உதவியும் வருவது இணுவிற் பதியினில்
இலங்கிடு வைத்திய சாலையென் பதுவே.



நல்லூர், சங்கிலியன் தோப்பு

யாழ்ப்பாணத்துத் தமிழரசர்களின் இராசதானியாக விளங்கிய நல்லூரிலுள்ள சங்கிலியன் தோப்பு, தமிழரின் பழைய வரலாற்றின் ஒரு பகுதியை இன்றும் நினைவூட்டிக்கொண்டு நிற்கின்றது. சரித்திரப் பிரசித்திபெற்ற இத் தோப்பின் அருகிலேதான் யமுனைக் கேணி வற்ரு நீர்நிலையாகக் காட்சி தருகின்றது.



யாழ்ப்பாணக் கோட்டை

" கீழ்த்திசையி லிதுபோலுங் கோப்புநலன் வாய்த்ததொன்று
கிடையா தென்னத்
தாழ்த்துதலில் லாததிருத் தலையாகும் யாழ்ப்பாணம்
தன்னில் மேனுள்
காழ்த்தகர வலம்படைத்த ஒல்லாந்தர் கட்டியதோர்
கோட்டை "

இன்றும் பழுதுறுத வகையில் பாதுகாப்போடு நின்று நிலவுகிறது.

மாமலையொன்று

※ பெ. தூரன் ※

மலையொன்று தூரத்திற் கண்டேன்—யானை
மண்டியிட் டுள்ளது போலே
தலையினைத் தூக்கி நிமிர்ந்தே—கையைத்
தாளின்முன் நீட்டவுங் கண்டேன்

நீலத்து மாமணி யதுவே—அதன்
நெற்றியிற் பட்டயம் பாரீர்
பாலில் விளைந்தவெண் மஞ்சு—அங்கு
பட்டய மானது ஆஹா!

வானத்தைத் தாங்குவ துண்டோ—அன்றி
மழைகொண்ட முகில்விளை யாட்டோ
மோனப் பெருநிட்டை தானே—மறை
மூலஓங் காரத்தின் வடிவோ

நீலத்துக் குள்வளர் நீலம்—என்றன்
நெஞ்சை யிழுத்திடும் நீலம்
ஆலம் பழுத்தகல் நீலம்—எங்கள்
அன்னை பயங்கரி கோலம்

கண்டங்கு நான்மெய் மறந்தே—அந்தக்
காட்சியில் உள்ளம் நிறைந்தேன்
மண்டலச் செண்டுவான் பாய்ந்து—கதிர்
மன்னன் எழுந்தருள் நேரம்

எங்கிருந் தோஒரு சிட்டு—வானில்
ஏறிப் பறந்ததென் முன்னே
இங்கிது மாமலைக் கும்மேல்—உயர்ந்
தேகுதல் போலவே கண்டேன்

மிக்கபொய்த் தோற்றம் இதனில்—அந்த
வெற்பின் பெருமையும் போமோ?
பக்கச் சிறுகுரல் பெரிதாம்—அதைப்
பார்த்து மயங்குவோர் பலராம்.



சேர் பொன். இராமநாதன் அவர்கள் சிலை

இரு

விருத்தம்

திருவளரு மீழத்தாய் தலையி னீங்கச்
செம்மைமிகு பணிசெய்து சுதந்தி ரத்தின்
வருகைக்கு வித்திட்ட வன்மை யாளர்
மருவிலங்கை மக்களுக்கு மத்தி யானோர்
கருமநெறி வழுவாஇத் தொண்ட ரிந்நாட்
கலங்குகின்ற தமிழ்த்தாயின் கண்ணீர் கண்டே
இருசிலையின் வடிவத்திற் கொழும்பில் நின்றே
ஏங்கினரா! சிரித்தனரா! இயம்பொ ணாதே!

ஆட்சிமன்றத் திருமருங்குஞ் சிலையி னிற்கும்
அரும்பேறு தன்மக்கட் கமைந்த தென்றே
மாட்சியுடைத் தமிழன்னை மகிழ்ந்து நின்றுள்
மற்றிதனை மறந்திட்ட வன்க ணாளர்
சூழ்ச்சிபல செய்கின்றார் தொன்மை சான்ற
சுத்தமொழி பேசிடுவோர் தொலைந்து தம்முள்
வீழ்ச்சியுறு மாறுகொடுங் கோன்மை கொண்டால்
விளங்குநன்றி கொன்றார்க்கும் விடிவுண் டாமோ!

அல்வாயூர்,

சிலைகள்

விருத்தம்

விண்ணினுக்கு மருந்தன்ன தமிழைத் தாழ்த்த
விழைகின்ற வீணருக்கு வணக்கஞ் செய்து
மண்ணினிலே சிறுபதவி பெறுகு வாயோ
மயிரிழந்த மானுவமை மறந்திட் டாயோ!
உண்ணுவதும் உறங்குவதும் உடுப்ப துந்தான்
உன்வாழ்வோ என்மகனே! ஒழிவாய் தாழ்வு
நண்ணுலகு நீதிசெய்யு மஞ்சி டாதே
நன்றதனை இன்றுசெய நாடு வாயே.

செய்யிருக்கு மீழத்தாய் முகத்தின் மீது
சிங்களமுஞ் செந்தமிழ மிரண்டு கண்கள்
வய்யமிசைத் தமிழ்விழியைக் குத்தி விட்டால்
மாதுமுக வழகதுதான் மங்கி டாதோ!
பொய்யிருக்கும் நெஞ்சுடைய தலைவ ராவோர்
புன்மையிது போக்குவரோ புகலக் கேணீ
மெய்யினுக்கே அழிவில்லை உலகு போற்ற
வீரமுடன் போராடு வெற்றி உண்டே!

மு. செல்லையா



சேர் பொன். அருணாசலம் அவர்கள் சிலை

கங்குல் துரத்தும் இப்போதில்.....

— வி. சீ. க. —

காலை வெள்ளி முளைத்ததுகாண்
கதிரோன் எழுதற் கினிக்காலம்
நீள [illegible]லை எனஅறிந்தே
நெடிய கொம்பர் நுனியிருந்து
பாழும் கூகை அலறுமொழி
பரவா தடங்கத் திருக்கோவில்
ஆலித் தோங்கும் மணியினெலி
அதுகே ளாய்நீ நன்னெஞ்சே!

சீலம் அறியா நெடுமனமே
செவ்வேல் முருகன் திருவடிகள்
ஓலம் இடுவார்க் கபயம்என
உணர்ந்தே பறவைத் தொகுதிஎலாம்
காலை மணிவான் பரந்தவொளி
கங்குல் துரத்தும் இப்போதில்
சோலைத் துயிலை நீத்தெழுந்து
தொழுதே இசைத்தல் கேளாயோ!

எங்கும் கதிரோன் செவ்வொளிகாண்
ஏனை உனக்குத் துயிலிடத்தும்
பொங்கும் கனவு பலப்பலவாய்ப்
புகுவாய் இருளில் ஒளியாதே
தங்கள் மலர்க்கை வண்டுதத்
தவழும் அலைகொண் டடிபரவிப்
பொங்கும் சுனைகள் மரமெல்லாம்
பூப்பெய் தார்த்தல் காணையோ!

அடிவான் மறைந்த கரியவிருள்
அலறும் ஒலிபோற் கடல்அவன்பேர்
முடியா தியம்பச் சங்கொலியும்
மூவர் தமிழின் தேனெலியும்
விடியா இருளை விடிவித்து
விண்ணோர் ஏத்தும் திருவொலியாய்ப்
படிவான் எழும்பல் கேட்டிருந்தாய்
பகர்வாய் ஒருக்கால் அவன்பதமே!

உலகிலேயே ஒரு புதுமை!

கனகலிங்கம் சுருட்டு

● கனதனவான்களும் பொதுமக்களும் தினமும் விரும்பி உபயோகிக்கும் தரமுங் குணமும் வாய்ந்தது.

★ ★ ★

● உயர்ந்த ரகப் புகையிலையைக் கொண்டு சுத்தமான முறையிலே தயாரிக்கப்பட்ட

கனகலிங்கம் சுருட்டையே உபயோகியுங்கள்.

* * *

வி. கனகலிங்கம் அன் சன்

17, சென்யோன்ஸ் வீதி, :: கொழும்பு

போன்: 5883 தந்தி 'கன்சிகார்ஸ்'

பவானி ஸ்ரோர்

கந்தரோடை வீதி :: சுன்னாகம்

சொந்தக்காரர்: வ. செல்லத்துரை

சகலவிதமான பட்டுச் சேலைகள்; சட்டைத் துணிகள்; வேட்டி, சால்வைகள்; ஷேட், கோற் துணிகள் — நூற் புடவைகள், பெனியன்கள் — நவீன மாதிரிகளிலும், புதுப்புது 'டிசைன்'களிலும் எம்மிடம் கிடைக்கும்.

* * *

எமது யந்திரத் தையற் பகுதியில்:

சகாயமான சலாரில், குறிப்பிட்ட தவணையில் எம்மாதிரியான தையல் வேலைகளும், கைதேர்ந்த தையற்காரரைக் கொண்டு செய்வித்துக் கொடுக்கப்படும்.

உங்கள் தையல் வேலைகளை ஒருமுறை எம்மிடம் கொடுத்துப்பாருங்கள்.

* * *

BHAWANI STORE

TEXTILE DEALERS & TAILORS

KANTHERODAI ROAD :: CHUNNAKAM



ஸ்தாபகர்

பீடி சக்கரவர்த்தி

த. பி. சொக்கலால் ராம்சேட் பீடி



உரிமையாளர்

உலகெங்கும் புகழ்பெற்றதும், பீடிகளுக்கே தலைசிறந்து, பீடி ஜாதி எல்லாவற்றிற்கும் சக்கரவர்த்தி என்ற பட்டத்தைக் கடந்த எழுபது வருடகாலமாகத் தாங்கித் தனிப் பெரும் மதிப்புடன் திகழ்வதும், எல்லோரும் விரும்பி வாங்கிப் புகைத்து மகிழ்வதும் எல்லா இடங்களிலும் கிடைக்கக் கூடியதுமான ஒரே ஒரு பீடி

த. பி. சொக்கலால் ராம்சேட் பீடியே

சக்தியிற் சிறந்தது மின்சாரசக்தி, அதேபோல் பீடியிற் சிறந்தது **த. பி. சொக்கலால் ராம்சேட் பீடியே**

ஒளியிற் சிறந்தது சூரியப் பிரகாசம், அதேபோல் பீடியிற் சிறந்தது **த. பி. சொக்கலால் ராம்சேட் பீடியே**

TELE { grams : BEEDIKING
phone : **5731**



தலைமை ஆபீஸ்:

த. பி. சொக்கலால் ராம்சேட் பக்டரி

முக்கூடல், திருநெல்வேலி ஜில்லா

தென் இந்தியா

இலங்கைக் கிளை ஆபீஸ்:

த. பி. சொக்கலால் ராம்சேட் பக்டரி

98, விவேகானந்த ஹில்

கொழும்பு 13

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

R. ARNOLIS SILVA & SONS

HEAD OFFICE : **257, DAM STREET, COLOMBO 12**

BRANCH : **KUMARADASA BUILDINGS, 10, NEW MOOR STREET, COLOMBO**

★ ★ ★

Proprietors :

RATNA PRESS

- Printers & Account Books Makers
- Stationers and Printing Machinery Suppliers.
- Calendar Picture Manufacturers and Importers.

MONITOR'S EXERCISE BOOKS FOR BOTANY, GEOGRAPHY AND SCIENCE SUBJECTS ARE AVAILABLE IN EVERY DESCRIPTION.

★ ★ ★

கெட்டியான கடைக் கணக்குப் புத்தகங்கள் கலண்டர்களுக்குரிய வர்ணப்படங்கள் பலவிதங்களிலும், மொனிற்றேஸ் கொப்பி, தாவர சாத்திரம், கிருவ், விஞ் ஞான பாடம் ஆகியவற்றுக்குரிய கொப்பி வகைகள் எல்லாத் தினுசிலும் எம்மிடங் கிடைக்கும்.

அழகான அச்சு வேலைகள் செய்வதுடன், அச்சு யந்திரங்களும் வரவழைத்துக் கொடுக்கின்றோம்.

★ ★ ★

R. அர்நோலிஸ் சில்வா அண்ட் சன்ஸ்

தலைமைக் காரியாலயம் : **257, டாம் வீதி, கொழும்பு 12.**

கிளை : **10, புதிய சோனக தெரு, கொழும்பு.**

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

A. NALLATHAMBY

Jeweller & Gem Merchant

75, KANNATHIDDY ❋ JAFFNA

♠ நங்கையர் மனம் விரும்பும் நவ நாகரிக நகைகள்

♣ தரளம் பதித்த தங்க நகைகள்

♥ நலம் பல அளிக்கும் நவரத்தினங்கள்

நம்பிக்கை நாணயம் நயம் மிக்க நகைகளுக்கு

ஒருமுறை இங்கே விஜயம் செய்யுங்கள்

எங்கே ?

ஆ. நல்லதம்பி

தங்கப்பவுண், நகை, இரத்தின வியாபாரம்

75, கன்னுதிட்டி — யாழ்ப்பாணம் — தந்தி : 'கமலம்'

இவ் வெள்ளி விழா மலர், 'ஈழகேசரி'யின் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம் — குரும்பசிட்டி முத்தையா சபாரத்தினம் அவர்களால், சுன்னகம் 'தலையாட்டி'யிலுள்ள திருமகள் அழுத்தகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Kekirawa Carriers Ltd.

MAIN STREET :: KEKIRAWA

TRANSPORT AGENTS

COLOMBO — KEKIRAWA — JAFFNA

and THROUGHOUT NORTH-CENTRAL PROVINCE



கீழ்க் காட்டப்பட்டிருக்கும் தலைப்பட்டினங்களுக்கிடையே எமது 'லொறி' கள் போக்குவரத்துச் சேவை செய்யக்கூடியதாக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

கொழும்பு ←——→ கெக்கிராவ ←——→ யாழ்ப்பாணம்

வடமத்திய மாகாணம் அடங்கலிலும்

இப் பட்டினங்களுக்கிடையே சாமான்கள் ஏற்றி இறக்குமதி செய்து கொடுப்பதற்காகத் திறமான 'லொறி'களையும், பாதுகாப்பாக ஓட்டக்கூடிய சாரதிகளையும், கைதேர்ந்த தொழிலாளர்களையும் அமர்த்தியிருக்கின்றோம்.

எமது 'லொறி' சேவையைப் பயன்படுத்தவிரும்பும் வியாபாரிகளும் மற்றும் அன்பர்களும் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலுமுள்ள கிளைக்கந்தோர்கள் மூலம் (கொழும்பில் : பழைய சோனகதெரு இல. 85 லும், யாழ்ப்பாணத்தில் : ஸ்ரான்லி [illegible]டியுள்ள கெக்கிராவ ஸ்ரோஹிலும்) ஒழுங்கு செய்துகொள்ளலாம்.

கெக்கிராவ கரியேர்ஸ் லிமிட்.

லொறி சேவைப் போக்குவரத்து ஏஜெண்டுகள் :: கெக்கிராவ

திக்கெல்லாம் ஒளி வீசும்

யப்பான் தங்க மாளிகை



65 ஆண்டுகளாக நற்சேவை செய்து மக்களின் பேராதரவையும்
நன்மதிப்பையும் பெற்றுத் துலங்கும் இலங்கையின் மிகப் பெரிய

வைர, தங்க ஆபரண வியாபார ஸ்தாபனம்

க. ஆறுமுகம்பிள்ளை அன்சன்

64, கன்னதிட்டி ✕ யாழ்ப்பாணம்

தந்தி: YAPPAN ரெலிபோன்: 118

FOUNTAIN PENS

Luxor

CENTURIES OF GERMAN SKILL AND WORKMANSHIP HAS PRODUCED A WONDERFUL PEN WITH

SIMPLIFIED FILLING SYSTEM AND VISIBLE INK SUPPLY TO SUIT EVERY HAND.



Prices ranging from

Rs. 4/-

to Rs. 50/-

In 4 different and pleasing colours.

★

★

Sole Agents:

THE NADARAJA PRESS

PRINTERS, PUBLISHERS, & STATIONERS

260, GALLE ROAD :: COLOMBO 3.

இங்கு வருவதால் இலாபமடைவீர்கள்!

W. சர்ணேலிஸ் டி சில்வா

பிரபல வியாபாரி ★ ★ ★ மட்டக்களப்பு

நீங்கள் தருவது பணம். :: நாங்கள் அளிப்பது தரமான பொருள்கள்.

கீர்த்திமிக்க இவ் வியாபார நிலையத்தில்:

★ பலசரக்கு வகைகள் ★ புட்டி உணவு ★ மேனாட்டு மருந்து வகை
★ நறுமணங் கமழும் சோப் பவுடர் வகை ★ பரிசுக்குரிய சிறந்த பொருள்கள்

மோட்டார் டயர்ஸ், ரியூப்ஸ் மின்சார உபயோகப்பொருள்கள், திறம் கன்வஸ் தோற் சப்பாத்துகள், மற்றும் நாளாந்தத் தேவைக்குரிய பொருள்கள்,

இன்னும் பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய உபகரணங்கள் யாவும் இங்கு கிடைக்கும்.

உங்கள் பணம் மிஞ்சவேண்டுமானால்

சர்ணேலிஸ் டி சில்வா வியாபார நிலையத்துக்கு வந்து

தேவையானவற்றை வாங்குங்கள்

W. SARNELIS DE SILVA

GENERAL MERCHANTS

Phone: 351. :: BATTICALOA.

★ புத்தகம், பத்திரிகைகளுக்கு நித்தமும் நினைவுள்ள விலாசம் :

த. தம்பித்துரை

வட-இலங்கையின் மிகப் பெரிய பத்திரிகை விற்பனையாளர்

226, ஆஸ்பத்திரி வீதி :: யாழ்ப்பாணம்

கிளைகள் : (1) கச்சேரியடி, (2) 33, பெரியகடை, யாழ்ப்பாணம்

★ இந்தியாவிலுள்ள பதிப்பகங்களிலிருந்து வெளியாகிவரும் புத்தம் புதிய நூல்கள் அத்தனையும் எம்மிடங் கிடைக்கும்.

★★ திரு. வி. க., கல்கி, டக்டர் வரதராசனுர், இராஜாஜி, சுத்தானந்தர், நாமக்கல் கவிஞர், எஸ். வையாபுரிப்பிள்ளை, கி. வா. ஜ., பெ. தூரன், பொ. திருகூடசுந்தரம், அ. ச. ஞானசம்பந்தன், பன்மொழிப் புலவர் அப்பாத்துரை, புதுமைப்பித்தன், அகிலன், 'லக்ஷ்மி', ரகுநாதன், பி. எம். கண்ணன், விந்தன், மாயாவி, ம. பொ. சி., பாரதிதாசன், கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகிய அறிஞர்களின் கதைகளும் கட்டுரைத் தொகுதிகளும் எம்மிடம் உள.

★★★ மேலுடுகளிலிருந்து வெளிவரும் பல்வேறு ஆங்கிலப் பத்திரிகைகளும் புத்தகங்களும், இலங்கையிலும் இந்தியாவிலிருந்தும் வெளியிடும் பத்திரிகைகளும் எம்மிடம் பெறலாம்.

சகல சினிமாப் பாட்டுப் புத்தகங்களும் கதை வசனங்களும் தொகைக்கும் சில்லறைக்குங் கிடைக்கும்.

ESTD. 1927

T. THAMBITHURAI

NEWS AGENT, BOOK - SELLER & STATIONER

226, HOSPITAL ROAD

JAFFNA :: CEYLON

இல்லையான காவியம்

நாவற்குழியூர், நடராசன்

கடவுள் வாழ்த்து

1. இல்லைஉண்டு என்றவாதம் இன்றும்அன்றும் என்றுமிங்
கில்லையாக இல்லையாக்கும் இல்லையான இறைவனே!
இல்லையான காவியத்துக் கெழுதுகின்ற இவ்வுரை
இல்லையான தேதுங்கொண்ட தில்லையாக வேணுமே.

அவையடக்கம்

வேறு

2. எல்லாரு மேதோ எழுதுகிறார், அவ்வவற்றைப்
பல்லாருங் கூடிப் பரிகசித்துத் தள்ளுகிறார்;
வல்லாரும் என்கவியை வசைகூற முயல்வாரோ?
இல்லாத காவியத்துக் கென்னசொல்ல இருக்கிறது!

நூன்முகம்

வேறு

3. இலக்கியமா செய்கின்றேன்? இல்லை யில்லை;
எவரையும்நான் மகிழ்விக்க எண்ண வில்லை;
கலக்கியடிக் கின்றசில நீதி கூறும்
கற்பனைகள் சொல்லிடவுங் கருத வில்லை;
நிலத்தினிலே நடக்கின்ற நிகழ்ச்சி பட்டென்
நினைப்பினிலே தெறிக்கின்ற கிரணக் கற்றை
புலத்தினிலே உருவங்கள் பொறிக்கு தங்கே
பொத்திவைக்க இடமில்லைப் போடு கின்றேன்

நாட்டு வருணனை

வேறு

4. சூழ நீள்கடல் சூழ்ந்து கிடப்பினும்
ஆழ நீளம் அறிந்தில வாறுபோல்,
ஆனை ஆள்அங் களந்தறி யாதது
'கீழம்' என்றொரு நாடிருக் கின்றது.

5. வானை தாவி வயலிடைப் பாய்வதும்
பானை மோதப் பழவகை வீழ்வதும்
கூழை வாழைக் குலைகளைச் சாடலும்
வாழை தேனை வழங்கலும் அங்கிலை.

6. ஆனை யான அடங்கிக் கிடப்பதும்
பூனை யான புடைத்துக் குதிப்பதும்
சேனை நாயகர் சித்திரச் சிங்கங்கொண்(டு)
ஆனை ஆள நினைத்ததும் அங்குதான்.

7. மந்தி சிங்க மயிரினைப் போர்த்(து)அது
முந்தி வந்த முழுமுதல் என்(று)அயல்
நந்தி தம்மை நவைசெயும்; அங்(கு)அவை
அந்தி வண்ண மெனச்சிவந் தார்த்திடும்.

8. வானை நோக்கி வளர்ந்த பனையினைக்
காணை நோக்கிக் கவிந்த பலாவினம்
சேனை போலச் சிதைக்க வளர்ந்திட
ஆனை போல அதுவும் உயர்ந்திடும்.

9. ஆதி கால அரக்கர் பரம்பரைச்
சாதி யொன்று சதிசெய்து அங்குள
வீதி யெங்கும் வெறிகொண்டு நிற்குது
நீதி மெள்ள நிலைகுலை கின்றதால்.

10. தொன்று தொட்டு வளர்ந்த கலையினை
இன்று நேற்று எழுந்த முனையிலை
கொன்று நிற்கக் குதிகொள்ளு கின்றது;
வென்று செல்லும் விதியதற் குள்ளதோ?

11. ஆலை தோறும் அரசியற் போர்களும்
வேலை தேடி விழுந்தடிப் போர்களும்
வாலை வாரி வளம்பெறு வோர்களும்
சாலை தோறும் சளக்குரைப் போர்களும்

12. கூலி பேசிக் குழப்பஞ்செய் வோர்களும்
போலி வேஷப் பொதுநலப் பேர்களும்
பாலி யாற்றுப் படுமணல் தன்னிலும்
நாலி லொன்றுக் குயர்ந்ததந் நாட்டினில்.

13. சூழ்ச்சி செய்து சுகமெடுப் போர்களே
ஆட்சி செய்யும் அரசியல் வானிடை
காட்சி தந்து களிநட மாடுவார்,
வீழ்ச்சி யெய்தும் வியப்பதும் உண்டுதான்.

நகர வருணனை

வேறு

14. பழங்குடி யறியாப் பதி;மொழி நூறு
வழங்கிடு 'கிழும்பு' வான்நகர் அதனில்
களங்கமொர் கோடி கண்மறை வாக
விளங்கிடும் அதைநான் விரித்திட லாமோ?

15. எத்தனை சாதி! எத்தனை சமயம்!
அத்தனை யாகு மனுசா ரங்கள்
உத்தமர் களுமுளர் ஒருமணி வேளை
பத்தினி களுமுளர் பகலினி லங்கே.

வேறு

16. வந்தனைகள் செய்குவது வானவரை யல்ல
தந்தமது மேலையதி காரிகளை யாகும்;
சந்ததமு மந்தவகை சாதனைகள் செய்வோர்
எந்தவகை யாலுமுயர் வெய்துவது சாலும்.

17. மிஞ்சிவழிந் தோடுவது மேல்வீதி யெங்கும்
விஞ்சுவிசை வண்டிகளே, வெண்ணெய்தயிர் அல்ல;
கஞ்சிகழு நீரினையும் காண்பதரி(து), என்றும்
அஞ்சிடுவர் தண்ணீரும் அற்றுவிடும் என்று.

வேறு

18. மாடிகள் கோடி யங்கு, மனைகள்முன் மலர்த்தோட் டங்கள்,
கோடியின் பின்னல் எங்கும் குப்பைசேர் குச்சு வீதி;
பேடிகள் போல, மக்கள் பெருகிய கூட்டத் தார்கள்.
வாடிய சிறுபான் மைக்கு வகுப்பது பிறிதோர் நீதி.

19. பூக்களோ அங்கு மல்கு பூவையர் ஒத்த வாகும்
நோக்கவே அன்றி வேறு மோக்கவோ உதவா; என்றும்
'ஆக்களோ' அடிவ ழுக்கி அதிகமாய் விழுவ தெல்லாம்
மாக்களின் மதத்தா லல்ல மக்களின் மதத்தா லாகும்.

நூல்

20. காவியமா எழுதவந்தேன்? இல்லை யில்லை;
காவியத்துக் கிங்கேயோர்; கதையு மில்லை;
மேவியநற் றலைவனிலைத் தலைவி யில்லை;
மேலான என்கவியை மெச்சி மெச்சிப்
பாவினிலே உயர்ந்ததெனப் பரிச ளிக்கப்
பண்புடைய வள்ளலொரு பேரு மில்லை;
காவியமேன் எதற்காயிங் கெழுத வேண்டும்?
கட்டிவைப்போம் ஏட்டினிலிக் கணக்கி லேயே.

ஈழத்தமிழர் இடர்!

சாரதா

★

பண்டு மிகப்பெருங் கண்டமாய்—மகா
பாரதம் வாழ்ந்தவந் நாளிலே—புகழ்
மண்டு தமிழ்த்திரு நாட்டிலோர்—பெரும்
மாநிலப் பாகமிஃ தென்னவே—பரந்(து)
ஒன்றி யிருந்ததெம் மீழமே—அதன்
உள்ளே முதலுறைந் தோர்களும்—தமிழ்
தந்த எமதினத் தார்களே—இதைச்
சாதிக் கலாம்பல சான்றினுல்.

காடை விஜயனுங் தோழருங்—கரை
காணு தலைந்து புகுந்தபின்—ஒரு
மூடக் குவேனியி னுலவள்—இனம்
முற்று யழிந்து முடிந்திட—அவர்
நாடு பிடித்தர சாட்சியுஞ்—செய
நன்கு கிளைத்த தவர்குலம்—அதே
காடைப் பரம்பரை யென்பதை—வெளிக்
காட்டுரூர் சிங்களர் இன்றுமே!

பாரத ராமா யணம்முதற்—பல
பைந்தமிழ்க் காவியங் கள்சொலும்—கொடுங்
கோர வரக்க முறைக்குமே—இவை
கூட வெனும்படி, கொள்ளைகள்—கொலை
சோர மடியுதை குத்துவெட்(டு);—எலாந்
தோன்றி வளருது; சிங்களம்—எனுஞ்
சார மிலாமொழி மாந்தரால்—தமிழ்ச்
சந்ததிக் கெத்தனை தத்துகள்!

'புத்த தரும விரோதமாய்ச்—செலும்
போலி மதக்குரு மார்களின்—பெரும்
பித்த வெறியுரு வாக்கிய—ஒரு
பேயர சாங்க'மென் றேசொல—இடம்
வைத்து நடக்குது சிங்கள—இன
மக்கள் அரசியல் முன்னணி—தமிழ்
மக்க ளினத்தை யழிப்பதே—அதன்
மாபெரும் வஞ்சக நோக்கமாம்!

தக்க வொருத்தரு மில்லையோ?—மனு
தர்ம முணர்ந்தவ ரில்லையோ?—தமிழ்
மக்க ளிலங்கையி னிற்படுந்—துயர்
மாற்ற ஒருவழி யில்லையோ?—வெறும்
மொக்கு முறையினில் ஆட்சியைச்—செயும்
மூட ரகந்தை முனைப்பினுல்—வருஞ்
சிக்க லினைத்து மறுத்திட—உயர்
தெய்வ அருளுமே யில்லையோ?

செத்து மடிந்திட நேரினுங்—தனிச்
சிங்களக் கொள்கையைச் செந்தமிழ்—இனம்
முற்றும் மறுத்திடு மென்பதை—ஒரே
மூச்சி லுணர்த்திட முற்படின்—அவர்
கொட்ட மினைத்து மடங்கிடும்—எனுங்
கொள்கையி னுலிதைக் கூறுறேன்;—தமிழ்ச்
சக்தி யினைத்தும் ஒன்றுபட்(டு)—எழின்,
சாதிக் கலாமிதை வேகமாய்!

★

விண்ணின் அமுதம்

★ ★ மாவை, க. சச்சிதானந்தன் ★ ★

※ விடுமுறை நாட்களை அவசர அவசரமாகக் கழித்துவிட்டு. அன்பு மனைவியையும் அருமைக் குழந்தையையும் விட்டுப் பிரிய மனமின்றி, அவள் கொடுத்த கட்டுச் சோற்றுடன் புகையிரதத்தில் ஏறிய கந்தையா வவுனியா சமீபித்ததும், அதனை உண்பதற்கு எடுக்கிறார். உடன் சென்ற வாலிபத் தோழர்கள் நால்வர் அதைக் கேலிசெய்கிறார்கள். அவர்களுக்குக் கந்தையா கூறிய மறுமொழி இங்கு கவிதையாய் விரிகிறது:

தங்க வளைக்கைகள் தொட்டுச் சமைத்தது
சாலக் கமழு தையா—இதில்
அங்கமெ லாம்மிகப் பொங்கி வழிந்திடும்
அன்புங் கலந்த தையா.

கொட்டிய உப்புக் கசப்பதென் றுலுமுள்
கூடி யினிக்கு தையா—இது
விட்டுப் பிரிகையிற் சொட்டுக்கண் ணீர்பட்ட
விண்ணின் அமுத மையா.

சொன்ன படிநட வாத துடிப்பயல்
தொட்டுச் சுவைத்த தையா—இது
சின்னஞ் சிறுகைக் குழந்தை யளைந்தது
தெய்வ அமுத மையா.

ஆகக் கரிந்து பொரிந்ததென் றுலுமே
அன்பு மணக்கு தையா—இது
வேகவைக் காததென் றுலும்ள னக்கொரு
விந்தை உருசி யையா.

ஊது குழற்சத்தம் கேட்டவ திப்பட்டு
ஓடி வருகை யிலே—இது
பாதி வழிவந்து தாமரைக் கைதந்த
பச்சை அமுத மையா.

கட்டிய அன்புக் கயிற்றினிற் சுற்றிய
கட்டுப் பொதியி தையா—இதைத்
தொட்டுச் சுவைக்கையில் உள்ளமெல் லாமொரு
சோதி மிளிரு தையா.

முகிலே!

த. யோகநாதன்

✸

வெண்மை நிறமுடையாய்—முகிலே!
விண்ணில் தவழ்ந்திடுவாய்;
வண்ண வடிவழகோ?—கருமையை
வாமனும் போற்றநிற்பாய்

நீலத் திரைக்கடலில்—முகிலே!
நீள்விழி யாள்போலச்
சாலவே மொண்டிடுவாய்—நீரினைத்
தாங்கியே சென்றிடுவாய்.

ஓடி அலைந்திடுவாய்—முகிலே!
உண்மை நிலைஉணர்வோம்
நாடி நிறம்பெயர்வாய்—கருவுடை
நங்கை யெனமிளிர்வாய்.

காரிபோற் கையுடையாய்—முகிலே!
காண வழிவகுப்பாய்
பாரிஉன் மைந்தனன்றே?—கொடையெனும்
பண்பு நிறைந்ததனால்.

ஐயன் வரவுரைப்பாய்—முகிலே!
ஆயிழை தூதுசெல்வாய்
மாயன் குறும்புசெய்வாய்—விசும்பில்
மாலை மதிமறைப்பாய்.

மொய்மலை தேடிநிற்பாய்—முகிலே!
முத்தம் பலகொடுப்பாய்
பொய்யிற் புலவனுனை—கவிதையாற்
போற்றிப் புகழ்ந்திடுவான்.

வன்னப் பயிர்களெல்லாம்—முகிலே:
வாழ்த்தி வணங்கிடவே
மின்னி முழங்கிடுவாய்—மழையால்
மேதினி வாழவைப்பாய்.

வெறும் சந்தடி

— முருகையன் —

✸

ஓடி அலைந்துடல்
நைந்து சோர
உள்ளம் அலுத்துச்
சலிப்பின் ஓரக்

கோடு தொடும்படி
மாயும் எங்கள்
கொள்கையில் வாழ்க்கையின்
அர்த்தம் என்ன?

தூங்கி விழிப்பதில்,
உண்பதற்குச்
சோறு பெறநூறு
வேலை செய்தே

ஏங்கி உழைப்பதில்,
—ஏதோ என்றே
இன்பம் நுகர்வதில்
அர்த்தம் என்ன?

நித்தம் பொருளற்ற
வார்த்தை வீசி,
நேரம் கொலைசெய்து,
சண்டையிட்டுச்

சத்தம் பொழிவதில்
அர்த்தம் என்ன?
சாரமில் சந்தடி;
அர்த்தமில்லை!!

பாசமனம்

வி. கி. இராசதுரை

உண்ணுமல் இரவெல்லாம் உறங்கி டாமல்
உனைக்காணத் தவிக்கின்ற உள்ள மிங்கே
புண்ணுகிப் பொடியாகிப் புல்ல ரிப்பாற்
புற்றுகிப் போயிற்றே; பூவாய்! இன்னும்
கண்ணுடிக் கன்னத்தாற் கடைக்கண் வீச்சாற்
கற்பூரங் கமழும்பூக் கழுநீர் வாயால்
என்நோயைத் தீராத நீலி! என்னை
ஏனுடி நேசித்தாய் சொல்லு, கண்ணே!

கொந்தளிக்கு மாழியிலோ ரோடம், கோரக்
கூச்சலிடும் புலிக்காட்டி லொருமான் குட்டி
வெந்தொளிருஞ் சுவாலையிலோர் விட்டில், வெய்ய
விடநாகக் கொடுவாயில் தவளைக் குஞ்சு!
இந்தவிதம் பட்டியலில் எந்தன் சீவன்
ஏகாமல் தவிக்கின்ற போதுங் கூட
வந்துலவ மாட்டாத வசந்தக் காற்றே!
வைரித்த உருக்கோஉன் காதல் நெஞ்சு?

மாடியிருந் தோடிவருங் கண்கள் நோக்கு
மதபாணத் தாக்கலுக்குத் தாங்கொ ணுது
மூடிவிடும்; சாளரத்து மூலைக் குள்ளே
முன்னறிவிப் பில்லாத 'மறியல்' செய்யும்
வாடிவிழும் பூக்காடு! ஏந்துங் கைக்குள்
வந்துவிழுங் கண்பீச்சு முத்துக் கற்கள்!!
ஆடிவரு மனற்காற்றுக் குதிர்ந்து போகும்
அரசமரச் சருகாச்சோ, அமரக் காதல்?

'தாஜ்மஹால்' கட்டமுதல் உண்மை யாயுன்
தங்கிற மேனிக்கோர் உவமை எங்கள்
ஆசியா வெங்கணுமே கண்ட தில்லை!
'அஜந்தா'வி னோவியத்தி லறவே யில்லை!!
வீசுமிளந் தென்றலிலுன் உடர்சாய்ந் தாட
விரிந்தசடை கலைந்தாட விழிக ளாட
பாசமனங் கொள்ளைகொண்ட கள்ளி! யுந்தன்
பரதநடம் பார்க்கின்ற நாளு மென்றே?

குடிசையிற் சுவர்க்கம்

யாழ்ப்பாணன்

பரந்த கடலழகில்
பற்றியுளம் பாயுதடீ
விரிந்த வயலழகில்
விழைந்தெனுளம் வீழுதடீ
சரிந்த மலைகளிலே
தாவியுளம் சாருதடீ
கரந்த வாழ்வதனைக்
கட்டறுத்தும் ஓடுதடீ!

ஒருகுடிசை அமைத்திடவே
உளம்பரந்து செல்லுதடீ
இருமருங்கும் இயற்கையெழில்
என்னுளத்தை ஈர்க்குதடீ
விரைமலரின் வாசனைகள்
வெறியெனக்கு மூட்டுதடீ
அருகமரும் கிளிமொழியுன்
அமுதமொழி சுவர்க்கமடீ!

வண்டினங்க ளின்சுருதி
மகிழ்வுதரும் பாடலடீ
கொண்டலசை குமுறல்களே
கொட்டுமுயர் முழவமடீ
அண்டர்களும் வியப்புறவே
அருந்தமிழைச் சுவைத்திடுவோம்
எண்டிசைக்கும் இன்பெருக்கி
இன்கவிகள் இசைத்திடுவோம்!

எனையணைந்து சேர்ந்திடடீ
என்குயிலி இணைந்திடடீ
தனியெனக்கு வழித்துணையாய்ச்
சகமுளநாள் சார்ந்திடடீ
சுனைகளிலே வீழ்ந்திடுவோம்
தோய்ந்திடுவோம் பாய்ந்திடுவோம்
நினைவதனி லொன்றெனவே
நீளிறக்கை யடித்திடுவோம்!

குன்றுகளில் உருண்டிடுவோம்
கொழுகொம்பிற் ருவிடுவோம்
தென்றலுடன் தவழ்ந்திடுவோம்
தென்குமரி திளைத்திடுவோம்
அன்றிலெனும் பறவைகளாய்
அருகணைந்து மகிழ்ந்திடுவோம்
ஒன்றியொரு சோடிகளாய்
உலகனைத்தும் உவந்திடுவோம்!

பாட்டிசைப்போம் பண்ணெலிப்போம்
பறந்துவெளி திரிந்திடுவோம்
கூட்டிசைப்போம் குதூகலிப்போம்
குயிலினமாய்க் குலவிடுவோம்
நாட்டிலுறு வளங்களெலாம்
நமதுயர்ந்த செல்வமடீ
மேட்டளந்து காட்டளந்து
விண்ணளந்து விரைந்திடுவோம்.

திறந்த பெருவெளியில் தில்லைநடம் தோன்றுதடீ!
உறைந்த முகிலழகு உமைவிரிக்கும் கூந்தலடீ!
சிறந்த சுவர்க்கமதைச் சிறுகுடிசை காட்டுமடீ!
நிறைந்த பேரழகை நித்தியமும் தொழுதிடுவோம்!

உன்போல் நண்பன் யாரோ?

இ. நாகராஜன்

★★

சுற்றமும் நட்புஞ் சூழச்
சோதரர் துணையே செய்யப்
பெற்றவர் அன்பாய்ப் பேணப்
பெண்ணவள் இன்பம் பெய்ய
உற்றநல் வாழ்வு எங்கோ
ஒழிந்தது உலகில் எந்தப்
பற்றுமே அற்று நானும்
படுமரம் அன்ன ஆனேன்.

மலரளி மணமே தேங்க
வாழ்வினில் மாரு இன்பம்
குலவிடக் கொண்ட பேறு
குறுகிட இன்று இந்த
உலகிடை நானே யன்றி
உறுதுணை வேறே யில்லா(து)
நிலையிலாச் சென்ற கால
நினைவிடை நிற்க லானேன்.

பாழிருள் வையம் பற்றப்
பகலெலாம் உழைத்த மாந்தர்
ஆழ்துயில் பயிலுங் காலை
அடவியின் புறத்தே யோர்நாள்
தாழ்வுறு செயலால் நெஞ்சம்
சஞ்சலக் கடலாய் ஆர்ப்ப
மாழ்கிலா மனமே காட்டும்
வழியினைப் பற்றிச் சென்றேன்.


என்முனே எதிர்த்து நிற்கும்
இருளதின் கருமைக் கூடே
சென்றிடச் செயலும் தோன்று(து)
திகைத்துமே அச்சம் தேங்க
நின்றனன் நீண்ட நேரம்
நிறையிருள் அதனைப் போக்க
இன்னொளிக் கதிரைத் தேய்ந்த
இந்துவும் ஏந்தி வந்தான்.

ஒளியினைக் கண்டேன் எங்கும்
ஒளிர்ந்திடும் எழிலும் கண்டேன்
வழியினைத் தெளிந்தேன் ஆனால்
மனதிடை வந்த அச்சம்
ஒழிந்தில சென்ற கால(த்)
துற்றவர் நினைவே உந்த
விழியது நீரைப் பெய்ய
விசனமே உற்றேன், ஆங்கு;—

"அன்பனே! அச்சம் வேண்டா
அடியனேன் அருகே உள்ளேன்
என்றும்நீ யென்னை ஏனை
எண்ணிலை ஆனால்; என்றும்
உன்னையே பிரியா வாறுய்
உறுதுணை ஆக்கி என்னை
முன்னவன் வைத்தான்" என்ற
மோகனக் குரலைக் கேட்டேன்.

அறிந்திடாக் குரலே ஆகா!
அலகையோ இதுவே என்ன;
"பிறந்துள காலந் தொட்டே
பிணைந்துள சாயல் என்னை
அறிந்திடாய் அன்பா! அல்லில்
அகலவே இல்லை உன்னை(டு)
உறைந்துமே வந்தேன் வான
ஒளியினிற் பாராய்!" என்றான்.

அணங்கினர், நண்பர், சுற்றம்,
அன்னையர், பிதாவர், சேயர்
இணங்கியென் ஏவல் தட்டா
இளையவர் இருந்தா லென்ன?
கணமதும் பிரியா தெந்தக்
காலமும் அகலா உன்னை
உணர்ந்தனன் ஆகா! உன்போல்
உண்மையாம் உறவர் யாரோ?



தம்பலகாமம் கோணேசர் கோவில்

குரைகடல் சூழ்ந்த கோணமலைச் சிவாலயத்தை ஒல்லாந்தர் தகர்த்துடைத்த பின்னர் அங்குள்ள திருவுருவங்களைத் தம்பலகாமத்திலுள்ள கோணேசர் ஆலயத்தில் வைத்துச் சைவ நன்மக்கள் வழிபடலாயினர். அதே ஆலயம் இன்று புதுச் சோபையுடன் விளங்குகின்றது.



திருக்கோணமலையிலுள்ள புதிய கோணேசர் ஆலயம்

'கரைகெழு சந்துங் காரகிற் பிளவும், அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்குங் கோணமா மலை'யிலுள்ள
புதிய கோணேசர் ஆலயம்.

எம். எச். இஸ்மாயில்

164–168, இரண்டாம் குறுக்குத்தெரு :: கொழும்பு

பட்டுச் சேலைகள்

பங்களூர், காஷ்மீர், பிஷெவார் பட்டுச் சேலைகள், ரம்மியமான கலர்களிலும், கண்களைக் கவரும் போடர்களை உடையவைகளுமாக நாங்கள் அளிக்கிறோம்.

சேலைப் புடவைகள்

ஜொர்ஜெட், பிரிண்ட் செய்ததும், சாதா கலர்களிலும், நைலோன் பலரகங்களிலும்—சிவ்வோன்—வோயில் முதலிய புடவை ரகங்களும் கிடைக்கும்.

ரவிக்கைப் புடவைகள்

வெல்வெற், நைலோன், பட்டு, சோளி ரகங்கள். ரோபியா வோயில் முதலியவைகள், ட்ரிக் கோலின்—இன்னும் பல ரகங்கள்

பலரகப் புடவைகள்

கமிசுப் புடவைகள், கோட் புடவைகள், துவாய்கள், பனியன்கள்—கைலேஞ்சிகள் முதலியன.

கைக் கடி காரங்கள்

ஆடவர், பெண்டிர் உயர்ந்த ரகக் கைக் கடிகாரங்கள் மேசைக் கடிகாரங்கள், சுவர்க் கடிகாரங்கள்,

பௌண்டன் பேனைகள்

பாக்கர், சீபர், பைலட் முதலிய வைகள்.

M.H.ISMAIL

எம். எச். இஸ்மாயில்

2ஆம் குறுக்குத் தெரு :: கொழும்பு.

போன்: 3675

இலங்கையிலே பிரசித்திபெற்ற புத்தக வியாபாரிகள்

இரத்தினஸ்ரோஸ்

சங்க காலத் தமிழ் இலக்கியங்கள்:

* சிலப்பதிகாரம்
* மணிமேகலை
* கம்பராமாயணம் போன்ற உன்னத காப்பியங்கள்
* தற்காலத் தமிழ் நவீனங்கள்
* பாடசாலைப் புத்தகங்கள்

யாவும் மலிவாகக் கிடைக்கும்.

இரத்தினஸ்ரோஸ்,

130, மலாய் வீதி.

கொழும்பு - 2

RATNA STORES

130, MALAY STREET

SLAVE ISLAND :. COLOMBO-2

தோலகட்டி செபமாலைத் தாசர் ஆச்சிரமம்

'பயஸ்'

உலக வாழ்விற் சுகபோகங்களை நுகர வேண்டியவர்கள் அப் பற்றுக்களை யெல்லாம் துறந்து, புலனடக்கத்தோடு துறவு வாழ்வை மேற்கொள்வதற்குக் காரணம் ஆண்டவன் மீதுள்ள விசுவாசமேயாகும். அந்த விசுவாசத்தின் காரணமாகப் பண்டுதொட்டுப் பல் வேறு சமயத்தினரும் தத்தம் சமய முறையின் படி ஆச்சிரமங்களமைத்து இறைவனை வழி பட்டுப் பேரின்பப் பெருவாழ்வு எய்தினர் எனச் சமய நூல்கள் நினைவுபடுத்திக்கொண்டிருக் கின்றன. இம்மையே பெரிதென்ற எண்ண மும், தமக்கென வாழும் தன்மையும் தலை யெடுத்துவிட்ட இந்தக் காலத்திலும் ஆத்மாவின் உயர்நிலையையும், ஆண்டவன் சேவையையும் கருத்திற்கொண்டு அமைக்கப்பட்ட ஆச்சிர மங்கள் ஆங்காங்கு இன்னும் உள. இக் கூற்றை நிரூபிப்பது போல யாழ்ப்பாணத்தில் வயாவிளானைச் சேர்ந்த தோலகட்டியில் 'செப மாலைத் தாசர் ஆச்சிரமம்' இருப்பது நாமனை வரும் பெருமைப்படக்கூடிய தொன்றாகும்.

மௌன மடம்

யாழ்ப்பாணத்தின் சிறப்பை எடுத்துக் கூறும் வகையில் விளங்கும் இக் கத்தோலிக்க ஆச்சிரமத்தைப்பற்றி அறியாதவர்கள் இன்றும் நம்மிற் பலருளர். அது ஓர் அழகிய தோட்ட மென்று சிலர் கருதுகிறார்கள். இன்னுஞ் சில ருக்கு அந்த ஆச்சிரமத்தின் இயற்கை வனப்பு மிக்க காட்சிகள் மட்டுமே நினைவிலிருப்பதுண்டு. மற்றுஞ் சிலரோ வெளில் 'மௌனமடம்' என்று சொல்வதுடன் மட்டும் திருப்தியடைந்துவருகி றார்கள். இல்லற வாழ்வை வெறுத்துத் துற வறம் பூண்ட சந்நியாசிகளைக்கொண்டதான அந்த ஆச்சிரமத்தைப் பற்றிய சகல விருத்தாந் தங்களையும் அறிபவர்கள் இக்காலத்திலும் இப் படி உண்டா! என்று ஆச்சரியத்தில் ஆழ்ந்துவிடு வதுமுண்டு. நவநாகரிக வளர்ச்சியின் பயனை இந்தக் காலத்தில் அத்தகைய ஐயப்பாடு எழுவது சர்வ சாதாரணமேயாகும்.

1928இல் ஆரம்பம்

'செபமாலைத் தாசர் சபை' என்ற இந்த ஆச்சிரமம் 1928ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி காணிக்கை மாதா திருநாளன்று நிறுவப்பெற்றது. அதனைத் தோற்றுவித்துச் சீரான முறையில் உருவாக்கிய பெருமை அதி வண. தோமாஸ் சுவாமி அவர்களுக்கே உரிய தாகும். அன்று ஏழு சந்நியாசிகளுடன் ஆரம் பிக்கப்பட்ட இந்த ஆச்சிரமம் இன்று எழுபது சந்நியாசிகளைத் தன்னகத்தே கொண்டதாகப் பூரண பொலிவுபெற்று விளங்குகின்றதென் பது அதன் இலட்சியப் பணிக்கு ஓர் எடுத்துக் காட்டேயாகும்.

கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த பிரமச்சாரி களாயுள்ள ஆண்மக்களே அங்கு சேர்க்கப்பட் டுப் பயிற்சியளிக்கப்படுவதுண்டு. ஆறு மாத காலப் பயிற்சியின்பின் அவர்கள் தம் குருவின் முன் சத்தியப்பிரமாணஞ் செய்து சந்நியாசம் பெறுகின்றனர். செபமாலைத்தாசர் சபையினர் கள்ளங் கபடமற்ற சின்னஞ் சிறு குழந்தைகள் போன்று சிறிதளவும் முகங்கோணமலும், சுறுசுறுப்பு மிக்கவர்களாயும் காணப்படுகின்ற னர். மற்றைச் சந்நியாச சபைகளுக்குரிய ஏழ்மை, தூய்மை, பணிவு என்னும் வாக்குத் தத்தங்களோடு அவர்கள் உண்டியுமுறக்கமும் குறைத்துச் செபமும், சரீரப் பிரயாசையான ஊழியமும் புரிதல் வேண்டும். எல்லாவற்றுக் கும் மேலாகக் கடும் மௌனம் காக்க வேண்டுமென்பது அவர்களுக்கிடப்பட்ட கட்

டனைகளி லொன்றாகும். வெய்யில், புழுக்கம், பனி, குளிர் என்பன போன்ற காலதேவனின் கைவரிசைகள் அவர்களிடம் பலிப்பதேயில்லை. 'கிறிஸ்துவில் நாங்கள் பைத்திய' ரென் பதையே தம் குறிக்கோளாகக்கொண்டிருப்பர்.

தவ வாழ்க்கை

இல்லற வாழ்க்கையினை வெறுத்துச் சந்நி யாசம் பூண்டு தவம் செய்வதையே தம் வாழ்க் கையின் முக்கிய நோக்கமாகக் கொண்ட இத் திருக்கூட்டத்தினரின் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஏனையோருக்கெல்லாம் முன்மாதிரி யான எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. தினமும் எட்டு மணித்தியாலம் ஜெபத்துக்கும், எட்டு மணித்தியாலம் உடல் உழைப்புக்கும், எட்டு மணித்தியாலம் இளைப்பாறுதலுக்குமாகச் செலவிடப்படுகிறது. இத்தனைக்கும் அவர்கள் ஒருவரோடொருவர் பேசுவதே கிடையாது. வாரத்தில் ஒரு நாள் சில மணி நேரமும் விசேட பெருநாட்களிலும் மட்டுமே மௌனம் கலைத்து வாய்திறந்து பேசுவர்.

தாம் பூமியிற் செய்த பாவத்துக்காகத் தமது சரீரம் இளைக்க வேலை செய்யவேண்டுமென்ற கருத்தினைச் சிந்தையிற்கொண் டொழுகும் அவர்கள் ஆச்சிரமத்திலுள்ள அத்தனை பணி களும் தமக்குரியனவாகக் கருதி மனமகிழ்ச்சி யோடு ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். துணி துவைத்தல், மயிர் கழைதல், மலசலகூடம் சுத்தி செய்தல், உணவு சமைத்தல் முதலான பல்வேறு கருமங்களையும் மனங்கோணாது செய்வதைக் காணும்போது காந்தியடிகள் தமது சமர்பதி ஆச்சிரமத்திற் கையாண்ட நடைமுறைகள் நினை வுக்கு வருகின்றன. உழைப்பு மிகக் கடுமை யானதா யிருப்பினும் உணவில் எளிமைதான் காணப்படுகிறது. தாவர போசனத்தையும், மல்லி கலந்த கோப்பிப் பானத்தையும், பிட்டு, களி, கூழ் முதலானவற்றையும் தம் பிரிய உணவுகளாக ஏற்றுக்கொண்டிருக்கும் அவர்கள் தம்மை ஒறுத்துச் சீவனம் செய்ய வேண்டு மென்பதை நடைமுறையில் வெற்றிகரமாகக் கையாண்டுவருகிறார்கள்.

வேர்வை நிலத்தில் விழ

'பூமி பயன்கொடாதொழியும். உன் நெற்றி வேர்வை நிலத்தில் விழப் பாடுபட்டுழைப்பா யாக' என்று சருவேசுரன் ஆதாமைச் சபித்த போது கூறிய வார்த்தைகள் இன்று மிவர்கள் மாட்டுப் பலிக்கின்றது. நெற்றி வேர்வை சிந்த நிலமென்னும் நல்லாளுடன் அவர்கள் உறவு கொண்டு உழைத்து வருவதன் பயனாக ஆச்சிர மத்தின் சூழல் அழகிய தோட்டமாகக் காட்சி யளிக்கிறது. கற்பாறைகள் நிறைந்த நிலப்பரப்பின் மத்தியிலே செழிப்பும் வனப்பும் மிக்க அத் தோட்டமானது காட்சியளிப்பதற்கு ஆண்டவன் அருளும் காரணமேயாகும். அரசினர் மாதிரித் தோட்டங்களை யெல்லாம் தோற்கடித்துவிடும் அந்தத் தோட்டத்திலே இல்லாத பயிர் ஏதாவது உண்டா என்ற கேள்விக்கே இடமில்லை. முருங்கை முதல் முந்திரிகை ஈறாக அங்கே பயிரிடப்பட்டிருக்கின்றன வென்று சுருக்கமாகச் சொல்லிவிடலாம்.

சுயதேவைப் பூர்த்தி

தன்கையே தனக்குதவி என்றவாறு ஆச்சிரமத்தின் தேவைகளனைத்தும் பெரும் பாலும் அவர்களாலேயே பூர்த்தி செய்யப்படு கின்றன. தச்சுவேலை, சிற்பவேலை முதலான சகல கருமங்களிலும் அவர்களுக்கு நிரம்பிய தேர்ச்சி யுண்டென்பதை ஆச்சிரமத்தைத் தரி சிக்கும் ஒருவர் இலகுவிற் தெரிந்துகொள்ள லாம். இவைமட்டுமா, பரிமள எண்ணெய் வகைகள், சவர்க்காரம், மெழுகுவர்த்திகள், குளிர் பானங்கள், மருந்து வகைகள், மட்பாண் டம், விளையாட்டுச் சாமான்கள் ஆகியவைகூடத் திறம்படத் தயாரிக்கப்படுகின்றன. குடிசைக் கைத்தொழில்களை விருத்தி செய்யவேண்டு மென்று ஓயாமல் ஓலமிட்டுக்கொண்டிருக்கும் அரசாங்கம் மேற்கண்ட காரியங்க ளத்தனையை யும் அங்கு காணும்போது நிச்சயமாகப் பொரு மைப்படக்கூடும். மதுவரி என்ற பெயரால் அங்கு உற்பத்திசெய்யப்படும் பானங்களுக்கு மிதமான வரியை அரசாங்கம் விதித்துவரு வதற்கும் ஏதாவது மர்மம் இருக்கத்தானே வேண்டும். ஆச்சிரமத்தின் தேவைக்கு எஞ்சிய பொருள்கள் யாவும் சகாய விலைக்கு விற்பனை செய்யப்படுவதாற் பொதுமக்கள் பெரிதும் பய னடைந்து வருகிறார்கள். இந்த ஆச்சிரமத்துப் பாண், விஸ்கோத்து வகைகளின் சுவையை நாடு முழுவதுமே யறியும். கடந்த யுத்த காலத்தில் பாண் முதலான உணவுப் பொருள் களையும் பொதுமக்களுக்கு உதவுவதில் இந்த ஆச்சிரமம் செய்த சேவை என்றும் நினை விலிருக்கத்தக்கது.

வெளியிடங்களில் இருந்து யாழ்ப்பாணத்தைப் பார்க்க வருபவர்கள் எவரும் நிச்சயமாகத் தோலகட்டி ஆச்சிரமத்தைத் தரிசிக்கத் தவறுவதே கிடையாது. ஏன், யாழ்ப்பாண மக்கள் கூட அதனை ஒரு அதிசய இடமெனக் கருதிச் சந்தர்ப்பங் கிடைக்கும்போதெல்லாம் பார்த்து மகிழ்வர். இவ்விதமெல்லாம் அது மக்கள் மனதைக் கவருவதற்குக் காரணம் என்ன



ஆச்சிரமத்தில்: தலைவர் வண. சுவாமி தோமாஸ் அவர்களும் மற்றையோரும்

வென்பதை மேலே கூறப்பட்டவற்றிலிருந்து ஓரளவுக்கேனும் அறிந்து கொள்ளலா மல்லவா ?

நல் வரவேற்பு

ஆச்சிரமத்தைத் தரிசிக்கச்செல்பவர்களுக்கு அங்கு நடக்கும் உபசாரமே தனிச்சிறப்பு வாய்ந்தது. ஆண்டியாயிருந்தாலென்ன, அரசாங்க அதிகாரியாக இருந்தாலென்ன வரவேற்பு உபசாரம் எல்லாம் அனைவருக்கும் ஒரே மாதிரியாகத்தானிருக்கும். இன்சொல்லு மீகையும், விருந்தோம்பலும், அன்பு நிறைந்த தண்ணளியும் அங்கே பரக்கக் காணப்படுகின்றன.

கடுழிய வாழ்வின் மத்தியிலே தழைத்துவரும் இச் சபையின் கிளை மடம் ஒன்று சில வருடங்களுக்கு முன் அச்சுவேலியில் நிறுவப்பட்டு 'அமலி வனம்' என்ற பெயரோடு விளங்குகிறது. தென்னிந்தியாவில் வடக்கன்குளம், மணப்பாறை ஆகிய இடங்களிலும் கிளை மடங்களுள.

மனித வாழ்க்கையின் சிகரம் போன்ற துறவானது தூய்மையின் இருப்பிடமாகும். தூய்மையுடன் தியாகமும் சேரும்போது ஆச்சிரம வாழ்க்கை ஒளி தந்து விளங்குகின்றது. பணி செய்து வாழ்தலே தமது குறிக்கோளாகக் கொண்டுள்ள செபமாலைத் தாசர் ஆச்சிரமம் என்றும் நின்று நிலவுவதாகுக.

சத்துருக்களை நேசியுங்கள்

★

நீ பிறனை நேசித்து, உன் சத்துருவைப் பகைக்கக் கடவா யென்று சொல்லிய வாக்கைக் கேள்விப்பட்டீர்கள்—நானே உங்களுக்கு இவ் வாக்கைச் சொல்லுகிறேன் ; உங்கள் சத்துருக்களை நேசியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களை நிந்தித்து உங்களைத் துன்பப்படுத்துகிறவர்கள் நிமித்தம் வேண்டுதல் பண்ணுங்கள்.—அதினால் நீங்கள் பரமண்டலத்தில் உள்ள உங்கள் பிதாவுக்குப் பிள்ளைகளாவீர்கள் ; அவர் தீயவர்கள் மேலும், நல்லவர்கள் மேலும் தமது சூரியன் உதிக்கவும், நீதி உள்ளவர்கள் மேலும், அநீதியுள்ளவர்கள் மேலும் மழை பெய்யவும் பண்ணுகிறார்.—உங்களை நேசிக்கிறவர்களை மாத்திரம் நீங்கள் நேசிப்பீர்களாகில், உங்களுக் கென்ன பலன் வரும் ; ஆயக்காரரும் அப்படிச் செய்கிறார்களல்லவா ? உங்கள் சகோதரரை மாத்திரம் நீங்கள் வாழ்த்துவீர்களாகில், நீங்கள் செய்கிற விசேஷ மென்ன ; ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்களல்லவா ? ஆதலால் பரமண்டலத்திலுள்ள உங்கள் பிதா பூரண சற்குண முள்ளவராய் இருக்கிறது போல் நீங்களும் பூரண சற்குண முள்ளவர்களாவீர்களாக.

—யேசு நாதரின் உபதேசம்


இலங்கையில்

ORIGINAL HEIDELBERG

வெற்றிக்குக் காரணமென்ன?

அக்காரணங்களுட் சில, இவை:

1. உலகின் எல்லாப் பாகங்களிற் போலுமே இலங்கையிலும் **ஹைடில்பேர்க்** அச்சு யந்திரங்களின் பிரசித்திபெற்ற உயர்ந்த தரம்.
2. இலங்கை அச்சகத்தார் பயன்தரத்தக்க முறையிற் பயின்றுள்ள **ஹைடில் பேர்க்** அச்சுயந்திரங்களின் பல்வேறு அம்சங்கள்.
3. **ஹைடில்பேர்க்**கின் உதவியினால் இலங்கை அச்சகத்தார் தங்கள் முதலீட்டிற் பெற்றுவரும் அதிக ஊதியம்.
4. **ஹைடில்பேர்க்**கைப்பற்றிக் கொடுக்கப்படும் சீரிய போதனை அறிவும் கடமையாற்றும் பணியாளரின் திறமையும்.
5. **ஹைடில்பேர்க்** அச்சுயந்திரங்களில் எவ்விதத் திருத்த வேலையையும் ஏற்றுக்கொள்ளத் தயாராகக் கொழும்பிலுள்ள அடுக்கணியோடு கூடிய தொழிற்சாலை.
6. எந்த நேரத்திலும், எந்த அச்சகத்திற்கும், எந்தப் பிரச்சினையிலும் உதவி செய்யத் தயாராயிருக்கும் பயிற்றப்பட்ட அச்சக நிபுணர்கள்.
7. பொருளை விற்பதோடு வாடிக்கைக்காரர்களுடன் எமது தொடர்பு அற்றுவிடுவதில்லை—அப்பொழுதுதான் ஆரம்பமாகிறது.



யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

[1918ஆம் ஆண்டு ஸ்தாபிதமானது]

* * *

வங்கிக்காரர் மூலநிதி 8 இலட்சம் ரூபாய்

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
34 36700. 100 ரூபாய் விகிதமான 8000 பங்குகள்

பங்குப் பணம் கட்டுமுறை

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த கால முடிவில் பங்கொன்றுக்கு 100 ரூபாய் திருப்பிக்கொடுக்கப்படும் பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாய்க்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்று வரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப் பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும், 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என் மூலம் அறிந்துகொள்ளலாம்

எஸ். கனகசபை, சிருப்பர்

The Jaffna Mutual Benefit Fund Ltd.

BANKERS (ESTD: 1918) **JAFFNA**

தமிழுக்குச் சமநிலை

※ தனிநாயக அடிகளார் ※

பல இனத்தாரும் பல மொழிகளும் உள்ள நாட்டில் ஒரு மொழி பேசும் ஒரு சாதி அரசாங்கத்தை அமைப்பது கொடுமையான தீமைகளை விளைத்தே தீரும். அங்நாடுகளில் ஒற்றுமையும் அமைதியும் எங்ஙனம் நிலைபெறும்? நடந்தேறிய இரு பெரும் போர்களின் பயனுக வும் அவற்றின் பின் ஏற்பட்ட உடன்படிக்கை களின் பயனுகவும் இன்று பல இனத்தாரும் பல மொழி பேசுபவரும் அமைதியாகவும் ஒற்றுமை யுடனும் வாழவேண்டுமாயின் பன்மொழி பல்லின (multilingual multinational) அரசை நிறுவுவதே முறையாகு மென்பது அரசியற் றுறை அறிஞரின் துணிவாகும். எனவே இன்று அக்ரன் பிரபு அரசியல் அமைப்புப் பற்றிக் கூறிய மொழிகள் சிந்திக்கத்தக்கன: "பல்வேறு இனத்தார் எவ்விதமாகவேனும் நசுக்கப்படாமல் எல்லாவுரிமைகளையும் பெற்று வாழக்கூடிய நாடே முன்னேற்றமுள்ள நாடா கும். எல்லா இனத்தாரும் சமநிலையுடன் பங்குபற்றுத அரசு பூரண அரசன்று. எல்லா வகுப்பினரும் தத்தம் பண்பாட்டினை வளர்ப்ப தற்கு வாய்ப்புகள் அளியாத அரசாங்கம் சீர் குலைந்த அரசாங்கமாகும். ஏனைய இனத் தாரை முற்றுக நிர்மூலமாக்கி யழிக்க, அல்லது அவரைத் தம்முட் பலவந்தமாகச் சேர்த்து விட, அல்லது அவரை நாட்டினைவிட்டு ஓட்டி விட எத்தனிக்கும் அரசாங்கம் சக்தி குன்றி மடிந்துவிடும். மேலும் இத்தகைய அரசாங்கம் ஏனைய வகுப்பினரைத் தம்முடன் சேர்த்துச் சமனுக நடத்த வல்லமையற்றதாயிருப்பதாற் குடி யாட்சியின் அடிப்படைக்கல்லே அற்ற அரசாங்க மாகச் சீரழியும்."

வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழினம்

வளம்பொருந்திய பண்பாட்டையும் பண்டு தொட்டு இலங்கையின் வரலாற்றுச் சிறப்பை யும் கொண்ட தமிழ்ப் பேசும் இனத்தாரைச் சட்டத்தால் அழிக்கவோ சிங்கள மக்களாக மாற்றவோ அரசாங்கத்துக்கு வலிமையில்லை. எங்கே மொழியுரிமை கொடுங்கோன்மையால் அடக்கி ஒடுக்கப்பட்டதோ அங்கே அடக்கப் பட்ட மக்கள் புத்துணர்ச்சியுடனும் புத்தாற்ற லுடனும் தம்முரிமைகளுக்காகப் போராட எழுந்தனர். 'ஒக்ஸ்போர்ட்' பல்கலைக் கழகத்திற் சரித்திரப் போதகாசிரியராகும் வின்சென்ற் ஹார்லோ என்பவர் இலங்கை வந்து திரும்பிய பொழுது எழுதியதாவது:

"நானும் எனது மனைவியாரும் யாழ்ப்பா ணஞ் சென்று பூர்வீக இலங்கைத் தமிழர் வசிக் கும் இவ் வரண்ட பிரதேசத்திற் சுற்றுப் பிர யாணஞ் செய்தோம். இங்கு வசிக்கும் திட காத்திரமும் விவேகமுமுள்ள மக்கள் தங்க ளுடைய மொழியை நசித்துச் சிங்களத்தை அரச கரும மொழியாக்க முயற்சி செய்யும் அரசினர் மீது எவ்வளவு ஆத்திரமும் வெறுப்புமுடையவ ராய் இருக்கிறார்களென்பதைக் கண்டோம். சிங்களர் காலகதியில் தமது மொழியை மாத் திரமல்ல; புத்த சமயத்தை அரசாங்க மதமாகக் கொள்ளவுங் கூடும். இதுவும் மிகத் துவே ஷத்தை உண்டுபண்ணியுள்ளது.

சாதியினரின் அம்சங்கள் அருஞ்செல்வங்கள்

"சிங்களர் தமது புராதன பெருமைகளைப் பழையபடி நிலைநாட்ட எத்தனிப்பதை எவரும் ஆட்சேபிக்கமாட்டார். எவருக்கும் தமது சாதியினரின் அம்சங்கள் அருஞ்செல்வங்களே. ஆனல், சிங்களரும் தமிழரும் சமநிலையைப் பெற்று அரசியலை நடத்தினற்றன் இலங்கை உண்மையில் நல்விருத்தியைடையும். இல்லையா யின் வேற்றுமையும் அழுக்காறும் ஏற்பட்டுச்

சுதந்திர அரசாங்கம் பெலங்குன்றி எதிர் காலத்திற் கீழ்நிலை யடைய வேண்டியதாகும்.

"சமீபத்தில் ஒரு சிங்கள மாணவருடன் நான் பேச நேர்ந்தது. இலங்கையின் அரச கரும மொழி ஒன்றுக மாத்திரம் இருந்தாற்றுன் இலங்கை மக்களுக் கிடையில் ஒற்றுமை ஏற்படுமென்று அவர் வாதித்தனர். பிரிட்டிஷ் அரசினரே இவ்விஷயத்திற் பலமுறை இப்பெரிய பிழையைச் செய்ததை வரலாற்றிற் காணலாம் என்று நான் அவருக்கு நினை வூட்டி னேன்."

இலங்கையில் வாழும் தமிழர் சிறுபான் மையரென்று கூறிவிடவியலாது. இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் தொகை, அவர்கள் இலங்கையின் பல்வேறு முன்னேற்றங்களுக்கு நிகழ்த்திய தொண்டு, இலங்கையின் பண்பாட் டிற்கும் செல்வாக்கிற்கும் தமிழ் மொழி அளித்த சேவை, தமிழ் பேசும் மக்கள் சிங்களம் பேசும் மக்களுக்கு ஆற்றிய நன்மைகள், இலங்கை சுதந்திரம் அடைவதற்குழைத்த தமிழ்த் தலைவர் களின் தொண்டு இன்னேரன்ன பல கார ணங்களை முன்னிட்டே தமிழ்மொழிக்குச் சம நிலை அளித்தல் வேண்டும் என்று வற்புறுத்து கின்றனர் சிங்களத் தலைவர் சிலர். நாட்டின் ஒற்றுமை மொழியால் வருவதன்று; சமயத் தால் வருவதுமன்று. ஒரு மொழி பேசும் மக்கள் ஒரு நாட்டை அமைத்தல் வேண்டுமெனின் ஆங்கிலத்தைப் பேசும் மக்கள் அனைவரும் ஆங்கிலேயர், அமெரிக்கர், தென்னுபிரிக்கர், அவுஸ்திரேலியர் என்று பிரிந்திராது, ஒரே யொரு அரசினை நிறுவுதல் வேண்டும். இந்திய மக்கள் பல மொழிகளைப் பேசுகின்றனர்; பல மாகாணங்களைச் சேர்ந்தவர்கள். ஆயினும் இமயமலையைச் சேர்ந்தவர்களும் குமரிமுனை யைச் சேர்ந்தவர்களும் தாம் அனைவரும் இந்திய ரென்ற ஒற்றுமை உணர்ச்சியைப் பாராட்டிவரு கின்றனர். எனவே மொழியால் வருவதன்று ஒற்றுமை. மக்களின் ஒற்றுமை அவர்களின் மனப்பான்மையிலும் சிந்தையிலும் குடிகொண் டிருக்கின்றது. இலங்கை நாட்டிற்கு ஒற்றுமை வேண்டுமெனின் பல சமயங்களையும், பல வகுப்புக்களையும் சமமாகக்கொண்டு இத் தீவின் நிலப்பரப்பில் ஒரே குடையின் கீழ் வாழ உரிமைகள் கொடுப்பதாற்றுன் வரும்.

கலைச் சொற்கள்

அ. வி. ம.


நம் பள்ளிக்கூடப் பிள்ளைகள் உயர்ந்த வகுப்புக்களில் விஞ்ஞானக் கலைகளைத் தாய் மொழியிற் கற்குங்காலம் மிக்க அண்மையில் உள்ளது. ஆதலின், குறித்தவொரு பொருளை யேனுங் கருத்தையேனுஞ் செயலையேனும் பொருத்தமான கலைச்சொல்கொண்டு வழங் குதல் வேண்டும். கல்வியுலகில் ஒன்றிற்கு மேற்பட்ட சொற்கள் ஒருபொருளையே குறித்து வழங்க ஏலவே தலைப்பட்டுவிட்டன. இவற் றைத் திட்டஞ்செய்து ஒரு பொருளுக்கொரு சொல்லேயாக வழக்காற்றிற் கொண்டு வருதல் ஆசிரியர் கடனுகும். கலைகளை முதன் முத லறியத் தொடங்கும் மாணவர், பின்பு விரிந்த கலைகள் பயிலும்பொழுதும் எடுத்தாளக்கூடிய சொல்லினையே முதலிலுங் கற்றுக்கொள்ளல் வேண்டும். அன்றிப் பல சொற் பயிலல் மலைப் பினை யுண்டாக்கும். உவந்த சொல்லையே பயிலின், கலைவிரிய அச்சொல் தானும் விரிந்து கலையின் பல்வேறு பிரிவுகளையும் விளக்கு மாற்றல் பெற்று வழங்கும். ஆதலின், திட்டஞ் செய்த சொற்களே கலைச் செம்மையினை அண் ணளவாயினும் பேணி எளிதில் விளக்குவன வாகும். இதனுற் செம்மையான கலைகளுக்குத் திட்டமான சொற்றெகுதிகள் இன்றியமையா தன வென்பது புலனுகும்.



வண்ணை வைத்தீசுவரன் கோவில்

" மருமேவு சோலைசூழ் வண்ணையம் பதியிலுறு
வான்கோயில் வாலாம்பிகை
மாதேவி யொடுமேவும் வைத்தீ சுரக்கடவுண்
மலரடியெம் முடிவைக்கு வாம் "

எனப் போற்றப்படும் யாழ்ப்பாணம், வண்ணைப்பண்ணை வைத்தீசுவரன் கோவில், கோபாலச் செட்டியார் புத்திரன் வைத்தியலிங்கச் செட்டியாரால் இற்றைக்கு 163 ஆண்டுகளுக்கு முன்னர் (கி. பி. 1790) கட்டுவிக்கப்பெற்றது. யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர் அரசு நிலவிய காலம் அது.



குமாரசுவாமிப் புலவர்

" தென்மொழியில் வடமொழியிற் செறிநிகண்டு மிலக்கணமுந் திண்மை நுண்மை
மன்னுபல விலக்கியமுந் தருக்கமுத லியநூலும் வாய்ந்த சைவ
நன்னெறிசேர்ந் துளநூலு மோர்ந்துணர்ந்தோ னட்பினர்பா னன்மை யாளன்
பின்னமிலா துறைமனத்தன் குமாரசுவா மிப்புலமைப் பெருமை மிக்கோன் "

எனப் புலவர்கள் புகழ்ந்துபாடும் பெருமைக்கு உரிமை பூண்ட
சுன்னகம் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள்.

என் தந்தையார்

— கு. அம்பலவாணர் —

பெருமை, புகழ் முதலியவற்றை மனிதர் தேடி அடைகின்றனர். இவைகள் சிலபோது சில மனிதரைத் தாமே தேடிச் சென்றும் அடைகின்றன. இவற்றை இறைவனே இயல்பாகவே நிறையப்பெற்றிருப்பவன். இதனாலன்றே அப்பர் சுவாமிகள் 'சென்றடையாத திருவுடையானே' என்றும், 'கருதுவார் இதயத்துக் கமலத்தூறும் தேனவன்காண், சென்றடையாச் செல்வன்றுன் காண்' என்றுந் தமது அருட்பாக்களில் துதித்து நின்றனர். மனிதன் எப்படிப் பெருமையை அடைகின்றுன் என்பது மிக அற்புதமானதொன்று. மனிதனில் மறைந்து கிடக்கும் ஆத்ம சக்தியின் அற்புத நிலையை அளந்தறிந்துரைக்க வல்லார் யாரோ? அபூர்வமாய் எவர்க்கும் விசித்திரமாய்த் தோன்றும் உலகம் நம்முன்னே அமைந்து கிடப்பது. அதை நன்கு தெளிந்து ஓர்ந்தறியும் பேராற்றல் எல்லார்க்கும் உண்டோவெனின் அப்படியன்று.

'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் றோன்றுமை நன்று' என்றார் வள்ளுவர். புகழின்றி மக்களாய்ப் பிறத்தலினும் மாக்களாய்ப் பிறந்து இகழ்ச்சியைப் பெறுது இரக்கத்தைப் பெறலாமென்று கருதினர் போலும். புகழொடு தோற்றுவதும் எவர்க்கும் கொடுத்து வைத்த பாக்கியமன்று. மெய்ஞ்ஞானிகளாகும் அவதார புருடர்களைப் போலவே புலவர்களும், உலகிடைத் தோன்றி இருட்படலங்களைப் பீறிப் பிரகாசத்தை யளித்துச் செல்லும் பேராற்றல் மிக்கவர்கள். அக் காரணத்தாலன்றே உண்மைப் புலவர்கள் உலகுக்கு அளித்துச் சென்ற கல்விச் செல்வங்கள் கால தேச செயல் முறைகளாற் பாதிக்கப்படாது என்றும் ஒரே தன்மையதாய் மிளிர்ந்துகொண்டிருப்பன. மெய்ஞ்ஞானப் பிரகாச வள்ளல்களாய் விளங்கிய எத்தனையோ கவிசிரேட்டரின் அருள் வாக்குகள் முக்காலத்துக்கும் மூவா மருந்தாய உண்மைகளை எடுத்துரைத்து மக்கள் வாழ்க்கைக் கெல்லாம் மலையிலக்காய் நின்று வழிகாட்டுவன.

நூல்களைக் கற்றறிந்தவுடன் மாத்திரம் ஒருவன் புலமையைப் பெற்றுப் புலவனுவதல்ல. காலத்தைக் கருத்துடன் நோக்கி மக்கள் மன நிலையை உள்ளபடி யுணர்ந்து சிந்தைக்கு வேண்டிய உணர்ச்சி உணவுகளை வழங்கவல்ல ஆற்றலும் புலவனுக்கு இன்றியமையாத விலக்கணமாகும். அப்படியாகப் புத்துணர்ச்சிகளைப் புதுவிருந்தாகப் புத்தம் புதிய முறையில் எடுத்து உலகுக்கு அளித்துச் சென்ற புலவர்களே என்றும் அழியாப் பெருமையும் புகழும் பெற்று நிலைபெறுபவர்.

மனிதனது பிறப்புக்கு மூலகாரணமாக வுள்ளது பேராசை. நன்மைக்கோ தீமைக்கோ நம்மை நடத்திச் செல்வதும் அப் பேராசையே. பொதுவாக ஆசை மனிதனுடைய புனிதத்தைப் பாழ்படுத்திக் கீழே தள்ளிவிடுவது. காரணமின்றி எல்லாங் கடந்த பொருள்மீது கொள்ளும் தூய ஆசைதான் மகத்தானது. அது கிடைத்துவிட்டால் மனிதன் பெறவேண்டியது வேறெதுவுமில்லை. புலவர்கள் தாமறிந்தவைகளை எப்படியாயினும் உலகுக்கு அளித்துச் செல்ல வேண்டுமென்ற வேணவாவுடையவர்கள். உலகமுய்யப் பகட்டின்றிப் பணிவுடன் பணியாற்றிச் சென்ற புலவர்களின் நாமங்கள் என்றுமழியாப் பெருமையுடைத்தாய் விளங்குவனவன்றே.

இளமையும் கல்வியும்

தாம் கற்றனவற்றையும் அறிந்தனவற்றையும் மற்றையோரும் அறியவேண்டு மென்ற பேராசையுடையராய்க் கடைசிவரையும் தமிழ்த் தொண்டினைப் புரிந்து வந்த என் தந்தையார் — குமாரசுவாமிப் புலவர் — குணமாண்புகளை,

வாழ்க்கை விசேடங்களை, இலட்சியப் பண்பாடு களை அறிந்தவரையில் எழுதுமாறு நண்பர் கள் சிலர் தூண்டியமையால் இம்முயற்சியிற் புகுந்தாம். எமது தந்தையார் காலஞ்சென்று 35 வருடங்களாகின்றன. இன்றைய சந்ததியார் அவரை அறியமாட்டார்; என்றாலும் அவரிடம் கல்வி பயின்றவர்களும் அவரை நேரே கண்டு பழகியவர்களும் சிலர் இன்றும் உளர். இவர்கள் அவரைப்பற்றி ஓரளவுக்கு நன்கறிவார்கள். அவர்களுக்கு நாம் கூறப்புகுவன புதுமைக ளாகா. என்றாலும், அவரை அறியாதோர் அவரைப்பற்றி ஒரு படத்தை மனதில் உருவகப் படுத்திக் கொள்ள அவை உதவியாகு மென்பது தெளிவு.

இவர் இளமையிலேயே தமிழையும் வட மொழியையும் அத்திபாரமாகத் தக்க பண்டித ரிடம் கற்கும் வசதியைப் பெற்றிருந்தனர். கல்வியில் இவருக்கிருந்த ஊக்கம் அந்தியகாலம் வரையும் எட்டுணையும் அருகிற்றன்று. கற்ற துடன் அடங்காது மேலும் மேலும் நூல்களைப் புதிது புதிதாகத் தேடிக் கற்றுவந்தனர். எந் நூலையும் உள்ளாழ்ந்து நுண்மாணுழைபுல னுடன் ஆராய்ந்து கற்பவர். நூல்களைக் கற்கும் போது புதிய பல விஷயங்களை யறிந்துவிடு வார். அறிய வியலாதனவற்றைக் குறித்துக் கொள்வார். தெரிந்தவரிடம் இடர்களை முட்டறுத் துக்கொள்வதிலும் தயங்கமாட்டார். பிழைகளையு மவதானித்துக்கொள்வார். ஒருமுறை ஒருநூலைக் கற்றால் அந்த நூலில் உள்ளன அப்படியே படமெடுத்தாற்போல் மனதிற் படிந்துவிடும். அளப்பரும் ஞாபக சக்தியுடையவர். கம்ப ராமா யணம், பாரதம், கந்தபுராணம், பெரியபுராணம் முதலியன, திருக்குறள், புறநானூறு முதலிய சங்க நூல்கள் என்பன எல்லாம் அவர் மனக் கண்முன் நிற்பன. தேவைக்குத் தேவை வந்து வந்து உதவுவன.

சொற் பிரபஞ்சமே வடிவம்

இவர் காலத்திலும் அதற்கு முன்னரும் தமிழுலகில் மிக்க பெருமையடைந்த புலவர்கள் பலர் வாழ்ந்ததுண்டு. ஆனற் சொற்களையும் அவற்றின் உண்மையான ஆற்றலையும் உள்ள படி யறிந்து அவைகளைப் பிழையின்றி இவரைப் போல் உபயோகித்து வந்தவர் மிகச் சிலரே யாவர். சொற்களின் உண்மை வடிவத்தையும் ஆற்றலையும் இவர் அறிதற்கு உசாத்துணையாக விருந்தவைகள் இவரின் பரந்த தமிழ்நூற் பயிற்சி யும் வடமொழி யறிவுமேயாகும். சொற்களை வரையறுத்து நிச்சயமாகக் கூறிவந்த வன்மையை நோக்கி இவர் மாணவர் பண்டிதமணி சி. கண பதிப்பிள்ளையவர்கள் தமது பாட்டொன்றில் சொற்பிரபஞ்சமே யொருவடிவெடுத்தாற் போன் றவரெனக் குறிப்பிட்டுள்ளார். இக்காலத்தில் வெளியாகும் கட்டுரைகளில், வெளியீடுகளில், செய்யுள்களில் தமிழ்ச் சொற்கள் ஆற்றல் நோக்கப்படாது உபயோகிக்கப்படுகின்றன. அவைகளில் எழுத்துப் பிழைகள் எத்தனை? கருத்துப் பிழைகள் எத்தனை? அரைகுறைச் சொற்கள் எத்தனை? அக்காலத்தில் எத்தனையோ நூல்களிற் சொற்கள் சொரூபத்திலும் நற் பொருளிலும் மாறுபட்டதைக் கண்டபோது இவர் அவைகளைக் கண்டித்து வந்தனர். நிகண்டுகள், அந்தாதிகள், கலம்பகங்கள் என்பன வற்றைப் பெருக்கமாகக் கற்று மனனஞ் செய் வதாலேயே ஒருவர் வியுற்பத்தி யடைகின்றன ரென்றும், சொற்களை வழுவடையாது சுயரூபத் துடன் ஆற்றல்பெற எழுதப் பேசும் வன்மைப் பாட்டைப் பெறுகின்றரென்றும் இவர் அபிப் பிராயங் கொண்டிருந்தனர். நித்தியத்துவம் கேட்க நினைத்த கும்பகன்னன் சொற் சோர் வினலன்றே நித்திரைப் பேற்றை யடைந்தான். சொல்லாராய்ச்சியின் பொருட்டு இவர் செல விட்ட காலம் இம்மட்டன்று. சொற்களின் உண்மையான ஆற்றல், வடிவம் என்பன வற்றை அநேகர் இவர் துணைக் கொண்டே நிச்சயப்படுத்திக் கொண்டனர்.

பிழை காணல்

பிறர் வெளியிடும் நூல்களில் வரும் பிழை களைக் காண்பதில் இவர்போல் வன்மைபடைத் தவரைக் காணவியலாது. புதிய ஒரு நூலை நோக்கியவுடன் எத்தனையோவிதமான பிழைகள் இவர் கண்முன் தோன்ற வாரம்பித்துவிடும். சாதாரணமாகக் கண்களுக்குத் தோற்றுத அணுப்போன்ற கிருமிகளை உருப்பெருக்கிக் கண்ணுடியைக் கொண்டு பார்த்தறிவதுபோல், இவர் கண்களும் உருப்பெருக்கிக் கண்ணுடி போல் மற்றையோர் கண்களுக்குத் தோற்றுத எத்தனையோ பிழைகளை உடனுக்குடன் காணும் வன்மையுடையனவென்று திரு. த. கைலாச பிள்ளையவர்கள் ஒருகாற் குறிப்பிட்டதுண்டு. பிறர் நூல்களிற் பிழை கண்டு வந்தமையால்

தாம் இயற்றும் நூல்களிற் பிழைகள் ஏற்படா திருப்பதில் அவதானம் செலுத்துவர். நூல்களைப் புதிதாக இயற்றுபவர்களும் இவர் நட்பினைப் பெற்றுத் தமது நூல்களைப் பரிசோதனை செய்விப்பதுமுண்டு. இவரது புத்தகசாலையிலுள்ள நூல்களை விரித்து நோக்கின் வரிகளுக்குக் கீழ் கோடுகள், கேள்வியடையாளங்கள், திருத்தங்கள் என்பன இடப்பட்டிருக்கக் காணலாம். இவரிடம் நூல்களைக் கற்கும் மாணைக்கர்களுக்குத் துண்டுப் பத்திரங்கள், வெளியீடுகள், நூல்கள் என்பனவற்றிற் றேன்றும் பிழைகளைத் திருத்துவதும் ஒரு பாடமாகும்.

நாவலர்மீது அபிமானம்

ஆறுமுக நாவலர் காலஞ் சென்றபோது இவருக்கு வயது இருபத்தைந்தாகும். தமிழை யிளம்வயதிலேயே நன்கு கற்று ஓரளவுக்கு வியுற்பத்தியை அடைந்த என் தந்தையாருக்கு நாவலரவர்களிடத்து இருந்த அன்புக்கும் அபிமானத்துக்கும் அளவேயில்லை. நேரே மாணவராகவிருந்து நாவலரவர்களிடம் கல்வி கற்காதிருந்தும் அவரின் இறுகிய நட்பினைத் தாராளமாகப் பெற்றிருந்தனர். கல்வி விஷயமாகத் தமக்கேற்பட்ட சந்தேக விபரீதங்களை அவரிடம் கேட்டுத் தெளிந்துவந்தனர். நாவலரின் சற்பிரசங்கங்களைத் தவற விடுவதேயில்லை. எவ்விஷயத்துக்கும் நாவலரவர்களே இவரின் உரைகல். வீட்டிலிருக்கும்போதென்ன, சென்ற விடங்களிலென்ன, நாவலரவர்களின் தூய வாழ்க்கை, கல்விச் சிறப்பு, குண மாண்புகள், பிரசங்கவன்மை என்பனவற்றைப் பாராட்டி மகிழ்வதில் விருப்புடையவர். நாவலர் அவர்கள் காலஞ் சென்ற பின்னும் அவ்வழி நின்று அவர் தொண்டுகளை விருத்தி செய்வதில் ஊக்கங் கொண்டிருந்தனர். நாவலருக்கு எதிராகப் பேசுவோர் எழுதுவோர்களையும் சும்மா விடமாட்டார். நாவலர்மீதுள்ள அபிமானத் தடிப்புக் காரணமாக அவருக்கு மாறுக எழுந்த வாதங்களிற் சிற்சிலபோது வலிந்து வல்லடி வழக்குப் பேசியதாகச் சிலர் கூறியதுமுண்டு. என் தந்தையாரவர்களின் கல்விப் பெருமையையும் நாவலர் பெருமான்மீது கொண்ட அபிமானத்தையும் நோக்கித் திரு. த. கைலாசபிள்ளையவர்கள் சைவப்பிரகாச வித்தியாசாலையின் தலைமையாசிரியராக இவரை நியமித்தனர். அக் கடமையை மிகத் திறம்பட இருபது வருடங்களுக்கு மேலாக இறக்கும்வரையும் ஆற்றிவந்தனர். நாவலரின் வித்தியாசாலையை இடமாகக் கொண்டு தமிழ்த் தொண்டுபுரியத்தமக்குச்சந்தர்ப்பம் ஏற்பட்டதையிட்டு இவரடைந்த திருப்தி இம்மட்டன்று. தாம் பெறும் வேதனத்தை இவர் என்றும் பெரிதாக மதித்தவரல்லர். மரியாதையுடன் தம்மை உள்ளபடி யறிந்து மதிப்பவரிடமிருந்து பணியாற்றுவதையே பெரிதாகக் கருதினர். தாம் பெறும் வேதனத்திலும் ஐந்தாறுமடங்கு கூடிய தொகை வழங்கலாமெனப் பல சல்லூரித் தலைவர்கள் வலிந்தழைத்தும் அவர்கள் எத்தனங்களுக்கு இடங்கொடுத்தாரில்லை.

பாட புத்தகங்கள்

தமிழ் வித்தியாசாலைகளிற் கற்பிக்கப்படும் பாட புத்தகங்கள் பிழைகள் மலிந்து விளங்கியதைக் குறித்தும், பாடசாலை வித்தியாதரிசிகள் அநேகர் தமது கடமையைச் செய்து முடிக்கத் தகுதியில்லா திருப்பதைக் குறித்தும் ஒரு விண்ணப்பப்பத்திரம் யாழ்ப்பாணம் செந்தமிழ்ப் பரிபாலன சபையினர் வித்தியாகர்த்தருக்கு அனுப்பியிருந்தனர். பாட புத்தகங்களிலுள்ள பிழைகள் விஷப் பத்திரங்கள் பரீட்சை முறைகளிலுள்ள ஊழல்கள் என்பனவும் அத்துடன் அனுப்பப்பட்டிருந்தன. இவ்விஷயமாகக் கலந்து பேசுவதற்குத் தம்மை யாழ்ப்பாணக் கோட்டையின் கண்ணுள்ள 'பங்களா'வில் வந்து சந்திக்கும்படி வித்தியாகர்த்தர் திரு. இ. பி. டென்ஹாம் அறிவித்திருந்தனர். வித்தியாகர்த்தரைச் சென்று தரிசிக்க நியமிக்கப்பெற்ற மூவர் கொண்ட குழுவில் தந்தையாரும் ஒருவர். மற்றையவர்கள் திரு. த. கைலாசபிள்ளையும் நாவலர் கோட்டம் திரு. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையுமாவர். பிற்காட்டிய இருவரும் ஆங்கில அறிவுமுடையவர்; சட்டை தலைப்பாகைகளுடன் செல்லும் வழக்க முடையவர். சட்டை தலைப்பாகைகளை யணிந்தறியாதிருந்த தந்தையாருக்கு ஏற்பட்ட இட்டு முட்டு இம்மட்டன்று. ஒரு வெள்ளையர்முன்—அதுவும் உயர்ந்த உத்தியோகத்தர்முன்—வெற்றுடம்புடன் செல்வதை அவர்கள் விரும்பவில்லை; சட்டையொன்று புதிதாகத்தைத்து மாட்டிக்கொள்வதுகஷ்டமன்று. அதனுள் நுழைவதும், காட்சியளிப்பதும், பின் அதன்வெளியே வருவதுந்தான் சங்கடமாகவிருந்தன. தாம் ஒருபோதும் கையாளாதிருந்தவோர் பழக்கத்தை ஒருவருக்காக மேற்கொள்வதும் மனப்பீடையை உண்டுபண்ணியது. ஒருபடி

சட்டையிடுவதாக முடிவு செய்யப்பட்டது. சட்டைக்குட் புகச்செய்து ஆளையழைத்துக்கொண்டு சென்றனர். திரு. டென்ஹாம் துரையும் இந்த வடிவத்தைக்கண்டு என்ன நினைத்தாரோ தெரியவில்லை. தாம் சென்ற விஷயத்தைத் தெளிவாக வித்தியாகர்த்தருக்கு எடுத்துக்காட்டினர். ஆவன செய்வதாக அவருங் கூறினர். திரும்பி வரும் வழியிற் சட்டைக்கு வெளியே வந்துவிட்டனர். முட்டுந் தீர்ந்தது. குறித்த காரியமாக டென்ஹாம் துரை முயன்று முயன்று பார்த்தனர் தான். விஷயமப்படியே இழுபட்டு வந்தது. வித்தியாபகுதிப் புலிகள் சும்மாவிருக்குமா?

நண்பர்கள்

கல்வியை நன்கு கற்றவர்கள், கற்பதில் ஆர்வ முடையவர்களே தந்தையாருடன் அதிகமாக நட்பும் தொடர்பும் பூண்டு வந்தனர். இவர்களுடன் கல்வி விஷயமாகச் சம்பாஷித்தல், நகைச்சுவையாகப் பேசுதல், நூல்களை ஆராய்தல் என்பன இடைவிடாது இவரில்லத்தில் நிகழ்வன. அக்காலத்தில் ஆங்கிலம் தமிழ் சம்ஸ்கிருதம் முதலிய மொழிகளிலும் மிக்க பாண்டித்துவ மடைந்த பெருமக்கள் பலர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வந்தனர். அவர்களுட் சிலர், நெவின்ஸ் சிதம்பரப் பிள்ளை, ராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை, நீதிபதி கு. கதிரைவேற்பிள்ளை, திருவாங்கூர் உயர்தர நீதிமன்ற நீதியரசர் தா. செல்லப்பாபிள்ளை, அவர் சகோதரர் தா. பொன்னம்பலபிள்ளை என்போராவர். அதிகமாக இவர்களைச் சென்று சந்தித்துக் கல்வி சம்பந்தமான கருத்துக்கள் அறிவதும் சந்தேகங்கள் தெளிவதும் வழக்கம். திரு. செல்லப்பாபிள்ளையவர்கள் வடமொழி அறிவுமுடையவர்; தகப்பனுர்க்குக் கற்கும்பொருட்டு ஷியூசபூர தம் நாற்பது பாகங்கள் கல்கத்தாவிலிருந்து தருவித்துக் கொடுத்தனர். நீதிபதி கதிரைவேற் பிள்ளையவர்களுடன் நீண்ட காலமாகக் கூடவிருந்து அகராதி யெழுதுவதில் உதவிபுரிந்து வந்தவர். அவருடைய அடக்கம், பொறுமை, கோபமின்மை, நடுவு நிலைமை, சுற்றந்தழுவல் முதலிய குண மாண்புகளை என்றும் மெச்சிப் பாராட்டுவர். இவர்களுடைய சேர்க்கையால் ஆங்கிலமறியாத நமது தந்தையாருக்குப் புதிதாக அறியவேண்டிய அநேக விஷயங்களைத் தெரிந்து கொள்ளவும் நூல்கள் கட்டுரைகள் என்பன காலத்துக்கேற்ப எம்முறையில் இயற்றப்பட வேண்டுமெனத் தேர்ந்துகொள்ளவும் சந்தர்ப்பங் கிடைத்ததெனலாம். சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் தம்முடைய ஏழாலைச் சைவ வித்தியாசாலையில் இவரை ஆசிரியராகக் கொண்டு நடத்தி வந்ததுமன்றி தமது தமிழ்நூற் பதிப்புகளுக்கும் இவரின் துணையைப் பெற்று வந்தனர். சென்னையில் வசித்துவந்த பிள்ளையவர்கள் யாழ்ப்பாணம் வந்தபோதெல்லாம் இவருடன் சேர்ந்து நூலாராய்ச்சிகள் செய்வார்கள்.

மாணக்கர்கள்

தந்தையாரவர்கள் தாம் ஆவலுடன் கற்று வந்ததுபோல் மாணவர்களுக்குக் கல்வி பயிற்றுவதிலும் மிக்க ஆவலுடையவரா யிருந்தனர். தாம் அறிந்தனவற்றை மற்றையோரும் அறிய வேண்டுமென்னும் விருப்புடையர். அவரொரு நல்லாசிரியரா யிருந்தமையாற்றான் அவரின் தமிழறிவு மிக்க தெளிவும் உரமுமுடைத்தாய் அவருக்கு மிக்க மதிப்பினையும் புகழையும் ஈட்டி வந்தது. 1884ஆம் வருடந் தொடக்கம் சிவபதமடையும்வரையும் (1922)கல்வி கற்பித்தலையே தமது தொண்டாகக் கொண்டிருந்தார். அவர் மனதுக்கு என்றும் களைப்பாவது வெறுப்பாவது உண்டாக்காத வேலையொன்றுளதேல் அது நன்மாணக்கருக்குக் கல்வி கற்பித்தலே. மேலுங் கல்வி கற்பதில் விசேட ஊக்கமும் தீவிர விவேகமும் வாய்ந்த மாணவர்கள் வந்து வாய்த்துவிடின் அவருக்குண்டாகும் உள்ளக் களிப்புக்கும் ஊக்கத்துக்கும் எல்லையில்லை. ஆரம்பத்தில் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களால் தாபிக்கப்பெற்ற ஏழாலைச் சைவ வித்தியாசாலையில் தலைமையாசிரியராக 18 வருடங்கள் வரையிற் கடமையாற்றி வந்தனர். அப்போது எத்தனையோ இடங்களிலிருந்து மாணவர்கள் தொகையாக வந்து கல்வி பயின்றனர். இங்கு கல்வி கற்றுப் பெருமையும் மதிப்பும் அடைந்தவர்களில் விசேஷமாகக் குறிப்பிடத்தக்கவர்கள் தெல்லிப்பழை வித்துவான் சிவாநந்தையர், அவ்வூர் இ. பாலசுப்பிரமணிய ஐயர், மாவிட்டபுரம் ச. விசுவநாத முதலியார், சுன்னாகம் க. மாணிக்கத் தியாகராச பண்டிதர், ஏழாலை வே. தம்பையா உபாத்தியாயர், அவ்வூர் வைத்தியர் ஐ. பொன்னையா, கட்டுவன் கொத்தாரிஸ் க. மயில்வாகனம் என்பவர்கள். இவர்களில் அபூர்வ விவேகமும் ஞாபகசக்தியுமுடையராய் மிக்க புகழையீட்டி வந்தவர் சிவாநந்தையரவர்களே. வடமொழிப் புலமையுங்

கைவரப்பெற்று அநேக நூல்களும் இயற்றி யளித்தவர். இவர் புலமையை நாட்டவர் உரிய முறையிற் பயன்படுத்திக்கொள்ள முன்னர் இளம்வயதிலேயே இவர் காலஞ்சென்றது பெரு நட்டமாகும். 1902ஆம் ஆண்டுதொடக்கம் வண் ணூர்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியா சாலையிலே தலைமையாசிரியராகக் கடமையேற்றுச் சிவபதமடையும்வரையும் அதை எவ்வித குறையு மின்றி நடத்திவந்தனர். இங்கும் அநேக மாண வர் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் வெளியூர்களிலுமிருந்து வந்து கல்வி பயின்றனர். இவ்வித்தியாசாலையில் தமிழேயன்றி வடமொழி யுங் கற்றுக் கொடுத்தற்கும் ஏற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இங்கு கல்வி கற்றுத் தேர்ச்சியடைந்தோரும் பலர். அவருட் சிலர் இருபாலை மு. வேதாரணிய தேசிகர், உடுவில் பண்டிதர் வ. மு. இரத்தினேஸ்வரஐயர், காரை நகர் வேலுப்பிள்ளை, அவ்வூர் ச. பஞ்சாட்சர ஐயர், கொக்குவில் சீ. முருகேசையர், தாவடி மு. பொன்னையாபிள்ளை, நீர்வேலி மயில்வாக னம்பிள்ளை, தெல்லிப்பழை சி. கதிரிப்பிள்ளை, வேதாரணியம் தி. அருணாசல தேசிகர், சிறுப் பிட்டி த. கார்த்திகேசபிள்ளை, மட்டுவில் பண்டித மணி சி. கணபதிப்பிள்ளை, மட்டக்களப்பு புல வர்மணி பெரியதம்பிப்பிள்ளை என்போர். இவர் களில் ஈற்றிற் காட்டப்பட்ட இருவரும் மேற்படி வித்தியாசாலையி லன்றித் தந்தையார் வாத நோயாற் பீடிக்கப்பட்டிருந்த காலத்து இல்லத் திலும் வந்து தொடர்ச்சியாகக் கற்றவர்கள்; தகப்பனாரின் அன்புக்கும் உரியராகவிருந்தவர் கள். தவிர, வித்தியாசாலை விடுமுறை நாள்க ளிலும் சாயந்தரங்களிலும் அவரது இல்லத்தில் வந்து கற்றவர்களும் பலராவர். அவர்களில் விசேடமாகக் குறிப்பிடக்கூடியவர் வித்துவ சிரோமணி சி. கணேசைய ரவர்களும் தென் கோவை பண்டிதர் ச. கந்தையபிள்ளை யவர்களு மாவர். இவர்கள் இருவரும் இன்றும் தமிழ்த் தொண்டு புரிந்துவருவது தமிழின் பாக்கியமே யாகும். மேலும், தந்தையார் வித்தியாசாலையி லிருந்து வீட்டுக்குத் திரும்பும்போதும் வழியிற் சந்தித்துத் தமிழ் நூல்களிலே தமக்குள்ள சந்தேக விபரீதங்களைத் தீர்த்துக்கொள்வாரும் பலர். தமக்குவிளங்காவொன்றை விளங்கியதாக நடிக்குங் குணம் இவரிடத்திற் சிறிதுங் கிடை யாது. மாணவர்கள் இவரை விரும்பி நேசித்து வந்தமைக்கு இதுவுமொரு காரணமாகும்.

சென்னை அழைப்பு

சென்னையரசினர் ஆதரவில் அங்குள்ள பல்கலைக் கழகத்தினர் பெருந்தொகைப் பணச் செலவுடன் தமிழ்ப்பேரகராதி யொன்று எழுது வித்து வெளியிடப் போவதாக விளம்பரஞ் செய்து அறிஞர்களின் அபிப்பிராயங்களைக் கோரினர். அப்போது யாழ்ப்பாணத்துத் தமிழ்ச் சங்கத்தின் சார்பிற் குறித்த அகராதி விஷயமா கப் புதிய யோசனைகளைக் கொண்ட பிரேரணை கள் பலவற்றையெழுதி அனுப்பும் சந்தர்ப்பம் தகப்பனருக்குக் கிடைத்தது. அகராதி விஷயங் களில் நீண்டகாலத் தொடர்பும் அனுபவமு முடைய எம் தந்தையருக்கு இது விஷயமாக நுண்ணியவாராய்ச்சி யறிவுண்டு. இப்பிரேரணை கள் அகராதிச்சபையினரின் திட்டங்களிற் திருத் தங்களையும் மாற்றங்களையும் உண்டாக்கின. எனவே அவ்வகராதி விஷயம் மேலும் ஆராய வேண்டியதாயிற்று. அவ்வகராதிச் சபையின் தலைவராகவிருந்த அமெரிக்க பாதிரியார் கனம் ஜே. எஸ். சான்டலர் அவர்கள் யாழ்ப்பாணம் வந்து தமிழ்ச் சங்கத்தாருடன் கலந்து பல நாட்க ளாக யோசனை நடத்தினர். அகராதி எப்படி யாக என்ன முறையில் எழுதவேண்டும், செய்யவேண்டிய ஆரம்ப எத்தனங்கள் யாவை, சொற்களின் ஆட்சிக்கு இலக்கியங்களில் எடுத் துக்காட்டுக் குறித்தல் என்பன போன்ற பல விஷயங்களை எடுத்துக் காட்டியபோது சான்ட லர் துரை அவைகளை நன்கு ஆலோசித்து ஏற் றதுமன்றிச் சங்கத்தினர் உதவியையும் இவ் வேலையிற் கோரினர். தகப்பனரைச் சென்னைக் குச் சென்று அகராதி வேலையில் துணைபுரியும் படியும் உயர்ந்த சம்பளம் வழங்கலாமென்றும் ஆவலுடன் கேட்டனர். தகப்பனரோ நாவலர் வித்தியாசாலையை விட்டுச் செல்ல விரும்புபவரல் லர்; உயர்ந்த வேதனம் அவருக்குப் பெரிதாகத் தோற்றவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்தே வேண் டிய உதவிபுரிவதாகக் கனம் சான்டலர் துரைக் குக் கூறியதுமன்றித் தாம் அகராதிக்குபயோக மாக எழுதிவைத்திருந்தஅரிய கையெழுத்துப் புத் தகமொன்றையும் அவரிடங் கொடுத்துதவினர். பின்னர் இவ்வகராதி ஆரம்பிக்கப்பட்டபோது மாதிரிப் பிரதிகளைத் தகப்பனருக்கு அகராதிச் சபையினர் அனுப்பி வந்தனர். தமது கருத்துக் களையும் திருத்தங்களையும் எழுத்து மூலமாகத் தெரிவித்து வந்தனர். அகராதிச் சபையினரும்

வந்தனத்துடன் அவைகளை ஏற்று நன்றிபாராட்டினர்.

கடைசி நாட்கள்

விறுவிறுப்பாக அளவுகடந்த ஆர்வத்துடன் தமது கடமையென நினைத்துப் பல்வழியிலும் தமிழ்மொழிக்குத் தொண்டுபுரிந்த தந்தையாரவர்கள் உலக நிலையை நோக்கி மிக்கதுயரடைந்தும் வந்தனர். தமிழும் சைவமும் மிக்க கீழ்நிலையடைந்து போவதாகவும் எண்ணினர். இவர் மாத்திரமல்ல, இவர் வரிசையில் வைத்துக்கணிக்கப்படற்குரிய திரு. த. கைலாசபிள்ளை போன்ற அறிஞர்களும் அப்படியே நினைத்து மனப்பீடையடைந்து வந்தனர். நாவலர் அவர்கள் வகுத்த ஒழுங்குகள், கல்வி முறைகள் என்பன அநேகரால் முற்றுகக் கையாளப்படாதிருந்தமையே இவர்களின் கவலைக்குக் காரணம். இன்னும் சில காலத்துள் தமது சமயமும் மொழியும் என்னகதியடையுமோவென்றும் வியாகுலங் கொண்டிருந்தனர். தமிழை முறையாகக் கற்போர் தொகை அருகிவிட்டது; பிழை நிறைந்த நூல்கள் மலிந்து கொண்டு வருகின்றன; பழைய முறையிற் கற்றுத் தேறிய பண்டிதர்களுக்குக் கணிசம் குறைந்துவிட்டது என்பனபோன்ற குறைகள் தாம் இவர்கள் வாய்களிலிருந்து இடைவிடாது எழுந்துகொண்டிருந்தன. ஆனல், எல்லாத் துறைகளிலும் பெரு மாற்றத்தைக் காணும் உலகில் கல்வித்துறையிலும் அற்புதமான மாற்றங்கள் ஏற்படாது போகுமா? தமிழ் மொழியும் காலத்துக்கேற்ப முன்னேற்ற மடைதற்கு வேண்டிய புதிய முறைகளைப் புறம்போக்கி நிற்பது எப்படிப் பொருந்துமோ? அக்காலத்தில் யாவரும் விரும்பி யேற்க்கக்கூடிய முறையிற் பல்வேறு சீர்திருத்தங்களை மொழி, சமய மென்னுந் துறைகளிற் கொண்டுவந்து அழியாப் புகழும் பெருமையுமடைந்த நாவலர்பெருமான் மறுபடி இன்று அவதரிக்க நேரின் மனவிழுக்காடடைவாரா? அல்லது நிலையை நோக்கி யதற்கிசையத் திருத்தங்கள் வகுப்பாரா? இதைக் குறித்து நாமெதுவுங் கூறவரவில்லை. தமிழ் உலகந்தான் பதில் கூறவேண்டும்.

பழைய நூற்பயிற்சி

★

நூலுரைகளைப் பிழை நோக்கி நகைப்பாரும், பிழையின்மை நோக்கித் துதிப்பாரும், தாரதம்மியம் நோக்கி மதிப்பாரும், ஆராய்ந்து திருத்தம் நோக்கி ஆக்குவோரும், நிரம்பிய புலமையிலார் கூற்றுக்களை நீக்குவோரும், அறிஞர் அங்கீகாரம் நோக்குவோரும் இக்காலத்தில் அரியராய்ச் சிலராயினர். துவரநோக்காது பாயிரங் கொடுத்துத் துதிப்பாரும், வழுவறியமுடியாது வடிவம்நோக்கி மதிப்பாரும், பாடந் தோடங்கூடலை நாடலின்றி ஆக்குவோரும், தோடஞ்ஞாயிருந்துங் கூறலஞ்சி மௌனம் நோக்குவோரும், தக்கனவாயினும் "கடினம்! கடினம்!!" என்று நீக்குவோரும், பழைய நூலுரைகளின் பயிற்சியின்றிப் புதிய நூலுரைகள் ஆக்குமாறு நோக்குவோரும் எளியராய்ப் பலராயினர். புதிய நூலுரைகளை ஆக்குமுன்னரே பழைய நூலுரைகளைப் படித்து நோக்கி அநுசிலனஞ் செய்தல் ஆக்குவோர் யாவருக்கும் ஆவசியகம். அநுசிலனஞ்செய்யின், ஆக்கும் பயிற்சியுந் திருத்தமும் அதிகம் வளரும்.

— குமாரசுவாமிப்புலவர்

இன்னும் கவலையும் ஏமாற்றமும் ஏன்?

பழையன கழிந்தன! புதியன புகுந்தன!!!

மின்வேக யந்திர சாதனங்கள் புதிதாகத் தருவிக்கப்பெற்றுள்ளன.

* * *

• தமிழ் • சிங்களம் • ஆங்கிலம்

ஆகிய மொழிகளில்

அழகுறச் செய்யவேண்டிய அச்சுவேலைகள் எதுவாயினும் குறைந்த செலவுடன் குறித்த தவணையில் திருப்திகரமாகச் செய்து தருகின்றோம்.

இன்றே உங்கள் அச்சுவேலைகளை

எங்களுக்கு அனுப்புங்கள்

※

எழுத்து வார்க்கும் யந்திரம், றப்பர் ஸ்ராம்ப் செய்யும் யந்திரம், காகித மட்டத்தின் மேல் எழுத்து உயர்ந்து தோன்றும் எழுத்துப் பதிப்பு யந்திரம், தானாகவே காகிதத்தை எடுத்து அச்சடித்து அடுக்கிக் கொடுக்கும் யந்திரம் முதலியவைகள் தற்பொழுது புதிதாக வரவழைக்கப்பட்டுள்ளன.

வட-இலங்கையில் நவீன வசதிகளுடன் கூடிய

அச்சகம் விவேகானந்த அச்சகமே!

※

அச்சகங்களுக்கு வேண்டிய பேப்பர் – மை, உபகரணங்கள், பாடசாலைகளுக்கு வேண்டிய புத்தகம், கொப்பி உபகரணங்கள் எங்களிடம் கிடைக்கும்.

* * *

விவேகானந்த அச்சகம் – புத்தகசாலை


விவேகானந்தாக் கட்டிடம் :: யாழ்ப்பாணம்

தந்தி: "பிறின்ரேஸ்" போன் . 117

கிளை: 228, 230, 232, ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பு.

யாழ்ப்பாணத்திற் பிரபல வியாபார ஸ்தாபனம்

ரி. என். லிங்கம்ஸ்



உங்களுக்குத் தேவையான

- ❋ எல்லா விதமான மோட்டார் கார்கள், டிறக்குகளுக்குரிய 'பார்ட்ஸ்' சாமான்கள்
- ❋ பைசிக்கில் சாமான்கள், றலி சைக்கிள், ரையர், ரியூப்புகள்
- ❋ மின்சாரப் பொருள்கள், ஸ்பிறே மை வகைகள்
- ❋ மோட்டார் கார் மேல் துணிகள் எஞ்சினேயில் கிறீஸ் வகைகள்
- ❋ ஏவரெடி டோச்சுகள், பற்றறிகள்
- ❋ 'எக்சைட்' கார் பற்றறிகள் முதலியன.

ஜோல் ஏஜண்டுள்:

- ★ ஸ்ரான்டட், வான்காட் கார்கள்
- ★ குட்டியர் ரையர், ரியூப்புக்கள்
- ★ ஜி. ஈ. சீ. மின்சாரப் பொருள்கள்
- ★ 'டியுகோ' ஸ்பிறே மை வகைகள்

T. N. LINGAM & Sons,

K. K. S. ROAD :: JAFFNA.

T'PHONE : 108 T'GRAMS : LINGAM

காலத்திற் கேற்ற
கவர்ச்சிமிக்க

❋ நகைகளுக்கும்
♦ வைரக் கற்களுக்கும்

N. துரையப்பா பத்தர் அன் சன்ஸுக்கு

விஜயம் செய்யுங்கள்.

N. Duraiappah Pathar & Sons.

Direct Importers of Diamonds
JEWEL MANUFACTURERS & MERCHANTS
131, KASTURIAR ROAD, JAFFNA.

ஹாஜி. வி. எம். எம். அபூஸாலிஹ் அன் சன்ஸ்

பிரபல தங்கப் பவுண்
நகை வியாபாரிகள்.

57, கன்னதிட்டி, யாழ்ப்பாணம்

□

அபூஸாலிஹ் அன் சன்ஸுக்கு
விஜயம் செய்யுங்கள்

கண்ணையும் கருத்தையும் கவரும்
நவநாகரீக நகைகளைத் தந்து
உங்கள் தேவைகளைப் பூர்த்தி
செய்யச் சித்தமாயுள்ளார்கள்.

Hadji V. M. M. ABOOSALIH & Sons

KANNATHIDDY, :: JAFFNA

பேச்சைக் குறையுங்கள்!

தேவன் — யாழ்ப்பாணம்

உலகத்தில் வேகம் மிதமிஞ்சிவிட்டது. அத்துடன் இரைச்சலுமோ அதிகம். எனவே, மக்களின் நிம்மதி குலைந்துவருகின்றது. பிடியை விட்டுக் கழருகிற நிலைமை அடிக்கடி உண்டாகிறது. எதிர்க்கவேணும் தொலைக்கவேணும் என்று நினைப்பதே தொழிலாகிவிட்டது. ஆகையாற் பறிபோய்விட்ட அமைதியைக் காக்க வழியொன்று வேண்டும். வேகமுஞ் சந்தடியுந் தான் காரணமென்றுல் விஞ்ஞான யுகத்தில் வேகத்தைக் கட்டுப்படுத்துவது அறியாமையாகும். இயந்திரமும் ஆலைகளும் மலிந்திருக்கும் காலத்திற் சத்தத்தைக் குறைப்பதுங் கஷ்டம். காந்தி விரும்பிய கட்டை வண்டி இப்போது சரிப்படாது. ஒலியைக் கட்டுப்படுத்த ஆலைகளை நிறுத்துவதா, ரயிலை வேண்டாமென்பதா, பஸ்ஸையுங் காரையும் பகிஷ்கரிப்பதா, ஆகாய விமானமே கூடாதென்பதா? அவையெல்லாந் தேவை—அவசிய தேவை. அப்படியானுற் சலசலப்பை எப்படி எங்கே குறைப்பது?

ஒரே இரைச்சல்

மறந்தே போயிற்று! மனிதன் போடுகிற சத்தங் கொஞ்சமா? அதைக் குறைக்கவேண்டும். அதுதான் வழி. தேர்த் திருவிழாவில், தெருவோரங்களில் — மக்கள் கூட்டம் எங்கேயோ அங்கேயெல்லாம்—அடடா! என்ன இரைச்சல்; அமளி? எல்லாவற்றிற்கும் மேலாக மாநாடுகள் பிரசங்க மேடைகள் முதலியவற்றிற் சொற் சிலம்பம் எம்மட்டு? குறையுங்கள் குரைப்பதை. 'சொல் போதும், செயல் வேணும்' என்று போடும் கூச்சலே காதைக் கிழிக்கிறது, உயிரை உலுக்குகிறது. தெரியாமலா காந்தி மகான் மௌன விரதம் அனுஷ்டித்தார்.

அத்துடன் 'தீயது பேசாதே' என்று வாய் மூடி நிற்கும் வானரம் அவருக்குக் காட்டிய வழியென்ன? பேச்சைக் குறைக்கவேண்டும்—நல்லது, தீயது ஒருபுறமிருக்கட்டும். பெண்கள் கூடினுல் ஒரே ஊர் வம்புதான்; வாய் ஓய்ந்த பாடில்லை. அங்கேயும் போடு கத்திரிக்கோலை! வாழ்நாள் குறுகுகிறதே, சக்தியெல்லாம் சொல்லாய்ப் பறந்தால்! யார் கவனிக்கிறார்கள்? வயது முதிர்ந்தால் டக்டர் உயிரைக் கட்டிப் பிடித்துவிடுவாரென நினைக்கிறார்கள். இளமையில் ஓய்வு ஒழிவு இன்றிப் பேச்சு.

ஒலி, அலைகளின் சக்தி

ஏதோ இராகமிருந்ததாம் (அதன் பெயர் குண்டக்கரியாவோ, என்னவோ?) பாடினுற் கல்லும் கரையுமாம். ஆனுல், இந்த நாட்களில் அரசியற் பிரசங்கம் ஒன்று கேட்டாற் போதுமே; பாறையும் நொருங்கும்; குன்றுந் தவிடுபொடியாகும். இவைக்கு இந்தக் கதியானுற் கேட்கும் மனிதர் கதியென்ன? தீபக்தானு? — யாராவது சங்கீதகாரர் சொல்லுங்கள் — பாடினுற் தீ மூளும்? அனல் கக்கும் வசனங்கள் கேள்விப்பட்டதில்லையா நீங்கள். குசுகுசுவென்று வேலியைத் தாண்டிப் பாய்ந்து தீயை மூட்டும் ஒலியலைகள் நாம் காணுத - மன்னிக்கவும், கேட்காத — பொருளல்ல. மேக ரஞ்சனி பாடினுல் மழை சோனுவாரிதான். பிரசங்கமாரிகள் மத்தியான வெயில் ஏறியபிறகும் பலரை நனைத்துச் சட்டையைக் கழற்றிப் பிழியும் அளவுக்கு நீண்டதை நாம் கண்டிருக்கிறோம். (மேகரஞ்சனி தெரிந்த வித்வான்களிருந்தால் உடனடியாக லபுகம தண்ணீர்த் தேக்கத்துக்குப் போகவும். நல்ல பிழைப்புக் கிடைக்கும்.) ஒலியலைகளின் சக்தியை அளவிட முடியுமா? ஆமாம், நம் வாயிலிருந்து பிறப்பனதாம் இத்தனை இந்திர ஜால வித்தை செய்யவல்லன. கொடும்பாவி கட்டியழுவது இந்த உண்மையை அடிப்படையில் கொண்டதுதான். (மழையில்லையென்றுல் விராடபர்வம் படிப்பதுபற்றிப் பரிகாசம் பண்ணுவோர் இந்த இடத்தில் நிறுத்தி யோசிக்கவும்).

நம்ம திக்கு விரோதிகள்

மகாசக்தி பொருந்தியது ஒலி. பாழாக்கா தீர்கள் அதை. நீங்கள் போடுகிற சத்தம் அயல் வீட்டானின் உயிரையல்லவா வாங்குகிறது? கீச்சிட்டழுங் குழந்தையும் ஒப்பாரி வைக்கும் பெண்களும் இடிமுழக்கம்போல் வீர கர்ஜனை செய்யும் பேச்சாளனும் மனித நிம்மதிக்கு விரோதிகள். மலேரியா மனிதனுக்குக் கெடுதி செய்வது. குயினைனும் டி. டி. ரி. யும் உதவுகின்றன, மலேரியாவை ஒழிக்க. மது மனித குலத்துக்கு நாசம் விளைப்பது. மதுவிலக்குப் பிரசாரம் நடக்கிறது, மதுவரக்கனை மாய்க்க. ஒலி மனிதனை நிலை கிறுங்கச் செய்கிறது; மனிதரை வதைக்கிறது. தொலைக்க வழியில்லையா? உண்டு; பேச்சைக் குறையுங்கள்.

அல்லது, நீரோ மன்னன், உரோமாபுரி தீப்பற்றியெரிந்தபோது வீணை வாசித்த கதை கேள்விப்பட்டிருப்பீர்கள். அவனைப் பழிக்கிறார்கள், மக்களின் துயர் உணராத மன்னன் என்று. தனக்கு மன நிம்மதி தரவல்ல ஒலியலைகளை உண்டுபண்ணி யிருக்கவேண்டும். அல்லது தீயை யணைக்கும் சக்திவாய்ந்த ஒலியலைகளைப் பிறப்பிக்க முயற்சி செய்திருக்க வேண்டுமென ஏன் சொல்லலாகாது? பிந்தியது தவறுதான் — உரோமாபுரி எரிந்தது, எரிந்ததுதானே! ஒரு வேளை தீயணைக்கும் இராகம் நீரோ மன்னனுக்குத் தெரியாதாக்கும். அவனைப்போலன்றிச் சத்தம்போடும் மனிதரை அழிக்க ஓர் இராகம் கண்டு பிடித்து (அது எங்கேயாவது இருக்கத்தானே வேண்டும்) முறையாகப் பயின்று பாடவும் போகிறேன்.

ஆனால் பயமாயிருக்கிறது — யாராவது அதே இராகத்தை என்னிடம் பயின்று அதை என்மீதே பிரயோகித்துவிட்டால்.....! யோசிக்க வேண்டிய விஷயந்தான். அதுவரை தயவு செய்து பேச்சைக் குறையுங்கள் — எனக்குப் பிடிக்காது என்பதற்காகவல்ல — சமுதாய நலனுக்காக. ஆம்; பேச்சைக் குறையுங்கள்!

எக்காலங்களுக்கும் தூய்மை பொதுவானது

★

தமிழ்மொழி ஹீப்ரு பாஷையைக்காட்டிலும் புராதனமானது. ஏறக்குறைய மூவாயிரம் வருஷம் வரையில், ருசுவோடு, தீர்கதரிசிகளாக இருப்பவர்கள், தங்கள் தீர்க்கதரிசனத்தைக்கொண்டு, எக்காலத்துக்கும் எந்த நிலைக்கும் பொதுவான, தேவையான, அழிவில்லாத உண்மைகளைக் கண்டுவிடுகிறார்கள். ஆனால் அவைகளை மனிதர்கள் நேரே உணர்ந்து கொள்வதில்லை.

சாப்பாட்டுஇராமனுக்குச் சோற்றிலே குறி, திருடனுக்குத் திருட்டிலே குறி, விடனுக்குப் பெண்ணிலே குறி, மோசக்காரனுக்கு முட்டாள்பேரிற் குறி. இப்படிப்பட்ட கீழ்த்தரமான மக்கள் அதிகமாகப் பரவிக்கிடக்கும் காலத்தில் பெரியார்களின் திருவாக்கு மதிப்புக்குரியதாகப் பாவிக்கப்படுவதில்லை.

* * * *


சென்றது தூய்மை, நடப்பது கேவலம், நடக்கப்போவது மகாகேவலம் என்று எண்ணுவது ஒருவகை வைதீக மனப்பான்மை.....இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எல்லாக் காலங்களுக்கும் தூய்மை பொதுவான சங்கதியாகும். அழகுடனும் ஜீவகளையுடனும் நிலைத்து நிற்பதுதான் தூய்மை கொண்டதாகும். மற்ற யாவும் குட்டிச்சுவர்கள்; அல்லது குட்டைப் பாசிகள்.

— வ. ரா.

யாழ்ப்பாணம், பரமேஸ்வரக் கல்லூரி ஆசிரியர்

திரு. ச. சிதம்பரப்பிள்ளை, B. A., B. Sc. (Lond.) அவர்கள் எழுதிய

உயர்தர வகுப்புக் கணிதங்கள்










1. எண் கணிதம் ரூ. 2-75

2. அக்ஷர கணிதம்
   - முதற் புத்தகம் 3-00
   - இரண்டாம் புத்தகம் 3-00

3. கேத்திர கணிதம்
   - முதற் புத்தகம் 3-00
   - இரண்டாம் புத்தகம் 2-50

[தபாற்செல்வு வேறு]




★ எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும் ★

விற்பனை உரிமையாளர்கள்:

சுன்னாகம்: தலைக்குமி புத்தகசாலை

வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பக வெளியீடு



பண்டித

வ. நடராஜா

எழுதியது

★

காளிதாச மகாகவி புனைந்த 'சாகுந்தல' நாடக நூலின் வழி வந்த 'சகுந்தலை சரிதை' என்னும் இந் நூல், மேல்வகுப்பு மாணவர்களின் உபயோகத்துக் கேற்ற விதமாக ஆக்கப்பட்டுள்ளது.

★

விலை :

ரூபாய் 1–00


(தபாற்செலவு வேறு)

சாகுந்தல நாடகத்தின் இயற்கை நலங்களை இயன்ற அளவு படம்பிடித்துக் காட்டுதற்குச் 'சகுந்தலை சரிதை' என்கின்ற இவ் வசனநூல் முயற்சிசெய்து வென்றியெய்தியிருக்கின்றது. இதில் வரும் இயற்கை வருணனைகளும், சம்பாஷணைகளும் முதனூலின் இயல்பைக் கற்பனைசெய்து காணுதற்குக் கண்ணாடிபோன்று உதவுகின்றன. வசனந் தெளிவும் உரிய ஓசையும் உடைத்தாய் அமைந்திருக்கின்றது. தமிழ் மாணவர்களுக்கு இது ஒரு விருந்து.

— பாயிரம் (பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை)

சுன்னாகம் : தனலக்குமி புத்தகசாலை

பாலர் பகுதி



வெள்ளி மலர் வெண்பா

அன்பு நிறையோ டறமா மிதழ்பரப்பி
இன்ப நறையூற் றிசைந்ததமிழ்—நன் றுரைப்ப
தென்றுலகம் ஏத்தி எழுசீர் கேசரியே
நன்றுவந்தோம் வெள்ளிமலர் நாம்.

மின் விளக்கு

— இதம் —

கையிற் பெருவிர லழுத்தக்
கண்ணை மறைக்கும் இருள்பறக்கும்
ஐயா வும்குச்சி தட்டவேண்டாம்
அம்மா வும்எண்ணெய் விடவேண்டாம்
கைவிர லழுத்தம் நின்றுவிட்டாற்
காந்த ஒளியும் மறைந்திடுமே
கையி லடங்கும் மின்விளக்கே
காட்டும் வட்ட ஒளிவிளக்கே. 1

* * *

மின் விளக்குப் பிடிப்பேன்
மின்ன லொளி போலே
மின்னு மீழ கேசரி
என்னும் வெள்ளி மலரை
இன்னும் பார்க்க எனக்கு
இவர்கள் தர வில்லை
என்ன செய்தும் படிப்பேன்
என் விருப்பம் முடிப்பேன். 2

நீதி எங்கும் நாட்டுவேன்

— தம்பி —

நெல்நடுவேன் புல்பிடுங்கி நல்லவயல் ஆக்குவேன் ;
கொல்லையிலே கொத்தவரை கேள்வரகுண் டாக்குவேன் ;
நல்லபஞ்சுச் சோலையினில் நாட்டுவளம் கூட்டுவேன் ;
வல்லதல்ல நல்லபணம் வந்துபசி ஆற்றிடா. 1

பஞ்சுதிரித் தாடைசெய்வேன் பகட்டுடைகள் வாங்கிடேன் ;
வஞ்சகமாய்ச் சிங்களவர் வாட்டுவதற் கஞ்சிடேன் ;
கொஞ்சஆசை காட்டினாலும் நஞ்சர்மொழி நம்பிடேன் ;
நெஞ்சுதிடங் கொண்டுதமிழ் நீதியெங்கும் நாட்டுவேன். 2

வெள்ளி மல்லிகை

கேசரி மாமா

மாலை நேரம். பூந்தோட்டத்திற் குழந்தைகள் ஓடி விளையாடிக்கொண் டிருந்தன. ஒரு மரத்தடியில் பொன்னியும் வள்ளியும் மணல் வீடு கட்டி விளையாடிக்கொண் டிருந்தார்கள். மணல் வீடு கட்டிமுடிந்து அதன் அழகை இரு குழந்தைகளும் பார்த்து மகிழ்ந்துகொண் டிருந்த போது மேலேயிருந்து ஒரு மல்லிகைப் பூ அதன் மீது விழுந்தது. இரு குழந்தைகளும் அண்ணாந்து பார்த்தார்கள். மல்லிகைக்கொடி ஒன்று பூவும் மொட்டுமாகப் பூத்துக் குலுங்கியது. "பார்த்தாயாடி, வெள்ளி மல்லிகைக் கொடியல்லவா எங்கள் மணல்வீட்டின்மீது பூமாரி பொழிந் திருக்கிறது" என்றாள் பொன்னி.

"வெள்ளி மல்லிகையா? அதென்னடி புதுப் பெயராகச் சொல்லுகிறாய்?" என்று கேட்டாள் வள்ளி.

"ஓகோ அது உனக்குத் தெரியாதோ? அப்பா ஒரு சமயம் அதன் கதையை எனக்குச் சொன்னார். நல்ல கதை" என்றாள் பொன்னி.

"எனக்கும் அந்தக் கதையைச் சொல்லு, கமலா" என்று கேட்டுக்கொண்டே கீழே விழுந்துகிடந்த பூவை எடுத்துத் தன் தலையில் செருகினாள் வள்ளி.

"கதை யென்னடி? இதோ இப்பொழுது நீ பூச்சூடிக்கொண்ட மாதிரிப் பல வருஷங்களுக்கு முன்பு இவ்வூரில் இருந்த ஓர் ஏழைப் பெண்ணும் பூச்சூட ஆசைப்பட்டாள். ஆனால், பாவம்! அவளுடைய ஆசை நிறைவேறுமலே அவள் இறந்துபோய்விட்டாள். அதுதான் கதை" என்றாள் பொன்னி.

அப்பொழுது மழை தூறியது. "எழுந்திரடி, அங்கேபோய் ஒதுங்குவோம்" என்று பூந்தோட்டத்து மத்தியில் இருந்த மண்டபத்துக்குப் போவதற்காக அவசர அவசரமாக எழுந்தாள் பொன்னி.

"முதலிலே நீ அந்தக் கதையைச் சொல்வதாக எனக்கு வாக்குக் கொடு. இல்லாது போனால் இங்கிருந்து நான் எழுந்திருக்கப்போவதில்லை. மழையிலேயே இருந்து நனையப்போகிறேன்" என்று வள்ளி பிடிவாதம் பிடிக்கவே, "சரி, சொல்கிறேன் எழுந்திரு" என்று வாக்களித்தாள் பொன்னி.

இருவருமாகத் தோட்ட மண்டபத்துக்குச் சென்றார்கள்.

"பொன்போல மனம் படைத்தவன் தங்கம் போலக் குணம்படைத்தவன் என்றெல்லாம் சொல்லுவார்களே. அது மாதிரி ஒரு நல்ல மனிதன் வேலு. இந்த வெள்ளி மல்லிகைக் கொடியை இங்கு வைத்தவன் அவன்தான். பரம ஏழையாகவிருந்தான். ஏழையாகவிருந்த போதிலும் கோடி பொன் பெறும் நல்ல மனம் அவனிடமிருந்தது. வேலுவுக்கு ஒரு மகளிருந்தாள். அவளை வெகு பிரியமாக வளர்த்தான் வேலு. அவளுக்கு வயதானபோது சொக்கன் என்ற வாலிபனைக் கல்யாணஞ்செய்து வைத்துக் கண்குளிரப் பார்த்தான். சொக்கன் ஒரு முரடன்; முன் கோபி. கல்யாணமாகி இரண்டாவது வாரத்தில் ஒரு வெள்ளிக்கிழமை, புதுமணத் தம்பதிகளைக் கோயிலுக்குப் போய்வரும்படி சொன்னான் வேலு. சொக்கன் அன்றுகாலை வெளியே போனபோது "மறந்துபோகாமல் இன்றைக்கு மல்லிகைப்பூ வாங்கிக்கொண்டு வாருங்கோ" என்று ஆசையோடு சொல்லியிருந்தாள் அவனுடைய புது மனைவி.

சொக்கன், மாலை வீடு திரும்பியபோது மல்லிகைப்பூ வாங்கிவரவில்லை. 'பூச்சூடிக் கொண்டு கோவிலுக்குப் போகலாம்' என்று காத்திருந்த அவளுக்கு ஒரே ஏமாற்றமாய்ப் போய்விட்டது. அவள், தான் கோவிலுக்கு வரவில்லை என்று சொல்லிவிட்டாள். அதைத் தொட்டுத் தம்பதிகளுக்குள் சண்டை வளர்ந்தது; சொக்கன்தான் முன் கோபி என்றேனே. "உனக்கு அவ்வளவு அகங்காரமா" என்று ஆத்திரப்பட்டுக் கையில் அகப்பட்டது எதையோ கொண்டு அவளை அடித்துவிட்டான். படக்

தமிழ்த் தாய்

முல்லை

முழுநிலவின் ஒளிஅவளின் முகமலராகும்—அவள்
முறுவலெனில் முதிரழகு முல்லைமலர்தான்!
பழமொழுகும் இரசம்அவள் பயில்மொழியாகும்
பனுவல்களின் அறிவுரைகள் பலஅணியாகும்.

பலபுதல்வர் அவளடிகள் பரவுதல்செய்வார்
பணிபுரிவார் இரவுபகல் அவள்நினைவேயாய்
கலைகளெனும் மலர்கள்கொடு வழிபடுகின்றார்
கசியும்மன முடனவளின் புகழ்மொழிகின்றார்.

விதியினது விளைவிதுவோ வேறெதுதானே—கொடும்
விலங்கவளின் கைகளிலே பூட்டிவிட்டார்கள்
எதுவிதமும் அவள்சிறையை விடுதலைசெய்தே
எழில்முறுவல் மறுபடியும் எழவழிசெய்வோம்.

கூடாத இடத்திற் பட்டு அவள் செத்துப் போனாள். கிழவன் 'ஓ!' வென்று கதறினான். சொக்கனைப் பொலிஸ்காரர் பிடித்துக்கொண்டு போனார்கள். கிழவன் சிலகாள் பைத்தியம் பிடித்தவனைப்போல அலைந்தான். இந்தப் பூந் தோட்டத்தில் அவனுக்குத் தோட்டக்காரன் வேலை கொடுத்தார்கள்.

தனது அருமைக் குழந்தை மல்லிகைப்பூச் சூடும் ஆசை நிறைவேறுமலே உயிர்விட்டாள் என்ற கவலை கிழவனைத் தினமும் அரித்து வந்தது. 'அவளைப்போல் எத்தனை பெண்கள் பூச்சூட வகையற்று ஏங்குகிறார்களோ' என்று எண்ணினான். தோட்டத்தில் வேலையானதும் முதற்காரியமாக இந்த மல்லிகைச் செடியை காட்டினான். அது சில மாதங்களிலேயே பூத்துச் சொரிய ஆரம்பித்துவிட்டது. எல்லா மல்லிகைச் செடிகளையும்போ லில்லாமல் அது, கிழவன் மனம்போல, வெள்ளி மல்லிகைப் பூக்க ளாகவே பூத்துச் சொரிந்தது. அந்த வெள்ளி மலர்களைப் பொறுக்கப் பெண்களும் ஆண்களுங் குழந்தைகளுந் தினமுங் கூட்டங் கூட்டமாக வருகிறார்கள். அவர்களது மலர்ந்த முகங்களைப் பார்த்துக் கிழவன் ஆனந்தபரவசமடைகிறான்.


"அந்தக் கிழவன் இப்பொழுது மிருக்கிறானடி?" என்று கேட்டாள் வள்ளி.

"அவன் செத்துப்போய் இரண்டு வருஷங்க ளாகின்றன. ஆனால் அவன் இந்த மல்லிகைச் செடியருகே எப்பொழுதும் வாழ்கிறான். பிச் சைக்காரனாக வாழ்ந்து செத்தாலும் அவன் பொன் மனம் இப்படி வெள்ளி வெள்ளியாகச் சொரிந்து கொட்டுகிறது என்று அப்பா சொன் னார்" என்றாள் பொன்னி.

"நல்ல கதை. வா இன்னொரு தடவை அந்த மல்லிகைச் செடியைப் பார்த்துவிட்டுப் போகலாம்" என்று எழுந்தாள் வள்ளி.


"எவ்வளவு நேரமாக இங்கு தங்கிவிட் டோம்! மழை ஓய்ந்து நிலவுகூடக் காய்கிறதே" என்றாள் பொன்னி.

இருவரும் வெள்ளி மல்லிகைச் செடியைத் தாண்டிப் போய்க்கொண்டிருந்தபோது, மழைத் துளிகளுடன் நிலவொளியில் வெள்ளிபோலப் பிரகாசித்த மல்லிகைப் பூக்களைப் பார்த்த வள்ளி "நீ கூறியது மெய்தானடி பொன்னி; அதோ! ஒவ்வொரு பூவும் வெள்ளி மலராகவே மின்னுகின்றது" என்றாள் அதிசயத்தோடு.



தூபாராம தாதுகோபம்

சோழர்க ளமைத்த சிவாலயங்களைப் பின்பற்றித் திராவிட சிற்பமுறையில் அமைந் துள்ள பௌத்தர்களின் தூபாராம தாதுகோபம் அனுராதபுரத்தை இன்றும் அணி செய்து நிற்கின்றது. இது தேவநம்பியதீசன் கட்டிய முதலாவது தாதுகோபமாகும்.



இலங்கையிற் கலை வளர்ச்சி

★

கலைப் புலவர் திரு. க. நவரத்தினம் அவர்கள்

எழுதியது

இலங்கை பல நூற்றாண்டுகளாக நாகரிகச் சிறப்புக் குரிய கலைகள் மலிந்த நாடாக — கலைக்கோயில்களின் இருப்பிடமாக — விளங்குகின்றது. இங்ஙனம் விளங்குவதற்கு உதவியாயிருந்த மௌரிய — ஆந்திர — பல்லவ — குப்த சிற்ப முறைகள் இலங்கையிற் பரவிய விதமும் அதன் பயனாய் இலங்கையிற் தோன்றிய கலாலயங்களும் இந்திய இலங்கைக் கலா தத்துவங்களின் ஒருமைப்பாடும் பிறவும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இலங்கையிலுள்ள சிறப்பு வாய்ந்த சிற்ப ஆலயங்களினதும் சிற்ப உருவங்களினதும் 64 அழகிய படங்கள் கொண்ட இந்நூல் உயர்ந்த 'கிளேஸ்' காகிதத்தில் அழகுற அச்சிடப்பட்டுள்ளது.

விலை ரூபாய் 10-50 [தபாற்செலவு சதம் 60]

தென்னிந்திய சிற்ப வடிவங்கள்

★

தென்னிந்திய சிற்பங்களைக் குறித்துத் தமிழில் வெளியான முதலாவது நூல்.

❁

சரித்திரப் பேராசிரியர்களினதும் கலைவல்லுநரதும் பாராட்டுக்களைப் பெற்றுள்ள இந்நூல் கண் கவர் வனப்பு மிக்கது.

❁

தமிழ்க் கலைகளும் அவைகளின் இக்கால நிலையும், இந்திய சிற்பத்தின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ் நாட்டிற் கோயில்களும் கோபுரங்களும், தமிழ் நாட்டிற் சிற்ப வளர்ச்சி, தில்லைச் சிதம்பரம் ஸ்ரீ நடராஜ வடிவம் என்பன போன்ற பல இயல்கள் தெளிவும் இனிமையும் மிக்க நடையில் இந்நூற்கண் விளக்கம் பெற்றுள்ளன.

❁

சிற்பவடிவங்களின் படங்கள் கலை வனப்புடன் உயர்ந்த முறையில் அமைந்துள்ளன.

விலை ரூ. 15-00 [தபாற்செலவு சதம் 75]



சுன்னாகம்: தனலக்குமி புத்தகசாலை

ஈழகேசரியின் தோற்றம்

நாடும் மக்களும் நன்மைகளைக் குறைவறப் பெற்று இன்புற்று வாழ்வதற்கு உதவும் சாதனங்களுட் பத்திரிகை தனிச்சிறப்பு மிக்கது. அறிவுக் குரிய விஷயங்களையும், உலக நிலையையும் நாளிலும் பொழுதிலும் அறிந்து அவைகளைத் தமது ஆக்க வாழ்வுக்குப் பயன்படுத்த அறிஞர்கள் அதனை நாடிநிற்பர்; பொதுமக்களும் உலகப்போக்குத் தம்மையும் பாதிப்பது நிச்சயமென்பதை யுணர்ந்தவராய்ப் பத்திரிகை என்ன சொல்கின்ற தென்பதைக் கேட்டறிய அவாவி நிற்பதும் இயல்பு. அரசியல் அமைப்பில், பத்திரிகை பெற்றுள்ள ஆற்றலையும் ஆதிக்கத்தையும் கருத்தாகக்கொண்டே ஆங்கில அரசினர் தமது ஆட்சியரங்கில் அதனை நாலாவது நாயகமாகக் கொண்டுவந்தனர். இன்று அத்துறையில் அது பெற்றுள்ள வன்மை கணிக்க வியலாதது. இத்துணைச் சிறப்பும் சக்தியும் பத்திரிகைக்குள.

திடமான நம்பிக்கை

1926ஆம் ஆண்டில் ஒரு புத்தகசாலையையும், பின்னர் 1928ஆம் ஆண்டில் ஓர் அச்சகத்தையும் சுன்னகத்தில் ஆரம்பித்த திரு. நா. பொன்னையா அவர்கள், தொடர்ந்து ஒரு பத்திரிகையையும் ஆரம்பிக்க வேண்டுமென்ற வேணவாவுடையராய் மிக்க சிரத்தையுடன் உழைக்கலாயினர். இவர் தமது எண்ணத்தைத் தேசீயப்பற்று மிக்க தமது நண்பர்களுக்கும் மற்றும் பொதுநோக்குடைய அரசியல்வாதிகளுக்கும் எடுத்துரைத்தனர். இந்த நல்ல யோசனையைப் பொதுவாக அவர்களனைவரும் ஆமோதித்தாராயினும், இதையிட்டு ஏற்படவிருக்கும் பெருஞ் செலவினையும் பாரதூரமான பொறுப்பினையும் நினைந்துபோலும் உடனடியாக இத்துறையில் இறங்குவதை அனுவதிக்கச் சிறிது தயங்கினர். ஆனல் திரு. பொன்னையா அவர்கள் பணத்தையாவது ஏற்படவிருக்கும் பொறுப்பினையாவது பெரிதாக மதித்து மனக்கஷ்ட மடைந்தாரில்லை. நாட்டிற்கும் மக்களுக்கும் பெருநன்மையை இலக்காகக்கொண்ட ஒரு திட்டம் உயரிய நோக்க முடையதாயின் அது நாளடைவில் விருத்தியடையுமென்பது அவர்கண்ட சித்தாந்தம். அதற்கு அங்கமாகவுள்ள மற்றைய விஷயங்கள் யாவும் தாமாகவே வந்து கையுதவு மென்பதில் அவருக்குத் திடமான நம்பிக்கை யுண்டு.

தேசநலமும் மொழி வளர்ச்சியும்

ஒரு பத்திரிகையை ஆரம்பித்துச் செவ்வனே பெரும் பயனுடன் தளர்ச்சியடையாது நடத்துவ தென்பது சாதாரணமாக எவர்க்கும் கைகூடி விடக்கூடிய தொன்றன்று. ஈழவள நாட்டின் கண்ணே தோன்றிய பத்திரிகைகளுக்கு மள வுண்டா? அவைகளில் மிகமிகச் சிலவே யின்று மறைந் தொழிந்துபோகாது மிளிர்வன. இந்த இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப் பாணத்தில் மாத்திரம் தோன்றி மறைந்துபோன பத்திரிகைகள் முப்பதுக்கு மேலாகும். அவைகள் நீடித்து நிலைபெற்று விரும்பிய பயனை யளியாமைக்குப் பல காரணங்களுள. அக்காரணங்களை உட்கொண்டு நோக்கிய திரு. பொன்னையா அவர்கள் தமது பத்திரிகைத் திட்டத்தை மேன்மேலும் தீர்க்காலோசனை செய்யவேண்டியவராயினர்.

கருப்பிணியாகவுள்ள மகளிர் பிரசவகாலத்தில் அடையும் வேதனையை 'வயா' என்று தமிழிலக்கியங்கள் எடுத்துக்காட்டும். அதன் அனுபவம் அம்மாதர்க்கன்றி மற்றெவராலும் உள்ளபடி உணர்ந்து அறியப்படுவது இயலாதிருப்பதுபோன்று பத்திரிகைத் தொண்டிற் புகுமொருவர் அடையுஞ் சிரமமுங் கஷ்டமும் அவரொருவராலன்றி மற்றவர்களாலும் உள்ளபடியறியப்படுவது அசாத்தியம். பாரதூரமான இத்தொண்டின் பொறுப்பினையும், செயல்முறையில் ஏற்படுஞ் சிக்கல்களையும் திரு. பொன்னையா அவர்கள் அலசி யாராயவேண்டியவராயினர்.

சுயநல நாட்டமின்றித் தேசநலத்துக்கே முதலிடமளித்தும், அத்துடன் தமிழ்மொழி வளர்ச்சியை இலக்காகக் கொண்டும் களங்கமற்ற மனப்பான்மையுடன் சீரியமுறையிற் பணியாற்ற முற்படின் பத்திரிகைத் தொண்டும், ஏனைய வேறு பல பொதுநலப் பணிகள்போல் ஏன் விருத்தியடைந்து நற்பயனை யளிக்காது போகவேண்டும் என்றெல்லாம் ஆழ்ந்து சிந்தித்தனர்.

பத்திரிகைத் திட்டம்

இச் சமயத்தில் இலங்கை மக்கள் ஏற்றதன்றென ஆரம்பத்தில் உக்கிரமாக எதிர்த்து வந்த டொனமூர்த் திட்டத்தை மறு ஆலோசனையின் பேரூகப் பின்னர் சிங்களத் தலைவர்கள் ஏற்று நடைமுறைக்குக் கொண்டுவர முடிவு செய்தனர். அவர்களுடன் ஒத்துழைத்து எதிர்த்த தமிழர்கள் தாம் தனியேநின்று வாதாடுவதால் இனிப் பயனின்றென வுணர்ந்து தாமும் அதை ஏற்பதே வழியெனக் கொண்டனர்.

இவர்களிற் சிலர் தமது நோக்கஞ் சித்தியடைதற்குப் பத்திரிகை யொன்றைச் சாதனமாகக் கொள்வதன் அவசியத்தை உணர்ந்தனர். திரு. பொன்னையா அவர்களின் பத்திரிகைத் திட்டத்தைப்பற்றிய செய்தி எப்படியோ இவர்கள் செவிகளுக்கு எட்டிவிட்டது. தாம் கொண்ட ஆவலை நிறைவேற்றுவதற்காக அவர் உதவியை எப்படியாயினுஞ் சம்பாதித்துவிட வேண்டுமென்று தீவிரமாக முயற்சி செய்தனர். இவர்கள் ஆரம்பத்தில் தமது உள் நோக்கத்தை வெளியிடவில்லை. பத்திரிகைத் தொண்டில் தமக்கும் மிக்க ஆர்வமுண்டெனக் கூறி வேண்டிய உதவிகளைத் தாராளமாக உதவும்படி வலிந்து முன்வந்தனர். மிக்க பொறுப்பும், பணச் செலவும் வேண்டிநிற்கும் இந்தப் பெரிய கைங்கரியத்திற் கேளாது வலியவரும் உதவிகளை எவர்தான் உதறித்தள்ள நினைப்பார்? ஆனால் வலிந்து வழங்க முன்வந்தோரின் ஆதரவுகளைத் திரு. பொன்னையா அவர்கள் ஏற்க இணங்கினரில்லை. ஆகவே அவர்களுட் சிலர் புதிதாகத் தாமாகவே பத்திரிகைகளையும் ஆரம்பித்தனர்.

அச்சகமொன்றை முன்னரே யமைத்து அதற்கு வேண்டிய உபகரணங்களைபுந் தேடிய திரு. பொன்னையா அவர்கள், பத்திரிகை யொன்றையும் விரைந்து காணுதிருப்ப தெப்படி? முற்போக்கான அரசியல்வாதிகளும், வாலிப மகாநாட்டினரும், நண்பர்களும் பூரணவுதவி வழங்க முன்வந்தனர். இவர்கள் ஒத்தாசை இவருக்கு மிக்க துணிபினையும் தைரியத்தையும் அளித்தது. மேலும் புதிய அரசியலமைப்புத் திட்டம் அனுசரணைக்கு வரவிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், சர்வசன வாக்குரிமை கிடைக்கப்போகுந் தருவாயில் முற்போக்கான கொள்கைகளைக் கடைப்பிடித்த ஒரு தேசீய வெளியீட்டின் அவசியம், பொதுவாக யாவராலும் விரும்பி நாடப்பட்டது. இப்படியாக எல்லா விதத்திலும் தமது முயற்சிக்குப் போதிய ஆதரவு கிடைக்குமென்பதைக் கண்ட திரு. பொன்னையா அவர்கள் அதை உருப்படுத்தத் தயங்கவில்லை.

புதிதாக ஆரம்பிக்கப்படவிருந்த பத்திரிகைக்கு **ஈழகேசரி** என்ற பெயர் உகந்ததோவென மற்றையோருடன் ஆராய்ந்தபோது இப் பெயர் பொருத்தமுடைத்தாகத் தெரியப்பட்டது. இப் பெயர் இன்னொரு காரணத்தாலும் உவப்புடன் ஏற்கக் கூடியதாயிற்று. அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக ஈழவள நாட்டின் தனிப் பெருந்தலைவராக விருந்து பல துறைகளிலும் மாபெருந் தொண்டாற்றிய சேர் பொன். இராமநாதன் அவர்கள் அப்போது டொனமூர்த் திட்டத்தின்கண் காணப்பட்ட குறைகளைப் பிரித்தானிய அரசினர்க்கு எடுத்துரைத்தற்காக இலண்டன் மாநகர் சென்றிருந்தனர். வயது முதிர்ந்து தளர்ச்சியடைந்த தள்ளாப் பருவத்திலும், மனச்சோர்வின்றி நாட்டின் சேமத்தையே மேலானதாகச் சிரமேற்கொண்டு கப்பலேறிக் கடல்களைத் தாண்டி நீண்ட பிரயாணத்தை மேற்கொண்டனர். அதனால் ஏற்பட்ட மிக்க சிரமத்தையும் உடல் நிலையையும் பொருட்படுத்தாது தமது கடமையைச் செய்ய முன்வந்த இவ் விலங்கைப் பெரியாரின் துணிவையும், வீரத்தையும், செயற்றிறமையையும் அப்போது பேசிப்புகழ்ந்து மெச்சாதவரில்லை. இத்தகைய பெருமை வாய்ந்த செம்மலையே **ஈழகேசரி** (இலங்கைச் சிங்கம்) என்ற பெயர் குறிக்கும் பொருத்தமுடைத்தெனவும் திரு. பொன்னையா அவர்கள் கருதினர். அப் பெரியார் பெயரால் தேசத்துக்கும் மொழிக்குந் தொண்டாற்ற முன்வரும் வெளியீடு விளங்குவது சாலவும் பொருத்தமுடைத்தெனக் கருதினர். தவிர, மக்களின் உரிமைகளையும் குறைகளையும் எடுத்துக்காட்டிப் பட்சபாதமின்றித் துணிவுடன் வாதாடக்கூடிய ஒரு

பத்திரிகையின் அவசியத்தை அப்போது உணரா தவரில்லை. இம் முயற்சியில் ஊக்கத்துடன் இறங் கினர். பணமின்மை இவரது நன் முயற்சிக்குத் தடையாக நிற்கவில்லை. சுயநலங் கருதாத தமது அரிய முயற்சி வெற்றிகரமாகக் கைகூடு மென்ற நம்பிக்கை இவர் மனதில் நன்கு வேரூன்றியது.

கனவு பலித்தது!

இடையீடின்றி இரவு பகலாக இவர் கண்ட பெரிய கனவு, 1930ஆம் ஆண்டு ஆனிமாதம் (22-6-30) **ஈழகேசரி** முதலாவது இதழில் நனவாக வெளிவந்தது. யாவருக்கும் இவ் வெளியீடு புது விருந்தாகவே யிருந்தது. யாழ்ப்பாணத்தில் — ஏன் இலங்கை யிற்ருனும் — பல வழியிலும் முற்போக்குடைய இவ்விதமான பத்திரிகை வேறு இல்லையென்று பேசத் தக்கதாக இதன் கொள்கைகள், கட்டு ரைகள், செய்திகள். அமைப்புகள் என்பன காட்சியளித்து யாவர் மனதையும் கவர்ந்தன.

'ஈழகேசரி' ஆரம்பமாகிச் சில மாதங்களுள் சேர் இராமநாதன் அவர்கள் இலண்டனி லிருந்து திரும்பி இலங்கை வந்து சேர்ந்தனர். சுன்னுகம் புகையிரத நிலையத்தில் அவர் வந்து இறங்கியபோது, திரு. பொன்னையா அவர்கள் அவரை மலர்மாலை சூட்டி வரவேற்றுத் தமது அர்ப்பணமாக **ஈழகேசரி**ப் பத்திரிகையை வெள்ளித் தட்டத்தில் வைத்து அன்பளிப்பாக வழங்கினர். 'ஈழகேசரி' எனும் பெயர் தங் களுக்கே பொருத்த முடைத்தென்றும் அதையே முகப்பாகக்கொண்டு இப் பத்திரிகை ஆரம்பிக் கப்பட்டது என்றுங் கூறினர். சேர் இராம நாதனவர்கள் மகிழ்ச்சியுடன் அதனை உவந் தேற்றுக்கொண்டனர்.

'ஈழகேசரி' ஆரம்பமாகி ஆறுமாதங்களுக் குப் பின்னரே **வீரகேசரி** கொழும்புமாநகரில் வெளிவரத் தொடங்கியது. அக் காலத்தில் இன்றுபோல் முற்போக்கான பத்திரிகைகள் கிடையா. 'ஈழகேசரி'யின் முதலிதழில் வெளி வந்த தலையங்கம் யாவரையும் விழிப்படையச்செய் தது. மக்கள் தமது கடமைகள் யாவை, உரிமை கள் யாவை என்பவைகளை உணரச்செய் யும் பொருட்டு இப் பத்திரிகை செய்த பணிகள் அநந்தம். சுதந்திர வுணர்ச்சியும், புதிய அரசியற் றிட்டமும் மக்களுக்கிடையே மிகுந்த பரபரப் பினையும் புதிய எண்ணங்களையும் உண்டாக்கின. சுதந்திரப் போராட்டங்களும் புதிய முறைகளில் ஆரம்பித்தன. இந்தியாவில் மகாத்மா காந்தி அரசியலரங்கிற் புகுந்த பின்னர் கையாளப்பட்ட அரசியற் கிளர்ச்சிகளின் கோலங்களும் இலங்கை மக்கள் சிந்தையில் அதிர்ச்சியை உண்டாக்கின. இந்தியத் தலைவர்கள் காட்டும் வழிகளை மேற் கொண்டே இலங்கை மக்களும் தமது நாடு கடைத்தேறத் தொண்டாற்ற வேண்டுமென் றுணர்ந்தனர். அவ்வழியையே சிறந்ததெனக் கைக்கொண்டு 'ஈழகேசரி'யும் பணியாற்றிச் செல்லவேண்டுமென்று வழிகோலியது சாலவும் பொருத்தமுடைத்தே. இவ்வாருக இப் பத்தி ரிகை சிந்தனைக்குரிய சம்பவங்கள் நிறைந்த சந் தர்ப்பங்களுக்கிடையில் ஆரம்பமாயிற்று. உயரிய நோக்கத்துடன் திரு. பொன்னையா அவர்களின் விடாமுயற்சியின் பேருகத் தோற்றிய 'ஈழ கேசரி' இன்றும் நற்பணியாற்றிவருகின்றது.

ஈழகேசரியும் அரசியலும்

சுதந்திரம் பெற்ற வொரு நாடு சர்வ தேச வரங்கத்தில் மதிப்புப்பெற்றுப் புகழுடன் நிலைபெறச் செய்வன அந்நாட்டின் சீரிய அரசி யற் கொள்கைகளே. அதுபோலவே ஒரு பத்திரிகையும் பொதுமக்களால், மதித்துப் பாராட்டப் பெறுதற்கு அதன் அடிப்படையான கொள்கைகளும் அவைகளை நாடியடைய அது கையாளும் வழிவகைகளுமே காரணங்களாகும். தூய நோக்கும் இலக்குமுடையதாய்த் தனது கொள்கைகளினின்று பிறழாது நேர்மையுடன் பணியாற்றும் வன்மையும் வேட்கையும் பத்திரி கைக்கு வாய்க்கப்பெறின் அதன் விருத்தி சீரியதாய்ச் சென்று பயன்படவிடமுண்டு. காரிய சித்தியையும், பொருள் வருவாயையும் மாத் திரம் கருத்தாகக்கொண்டு தம் கொள்கைகளைக் காலத்துக்குக் காலம் மாற்றிச் செல்லும் பத்திரிகைகள் பலவுள. அடையும் பயனை யன்றி, அடையக் கையாளும் வழிவகைகளும்

தூய்மையுடைத்தாக வேண்டும் என்ற கோட்பாட்டுடன் பணியாற்றும் பத்திரிகைகள் மிகச் சிலவே. முரண்பாடான கொள்கைகளை யுடைய பத்திரிகைகளைப் பொதுசனங்களாவது, அரசினராவது, விவேகம் வாய்ந்த வாசகர்க ளாவது ஆவலுடன் எதிர்பார்த்து வாசிப்பதில்லை. ஆகவே, பத்திரிகைகளை நடத்தும் பொறுப்பினை மேற்கொள்வோரது கடமையும் கவலையும் இம்மாத்திரமன்று. அரசியல், சமுதாய முன் னேற்றம், மொழி, பொருளாதாரம் என்னுந் துறைகளில் மிக விரிந்த மனப்பான்மையுடன் பணியாற்றுவது பத்திரிகையாளர்க்கு இன்றியமை யாக் கடனும் பொறுப்புமன்றே. வியாபார நோக்குடன் பத்திரிகை நடத்துவதொன்று; நாட்டின் நன்மையை இலக்காகக்கொண்டு மக்களறிவை வளர்ப்பதே கடமையாகக் கருதி உழைப்பது இன்னொன்று.

காந்தி வழி

பாரதநாட்டில் நடைபெற்றுவந்த சுதந்திரப் போர் அடிமை நாடுகளுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கிவந்தது. காந்தியடிகள் நாட் டின் சேமத்துக்கும் நிரந்தர உறுதிப்பாட்டிற்கும் எது எது அவசியமெனக் கண்டனரோ அவை யாவும் **ஈழகேசரி**யின் அடிப்படைக் கொள்கைக ளாயின. அவைகளை இலக்காகக்கொண்டு பத்திரிகையை நடாத்திவந்தமையாற்றான் பொதுவாக, மக்கள் யாவரினதும் நல்லபிமா னத்தைப் பெறக்கூடியதாயிற்று. பூரண சுதந் திரப் பேறு, அஹிம்சைப்போர்முறை, தீண் டாமை யொழித்தல், ஆலயப் பிரவேசம், சுய மொழிக் கல்வி என்னும் துறைகளில் இப் பத்திரிகை ஆரம்பத்திலிருந்தே மாறுபாடில்லாக் கொள்கைகளுடன் விறுவிறுப்பான முறையில் அபிப்பிராயங்கள் எடுத்துரைத்து வந்ததுண்டு. தேசீயத்தை என்றும் ஆதரித்து வந்ததுடன் இனவெறியைக் கிளப்பிய தலைவர்களையும் அச்சமின்றிக் கண்டித்துவந்தது. அது காரண மாக, வகுப்புவாதிகள் இடைவிடாது கிளப்பி வந்த பழிமொழிகளுக்கும் இப் பத்திரிகை இலக்காயிற்று.

தாய்நாடாகிய இந்தியாவில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தை **ஈழகேசரி** தொடர்ந்து ஆதரித்துவந்ததுமன்றி அவைகளைக் குறித்து மக்களும் சிந்திக்கக்கூடிய வகையிற் கட்டுரைகளும் எழுதிவந்தன. திருக்கோணமலை திரு. கோ. இராஜகோபால் தலைமையிற் சத்தி யாக்கிரகப் போரிற் கலந்துகொள்ளத் தாய்காடு சென்ற தொண்டர்களுக்கு வேண்டிய பொரு ளுதவியைத் திரு. பொன்னையா அவர்கள் தாராளமாக வழங்கிவந்தனர். தவிர, திரு. பொன்னையா அவர்கள் இந்தியா சென்று அங்குள்ள அரசியற் றலைவர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், தமிழறிஞர்கள் என்போரின் நட் பினையும் ஆதரவையும் பெற்றுவந்ததுமுண்டு. **கல்கி** ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி, **ஆனந்த விகடன்** ஆசிரியர் எஸ். எஸ். வாசன், **தினமணி**, **தினசரி** பத்திரிகைகளின் முன்னாள் ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம், திரு. வி. க., பாரத ரத்தினம் ஸி. இராஜகோபாலாச்சாரியார், அரசவைக் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை, கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை முதலிய பெரியார்களின் தொடர்பும் இடை விடா திருந்துவந்தது. பத்திரிகையை ஏற்ற முறையில் நடத்திச் செல்வதற்கும் அரசியற் கொள்கை வன்மை குன்றாது உறுதியடைதற்கும் இவர்களின் தொடர்பு உறுதுணையாயிற்று. திரு. பொன்னையா அவர்கள் பன்முறை இந்திய தேசீயக் காங்கிரஸ் மகாசபைக் கூட்டங்களுக் குச் சென்று இந்தியத் தலைவர்களின் சுதந்திர முழக்கங்களையும் அவர்கள் போராட்டங்களையும் அவதானித்துவந்தனர். சுபாஷ் சந்திர போஸ் தலைமையில் திரிபுரா நகரில் நடைபெற்ற காங்கி ரஸ் கூட்டத்துக்கு **கல்கி** ஆசிரியர் குழுவின ருடன் சென்று அங்கு நடந்த வைபவங்களை நேரே கண்டு களித்தனர்.

அஞ்சாமை

அளவுகடந்த துணிபும், தோல்விகளைப் பொருட்படுத்தாது காரியானுகூலம் அடையும் வரையும் முயன்று நிற்கும் அபார சக்தியும் திரு. பொன்னையா அவர்கட்கு இயல்பாக அமைந் திருந்தமையாற்றான் பத்திரிகையைச் சிறப்பாக நடத்தக்கூடியதாயிற்று. அரசினரின் பிற்போக் கான கொள்கைகளை, ஆட்சிமுறையில் ஏற்பட்ட ஊழல்களை, **ஈழகேசரி** நுட்பமாக எடுத்துக் காட்டித் தீவிரமாகக் கண்டித்துவந்தமை அரசின ருக்கு மிக்க ஆத்திரத்தை யூட்டி விரோதத் தைக் கிளப்பியதுண்டு. உளவு பொலீஸாரின் சாய்கைகள் பன்முறை 'ஈழகேசரி' நிலையத் திலே தோன்றி மறைந்தன. காந்தி யடிகளை அரைநிர்வாணப் பக்கிரி யென்று ஒருகால் சீறிவிழுந்த ஆதிபத்திய தாசரான

சேர்ச்சில் துரையின் அடாத கொள்கைகளை நிருபர் ஒருவர் வன்மையாகக் கண்டிக்க நேர்ந்தது. அதைக்கண்டு ஆத்திரமடைந்த ஆங்கில அரசினர் ஒரு பொலிசாரை விசாரணை செய்யும் பொருட்டு 'ஈழகேசரி' நிலையத்துக்கு அனுப்பினர். நீதிமன்ற மூலமாக முறையாக வருமாறு சொல்லிப் பொலிசாரைத் திருப்பிவிட்டனர். அப்போது பொலிசார் அடைந்த ஆத்திரம் இம்மட்டன்று.

இன்னொருமுறை நாட்டின் பொருளாதாரத்துக்கு இன்னல் ஏற்படக்கூடியதாக ஒருவர் அந்தரங்கமாகக் கையாண்ட சில எத்தனங்களை இப் பத்திரிகை அம்பலமாக்கிற்று. இதனைக் கண்டு ஆத்திரமடைந்த அப்பேர்வழி தனக்கு மானநட்டம் ஏற்பட்டதாகவும் அதற்கு ஈடாக இருபதினாயிரம் ரூபாய் கட்டும்படியும் கட்டளை விடுவித்தனர். குறித்த விஷயத்தில் உண்மையைத் தக்க சான்றுடன் நிலைநாட்டத் தயாரென்று திரு. பொன்னையா அவர்கள் பதிலிறுத்தனர். தமது அந்தரங்க உபாயங்கள் இன்னுங் கூடியதாக வெளிவந்துவிடுமென் றெண்ணி அவ்வளவில் அப்பேர்வழி அடங்கி மௌனமாயினர்.

டொனமூர்த் திட்டம்

'ஈழகேசரி' ஆரம்பமான காலத்திற்றான் டொனமூர்த்திட்டமும் நடைமுறைக்கு வந்தது. அத் திட்டத்திற் சில நல்ல அம்சங்களிருந்தும் அரசியலதிகாரம் மக்கள் கையில் விடப்படவில்லை. தேசாதிபதியின் அங்கீகாரத்தைப் பெற்றன்றி எந்தத் திட்டத்தையும் சட்டமாக நிறைவேற்றவியலாதிருந்தது. இப்புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தில் மக்கள் யாவராலும் ஏற்கப்பட்ட அம்சம் சர்வசன வாக்குரிமையொன்றே. ஆரம்பத்தில் இலங்கையிலுள்ள தலைவர்கள் யாவரும் இத்திட்டம் உதவாதெனக் கூறிப் பகிஷ்கரிக்க வேண்டுமென முடிவு செய்தனர். வட இலங்கையிலுள்ள தமிழ்த் தலைவர்களும் அவ்வாறே பகிஷ்கரித்தனர். யாழ்ப்பாண வாலிப மாநாட்டினரே இப் பகிஷ்காரத்தை முன்னின்று நடத்தினர். ஆனால் சிங்களத் தலைவர்களோ தமது அபிப்பிராயத்தை மறுபடி மாற்றி அத் திட்டத்தை ஏற்க முன்வந்தனர். யாழ்ப்பாணப் பிரதிநிதிகளின்றியே அரசாங்க சபை நடந்துவந்தது. இது காரணமாக நாட்டில் வகுப்புவாதந் தலையெடுத்தது. தேசீயம் அதன் சிறப்பை இழக்கலாயிற்று. எனினும் இப் பத்திரிகை தேசீயக் கொள்கைகளை ஆதரிப்பதிற் பின்னிற்கவில்லை.

சோல்பெரித் திட்டம்

வகுப்புவாதிகளின் நீடித்த எதிர்ப்பு, கருதிய பலனை அளிக்கவில்லை. இங்கிலையில் சோல்பெரித் திட்டம் இலங்கைக்குக் கிடைத்தது. இலங்கைக்குச் சுதந்திரம் அளிப்பதாகக் கருதப்பட்ட 'இந்த ஒற்றை ஆட்சித் திட்டம்' பொதுவாகச் சிறுபான்மையினரதும் சிறப்பாகத் தமிழ் மக்களினதும் உரிமைகளைப் பறிமுதல் செய்துவிட்டது!

தமிழரை ஒத்துழைக்கும்படி வருந்தியழைத்த சிங்களத்தலைவர்கள் எதிர்பார்த்ததற்கு நேர்விரோதமாக இன்று கொடிய வகுப்புவாதிகளாய் இனவெறியைத் தூண்டும் அரசியல் முறைகளைக் கையாண்டு தமிழினத்தை நசித்து ஒழித்துவிடக் கங்கணங்கட்டி நிற்கின்றனர். பன்னூற்றாண்டுகளாகச் சமநிலையினைப் பெற்று வந்த தமிழ்மொழி இன்று ஒதுக்கப்படுகின்றது. அதிகாரத்துக்கு வந்துள்ள புதிய அரசினரின் பிடிவாதக் கொள்கை தமிழினத்துக்குத் திகிலை உண்டாக்கிவிட்டது. சிங்களருடன் இனி ஒத்துவாழவியலாது; தனிப்பட்ட அரசு ஏற்படுவதே முறையெனச் சிலர் வாதிக்கின்றனர். சமஷ்டியாட்சியே ஏற்றதெனப் பலர் கருதுகின்றனர். வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்கள் அதிகமாக வாழ்வதாற் போலும், இடதுசாரிகளுடன் ஒத்துழைப்பு நன்மை தருமென வாதிப்பவர்களும் சிலர் இருக்கின்றனர்.

தமிழுக்குச் சமநிலை ஏற்படாத வரை தமினம் பெருமையுடன் வாழ முடியாது. இலங்கையின் உண்மையான முன்னேற்றம் தமிழர், சிங்களர் ஆகிய இருதிறத்தாரின் ஒத்துழைப்பினையே பொறுத்தது. 'ஈழகேசரி'யின் அடிப்படைக் கொள்கையும் இதுவே. சமஷ்டி அரசியல் ஏற்பட்டாலென்ன, தனியரசு ஏற்பட்டாலென்ன நீங்காத சங்கடங்கள் என்றுமே நிலவிவரும். பாகிஸ்தான் இந்தியாவிலிருந்து பிரிந்து தனிராச்சியமாகிப் பத்தாண்டுகள் ஆகின்றன. இன்னும் இவ்விரு நாடுகளுக்கிடையில் உண்மையான சமாதானம் ஏற்பட்டதில்லை. இத்தகைய நிலை இலங்கையிலும் ஏற்படக் கூடாதென்பதையே சமாதானத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் விரும்புவார்கள்.

ஐந்து நாட்களுக்கு முந்தி

★ சு. நல்லையா ★

காலஞ்சென்ற ஈழகேசரி அதிபரும் திருமகள் அச்சகச் சொந்தக்காரருமாகிய திருவாளர் நா. பொன்னையா அவர்களும், நானும் நெருங்கிய நண்பர்களா யிருந்தோம். சின்ன வயது தொடங்கி திருமகள் அச்சகச் சொந்தக்காரராய் வந்தவரையுமுள்ள அவரின் வரலாறு முழுவதையும் அவர் எனக்குச் சொல்லியிருக்கின்றார். அவ்வளவுக்கு நாங்களிரு வரும் ஒருவரோடொருவர் நெருங்கிப் பழகிய துண்டு. நான் நல்ல எழுத்தாளனே என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் என்னைப் பத்தி ரிகைகளில் எழுதப் பழக்கியவர் பொன்னையா அவர்களேயாவர். என் முதற் கட்டுரை என்ன வென்பது எனக்கு ஞாபகமில்லை. ஆனால் அது வெளிவந்தது ஈழகேசரியில் என் பது மாத்திரம் எனக்குத் தெரியும். இதற்கு நான் திரு. பொன்னையா அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டவன் என்பதில் ஐயமில்லை. நான் ஈழகேசரியில் எழுதிவந்த காலத்தில் அடிக்கடி ஈழகேசரி நிலையத்துக்குப் போவேன். என்னைக் கண்டதும் "வா தம்பி!" என என்னை அன்பு குழைய அழைப்பார், நாங்கள் இருவரும் அன்பின் பெருக்கால், ஒருவரை யொருவர், 'நீ, நான்' என ஒருமைப்படுத்தி அழைப்போமே தவிர, 'நீங்கள், நாங்கள்' என வீண் உபசார வார்த்தைகளை உபயோ கிப்பதில்லை. அவரின் காரியாலய மேசையை உரிமையோடு திறப்பேன்; எனக்குத் தேவை யான பணத்தை எடுப்பேன். "எவ்வளவு எடுத் தாய்? ஏன் எடுத்தாய்? எப்போ துதிருப்பிக் கொடுப்பாய்" என்ற வகையான கேள்விகளை அவர் என்னிடம் கேட்பதில்லை. "போதுமா?" என்ற ஒரு கேள்விதான் வரும். அடுத்து "மறுபடி எப்போது வருவாய்?" என்று ஒரு கேள்வியும் பிறக்கும். இவ்வளவும் என் மனக் கண்முன் இப்போது வருகின்றன. கவலையடையாமலிருக்க முடியுமா? என்ன துர் அதிஷ்டமோ தெரியாது. இவ்வளவு உரிமை யோடும் அன்போடும் பழகிய எங்களுக்கிடை யில் அவரின் கடைசிக்காலத்தில் பிரிவேற்பட்டு விட்டது. ஒருவரை யொருவர் காண விரும்பாத பிரிவு. என்றாலும்,

அதிபர் பொன்னையா அவர்கள் காலமாவ தற்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக அவர் நிலை ஆபத்தானதாயிருப்பதாக நான் கேள்விப் பட்டதும், அவர் கடைசியாக வைத்திய உதவி பெற்றுக்கொண்டிருந்த மானிப்பாய்க் கிறீன் வைத்தியசாலைக்கு அவரைப் பார்க்கப் போயிருந் தேன். காற்பக்கத்தில் அவரின் பிரிய பத்தினி யார் அவருக்கு வேண்டிய சிசுருஷைகளைச் செய்துகொண்டிருந்தார். பொன்னையா அவர்கள் கண்களை மூடிச் சயனித்துக்கொண்டிருந்தார் போலிருந்தது. நான் அவர் மனைவி யாரைப் பார்த்து "நித்திரைபோலிருக்கு" என்று மெதுவாகக் கேட்டேன். அவவும் தணிந்த குரலில், "நித்திரை யில்லை, அடிக்கடி மயக்கம் வருகின்றது; ஞாபக சக்தியும் குறைவு" என்று துயரத்தோடு கூறினர். இந்தப் பதில் அம்மையாரின் வாயிலிருந்து வந்ததும் வராததுமே, பொன்னையா அவர்கள் கண் விழித்துவிட்டார்கள். ஒரு முறை என்னை உற்றுப்பார்த்தார்கள். அப்புறம் சிறிது நேரம் மௌனம்; எங்களுக்கிடையில் ஏற்பட்ட மனஸ் தாபத்தையிட்டு அவர் சிந்தித்திருக்கவேண்டும். அப்புறம், நாங்கள் முன் பழகியதைப் போலச் சிறிதுநேரம் மனம் விட்டுப் பேசினோம். இதை யெல்லாம் அவர் மனைவியார் வியப் போடு பார்த்துக்கொண்டிருந்ததை நான் கண் டேன். என்னோடு பேசிய ஆயாசத்தில் அவர் கண் மூடவே, அம்மையார், "இப்போது இரண்டு மூன்று நாட்களாக அவர் இவ்வளவு தெளிவாகப் பேசியதை நான் காணவில்லை" என்று விசனத்தோடு சொன்னர். மதியம்

பன்னிரண்டு மணியாகிவிட்டது. மத்தியான மருந்து கொடுப்பதற்காக என் சொந்தச் சகோதரன் (தம்பி) — அந்த வைத்தியசாலையில் ஒரு சிப்பந்தி (ஓடலி) — வந்தான். நான் அவனைப் பார்த்து எப்படி நிலைபரம் என்று கேட்டேன். "கொஞ்சம் கடுமைதான்; என்றாலும், சொல்ல முடியாது" என்று அவன் சொல்லவும் "நன்றாக இருக்கின்றாரே! நீ இப்படிச் சொல்லுகின்றாயே!" என்று நான் அவனைக் கேட்டேன். "இதைப்பற்றி உனக்கு ஒன்றும் தெரியாது" என்றுவிட்டு அவன் போய்விட்டான்.

திரு. பொன்னையா அவர்களும் நானும் நெருங்கிய நண்பர்களாயிருந்ததை அவரின் குடும்பத்தவர்கள் ஒவ்வொருவரும் அறிவார்கள். அவரும் நானும் பிரிந்து போனதை அவர்கள் அறிவார்களோ என்னவோ எனக்குத் தெரியாது.

பொன்னையா அவர்களுடன் நான் நெருங்கிப் பழகிய காலத்தில், அவரிடம் சில விசேஷ குணங்களைக் கண்டேன். எந்தக் காரியத்திலும் துணிந்திறங்கும் மனத் தைரியம் அவருக்கு அதிகம். ஒன்றைச் செய்யத் தொடங்கும்போது, பிறர் யோசனையை அவர் அதிகம் கேட்பதில்லை. தானாகவே சிந்திப்பார். தானாகவே தொடங்குவார். தொடங்கிய பின்புதான் அவரின் நண்பர்கள் அறிவார்கள். அவர் வயாவிளானுக்கும், புன்னாலைக்கட்டுவனுக்கு மிடையிலுள்ள கட்டாந் தரையை விலைக்கு வாங்கியபோது, "உனக்குப் பைத்தியமா? இதை ஏன் வாங்கினாய்" என்று நான் கேட்டபோது, அவர் சிரித்துவிட்டு, "இருந்துபார்" என்று சுருக்கமாகப் பதில் சொன்னார். சில நாட்களில் அவரின் விடா முயற்சியாலும், மூளைத் திறனாலும், கட்டாந் தரை சிறந்த தோட்டத்தரையாக மாறிற்று. வாழைத் தோட்டமாகவும், புகையிலைத் தோட்டமாகவும், நெற்காணியாகவும் அது மாறிற்று. எல்லாரும் பொறுமைப்பட்டார்கள். இப்போது அந்த அழகிய நிலப்பரப்பில், அரசாட்சியாரின் மத்திய கல்லூரி பொன்னையா அவர்களின் நினைவுச் சின்னமே போலச் சிறப்பாக விளங்குகின்றது.

ஈழகேசரி இன்றும் நின்று நிலவுவதற்கு அவரின் மனோபலமும், கஷ்ட நஷ்டங்களைச் சட்டைசெய்யாத மனோபாவமுந்தான் காரணம். தொடக்கத்தில் 'ஈழகேசரி'யாற் பொருள் நஷ்ட மதிகமேற்பட்டு வந்ததை நான் அறிவேன். ஆனால் இலாப நஷ்டங்களைக் கண்டு மகிழ்வோ, மலைவோ கொள்ளாத அவர் மனோநிலை, கஷ்ட நஷ்டங்களைப் பற்றிச் சிந்திக்க அவரை விடவில்லை. 'ஈழகேசரி'யைக் காலகாலத்தில், என்ன கஷ்டம் நேர்ந்த காலத்தும் அவர் வெளியிடத் தவறியதில்லை. பொன்னையா அவர்களின், மலைகலங்கினும் மனங் கலங்கா மனவுறுதியே இன்று அதன் வெள்ளிவிழா மலர் வெளிவருவதற்குக் காரணம் என நான் திடமாகக் கூறுவேன்.

சமூகப்பற்றும் மொழிப்பற்றும்

★

ஐரோப்பாவைப் போல், பல்வேறு சாதியினர் கலந்து வசிக்கும் ஆசிய நாடுகளிலும் ஒரு சாதி அரசாங்கம் அமைப்பதென்பது இலகுவிற் கைகூடுவதொன்றன்று. அச் சாதியினர் சமூகப்பற்றும் மொழிப்பற்று முடையவர்கள், வகுப்புவாரி மாகாணங்களாகப் பிரிக்கக்கூடுமாகில் அப்படிச் செய்யலாம். இலங்கை, மலாயா முதலிய இடங்களில் அப்படிச் செய்வது சாத்தியமன்று; எனவே அவ்வவ் வகுப்பினர் தமது மொழி, கலாச்சார மென்பவற்றை விருத்தி செய்யக் கூடியதாகச் சமநிலை பெறவேண்டும். அப்போதுதான் எல்லா மக்களும் ஒருங்கு சேர்ந்து நாட்டிற்காகப் பாடுபட்டுழைப்பர்.

—அல்பிறட் கொப்பான்

நான் கண்ட திரு. வி. க.

— ம. பொ. சிவஞானம் —

ஒருவரைத் தெரிந்துகொள்வது வேறு; அவரை விளங்கிக்கொள்வது வேறு. திரு. வி. க. அவர்களுடன் இருபத்தைந்து ஆண்டுகள் பழகியதால் அவரைத் தெரிந்துகொண்டதோடு ஓரளவு விளங்கியுங் கொண்டேன். ஓரளவுதானே தவிர முழுதாக அல்ல; ஏனென்றால் அதற்கு நான் அவரைவிட அறிவுபெற்றிருக்கவேண்டும். ஒரு பெரிய விளக்கின் ஒளியைச் சிறிய விளக்கு மறைக்க முடியாது; ஆனால் போட்டிபோட முடியும்!

திரு. வி. க. அவர்களைப்பற்றி எழுதும்போது 'சொந்த வாழ்க்கையில் மிகத் தூய்மையுடையவர்' எனக் குறிப்பிடலாம். ஞானிகளைப் பற்றிக் கூறவந்த நக்கீரர்,

> "என்பெழுந்து இயங்கும் யாக்கையர்; நண்பகல்
> பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு
> செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
> கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
> தாம் வரம்பு ஆகிய தலைமையர்"

என்று பாடுகிறார். எலும்புகள் எல்லாம் மேலே தெரியும் உடலாம். பலப்பல பொழுது மறந்து சில பொழுதே உண்பவர். பகைமை நீங்கிய உள்ளத்தினர். கற்றல் அறிவோடு பலவகை அனுபவ அறிவும் பெற்றவர். கற்றோர்க் கெல்லாம் தாம் வரம்பேயாக நின்று விளங்குபவர். இவ் வியல்பினை உடையவர்கள் நக்கீரர் கூறும் தமிழ் முனிவர்கள்! அவ்வாறேதான் தமிழ் முனிவராக விளங்கியவர் நமது திரு. வி. க. அவர்கள்.

* * *

திரு. வி. க. 'கடுஞ்சினம் கடிந்த காட்சியர்!' இன்முகம் கொண்டு யாவருடனும் பழகும் இயல்பினர். அமைச்சர் முதல் பாட்டாளி வரை அனைவரும் அவரிடம் வந்துபோவர். தம்மிடத்திற் குறையே பேசி வசைபாட வருபவர்களை வேறு பேச்சுக்குத் திருப்பிவிடும் தன்மையர் அவர்.

திரு. வி. க. ஓர் இணையற்ற இராசதந்திரி. பெண் உரிமையும், தொழிலாளர் உரிமையும் பேசிவந்த சீர்திருத்த வாதியான அவர் சாகும்வரை குடுமி வைத்திருந்தார், விபூதியைப் பட்டையாகப் பூசிக்கொண்டு, கதர் உடுத்திக் கொண்டு திராவிடக் கழக மாநாடுகளுக்கும் சென்று 'காந்தீயம்' பற்றிப் பேசி வருவார். கொள்கைக்காகத் தனி மனிதனை எதிர்க்கும் வழக்கம் அவரிடம் இல்லை.

மதத்தின் பெயரால் நடக்கும் கொடுமைகளைத் திரு. வி. க. கண்டித்தார். அந்தத் துறையில் அவர் பெரிய சுயமரியாதைக்காரராக இருந்தார். ஒருவன் தான் பெறும் அனுபவத்தின் காரணமாக ஒரு பொருளிடத்தில் வெறுப்போ எதிர்ப்போ தோன்றலாம். ஆனால் அந்தத் தனி மனிதனின் அனுபவத்தைப் பொது விதியாக மாற்றிக்கொள்ளும்போதுதான் அபாயம் ஏற்படுகிறது. இவ்வாறு நேர்ந்த பெண் அடிமையின் அநியாயத்தை வன்மையாகக் கண்டித்தார் திரு. வி. க. அவர் பெண்ணினத்தின் 'வக்கீலாக' வாழ்ந்தவர்.

* * *

திரு. வி. க. வுக்குப் பின் நீண்ட சரித்திரம் இருக்கிறது. நாட்டுப் பற்று, மொழிப் பற்று, தெய்வப் பற்று ஆகிய முப்பற்றையும் உடையவர் அவர். தொண்டு புரிவதற்காக வேண்டி, சுகவாழ்வை விரும்பாதவர். ஆனால் இயற்கையாகவே முனிவர் வாழ்வு வாய்க்கப் பெற்றவர்.

இவருக்கு இணையாக வேண்டுமானால் காந்தியடிகளைச் சொல்லலாம். திரு. வி. க

எழுதிய 'காந்தியடிகளும் மனித வாழ்க்கையும்' என்ற நூலைப் படித்துவிட்டு காந்தியடிகளின் 'சத்திய சோதனை'யைப் படிக்கலாம். முதலாவது பாஷியம்; அடுத்தது வேதம். அதாவது காந்தியாரின் மூலத்திற்கு திரு. வி. க. உரை கண்டவர் எனலாம். அவர் வரைந்து காட்டியதை இவர் வாழ்ந்து காட்டினர். திரு. வி. க. சிறந்த கவிஞர்; தூய தமிழ் நடையிற் பேசும் இயல்பு உடையவர். ஆனால் அதனையும் பஞ்சாலைத் தொழிலாளி விளங்கிக்கொண்டான் என்பது வியப்பே அன்றே? முதலில் இதயத்தில் இடம் பெற்றால் பின் எதுவும் பெறலாம். திரு. வி. க. தொழிலாளர் உள்ளத்தில் 'தெய்வமாக' இடம்பெற்றுவிட்டார். அப்பால் அவர் பேசியதெல்லாம், எழுதியதெல்லாம் தொழிலாளி மனத்திலும் பதிந்துகொண்டன. ஆகவே அவருடைய மொழியை விளங்கிக்கொள்ள அகராதிப் புத்தகங்கள் வேண்டியிருக்கவில்லை. இதில் உள்ள உண்மையை இன்றைய தலைவர்கள் உணரவேண்டும். அதாவது

"செயல் முன்னே; சொல் பின்னே;
உழைப்பு முன்னே; எழுத்துப் பின்னே!"

இவ்வகையில் மக்கள் உள்ளத்தில்—தமிழர் இதயங்களில்—இடம்பெற்றுத் திரு. வி. க. இன்றும் வாழ்கிறார்; என்றும் வாழ்வார்.

கலை ஓர் இன்பச் சுனை

★

கலை ஓர் இன்பச் சுனை. அது மனித வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் அமைக்துள்ளது. கலையில் மென்மைக்கு முக்கியத்துவமிருப்பதை அறிந்த நம் முன்னோர்கள், அப் பண்பை விளக்கும் ஒரு அடைமொழியோடு 'லலித கலை' என்று அவைகளை அழைத்தார்கள். இம்மாதிரியாக 'லலித கலைகள்' நீம்முடைய மேன்மையான அநுபவங்களுக்கு எடுத்துக் காட்டாகி நின்று ஐந்து வகைப்பட்ட பெரும் பகுதிகளாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு பகுப்பும் மனிதக் கற்பனையின் பெருவெள்ளமாகப் பெருகி எல்லாத் திசைகளிலும் ஓடி உலகத்தையே இன்பத்தில் ஆழ்த்துகின்றன. இக் கலைப் பிரவாகங்களுக்கு அவைகளுடைய பெருமைக்கேற்ற பெயரும் கொடுத்திருக்கிறார்கள். காவியம், இசை, சித்திரம், சிற்பம், கட்டடச் சிற்பம் என அவைகள் வழங்கி வருகின்றன.

அயனுடைய வம்சத்தில் வந்த மனிதன் தானும் ஆக்குந் திறனைப் பெற்றேயிருக்கிறான். கலைஞனுடைய உள்ளத்திலும் கற்பனை முளைக்கின்றது. அதுவே கவிதையாக மாறி உலகிற்கு இன்பம் அளிக்கிறது. ஓலியைத் தனக்கு உறைவிடமாகக் கொண்டு அதே கற்பனை, சித்திரமாகவும் நிகழ்கின்றது. கல்லும் கற்பனை நிறைந்து சிற்பமாக மாறுகிறது; மண், சுண்ணும்பு இவைகளிற் புகுந்து மாளிகையாகவும் கோபுரமாகவும் மிளிர்கின்றது. இவ்விதம் ஐந்து வகையாகப் பெருகியோடும் மனித உள்ளத்தின் கற்பனைப் பெருக்குகள் தொன்றுதொட்டு உலகத்திற்கு இன்பவரம் தந்து வருகின்றன. உண்மையில் மேற்கூறிய பாகுபாடுகளெல்லாம் பாத்திர மாறுபாட்டினாலேயே உண்டாகியவை. எல்லாவற்றிற்கும் அடிப்படையாவது கற்பனையே.

அச்சிற்கு ஏற்றபடி ஆகிருதி மாறுவதைப் போலவே, ஆதாரத்திற்கு ஏற்றபடி கற்பனை பிரகாசிப்பதையும் நாம் காணலாம். மொழி, நாதம் ஆகிய இரண்டும் சிறந்த பாத்திரங்களாக இருப்பதால் இவைகளை ஆதாரமாகக் கொண்ட கற்பனை காவியம் என்றும், இசையென்றும் பெயர்கொண்டு மிகச் சிறப்புடன் விளங்குகின்றது. ஆக ஆதாரத்தின் பெருமையை யொட்டியே மனிதக் கற்பனை மகிமையடைகின்றது என்பது இப்பொழுது முடிவாகக் கிடைத்த பொருளாகும். இந்த முறையில், உயிருள்ள மனிதனையே ஒரு பாத்திரமாக நம் கற்பனைக்கு அமைத்துக்கொண்டால், இதர ஜடப் பொருள்களைவிட இப் பாத்திரம் சிறப்புள்ளதாக இருக்குமல்லவா? என்வே, கற்பனையே மனிதனுடைய உயிருள்ள உடம்பை ஆதாரமாகக் கொண்டு வெளிப்படுமேயானால், அதாவது, மனிதன் உயர்ந்த கற்பனைகளை, மொழி மூலமாகவோ, கல், மண் இவை மூலமாகவோ வெளியிடாமல், தன்னுடைய அங்க அசைவுகள் மூலம் வெளியிட்டால் அதற்கு நிருத்தியம் என்று பெயரிட்டு சிறந்த கலையாகக் கொள்கிறோம்.

— கலைஞர் ரஞ்சன்

கட்டுரை ஒன்று தேவை

— "சுயா" —

"வெள்ளி விழா மலரைச் சிறப்பாக வெளியிட உத்தேசித்திருக்கின்றோம். கட்டுரை ஒன்று அனுப்பிவையுங்கள்."

இந்தமாதிரியான ஒரு கடிதத்தை **ஈழகேசரி** ஆசிரியர் எனக்கு அனுப்பியிருந்தார். கடிதத்தைக் கண்டதும், 'இதென்ன வெள்ளிடியப்பா; பத்திரிகைகளுக்கு எழுதும் கெட்ட பழக்கத்தைத்தானே பல வருஷங்களாக ஒதுக்கிவிட்டாய்; கைவிட்டுப்போன அந்தக் காரியத்தில் இனிமேற் பிரவேசியாதே; இதனல் உனக்கு ஒரு நன்மையும் வந்துவிடப் போவதில்லை. தொட்டுக்கொண்டாயோ அப்புறம் தொல்லைப் படுவாய்' என்று எச்சரிக்கை செய்தது மனதின் ஒரு பகுதி. 'இல்லை; போயும், போயும் உன்னையும் ஒரு மனிதனாக மதித்துக் கடிதம் போட்டாரே அவர். தாக்ஷணியத்துக்காகவாவது நீ ஒன்று அனுப்பித்தானாக வேண்டும்" என்றது மனதின் மற்றப் பகுதி. இந்தப் போராட்டம் இரண்டொரு நாள் நின்றது. இறுதியிற் கட்டுரை எழுதுவது என்றே தீர்மானித்துவிட்டேன். அதிலும் ஒரு பயம்; பழைய பழக்கம்.... அதாவது கட்டுரை எழுதும் தீயபழக்கம் மறுபடியும் தொட்டுக்கொண்டால்.....

கட்டுரையை எழுதுவதற்காகச் சிந்தனையை ஓடவிட்டேன். இரண்டொரு நாள் ஒரே சிந்தனை. ஒன்றுமே வரவில்லை. மூளை குழம்பியதுதான் மிச்சம். கடைசியாக ஒரு யுக்தி — காரிருளில் ஒரு மின்னல் என்பார்களே — அதுபோல எனக்குத் தோன்றியது. உடனே,

'புதிதாக ஒரு பத்திரிகையை வெளியிட ஆயத்தங்கள் செய்துகொண்டிருக்கின்றேன்; முதலிதழில் தங்கள் கட்டுரை வெளியாகி அதை அழகுசெய்ய வேண்டும். சிரமத்தைப் பாராது ஒரு கட்டுரை அனுப்பி வையுங்கள்'

என்ற மாதிரிச் சில கடிதங்களை எழுதி என்னை யறிந்த, ஏன், நானறிந்த எல்லாப் பண்டிதர்களுக்கும், வித்துவான்களுக்கும், பீ. ஓ. எல். களுக்கும் அனுப்பி வைத்துவிட்டுக் கட்டுரைகளை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். இவர்கள் அனுப்புங் கட்டுரைகளில் நல்லதாக ஒன்றைப் பொறுக்கி எடுத்து, என் பெயரோடு 'ஈழகேசரி' வெள்ளி விழா மலருக்கு அனுப்பி, என் கடமையைத் தட்டிக் கழித்துவிடுவது என்பதுதான் என் கள்ள எண்ணம். ஒரு வாரத்திற் கட்டுரைகளெல்லாம் வந்து குவிந்துவிட்டன. ஆனல் 'கம்பன் கவிநயம்,' 'சிலப்பதிகாரச் சிறப்பு,' 'வள்ளுவர் கண்ட வாழ்க்கை நெறி,' 'திருக்குறள் மாண்பு,' 'சீதை கற்புடையவளா?' 'புறநானூறும் பெண்களும்,' 'அகநானூறும் காதலும்,' 'வள்ளுவர் பிறந்த நாள்' என்ற வகையாகப் பழந்தமிழ் நூல்களைப் பற்றிப் பக்கம் பக்கமாக எல்லா வித்துவான்களும், பண்டிதர்களும், பீ. ஓ. எல். களும் எழுதிக் குவித்திருந்தார்களே தவிரச் சாமானிய மக்கள் வாசித்து இரசிக்கக் கூடியதாக அவர்கள் ஒன்றும் எழுதியிராததைக் கண்டதுமே, பெரும் ஏமாற்றமடைந்து விட்டேன்!

இவர்களுக்குக் கடிதம் எழுதினேனே, அதற்காகச் செலவு செய்ததும் தண்டச் செலவுதான் என்று நொந்துகொண்டேன். 'அட கிரகசாரமே! பண்டிதர்களும், வித்வான்களும், பீ. ஓ. எல். களும் பிஷ்டபேஷ நியாயமென ஒன்றிருப்பதை அறியமாட்டார்களா? பழைய விஷயங்களைக் கிளறித்தான் இவர்கள் அறிவார்களா? சொந்தக் கற்பனையாக ஒன்றை எழுத முடியாமல் எல்லாம் இரவல் வாங்குகின்றார்களே! இவர்கள் படிப்பு இவ்வளவுக்குத்தானு உதவும்? கல்வெட்டுப் பாடவும், பழைய ஏடுகளைப் புரட்டவுந்தானு இவர்கள் படித்தார்கள்' என்று என் சிந்தனைக்குரங்கு

மற்றெருபுறந் தாவத் தொடங்கிவிட்டது. என் சிந்தனையில் என் மூத்த பெண் இவர்களின் கட்டுரைகளையெல்லாம் பொறுக்கி வைத்துக் கொண்டிருந்ததை நான் கவனிக்கவில்லை. "என்ன அப்பா! எஸ். எஸ். ஸி. க்குப் பாடப் புத்தகம் ஒன்று வெளியிட எண்ணுகின்றீர்களா?" என்று அவள் கேட்டபோதுதான் என் சிந்தனை கலைந்தது.

வெள்ளி விழா மலருக்குக் கட்டுரை எழுதும் சிரமத்திலிருந்து தப்புவதற்காகப் பண்டிதர்களையும், வித்துவான்களையும், பீ. ஓ. எல். களையும் நம்பியிருந்தேன். அது இப்படி வெறும் ஏமாற்றமாய் முடியவே, மறுபடியுங் கட்டுரையைப் பற்றிய சிந்தனை தொடங்கிவிட்டது. கடைசியிற் குருடனுக்கு வழிகாட்டியதுபோல, இந்த வித்துவான்களின் கட்டுரைகளே எனக்கு வழிகாட்டின. இந்தச் சம்பவத்தையே ஒரு கட்டுரையாக எழுதிவிட்டால் என்ன என ஒரு யோசனை தோன்றியது. கட்டுரையையும் எழுதிவிட்டேன். எப்படி என் சம்பாவனை?

கல்கியின் சிறுகதைகள்

★

கல்கி அவர்கள் சிறுகதை உலகத்திலே ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்து வைத்தார். 'தொடரும்' என்று அவர் பத்திரிகையிற் போட்டுவிட்டு, அடுத்த வெள்ளிக்கிழமை பத்திரிகை வரும்வரையிற் கட்டுக்கடங்காத ஆவலைத் தூண்டிவிடுவார். அவர் கதைகளிற் கற்பனை உலகிலேயே வாசகர்களை, எங்கெங்கோ அழைத்துச் சென்றார். அவருடன் மலைகள்மீது சஞ்சரித்திருக்கிறோம். மடுக்களின் அடியே ஆராய்ந்திருக்கிறோம். சம்சார சாகரத்தில் நீச்சலடித்திருக்கிறோம். ஒருபோதும் வாசகர்களுக்குப் பிரயாண அலுப்புத் தெரியாமற் பார்த்துக்கொண்டார். அதுமட்டுமன்று; கடைசியில் வாசகரைச் சௌக்கியமாக, ஆடாமல் அலுக்காமல், தொடங்கின இடத்தில் சமதரையில் கொண்டுவந்தும் விடுவார். படித்து முடிந்த பிறகு ஒரு நல்ல கனவு லோகத்திலிருந்து வந்த பிரமை ஏற்படும். பல புதிய அனுபவங்களைப் பெற்றுப் பின் தேனூறும் நடையைச் சுவைத்தபடி 'ஜம்' என்று திரும்ப வருவது ஓர் ஆனந்தமேயல்லவா?

சிறிய கதையானாலும், பெரிய கதையானாலும், அதை எடை போடுகிறவர்கள், அது ஜீவித்திருக்குமா என்பதைக்கொண்டே பார்ப்பது வழக்கம். பழமொழிகள் மாதிரி நூற்றாண்டு நூற்றாண்டாக நிற்கும் சிரஞ்சீவிக் கதைகளுக்கு மதிப்பு அதிகம் கொடுப்பார்கள். ஆனால், நான் அறிந்த வரையில், சிரஞ்சீவிக் கதைகள், ஆசிரியர் காலமான பிறகே சிரஞ்சீவித்தன்மை பெறுகின்றன.

* * *

கல்கி அவர்களின் எழுத்தைப் பற்றிச் சிந்தனை செய்து பார்க்கும்போது "அவர் எங்கே எழுதினர்! பேசவல்லவா செய்கிறர்!" என்று எனக்குத் தோன்றுவதுண்டு! ஏனென்றால், அவர்கள் எழுதிய எந்த விஷயத்தைப் படிக்கும்போதும் ஒருவர் எதிரே நின்று சொல்லுவது போன்ற பிரமை ஏற்படுகிறது; சுவையுடன் அலுப்புத் தட்டாமல் அவ்வப்போது வாசகருக்கு நியாயமாக ஏற்படும் சந்தேகங்களுக்குப் பதில்களும் சொல்லிக்கொண்டு அந்த சடை ஓடுகிறது. எனவே, படித்து முடிக்கும்போது பூரணமான திருப்தியைத் தந்து செல்கிறது.

ஆர். மகாதேவன் (தேவன்)

வாழிய மங்களம்

— நயினை, கவி ஆ. இ. —

★ ★ ★

எங்கு மிளந்தமிழ் தங்கி மணங்கமழ்
இன்ப சதாகதியாய்ப்
பொங்கு பழந்தமிழ் மண்டி வரண்ட
புலன்கள் புகுந்திதயப்
பைங்க மலம்கள் நிறைந்து விரிந்து
பயன்படு பானுவெனு
இங்கு வயந்தரு சங்க முழங்கிடு
மீழநல் கேசரியே!

ஆல மரம்பழ மங்கர சிங்கெனு
மந்நெறி புன்னெறியாய்
நீல வளக்கடல் சூழ விலங்கையில்
நேரிய வீரியமாய்ப்
பால வெடிப்பிடை காலை விடாதெதிர்
பாய்ந்து நடப்பதுவாய்
ஏல வெழுந்தொரு கொள்கையில் நின்றுயர்
ஈழநல் கேசரியே!

எந்தைய ராண்மை எடுத்து விளாசி
இனித்திகழ் வாலிபர்தம்
சிந்தை திறந்து நுழைந்தெமை யாள்வது
சிங்கள மாளுமோர்
குந்தக மற்ற வினுவொலி செய்து
குறட்டை கலைப்பதுவாய்
எந்திரு நாடு பெறும்பணி மேற்கொளும்
ஈழநல் கேசரியே!

மோட்டடி மைத்தன மூறிய மூளையில்
மோதிய நன்மொழிகள்
கேட்டறி யாதவர் போன்று நடிப்பவர்
கேவலம் ஓர்சிலரே
மீட்டடி மேலடி போட்டெம தன்னையை
மீட்டவள் மென்முறுவல்
ஏட்டிடை தீட்டுது மென்றறை கூவிடு
மீழநல் கேசரியே!

வெள்ளென வேட்டி தரிப்பவ ரென்று
விழுந்து பணிந்தறியாய்
உள்ளொரு மூச்சு வெளிக்கொரு பேச்செனும்
ஓட்டை விடாகிலையில்
விள்ளரி தான தமிழ்க்குல இன்ப
விளக்கெரி நெய்யுறையும்
எள்ளென நன்று விளங்கி வழங்கிடும்
ஈழநல் கேசரியே!

களத்திடை யெண்ணில் கவந்த மறிந்தழி
கண்ணிலி தன்மகர்போல்
முளைத்தன கோடி உருத்தரி யாது
முடங்கிய கண்டனமால்
விழத்தெரி யாத வளத்தகு சீர்த்தியில்
வெள்ளி விழாவயர்வான்
எழத்துணி வேறி எடுத்தனை வாழிய!
ஈழநல் கேசரியே!

தமிழன்கிலை சரியச்செயல் புரிவார்தலை கவிழ
உமிழும்பல முருவேறிய உதயந்தரு மாண்டில்
நமதின்னுயிர் நந்தாய்மொழி நந்தாமொழி யாகச்
சிமிழொன்றிய இதயந்தரு செயமங்கள மாலோ!

SAMBASIVAM TEXTILES

THE TEXTILE HOUSE FOR

Benares, Silk & Cotton Goods

182 & 184, K. K. S. Road :: JAFFNA

For Sarees

* Benares
* Manipuri
* Mysore
* Bangalore
* Kashmir

VISIT

Sambasivam Textiles

PHONE: 232

* கூறைச் சேலைகளுக்கும்
* கவர்ச்சிகரமான புடைவைகளுக்கும்

★ நம்பிக்கையான இடம் ★

சாம்பசிவம் ரெக்ஸ்ரைல்ஸ்

182 - 184, காங்கேசன்துறை வீதி

யாழ்ப்பாணம்

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை

235, காங்கேசன்துறை வீதி

யாழ்ப்பாணம்

★

எமது வெளியீடுகள் :

1. கம்பராமாயணம் கும்பகருணன் வதைப்படலம்
G. C. E. 1957 — 60
உரைஆசிரியர்: வித்துவான் ந. சுப்பையாபிள்ளை
விலை ரூபாய் 2-00

2. ஔவையார் – மிகச் சிறந்த செந்தமிழ் இலக்கிய நூல். 7ஆம் வகுப்புக்கு உப பாடமாக உபயோகிக்கக் கூடியது. விலை சதம் 85

3. பாஷைப் பயிற்சியும் விளக்கமும்
3ஆம் வகுப்பு. விலை சதம் 75

4. பாஷைப் பயிற்சியும் விளக்கமும்
4ஆம் வகுப்பு. விலை சதம் 80

5. பாஷைப் பயிற்சியும் விளக்கமும்
5ஆம் வகுப்பு. விலை ரூபாய் 1-00

6. பாஷைப் பயிற்சியும் விளக்கமும்
6ஆம், 7ஆம் வகுப்பு. (அச்சில்)

7. பாஷைப் பயிற்சியும் விளக்கமும்
8ஆம் வகுப்பு. விலை ரூபாய் 1-00

8. English Language Question Papers
for Standard V. Cts. 60

9. விவேகப் பரீட்சை அப்பியாசங்கள்
5ஆம் வகுப்பு. விலை சதம் 60

10. கணிதப் பயிற்சி அப்பியாசங்கள்
5ஆம் வகுப்பு. விலை சதம் 60

11. எண் கணிதம் G. C. E.
ஆசிரியர்: K. அரிராஜசிங்கம், B. A. (Lond.)
★ (அச்சில்)

தொகையாக வாங்குவோருக்கு விசேஷ கழிவு கொடுக்கப்படும்

K.N.M. Meeran Sahib

Manufacturing Jeweller & Diamond Merchant

52 - 54, KANNATHIDDY

JAFFNA

Jewells

to suit all modern tastes
are always available.

★ a visit will convince you ★

இக்காலத்திற்கேற்ற
கவர்ச்சிகரமான நவீன

◆ நகைகள் ◆

எப்பொழுதும் எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.

ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள்!

★ ★ ★

கே. என். எம். மீரான் சாஹிப்

நகை, வைர வியாபாரி

52 - 54, கன்னதிட்டி, யாழ்ப்பாணம்

